ஸ்ரீவிஜயதாசரின்
25 சுளாதிகள்
(தமிழில் அர்த்த விளக்கங்களுடன்)

கன்னடத்தில்:
வித்வான் திரு. சதுர்வேதி வேதவியாஸாச்சார்

தமிழில்

‘ஜகன்னாத கேசவ’ சத்ய நாராயணன்
89044 58276. haridasa.vijayam@gmail.com
jagannathakesava.blogspot.com

ஸ்ரீவிஜயதாசரின் 25 சுளாதிகள்
(தமிழில் அர்த்த விளக்கங்களுடன்)

ஸ்ரீஹரிவாயு குருகளின் அருளால்
ஸ்ரீவிஜயதாசரின் ஆராதனை நாளான
14-11-2021 அன்று நவபிருந்தாவன க்ஷேத்திரத்தில்
ஸ்ரீவியாசராஜரின் சன்னிதானத்தில் வெளியிடப்பட்டது

தொடர்புக்கு:
'ஜகன்னாத கேசவ' சத்ய நாராயணன்
8904458276 haridasa.vijayam@gmail.com
jagannathakesava.blogspot.com

சலுகை விலையில் இந்தப் புத்தகம் வெளிவருவதற்கு பொருளுதவி புரிந்த ஹரி பக்தர்கள் அனைவருக்கும் நன்றி!!

ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து

பொருளடக்கம்

1	நாமஸ்மரணை சுளாதி	9
2	நாம பிரஷம்ஸன சுளாதி	39
3	ஸதாசார சுளாதி	57
4	ஹரிதாசர லட்சண சுளாதி	77
5	ஹரிதாசர சகலேந்திரியங்களும் ஹரிக்காகவே சுளாதி	85
6	ஹரிபக்தர்களுக்கு எவ்வித பயமும் இல்லை சுளாதி	95
7	தாரதம்ய (அவரோகண) சுளாதி	105
8	ஸ்வோத்தமரின் நிந்தா வர்ஜன சுளாதி	114
9	ஜீவர அஸ்வாதந்த்ர்ய சுளாதி	128
10	மடி சுளாதி	134
11	ஹப்ப சுளாதி	142
12	கர்ப்போத்பத்தி ஹரி ரக்ஷணெ சுளாதி	150
13	ஸ்ரீஹரி பக்தர்களின் வசம் சுளாதி	160
14	ஹரி தானே பூஜ்ய பூஜக சுளாதி	174
15	நிந்தா ஸ்துதி சுளாதி	191
16	ஆத்ம சமர்ப்பணெ சுளாதி	201
17	வாயுதேவரின் சுளாதி	207
18	அவதார த்ரய சுளாதி	223
19	ஸ்ரீயந்த்ரோத்தாரக சுளாதி	249
20	ஸ்ரீதுர்கா சுளாதி	256
21	ஸ்ரீதன்வந்திரி சுளாதி	272
22	ஸ்ரீகபில தேவர சுளாதி	282
23	ஸ்ரீஸ்ரீனிவாஸ சுளாதி	300
24	ஸ்ரீநரசிம்ம சுளாதி	305
25	ஸ்ரீபுரந்தரதாசரைப் பற்றிய சுளாதி	319

வாழ்த்துரை

ஸ்ரீ விஜயதாஸர் ப்ருகு மகரிஷியின் அம்ஸ ஸம்பூதர். மத்வ மதத்தில் தாஸ சாஹித்யத்திற்கு பெரும் பங்களிப்பை அளித்த அஷ்ட தாஸர்களில் மிக முக்கியமான ஸ்தானத்தில் போற்றப்படுபவர். த்ரேதா யுகத்தில் 'ஸூரலீலா' என்ற கபியாக அவதரித்து ஸ்ரீ ராமபிரானுக்கு சேவை புரிந்தவர். த்வாபர யுகத்தில் 'நிகம்ப' என்னும் யாதவனாகப் பிறந்து ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவிற்கு ஸகாவாக இருக்கும் பாக்கியத்தைப் பெற்றவர். கலியுகத்தில் ஸ்ரீ புரந்தர தாஸரின் வீட்டு கன்றுக் குட்டியாகவும், பின்னர் ஸ்ரீ புரந்தரதாஸரின் மகன் மத்வபதியாகவும் அவதரித்து மீண்டும் அவரே தாஸரின் அனுக்ரஹத்துக்கு பாத்திரராகி ஸ்ரீ விஜயதாஸராகவும் அவதரித்துள்ளார்.

ஸ்ரீ விஜயதாஸர் 1682ல் துங்கபத்திரா நதி தீரத்தில் உள்ள சீக்லபர்வியில் ஸ்ரீ நிவாஸ - கூஸம்மா தம்பதியருக்கு மகனாக 'தாஸப்ப' (கூஸி மக தாஸ) என்ற பெயரில் அவதரித்து சிறுவயதில் இருந்தே வறுமையில் திளைத்து வந்த சூழ்நிலையில், 14வது வயதில் அரஸம்மா என்ற கன்னிகையை மணந்து வறுமை மேலும் வாட்டி வதைக்க, விரக்தியினால் காஸி க்ஷேத்திரம் சென்று ஸத்ஸங்கத்தின் பயனால் பக்தி உணர்வு மேலிட, ஸ்வப்னத்திலேயே பகவான் ஸ்ரீ வேதவ்யாஸர் புரந்தரதாஸரின் ரூபத்தில் தோன்றி, வியாஸ காஸிக்கு அழைத்துச் சென்று, வியாஸ பகவான் மூலமாக நாவினில் 'விஜய' என்னும் பீஜாக்ஷரத்தை எழுதி அனுக்ரஹம் செய்ய விஜய தாஸராக பரிமளித்து 'விஜய விட்டல' என்ற முத்திரையில் பல தேவர நாமாக்களை இயற்றி தாஸ ஸாஹித்யத்திற்கு பெரும் பங்களித்தவர். அவரது வாழ்க்கையில் ஏற்பட்ட இந்த திருப்புமுனைக்குப் பின் பகவத் க்ருபையால் நித்ய அன்னதானம், ப்ராமண போஜனம்,

கன்யாதானம், தர்ம உபநயனம் என பல ஸத்காரியங்களைச் செய்தவர். ஸ்ரீ புரந்தரதாஸரின் ஐந்து லட்சம் தேவர நாமாக்களை இயற்றும் ஸங்கல்பத்தில் 25000 குறைய, தாஸர் தனது மகன் மத்வபதியை பூர்த்தி செய்யக் கோர, அவரே ஸ்ரீ விஜயதாஸராக அவதரித்து ஸ்ரீ புரந்தரதாஸரின் சங்கல்பத்தை நிறைவு செய்துள்ளார். கோபாலதாஸர், மோஹனதாஸர், வேணுகோபாலவிட்டலதாஸர், வியாஸவிட்டலதாஸர் போன்ற 60க்கும் மேற்பட்ட சிஷ்யர்களுக்கு அங்கிதம் அளித்தவர். பாரத தேஸம் முழுவதும் யாத்திரை மேற்கொண்டு மத்வ ஸித்தாந்தத்தை தாஸ ஸாஹித்யத்தின் மூலம் பரப்பி பாமரர்களுக்கும் பக்தியையும் ஞானத்தையும் ஊட்டிய தாஸர், திருப்பதி க்ஷேத்திரத்திற்கு மேற்கொண்ட யாத்திரை கணக்கிலடங்காதது. பதங்கள், வ்ருத்த நாமங்கள், பத்யங்கள், கீர்த்தனைகள், உகாபோகங்கள் மற்றும் கத்யங்கள் எனப் பலவகைகளிலும் தாஸ ஸாஹித்யத்திற்கு வித்திட்ட தாஸர், விஸேஷமாக வேத சாஸ்திர உபநிஷத்துக்களின் ஸாரத்தை மிகச் சுலபமான வகையில் ஸுளாதிகளாக அளித்து 'ஸுளாதி தாஸர்' என்றே போற்றப்படுபவர். 1755ல் தமது 73வது வயதில் கார்த்திக ஸுத்த தஸமியன்று பாஸ்கர க்ஷேத்திரமான சிப்பகிரியில் அவதாரத்தை பூர்த்தி செய்து, இன்றும் வேண்டும் பக்தர்களின் மனோபீஷ்டங்களை நிறைவேற்றி ஞானம், பக்தி மற்றும் வைராக்கியத்தை அருள்பவர் ஸ்ரீ விஜயதாஸர்.

ஸ்ரீ விஜயதாஸரின் ஜீவன சரித்திரத்தில் மிக முக்கியமான மஹிமைகளை காணும்போது,

1. திருப்பதியில் ஒரு முறை ஸ்ரீநிவாஸனின் தரிசனம் கிடைக்காமல் போக பகவானே பக்தர் ஒருவர் மூலமாக ஆவேஸ ரூபத்தில் தாஸரை வரவழைத்து விசேஷ தரிஸனம் செய்வித்த மஹிமைகள் உண்டு.

2.தாஸ தீக்ஷைக்கு முன் வறுமை காலத்தில் தனக்கு ஒரே ஒரு முறை போஜனம் அளித்த நன்றிக் கடனுக்காக சாகி

கேசவராயரின் மகனுக்கு ஏற்பட்ட அபம்ருத்யுவை பரிஹாரம் செய்ததுடன் தனது ஆயுளில் 3 வருடங்களைத் தானமாக அளித்து அனுக்ரஹம் புரிந்துள்ளார் தாஸர்.

3. தாஸருக்கு செய்த அபவாதத்தினால் ஸ்ரீநிவாஸாச்சாருக்கு (ஜகன்னாததாஸர்) ஏற்பட்ட தீராத வயிற்று வலியை கோபாலதாஸர் மூலமாக பரிஹாரம் செய்ததுடன் அவரின் ஆயுட்காலம் முடிந்ததை அபரோக்ஷ ஞானத்தால் அறிந்து கோபாலதாஸரை அவரின் 40 ஆண்டு ஆயுட்காலத்தை தானமாகத் தந்து அருளும் படி செய்தவர்.

4. கல்லூர் ஸூப்பண்ணாச்சாரியாரின் ஸூதா மங்கள வைபவத்தில் ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு இனிப்பு பதார்த்தங்களைத் தயார் செய்யும் பெரும் பணியை எளிமையாக வினையத்துடன் ஏற்று, அதைச் சுலபமாக நிறைவேற்றியதுடன் அங்கிருந்த எழுத்தறிவில்லாத ஸேவகனை தனது ஸ்பர்ஸத்தின் மாத்திரத்திலேயே ஸூப்பண்ணாச்சாரும் வியக்கும் வகையில் ந்யாய ஸுதாவின் சில பகுதிகளுக்கு அனுவாதம் செய்வித்து ஆச்சாரின் கர்வத்தைக் களைந்து பின்னர் அவரின் வேண்டுதலுக்கு இணங்க (வியாஸவிட்டலதாஸராக) தாஸ தீக்ஷை மற்றும் அங்கிதம் அளித்து ஸன்மார்க்கம் காட்டியவர் ஸ்ரீ விஜயதாஸர்.

5. பீமன்ன நாயக் என்னும் பெரும் நகை வியாபாரியின் மனைவி தன் கணவனை இழந்து விதவையாகி தனது உறவினர்களாலும் கைவிடப்பட்டு, குழந்தையுடன் அவளும் வியாதிகளாலும் வறுமையினாலும் பலரின் ஏளன பேச்சுக்களாலும் அவதிக்குள்ளாகி வந்த நிலையில், ஸ்ரீ விஜயதாஸர் ஆனேகுந்தியில் நடத்தி வந்த ஸ்ரீ புரந்தர தாஸரின் ஆராதனை வைபவத்தில் கலந்துகொண்டு, ஒரு கட்டத்தில் துங்கையில் தன் குழந்தையுடன் உயிரை விடத் துணிந்தபோது தாஸர் அவளை தடுத்தாட்கொண்டு அக்குழந்தையும் தத்துப் பிள்ளையாக ஏற்று,

---

தேவரநாமாக்களினாலே வியாதிகளை பரிஹாரம் செய்து பின்னர் தாஸ தீக்ஷையும் அளித்து 'யுக்தியள்ளி மோஹன்னா' என்று போற்றும் படியாக மோஹனதாஸராக பரிமளிக்கச் செய்தவர் தாஸர்.

6. ஸ்ரீ மோஹனதாஸருக்கு அபம்ருத்யு உண்டாகும் சூழ்நிலையில் தாஸர் எமலோகம் வரை சென்று மீட்டெடுத்த மஹிமையும் உண்டு.

7. குரு ராகவேந்திரரின் மேல் கொண்ட பக்தியினால் மந்த்ராலயத்திற்கு சென்றபோது விசேஷமான தரிஸனம் பெற்று குருராஜர் மேல் பல கிருதிகளை இயற்றியவர் தாஸர்.

முன்னர் குறிப்பிட்டுள்ளது போல தாஸர் 'விஜய விட்டல' எனும் முத்திரையில் பல பதங்கள், வ்ருத்த நாமங்கள், பத்யங்கள், கீர்த்தனைகள், உகாபோகங்கள், கத்யங்கள் எனப் பலவகையிலும் தாஸ ஸாஹித்யத்திற்குப் பங்களித்த போதும், விசேஷமாக வேத ஸாஸ்திர, உபநிஷத்துக்களின் ஸாரத்தில் இருந்து, பகவானின் பல்வேறு ரூபங்களைப் பற்றியும், தாம் மேற்கொண்ட தீர்த்த யாத்திரையிலே கண்ட பல்வேறு க்ஷேத்திரங்களைப் பற்றியும், பண்டிகைகள், குருபக்தி, நைவேத்யம், ஸதாசாரம், மடி போன்றவற்றைப் பற்றியும், துர்கா, வாயு என தேவதைகளின் தாரதம்யத்தை அனுசரித்தும், ஆசார அனுஷ்டான ஸாதனைகளைப் பற்றியும் ஸுளாதிகளாக அருளி 'ஸுளாதி தாஸர்' என்றே போற்றப்படுபவர். ஹரிதாஸ ஸாஹித்தியத்தில் மோக்ஷத்திற்கு சுலபமான மார்க்கம் என்பதாக (ஸுலபவாத ஹாதி) 'ஸுளாதிகள்' அமைந்துள்ளன. "ஸுதா ஓதி ஸுளாதி ஓது" என்பது பிரஸித்த வாக்கு. நியாய ஸுதா முதலான கிரந்தங்களின் ஆழமான கருத்துக்களைத் தாஸர் ஸுளாதிகளில் அமைத்துக் கொடுத்துள்ளார். ஸுதா முதலான கிரந்தங்களில் உள்ள ஆழ்ந்த கருத்துக்களை அறிய, ஸுளாதிகளை கற்க வேண்டும் எனவும் கொள்ள வேண்டும்.

ஸ்ரீ விஜயதாஸரின் இத்தகைய ஸுளாதிகளின் தொகுப்பிலே, நாம ஸ்மரண ஸுளாதி, ஸதாசார ஸுளாதி, ஹரிதாஸர லக்ஷண ஸுளாதி, தாரதம்ய ஸுளாதி, மடி ஸுளாதி, ஹப்ப ஸுளாதி, ஸ்ரீ தன்வந்தரி ஸுளாதி, ஸ்ரீ கபில ஸுளாதி, ஸ்ரீ வாயு ஸுளாதி, ஸ்ரீ புரந்தரதாஸர ஸுளாதி போன்ற 25 மிகப் பிரஸித்தமான, முக்கியமான ஸுளாதிகளின் அர்த்தங்களை 'ஜகன்னாத கேசவ' திரு. சத்தியநாராயணன் அவர்கள் தமிழில் மிக அழகாக மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். அவர் சமீப காலத்தில் வெளியிட்டுள்ள இன்னும் பிற தாஸ ஸாஹித்ய படைப்புகளின் நூல் வரிசையிலே, இதுவும் பெருமை சேர்க்கும் என்பதில் ஐயமில்லை. அவருக்கு ஸ்ரீ விஜயதாஸரின் அந்தர்யாமியான ஸ்ரீ விஜய விட்டலன் ஆயுள், ஆரோக்யம், ஐஸ்வர்யம் போன்றவற்றை அருளி இன்னும் பல்வேறு நூல்களைத் தொடர்ந்து வெளியிடப் பிரார்த்தனை செய்கிறேன்.

மேடவாக்கம், சென்னை — 'பிரஸங்க பூஷணம்',
5th October 2021 — 'பிரவசன பூஷணம்','மத்வரத்னா'

S. லக்ஷ்மிபதிராஜா

1. நாமஸ்மரணெ சுளாதி

ராகம்: ஸாவேரி. தாளம்: த்ருவ

கு3ண கால தே3ஷ கர்ம க்ரியெ நாம தீர்த்த2 தே3ஹ
ஜனன மிக்காத3 நால்கு ப3கெ3 வ்யாபார
ஜனன நானா ஜந்து வர்ஷ க2ண்ட3 த்வீபாப்3தி4 க3க3ன
ப்ரணவமந்த்ர வர்ண உபகரண
இனிதாரல்லி அபி4மானிக3ள திளிது3 உத3யாஸ்த
மான பர்யந்தர ஸஞ்சரிஸு
தி3னதி3னத3ல்லி யள்ளினிது பி3ட3தெ3 ஸா
த4னமாடு3 து3ரியதெ3 ஸர்வத3ல்லி
நெனிஸு, பா4ரதி க3ருட3 க3ணபதி புஷ்கர
அனலாங்க3னெ உஷா புஷ்கர த4னப
இன ஷஷி பூ4மி த4ர்மமிகி3லாத3 தே3வதிக3ளு
மனஸ்ஸிகெ3 தந்து3 தத்தத் ப4கவத்ரூப
மனன மாடு3வது3 மாது மாதிகெ3 பி3ட3தெ3
ஜனன மரணதி3ந்த3 தூ3ர காணோ
இனிது சிந்தனெயிந்த3 நிகி2ளகர்ம மாடி3த3
க4னபுண்யக்கெ மிகி3லு அடி3க3டி3கெ3
தனுவு த3ண்ட3ணெயில்லா பரரிகெ3 பா3ய்தெ3ரது3
த3ணிது3 ப3ளலுவத3ல்லா திருகி3திருகி3
ஹண ஹொன்னு வெச்ச மாடி3 ப3ரிதா3கு3வத3ல்ல
மனதொளகெ3 உண்டு1 பா3ஹ்யவல்ல
அனிமிஷ க3ணத3வரு வஷவாகி3 இப்பரு
அனுதி3ன காருண்யவனு மாள்பரோ
மினகு3க்ஞானவிதெ3 ப4க்தி வைராக்யமிளித
கொனெகெ3 இது3 தொரியதலெ முக்தியில்லா
எணிகெ மாடெ3லோ மனுஜ நானு நன்னதெ3ம்போ3
தனு மனெ ஸமஸ்த விஷயத3ல்லி
நினகெ3 ஸ்வாதந்த்ர்யவ ஹச்சிகொள்ளதெ3 ஹரி
அணுமஹத்து ரூப யுக3பத3னெந்து3
க3ணிதமாடு3வது3 இதெ3 நினகெ3 கு3ப்தா
ர்ச்சனியு காணோ ஈபரி திளிது3 நாமகீ

ர்த்தனெ கை3யோ லிபிஸிகொண்டா3டு3 நித்ய
கு3ணிஸி நோடெ3லோ த்4யான ஜப தப ஸித்திகி3ந்த
மணியாகி3ப்பனு நாமஸித்3த4 மனுஜ
ஜனரிகெ3 அருஹுவாதனு க்3ரஹிஸுவ ஸா
த4னத3ல்லி பா3ளுதிப்ப கலியுக3த3ல்லி
த்ருண பொ3ம்மபரியந்த தாரதம்ய பே4த3தி3ந்த3
கு3ணப3ல்லவனிகெ3 ஈ மாது ஸித்3த4
ப்ரணதார்த்திஹர நம்ம விஜயவிட்டலரேய
நெனிஸு நெனிஸு ப4க3வத்கீ3தார்த்த2வன்னெ திளிது3 ||1

மட்ட தாள

ப்ராத:காலத3ல்லி நாராயண நென்னி
ஸ்ரீதுளஸியல்லி விஷ்ணுவின ஸ்மரணெ மாடி3
மூத்ர புரீஷ விஸர்ஜன ஸமயத3ல்லி
நீ திளியோ கேஷவ நாமக ஹரிய
மாது மரியதி3ரு ம்ருத்திகாஸௌசக்கெ
ஸ்ரீத்ரிவிக்ரமனோ, த3ந்ததா3வன ஹரி
நேதுர மொத3லாத3 ப்ரக்ஷாலனகெ மாத4வ
கோ3த1ண்ட3வரிஸுவ காலகெ கோ3வர்த்த4ன
வாதனோடி3ய நம்ம விஜயவிட்டல மூர்த்திய
மாத்ர காலபி3ட3தெ3 நெனிஸி த4ன்யனாகோ3 ||2

ரூபக தாள

நத்3யாதி3 ஸ்னான மாடு3வ காலகெ வரஹா
ஊர்த்4வபுண்ட்3ரக3ளல்லி கேஷவாதி3 ஸூர்ய
முத்3ரெ இடு3வாக3 க்ருத்3தோ4ல்காதி3 ஐது3
ஸந்த்4யா ஸந்த்4யாகாலத3ல்லி ராமனென்னு
ஸித்3த4வாகி3 ப்ராணக்3ராஸத3ல்லி அனி
ருத்3தா4தி3 பஞ்சப4க3வன் மூர்த்திக3ள ஸ்மரிஸு
முத்3தெ3 முத்3தெ3 கவளமெலுவாரம்ப4த3ல்லி வா
ஸுதே3வ, ஆபோஷனக3ளல்லி ஸ்ரீஹரி
பொத்3து3டு3வ வஸ்த்ரத3லி உபேந்தி3ர ப4க3
வ3த்3ரூபசிந்திஸு உபவீத வாமன

1. நாமஸ்மரணெ சுளாதி

ஷுத்3த4 மங்க3ளார்த்தி கொம்பா3க3 பா4ர்க்க3வ, வை
ஷ்வதே3வாதி3யல்லி இதே3 மூர்த்தி நிஸ்சய
நிர்தோ3ஷ தீர்த்த2த3ல்லி கிருஷ்ண ராம வியாஸ
நிர்தா4ர த்ரிவார, ஷங்கோ2த3க முகுந்த3
ப4த்3ரமூருதி நம்ம விஜயவிட்டலரேய
ஹ்ருத்கு3ஹதொ3ளல்லி நெனிஸி ஸந்தோஷவனுப4விஸு ||3

ஜம்பெ தாள

துத்து ப்ரதி துத்திகெ3 கோ3விந்த3 ப4க்ஷ்யகவள
எத்துவாக3ச்யுத ஷாகதி3 த4ன்வந்த்ரி
மத்தெ பரமான்னத3லி பாண்டுரங்க3 நவ
நீதத3ல்லி தாண்ட3வக்ருஷ்ண ஸ்வாமி
பு3த்தி1 க்ஷீரான்னத3லி கோ3பால ஸ்ரீநிவாஸ
தத்தளிப தைல க்4ருத பக்வத3லி வைகுண்ட2
உத்தத்தி கத3ளி ஜம்பு3 ஜூத மது4
கித்தளி தா3ளிம்ப3 நாரிகேள நாரங்க3
தா4த்ரிமிக்காத3 ப2லமெலுவாக3லி, யது3கு
லோத்தம பா3லகிருஷ்ணன ஸ்மரிஸு மனவெ
சித்தஜ பித நம்ம விஜயவிட்டலனங்க4ரி
சித்தத3லி நிலிஸி உத3ரபூரகெ3யிஸு ||4

த்ரிவிடி தாள

பானகத3ல்லி நாரஸிம்ஹமூருதி, க3ங்கா3
பானத3ல்லி விஷ்ணுத்ரிவிக்ரமா
மேணு க3மனாக3மனத3ல்லி க3ருடகேதன
ஏனெம்பெ3 த்3விஜரல்லி ஸர்வரூபா
கா3ன மாடு3வ கால யோகே3ஷ்வரதே3வ
ஆனந்த3கதா2கால ஹயாஸ்ய வ்யாஸ
மாணதெ3 துலஸி தூ3ர்வாங்குர ஸகல ப்ரா
ஸூனு முடி3த3 கால, ராம த3த்த கபில
ஸூனீதியலி நரஸிம்ஹ, ப்ரணாம ப்ரத3
க்ஷணெகெ க2க3 சேஷாந்தர்க3த ஹரி என்னி
நீனெ திளியோ உத3ரபூர்த்திகெ3 வாஸுதே3வ

தா3னாதா3னத3ல்லி ராம வாமன மூர்த்தி
தே4னுதோ3ஹனத3ல்லி கோ3பால வத்ஸஸ்தன
பான த3தி4மத2னத3லி கிருஷ்ண ஹரி காணோ
ப்ராணனொளகி3ப்ப விஜயவிட்டல ரேய
மானஸத3லி பொளெவ இந்து3கொண்டா3டி3த3ரெ ||5

அட்ட தாள

புத்ராதி3 சும்ப3ன வேணு ஹஸ்த கிருஷ்ண
மத்தெ தாம்பு3ல காலத3ல்லி ப்ரத்3யும்னனு
சித்தஜன கேளியல்லி கோ3பேரா
வ்ருத்த குச குங்குமாங்கித எளெத3
ஹஸ்த கோ3பி ஜனஜார கிருஷ்ணனென்னி
ஹொத்து ஹொத்திகெ3 க்ரீடெ3 காலக்கெ கோ3விந்த3
உத்தம ஷய்யாகாலக்கெ ஸங்கருஷ்ண
இத்த நித்3ரெயல்லி பத்4மனாபதே3வ
அத்யந்தவாகி3 கொண்டா3டு3 நிருதவாடி3
ஸத்ய ஸங்கல்பனு விஜயவிட்டலரேய
ப்4ருத்யனல்லி மஹிதாஸனாகி3 இப்பா ||6

ஆதி தாள

அடி3க3டி3கெ3 மாடு3வ ஸம்ஸாரயாத்ரெயல்லி
பி3ட3தெ3 கர்மாவளினெஸகு3வ காலக்கெ
பொட3னொட3னெ கேஷவாதி3 மூர்த்திக3ள நெனிஸுவுது3
நடெ3 நுடி3 மரியதெ3 மனத3ல்லி சிந்திஸி
பொடவீஷரங்க3ன்ன கருணகடாக்ஷவ
படெ3து3 த4ன்யனாகோ3 இந்த2தகெ ஸத்கர்ம
கடெபீ3ளுவது காணோ ஸம்ஸாராம்பு3தி4யிந்த3
தடி3யதெ3 ஹொத்3தா3ரி வைகுண்ட நகரிகெ3
ப3ட3வனாத3ரெ இனிது திளிது3 ஸஞ்சரிஸித3ரெ
எட3பி3ட3தெ3 நூராரு யாக3மாடி3த3 ப2ல
குடி3த3 நீரு மொத3லாகி3 ஸர்வாந்தரியாமி ஹரிய
கடு3பூஜெ எனிபது3, ஆவாவ ப3கெ3யிரலு
ஒடலிகோ3ஸுக இத3மாடி3த3ராத3டெ3

1. நாமஸ்மரணெ சுளாதி

கட^{3}லதெ2ரெயந்தெ புண்யவெ ப^{3}ப்புது^{3}
த்^{4}ருட^{4}மனத^{3}ல்லி நித்யனெனிஸூ, காயதி^{3}ந்த^{3}
ப^{3}டு^{3}வ க்லேஷக^{3}ளன்னு பி^{3}டு^{3}பி^{3}டு^{3} மத்தெ பி^{3}டு^{3}
ஒடி^{3}ய விஜயவிட்டல ஸகலவிஷயத^{3}ல்லி
ஹூடு^{3}கிஸிகொள்ளத^{3}லெ முந்தெ^{3} நிந்தா^{3}டு^{3}வ ||7

ஜதெ

ரஸனத^{3}ல்லி இந்து நுடி^{3}த^{3}ரெ தன்ன த^{3}
ருஷன கொடு^{3}வ நம்ம விஜயவிட்டல வொலிது^{3} ||8

***

<u>1. குண கால தேஷ கர்ம க்ரியெ நாம தீர்த்த தேஹ</u>

இந்த சுளாதியில் விஜயதாசர் நித்ய ஸ்மரண விதியை விளக்குகிறார். கர்ம சித்தாந்தத்தை சுருக்கமாக சொல்லும் விதமாக இது இருக்கிறது. 'யஸ்மின் ஸர்வாணி கர்மாணி ஸன்யஸ்யாத்யாத்ம சேதஸா' என்று சதாசார ஸ்ம்ருதியில் ஆசார்யர் கூறிய - தகாத விருப்பங்களை துறந்து, அனைத்து வித கர்மங்களையும் ஸ்ரீஹரியின் பூஜா ரூபமாக செய்து, அவற்றை அவனுக்கே சமர்ப்பிக்க வேண்டும். பாப & புண்ணிய கர்மங்கள் இரண்டையும் ஸ்ரீஹரியே செய்விக்கிறான். ஆகையால், சர்வகர்மங்களையும் அவனுக்கே சமர்ப்பிக்க வேண்டும். ஆனால், புண்ய கர்ம சமர்ப்பணையில் ஒரு சிறப்பு இருக்கிறது.

ரதத்தை இழுக்கும்போது நூற்றுக்கணக்கான பேர் ஒன்று சேர்கிறார்கள். அப்படியே ஜீவனால் நடக்கும் கர்ம ஸந்ததியில் தத்வாபிமானிகள் மற்றும் ப்ராணதேவ மற்றும் ஸ்ரீஹரியின் செயல்கள் அதிகமாக இருக்கின்றன. இவர்களின் அருள் இல்லாமல், ஜீவன் எதையும் செய்ய முடியாது. இப்படியாக புண்ய கர்ம செய்த ஜீவன், அதனை தானே செய்தேன் என்று கர்வம் கொள்ளாமல், தேவதைகளின் மற்றும் ஸ்ரீஹரியின் கர்த்ருத்வத்தை சிந்தித்தவாறு, ஸ்ரீஹரியிடமே அந்த கர்மங்களையும் சமர்ப்பிக்க வேண்டும்.

பாப கர்மங்களை அர்ப்பிக்கும்போது, என் பாப கர்மத்தினால் ஸ்ரீஹரி, இந்த கர்மத்தை செய்வித்திருக்கிறான் என்னும் ஞானத்துடன் இந்த பாபம், ஹரித்வேஷிகளுக்கு போகட்டும் மற்றும் இனிமேல் இத்தகைய பாவத்தை செய்விப்பது வேண்டாம் என்னும் பாவனையுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

புண்ணியங்களை ஸ்ரீஹரியிடம் அர்ப்பிக்காவிடில், காவலாளி இல்லா தோட்டத்து மரத்தின் பழங்களை, திருடர்கள் எடுத்துப் போவதைப் போல, தைத்யர்கள் புண்ணிய பலன்களை அபகரிக்கின்றனர். ஹரிகதாம்ருதசாரத்தில் - நதிய ஜல நதிகெரெவ தெரதலி - என்று உதாரணம் கொடுக்கப்பட்டுள்ளது. நதியின் நீரினையே எடுத்து, மறுபடி அதிலேயே அர்க்யம் கொடுப்பதைப் போல, ஸ்ரீஹரி செய்வித்த கர்மங்களை ஸ்ரீஹரிக்கே அர்ப்பிக்க வேண்டும். நதி அந்த நீரினை என் நீர் என்னும் கர்வம் இல்லாதிருப்பதைப் போல, கர்மங்களைப் பற்றியும், இவை நான் செய்த கர்மங்கள் என்னும் சிந்தனை இருக்கக்கூடாது. கெரெய நீரன்னு கெரெகெ செல்லி - என்னும் புரந்தரதாசரின் அபிப்பிராயமும் இதுவே ஆகும். விதிநிஷேதங்கள் என்னும் காரணங்களால் கர்மங்களை செய்யாமல், பக்திபூர்வகமாக செய்ய வேண்டும். இதையே - விதி நிஷேதாதிகளி கொளகாகதலெ - என்றிருக்கிறார்.

தர்வியந்ததி பதுமனாபன ஸகல கர்மகளல்லி நெனெவுத்திரு - என்று கரண்டியின் உதாரணம் சொல்லப்பட்டுள்ளது. கரண்டி எந்தவொரு பதார்த்தத்தில் மூழ்கியிருந்தாலும், அதன் சுவையை அனுபவிக்காது. அப்படியே, கர்மபலத்திற்கு சேராமல், நிர்லிப்தனாக கர்மங்களை செய்ய வேண்டும். ஹரியின் சேவா பாவனை இல்லாதவனுக்கு கர்மத்தின் ஒட்டுதல் உண்டாகிறது.
அக்ஞஸ்ய கர்ம லிப்யேத க்ருஷ்ணோபாஸ்திம குர்வத: । (ஈஷா.பாஷ்ய). இவ்வாறு ஹரி ஸ்மரணையுடன் கர்மங்களை அர்ப்பித்தால் - த்ருணஜல தேனு தானுண்டு அனவரத பால்கரெவ தெரெதந்தெ - பசுவானது, பால் மற்றும் தண்ணீர் சாப்பிட்டு, அமிர்தமயமான பாலினைக் கொடுப்பதைப் போல, மானநிதியான ஸ்ரீஹரி, நமது கர்மங்களை ஏற்றுக் கொண்டு, மோட்சானந்தத்தைக் கொடுக்கிறான். புல்லிற்கு பதிலாக பசு பாலினைக் கொடுத்தால்,

1. நாமஸ்மரணெ சுளாதி

கோபாலன் கர்மத்திற்கு பதிலாக ஞானாம்ருதத்தைக் கொடுக்கிறான்.

கர்மங்கள், தைஹிக, தைஷிக, காலிக என்று மூன்று விதங்களாக இருக்கின்றன. ஸ்ரீஹரி இவற்றில் முறையே கிருஷ்ண, பரசுராம, ஹயக்ரீவ ரூபங்களில் இருக்கிறான். இந்த கர்மங்களை - அனல பக்வவ கயிஸிதன்னவ அனலனொளு ஹோமிஸுவ தெரதந்தெ - அக்னியில் தயாரான அன்னத்தை அக்னியிலேயே ஹோமம் செய்வதைப் போல, ஸ்வாமி செய்வித்த கர்மங்களை அவனுக்கே சமர்ப்பிக்க வேண்டும்.

சர்வகர்மங்களும் ஸ்ரீஹரியின் பூஜை.

நாம் தினமும் செய்யும் ஸ்னானாதிகளும்கூட நம் தேகாதிகளில் அந்தர்யாமியாக இருக்கும் ஸ்ரீஹரிக்கு அபிஷேகம் என்று சிந்திக்க வேண்டும். ஆகையாலேயே நாம் ஸ்னானம் செய்யும்போது, புருஷ சூக்தத்தினால் ஸ்ரீஹரிக்கு அபிஷேகம் ஆகிறது என்ற அனுசந்தானம் வேண்டும். ஸிஞ்சேத் புருஷ ஸூக்தேன ஸ்வதேஹஸ்தம் ஹரிம் ஸ்மரன் - என்று ஆசார்யரின் வாக்கியம் இருக்கிறது. இப்படியாக அனுசந்தானம் உள்ளவர்களுக்கு, பூமியில் உள்ள எந்தவொரு தண்ணீரில் குளித்தாலும் அது கங்கா ஸ்னானம் ஆனதைப் போலவே ஆகிறது.

ஸ்ரீவரனிகபிஷேகவெந்தரிது
ஈ வஸுந்தரெயொளகெ பல்லவரு
ஆத ஜலதலி மிந்தரெயு கங்காதி தீர்த்தகளு
தாவொலிது பந்தல்லெ நெலெகொண்டு

இப்படியான சிந்தனை இல்லாமல் கங்காதி தீர்த்தங்களில் ஸ்னானம் செய்தாலும் முக்ய பலன் கிடைக்காது. விஷய ஸுகாதிகளும்கூட இந்திரியங்கள் என்னும் அக்னியில் ஹோமம் ஆகிறது என்னும் சிந்தனை செய்ய வேண்டும்.

கண்ட விஷய ஸுகவெல்ல இந்திரியாக்னியலி ஹோம
த்ருடப்ராக்ஞரேன மாடிதரதே மரியாதெ -- என்கிறார் புரந்தரதாசர்.

நான் எனது என்னும் கர்வத்திற்கு உள்ளான ஜீவன், ஸ்னானாதி புண்ய கர்மங்களை செய்தாலும், தைத்யர்களையே சேர்கிறான். அதனை ஸ்ரீநிவாசன் ஏற்றுக் கொள்வதில்லை.

நானு நன்னது எம்ப ஜடமதி
மானவனு தினதினதி மாடுவ
ஸ்னானஜப தேவார்ச்சனெயெ மொதலாத கர்மகள
தானவரு ஸெளெதொய்வரல்லதெ ஸ்ரீநிவாஸனு ஸ்வீகரிஸ ||

மத யானை விளாம்பழத்தை விழுங்கினால் அதன் சுவையானது அதற்கு எப்படி தெரியாதோ, அதைப் போல கர்வம், செறுக்கு ஆகியவற்றைக் கொண்டவர்களுக்கு நற்செயல்களின் பலன்கள் கிடைக்காது. அஹம்தீதி ந்ரூணாம் கர்ம கஜபுக்த கபித்தமத் || (பாகவத)

ஸ்ரீஹரியின் இருப்பு, ஸ்வாதந்த்ர்யங்களை அறியாமல், பூமியில் இருக்கும் அனைத்து தீர்த்தங்களுக்கு யாத்திரை செய்தால், அதன் மூலம் பலன்கள் எதுவும் கிடைப்பதில்லை. ஹரி சிந்தனையில்லாமல் செய்த ஸ்னான பானாதிகள் எதுவும் பலன்களைக் கொடுப்பதில்லை. இதையே,

கண்ட நீரொளு முளுகி தேஹவ தண்டிஸலு பலவேனு?என்கிறார் ஜகன்னாததாசர். ஸ்ரீநிவாசனின் இருப்பு மற்றும் செயல்களை பக்தியுடன் நினைக்காமல் என்ன கூறினால் என்ன? எதைப் படித்தால் என்ன? எதனாலும் பலன்கள் இல்லை. இத்தகைய அனுசந்தானம் உள்ளவர்களுக்கு அனைத்து தேசங்களும் புண்ணிய க்ஷேத்திரங்களே. சர்வ காலமும் பர்வ காலங்களே. சர்வ ஜீவரும் தானபாத்ர பிராமணராகவே தெரிவர்.

ந து காலவிசேஷோऽஸ்தி ஞானினாம் நியமான் பலம் || ஸரோவரம், நதி முதலான நீர்நிலைகளில் இருக்கும் அபிமானி தேவதைகள், நம் தேகத்தில் இருக்கும் ரோமகூபங்களில் நிரம்பியிருக்கின்றனர். கங்கா முதலான நதிகள் நமது தேகத்தில் உள்ள 72,000 நாடிகளில் பாய்கின்றனர். தேவதைகள் மற்றும் கங்கா நதிகள் இரு அம்சத்தினால் ரோம கூபங்கள் மற்றும் நாடிகளில்

இருக்கிறார்கள் என்பது சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட விஷயம் ஆகும்.

அம்ஷத்வயே ந தேவாஸ்ச கங்காத்யா: ஸந்தஸ்ததா |
ரோமகூபம் கதாஸ்த்வாத்யா: த்வாஸப்ததி நாடிகா: ||

72,000 நாடிகளிலும், 101 நாடிகள் முக்கியமானவை. அத்ரைததேகஷதம் நாடீனாம் - ஷட்பிரஷ்ன

அவயவம்	நாடியின் பெயர்	நதி	ஸ்ரீஹரியின் ரூபம்
இடது மூக்கு ரந்திரம்	இடா	கங்கை	மாதவன்
வலது மூக்கு ரந்திரம்	பிங்களா	யமுனை	ஹரி கிருஷ்ணன்
பிரம்ம ரந்திரம்	மத்ய	கோமதி	நாராயண
லிங்க	ஷங்கினி	தபதி	தாஷரதி ராம
வலது காது	காந்தாரி	காவேரி	கபில
இடது காது	ஹஸ்தினி	ஸிந்து	நாராயண
வலது கண்	லம்புஸி	தாமிரபரணி	அனந்த

இடா பாகீரதி நீடே பிங்களா தக்ஷிணீ யமுனே நமோ | ஸுஷும்னா ஸரஸ்வதி கண்டிகே நமோ || என்று புரந்தரதாசர் பாடுகிறார்.

ஆசார்யர், நமது தினப்படி நடவடிக்கைகள் எப்படி இருக்க வேண்டும் என்று தெரிவிக்கும் 'ஸதாசார ஸ்ம்ருதி' போன்ற கிரந்தத்தை இயற்றினார். ஸ்ரீஹரியை தொடர்ந்து சிந்தித்துக் கொண்டிரு - என்பதே விதியாகும். ஹரியை மறக்காதே - என்பதே விதிவிலக்குகள் ஆகும்.

அனைத்து சத்கர்மங்களும் ஹரிபக்தர்களுக்காக, ஹரிபக்தர்களால் செய்யப்பட்டால் மட்டுமே பலன் கிடைக்கிறது. ஆகையால், பல் தேய்த்தல் முதலான அனைத்து செயல்களிலும், ஸ்ரீஹரியின் ஒவ்வொரு ரூபங்களை சிந்தித்து, அவற்றை சிந்தித்தவாறு, விஹித

கர்மங்களை செய்தால், பகவந்தனின் ஸ்வாதந்த்ர்ய, ஜீவனின் அஸ்வாதந்த்ர்ய ஆகியவை தெரிய வருகிறது என்றே இந்த சுளாதி சொல்கிறது.

2. ப்ராத: காலதல்லி நாராயணனென்னி..

ப்ராத: காலத்தில் நாராயண என்று சிந்தித்தவாறு எழ வேண்டும். இதையே 'ஸ்ம்ருத்வா விஷ்ணும் ஸமுத்தாய' என்று சொல்கிறார். 'ப்ராதர்னாராயணம் ஸ்ம்ருத்வா' என்றும் பஞ்சராத்திரத்தில் இருக்கிறது. படுக்கையிலிருந்து எழுந்த உடனேயே கஜேந்திர மோட்ச, பகவத் த்யான, வ்யாஸக்ருத நாராயண ஸ்தோத்திரம் ஆகியவற்றை சொல்ல வேண்டும்.

ப்ராத:ஸ்மராமி பவபீதி மஹார்த்திஷாந்த்யை நாராயணம் கருடவாஹன மப்ஜனாபிம் |
க்ராஹாபிபூத வரவாரண முக்திஹேதும் சக்ராயுதம் தருணவாதி ஜபத்ர நேத்ரம் ||

ஆகிய ஸ்தோத்திரங்களால் நாராயணனை வணங்க வேண்டும். தினமும் பிராம்ஹி முஹூர்த்தத்தில் எழ வேண்டும். ஹரிஸ்ரமணை பூர்வகமாக உள்ளங்கையை பார்த்தவாறு, நிரந்தர ஹரி நாமஸ்மரணையை செய்ய வேண்டும். ஸ்வாமி, நான் உன் தாசன், உன் ப்ரீதிக்காகவே நித்ய கர்மங்களை செய்கிறேன். என் மனம் முதலான இந்திரியங்கள் உன் அ-ப்ரீதிக்கு (கோபத்திற்கு) உள்ளாகாமல் இருக்கட்டும்.

தாத்விக தேவதா வந்தனையை செய்ய வேண்டும்.

நமோ வ: தாத்விகா: தேவா: விஷ்ணுபக்தி பராயணா: |
தர்மமார்க்கே ப்ரேரயந்து பவந்த: ஸர்வ ஏவ ஹி ||

என் சரீரத்தின் வியாபாரங்கள் அனைத்தும் உன் ப்ரணாமம் எனப்படட்டும். வாக் இந்திரியத்தின் பேச்சுகள் அனைத்தும் உன் ஸ்தோத்திரங்கள் ஆகட்டும். அனைத்து வியாபாரங்களும் உன் ஆராதனையே ஆகட்டும்.

1. நாமஸ்மரணெ சுளாதி

பூமி பிரார்த்தனை:

சமுத்ரமே வஸ்திரமாக இருக்கும், பர்வதங்களே ஸ்தனங்களாக இருக்கும் விஷ்ணு பத்னியான பூதேவியே, என் பாத ஸ்பர்ஷத்தை மன்னிப்பாயாக.

காலையில் தரிசனம் செய்யத்தக்க வஸ்துகள்:

அறிஞர்களை, சௌபாக்யவதிகளை, பசு, அக்னி, அக்னிஹோத்ரிகளை காலையில் பார்க்க வேண்டும். இதனால் நமக்கு வரக்கூடிய ஆபத்துகள் பரிகாரம் ஆகின்றன. காலையில் பாபிஷ்ட, துர்பாக்கியர்கள், மூக்கு இல்லாதவர்கள் ஆகியோரை பார்த்தால் அவை, ஆபத்து வருவதற்கான அறிகுறிகள் ஆகும்.

ஸ்ரீதுளசியில் விஷ்ணுவின் ஸ்மரணை செய்யவும்:

பகவந்தனின் நேத்திரத்தின் ஆனந்த பாஷ்பத்தினால் வெளியே வந்தவளே, ஸ்ரீதுளசிதேவி. அமிர்தத்தின் சம்பர்க்கத்தால், துளசி அனைத்து நோய்களின் பரிகாரம் எனப்படுகிறது. ஸ்ரீதேவியின் நித்ய சன்னிதானத்தால் 'ஸ்ரீ துளசி' எனப்படுகிறது. ப்ரதிமை, சாலிக்ராம, பசு, அரச மரம் ஆகியவற்றைப் போல ஸ்ரீஹரியின் அதிஷ்டானம் இதில் இருக்கிறது.

ப்ரதிமெ ஷாலிக்ராம கோऽப்யாகத
அதிதி ஸ்ரீ துளசி அவனதிஷ்டான.. | (ஹரிகதாம்ருதசார 5-3)

ஸ்ரீதுளசியில் 5317 ஹரிரூபங்கள் இருக்கின்றன.

கம்ஸாரே: பஞ்சஸாஹஸ்ரம் ததைவ த்ரஷதோத்தரம் |
ரூபாணாம் ஸப்ததஷஸ்ச மேகஸ்மின் துலஸிதளே || (பம்.ரா)

மூரெரடு ஸாவிரத மேல்மு
ந்னூரு ஹதினேளெனிப ரூபவு ஸ்ரீ துளசிதளதி ||

துளசி இல்லாத வீடு வீடே இல்லை. அது ஒரு மயானம். ஸதனம் துளசி ஹீனம் ஷ்மஷானாததிரிச்யதே |

துளசியின் தரிசனம் சர்வபாப விமோசனம். அதனைத் தொடுவதால் சரீரம் பவித்ரம் ஆகிறது. வந்தனையால் சகல ரோக பரிகாரம். தண்ணீர் இறைத்தால் யமபயம் தூரம். துளசி வளர்த்தால் ஸ்ரீகிருஷ்ணன் தரிசனம் தருவான். ஸ்ரீகிருஷ்ணனின் பாதங்களுக்கு சமர்ப்பித்தால் மோட்ச பலன். துளசி, ஸ்ரீஹரிக்கு பரமப்ரியளானவள். அனேக புஷ்பங்கள் இருந்தாலும், துளசி இல்லாத பூ, ஸ்ரீஹரிக்கு பிடிப்பதில்லை.

புஷ்பேஷு ஸத்ஸு ச ஸர்வேஷு துலஸீமதிக ஹரே: | -- கங்கையின் நீர் எவ்வளவு நாளானாலும் எப்படி பவித்ரமானதோ, அப்படியே துளசி உலர்ந்திருந்தாலும், பழையதாக இருந்தாலும், ஸ்ரீஹரியின் பூஜைக்கு உரியதாகிறது.

ந வர்ஜ்யம் துலஸீபத்ரம் ந வர்ஜ்யம் ஜான்ஹவீஜலம் | - வாசுதேவாதி அனைத்து சன்னிதானமும் துளசியில் இருக்கிறது.

வாசுதேவாதயோ தேவா: வஸந்தி துலசீவனே | - ஸ்ரீராம லட்சுமண சீதையர்களுடன் துளசியை சிந்தித்து, செயலைத் துவக்கியவன் - எதிரிகளை வென்று கார்யசித்தி அடைகிறான். இத்தகைய துளசியை தினமும் சிந்தித்தவாறு ம்ருத்திகா தாரணை செய்தவாறு, துளசி மாலையை கழுத்தில் தரித்து, நாரதர் மஹதி வீணை நுடித்தவாறு, ஸ்ரீஹரிக்கு மிகவும் ப்ரியராக இருக்கிறார்.

பணெயலொப்புவதிலக துலசி
மணிக3ணாஞ்சித கண்ட2 கரத3லி
க்க3ணிதவீணா ஸுஸ்வரதி3 ப3ஹுதாள க3திக3ளலி |
ப்ரணவ ப்ரதி3பாத்4யன கு3ணங்க3ள
குணிகுணிது அதிஸம்ப்4ரமதி3 கா3
யனவ மாடு3வ தே3வரிஷி நாரத3ரிக3பி4மனமிபெ || (32-26)

மல மூத்ர விசர்ஜன காலத்தில் கேசவ :ஷௌசகாலே கேஷவம் து - என்பதின் விவரம் இது. நிரருதி திசைக்குச் சென்று மலமூத்ர விசர்ஜனம் செய்து, சுத்தமான மண்ணினால் சுத்தம் செய்து கொள்ள வேண்டும். பகலில் வடக்கு திசையில் முகம் செய்தும், இரவில் தெற்கு பார்த்தும் விசர்ஜனம் செய்ய வேண்டும். சூர்ய சந்திர நட்சத்ராதிகளுக்கு அபிமுகமாக என்றும் விசர்ஜனம்

செய்யக் கூடாது. அந்த சமயத்தில் ஸ்ரீஹரியின் கேசவ மூர்த்தியை சிந்திக்க வேண்டும். அமர்ந்தவாறே மூத்திரம் செய்ய வேண்டும். அந்த சமயத்தில் யக்ஞோபவீதத்தை காதில் அணிய வேண்டும்.

உபவிஷ்ய து விண்மூத்ரம் - க்ருத்வா கர்ணே ஸமாஹித: | - விசர்ஜன சமயத்தில் அமைதியாக இருக்க வேண்டும்.

ம்ருத்திகா ஷௌசக்கெ ஸ்ரீத்ரிவிக்ரமனோ - ம்ருத்திகா ஷௌச செய்யும்போது, வாமனனாகி வந்து த்ரிவிக்ரமனாக வளர்ந்து நின்ற கங்காஜனக த்ரிவிக்ரமனை சிந்திக்க வேண்டும்.

ம்ருதாஷௌசே த்ரிவிக்ரமம் | - ஷௌச காலத்தில் தலைக்கு வஸ்திரத்தை சுற்றிக் கொண்டு, மலமூத்ர விசர்ஜனையை சூர்ய, அக்னி, பிராமண, பசு, கோயில்கள் ஆகியவற்றின் முன் செய்யாமல் இருக்கவேண்டும்.

தந்ததாவனக்கெ ஸ்ரீஹரி - பற்களை தேய்க்கும்போது எட்டு தோள்களைக் கொண்ட ஸ்ரீஹரியை தியானிக்க வேண்டும்.

தந்ததாவன காலே து ஹரித்யேயோ புஜாஷ்டக: || - வேப்பங்குச்சி, மாமர குச்சி ஆகிய காஷ்டங்களால் பல் தேய்க்க வேண்டும். தலையில் எண்ணெய் தேய்த்துக் கொண்டு, பல் தேய்க்கக் கூடாது. கிழக்கு நோக்கி பல் தேய்க்க வேண்டும். மேற்கு & தெற்கு பார்க்கக் கூடாது. பல் தேய்க்கும் போது இந்த மந்திரம் சொல்ல வேண்டும்.

ஆயுர்பலம் யஷோ வர்ச்ச: ப்ரஜா பஷுதனானி ச |
பிரம்மப்ரக்ஞாம் ச மேதாம் ச த்வம் நோ தேஹி வனஸ்பதே ||
கை விரலால் பல் தேய்க்கக் கூடாது.

முக்த்வா ஜானாமிகாங்குஷ்டௌ ந குர்யாத் தந்ததாவனம் |
தந்தான் தாவயேத் ப்ரதேஷினீவர்ஜம் ||
உதய காலத்திலேயே பல் தேய்க்க வேண்டும். மதிய நேரங்களில் செய்யக்கூடாது. நேதுர மொதலாத ப்ரக்ஷாலனக்கே ஹரி - முகம் கழுவும் நேரத்தில் ஹரி ஹரி ஹரி என்று சொல்ல வேண்டும். இதனால் - முகம், வாய், கண், மூக்கு இவற்றில் இருக்கும்

அழுக்குகள் போவதுடன், அவற்றால் நடந்த பாவங்களும் போகின்றன.

புரதோ தேவதா திஷ்டேத் தக்ஷிணே பித்ருதேவதா: |
கண்டூஷகேஷணம் தஸ்மாத் வாமபாகே விதீயதே ||
வாய் கொப்பளிப்பது நம் இடது புறத்திலேயே செய்ய வேண்டும். நமக்கு முன் தேவதைகளும், வலது பாகத்தில் பித்ருகளும் இருப்பதால், நம் இடது பக்கத்திலேயே வாய் கொப்பளிக்க வேண்டும்.

முகபிரக்ஷாலயே காலே மாதவம் மனஸா ஸ்மரேத் || முகம் கழுவும்போது, கொப்பளிக்கும்போது மாதவனை நினைக்க வேண்டும்.

கோதண்டவரிஸுவ காலக்கெ கோவர்த்தன :
பசுக்கள் பகவந்தனிடமிருந்தே பிறந்தன. 'காவோ ஹ யக்ஞரே தஸ்மாத்' பிறகு கஷ்யபரின் மனைவி சுரபியிடமிருந்து பிறந்தன. பாற்கடல் கடையும்போதும் பிறந்தன. பிரம்மதேவனின் ஸ்ருஷ்டியில் கோமூத்ர - கங்கா ஜலம் எனப்பட்டால், அதன் கோமயத்தில் லட்சுமிதேவியே இருக்கிறாள். பசுவின் ஒவ்வொரு அவயவங்களிலும் பிரம்மாதி தேவதைகள் இருக்கின்றனர். அபானத்தில் அனைத்து தீர்த்தங்களும், கோமூத்திரத்தில் கங்கையே இருக்கிறாள்.

அபானே ஸர்வதீர்த்தானி கோமூத்ரே ஜான்ஹவி ஸ்வயம் | பசுஞ்சாணியில் நான்கு சமுத்ராபிமானி தேவதைகள் இருக்கின்றனர். கோமயத்தில் தன் விருப்பப்படியே லட்சுமிதேவி வசிக்கிறாள். கோமயம் இல்லாமல் எதுவும் சுத்தம் ஆவதில்லை. இவ்வாறு சர்வதேவதா சன்னிதானம் இருப்பது பசு மட்டுமே. கோமய, பால், தயிர், நெய் ஆகியவை பஞ்சகவ்யம் எனப்படுகின்றன. அனைத்து பிராயஸ்சித்தத்திற்கும் பஞ்சகவ்யம் அவசியம்.

இத்தகைய பசுக்களை காலையில் தரிசனம் செய்தால் அன்று வரவிருக்கும் அனைத்து ஆபத்துகளும் பரிகாரம் ஆகும். பசுவிற்கு ஒரு கைப்பிடி புல் போட்டால், 100 பிராமணர்களுக்கு போஜனம் செய்வித்த பலன் கிடைக்கும். பசுக்களைப் பார்த்து, வணங்கி,

பிரதட்சிணை செய்தால், ஸப்த த்வீபங்களுடம் பூ-ப்ரதிட்சிணை செய்த பலன் கிடைக்கிறது. பசுக்களில் சந்தான கோபாலகிருஷ்ணனை பூஜித்தால் சந்தான விருத்தி. பசுக்களை காலால் தொடக்கூடாது.

இத்தகைய பலன்கள் நிறைந்த பசுவினை காலையில் தரிசித்து, அந்த சமயத்தில் கோவர்த்தன கிரியை தூக்கிய, பசுக்களை காத்த ஸ்ரீஹரி கோவர்த்தனனை சிந்திக்க வேண்டும்.

3. நத்யாதி ஸ்னான மாடுவ காலகெ வரஹா...

ஸ்னானம் செய்யாமல் எந்தவொரு தெய்விக காரியங்களை செய்யக்கூடாது.

ஸ்னானமூலா: க்ரியா: ஸர்வா: ஸந்த்யோபாஸனமேவ வா ।
ஸ்னானாசார விஹீனஸ்ய ஸர்வா: ஸ்யு: நிஷ்பலா: க்ரியா: ।।
-- வாதூல ஸ்ம்ருதி 69

ஸ்னானம் செய்யாமல் ஜபம், ஹோமம் ஆகியவற்றை செய்யக்கூடாது. ஸ்னானம் இல்லாமல் செய்த ஜப ஹோமங்கள் அசுரர்களைச் சென்று சேர்கிறது. தத் ப்ரக்ருண்ஹந்தி ராக்ஷஸா: । -- ஸ்னானத்தினால் ரகசியமாக செய்த பாவங்களால் முக்தி கிடைக்கிறது.

ரஹஸ்யாசரிதாத் பாபாத் முச்யதே ஸ்னானமாசரன் । - ஸ்னானம் நித்யவிதி ஆகும். நித்யாம் ப்ராத: ஸ்னானம் ஸமாசரேத் - மிகவும் மலினமான இந்த காமம், நம் தேகத்தின் நவ த்வாரங்களிலிருந்தும் அபவித்ர வஸ்துகளை வெளியே தள்ளுகிறது. காலையில் ஸ்னானமே இதற்கு சரியாகும்.

ஸ்ரவத்யேவ திவாராத்ரௌ ப்ராத: ஸ்னானம் விஷோதனம் । - ஏழ்மை, க்ருஹபீடா, கெட்ட கனவுகளின் தொல்லை ஆகியவை ஸ்னானத்தினால் விலகுகின்றன. ஸ்னானம் ஐந்துவித அங்கங்களைக் கொண்டது.

ஸங்கல்பம் ஸூக்தபடனம் மார்ஜனம் அகமர்ஷணம் ।

தேவாதி தர்ப்பணம் சேதி ஸ்னானம் பஞ்சாங்கமுச்யதே ||

ஸ்னானம் ஐந்து விதம்: மல ஸ்னானம், மந்த்ர ஸ்னானம், த்யான ஸ்னானம், வாருண ஸ்னானம், ஜல ஸ்னானம்.

* மூன்று முறை மூழ்கி கோமயங்களால் சுத்தம் செய்து கொள்வது - மல ஸ்னானம்.
* ஈரத் துணியால் உடம்பினை துடைத்துக் கொண்டு, உலர்ந்த ஆடை உடுத்தி, ஜலாபிமந்திரணத்தால் ப்ரொக்ஷணம் செய்து கொண்டு, சந்த்யாதி கர்மங்களை செய்வது - மந்த்ர ஸ்னானம்.
* நோய் நொடிகளால் ஸ்னானம் செய்ய முடியாத சமயங்களில், பகவந்தனின் பாதங்களிலிருந்து பிறந்த அமர தரங்கிணியர், தன் தலையின் மூலம் தேகத்தில் நுழைந்து, அங்காங்கங்களை பவித்ரமாக்கிக் கொள்கிறோம் என்று தியானிப்பது, த்யான ஸ்னானம்.
* கிணறு, ஏரிகளில் மூழ்கி ஸ்னானம் செய்வது வாருண ஸ்னானம்.
* சங்கல்பம் செய்து, நதி அபிமானி தேவதைகளை சிந்தித்தவாறு, பகவன் மூர்த்திகளை சிந்தித்தவாறு ஸ்னானம் செய்வது, ஜல ஸ்னானம்.
* ஸ்னானம் செய்யும்போது இந்த தேகத்தில் இருக்கும் ஸ்ரீவரனுக்கு இது அபிஷேகம் என்று சிந்தித்து ஸ்னானம் செய்ய வேண்டும். நம் தேகத்தில் இருக்கும் 72,000 நாடிகளில் ப்ருஹதி சஹஸ்ர ப்ரதிபாத்ய பகவந்தன் இருக்கிறான் என்று அறிய வேண்டும்.

நம் தேகத்தின் இடது பாகத்தில் இருக்கும் இடா நாடி - பாகிரதி. வலது பக்கத்தில் இருக்கும் பிங்கள நாடி - யமுனா. இவற்றிற்கு நடுவில் பிரம்ம நாடி சுஷும்னா நாடியே சரஸ்வதி. இவ்வாறு சிந்தித்தால் த்ரிவேணி ஸ்னான பலன் கிடைக்கிறது. புரந்தரதாசரின் 'நாடி நதியல்லி ஸ்னானவ மாடுவெ' என்னும் பாடலைப் பார்க்கலாம்.

பகவந்தனின் ஸ்மரணையே ஒரு ஸ்னானம் ஆகும்.
ஸ்மராமி புண்டரீகாக்ஷம் தேன ஸ்னாதோ ப்ஹவாம்யஹம் |

எந்த நதியில் எந்த ரூபம்?

1. நாமஸ்மரணெ சுளாதி

கங்கையில் - மாதவ
கோதாவரி - வீர நாராயண
கிருஷ்ணா - ஜனார்த்தன
காளிந்தி - ஹரிகிருஷ்ண
சரஸ்வதி - பத்மனாப
காவேரி - ஸ்ரீரங்கனாதன்
யமுனா - காளிய மர்த்தன கிருஷ்ண
நர்மதா - மகாவிஷ்ணு
துங்கபத்ரா - வராஹ
பீமரதி - ஸ்ரீதர
தாமிரபரணி - அனந்த
ஸ்வாமி புஷ்கரிணி - ஸ்ரீபூமி சஹித ஸ்ரீனிவாசன்
சந்திர புஷ்கரிணி - வாமன
தேவகாத - கதாதர
என ஹரியின் ரூபங்களை சிந்திக்க வேண்டும்.

ஊர்த்வபுண்ட்ரகளில் கேஷவாதி ரூப :

ஸ்னானத்திற்குப் பிறகு தேவ ரிஷி பித்ரு தர்ப்பண முடித்து, ஷிகோதக வஸ்திரத்தை பிழிந்து தண்ணீர் தர்ப்பணம் செய்து, தண்ணீரை அசுத்தம் செய்த பிராயச்சித்தத்திற்கு யக்ஷ்ம என்னும் ஜலாபிமானி தேவதைக்கு தர்ப்பணம் விட வேண்டும். பிறகு வஸ்திர தாரணம்:

எந்தவொரு தேவதா காரியத்தில் வஸ்திரம் முக்கிய பங்கினை வகிக்கிறது. முந்தைய நாள் உடுத்திய அல்லது துவைக்க வேண்டிய துணிகளை உடுத்தக்கூடாது. நாப்ராக்ஷாலிதம் பூர்வத்ருதம் பிப்ருயாத் |

ஸ்வாமி நமக்கான செல்வத்தை கொடுத்தபோது கிழிந்த, மலினமான ஆடைகளை தரிக்கக்கூடாது. ஸதிவிப்ஹவெ ந ஜீர்ண மலவத் வாஸா: |

ஈரமான ஆடையை என்றும் தரிக்கக்கூடாது. கலியின் சன்னிதானமான ஈர ஆடையில், தேவதா காரியங்களை செய்யக்கூடாது.ந சைவார்த்ராணி வாஸாம்ஸி நித்யம் ஸேவேத

மானவ: | -- அழுக்கான, கரை

(பார்டர்) இல்லாத ஆடைகள் மற்றும் சிவப்பு, நீல வஸ்திரங்களை உடுத்தக்கூடாது.
வர்ஜ்யம் ச மலினம் வஸ்த்ரம் தஷாபிஷ்ச விவர்ஜிதம் | - இன்னொருவரின் ஸ்னான வஸ்திரத்தை தரிக்கக்கூடாது.

வஸ்திரம் நான்யத்ருதம் தார்யம் | - வஸ்திரம் தரிக்கும்போது உபேந்திரனை சிந்திக்க வேண்டும். மற்றும் 'தேவஸ்ய த்வா' மந்திரத்தால் தண்ணீர் கொண்டு ப்ரோக்ஷித்துக் கொள்ள வேண்டும்.

ப்ரோக்ஷவாஸ உபயோஜயேத் | - 'வஸ்துத: ஷுஜீவோ ஹவ்யோ' என்னும் மந்திரத்தால் உலர்ந்த ஆடையை எடுத்து, 'தேவஸ்ய த்வா' என்று ப்ரோக்ஷித்து, 'பூர்புவஸ்வ ஸ்வ:' என்று உடுத்திக் கொள்ள தயாராகி, 'உதுத்யம் ஜாதவேதஸம்' மந்திரத்தால் சூரியனுக்குக் காட்டி, 'ஆபஹந்தீ விதன்வானா' என்று உடுத்தி ஆசமனம் செய்ய வேண்டும்.

கச்சை : கச்சை கட்டாதவர், ஆடை இல்லாதவர் என்றே அர்த்தம் என்று சாஸ்திரம் சொல்கிறது. -- அகச்ச: புச்ச கச்சோவா த்விகச்ச: நோத்தரீயக: |

ஊர்த்வ புண்ட்ர விதி:

ஊர்த்வ புண்ட்ரம் இல்லாமல் செய்த சந்தியா முதலான கர்மங்களை அசுரர்கள் பறித்துப் போகிறார்கள். எந்தவொரு தானம், ஹோமாதிகளை ஊர்த்வ புண்ட்ரம் இல்லாமல் செய்தால், அதற்கு பலன் இல்லை. சர்வே பவந்தி விபலா ஊர்த்வ புண்ட்ரவினாக்ருதம் | -- ஊர்த்வ புண்ட்ரம் தரிக்காமல் இருப்பவன், சண்டாலனைப் போல தூர இருக்க வேண்டும். ஷ்வபாகமிவ சந்த்யஜேத் |

ஊர்த்வபுண்ட்ரத்தை நெற்றியில் நீளமாக தரித்து, நடுவில் துணியால் கோடு கிழிக்க வேண்டும். மூக்கின் முனையிலிருந்து துவங்கி, நெற்றி வரை புண்ட்ரம் இருக்க வேண்டும். ஊர்த்வ

புண்ட்ரத்தால், பிரம்மனின் எழுத்தை அழிக்க முடியும். தாத்ரா யல்லிகிதம் துனோதி விவிதாம் ரேகாம் விதாத்ரா க்ருதாம் | -- பிராமணனுக்கு 12 புண்ட்ரம். க்ஷத்ரியருக்கு 8, வைஷ்யருக்கு 6. பெண்கள், நான்காம் வர்ணத்தவருக்கு நெற்றியில் ஒரு புண்ட்ரம் மட்டுமே.

நெற்றியில் கேஷவ த்யான, உதரத்தில் நாராயண, மார்பில் மாதவ, கழுத்தில் கோவிந்த, வலது இடுப்பில் விஷ்ணு. வலது தோளில் மதுசூதன. கழுத்தின் பக்கத்தில் த்ரிவிக்ரம. இடது இடுப்பில் வாமன. தோள்களின் நடுவில் ஸ்ரீதர. இடது தோளில் ஹ்ருஷிகேஷ. முதுகில் பத்மனாப. தலையில் தாமோதர. தாரணைக்கு ஏற்ற மிருத்திகை - கோபிசந்தனமே. பெண்கள்கூட கோபிசந்தனம் தரிக்க வேண்டும். இல்லையேல் அவர் செய்த சமையல், நைவேத்யத்திற்கு வருவதில்லை.

முத்ரெ இடுவாக க்ருத்தோல்காதி ஐது :பகவந்தனின் க்ருத்தோல்காதி பஞ்சரூபங்கள் இருக்கின்றன. முத்திரைகளை தரிக்கும்போது இந்த ஐந்து ரூபங்களையும் சிந்திக்க வேண்டும். ஹரியின் ஆயுதங்களை தரித்தால், ஹரியின் சன்னிதானம் ஆகிறது. வ்ருத்ராசுரனைக் கொல்வதற்கு முன், ஸ்ரீஹரியின் சின்னங்களை தரித்துச் சென்ற தேவதைகள் வெற்றி அடைந்தனர்.

சக்ர மற்றும் பத்ம முத்திரைகளை தேகத்தின் வலது பாகங்களிலும், சங்கு, கதா முத்திரைகளை இடது பாகங்களிலும், நாராயண முத்திரையை அனைத்து இடங்களிலும் தரிக்க வேண்டும். சக்ராதி பஞ்ச முத்ரெ தரிக்கும்போது க்ருத்தோல்காதி ஐந்து ரூப சிந்தனை செய்ய வேண்டும்.

முத்ரெ இல்லத பதுகு எல்லெ ஜோகெ இல்ல
முத்ரெ இல்லத ஹண ஹொன்னு ஸல்லவு
முத்ரெ இல்லதெ ஸமுத்ரனாதரேனு
பத்ர கதிகெ ஸல்ல | -- ஸ்ரீவிஜயதாசர்

ஸந்த்யா காலத்தில் ராமனென்னு ---

ஸந்த்யாவந்தனையை செய்யாமல் பிராம்மண்யம் இருப்பதில்லை. சூர்ய உதய கால, அஸ்தமன காலங்களில் சூர்ய நாராயணனின் உபாசனையினால் அனைத்து மங்கலங்களும் உண்டாகின்றன.

ஆதித்யமபித்யாயன் சகல பத்ரமஷ்னுதே || இந்த சந்த்யாவந்தனையை மூன்று வேளை செய்ய வேண்டும். சந்த்யாத்ரயம் து கர்தவ்யம் த்விஜேனாத்மவிதா சதா | -- முற்பகலில் காயத்ரி, மதியத்தில் சாவித்ரி, மாலையில் சரஸ்வதி என்று காயத்ரிக்கு மூன்று பெயர்கள் உள்ளன. உபனயனம் ஆன நாளிலிருந்து அனைத்து நாட்களிலும் மூன்று வேளையிலும், இஷ்டார்த்த சித்திக்காக சந்தியாவந்தனம் செய்ய வேண்டும்.

ஸந்த்யாகால:
காலையில் நட்சத்திரம் இருக்கும்போதே செய்ய வேண்டும். மதியம் மற்றும் மாலையில் சூரியன் இருக்கும்போதே செய்ய வேண்டும். பூர்வாம் ஸந்த்யாம் ஸனக்ஷத்ராம் உத்தராம் ஸதிவாகராம் |

விஷ்வாமித்ராதி ரிஷிகள் ஸந்த்யாவந்தனையை விடாமல் செய்தார் ஆகையால், தீர்க்க ஆயுள் கொண்டிருந்தனர். ருஷய: தீர்க்கஸந்த்யாத்வாத் தீர்க்காயுஷ்வம் ப்ரலேபிரே ||

ஸந்தியாதிகள் பகவந்தனின் குணகானம் ஆகையால், விடாமல் செய்ய வேண்டும். ஸத்யாமிஷ்டிம் ச ஹோமம் ச யாவஜ்ஜீவம் ஸமாசரேத் || இவ்வாறு த்ரிகால சந்த்யாவந்தனையின் காலத்தில் ஸ்ரீராமனை சிந்திக்க வேண்டும்.

ஸித்தவாகி ப்ராணக்ராஸதல்லி அனிருத்தாதி - போஜனம் ஒரு அக்னிஹோத்ர ஹோமம் எனப்படுகிறது. ஹோமம் என்றபிறகு, சுத்தி அவசியம். கை, கால், வாய் என ஐந்து அங்கங்கள் கழுவிக்கொண்டு உண்ண வேண்டும். பஞ்சரூபி ஹரியின் ஸ்மரணையை செய்ய வேண்டும்.

நாம் தின்னும் ஆகார பதார்த்தங்களில் ஷுப அஷுப ரசங்களில், ஸ்ரீஹரி ஷுப சாரங்களை மட்டும் ஏற்றுக் கொள்கிறான். ஷுப சாரமும் ப்ராக்ருத, அப்ராக்ருத என்று இரு விதங்கள். அப்ராக்ருத

ரஸ என்றால் ஸ்ரீஹரியுடயதேயான சிதானந்த ரூபம். இவற்றில் வஸ்துகளில் இருக்கும் ஷுப அப்ராக்ருத ரூபத்தையே ஸ்ரீஹரி ஏற்றுக் கொள்கிறான் என்னும் ஞானம் வேண்டும்.

உண்பவர்களில் சங்கர்ஷண, ப்ரத்யும்ன என்னும் ரூபத்தினாலும், போஜ்ய வஸ்துகளில் நாராயண அனிருத்த என்னும் ரூபத்தினாலும், இருந்து ஸ்ரீஹரி திருப்தி அளிக்கிறான். வாசுதேவன் அவகாஷப்ரதனாக இருக்கிறான்.

சங்கர்ஷணஷ்ச ப்ரத்யும்னஸ்தத்ர போக்த்ருஷு ஸம்ஸ்திதௌ
நாராயணானிருத்தௌ து போக்யவஸ்துஷு ஸம்ஸ்திதௌ ||
அவகாஷப்ரதோ நித்யம் வாசுதேவோ நபஸ்தித: || ஐ.பா. 2-2-1

வாசுதேவன் அன்னத்தில் 101 ரூபங்களாலும், பற்பல ஷுபக்ஷ்யங்களில் சங்கர்ஷணனும், க்ருதிபதி பரமான்னத்திலும், க்ருதத்தில் அனிருத்த ரூபத்தினாலும், கருடவாகனன் நாராயணன் பருப்பிலும், காய்கறிகளில் உபேந்திரனும் இருக்கிறார்கள்.

வாசுதேவஸ்ததாsன்னஸ்தோ பக்ஷ்யே சங்கர்ஷணஸ்ததா |
ப்ரத்யும்ன: பரமான்னே து ஹ்யனிருத்தோ க்ருதே ஸ்தித: ||

இவ்வாறு அச்யுதனின் அந்தந்த ரூபங்களையும் நாமங்களையும், பற்பல பதார்த்தங்களில் சிந்திக்க வேண்டும். இவ்வாறு செய்தால், பாவங்கள் சேர்வதில்லை. சமையல் செய்தவனும், பரிமாறியவனும், கையிலிருந்து வாய்க்கு அனுப்பியவனும், வயிற்றில் போகுமாறு செய்பவனும், ஜீர்ணம் செய்பவனும் ஸ்ரீஹரியே என்னும் தத்வஞானத்தினால் போஜனம் செய்தபோது அது ‘அக்னிஹோத்ர’ ஹோமம் ஆகிறது. விஜயதாசர்,

பூதளதொளகிது திளிதவனே தன்ய
பாதகதவனல்ல யாதனெகெ ஸல்ல
வாததேவன தய படெது மத்தெ மஹா
கீர்த்திவந்தனாத..

ஈ ரீதி திளியதெ உண்ட மானவ ஸூகரக்கிந்த கடெயாஹ
ஷ்வான சூகரகளு தம்ம ஆஹார மெலுவவல்லவெ?

சரீரரத்தை வளர்க்க ஆகாரம் உண்ண வேண்டாம். ஹரி சேவை என்று அறுசுவையுடன் உண்ண வேண்டும் என்று சொல்கிறார். ஷரீர ஸ்தூலவாகபேகெந்து ஆஹார மெல்லதிரோ மனுஜ ||

தாருணியொளகெ ஸ்ரீஹரி ஸேவெகோசுக ஆரு பகெ ரஸ ஸவிரோ | என்கிறார். இப்படியாக பஞ்சரூபங்களின் செயல்களை அறிந்து உண்பவனுக்கு, நித்யோபாஸன செய்த பலன் கிடைக்கிறது. பாபங்கள் சேர்வதில்லை. நித்ய மஹாசுயக்ஞ செய்த பலன் கிடைக்கிறது.

கபில நரசிம்ம பரசுராம இந்த மூன்று ரூபங்களால் கண், மூக்கு, வாயில் இருந்து; கண்ணினால் கபிலன் ஹரி நைவேத்தியத்தைக் கண்டு, அதனை சமைக்கிறான். சிங்கத்தைப் போல, நரசிம்மன் வாசனை பார்த்தே நைவேத்தியத்தை ஏற்றுக் கொள்கிறான். போஜன என்றால் அக்னிஹோத்ர ஹோமமாகையால் அன்னத்தை வாயில் வைப்பது என்றால் பரசுராம அக்னியில் ஆஹுதியே ஆகிறது.

கபிலோ நரசிம்ஹஸ்ச பார்க்கவஷ்சேதி மூர்த்தய: |
நேத்ர நாஸாஸ்யதேஷேஷு விஜானீஹி ஸதாத்மஜ ||

நாக்கினில் மத்ஸ்யரூபி இருந்து அன்னரஸ சுவைக்கிறான். பற்களில் ஹம்ஸரூபி இருக்கிறான்.

மத்ஸ்யோ ஜிஹ்வாகத: - ஹம்ஸம் தந்தேஷு பூஸுர |ஸ்ரீஹரி, அவரவர்களின் அன்னாதிரஸ தின்கிறான். அதாவது, அதில் இருக்கும் ஸ்வாக்ய ரஸ என்று சொல்லப்படும் தன் ரூபத்தையே ஏற்றுக் கொள்கிறான். லட்சுமிதேவிக்கு ஆக்ராணத்தில் (நறுமணத்தில்) கொடுத்தால், வாயுதேவனுக்கு தர்ஷனத்தினால் கொடுக்கிறான். மனிதர்களுக்கோ ப்ராக்ருத ரஸத்தையே கொடுக்கிறான் என்று அறிந்தால், ப்ராணாக்னி ஹோத்ரத்தின் பலன் கிடைக்கிறது. இவ்வாறு நைவேத்யத்தை பகவந்தனுக்கு அர்ப்பித்து உண்ண வேண்டும். இவ்வாறு அறிந்து, அர்ப்பித்து, உண்டால் மட்டுமே அது வைஷ்வானர யக்ஞம் ஆகிறது. நான் இந்த போஜனத்தை என் வயிற்றை நிரப்புவதற்காக உண்ணவில்லை. பகவந்தனின் ப்ரேரணையால் பகவத் ப்ரீதிக்காக பகவந்தனின்

ஆராதனா ரூபமாக செய்கிறேன், அவன் மகிழட்டும் - என்பதே போஜன யக்ஞம். தத்ஸர்வம் விஷ்ணுபூஜாஸ்து ப்ரீயதாம் மே ஜனார்த்தன: |

போஜனம் எப்படி ஹோமம் ஆகிறது?

ஹோமம் என்றால் அரணியால் மதனம் செய்ய வேண்டும். அதற்கு கயிறு வேண்டும். நம் இதயமே அரணி. மனதே கடையும் கோல். வாயுதே ஸூத்ர. ப்ராண வாயுவின் உதவியால் மனதினை கடைந்தால் ஹ்ருதய அரணியில் ஜடராக்னி எரிகிறது. பசி எடுக்கிறது. வாயே யக்ஞ குண்டம். இதயமே கார்ஹபத்ய. நாபி தக்ஷிணாக்னி. உதரத்தின் வலது இடது பாகங்களில் அவஸத்ய ஸப்யாக்னிகள் இருக்கின்றன. இந்த பஞ்சாக்னியில் பக்ஷ்ய போஜ்யாதிகளை ஹோமிக்க வேண்டும். இங்கு ஜீவனே ஹோத்ரு. நாக்கே ஸ்ருக் ஸ்ருவங்கள்.

ஹ்ருத்புண்டரீகமரணீம் மனொமந்தான ஸஞ்ஞிதம் |
வாயு ரஜ்வா மதேதக்னிம் ஆத்மாऽத்வர்ய: ப்ரகீர்த்தித: ||
ஸ்வாஹாந்தான் ப்ரணவாதீன்ஸ்ச ஜுஹுயாட் ஜாடராக்னிஷு ||

ஆபோஷனம் எடுக்கும்போது, ப்ராணாஹுத்யாதிகளில் ஒரு அனுசந்தானம் இருக்க வேண்டும். அம்ருதோபஸ்தரணமஸி - என்று மந்திரம் சொல்லி, ஷ்ரத்தாதேவியினால் சஹிதனான முக்யபிராணனுக்கு நைவேத்யாதிகளால் சம்ஸ்காரம் செய்யப்பட்ட அமிர்தத்தைப் போல இருக்கும் இந்த அன்னத்தை ஹோமம் செய்கிறேன். இது எனக்கு சுகத்தைக் கொடுக்கட்டும். ஜடராக்னியின் பசியை அடக்கி என் வயிற்றில் நுழையட்டும். முக்யபிராணனில் இருக்கும் பசி என்னும் அக்னி ரூபத்தின் ஆதித்ய நாமக ஸ்ரீஹரிக்கு இந்த ஆஹுதி. இப்படியாக அனுசந்தான வைத்துக்கொண்டு நெய்யினால் அபிகாரம் செய்யப்பட்ட அன்னத்தை துளசியுடன், பல்லில் படாமல் உண்ண வேண்டும். இவ்வாறு பஞ்சப்ராணாஹுதிகள் கொடுக்க வேண்டும். இந்த சமயத்தில் அனிருத்தாதி பஞ்சமூர்த்திகளின் ஸ்மரணை செய்ய வேண்டும்.

ப்ராணாஹுதியின் கிரமம்.
* கட்டை விரல், ஆள்காட்டி & நடு விரல்களால் ப்ராணாய ஸ்வாஹா
* நடு, மோதிர & கட்டை விரல்களால் அபானாய ஸ்வாஹா
* மோதிர, சுண்டு, கட்டை விரல்களால் வ்யானாய ஸ்வாஹா
* சுண்டு, மோதிர, கட்டை விரல்களால் உதானாய ஸ்வாஹா
* ஐந்து விரல்களையும் ஒன்றாக சேர்த்து ஸமானாய ஸ்வாஹா என்று ஆஹுதி கொடுக்க வேண்டும்.

மத்யே மத்யே கவள மேலுவாரம்பதலி... வாசுதேவ...போஜன காலத்தில் - போஜனே காலே முகுந்தம் - முகுந்தன் என்றால் மோட்சத்தைக் கொடுக்கும் வாசுதேவனே ஆகிறான். ஒளிமயமான மோட்சத்தை கொடுக்கும் கோவிந்தனும் இவனே. போஜன காலத்தில் ஒவ்வொரு கவளமும் உண்ணும்போதும் கோவிந்த கோவிந்த என வேண்டும். கவலே கவலே குர்வன் கோவிந்த ஸ்யானு கீர்த்தனம் ||

கிருஹஸ்தர்கள் 32 கவளம் தின்ன வேண்டும் என்னும் நியமம் இருக்கிறது. கேசவாதி 24 ரூபங்கள், அன்னமயாதி பஞ்ச ரூபங்கள், விஷ்வ தைஜஸ ப்ராக்ஞ என்னும் மூன்று, என மொத்தம் 32 கவளங்கள். வயிற்றில் வைஷ்வானர நாமகனுக்கு இது ஆஹுதி என்று பக்தியுடன் உண்ண வேண்டும். நமக்கு இதெல்லாம் அஸாத்தியம். போஜனத்தில் பசியை அடக்குவதே இலக்காக இருக்க வேண்டும். ஒவ்வொரு கவளமாக எச்சில் அன்னத்தைக் கொடுக்கிறோம். இது தோஷம் ஆகும். ஆனால், ஸ்ரீஹரியின் நாமம் ஜெபித்தவாறு தின்றால், அந்த தோஷம் நீங்குகிறது.

ஆபோஷனங்களில் ஸ்ரீஹரி:
போஜன காலத்தில் ஆபோஷனத்தை செய்ய வேண்டும். ஆபோஷன செய்யாமல் உண்டால் 108 காயத்ரி ஜபம் பிராயச்சித்தம் செய்ய வேண்டும். காயத்ர்யா அஷ்ட தஷம் தஸ்ய ஜபமாஹு: ||

ஆபோஷனத்தை நம் வலது பாகத்திலேயே எடுத்துக் கொள்ள வேண்டும். இது ஸோமரஸபானத்திற்கு ஈடானது எனப்படுகிறது.

பரிசேஷன ஆனபிறகு, மீதி இருக்கும் தண்ணீரினாலேயே ஆபோஷனம் செய்யக்கூடாது. அபேயம் தத் பவேதம்பு || தீர்த்தத்தை போட்டுக்கொண்டு ஆபோஷனம் எடுக்க வேண்டும். தீர்த்தத்தின் மேல் மறுபடி தண்ணீர் போடக்கூடாது. இது ரத்த பானத்திற்கு ஈடானதாகும். ஆபோஷனம் எடுக்கும்போது சத்தம் வரக்கூடாது. இது சுராபானத்திற்கு ஈடானதாகும். ஷப்தேனாப: பீத்வா சூராபான ஸமம் பவேத் ||

ஆபோஷன காலத்தில் அம்ருதோபஸ்தரணமஸி ஸ்வாஹா - என்றும், கடைசியில் அம்ருதாபிதாமனஸி ஸ்வாஹா என்றும் மந்திரத்தை சொல்லி ஆபோஷனம் எடுக்க வேண்டும். இவை இரண்டும், பிராணனுக்கு வஸ்திர த்வயத்தைப் போல இருக்கிறது என்று அறிந்து செய்ய வேண்டும். இவ்வாறு ஆபோஷன காலத்தில், வாயு அந்தர்கத ஸ்ரீஹரியை சிந்திக்க வேண்டும். பூர்வோத்தராபோஷனயோ: வாயோரந்தர்கதம் ஹரிம் ||ஆடையை உடுத்தும் போதும், போர்த்திக் கொள்ளும்போதும், உபேந்திரனை சிந்திக்க வேண்டும். உபேந்திரம் வஸ்த்ரதாரணே || வஸ்திரத்தை உடுத்தி, போர்த்தியே (இரு ஆடைகளுடன்) ஜப, ஹோம, ஸ்வாத்யாயாதி கர்மங்களை செய்ய வேண்டும். ஒரே வஸ்திரத்தினால் ஸ்னானம் மற்றும் போஜன செய்வது கூடாது. ந புஞ்சீதைகவஸ்த்ரேண ந ஸ்னாயாதேகவாஸஸா || பத்ம ஸ்ருஷ்டி 51-86. ஈர ஆடையை உடுத்திக்கொண்டு எந்தவொரு நித்ய நைமித்திக கர்மங்களை செய்யக்கூடாது. நார்த்ரம் பரிததீத - கோபில 3-5-24.

மேலாடையை கீழே உடுத்தவும், உடுத்தும் வஸ்திரத்தை மேலே போர்த்திக் கொள்ளவும் கூடாது. ந குர்யாத் விபர்யாஸம் வாஸஸோ நாபி பூஷணே || - பிரம்ம 221-53. வேறொருவரின் வஸ்திரத்தை உடுத்தக்கூடாது. நான்யத்ருதம் தார்யம் || விஷ்ணு தர்மோத்தர 3-233-23. இத்தகைய தோஷங்கள் ஒரு வேளை வந்தால், உபேந்திரனின் சிந்தனையால் அவை பரிகாரம் ஆகின்றன.

உபவீத வாமன: யக்ஞோபவீதம் தரிக்கும்போது வாமனனை சிந்திக்க வேண்டும். உபவீதே த்ரியமாணே வாமனம் ஸம்ஸ்மரேத் ஸுதீ: ||

யக்ஞாதிகளில் இருக்க வேண்டியது உபவீதம். யக்ஞங்களில் இது அவசியம் ஆகையாலேயே, இது யக்ஞோபவீதம். வர்த்தியில் தயாரான, மூன்று இழைகளைக் கொண்ட, சூத்திரமே உபவீதம். உபவீதம் நாபிக்கு மேல் இருந்தால் ஆயுள் குறைவு. நாபிக்குக் கீழ் இருந்தால் நோய் தொந்தரவு. ஆகையால் அது நாபிக்கு சரிசமமான அளவில் இருக்க வேண்டும். தேவதைகளை ஆவாகனம் செய்து, பூஜித்து, ஸ்வாமிக்கு அர்ப்பித்ததையே தரிக்க வேண்டும். யக்ஞோபவீதம் பரம பவித்ரம். பிரம்மன் பிறக்கும்போதே யக்ஞோபவீதம் அவருக்கு இருந்தது. யக்ஞோபவீதம் ஆயுள், பலம், தேஜஸ்ஸினைக் கொடுக்கட்டும் - என்னும் மந்திரத்தினால் தரிக்க வேண்டும்.

கிருஹஸ்தர்கள் ஸ்ரௌத ஸ்மார்த்த கர்மங்களை செய்யும்போது இரு யக்ஞோபவீதம் அணிந்திருக்க வேண்டும். மேல் வஸ்திரத்தைக் குறிப்பதான மூன்று யக்ஞோபவீதம் அணியலாம். ஆயுள் வளரவேண்டும் என்னும் விருப்பம் உள்ளவர்கள் நான்கு, ஐந்து உபவீதங்களையும் அணியலாம். வேறொருவர் அணிந்த உபவீதத்தை நாம் அணியக்கூடாது. இத்தகைய உபவீதம் இல்லாமல் எந்தவொரு கர்மமும் செய்ய முடியாது.

ஷுத்த மங்களார்த்திகொம்பாக பார்கவ -- ஸ்ரீஹரிக்கு மங்கள நீராஞ்சனத்தினால் நீராஜனம் செய்து, மங்களாரத்தி செய்யும்போது -- ஆரார்த்தி க்ரஹணேகாலே பரஷுராமம் து ஸம்ஸ்மரேத் || என்பது இதன் அபிப்பிராயம். பூஜையில் மங்களாரத்தி முக்கியமான இடத்தை பிடித்ததைப் போல, ஆரத்தியை எடுத்துக்கொள்வதும் அவ்வளவே முக்கியமானதாகும். ஆரதியை செய்யாமல் பூஜித்தால், அக்னி பயம் இருக்கிறது. ஆராத்ரிகவிஹீனே து பாவகேன பயம் பவேத் || ஆரத்தியை எடுக்கும்போது ஒரே கையால் எடுத்துக் கொள்ள வேண்டும். அப்படியே அந்த சமயத்தில் 'பரஷுராமாய நம:' என்று பரசுராம தேவரின் ஸ்மரணை செய்ய வேண்டும்.

வைஷ்வதேவாதிகளில் இதே மூர்த்தி :
வைஷ்வதேவ செய்து உண்பவனின் அனைத்து பாவங்களும் பரிகாரம் ஆகின்றன. வெறும் தன் வயிறு நிரப்புவதற்கு யார்

சமைத்து உண்கிறானோ, அவன் பாவத்தையே தின்கிறான். புஞ்சதே தே த்வகம் பாபா யே பசந்த்யாத்ம காரணாத் || கீதை 3-13.கேவலாகோ பவதி கேவலாதீ || 1. பறிப்பது 2. கழுவுவது 3. புடைப்பது 4. பிரிப்பது 5. வேக வைப்பது - இதை பஞ்சஸூன தோஷம் என்கிறோம்.

கண்டினீ பேஷிணீ சுல்லி ஜலகும்ப உபஸ்கர: |

குட்டி கொய்த நட்டு இட்டுத
ஸுட்டு கொட்டுத முட்டலக ஹிட்டிட்டுமாள்புது || 22-29

இந்த பாவங்கள் அனைத்தும் வைஷ்வதேவத்தினால் பரிகாரம் ஆகிறது. வைஷ்வதேவத்திலும் அக்னி அந்தர்கத பரசுராமனின் ஸ்மரணை அவசியம்.

பரசுராமம் ஹோமகாலே
நிர்தோஷ தீர்த்ததலி கிருஷ்ண ராம வியாஸ

தீர்த்தம் ஏற்றுக் கொள்ளும்போது கிருஷ்ண ராம வாசுதேவர்களை நினைத்தவாறு சத்தம் செய்யாமல் தீர்த்தம் எடுத்துக் கொள்ள வேண்டும். வாசுதேவ, வியாஸ, கோவிந்த என்று மூன்று வித பாடங்கள் உள்ளன. கிருஷ்ணராமௌ வாசுதேவம் தீர்த்தபானே து ஸம்ஸ்மரேத் || மூன்று முறை தீர்த்தத்தில் சொல்லும் பகவத் ரூபங்கள் இவை. ஷங்கோதகம் ப்ரோக்ஷணையில் முகுந்தனின் ஸ்மரணை. ஷங்கோதகஸ்ய க்ரஹணே முகுந்தம் ||

இவ்வாறு ஒவ்வொரு செயலை செய்யும்போதும் பத்ர என்னும் மோட்சத்தைக் கொடுக்கும் வாசுதேவனை நம் இதயகுகையில் சிந்தித்தவாறு மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டும்.

பத்ரம் து வாசுதேவோ஽ஸௌ பத்ரமுக்திப்ரதோ யத: |

4. துத்து ப்ரதி துத்திகெ கோவிந்த பக்ஷ்யகவள...

பூஜா காலத்தில் மட்டும் ஹரியின் நிரந்தர ஸ்மரணை செய்வதல்ல. நைவேத்ய, பக்ஷ்ய பக்ஷணத்திலும் ஸ்ரீஹரியின் ரூப சிந்தனை அவசியம் என்கிறார் தாசர். கவலே கவலே கோவிந்த

மனுஸ்மரன் || ஒவ்வொரு கைப்பிடிக்கும் கோவிந்த என்றால் ஸ்வாஹா என்று அர்த்தம். முகம் என்னும் அக்னி நாக்கு என்னும் ஜ்வாலையில் அன்ன என்னும் ஆஹுதியை கோவிந்த என்று ஹோமம் செய்வது செயலாகும்.

காய்கறியை தின்னும்போது தன்வந்த்ரி தேவனையும், பாயசம் தின்னும்போது பாண்டுரங்கனையும் சிந்திக்க வேண்டும். பரமான்னே க்ருஹ்யமாணே பாண்டுரங்கம் து ஸம்ஸ்மரேத் || வெண்ணெய் தின்னும்போது தாண்டவ கிருஷ்ணனையும், தயிரில் தாமோதர, பால் அன்னத்தில் ஸ்ரீஸ்ரீனிவாசனி, எண்ணெயில் பொறித்த பதார்த்தங்களில் விஷ்ணுவை (விஷ்ணு என்றால் வைகுண்ட நாமக ஹரி) சிந்திக்க வேண்டும். உதத்தி கதளி ஜம்பு ஜூத : கர்ஜூர, வாழைப்பழம், த்ராட்சை, தேன், மாதுளை மற்றும் தேங்காய் உண்ணும் காலத்தில் யதுகுலோத்தம பாலகிருஷ்ணனை சிந்திக்க வேண்டும்.

இவ்வாறு மனதில் ஜெபிக்கும் மன்மத பிதனின் ரூபங்களை சித்தத்தில் நிறுத்தினால், இதுவே அக்னிஹோத்ர ஹோமம் எனப்படுகிறது.

5. பானகத்தில் நாரசிம்ம மூர்த்தி... கங்கா..... :

நாரசிம்ஹ பானகே து -- என்பதன் பொருளே இது.
* பானகத்தை ஹரிக்கு நிவேதனம் செய்து ஏற்றுக் கொள்ளும்போது பானக நரசிம்மனை,
* கங்கா பானம் செய்யும்போது கங்காஜனக த்ரிவிக்ரமனையும்
* பிரயாண காலத்தில் கருட வாகன நாராயணனை சிந்திக்க வேண்டும்.
* பிராமணர்களில் சர்வ ரூபங்களுக்கு மூலமான நாராயணனையும்,
* ஹரிபஜனை, சங்கீத சேவாதிகளில் தத்த யோகீஷ்வரனையும்
* ப்ரவசன காலத்தில் வியாசதேவ, கிருஷ்ண, ஹயக்ரீவனையும் சிந்திக்க வேண்டும்.
* துளசி, தூர்வா மற்றும் இதர ஹரி நிவேதித புஷ்பங்களை தரிக்கும்போது, ராம தத்தாத்ரேய கபில ஸ்ரீஹரியை நினைக்க வேண்டும்.

1. நாமஸ்மரணெ சுளாதி

---

* ஸ்தோத்திர பாராயணாதிகளின் காலத்தில் நரசிம்மனையும்
* நமஸ்கார ப்ரதக்ஷிணை காலத்தில் கருட சேஷாந்தர்கத ஸ்ரீஹரி ஸ்மரணை அவசியம்.
* தானம் கொடுக்கும்போது ஸ்ரீராம ரூபி ஸ்மரணை.
* தானம் ஏற்கும்போது வாமன.
* பசுக்களை மேய்க்கும்போது கோபால ஸ்வாம்இ
* குழந்தைக்கு முலைப்பால் கொடுக்கும்போது பாலகிருஷ்ண
* தயிர் கடையும்போது பிராணனில் அந்தர்யாமியான ததிவாமன.

என ஸ்ரீஹரி கொண்டாடினால் ஸ்ரீஹரி நமக்கு தரிசனம் அளிக்கிறார்.

<u>6. புத்ராதி சும்பன வேணு ஹஸ்த கிருஷ்ண</u>

குழந்தைகளை கொஞ்சும்போது வேணுஹஸ்த ஸ்ரீகிருஷ்ணனை சிந்திக்க வேண்டும். புத்ராதீனாம் சும்பனே காலே வேணுஹஸ்தம் ஹரிம் ஸ்மரேத் ||

* தாம்பூலம் மெல்லும்போது பிரத்யும்னனை / அனிருத்தனை,
* ரதி விஹார சமயத்தில் கோபிகா ஸ்த்ரீயருடன் விளையாடும் கோபிஜன ஜாரனை
* படுக்கை தயாராகும் சமயத்தில் சங்கர்ஷணனையும்
* தூங்கும்போது பத்மனாபனையும்

என அந்தந்த காலத்தில் சத்யசங்கல்பனான ஸ்ரீஹரியை நிரந்தரமாக நினைத்தவாறு செயல்களை செய்தால், பாபங்கள் அழிகின்றன.

<u>7. அடிகடிகெ மாடுவ ஸம்ஸாரயாத்ரெயல்லி....</u>

ஸம்ஸாரத்தில் தினமும் செய்யும் நித்ய நைமித்திகாதி காரியங்களில் கேசவாதி ரூபங்களை சிந்திக்க வேண்டும். இதன் நோக்கம் இதுவே. சந்த்யா காலத்தில் ஸ்ரீராம. அன்பானவர்களில் ஜகன்னாத. இலை போடும்போது சேஷஷாயி. பிராமணரில் நாராயண. பசுக்களில் விஷ்ணு. நான்காம் வர்ணத்தவரில் சங்கர்ஷண. வைஷ்யரில் பிரத்யும்ன. க்ஷத்ரியரில் ஜனார்த்தன. மஹிஷியில் உபேந்திர. பக்தர்களில் விஷ்வமூர்த்தி. காலையில் கேசவ. மதியத்தில் விஷ்ணு. சந்த்யா காலத்தில் ந்ருஸிம்ஹ.

முற்பகலில் கோவிந்த. பிற்பகலில் மதுசூதன. பிரதோஷத்தில் ஹ்ருஷிகேஷ. எறும்பு முதலான பிராணிகளில் த்ரிவிக்ரம என சிந்திக்க வேண்டும்.

இதன் பல ஸ்ருதி

பொடவீஷரங்கன்ன கருணாகடாக்ஷ லாப: - இவ்வாறு கூறியபடி பற்பல செயல்களை செய்யும்போது அந்தந்த பகவத்ரூப சிந்தனைகளை செய்தால்: ஸ்ரீஹரியின் கருணைப்பார்வை கிடைக்கிறது. இவன் சம்சார சாகரத்திலிருந்து எந்த தடையும் இன்றி, வைகுண்டத்தை அடைகிறான். இவ்வாறு இடைவிடாமல் சிந்தித்தால், நூற்றுக்கணக்கான யாகம் செய்த பலன்கள் கிடைக்கின்றன. இவ்வாறு செய்தால், நீர் குடிப்பது போன்ற செயல்களும்கூட ஹரிபூஜை ஆகிறது. வயிறு நிரப்புவதற்காக போஜனாதிகளை செய்யும்போது இவ்வாறு சிந்தித்தால், கடல் அலைகளைப் போல புண்ய அலைகள் வருகின்றன. இதனை செய்வேன் என்று திடமாக தீர்மானிக்க வேண்டும். தேகத்தில் பிரச்னைகள் இருக்கின்றன என்று சமாதானம் சொல்லக் கூடாது. இங்கு சொல்லப்பட்டவாறு செய்தால், பகவந்தன் தேடிக்கொண்டு வந்து முன் நிற்பான்.

***

2. நாம பிரஷம்ஸன சுளாதி

த்ருவ தாள

ஹரிநாம லக்ஷ்மி காணோ தா3ரித்3ர ஜனரிகெ3
ஹரிநாம பி3ரம்ம காணோ அல்பாயுள்ள ஜனகெ1
ஹரிநாம பவன காணோ து3ரிதக4னாவளிகெ3
ஹரிநாம க3ருட காணோ காலாக்2ய ஸர்ப்பக3ளிகெ3
ஹரிநாம சேஷ காணோ ஞானஸாத4ன பாபிபத3கெ
ஹரிநாம ருத்3ர காணோ ப4வவெம்ப3 ம்ருத்யுவிகெ3
ஹரிநாம இந்தி3ர காணோ து3ஷ்கர்ம பர்வதக்கெ
ஹரிநாம சூர்ய காணோ அஞ்ஞானாக்2ய கத்தலிகெ3
ஹரிநாம சந்திர காணோ ஹ்ருத்தாப மூல சே2த3க்கெ
ஹரிநாம வருண காணோ வ்ருஷ்டி கொடு3வுத3க்கெ
ஹரிநாம அக்3னி காணோ து3ரித கானனகெ முக்2ய
ஹரிநாம வட3வானளு மஹாது3க்க2 ஸாக3ரக்கெ
ஹரிநாம சஞ்சீவனவோ ம்ருதப்ராய ஜீவிக3ளிகெ3
ஹரிநாம வைத்3ய காணோ ப4வரோக3 களெவத3க்கெ
ஹரிநாம க3ங்கெ3 காணோ மனமலின தொளெவத3க்கெ
ஹரிநாம கல்கி காணோ அனாசார பி3டி3ஸுவுத3க்கெ
ஹரிநாம ப்ராண காணோ இந்தி3ரியங்க3ள ப3லகெ
ஹரிநாம வ்யாக்4ர காணோ ஆபத்து ம்ருக3ங்க3ளிகெ3
ஹரிநாம ஸிம்ஹ காணோ க்ரோத4வெம்ப3 க3ஜகெ
ஹரிநாம க3ஜ காணோ ஆஷாவெம்ப3 கத3ளிகெ3
ஹரிநாம ஷஸ்த்ர காணோ காமப3லக2ண்ட்3ரி பத3க்கெ
ஹரிநாம வித்த காணோ ஸத்கர்ம கொம்போத3க்கெ
ஹரிநாமாப4ரண காணோ ஷரீராலங்காரக்கெ
ஹரிநாமாம்ப3ர காணோ ப4வவெம்ப3 ஸீதக்கெ
ஹரிநாம வ்ரஜபஞ்சர ஷரணர குலகோடிகெ3
ஹரிநாம நெனெத3வர அஷுப4வெ ஓடி3ஸுவது3
ஹரிநாம நம்பி3த3ரெ ஸர்வவு த்3ருஷ்டிகோ3சர
ஹரிநாம ஆவாவாபேக்ஷா கொடு3வுது3
ஹரிமூருதி நம்ம விஜயவிட்டல ரேயா
ஹரியெந்த3 மனுஜங்கெ3 ஹரஷுப்ரவாஹ என்ன ||1

மட்ட தாள

தொட்டிலொளகெ3 இத்3த3 ஷிஷுவின மொக3னோடி3
து3ஷ்டளாகி3 ஜனனி தெகெ3தெ3த்தி மொலெ
கொ3ட்டு ஸந்தயிஸுவளா தெரதி3 எனகெ3
விட்டல விட்டலனெம்போ3 ஜனனி இரலு
கஷ்ட படு3வுத்3யாகெ கண்ட3த்3து3 ஹம்ப3லிஸி
இஷ்ட மூருதி ரங்க3விஜய விட்டலரேயன
பட்டண ஸேருவுது3 ஒந்தே3 நாமதி3ந்த3 ||2

த்ரிவிடி தாள

ஹரிநாமவெ நெனிஸி ஆவாவ விபத்து
பரிஹாரவாகோ3வு ப்ரதி ப்ரதிக்ஷத3ல்லி
ஹரிநாமதி3ந்த3லி த1த்1வேஷ மொத3லாத3
ஸுரரெல்ல வஷவாகி3 இருதிப்பரோ
பரலோகத3 மார்க்க3புரத3 பீ3தி3யந்தெ
அரெமரெ இல்லத3லெ காணிஸுவுது3 ஸத்ய
பரபு3த்3தி4 ப்ரத்யக்ஷவாகு3வுது3 ஸத்ய
பரமஞானியாகி3 ஸுகி2ஸுவனோ
எரடெ3ண்டு தி3க்கினல்லி ஆகு3வ விவர, வி
ஸ்தரவாகி திளிவது3 கு3ணிஸித3ரூ
ஹரிநாமதி3ந்த3 ப3ந்த3 ஞானகெ இனிது
சரியலிப்பதெ3ந்து3 ஷங்கிஸாதி3ரு
அரஹுவெ மனகெ அனுப4வவாகு3வந்தெ, நின்
தி3ரதெ3 லாலிஸுவது3 ப4குதியிந்த3
நரனொப்3ப3 அஞ்சனவ மாடி3த3ரிந்த3து3
கரதளத3ல்லி ப1ச்சிஸிகொண்ட3த3ரெ
ஸரிஸா தூ3ரத3ல்லித்3த3 வஸ்து காணிஸுவது3
த4ரியொளகி3ந்த2 ஈ ஜட3கெ ஈ ஸாமர்த்தி2கெ
ஸ்தி2ரவாகி3 இரலிக்கெ ஞானவ்ருஷ்டிகெ3 காம்போ3
த3ரிதே3னோ எலெ மனவெ, ஜட3 இந்தி3ரியங்க3ளு
நிருதலித்3த3ரேனு ஞான அதி4கவாகெ3
ஹொரகெ3 ஒளகெ3 மாள்பதெ3ல்ல ஞாத
பரமபுருஷ ரங்க3 விஜயவிட்டலரேயன

2. நாம பிரஷம்ஸன சுளாதி

சரண த்4யானவ மாள்ப ஞானோபாஸனெ ப3ல்லவோ ||3

அட்ட தாள

அனுப4வவில்லத3 ஞானத3 ப2லவேனு
அனுதி3ன ஞானக்கெ ப்ரதிஷ்டெயாதகெ
அனிமிஷ முனிஜன கொண்டா3ட3ல்யாதகெ
க4னதன வ்யாதக்கெ ஞானிமனுஜனெந்து3
த்ருண மிக்காத3த3கெ ஸாத4ன ஜனுமவ்யாதக்கெ
நினகெ3 நீனெ நோடு3 ஞானக்கெ ஸ்ரேஷ்டத்வ
வனஜனாப4னெ தானெ ஞானக்கெ ஸிலுகுவ
சினுமய ரூபக3ளு தோரிகொளுத, லிங்க3
தனுவெ போகு3வந்தெ கு3ணவந்தன மாள்ப
ப்ரணதனாகி3ருவ; ராம கிருஷ்ண கோ3விந்த3, வா
மன மது4ஸூத3ன, முக்குந்த3 ஜனா
ர்த்த3ன அச்யுதானந்த நாம உச்சரிஸலு
உணலுண்டு1 உட3லுண்டு1 ஏனேனு பேடி3த3
மனோபீ4ஷ்டெயெ உண்டு1 மாது ஸத்யவெ உண்டு1
கனஸினொளாத3ரு காணிஸவு பாபா
க3ணக3ளெல்ல கேளி ஞானத3 மஹிமா
ஜனனவிதூ3ர நம்ம விஜயவிட்டலனங்க்4ரி
மனத3ல்லி நில்லிஸலு உத்ஸாஹ எந்தி3கு3 ||4

ஆதிதாள

வித்3யத3 ப3ல கேளோ ஸுயக்3ளு முனிபா3லக
ஷுத்3தா4ம கானனத3ல்லி போகு3திரெ மஹ
க்ருத்3த4வ தாளி இப்பத்தெண்டு1 பிஷாசிக3ளு
மெத்தெவெந்து3 வேகா3 ஹரிதெ3த்3து3 ஓடி3 ப3ரலு
க2த்3யோதவர்னத3ந்தெ ஞானிய காந்தியிந்த3
பொத்3தி3 பீ4தியிந்த3 வந்த3னெ மாடி3 நம்ம
நுத்3த4ரிஸு எந்து3 வஷவாத3ரு கேளி
ப4த்3ரக3திய பத2வ ஸேரித3ரு பி3ட3தெ3
ஈ த4ரியொளு ப4க்ஷிஸலு ப3ந்த3 க்ரூரரு
க்ஷுத்ரதனத3 பி3ட்டு கெ3ளெயராத3ரு நோடு3

பத்3மனாப4ன பொந்தி3 ஞானஸம்பாதி3ஸித3
ஸத்3மனிகெ3 ஸமஸ்த ஜக3த்து வஷகரவோ
ஸித்3தா4ந்தப்ரமேய இதெ3. இத3ரந்தெ சரிஸித3ரெ
இத்3த3ல்லி ஸௌகர்யவோ அவமனுஜகா3கெ3
பு3த்3தி4 பாலிஸுவ பாவன்ன விஜயவிட்டலன்ன
ஹ்ருத்3யத3லி இட3லு நெனெத3ந்தெ ஸாகார்ய ||5

ஜதெ

மாதுமாதிகெ3 ஹரிநாமவெ க3தியென்னு
கா3துர நிர்மலன விஜயவிட்டல பொளெவ ||6

***

க்ருதயுகத்தில் தியானத்திற்கு சிறப்பு இருக்கிறது. த்ரேதா யுகத்தில் யக்ஞ யாகாதிகளுக்கும், த்வாபர யுகத்தில் நிரந்தர அர்ச்சனைக்கும், கலியுகத்தில் நாமஸ்மரணைக்கும் சிறப்பு இருக்கிறது; பக்தியுடன் ஸ்ரீகேஷவ என்றால் அனைத்து பூஜா பலன்களையும் கொடுக்கிறான். கானதலி கேஷவ எனலு கைகூடிஸுவனு ரங்கவிட்டலா. பக்தியுடன் ஹரி நாமஸ்மரணை செய்தால், பரிகாரம் ஆகும் அளவிற்கான பாவங்களை ஜீவி செய்வதில்லை.

தாவத்கர்த்தும் ந ஷக்னோதி பாதகம் பாதகீ பாதகீ ஜன: |
ஸ்மர்தவ்ய: ஸததம் விஷ்ணு: விஸ்மர்தவ்யோ ந ஜாதுசித் ||

அனைத்து விதி, விதிவிலக்குகளின் பொருள் - ஹரியை நினையுங்கள். ஹரியை மறக்காதீர்கள் என்றே இருக்கிறது. பகவந்தனின் கதா சிரவண, ஸ்மரணை, கீர்த்தனாதிகளால் லௌகிக காரியங்களை செய்தாலும், பகவந்தனில் சித்தத்தை வைத்த மனிதனுக்கு சம்சார பந்தகம் ஆவதில்லை.

க்ரியாஸு யஸ்த்வச்சரணாவிந்தயோ: ஆவிஷ்டசித்தோ |
ந பவாய கல்பதே || பாக 10-2-37

மக்களாடிசுவாக மடதியொ
ளக்கரதி நலிவாக ஹய ப
ல்லக்கி கஜமொதலாத வாஹனவேரி மெரெவாக |

2. நாம பிரஷம்ஸன சுளாதி

பிக்குவாக ஆகளிசுதலி தே
வக்கிதனயன நெனெவுதிஹ நர
சிக்கனெம தூதரிகெ ஆவாவல்லி நோடிதரு ||
(ஹரிகதாம்ருதசாரம் 13-1)

நதி ஹரியுத்ததெ (நதி பாய்கிறது), வஸ்த்ரவன்னு ஹரி (துணியைத் துவை) என்று லௌகிக விஷயங்களை ஹரி என்று சிந்தித்தாலே பாவங்கள் போகின்றன என்றபோது, பக்தியுடன் கூறினால் பாவங்கள் பரிகாரம் ஆவதில்லையா? பஞ்சுப்பொதியலில் நெருப்பு வைத்தால், அது நொடியில் எரிந்து பஸ்மம் ஆவதைப் போல, ஹரி ஸ்மரணையினால் பாவங்கள் என்னும் பஞ்சுக்குவியல் சுட்டுப் போகின்றன.

ஹரி ஹரீ ஹரியெம்ப எரட
க்ஷர நுடித மாத்ரதலி துரிதக
ளிரதெ போபவு தூலராஷியொளனலு பொக்கந்தெ ||

ஹரிஸ்மரணைக்கு நேரம், காலம், ஜாதி ஆகிய எவையும் தடையில்லை. ஷௌச காலத்திலும் ஹரிஸ்மரணை செய்யவே வேண்டும். ஸ்ரீஹரியை மகிழ்விக்க வித்யை, கால, ரூப, தன, சாஸ்திர ஞான, இவை எதுவும் பக்தி இல்லையெனில் வீண் ஆகின்றன. இவை எதுவும் இல்லாமல் பக்தியுடன் ஸ்தோத்திரம் செய்தால், ஹரி மகிழ்கிறான் -- அக்னி புராணம்.

வாஸுதேவன குண ஸமுத்ரதல்லி ஈஸபல்லவனு
அனாயாஸவாகி பவஸமுத்ர தாடுவனு ||

நீந்த வேண்டுமெனில் மூச்சு அடக்க வேண்டும். குண சமுத்திரத்தில் நீந்த வேண்டுமெனில், மூச்சு தேவதையை பிடிக்க வேண்டும். மத்வ சாஸ்திரம் அவசியம் வேண்டும். ஜீவனின் கர்த்ருத்வத்தை விலக்கி, ஸ்ரீஹரியே ஸ்வதந்த்ர கர்த்ரு என்னும் பாவனை இல்லாதவர்களுக்கு எந்தவொரு பயமும் இருப்பதில்லை. கருடனுடன் அவனின் வீட்டில் இருந்தபோது, பாம்பின் பயம் இருக்குமா? கங்கா நதியில் இருப்பவனுக்கு பாவங்கள் வருமா?

ஸ்ரீஹரியை நிந்தாஸ்துதி வடிவத்தில் நினைத்தாலும், பாவ பரிகாரம் ஆகிறது.

ஜாரதன மாடித பாபகளிகாகி கோபிஜனஜார எந்து
கள்ளதன மாடித பாபகளிகாகி நவனீத சோரனெந்து
க்ரூரதன மாடித பாபகளிகாகி மாவன கொந்தவனெந்து
ப்ரதிதிவஸ மாடித பாபகளிகாகி பதித பாவனனெந்தரெ ஸாகு
இந்திரதேவனன்னு 'அஹல்யாயை ஜார' எந்தரு அனுக்ரஹிஸுவனு
என்கிறார் தாசர்.

மாதுளாந்தக ஜார ஹே நவ
நீத சோரனே எனலு தன்ன நி
கேதனதொளிட்டவர சந்தெயிசுவனு கருணாளு ||
(ஹரிகதாம்ருதசார 13-31)

1. ஹரிநாம லக்ஷ்மி காணோ தாரித்ர்ய ஜனரிகெ..

* ஹரிநாம ஒன்றே போதும் ஏழைகளுக்கு செல்வம் கிடைக்கிறது. உதாரணம் குசேலன் பகவத் நாமத்தினாலேயே அனைத்து செல்வங்களையும் பெற்றான்.

* அல்ப ஆயுள் உள்ளவர்களுக்கு ஹரிநாமம் ஒன்றே போதும் நீண்ட ஆயுள் கிடைக்கிறது. மார்க்கண்டேய மகாராஜனே இதற்கு உதாரணம்.

* பாவங்கள் என்னும் மேகங்களை ஓட்டுவதற்கு, ஹரி நாமஸ்மரணை என்னும் காற்று உதவுகிறது. இதற்கு உதாரணம் அஜாமிளன்.

* காலம் என்னும் பயங்கர சர்ப்பங்களுக்கு ஹரிநாம கருடனைப் போல இருக்கிறது. காளிங்கனுக்கு கிருஷ்ண பாதம் பயப்பட்டதா? அப்படியே கால என்னும் காள ஸர்ப்பத்திற்கு கிருஷ்ண நாம ஒன்றே போதும். 'பாவுகள பயவுண்டெ விஹகாதிபன மந்திரதி'. பிரகலாதனை கால சர்ப்பத்தினால் கடிக்க வைக்க முயன்ற

ஹிரண்யகனின் முயற்சிகள் அனைத்தையும் நரசிம்மன் முறியடித்தான்.

* ஹரிநாம சேஷ காணோ: ஞான ஸாதனையை ரட்சிப்பதற்கு ஹரிநாமம் சேஷனைப் போல இருக்கிறது. விதுரன் பிறப்பில் ஷூத்ரனனாலும் 'வித்யாயாம் ரதே: விதுரமாஹு:' என்னும் ஞான சாதனை ரக்ஷணைக்கு நிரந்தரமான ஹரிஸ்மரணையே காரணம் ஆனது.

* பவவெம்ப ம்ருத்யுவிகெ ருத்ர காணோ: இதற்கு உதாரணம் உத்தவன். காந்தாரியின் சாபத்தினால் அனைத்து யாதவர்களும் இறந்தபோது, உத்தவனும் யாதவனே, ஆனால் இவன் மட்டும் எப்படி இறக்காமல் தப்பித்தான்? என்னும் கேள்விக்கு, சுகாசார்யர் இவ்வாறு பதில் அளிக்கிறார். பிறக்கும் அனைவரும் இறப்பதற்கு, பகவந்தனின் இச்சையே காரணம் ஆகையால், யாதவர்கள் இறக்கட்டும், உத்தவன் இருக்கட்டும் என்னும் பகவந்தனின் விருப்பமே காரணம் என்றார். இவ்வாறு ஹரிநாமத்தினால் நிரந்தரமாக ஹரியைக் கொண்டாடியதால், ருத்ரதேவன் ம்ருத்யுஞ்சய எனப்பட்டான்.

* ஹரிநாம இந்திர: பர்வதங்களின் இறக்கைகளை இந்திரன் தன் வஜ்ராயுதத்தினால் கத்தரித்தான். மலைகளைப் போல பெரியதாகி விழுந்திருக்கும் துஷ்கர்ம மலைகளை ஹரிநாம என்னும் இந்திரன், பொடிப்பொடி ஆக்குவான்.

அகாத்ரி ஸம்பேதன த்ருஷ்டி வஜ்ர: -- மாதவனின் பாவம் மலையளவு இருந்தது. தந்தை, தாய், மனைவி என அனைவரும் இறந்துவிட்டனர். தகாத உறவு கொண்டிருந்தான். மாமிசம் உண்டான். சிறிது காலத்திற்குப் பிறகு, பச்சாதாபம் கொண்டு, வெங்கட பர்வதம் ஏறினான். மலையை தொட்ட மாத்திரத்திலேயே மலையளவு இருந்த பாவம் அழிந்தது. பர்வதம் பாபனாஷக ஆகியது. க்ஷிதீஷ: பாபனாஷன: ||

* ஹரிநாம ஸூர்ய காணோ: || எவ்வளவு இருட்டாக இருந்தாலும், ஒரேயொரு சூரியன் உதித்த உடனேயே, அது காணாமல் போய்விடுகிறது. அப்படியே எவ்வளவு பெரிய அஞ்ஞானியாக

இருந்தாலும், ஹரிநாமத்தை உச்சரிப்பவனுக்கு அஞ்ஞானம் என்னும் இருட்டு தூர விலகுகிறது. இந்திர அவதாரமான அர்ஜுனனுக்கு பயங்கர ஆசை உண்டானது. கிரகணம் பிடிப்பது, சூர்ய, சந்திரர்களுக்கு மட்டுமேதானே? நட்சத்திரங்களுக்கு இல்லையே? 'ஷிஷ்யஸ்தேsஹம் ஷாதி மாம் ப்ரபன்னம்' என்று அர்ஜுனன் ஸ்ரீகிருஷ்ணனை சரணடைந்தான். கிருஷ்ணன் அர்ஜுனனின் அகக்கண்களை கீதையினால் திறந்தான். நானே கொல்கிறேன். எனக்கு பாவம் உண்டாகிறது என்னும் அபிமான இருட்டினால் அர்ஜுனனின் தலை சுற்றியபோது, ஸ்ரீகிருஷ்ணனின் நாம என்னும் சூரியன் உதித்து அவனின் இருட்டினை விலக்கியது.

* ஹரிநாம சந்திர காணோ : வெயிலின் தாக்கத்தால் நொந்து வெந்திருக்கும் மக்களின் கஷ்டங்கள், சந்திரன் உதயமானபிறகு பரிகாரம் ஆகின்றன. கஜேந்திரன் இதனை அறிந்தவன். வெயிலின் தாக்கத்தில் வாடி, குளிர்ச்சிக்காக வருணனின் ஏரிக்கு வந்தான். ஸ்னானம் செய்யும்போது முதலை ஒன்று இவனின் காலைப் பிடித்தது. பகவந்தனை ஸ்தோத்திரம் செய்தபோது, ஹரி இவனை முதலையிடமிருந்து காத்தான். சூர்யனால் கஷ்டப்பட்ட கஜேந்திரன், ஹரிநாமத்தினால் சந்திரன் வந்ததைப் போல சுகப்பட்டான். இவ்வாறு அக புற தாபங்கள் அனைத்தும் பரிகாரம் ஆகின்றன.

* ஹரிநாம வருண காணோ: 12 ஆண்டு காலமாக மழை வராமல் ஊரே பஞ்சத்தில் இருந்தபோது, ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகள் பகவந்தனை நினைத்து, வருண ஜபம் செய்து, மழை பொழியுமாறு செய்தார். இவ்வாறு ஹரிநாமம், மழையைப் பொழியும் விஷயத்தில் வருணனைப் போல இருக்கிறது.

* ஹரிநாம அக்னி காணோ: மனிதர்களின் பாவ மலைகளை, கோவிந்தனின் ஸ்மரணை, நெருப்பானது பஞ்சுப் பொதியலை சுட்டுப் பொசுக்குவதைப் போல பொசுக்குகிறது. தஹத்யாஷு தூலராஷிமிவானல: || - க்ரு. மஹா. 44 -- என்று ஆசார்யரின் வாக்கு இருக்கிறது.

2. நாம பிரஷம்ஸன சுளாதி

பீஷ்மர், வசுவாக இருந்தாலும், கலியின் தொந்தரவால் துரியோதனின் பட்சத்தில் இருந்துகொண்டு, சஜ்ஜனர்களான பாண்டவர்களை எதிர்த்து போரிட்டார். இதன் மூலம் ஸ்வோத்தம துரோகத்திற்கு ஆளானார். ஆனால் தாம் செய்த பாவங்களுக்கு, அம்புப் படுக்கையில் படுத்திருந்து நிரந்தர ஹரிஸ்மரணை செய்தார். பகவந்தன், பரசுராம, ஸ்ரீகிருஷ்ண, வியாஸ ரூபத்தினால், அவர் இறக்கும்போது தரிசனம் அளித்து, பாப பரிகாரம் செய்தேன் என்று குறிப்பிட்டான். பீஷ்மரின் பாவங்களை ஹரிநாம என்னும் அக்னி சுட்டுப் பொசுக்கியது. பீஷ்மன வகுணகளெனிஸிதனே கருணாளு ||

* ஹரிநாம சஞ்சீவனவோ ம்ருதப்ராய ஜீவரிகெ : சம்சாரத்தில் மூழ்கியிருப்பவர்களுக்கு ஹரிநாமம் ம்ருத சஞ்சீவினியாக இருக்கிறது. இதற்கு சம்பாதி பட்சியே உதாரணம். சம்பாதி மற்றும் ஜடாயு, அருணனின் மக்கள். இளமையில், தன் வேகத்திற்கு யாரும் சமானம் இல்லை என்னும் கர்வத்தினால், வேகமாகப் பறந்தனர். சூரியனின் கிரணங்கள் ஜடாயுவின் இறக்கைகளை சுட்டுவிடும் என்று சம்பாதி தன் நிழலால் அவனை மறைத்தான். ஆனால், அதனால் தானே சுடப்பட்டு கீழே விழுந்தான். பறவைகளுக்கு இறக்கைகளே பிராணன். அது இல்லாத சம்பாதி, உயிரிருந்தும் இல்லாததைப் போல விழுந்திருந்தான். சீதையைத் தேடியவாறு ஹனுமன் ஆகியோர் அங்கு வந்தனர். அங்கதன் முதலானோர் சீதையைத் தேடியும் கிடைக்காததால், உயிர்த் தியாகம் செய்வதற்கு தயாராயினர். ஸ்ரீராமனின் சரித்திரத்தை சொல்லத் துவங்கினர். மலை மேலிருந்த சம்பாதி இதனைக் கேட்டான். உடனே எரிந்து போன அவனின் இறக்கைகளை திரும்பப் பெற்றான். தவகதாம்ருதம் தப்த ஜீவனம் | என்று இருக்கிறது. பகவந்தனின் கதை, வெந்து போனவர்களுக்கும் தண்ணீரைப் போல வாழ்க்கையைக் கொடுக்கிறது என்று அர்த்தம்.

* ஹரிநாம வைத்ய கேளோ பவரோகக்கெ : சம்சார சாகரத்தில் மூழ்கி பற்பல துன்பங்களுக்கு ஆளாகி கஷ்டப்படுபவர்களுக்கு, ஹரிநாமம், ஒரு மருத்துவனைப் போல வந்து அனாதி ரோகத்தை களைகிறது. இதற்கு உதாரணம் - துருவன். சித்தியின் கடுஞ்சொல்லுக்கு மனம் நொந்து, அவமானப்பட்டு, பகவந்தனிடம்

சரணடைந்தான். பகவந்தன் அவனுக்கு தரிசனம் அளித்து, லட்சும்யாத்மகமான சங்கினை ஸ்பர்சம் செய்வித்து, காத்தான்.

* ஹரிநாம வடவானள : துக்கம் என்பது மிகப்பெரிய கடலைப் போன்றது. பெரிய சாகரத்தையே எரிக்கக்கூடிய வடவாக்னி கடலில் இருக்கிறது. ஹரிநாமம், மகா துக்க சாகரத்தை அழிக்கக்கூடிய அக்னியைப் போன்றதாகும். பக்தர்கள் ஆபத்தில் இருக்கும்போது, பகவந்தன் ஒரு கையில் வாள், ஒரு கையில் கேடயம் பிடித்துக்கொண்டு, இரவும் பகலும் நம் அருகிலேயே, முன்னும் பின்னும் நின்று, இந்திரா ரமணன் நம்மைக் காக்கிறான் - இது ஸ்ரீவிஜயதாசரின் அனுபவ வாக்காகும்.

நான் நரகத்தை பார்த்ததேயில்லை. பார்க்க வேண்டும் என்று நாரதர், நாராயணனிடம் கூறியபோது, ஸ்ரீஹரி அதற்கு ஒப்பினான். அவரும் நரகத்திற்கு வந்தபோது, அங்கிருந்தவர்களின் துக்க நிலையைக் கண்டு:

நாராயணேதி மந்த்ரோ஽ஸ்தி வாகஸ்தி வஷவர்த்தினி |
ததாபி நரகே கோரே பதந்தீத்யேதத்புதம் ||

நாராயண என்னும் மந்திரம் இருக்கிறது. நாக்கின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. நாராயண என்று சொல்லாமல், மக்கள் நரகத்தில் வீழ்கிறார்கள் - இது எச்சரிக்கை - என்றார். லட்சுமிதேவியின் அருளால், யாருக்கும் கிடைக்காத ஷிம்ஷுமார லோகத்தை துருவனுக்கு அருளினான் பகவந்தன். ஹரியை நம்பியவர்களுக்கு பவரோகத்தை களையும் தன்வந்திரியே, ஸ்ரீஹரி நாமம். ஆனந்தமூர்த்தி முபகுஹ்ய ஜஹுஸ்ததாதிம் || -- பாகவதம்.

* ஹரிநாம கங்கெ காணோ மனமலின தொளெயுவுதக்கெ : கங்கை 100 யோஜன தூரத்தில் இருந்தாலும், கங்கை என்று அழைத்தாலும் போதும், அவனிடம் கங்கை ஓடி வந்து பாவங்களை களைந்து, விஷ்ணு லோகத்திற்கு அழைத்துச் செல்கிறாள். அவளின் தந்தை ஸ்ரீஹரி என்றபிறகு, அவளின் கருணையை வர்ணிக்கவும் வேண்டுமா?. கங்கை புனிதத்திற்கு குறியீடாக இருக்கிறது. எந்தவொரு நதியும் வற்றிவிடலாம். கங்கை வற்றுவதே இல்லை.

2. நாம பிரஷம்ஸன சுளாதி

அங்குடாக்ரதி ஜனிஸித மரதரங்கிணியு
லோகத்ரயகளக ஹிங்கிஸுவளு ।

ந கங்கா ஸத்ருஷம் தீர்த்தம் ந தேவ: கேஷவாத் பர: ||

ஹரியின் கால் கட்டைவிரலிலிருந்து பிறந்த, அமர தரங்கிணி; மூன்று உலகங்களின் கஷ்டங்களையும் பரிகரிக்கிறது என்றால், ஹரியின் நாமமானது, ஹரியின் சர்வாங்கங்களிலும் இருக்கிறது என்பதால், கங்கையைவிட ஹரியின் நாமம் மிகவும் பவித்ரம் ஆகிறது. இது அனைவரின் பாவங்களையும் களைகிறது என்பதில் எவ்வித வியப்பும் இல்லை.

நம் அக புற அழுக்குகளை கங்கை எப்படி சுத்தம் செய்கிறாளோ, அப்படியே, மனதில் இருக்கும் காம குரோதாதி மலத்தினை ஹரிநாமம் சுத்தப்படுத்துகிறது. இதற்கு உதாரணம் - அக்ரூரர்.

அக்ரூரர் ஸ்ரீகிருஷ்ண பக்தன். க்ருதவர்ம, ஷததன்வ இவர்களைப் போல, அக்ரூரனும் சத்யபாமையை திருமணம் செய்து கொள்ள விரும்பினான். ஆனால் ஸ்ரீகிருஷ்ணன் சத்யபாமையை திருமணம் செய்து கொண்டபோது, ஸ்யமந்தக மணியையாவது பெற வேண்டும் என்னும் விருப்பத்தால், ஷததன்வன் மூலமாக, ஸத்ராஜிதனைக் கொன்று, அந்த மணியை தான் பெற்றான். இதனால், கிருஷ்ண பலராமர்களிடம் மனஸ்தாபம் ஏற்பட்டது. தனக்கு இவ்வளவு அநியாயங்களை செய்தாலும், அக்ரூரரை தனது பக்தன் என்று ஏற்றுக்கொண்டு, அவனை அழைத்து, அந்த மணியை அவனுக்கே கொடுத்த பரம தயாளு பகவந்தன்.

* ஹரிநாமகல்கி அனாசார பிடிஸுவுதக்கெ: உலகத்தில் தர்ம, ஞானாதி சத்குணங்கள் மறைந்து, அனைவரும் அனாசாரிகளாக சுற்றிக் கொண்டிருக்கும்போது, நாராயணன் கல்கியாக அவதரிக்கிறான். ‘கல ஹிம்ஸாயாம்’ ஹிம்ஸை என்று அர்த்தம். கலியை இம்சிப்பதால் கல்கி. கெட்ட அரசர்களை, மக்களைக் கொன்று, தர்மத்தை நிலைநாட்டுவான். கலியுகத்தின் கடைசியில் வருபவன் கல்கி. அஜாமிளன் 88 ஆண்டுகள் செய்த மகாபாவங்கள் அனைத்திற்கும், பக்தியுடன் உச்சரித்த நாராயண என்னும் நாமமே தாரகமானது.

* ஹரியநாம ப்ராண காணோ - இந்திரிய பலகெ : பிராணதேவன் பலதேவதை. ஆகணாஷ்ம ஸமன். தைத்ய ஆவேசம் இல்லாத பரம சுத்தன். ஞானதாதன். ஞானி அஞ்ஞானிகளில் ஹம்ஸ மந்திரத்தை ஒவ்வொரு நாளும் 21,600 முறை ஷ்வாஸ ரூபமாக நடத்துகிறான். இத்தகைய வாயுதேவன், அனைத்து சேதனர்களுக்கும் பிராணன். இந்திரியங்கள் அனைத்தும் எந்த வேலையை செய்தாலும், அதனை பிராணனே செய்கிறான். இவனே பலதேவதை என்று அனைத்து தேவதைகளும் அறிவர். இந்திரிய அபிமானி தேவதைகளுக்கும், இந்திரியங்களுக்கும் பலம் என்றால், பிராண தேவனே. அப்படியே ஹரி நாமம், அனைத்து இந்திரியங்களுக்கும் சைதன்யத்தைக் கொடுத்து தத்தம் செயல்களை சரியாக நடத்துவதற்கு வழியைக் காட்டுகிறது.

* ஹரிநாம வ்யாக்ர காணோ : சிங்கம், புலி ஆகிய மிருகங்கள், இருந்த இடத்திலிருந்தே, தூரத்தில் இருக்கும் மிருகங்களை உணரும் மோப்ப சக்தியைக் கொண்டவை. புலியைக் கண்டவுடனேயே மான் போன்றவை தூர ஓடிப் போகின்றன. நமக்கு நிரந்தர ஆபத்துகள் இருக்கின்றன. ஸ்ரீஹரியை மறப்பதே ஒரு பெரிய ஆபத்து. விபத் விஸ்மரணம் விஷ்ணோ:. ஹரி நாமம் ஒரு புலியைப் போல, ஆபத்துகள் என்னும் மிருகங்களை தூர ஓட்டுகிறது. இதற்கு உதாரணம் - பிரகலாத ராஜன். ஹிரண்யகசிபுவினால் பிரகலாதனுக்கு ஏகப்பட்ட ஆபத்துகள் வந்தன. ஹரிநாம என்னும் புலியினால் அந்த ஆபத்துகள் அனைத்தும் விலகின.

* ஹரிநாம ஸிம்ஹ - க்ரோதவெம்ப கஜக்கெ: காட்டின் வலிமையான விலங்கு என்றால் அது யானை. எந்த விலங்கினையும் எதிர்க்கவல்லது. ஆனாலும், அது சிங்கத்திற்கு பயப்படுகிறது. மதம் பிடித்த யானை மரங்களை தள்ளி சாய்க்கிறது. அது போலவே, க்ரோதம் என்னும் மத யானை, அனைத்து சஜ்ஜனர்களையும் அவமானப்படுத்தில் தள்ளுகிறது. இத்தகைய மத யானை பயப்படுவது சிங்கத்திற்கு மட்டுமே. அதுவே நரசிம்ம நாமம். இதற்கு சரியான உதாரணம் - துர்வாசர். கிருஷ்ணனுக்கு கோபம் வரவேண்டும் என்று பல முயற்சிகளை

இவர் செய்தாலும், கிருஷ்ணன் எதுவுமே சொல்லவில்லை. பிறகு 'ஜித:க்ரோத: த்வயா கிருஷ்ண' என்று புகழ்ந்தார்.

* ஹரிநாம கஜ காணோ ஆஷாயெம்ப கதளிகெ : மனிதனை பூச்சி நிலைக்கு தள்ளுவது அவனின் ஆசை. ஆசையை வென்றவன் உலகத்தையே வென்றதைப் போல ஆகும். மிகப்பெரிய மரங்களையே வேறோடு சாய்க்கும் யானைக்கு, வாழை மரம் ஒரு பொருட்டா?. நம்மில் இருக்கும் ஆசை என்னும் வாழை மரத்தை, ஹரி நாமம் என்னும் யானை, வேறோடு பிடுங்கி எறிகிறது.

ஸ்ரீபுரந்தரதாசர், நவகோடி நாராயணனாக இருந்தபோது, ஆசாபாசத்திற்கு கட்டுப்பட்டிருந்தார். பகவந்தனின் தரிசனம், அவருடைய ஆசைகளை துறக்க வைத்து, தம்பூரி பிடித்து, ஹரியின் பின்னால் நடக்க வைத்தது. அடுத்து, நரகத்தில் இருந்தவர்கள் ஹரி நாமத்தை பருகி, பாவங்களை களைந்து கொண்டு, விமானம் ஏறி, ஸ்வர்க்கத்திற்கு வந்தனர். இது ஷாண்டில்ய தத்வத்தில் இருக்கிறது (அத்தியாயம் 22). இவ்வாறு அனைவருக்கும் கேட்குமாறு நாம சங்கீர்த்தனை செய்தாலும், அது அனைவருக்கும் பிடிப்பதில்லை. முக்தி யோக்யர்களுக்கு மட்டுமே அது ருசிக்கிறது.

* ஹரிநாம ஷஸ்த்ர காணோ காமபல கண்டிபுதகெ : காம ஏஷ க்ரோத ஏஷ ரஜோகுண ஸமுத்புத: என்னும் கீதை வாக்கியத்தின்படி, நம்மிடம் இருக்கும் மிகப்பெரிய எதிரி - காமம். எவ்வளவு கொடுத்தாலும் போதும் என்னும் திருப்தி இல்லாதது. பாபிஷ்டமானது.

காமத்தை வெல்வது அஸாத்தியமானது என்று யயாதி கூறுகிறான். ந ஜாது காம: காமானாம் உபபோகேன ஷாம்யதி | அக்னிக்கு நெய் ஊற்றிக் கொண்டேயிருந்தால், அது மேலும் நன்றாக எரியுமே தவிர, ஷாந்தமாவதில்லை. அணையவேண்டுமெனில், நெய் ஊற்றுவதை நிறுத்த வேண்டும்.

பூமியில் இருக்கும், தங்கம், பசு, பெண், செல்வங்கள் ஆகியவை ஒருவனுக்கு போதாதாம். பகவந்தன் மற்றும் அவனின் தாசனான ஹனுமந்தனைத் தவிர மற்ற அனைவரும் காமத்திற்கு அடிமையானவர்களே. ருத்ரதேவரே யுவதி வேஷத்தின்

மோகினியின் மோகத்திற்கு மயங்கியவர். இத்தகைய காமனின் பலத்தினை வெட்டுவதற்கு ஷஸ்திரம் என்றால் அது ஹரிநாமமே. ஹனுமந்தன் ராவணனின் அரண்மனைக்குச் சென்றபோது, தேவகந்தர்வ பெண்கள் அனைவரும் தேகத்தின் மேல் ஆடையில்லாமல் விழுந்திருந்தனர். ஆனால், ராமகார்ய துரந்தரரான ஹனுமந்தனின் மனம் அங்கு செல்லவில்லை. மனதில் எவ்வித மாற்றங்களும் உண்டாகவில்லை. ந து மே மனஸா கிஞ்சித் வைக்ருத்ய முப பத்யதே ||

* ஹரிநாமவித்த காணோ ஸத்கர்ம கொம்போதக்கெ: எந்தவொரு பொருளை வாங்க வேண்டுமென்றாலும் செல்வம் தேவைப்படுகிறது. ஸத்கர்மங்கள் என்னும் திரவியத்தை வாங்குவதற்கு ஹரிநாம என்னும் செல்வமே போதும். கனகதாசர், சத்கர்மங்களை கனகத்தினால் பெறவில்லை. ஹரிநாமத்தினாலேயே செய்தார்.

* ஹரிநாமாபரண ஷரீராலங்காரக்கெ: சரீரத்திற்கு பூஷண என்றால் கேயூர முதலான ஆபரணங்கள் அல்ல. நாக்கிற்கு பூஷணம் - ஹரிநாமம். காதிற்கு பூஷணம் - விஷ்ணு கதையைக் கேட்பது. நமது மொத்த சரீரத்திற்கு ஆபரணங்கள் என்றால் ஹரிநாமம் ஒன்றே. இந்த ஆபரணத்திற்கு பணம் தேவையில்லை. மற்றும் அது காலம் கழிந்தாலும் அழிவதில்லை. குசேலனுக்கு வஸ்திரம்கூட சரியாக இருந்திருக்கவில்லை. லௌகிகத்தில் அவன் ஏழையாக இருந்தாலும், ஹரி நாமஸ்மரணையில் செல்வந்தன். இதனாலேயே, அவனுக்கு அனைத்து செல்வங்களும் கிடைத்தன. குசேலனன்னு நீ ஸுசேலனன்னாகி மாடிதி ||

* ஹரிநாமாம்பர காணோ பவவெம்ப ஷீதக்கெ : குளிரால் பாதிக்கப்பட்டவர்கள் அதற்குத் தக்க ஆடையை உடுத்தி குளிரிலிருந்து விடுபடுகிறார்கள். சம்சார என்னும் குளிரில் கஷ்டப்படுபவனுக்கு ஹரிநாமம் என்னும் திவ்ய வஸ்திரமே காக்கிறது. காட்டில் வெயில், மழை, காற்று, குளிர் என்று சொல்லாமல், தவத்தில் ஈடுபட்டிருந்த விஷ்வாமித்ராதி ரிஷிகளுக்கு வஸ்திரம் என்றால் அது ஹரி நாமமே.

2. நாம பிரஷம்ஸன சுளாதி

---

* ஹரிநாம வஜ்ரபஞ்ர ஷரணர குலகோடிகெ : அந்த கால மக்கள் செல்வத்தை ஒரு மூட்டையாக கட்டி பத்திரமாக பாதுகாப்பதைப் போல, ஸ்ரீஹரி, ஜீவர்களை மஹதாதி தத்வங்களால் கட்டி தன் வயிற்றில் வைத்துக்கொண்டு காக்கிறான். ப்ரணதரனு காதிஹனு நிஷ்காமதி. பகவந்தனிடம் அனன்ய பக்தியை செய்தனர் பாண்டவர்கள். இந்த காரணத்தினால் பகவந்தன் அவர்களுக்கு தூதன் ஆனான். அர்ஜுனனுக்கு சாரதி ஆனான். 'மம ப்ராணா ஹி பாண்டவா:' என்றான். அவர்களை திரும்பத்திரும்ப காத்தான். கர்ணனின் சர்ப்பபாஸ்திரத்திலிருந்து அர்ஜுனனை காத்தான். சைன்ய உதவியைக் கேட்டு அவனிடம் வந்தபோது, எனக்கு எந்த சைன்யமும் வேண்டாம், நீ ஒருவனே போதும் என்று அர்ஜுனன் சொல்லியிருந்தான்.

* ஹரிநாம நெனெதவர அஷுப ஓடிஸுவுது: கஜேந்திரனை முதலை பிடித்திருக்கிறது. அதன் சக்தி குறைகிறது. ஸ்ரீஹரியே, என்னை காப்பாற்று என்று கதறினான். பக்தன் அழைத்தவுடன்,

கரி ஸ்ரீஹரி எனலு ஸிரிகெ ஹேளதெ பந்தெ
விரிஞ்சிய கைலாகவனொல்லதெ
ஹனுமனித்த ஹாவிகெய ஹாரி
கருடனொதகி பரெ திருகினோடதெ பந்தெ
நின்ன த்வரிதக்கெ நமோ எம்பெ ஸிரிகிருஷ்ண ||

கஜேந்திரன், பத்ர நாமக ஹரி நாமத்தையே பத்திரமாக பிடித்து, தன்னை பத்திரமாக பிடித்திருந்த முதலையின் பிடியிலிருந்து விடுபட்டான்.

* ஹரிநாம நம்பிதரெ ஸர்வவு த்ருஷ்டிகோசர: ஹரி நாமத்தை நம்பிய, டீகாசார்யரே முதலான ஞானிகள், சாஸ்திரிய பிரமேயங்களை அறிந்து, நியாயசுதாதி கிரந்தங்களை இயற்றினர். இவ்வாறு, ஹரி நாமம், நமக்கு என்னென்ன இஷ்டார்த்தங்கள் இருக்கின்றவோ, அவை அனைத்தையும் நிறைவேற்றுகிறது. 'யத்யதிஷ்டதமம் லோகே தத்தத் பிராப்னோதி'.

2. தொட்டிலொளகெ இத்த ஷிஷுவின மொகநோடி...

குழந்தை தொட்டிலில் படுத்திருந்தது. அதிக நேரம் படுத்திருந்தது. அதனை தாய் பார்த்தாள். வெகு நேரம் ஆயிற்றே, குழந்தைக்கு பசிக்குமே என்று அதற்கு பால் கொடுத்தாள். இதைப் போலவே, 84 லட்ச யோனிகளில் பிறந்து நொந்து, பகவந்தனின் வயிறு என்னும் தங்கத் தொட்டிலில் படுத்திருக்கும் நமக்கு பசியெடுக்கும்போது, தாய், தந்தை, உற்றார் உறவினர் என அனைத்துமாக ஆகியிருக்கும் ஸ்ரீஹரியே நமக்கு அமிர்தமய பால் - அதாவது, விட்டல விட்டல என்னும் நாமம் ஒன்றே நமக்கு உணவு.

3. ஹரிநாமவெ நெனிஸி ஆவாவ விபத்து...

ஹரி நாமத்தின் மகிமை அதிஅற்புதம். ஹரி நாமத்தை நிரந்தரமாக நினைத்திருந்தால் எந்த ஆபத்தும் வருவதில்லை. ஹரிநாமத்தை எப்போதும் நாக்கில் கொண்டிருப்பவனுக்கு, சரீரத்தில் இருக்கும் தத்வாபிமானி தேவதைகள் வசமாகின்றனர். விஷ்ணுபக்தி பராயணரான தத்வேஷர்கள் வசம் ஆனபோது, தர்ம மார்க்கத்தில் நடப்பது மிகவும் சுலபம்.

ஹரி நாமத்தை சொல்லிக் கொண்டிருந்தால், பரலோகத்தின் வழியானது, பட்டணத்து சாலைகளைப் போல, எவ்வித தடைகளும் இன்றி காணப்படும். பரதத்வம் ஒளிரும். பரமாத்மனின் ஞானமும் கிடைத்து சுகப்படுகிறான். அனைத்து திசைகளிலும், எங்கு என்ன நடந்தாலும், அது நன்றாக தெரியவரும். ஹரியின் நாமத்திற்கு இவ்வளவு சக்தியா என்று சந்தேகப்பட வேண்டாம். இதற்கு ஒரு தக்க உதாரணம் சொல்கிறேன். கேளுங்கள்.

சாதாரண மனிதன் ஒருவன் ஒரு விசேஷ மை தயாரித்து, அதனை உடம்பில், கண்களில் தடவிக் கொண்டால், எவ்வளவோ அடியில் புதைந்திருக்கும் புதையல்களும் அவனுக்கு தெரிகின்றன. சாதாரண ஜட பொருளான மைக்கே இத்தகைய சக்தி இருக்கையில், ஞான த்ருஷ்டிக்கு புலப்படாதது என்னதான் இருக்கிறது?

இந்திரியங்கள் எப்போதுமே இருந்தாலும், நம்மில் ஞானம் அதிகமானால் மட்டுமே, இந்திரியங்கள் உள்ளே வெளியே

இருக்கும் பொருட்கள் அனைத்தையும் காட்டுகிறது. விஜயவிட்டல ராயனின் சரணத்யானம் செய்ததால் உண்டான பலனே இது.

4. அனுபவவில்லத ஞானத பலவேனு...

ஞானம் இருந்தால் மட்டும் போதாது. அது தன் அனுபவத்துடன் சேர வேண்டும். பகவந்தன் அனைவருக்கும் அறிவை வழங்கிக் கொண்டிருக்கும்போது, நான் ஞானி என்னும் கர்வம் எதற்கு?. ஸ்ரீஹரியின் ப்ரேரணை இருக்கும்போது, முனிவர்களை தேவதைகள் ஏன் கொண்டாட வேண்டும்?. பகவந்தனே ஞானத்தைக் கொடுத்திருக்கையில், நான் பண்டிதன் என்னும் பெருமை ஏன் வேண்டும்?. இத்தகைய மனிதர்கள் ஜடப் பொருட்களைப் போல இருந்து, இவர்களுக்கு சாதனை ஜென்மமான இந்த வைஷ்ணவ ஜென்மம் ஏன் வேண்டும்?

தூய்மையான ஞானத்திற்கு மட்டுமே ஸ்ரீஹரி தரிசனம் அளிக்கிறான். தன் சச்சிதானந்த ரூபங்களைக் காட்டுகிறான். பகவந்தனின் தரிசனம் ஆன உடனேயே, லிங்க தேக பங்கம் ஆகி, அடுத்து மோட்ச சுகம் கிடைக்கிறது.

ஹரி நாமத்தின் சிறப்பினை என்னவென்று கூறுவது?. ராம, கிருஷ்ண, கோவிந்த ஆகிய ஹரி நாமங்களை சுத்த பக்தியுடன் பாடுபவர்களுக்கு நித்ய சுவையான உணவு, செல்வம், வஸ்திரம் ஆகியவை கிடைக்கின்றன. வேண்டிய இஷ்டார்த்தங்கள் அனைத்தையும் ஹரி நாமம் கொடுக்கிறது. இதில் சந்தேகம் வேண்டாம். இது உண்மை. ஹரி நாமத்தை உச்சரித்தவனுக்கு கனவிலும் கூட பாவங்கள் தொலைகின்றன. ஹரி நாமமானது, அதனை சொல்பவனுக்கு, அனைத்து செயல்களையும் செய்வதற்கு, மிகவும் உற்சாகத்தைக் கொடுக்கிறது.

5. வித்யத பல கேளோ ஸுயக்ஞ முனிபாலக...

ஹரி நாமத்தினால் உண்டான ஞானத்தின் பலமே பலம். இதனை விளக்கும், ஸுயக்ஞ என்னும் பாலகனின் கதை, மாக மாத மகாத்ம்யத்தில் இருக்கிறது. அதனை இங்கு விளக்குகிறார்.

பிரம்ம நாரத ஸம்வாத: முன்னர், பதரியில், ஸுயக்ஞ என்னும் எட்டு வயது பாலகன் இருந்தான். ஜாபாலி ரிஷிகளின் மகன் இவன். ஷாண்டில்யரின் சிஷ்யன். அவரிடம் அனைத்து சாஸ்திர அத்யயனத்தை செய்தான்.

ஒரு முறை ஸுயக்ஞ, தர்ப்பை எடுப்பதற்கு, காட்டிற்குச் சென்றிருந்தான். அங்கு ஒரு மிகப்பெரிய ஆலமரம் இருந்தது. அதில் ஏழு பிசாசுகள் இருந்தன. இவனைப் பார்த்ததும் அவை இவனிடம் ஓடி வந்தன. அவற்றைக் கண்ட இவன் பயந்து ஓடினான். கிழக்கிலிருந்து ஏழு, தெற்கிலிருந்து ஏழு பிசாசுகள் ஓடி வந்தன. ஷால்மலி மரத்திலிருந்து ஏழு பிரம்ம பிசாசுகள் ஓடி வந்தன. இதைப் போலவே, ஈஷான்ய திசையிலிருந்து ஷாகினி என்னும் பிசாசு ஓடி வந்தது. இப்படியாக, மொத்தம் 28 பிசாசுகள், தன்னை தின்பதற்கு வந்தபோது, குருகளின் அந்தர்யாமியாக இருக்கும் ஸ்ரீஹரியையே சரணடைந்தான்.

அப்போது வாயுதேவரின் அசரீரி வாக்கு கேட்டது. இங்கு ஓடிக் கொண்டிருக்கும் ஆற்றில் ஸ்னானம் செய்து, ஸ்ரீந்ருஸிம்ஹ மந்திரத்தை அபிமந்திரணம் செய்த தண்ணீரை பிசாசுகளுக்கு ப்ரோக்ஷணம் செய் என்று அந்த அசரீரி கூறியது. இவனும் அவ்வாறே செய்தான். என்ன வியப்பு? உடனே அந்த பிசாசுகள், தங்களின் சாபம் நீங்கி, அழகான தேகத்தைப் பெற்றன. இவ்வாறு ந்ருஸிம்ஹ மந்திரத்தால் பிசாசுகள் அனைத்தும் முக்தர் ஆயின. அந்த பாலகனும் முக்தன் ஆனான்.

6. மாதுமாதிகெ ஹரி நாமவெ கதியென்னு...

இந்த உதாரணங்களால், ஹரி நாமத்தின் சக்தியினை அறிந்து, ஒவ்வொரு நொடியும் ஹரி நாமமே கதி என்று அறி. இதனால் தேகம் தூய்மை அடைகிறது. ஸ்ரீஹரியின் கிருபை கிடைக்கிறது.

***

3. ஸதாசார சுளாதி

த்ருவ தாள

ஹரிதா3ஸனாகு3 ஸஞ்சரிஸு ஸந்தோஷத3ல்லி
கு3ருஹிரியர பாத3க்கெருகு3திரு பி3ட3தெ3
எரடொ3ந்து3 திளிது3 மத்தெரடொ3ந்து3 அளிது3
எரடொ3ந்து3 ஸம்பாதி3ஸி எரடொ3ந்து3 ஷுத்3தி4யல்லி
எரடொ3ந்து3 ஸ்மரிஸுத்த எரடொ3ந்து3 காலத3ல்லி
எரடொ3ந்து3 கு3ணக3ளிகெ3 எரடொ3ந்து3 ரூபனெந்து3
எரடொ3ந்து3 லோகவன்னு எரடொ3ந்து3 மாள்பன்ன
எரடொ3ந்த3ரிந்தா3வஸ்தி2 எரடொ3ந்து3 உள்ளமேலு
எரடொ3ந்து3 காய நோடு3 எரடொ3ந்து3 கர்மக1ளியொ
எரடொ3ந்த3க்ஷரக3ள எரடொ3ந்து3 ஸாரி நெனெது3
எரடொ3ந்து3 ஸ்னானஸேரு
எரடொ3ந்து3 கு3ணஷூன்ய விஜயவிட்டலஹரிய
எரடொ3ந்து3 ரூபப4ஜிஸெ எரடொ3ந்தா3வர்த்தி பொளெவ ||1

மட்ட தாள

மூரொந்து3 முக2த3ல்லி மூரொந்து3 வர்ணத3
மூரொந்து3 கடெ3 பி3ம்ப3 மூரொந்து3 ஆகி3 ப4ஜிஸி
மூரொந்து3 புருஷார்த்த2 மூரொந்த்3ஹாதி3 பே3டு3
மூரொந்து3 மூக3னய்ய விஜயவிட்டலரேயன
மூரொந்து3பா1யத3ல்லி மூரொந்து3 ப்ரளயனாதெ3 ||2

த்ரிவிடி தாள

நால்கொந்து3 பே4தவ ஆவல்லி நிஜவெந்து3
நால்கொந்தா3த்மகவாத3 பொம்மாண்ட3தி3
நால்கொந்து3 ப3கெ3யவரு யோக்யவந்தரெந்து3
நால்கொந்து3 ஸம்பத3வி இப்பவெந்து3
நால்கொந்து3 கோஷத3ல்லி வாஸவாகி3 இத்3து3
நால்கொந்து3 பர்வத3லி திரக3த3லே
நால்கொந்து3 ஊர்த்4வபுண்ட்3ரவ முத்3ரிய த4ரிஸு

நால்கொந்து3 யக்3ஞவ திளிது3 மாடி3 நித்ய
நால்கொந்து3 இந்தி3ரியங்க3ள ப3ந்த4னவ மாடு3
நால்கொந்த்ஹாதி3கெ3 எரக3தீ3ரு
நால்கொந்து3 பே4த3வ திளியோ நீனு
நால்கொந்த3வரபாலா விஜயவிட்டலரேயா
நால்கொந்து3 பி3டி3ஸுவ நால்கொந்து3 கொடு3வனோ ||3

அட்ட தாள

ஐதொ3ந்து3 ரிபுக3ளுபத்3ரவ முக்3கி3ஸு
ஐதொ3ந்து3 கர்மவ மாடு3தலிரு
ஐதொ3ந்து3 மதகெ நம்ம மதவதி4கவென்னு
ஐதொ3ந்து3 ருசிபி3டு3 ஹரிநாம ருசியென்னு
ஐதொ3ந்து3 ரதி2கர ஜரித3 விஜயவிட்டலன்ன
ஐதொ3ந்து3 ஸ்த2ளத3ல்லி திலியோ நிர்மலனாகி3 ||4

ஆதி தாள

ஆரொந்து3 ஜட3வுள்ள க்3ராம நின்னத3ல்ல
ஆரொந்த3ம்பு3தி4யஷ்டு கர்மவெ நின்னது3
ஆரொந்த3வர கேளி யமனு ஷிக்ஷிஸுவனு
ஆரொந்து3 த்3வீபனாளித3வரெல்லி
ஆரொந்து3 ஹயன காலகெ எத்3து3 ஸ்னானாதி3
ஆரொந்து3 கர்மவ மாடு3
ஆரொந்து3 ஜிஹ்வெகெ3 உணிஸி, கர்மஞான
ஆரொந்து3 கோ3த்ரவ உத்3தா4ர மாடு3த
ஆரொந்து3 அங்க3வுள்ள விஜயவிட்டல ஹரிய
ஆரொந்து3 வாரதொ3ந்து3 நிமிஷதா3ஸனாகோ3 ||5

தாள --

ஏளொந்து3 பா1லகர திளி
ஏளொந்து3 த3ளத3ல்லி ப4க3வத்3ரூப திளியபே3கு
ஏளொந்து3 மூர்த்திய சிந்தனெ மாடு3
ஏளொந்து3 த3ந்திக3ள திளியபே3கு
ஏளொந்து3 பூ4தியுள்ள விஜயவிட்டலன மஹிமெ திளி ||6

3. ஸதாசார சுளாதி

தாள --

எண்டொந்து^{3} க்^{3}ரஹக^{3}ள திளியபே^{3}கு
எண்டொந்து^{3} ஸ்ருஷ்டிய திளியபே^{3}கு
எண்டொந்து^{3} ப்ரஜேஷ்வரர திளியபே^{3}கு
எண்டொந்து^{3} கோடிரோமக^{3}ளல்லி
எண்டொந்து^{3} ஷக்தியுள்ள
எண்டொந்து^{3} ப4க்தி திளியபே^{3}கு
எண்டொந்து^{3} கடெ^{3}யல்லிருவ விஜயவிட்டலன
எண்டொந்து^{3} மூர்த்திக^{3}ள திளியபே^{3}கு ||7

ஜதெ

கொட^{3}ப்^{3}யாட^3 கொளப்^{3}யாட^3 விஜயவிட்டலன
அடி^{3}க^{3}ளிர்த்த நிமிஷெ நம்ப^{3}லு கைவல்ய ||8

***

இந்த சுளாதியில் ஹரிதாசர்கள் பின்பற்ற வேண்டிய சத்தர்மங்களை எண் சாஸ்திரத்தின் மூலம் தெரிவிக்கிறார் தாசராயர்.

<u>1. **ஹரிதாஸனாகு ஸஞ்சரிஸு ஸந்தோஷதல்லி....**</u>

இரண்டு + ஒன்று மொத்தம் மூன்று என்னும் எண்ணை சிந்திக்க வேண்டும். ஜீவனுக்கு இருக்கும் மூன்று நிலைகளை இது குறிக்கிறது. அனைவருக்கும் பால்ய, யௌவன, வ்ருத்தாப்ய என்னும் மூன்று நிலைகள் இருக்கின்றன. பால்யத்தில் உபனயனத்திற்குப் பிறகு, குருசேவை, வேத அத்தியயனம் ஆகியவற்றை செய்ய வேண்டும். 12 ஆண்டுகளுக்குப் பிறகு, குருகளின் அனுமதியுடன் தக்க கன்யையை திருமணம் செய்து, அவருடன் மூன்று ருணங்களை தீர்ப்பதற்கு, சந்தான அபிவ்ருத்தி, அதிதி விருந்தினர்களின் சேவை, யதிகளுக்கு பிக்ஷை, அபயதான செய்தவாறு யௌவனத்தை அர்த்தமுள்ளதாக ஆக்கிக் கொள்ள வேண்டும். முதுமையில் தவம், யக்ஞ, யாகாதிகளை அதிகம் செய்ய வேண்டும்.

மத்தெரடொந்து அளிது:
நம்மில் இருக்கும் பெண்ணாசை, பொன்னாசை, மண்ணாசை என்னும் மூன்றினை போக்கிக் கொள்ள வேண்டும். காமத்தை வெல்வது சுலபமல்ல. இதனை பிரம்மதேவனே தன் மகளை மோகிப்பதாக நாடகம் ஆடி, காமஜய என்பது அஸாத்தியம் என்பதை தெரிவித்தான். மனிதனுக்கு 'ஆஷெயெம்புது பரமஸ்ரத்து'. ஆசையில்லாமல் இருப்பது பரம சுகமானது. சிவன், கைலாசாதிபதியாக இருந்தாலும், வைராக்ய மூர்த்தி எனப்படுகிறான். பொன்னாசை என்பது, வயதானவர்களாலும் முடியாதது. இந்த பூமியில், கோதுமை, அரிசி, தங்கம், பசுக்கள், பெண்கள் - ஆகியவை எவ்வளவு இருந்தாலும், ஒருவனுக்கு அது போதுமானதாக இல்லை. காமாக்னிக்கு, விஷய வஸ்து என்னும் நெய் ஊற்றாமல், அதனை நிறுத்த வேண்டும். ந ஜாது காம: காமானாம் உபபோகேன ஷாம்யதி | என்று யயாதி கூறுகிறான்.

எரடொந்து ஸம்பாதிஸி:
மனிதனுக்கு - ஞான, பக்தி, வைராக்கியங்கள் ஆகிய மூன்றும் முக்திக்கான வழிகள் ஆகும். ஹரியின் தத்வஞான, ஹரியில் அதிக பக்தி, விஷயங்களில் வைராக்கியங்கள் ஆகியவை வேண்டும். இந்த மூன்றினையும் கண்டிப்பாக சம்பாதிக்க வேண்டும். வைராக்கியம் என்னும் பாத்தியில், பக்தி என்னும் தண்ணீர் ஊற்றி, ஞானம் என்னும் மரத்தை வளர்த்தால், அபரோக்ஷ ஞானம் என்னும் பழம் கிடைக்கிறது.

எரடொந்து ஷுத்தியலி:
மனம், வாக்கு, தேகம் இவை த்ரிகரணங்கள். ஹரிதாசனுக்கு இந்த மூன்றும் சுத்தமாக இருக்க வேண்டும். மனதில் இருப்பதே வாக்கில் வர வேண்டும். அதற்கேற்பவே நடக்க வேண்டும். மனதில் ஒரு விஷயம், பேச்சில் ஒன்று, நடவடிக்கைகளில் வேறொன்று என இருக்கக்கூடாது. அம்பரீஷ அரசன் த்ரிகரண சுத்திக்கு உதாரணமாக இருந்தான்.

எரடொந்து ஸைரிஸுத:
ஆத்யாத்மிக, ஆதி தெய்விக, ஆதி பௌதிக என்பது மூன்று தாபத்ரயங்கள். இவற்றை போக்கிக் கொள்வது, ஹரிதாசரின்

இன்னொரு லட்சணமாகும். இவை ஜீவனை பலவீனன் ஆக்குகிறது. மனைவி, மக்களின் பிரிவு துக்கமானது ஆத்யாத்மிக தாபம் என்றும்; அதிவ்ருஷ்டி, அனாவ்ருஷ்டி, பாம்பு, தேள் ஆகியவை கடிக்கும் துக்கத்திற்கு ஆதிதெய்விக என்றும்; பூதங்களால், திருடர்களால் ஆகும் பிரச்னைகள் ஆகியவை ஆதிபௌதிக என்றும் அழைக்கப்படுகின்றன. நான் செய்த பாவ கர்மங்களால் எனக்கு இத்தகைய நிலை என்று அறிந்து ஹரியை விசேஷமாக அர்ச்சிக்க வேண்டும்.

எரடொந்து காலதலி:

மூன்று காலங்களிலும் ஹரியை வணங்க வேண்டும். ப்ராத:கால, மத்யான்ன, மாலை வேளைகளில் ஸ்ரீஹரியை சரணடைந்து, என் தவறுகளை மன்னிப்பாயாக, இந்த பாவங்களை தைத்யர்களுக்குக் கொடு, இனி இத்தகைய தவறுகளை என்னிடமிருந்து செய்விக்காதே என்று சரணடைய வேண்டும். இந்த மூன்று காலங்களிலும் நமக்குத் தக்க / ஏற்ற கடமைகளை செய்தவாறு இருக்க வேண்டும்.

எரடொந்து குணகளிகெ:

அனைவரிலும், ஸத்வ, ராஜஸ, தாமஸ என்னும் மூன்று குணங்கள் இருக்கின்றன. அவரவர்களின் தாரதம்யத்திற்கேற்ப இவை அனைவரிலும் கலந்து இருக்கின்றன. எது அதிகமாக இருக்கிறதோ, அந்த குணத்தை அவன் கொண்டிருக்கிறான். ஸாத்விக, ராஜச, தாமஸர் என்று அவர்கள் அழைக்கப்படுகின்றனர். சாத்விகர்களுக்கு சுகம், மிஸ்ரர்களுக்கு சம்சாரம், அதம ஜனர்களுக்கு அபார துக்கத்தை ஸ்ரீஹரி கொடுக்கிறான்.

ஹம்ஸ: - தோஷமற்ற குண ஸ்வரூபன் ஸ்ரீஹரியே. ஸோऽஹம் - நான் அவனின் ப்ரதிபிம்பன். ஸ்வாஹா - பிம்பனுக்கு அனைத்தும் சமர்ப்பணம் என்று வாயுதேவர் அனைவரிலும் நின்று ஹம்ஸ மந்திர ஜபம் செய்கிறார்.

எரடொந்து ரூபனெந்து:

ஜாக்ருத, ஸ்வப்ன, சுஷுப்தி என்னும் மூன்று நிலைகளுக்கு நியாமகளான விஷ்வ, தைஜஸ, ப்ராக்ஞ என்னும் ரூபங்களை

அறிய வேண்டும். புருஷர் தானே விழிப்பதற்கு, கனவு காண்பதற்கு, தூங்குவதற்கு அஸமர்த்தர். ஸ்ரீஹரியே இந்த மூன்று நிலைகளையும் கொடுப்பவன் என்று தியானிக்க வேண்டும்.

எரடொந்து லோகவன்னு:
பூலோக, ஊர்த்வலோக, அதோலோகங்களை, சிம்ஷுமாராதி ரூபங்களால் காப்பவன், பகவந்தனே என்று அறிவது ஹரிதாசர்களின் லட்சணம் ஆகும்.

எரடொந்து மாள்பன்ன:
உலகிற்கு ஸ்ருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரங்களை ஸ்ரீஹரியே செய்கிறான் என்று சிந்திக்க வேண்டும். பிரம்ம, ருத்ரர் ஆகியோர் ஸ்ருஷ்டி, லய கர்தர்கள் எனப்பட்டாலும், அவர்களின் மூலம் ஸ்ரீஹரியே இவற்றை செய்கிறான்.

ஜகவனெல்லவ நிர்மிஸுவ நா
ந்மொகனொளகெ தானித்து ஸலஹுவ
ககனகேஷனொளித்து சம்ஹரிஸுவனு லோககள ||

எரடொந்தரிந்தாவஸ்தெ:
எரடொந்து ரூபனெந்து என்பதில் சொல்லப்பட்ட விவரங்களே இங்கும் சிந்திக்க வேண்டும்.

எரடொந்து உள்ளமேலு:
ஸ்ரவண, மனன, நிதித்யாஸன என்னும் மூன்றும் மோட்சத்திற்கான உத்தம சாதனைகள். சிரவணாதிகள் இல்லாமல் ஒரு நொடியும் இருக்கக்கூடாது.

சாஸ்திர ஜன்ய ஞான -
உபதேசத்தினால் உண்டாவது சிரவணம். வாக்யார்த்தங்களில் யுக்திகளை பயன்படுத்துவதி மனனம். பகவத் விஷயக விஷயங்கள் நிரந்தரமாக செய்து கொண்டிருப்பது - நிதித்யாஸனம்.

ஸ்ரவண என்றால் ஸ்ரவணாதி நவவித பக்தி. ஸ்ரவண மனகானந்த வீவுது, பவஜனித துக்கள களெவுது.

ஸ்ரவணத்தினால் தர்மஞானம் கிடைக்கிறது. துர்புத்தி விலகுகிறது. ஸமீசீன ஞானம் கிடைக்கிறது. மோட்சமும் கிடைக்கிறது.

எரடொந்து காய நோடு:
ஸ்வரூப, லிங்க, அனிருத்த தேகங்களில், ஸ்ரவண, மனன, நிதித்யாஸனங்களுடன், இருக்கும் பகவந்தனின் செயல்களை சிந்தித்து அறிய வேண்டும்.

ஜீவர்களின் ஸ்தூல தேகம் என்னும் விஸ்தார பிரதேசத்தில் இருக்கும் லிங்க சரீரத்திற்கு அங்கு இருக்கும் ஸ்ரீஹரியே கொம்பு. லட்சுமிதேவியே கயிறு. அதில் கட்டியிருக்கும் கன்றுக்குட்டியே வாயுதேவர்.

எரடொந்து கர்ம களியோ:
ஸஞ்சித, ஆகாமி, ப்ராரப்த கர்மங்கள். சஞ்சித ஆகாமிகளின் கர்மங்கள் அனைத்தும் ஸ்ரீஹரியை ஜெபித்தால் இல்லாததாக ஆகிறது. இதயத்தில் புருஷோத்தமன் மின்னலைப் போல ஒளிர்கிறான். பகவந்தனின் சாட்சாத்காரம் கிடைத்தால் ஜீவர்களின் கர்மங்கள் அனைத்தும் பஸ்மம் ஆகிறது. அடுத்து செய்யும் கர்மங்களின் பாவம் சேர்வதில்லை. ப்ராரப்தத்தை அனுபவிக்கவே வேண்டும். இதிலும் உபதர்மம் இருக்கிறது. உபதர்ம என்றால், துக்கத்தின் தீவிரத்தை குறைப்பது.

எரடொந்தக்ஷரகள:
ஓம்காரமே அனைத்து சாஸ்திரங்களுக்கும் பீஜாக்ஷரம் ஆகும். ஓம்காரத்தில் அகார, உகார, மகாரங்கள் இருக்கின்றன. இவற்றை வியாஹ்ருதி விவரிக்கிறது. வியாஹ்ருதியை காயத்ரி விவரிக்கிறது. காயத்ரியின் விவரத்திற்கு புருஷ சூக்தம். இதன் வியாக்யானமே அனைத்து வேதங்கள் ஆகும். இதனை அறிந்து ஸ்ரீஹரியின் சர்வஷப்த வாச்யத்வத்தை அறிய வேண்டும்.

எரடொந்துஸாரி நெனெது:
ப்ராத:கால, மத்யான்ன, சாயான்னங்களில் ஸ்ரீஹரியை சந்த்யாவந்தனையின் மூலம் வணங்க வேண்டும். வாழ்க்கையில் ஜீவனுக்கு இருக்கும் 116 ஆண்டுகளில் முதல் பாகம் ப்ராத:ஸவனம், இரண்டாம் பாகம் மாத்யந்தின ஸவனம், மூன்றாம்

பாகம் ஸாயம் ஸவனம் ஆகும். இந்த மூன்று ஸவனங்களில், வஸு, ருத்ர, ஆதித்ய நியாமக பிரத்யும்ன, ஸங்கர்ஷண வாசுதேவ என்னும் ரூபங்களை தியானித்திருக்க வேண்டும்.

எரடொந்து ஸ்தானஸேரு:

பகவந்தனின் ஸ்தானமான ஷ்வேதத்வீப, அனந்தாஸன, வைகுண்ட என்னும் லட்சம்யாத்மகமான முக்தி ஸ்தானங்களில் சேர்ந்து சஞ்சரிப்பாயாக. அந்த சுத்த ஸத்வாத்மக ஸ்தானங்களில் ஸத்வ, ரஜஸ், தாமஸ என்னும் குணங்கள் இருப்பதில்லை. இங்கு சச்சிதானந்த ஸ்வரூபனான பகவந்தன் இருக்கிறான்.

எரடொந்து ரூப பஜிஸி:

பகவந்தன் ஜீவர்களில் பற்பல ரூபங்களில் இருந்து காக்கிறான். குதிரை வாலின் ஒரு முடியின் நுனிப் பாகத்தை நூறு பாகமாகப் பிரித்து, அதிலிருந்து ஒரு பாகத்தை மறுபடி நூறு பாகமாக ஆக்கினால், அதன் ஒரு பாகத்தின் அளவே ஜீவனின் அளவாகும்.

அஷ்வவாலாக்ரமாதாய விபஜ்ய ஷததா ஹி தத் |
புனஸ்ச ஷததாபின்னம் கியன்மானம் பவிஷ்யதி |
தாவத் ப்ரம்மாதி ஜீவானாம் பரிமாணம் ||

இத்தகைய சிறியதான ஜீவனின் கட்டை விரலின் முனை அளவிற்கு இருக்கும் பிம்பமூர்த்தி ஸ்ரீஹரி, அனைவரின் இதய கமலத்தில் இருக்கிறான். இவனை விஷ்வம்பர, ஆத்மா, ப்ராக்ஞ என்கிறார்கள். இவனே அக்ரேசன்.

பிம்ப ஜீவாங்குஷ்ட மாத்ரதி
இம்பு கொண்டிஹ ஸர்வரொளு
ஹ்ருத்கமல மத்ய நிவாஸியெந்தெணிஸி ||

ஜீவனின் அங்குஷ்ட அளவிற்கான ரூபம். ப்ராதேஷ முதலான ரூபங்களை தரித்து, ஜீவனை நியமிக்கிறான். 1. இதயத்தில் வியாபித்திருந்து ஜீவருக்கு ஆதாரஸ்தானமாக இருப்பவனே ப்ராதேஷன். 2. இதய கமலத்தின் மொக்கின் அடியில் இருப்பவன் மூலேஷன். 3. இதய கமலத்தின் முனையில் இருப்பவன் அக்ரேஷன். ஜீவர்கள் நித்ரா காலத்தில் இவனையே

பிரவேசிக்கின்றனர். இவ்வாறு பகவந்தனின் மூன்று ரூபங்களை அறிந்து வணங்க வேண்டும்.

எரடொந்தாதவர்த்தி பொளெவ:
ஸ்தூல தேகத்தில் ஒரு முறை. கனவு நிலையில் ஒரு ரூபம், ஸாதனா மூர்த்தி ஆனபோது பிம்ப அபரோக்ஷத்தில் ஒரு முறை என மூன்று முறை சொல்லப்பட்டிருக்கிறது.

2. மூரொந்து யுகதல்லி மூரொந்து வர்ணத...

மூரொந்து யுகதல்லி:
க்ருத, த்ரேதா, த்வாபர, கலி என்னும் நான்கு யுகங்களில் பகவந்தன் அனேக ரூபங்களை ஏற்றிருக்கிறான். க்ருத யுகத்தில் தூய்மையான வெண்மை ரூபத்தினாலும், த்ரேதா யுகத்தில் ரத்த வண்ணத்தினாலும், த்வாபரத்தில் மஞ்சள் வண்ணத்தினாலும், கலி யுகத்தில் கிருஷ்ண வண்ணத்தினாலும் இருக்கிறான். இதனையே ‘மூரொந்து வர்ணத’ என்கிறார். ஷுக்லோரக்தஸ்ரதா பீத: இதானீம் க்ருஷ்ணதாம் கத: | (பாகவத 10-9-13).

மூரொந்து கடெ பிம்ப:
நிஜபக்தர்களுக்கு வாசுதேவன் முக்தி பிரதன். சங்கர்ஷணன் சம்ஹார காரணன். ப்ரத்யும்னன் ஸ்ருஷ்டி கர்தன். அனிருத்தன் - ஸ்திதி கர்தன். வாயுதேவன், ஜீவர்களின் ஸ்வரூப, லிங்க, அனிருத்த, ஸ்தூல என நான்கு சரீரங்களிலும் இருந்து, நாள் ஒன்றிற்கு 21,600 முறை ஸ்வாச உச்வாஸங்களை செய்கிறான். இவ்வாறு நான்கு சரீரங்களில் 21,600 * 4 = 86,400 முறை ஸ்வாசங்களை செய்யும் வாயுதேவனுக்கும் நியாமகனாக ஸ்ரீஹரி இருக்கிறான். இதனை அறிய வேண்டும்.

மூரொந்து ஆகி பஜிஸி:
முக்தியோக்ய ஜீவர்கள் ஸத், சித், ஆனந்த, ‘மம ஸ்வாமி ஹரி’ என்று உபாசிக்க வேண்டும். ஸாதுகுண பூர்ணன் ஆகையால், ஸத் என்றும்; சின்மயன் என்றும், ஆனந்த பூர்ணன் என்றும், பகவந்தனே எனக்கு ஸ்வாமி என்றும் முக்தி யோக்யர்கள் தியானிக்க வேண்டும்.

மூரொந்து புருஷார்த்த:
தர்ம, அர்த்த, காம, மோட்ச என்னும் நான்கு புருஷார்த்தங்களும் பகவந்தனிடமிருந்தே கிடைக்கின்றன.

மூரொந்த்ஹாதி:
ஸ்ரீஹரியிடம் மோட்சத்தை மட்டுமே வேண்டி, தர்மார்த்த காமங்களை விரும்பாமல், ஸ்ரீஹரியை உபாசித்தால் பகவந்தன் மோட்சத்தை அளிக்கிறான். மோட்சத்தில் ஸாரூப, ஸாலோக்ய, ஸாமீப்ய, ஸாயுஜ்ய என்று நான்கு பிரிவுகள் உள்ளன. ஜீவர்களின் தகுதிக்கேற்ப ஸ்ரீஹரி அவர்களை இந்த மோட்சத்தில் இருக்க வைத்து அருள்கிறான்.

பரமாத்மனின் உறுப்புகளிலிருந்து பிறந்து, அவற்றையே வணங்கிக் கொண்டு, அந்த உறுப்புகளையே (அவற்றின் மகிமைகளையே) உபாசனை செய்து, முக்தியில் அந்தந்த அங்கங்களிலேயே நுழைந்து, பற்பல போகங்களை அனுபவிக்கும் சூர்ய, சந்திராதி தேவதைகள் அடையும் முக்தி 'சாயுஜ்ய' ஆகும்.

இதர முக்திகள், ஸ்ரீஹரி எல்லா இடங்களிலும் இருப்பதால், அனைத்து உலகங்களிலும் இருக்கின்றன. முக்தர்களுக்குக் கிடைக்கும் ஸ்தானங்கள், அவர்களது ஞானாதி தகுதிகளின்படி, ஸ்ரீஹரியின் த்ரிதாமங்களுக்கு அருகிலும் இருக்கின்றன.

சார்ஷ்டி என்றால் சரிசமமான இடம் மற்றும் அதிகாரம் என்று பொருள். இதையே சந்தத்துக்காக சாரிஷ்டி என்றிருக்கிறார். இது சாயுஜ்ய முக்தியிலிருந்து சற்று வேறுபட்டதாக இருக்கிறது. சூர்யாதி முக்த தேவதைகள், கண் போன்ற ஸ்ரீஹரியின் அங்கங்களில் நுழைந்து, தத்தம் போகங்களை அங்கே அனுபவிப்பதைப் போல, பிரம்மனின் போகம் இல்லை. பிரம்மன் மட்டும் சர்வாங்க சாயுஜ்யத்தை அனுபவிப்பவர். அதுவே சார்ஷ்டி ஆகும்.

பிரம்மனைத் தவிர இதர முக்தர்களுக்கு சாலோக்யாதி நான்கு (ஈரெரடு) வித முக்திகளும் (அவரவர் தகுதிக்கேற்ப) கிடைக்கின்றன.

சார்ஷ்டி என்னும் சொல், சாயுஜ்ய என்னும் அர்த்தத்திலும் பயன்படுத்தப்படுகிறது. சர்வாங்க சாயுஜ்யத்தை சார்ஷ்டி என்று சொல்லி, முக்திகள் இவ்வளவு விதங்கள் என்பதை அறிய வேண்டும்.

மூரொந்து மொகனய்ய விஜயவிட்டலரேய:

சூக்ஷ்ம ஸ்ருஷ்டியில் ஒரு முறையும், வாசுதேவன்-மாயாதேவியில் ஒரு முறையும் ஸ்ரீஹரி பிரம்மதேவனை படைக்கிறான். இவ்வாறு விஜயவிட்டலன் நான்முகனின் தந்தை எனப்படுகிறான்.

மூரொந்து பாயதல்லி:

ஞானி, கர்மக்ஷய செய்து கொண்டு, உத்க்ராந்தி அடைகிறான். தேவதைகள் மானவராக அவதரித்தபோது பிரம்மநாடி மூலமாக மூலரூபத்தை அடைவது உத்க்ராந்தி எனப்படுகிறது. மனுஷ்யோத்தமர்கள் விஷ்ணுவை அடைவது உத்க்ராந்தி. பக்தர்கள் தன்னை அடைவதற்கு தானே வழியாக இருக்கிறான். இவ்வாறு கர்மக்ஷய செய்துகொண்டு, நாடியின் மூலம் உத்க்ராந்தராகி, ஸ்ரீஹரி சேர்ந்து சுகம் அடைகின்றனர்.

மூரொந்து பிரலயனாதெ:

யுக பிரளய, மன்வந்தர பிரளய, பிரம்மனின் தின பிரளய, பிரம்மனின் ஆயுள் பிரளய என்று பிரளயம் நான்கு விதம். இத்தகைய பிரளயங்களை உருவாக்குவது ஸ்ரீஹரியே.

3. நால்கொந்து பேதவ ஆவல்லி நிஜவெந்து..

ஜீவேஷ்வர பிதா சைவ ஜடேஷ்வர பிதா ததா ।
ஜீவபேதோ மிதஷ்யைவ ஜடஜிவபிதா ததா ।
மிதஷ்ச ஜடபேதோ ய: ப்ரபஞ்சோ பேத பஞ்சக: ।
ஸோsயம் ஸத்ய: ஹ்யனாதிஷ்ச...

பஞ்சபேதங்களை சர்வத்ர ஸத்ய என்று அறிய வேண்டும். இவை ஏன் அனாதி நித்யம்? அனாதியும் நித்யமுமான ஸ்ரீஹரியினால் காக்கப்படுகின்றன ஆகவே இவையும் அனாதி நித்யம் ஆகின்றன. இந்த பேதங்களை சிலர் மித்யை என்று கூறினால், ராமானுஜர்

சத்யம் என்கிறார். இவ்வாறு சிலர் பேதங்களை சொல்லலாம். ஆனால், தாரதம்யத்தை ஸ்ரீமதாசார்யரே விளக்கிக் கொடுத்தவர் எனவேண்டும்.

நால்கொந்தாத்மக வாத பொம்மண்டதி:
புருஷ, அவ்யக்த, மஹத்தத்வ, அஹங்கார, மனஸ் என்று ஐந்து பஞ்சாத்மகங்கள், ஐந்து ஞானேந்திரியங்கள், ஐந்து கர்மேந்திரியங்கள், ஐந்து தன்மாத்ரங்கள், ஐந்து பூதங்கள் என 5 * 5 = 25, இவ்வாறு, பஞ்ச பஞ்சாத்மக பிரபஞ்சத்தில்,

நால்கொந்து பகெயவரு:
தேவதைகள், ரிஷிகள், பித்ருகள், சக்ரவர்த்திகள், மனுஷ்யோத்தமர்கள் என ஐந்து வித முக்தி யோக்யர்கள் இருக்கின்றனர். இவர்களை அறிய வேண்டும்.

நால்கொந்து ஸம்பதவி இப்பதெந்து:
ஸாயுஜ்ய, ஸாலோக்ய, ஸாமீப்ய, ஸாரூப்ய, ஸார்ஷ்டி என்னும் ஐந்து முக்தி பாகங்கள் இருக்கின்றன. ஹரியின் அங்கங்களை அடைவதே தேவதைகளுக்கு சாயுஜ்ய முக்தி ஆகும். இதனையே ஏகத்வ என்று பாகவதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

நால்கொந்து யக்ஞவ:
தேவ, பித்ரு, ரிஷி, பூத, அதிதி யக்ஞங்கள். மனிதன், தான் பிறக்கும்போதே தேவ, பித்ரு, ரிஷி, பூத, அதிதி ருணங்களை தாங்கிக் கொண்டே பிறக்கிறான். பிரம்ம யக்ஞ, அத்யாபன, வைஷ்வதேவ, பித்ரு தர்ப்பண, பலிஹரணங்களை செய்து இந்த பஞ்ச ருணங்களை போக்கிக் கொள்ள வேண்டும்.

நால்கொந்து இந்திரியவ:
ஸ்ரவண, நயன, க்ராணேந்திரிய, த்வக் இந்திரிய, ரஸ இந்திரிய ஆகியவற்றின் நியாமகரான தத்வாபிமானிகளில் இருந்து, அவர்களை நடத்துபவன் ஸ்ரீஹரி. ஸ்ரீஹரியின் வாக் இந்திரியத்திலிருந்து தராதேவி மற்றும் அக்னி தேவர் பிறந்தனர். பிராணேந்திரியத்திலிருந்து கணபதி, வாயுதேவனும்; கண்ணிலிருந்து சூர்யன் மற்றும் த்யு லோக அபிமானிகளும்; காதிலிருந்து திக் அபிமானி சந்திரனும் பிறந்தனர். அக்னி, வாயு, சூர்ய, சந்திர, வருணர்

ஆகியோர் ஜீவர்களின் வாக், க்ராண, கண், காது, மனஸ் ஆகியவற்றில் இருந்து வழிநடத்துகின்றனர். இவர்களுக்கு ஸ்ரீஹரியே ப்ரேரகன்.

நால்கொந்த்ஹாதி:
ஷப்த, ஸ்பர்ஷ, ரூப, ரஸ, கந்த என்னும் தன்மாத்ரங்களை; அதில் நியாமக பகவந்தனின் ரூபங்களை அறிந்து உபாசிக்க வேண்டும்.

நால்கொந்து துபேதவ:
முக்தியிலும் பஞ்ச பேதங்கள் இருக்கின்றன என்பதை அறிய வேண்டும்.

நால்கொந்தவர பால விஜயவிட்டல :
பஞ்சபாண்டவர்களை காப்பவனான ஸ்ரீவிஜயவிட்டலன்.

நால்கொந்து பிடிஸுவ:
பஞ்சபூதங்களின் பந்தனங்களை விடுவிப்பவன்.

நால்கொந்து கொடுவனு:
அவரவர்களின் தகுதிக்கேற்ப பஞ்சவித முக்தியில் ஒன்றினைக் கொடுப்பவன்.

<u>4. ஐதொந்து ரிபுகளுபத்ரவ முக்கிஸு...</u>

காம, க்ரோத, லோப, மோஹ, மத, மாத்ஸர்ய என்று நம்மில் இருக்கும் எதிரிகளை ஸ்ரீஹரி இல்லாததாக ஆக்குகிறான்.

ஐதொந்து கர்மவ மாடுதலிரு:
பிராமணர்களுக்கு ஷட்கர்மங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. யாகம் செய்வது, யாகம் செய்விப்பது, அத்யயனம் செய்வது, அத்யயனம் செய்விப்பது, தானம் கொடுப்பது, தானம் பெறுவது என இந்த ஐந்து கர்மங்களில் ஈடுபட்டிருக்க வேண்டும்.

ஐதொந்து மதகெ:
* ஷட்தர்ஷனங்கள் என பெயர் பெற்ற, சார்வக, ஜைன, பௌத்த, ஸாங்க்ய, வைஷேஷிக, சைவ என்னும் ஆறு தர்ஷன ஸ்ரீதரீய வியாக்யானத்தில் ஐக்யத்தையே சாயுஜ்ய என்கிறார்கள்.

* ஸாலோக்ய என்றால் முக்தன் மற்றும் ஹரி இருவரும் உலகத்தில் இருப்பது.
* ஸ்ரீவத்ஸ, கௌஸ்துப ஆகியவற்றைத் தவிர, கர சரணங்களில் சங்கு, சக்ராதிகளை தரித்திருக்கும் ஜீவன் - ஸாரூப்ய.
* ஸார்ஷ்டி என்பது ஸாயுஜ்யத்தின் ஒரு பிரிவே ஆகும்.
* பிரம்மனைப் போல செல்வங்கள், பிரம்மனைப் போல நான்கு தோள்கள் ஆகியவை ஸாத்ருஷ்ய என்றும் சொல்லப்படுகிறது.
* ஸாமீப்ய என்றால் மிகவும் அருகில் இருப்பவன் என்று பொருள்.

நால்கொந்து கோஷதலி:
அன்னமய, ப்ராணமய, மனோமய, விக்ஞானமய, ஆனந்தமய என்னும் ஐந்து கோஷங்களிலும் ஹரி அனிருத்தாதி ரூபத்தினால் இருக்கிறான். அன்னமய என்றால், ப்ரசுரான்ன உள்ளவன் என்று அர்த்தம். ஆனந்தமய என்றாலும் ப்ரசுரான்ன உள்ளவன் என்றே அர்த்தம்.

நால்கொந்து பர்வதலி:
பகவத் த்வேஷங்களை செய்யும் தைத்யர்களுக்கு உண்டாகும் நரகம் ஐந்து இருக்கிறது. இவற்றிற்கு காரணங்களும் ஐந்து. தமஸ் (அவித்யை), மோஹ (தவறான ஞானம்), மஹமோஹ (தவறான ஞானத்தில் ஆளுமை), தமிஸ்ர (கோபம்), அந்ததாமிஸ்ர (மரணம்). -- பாகவதம் 3-13-2 - இவற்றை அறிந்து கொள்ள வேண்டும்.

பகவந்தனின் இச்சையும்கூட அவித்யா, மஹாமாய, நியதி, தோஹினி, ப்ரக்ருதி என்று அழைக்கப்படுகிறது. இவ்வாறு அவித்யையின் பஞ்ச வர்க்கத்தை அறிய வேண்டும்.

நால்கொந்து ஊர்த்வ புண்ட்ர:
பிராமணன் ஆனவன், தினமும் ஐந்து வித ஊர்த்வ புண்ட்ரங்களை தரிக்க வேண்டும். ஸ்னானத்திற்குப் பிறகு, தண்ணீரால் த்வாதஷ புண்ட்ரங்களையும், பிறகு, மிருத்திகை, கோபிசந்தனம், சந்தனம் மற்றும் அங்கார அக்ஷதைகளால் தரிக்க வேண்டும். இதைப் போலவே, சங்கு, சக்ர, கதா, பத்ம, நாராயண என்னும் பஞ்ச முத்திரைகளையும் தரிக்க வேண்டும். இது புற தீக்ஷை. மதகளிகெ

குடாரதந்திருவ மத்வமதவெந்து திளி. பவனமதானுக தானஹுதெந்தவனியொளகெ ||

ஐதொந்து ருசி:
அறுசுவைகளின் தேவதைகளை பார்ப்போம். உப்பிற்கு - நிரருதி - ஜனார்த்தனன். புளி - கௌரி - தாமோதரன், அனிருத்தன். இவ்வாறு அறிந்து அந்தந்த சுவைகளை உண்ணும்போது, அதன் உண்மையான சுவை நமக்கு சேர்கிறது. இந்த அறுசுவைகளில் ஸ்ரீஹரி, ஸ்ரீபூதுர்கா உடன் ஸுருசி, ருசிர, ஸுகந்த, ஷுசி என்று 12 ரூபங்களால் நிலைத்திருக்கிறான். ஒவ்வொன்றிலும் இரு ரூபங்களாக ஆறு சுவைகளில் 12 ரூபங்கள்.

ஐதொந்து ரதிகர:
மகாபாரதத்தில் துர்யோதனனின் பக்கத்தில் இருந்து, போரிட்டனர், பீஷ்மர், துரோணர், கர்ண, அஷ்வத்தாம, க்ருபர், ஷல்ய ஆகியோர். இவர்கள் தேவதா அம்சம் ஆனாலும், ஹரிவாயுகளின் எதிராக போரிட்டு இறந்தனர்.

ஐதொந்து ஸ்தளதல்லி திளியோ:
தேகத்தில் ஆறு இடங்களில் ஆறு தாமரைகள் உள்ளன. வயிற்றில் 4 தள, நாபியில் 6 தாள, இதயத்தி 8 தள, கழுத்தில் 2 தள, நெற்றியில் 4 தள, சஹஸ்ராரத்தில் 12 தள தாமரைகளில் பகவந்தன் இருந்து செயல்களை செய்விக்கிறான்.

<u>5. ஆரொந்து ஜடவுள்ள க்ராம நின்னதல்ல...</u>

இந்த சரீரம், த்வக், சர்ம, மாம்ஸ, ரக்த, மஜ்ஜா, அஸ்தி என்று ஏழு தாதுகளால் நிரம்பியிருக்கின்றன. இந்த சரீரம் அழியக்கூடியதாகும். இந்த ஜட தேகம், ஹரி அருளால் வந்திருக்கிறது. இதனை அவனின் பூஜைக்காகவே பயன்படுத்த வேண்டும்.

<u>6. ஆரொந்து அம்புதியஷ்டு கர்மவெ:</u>

கர்மங்கள் ஏராளமானவை. அந்த கர்மங்கள் அனைத்தையும் அனுபவிப்பது என்பது முடியாத செயலாகும். ஸ்ரீஹரியின்

அருளாலேயே அவற்றை செய்ய முடியும். உப்பு, கரும்பு, சுரா, நெய், தயிர், பால், தண்ணீர் ஆகிய ஏழு கடல்கள் அளவிற்கு கர்மங்கள் இருக்கின்றன. ஹரி கருணையாலேயே இவை அழியக்கூடியவை.

ஆரொந்தவர:
கஷ்யப, அத்ரி, பாரத்வாஜ, விஷ்வாமித்ர, கௌதம, ஜமதக்னி, வசிஷ்ட என்னும் சப்த ரிஷிகளை அந்தந்த பெயர்களால் அவர்களில் நியாமகனான இருக்கும் ஸ்ரீஹரியின் செயல்களைப் பார்த்து அறிந்து கொள்.

ஆரொந்து த்வீபனாளிதவரெல்ல:
சப்த த்வீபங்களான ஜம்பூ, ப்லக்ஷ, குஷ, க்ரௌஞ்ச, ஷாக, ஷால்மலி, புஷ்கர ஆகிய த்வீபங்களை ஆண்டவர்களை அருளிய உதாரணங்கள் இருக்கின்றன. கய, இத்மஜன்ஹூ, ஹிரண்யலோம, ப்ருதப்ருஷ்ட, மேதாதிதி, யக்ஞுபாஹூ ஆகிய அரசர்களை அருளி காப்பாற்றிய ஸ்ரீஹரி, சர்வசமர்த்தன் என்று அறிய வேண்டும்.

ஆரொந்து ஹயன காலக்கெ எத்து ஸ்னானாதி:
பகவந்தனின் அருள் இருந்தால் கர்மங்கள் அழிகின்றன. அவரவர்களுக்கு ஏற்ற கர்மானுஷ்டானங்களை செய்ய வேண்டும். அதனை இங்கு சொல்கிறோம். ஹய என்றால் குதிரை. ஆரொந்து - ஏழு குதிரைகளை ரதத்தில் கட்டியிருக்கும் சூரியன் வரும் முன்னர், அருணோதயத்தில் எழுந்து ஸ்னான, சந்தியாவந்தன, தேவபூஜை ஆகிய நித்ய நைமித்திக கர்மங்களை செய்தவாறு, அவற்றை ஸ்ரீஹரிக்கு சமர்ப்பிக்க வேண்டும். இந்த கர்மங்களை, நான், எனது என்னும் சிந்தனையுடன் செய்தால், அந்த ஸ்னான, ஜப, ஆகியவற்றின் பலன்களை, தானவர்கள் இழுத்துச் சென்று விடுவர். ஸ்ரீஹரி அதை ஏற்றுக் கொள்வதில்லை.

ஓம் விஹிதத்வாச்ச ஆஸ்ரமகர்மாபி ஓம் || சூத்ரம் 3-4-32. அனைவரும் தத்தம் வர்ணாசிரம கர்மானுஷ்டானங்களை பின்பற்றியே ஆகவேண்டும்.

ஆரொந்து ஜிஹ்வெகெ உணிஸி கர்மஞான:
காளி, கராளி, மனோஜவா, ஸுலோஹிதா, ஸுதூமவர்ண, ஸ்புலிங்கினி, விஷ்வருசி என ஏழு நாக்குகளைக் கொண்டவன்

அக்னி. இவை முறையே, ஈசான்ய, பூர்வ, ஆக்னேய, நைருத்ய, பஷ்சிம, வாயவ்ய, தக்ஷிண, உத்தர திசைகளில் இருக்கின்றன. இவற்றின் வண்ணங்களும்கூட தங்கம், வைடூர்யம், கருப்பு என பல வண்ணங்களைக் கொண்டிருக்கின்றன. இவை: ஔபாஸன, வைஷ்வதேவ, ஸ்தாலிபாக, அஷ்டக, மாஸிக, ஈஷான பலி, ஸர்வ பலிகளின் ஆஹுதிகளை ஏற்றுக் கொள்கின்றன. அக்னி, இவற்றை ஏற்றுக் கொள்வதைப் போல தெரிந்தாலும், சர்வ யக்ஞபுக் ஸ்ரீஹரியே. அவனே இவற்றை ஏற்றுக் கொள்கிறான். அவனுக்கே அனைத்தையும் அர்ப்பிக்க வேண்டும்.

ஆரொந்து கோத்ரவ உத்தார மாடுத:

நித்ய சிரார்த்தாதிகள், வைஷ்வதேவாதிகளை செய்து வந்தால், அவனின் ஏழு கோத்திரங்களையும் ஸ்ரீஹரி மேம்படுத்துகிறான். தந்தை, தாய், மனைவி, மகள், அக்கா, தங்கை, அத்தை என ஏழு குலங்கள் மேம்படுகின்றன.

ஆரொந்து அங்கவுள்ள விஜயவிட்டல ஹரியு:

விஷ்வ நாமக ஸ்ரீஹரிக்கு 19 முகங்கள். ஏழு அங்கங்கள் இருக்கின்றன. ஜாக்ரத நிலையின் ப்ரேரகனான 'விஷ்வ' என்னும் விஷ்ணுவின் ரூபத்தை கணபதி உபாசனை செய்கிறார். 19 முகம் உள்ள விஷ்வ ரூபத்தின் நடு முகம் யானையைப் போல இருக்கிறது. இவனுக்கு நான்கு தோள்கள், இரு பாதங்கள், யானையின் முகம் இவ்வாறு ஏழு அங்கங்கள். இவ்வாறு ஏழு அங்கங்களைக் கொண்ட விஷ்வ நாமகன், ஸ்தூலபுக் எனப்படுகிறான். ஜாக்ரத நிலையைக் கொடுத்த இந்த விஷ்வனை மறக்கக்கூடாது.

ஆரொந்து வாரதொளது நிமிஷதாஸனாகோ:

வாரத்தில் ஏழு நாட்கள். இந்த அனைத்து நாட்களிலும் நிரந்தரமாக பகவந்தனை உபாசிக்க வேண்டும். ஒரு நிமிடமும் வீணாக்காமல் ஸ்ரீஹரியை வணங்கினால், முக்திக்கான வழி கிடைக்கிறது. 'நின்ன நெனெதவ ஜீவன்முக்தனல்லவெ?' -- புரந்தரதாசர். இவ்வாறு நிரந்தரமாக, வாரம், மாதம், ஆண்டுகளில் என வாழும் வரைக்கும் ஸ்ரீஹரியை நிரந்தரமாக உபாசனை செய்தால், இந்த மானவ

ஜென்மம் அர்த்தமுள்ளதாக ஆகிறது என்னும் உபதேசத்தினை செய்திருக்கிறார் விஜயதாசர்.

6. ஏளொந்து பாலகர திளி...

இந்திராதி எட்டு திக் பாலகர்களை அந்தந்த திசைகளில் நிறுத்தி, அவர்களை அந்த திசைகளுக்கு கண்டாதிபதியாக ஆக்கி, தான் மட்டும் அகண்டாதிபதியாக வீற்றிருக்கும் பகவந்தனை என்றும் மறக்கக்கூடாது.

ஏளொந்து தளதல்லி பகவத்ரூப:
நம் இதயத்தில் அஷ்ட தள கமலம் இருக்கிறது. இதன் நடுவில் ஹம்ஸ நாமக ஸ்ரீஹரி இருக்கிறார். இவனை அஷ்டதிக்பாலகரும் வணங்குகின்றனர். இந்திர - உபேந்திரன்; அக்னி - பரசுராம; யம - ராம; நிர்ருதி - ஜனார்த்தன; வருண - மத்ஸ்ய; ப்ரவஹ வாயு - ஹயக்ரீவ; குபேர - கபில; ருத்ர - ந்ருஸிம்ஹ. இவ்வாறு எட்டு ரூபங்களால் ஜீவர்களின் பற்பல செயல்களை செய்விக்கிறான் ஸ்ரீஹரி.

ஏளொந்து மூர்த்தி:
ஸ்வயம்வ்யக்தங்களான எட்டு மூர்த்திகள். ஸ்ரீரங்கநாத, ஸ்ரீமுஷ்ண வராக, வெங்கடேச, சாலகிராம, வியாஸமுஷ்டி, பதரி நாராயண, தோத்தாத்ரி ஸ்ரீனிவாஸ - இவை ஸ்வயம் வியக்தமானவை. ஆவாகனம் முதலான உபசாரங்கள் இல்லையென்றாலும், பூஜை செய்யலாம். இங்கு தரப்படும் நைவேத்யம் ஏற்றுக் கொள்ளத் தக்கதே ஆகும்.

ஏளொந்து தந்தி:
ஐராவத: புண்டரிகோ வாமனோ குமுதோ அஞ்சன: |
புஷ்பதந்த: ஸார்வபௌம: ஸுப்ரதீகஸ்ச திக்கஜா: ||

இந்த ஸ்லோகத்தின்படி, எட்டு திசைகளில் நிற்கும் யானைகள், உலகங்களைக் காக்கும் கர்மஜ தேவதைகளே ஆகியிருக்கின்றன. இவை மட்டுமல்லாமல், சூர்ய, சுக்ர, மங்கள, ராகு, சனி, சந்திர, புத, குரு இவர்களும்கூட அஷ்டதிக் பாலகர்களே. இவர்களை அங்கங்கு

நியமித்து அவர்கள் மூலமாக பூ-பார ஹரண செயல்களை செய்திருக்கும் ஸ்ரீஹரியை மறப்பது சரியல்ல.

ஏளொந்து பூதிவுள்ள விஜயவிட்டலரேயன மஹிமெ திளி :
பத்மநிதி, மஹாபத்ம, மகர நிதி, கூர்ம நிதி, ஔதக, நீல, முகுந்த, ஷங்க - இவை எட்டும் நிதிகள். இந்த நிதிகள் அனைத்திற்கும் மகாலட்சுமிதேவி அபிமானி ஆகியிருக்கிறாள். இவளுக்கு பகவந்தன் பதியாக இருக்கிறான்.

<u>7. எண்டொந்து க்ரஹகள திளியபேகு....</u>

சூர்ய, சந்திர, அங்காரக, புத, குரு, சுக்ர, சனி, ராகு, கேது ஆகியவை நவகிரகங்கள். சூரியன் ஒளி வீசுவது ஸ்ரீஹரியினால். சந்திரன்கூட ஸ்ரீஹரியின் ஒளியினாலேயே ஒளிர்கிறான். யஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி || இந்த அனைத்து நவக்கிரகங்களுக்கும் அருள்பவனே சிம்ஷுமார ஸ்ரீஹரி. தத்வபாஸன, ஒளி கொடுப்பது, மங்களத்தைக் கொடுப்பது, ஞான, குருத்வ, கவித்வ, சுகம் கொடுப்பது, புகழ் கொடுப்பது, ரோக பரிஹார இவை அனைத்தும் ஸ்ரீஹரியினாலேயே நடக்கிறது.

க: பண்டித: ததபரம் ஸமீயாத் | எந்த பண்டிதன் ஸ்ரீஹரியைத் தவிர வேறு எந்த தேவதைகளையும் வணங்குகிறான்? (பாகவதம்).

எண்டொந்து ஸ்ருஷ்டி:
நவவித ஸ்ருஷ்டியை ஹரியே செய்கிறான். ப்ராக்ருத, வைக்ருத என்று ஸ்ருஷ்டி இரு விதம். பிரம்மாண்டத்திற்கு வெளியே நடக்கும் மஹத் தத்வாதி ஸ்ருஷ்டி - ப்ராக்ருத எனப்படுகிறது. பிரம்மாண்டத்திற்கு உள்ளே நடக்கும் ஸ்ருஷ்டி - வைக்ருத எனப்படுகிறது. ப்ராக்ருத ஸ்ருஷ்டி ஆறு விதம். வைக்ருத ஸ்ருஷ்டி மூன்று விதம். மொத்தம் 9 விதங்கள்.

எண்டொந்து ப்ரஜேஷ்வரரு:
நவ பிரஜாபதிகளான மரீசி, அத்ரி, அங்கீரஸ, புலஸ்த்ய, புலஹ, க்ரது, வசிஷ்ட, தக்ஷ, ருஜின ஆகியோரில் நியாமகனான பகவந்தன் ஸ்ருஷ்டி செய்கிறான்.

எண்டொந்து கோடி ரோமகளல்லி:
தேகத்தில் இருக்கும் ரோமங்கள் நவகோடி. இவற்றில் இருந்து, ஸ்ரீஹரி பற்பல விதமான செயல்களை செய்விக்கிறான்.

எண்டொந்து பக்தி - நவவித பக்தி:
ஸ்ரவணம், கீர்த்தனம், ஸ்மரணம், பாத ஸேவனம். அர்ச்சனம், வந்தனம், தாஸ்யம், ஸக்யம், ஆத்ம நிவேதனம். என்னும் ஒன்பது வித பக்திகளை ஹரியிடம் செய்ய வேண்டும். இதனுடன் நவவித த்வேஷங்களையும் விடவேண்டும்.

எண்டொந்து கடெயல்லிருவ விஜயவிட்டலன -
எண்டொந்து மூர்த்திகள திளியபேகு :
ஜம்பூ த்வீபத்தில் இருக்கும் ஒன்பது கண்டங்கள் இவை. இலாவ்ருத, பத்ராஷ்வ, ஹரிவர்ஷ, கேதுமாலா, ரம்யக, ஹிரண்மய, குருவர்ஷ, கிம்புருஷ, பாரதவர்ஷ. இவற்றில் அதிபதியாக முறையே, ருத்ர, பத்ரஸ்ரவ, பிரகலாத, காம, வைவஸ்வதமனு, அர்யம, பூதேவி, ஹனுமந்த, நாரதர் ஆகியோர் இருக்கின்றனர். இவர்களுக்கு நியாமகனாக முறையே சங்கர்ஷண, ஹயக்ரீவ, ந்ருஸிம்ஹ, ப்ரத்யும்ன, மத்ஸ்ய, கூர்ம, வராஹ, ஸ்ரீராம, நாராயண என ஸ்ரீஹரி தனது ஒன்பது ரூபங்களால் அருளியவாறு இருக்கிறான்.

8. கொடப்யாட கொடப்யாட விஜயவிட்டலன...

ஸ்ரீஹரி வாயுவின் பக்தர்களுக்கு எதைக் கொடுத்தாலும் அது புண்ய காரியம் எனப்படுகிறது. ஹரிவாயு த்வேஷிகளுக்கு ஒரு கைப்பிடி அன்னம், ஒரு துளி தண்ணீர்கூட கொடுக்கக்கூடாது.

நாவைஷ்ணவாய தாதவ்யம் நோதபிந்தும் ந தண்டுலம் ||
ஸ்ரீஹரியின் த்வேஷிகளிடமிருந்து எந்த பொருள் வந்தாலும் அதனை ஏற்றுக் கொள்ளக்கூடாது.

இவ்வாறு இங்கு கொடுக்கப்பட்டிருக்கும் உபதேச மார்க்கத்தை பின்பற்றினால், அபரோக்ஷ ஞானம் வந்து முக்தன் ஆகிறான்.

***

4. ஹரிதாசர லட்சண சுளாதி

த்ருவ தாள

ஹரிதா3ஸர லட்சண இரபே3கு ஈபரி
க3ருவ கோப மத3 மத்ஸராதி3 பி3ட3பே3கு
மருதமதகெ எல்லி ஸரிகா3ணெனுதலி
த4ரியொளு கூகி3 டங்கு3ரவ ஹொயலிபே3கு
எரடா3ருபுண்ட்3ரவ விரசிஸி பஞ்சமுத்3ரா
த4ராகி3 தப்தாங்கித த4ரிஸபே3கு பு4ஜத3ல்லி
ஷிரி பொ3ம்ம ஹராத்3யரிகெ3 தரதம்ய பா4வதி3ந்த3
எரகி3 என்னொளகி3த்3து3 பொரியந்தா3ட3லிபே3கு
கரண நயன ஸ்ரவண சரண நாஸ வத3ன
பரிபரி அங்க3க3ளு ஹரிவித்தவென்னபே3கு
கு3ருஹிரியரிகெ3 ஆத3ரபூர்வகதி3ந்த3
கரவ முகி3து3 நமஸ்கரிஸி நுதிஸபே3கு
நெரெஹொரெயவரிகெ3 நிருத இத்3த3ரு பே3
ஸர கொ3ளிஸதெ3 ஸஞ்சரிஸுத்தலிரபே3கு
ஹரண ஹரியாதீ4ன நெரெத3 ஸதி ஸுதரு
நிருத ஹரிகெ3 தா3ஸரு எந்து3 குணிஸபே3கு
பரமப4குதி ஞான விரகுதி மார்க்க3வு
தொ3ரகுவத3க்கெ ஸஜ்ஜனர ஸங்க3வாக3பே3கு
ஹரிவாஸர ஹரிசரிதெ ஹரிஸ்ரவண ஹரிபூஜெ
ஹரிஸ்மரணெ அந்தரஷுசி இரலி பே3கு
ஹரிபரதே3வதி விஜயவிட்டலக3தீ
ஸுரராத்3யரிகெ3ந்து3 உரவணிஸி நுடி3பே3கு ||1

மட்ட தாள

பரத4ன பரஸதி பரநிந்த்3யத3வர
ஸரஸத3ல்லிரதெ3 சரிஸபே3கு தூ3ர
நரரு பை3த3ரெ ஆத3ரவெந்து3 திளிது3
ஹருஷப3ட3லிபே3கு, ஸுரதரு தொ3ரதந்தெ
கரது3 மன்னிஸித3ரு இரளு ஹக3லு பாலு
க3ரெவ ஸுரதே4னு ப3ரடா3கி3னிந்த3

பரியந்தெ3னபே3கு, நெரெது3 ஸந்த3ணியொளு
சரிஸபா3ரது3 போகி3, பரி3தெ3 குளிது ஹாள
ஹரடெய பேளத3லெ, மரியதெ3 ஸொல்லு
இரபே3கு நன்னொளகெ3 பரமதத்வத3 திளிது3
மரளரிக3ருஹத3லெ ஸுரியபே3கு ஸுக2வ
மரளெ மரளெ நெனெது3
பரமகு3ப்தனாத3 விஜயவிட்டலரேயன
நெரெ நம்ப3லிபே3கு கு1ருஹ காணுவந்தெ ||2

த்ரிவிடி தாள

லேஸாத3ரு ஹரிய காருண்யவெனபே3கு
லேஸாக3தெ3 ப3லுமோஸத3ல்லி
க்லேஷ ப3ந்த3ட3ரலு ஏஸு ஜன்மத3 பாப
ராஸியு ப2லிஸிதோ என்ன கர்ம
ஈ ஷரீரகெ ப3ந்து3 ப்ராப்தவாத3த்3து3ரு அனுப4
விஸத3லே பி3ட3து3 ஸித்3த4வெந்து3
லேஷவாத3ரு து3க்க2ஹச்சிகொள்ளதெ3 மஹா
தோ1ஷத3ல்லிரபே3கு நோயத3லெ
ஸ்ரீஷனெ க3தி எந்து3 பே3ஸரத3லெ ப3ந்த3
க்லேஷக3ளுணபே3கு ப3ந்தா3க3லு
தே3ஷ கால கு3ணபரிபூர்ண ஹரி இரெ
கா4ஸி எல்லிதோ3 எந்து3 நலியபே3கு
ஸ்ரீஸதி கால வேத3 ஜீவ ப்ரளயத3ல்லி
நாஷவாக3வு பே4த3 அனலிபே3கு
வ்யாஸவசன மத்4வராயரு மாடி3த3
பா4ஷ்ய ஸம்மததி3ந்த3 நோட3பே3கு
வாஸுதே3வ நம்ம விஜயவிட்டலன்ன
தா3ஸானுதா3ஸர தா3ஸனாக3லி பே3கு ||3

அட்ட தாள

ப3ட3தன ப3ந்த3ரு ஹிக்3கு3தலிரபே3கு
ஜட3னாகி3 பா3ஹிரத3ல்லி தோரலிபே3கு
அடி3க3டி3கெ3 லஜ்ஜெகெ3ட3பே3கு ஸர்வத3

4. ஹரிதாசர லட்சண சுளாதி

ஒட3லிகெ3 சிந்தி1மாட3தெ3 த்3ருட4 இரபே3கு
ஒட3வெ வஸ்த்ர தந்தெ3 தாயி த்ரிலோகத3
ஒடி3ய ஸ்ரீகிருஷ்ணனெந்து3 பி3ட3தெ3 நம்ப3லி பே3கு
யடி3கெ3 பரிமித தா4ன்ய தரலிபே3கு
கொட3பே3கு கொட3பே3கு ஒப்3ப3ரிக3த3ரொளு
கடு3க3லி விஜயவிட்டலரங்க3ன பாத3
பிடி3து3 ப4ஜிஸபே3கு நலினலிதா3டு3த்த ||4

ஆதி தாள

உட்டத3க்கிந்த3 மேலு தொட்டத3க்கிந்த மேலு
இட்டத3க்கிந்த மேலு விட்டலன்ன ஸ்மரணெ மன
முட்டி நமிஸலி பே3கு ப3லுவ ஹிதத3ல்லி
அட்டஹாஸத3லி சேரி சிட்டக்கி கூகி3 தூகு3த
இஷ்ட ஸுக2க்கிந்த மேலு
த3ட்டடி3யிந்த3 திளிது3 நிஷ்டெயிந்த3 இரலு
இஷ்டப்ராபுத அவரிக3ரிஷ்ட2வு பரிஹார
ஹுட்டு ஸாவில்லத3 விஜயவிட்டலன தானு
கொட்டு ஸாகு1வ த3யவிட்டு தா3ஸன மாடி3 ||5

ஜதெ

ஈபரி இத்3த3வங்கெ3 அனந்த1ஜனுமக்கெ
தாபத்ர்யக3ளில்ல விஜயவிட்டல ப3ல்ல ||6

***

1. ஹரிதாசர லட்சண இரபேகு ஈபரி...

ஹரிதாஸனுக்கு இருக்க வேண்டிய லட்சணங்களை இந்த சுளாதியில் ஸ்ரீவிஜயதாசர் தொகுத்திருக்கிறார். ஹரிதாசனுக்கு கர்வ, கோப, மத, மாத்ஸர்ய ஆகியவை இருக்கக்கூடாது. இவற்றை விட்டவனே ஹரிதாசன்.

மருதமதகெ எல்லி ஸரிகாணெனெனுதலி:
வாயுதேவரின் அவதாரமான ஸ்ரீமதாசார்யர் நிறுவிய அனாதி ஸத் வைஷ்ணவ ஸம்பிரதாயமே சிறந்தது. அந்த மதத்திற்கு சமமானது

வேறொன்று இல்லை. அடுத்தும் வரமுடியாது என்று முரசு கொட்டியவாறு அனைத்து இடங்களிலும் சொல்ல வேண்டும். இதுவே அக தீட்சை.

எரடாரு புண்ட்ரவ தரிஸி:

2*6=12 புண்ட்ரங்களை தரிக்க வேண்டும். சங்க, சக்ராதி பஞ்ச முத்திரைகளை தரிக்க வேண்டும். ஷயனி ஏகாதசி ஆகியவற்றில் மற்றும் சிறப்பு வாய்ந்த உற்சவங்களிலும் தப்த முத்ரா தாரணை செய்து கொள்ள வேண்டும். இவற்றை புற தீட்சை எனலாம்.

ஸிரிபொம்ம ஹயாத்யரிகெ தரதமபாவ:

பகவந்தனை திடமான பக்தியுடன் மகிழ்வித்த பிறகு, லட்சுமிதேவி, பிரம்மதேவ, ருத்ராதிகள் ஆகியோரை தாரதம்யத்திற்கேற்ப பக்தி செய்து, இவர்கள் அனைவரும் ஸ்ரீஹரியின் பரிவார தேவதைகள் என்னும் பாவனையுடன் பூஜிக்க வேண்டும். இந்த தத்வாபிமானி தேவதைகளில் நியாமகனாக இருப்பவனை, 'ஸ்ரீஹரியே, எனக்குள் இருந்து என்னை காப்பாற்று' என்று வணங்க வேண்டும்.

கரண நயன ஸ்ரவண... ஹரியித்த வித்த:

இந்த தேகம் தனது செயல்களை செய்வதற்கு, கண், காது, மூக்கு முதலான இந்திரியங்களில் நியாமகர்களாக இருக்கும் தேவதைகளில் இருந்து, அவற்றை சரியாக நடத்துபவன் ஸ்ரீஹரி. இவை அனைத்தும் கருணையுடன் அந்த ஸ்ரீஹரி அளித்த செல்வங்கள் என சிந்திக்க வேண்டும்.

குரு மற்றும் பெரியவர்களுக்கு, பக்தி மரியாதைகளுடன் கைகூப்பி வணங்க வேண்டும். அவர்களை ஸ்தோத்திரம் செய்ய வேண்டும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களே உற்றார் உறவினர் என்று சிந்தித்து, நம்மால் அவர்களுக்கு எவ்வித தொந்தரவுகளும் ஆகக்கூடாது என்று நினைக்க வேண்டும்.

இந்த கரண (சரீரம்) பகவந்தனின் அதீனமாக வந்தது. இது அவன் சஞ்சரிக்கும் ரதம் ஆகும். அப்படியே தன் மனைவி, மக்கள் அனைவரும் ஸ்ரீஹரிக்கு சேவை செய்யும் சேவகர்கள் என்று அறிய வேண்டும்.

4. ஹரிதாசர லட்சண சுளாதி

ஹரியில் மிகச்சிறந்த பக்தி, தத்வஞான ப்ராப்தி, விஷய விரக்தி ஆகியவை உண்டாவதற்கு சஜ்ஜனர்களின் சங்கத்தை விரும்ப வேண்டும்.

ஏகாதசி விரதம்: ஹரியின் மகிமைகளை விளக்கும்படியான கதைகள், ஹரிகதை ஸ்ரவண, ஹரியின் பூஜை, நிரந்தர ஹரிஸ்மரணை, முதலான சிந்தனைகளால் அந்த:கரணம் சுத்தமாக வேண்டும். தண்ணீர் விட்டுக் கழுவினால், கை கால்களில் இருக்கும் அழுக்குகள் போவதைப் போல, ஹரிகதா ஸ்ரவணாதிகளால் காம கிரோதாதி மலங்கள் விலகுகின்றன. மனம் என்னும் கண்ணாடி தூய்மையானபோது, ஸ்ரீஹரியின் பிம்பம் அதில் தெரிகிறது. அனைவருக்கும் பரதேவதையான ஸ்ரீஹரியே நமக்கும் கதி என்று நம்ப வேண்டும்.

2. பரதன பரஸதி பரநிந்த்யாதவர...

மேலே கூறிய நிஷ்டையுடன் இங்கு சொல்லப்பட்டிருக்கும் கெட்ட நடவடிக்கைகளையும் விலக்கிக் கொள்ள வேண்டும்.

பரதன பரஸதி - பிறரின் செல்வங்களை அபகரிப்பது, பிறன் மனைகளை கவர்வது, பிறரை திட்டுவது என துஷ்ட ஜனர்கள் எப்போதும் இவற்றிலேயே ஈடுபட்டிருக்கின்றனர். சஜ்ஜனர்கள் இவற்றிலிருந்து விலகியிருக்க வேண்டும்.

யாராவது நம்மை திட்டினால், நாமும் திரும்ப அவர்களை திட்டாமல், அவர்கள் நம்மை மிகவும் மரியாதையாக நடத்தினர் என்று நினைக்க வேண்டும். மகிழ்ச்சி அடைய வேண்டும்.

கல்பவ்ருக்ஷ காமதேனுகள், தாமே நம்மை அழைத்து மரியாதை செலுத்துவதைப் போல, மற்றவர்கள் நம்மை அழைத்து மரியாதை செலுத்தினாலும், நாம் எதையும் விரும்பாமல், யத்ருச்சா லாபத்தினால் (இருப்பதை வைத்து) திருப்தி அடைய வேண்டும். நிரந்தரமாக கேட்கும் இஷ்டார்த்தங்களை கொடுக்கும் காமதேனுவின் முன், ஹரிபக்தி ஆகியவற்றைத் தவிர வேறு எதையும் கேட்கக்கூடாது.

மக்கள் கூட்டம் இருக்கும் இடத்திற்கே போய் சஞ்சரிக்கக்கூடாது. இத்தகைய இடங்களில் சென்று சேர்ந்தால், வம்பு, புறம் பேசுதல், பிறரை திட்டுதல் ஆகியவற்றில் மனம் சென்றுவிடும்.

வீணான அரட்டை அடித்து காலத்தை கழிக்காமல், ஏகாந்தத்தில் அமர்ந்து ஹரிசிந்தனை செய்ய வேண்டும். பகவந்தனின் வாக்கினையே பேசிக் கொண்டிருக்க வேண்டும்.

ஒரு கோஷ்டியில் இருக்கும்போதும், துர்ஜனர்களின் முன் பரமதத்வத்தை வைக்கக்கூடாது. அதனை சஜ்ஜனர்களிடம் வைக்க வேண்டும். ஹரியின் நிரந்தர சிந்தனையை செய்தவாறு சுகப்படுத்த வேண்டும்.

பரம கருணாளுவான விஜயவிட்டலராயன் நம்மை கண்டிப்பாக காக்கிறான் என்னும் நம்பிக்கையுடன் உருகாயனின் (பகவந்தனின்) தரிசனத்தை விரும்ப வேண்டும்.

<u>3. லேஸாதரு ஹரிய காருண்யவெனபேகு...</u>

நமக்கு ஏதாவது நன்மை ஏற்பட்டால், அது குருபிரசாதத்தினால் ஏற்பட்டது என்னும் பாவனை இருக்க வேண்டும். ஷுபான் த்யாயந்தியே காமான் குருதேவ ப்ரஸாதஜான்.

வேறு சிலரால் நாம் மோசம் செய்யப்பட்டு துக்கத்திற்கு ஆளானால், ஏதோவொரு பிறவியில் நாம் செய்த பாவத்திற்காக இந்த துக்கம் வந்திருக்கிறது என்றும், இதுவே ஹரிசித்தம் என்றும் அறிய வேண்டும். இதைவிட்டு, அதற்காக வேறு யாரையாவது திட்டக்கூடாது. நாம் செய்த கர்மமே நமக்கு பலமாக இருக்கையில், வேறு யார் என்ன செய்துவிட முடியும் என்று அதனை மகிழ்ச்சியுடன் அனுபவிக்க வேண்டும். துக்கப்படாமல் மகிழ்ச்சியுடன் அதனை ஏற்றுக் கொள்ள வேண்டும். இதுவே ஹரிதாசனின் தாஸ்யம்.

எந்தவொரு துக்க, பிரச்னை, கஷ்டங்கள் வந்தபோதும், சோர்வு அடையாமல் ஸ்ரீஹரியே எனக்கு கதி என்று திடமாக நம்பியவாறு, அந்த துன்பங்களை அனுபவிக்க வேண்டும்.

4. ஹரிதாசர லட்சண சுளாதி

சர்வதேஷ காலங்களில் அனைத்து இடங்களில் வியாப்தனாக இருக்கும் குணபரிபூர்ணனான இந்திரேஷன், நமக்கு முன்னே பின்னே இட வலங்களில் இருந்து காத்துக் கொண்டிருக்கையில், வேறு எந்த பிரச்னைகள்தான் நம்மை அண்ட முடியும்?

காலம், வேதம், ஜீவன், அவ்யாக்ருதாகாஷ, ஓம்கார, வர்ணங்கள் ஆகியவை ஸ்ரீஹரியுடன் பிரளய காலத்திலும் நாசம் அடைவதில்லை என்றும் மற்றும் இவற்றிற்கு இருக்கும் பேதம் என்றும் அழிவதில்லை என்றும் அறிய வேண்டும்.

வேதவியாஸதேவர் இயற்றிய 564 பிரம்ம சூத்திரங்கள் மற்றும் ஸ்ரீமத்வாசார்யர் இயற்றிய பாஷ்யங்களை பக்தியுடன் அத்யயனம் செய்ய வேண்டும்.

மோட்சத்தைக் கொடுப்பவனான வாசுதேவ விஜயவிட்டலனின், தாசானுதாசனின் வீட்டின் தாசன் என்று அவரின் சேவை செய்து கொண்டிருக்க வேண்டும்.

<u>4. படதன பந்தரு ஹிக்குதலிரபேகு...</u>

ஹரிபக்தன் ஆனவனுக்கு, சுக துக்கம், மாலை பாம்பு, லாப நஷ்டம் ஆகிய அனைத்தும் ஒன்றே. ஹரியின் கருணையால் இவற்றை ஒன்று போலவே ஏற்றுக் கொள்ள வேண்டும். அவற்றிற்கு வேறு யாரோ காரணம் என்று அறியக்கூடாது. மற்றவர்கள் நிமித்தத்திற்காக மட்டுமே. பார்ப்பவர்களுக்கு தான் ஊமை, செவிடு என்று ஜடபரதன் காட்டிக் கொண்டதைப் போல இருக்க வேண்டும்.

மக்களின் கும்பலில் சேராமல் ஏகாந்தத்தில் இருக்க வேண்டும். வெட்கத்தை விட்டு பகவந்தனின் பஜனை ஸ்தோத்திரங்களை ஆடிப் பாட வேண்டும். தேகத்தை வளர்ப்பதற்கு தானியம் ஆகியவை கிடைக்கும் என்னும் எண்ணத்தில் பஜனைகளை செய்யக்கூடாது. பகவந்தனின் திருப்திக்காக தன்னை அர்ப்பணம் செய்து கொண்டவனுக்கு தேகத்தை பாதுகாப்பதே ஸ்ரீஹரியின் வேலை என்னும் திட நம்பிக்கை இருக்க வேண்டும்.

14 உலகத்தின் தலைவனான ஸ்ரீகிருஷ்ணன், அனைத்து ஜீவிகளையும் காக்கும் பாரத்தை / பொறுப்பை விடாமல் செய்கிறான் என்னும் திட நம்பிக்கை இருக்க வேண்டும். 'விஷ்வகுடும்பி கொட்ட கணான்ன குத்ஸித கம்பளியே அவன ஸௌபாக்ய' (ஹரிகதாம்ருதசார) என்று நினைத்து வாழ வேண்டும். அன்றைய தினத்தில் வாழ்வதற்கு மட்டுமே சம்பாதிக்க / சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டும். அதிகமாக சேர்க்கக்கூடாது. நாம் சேர்த்து வைத்த தானியாதிகளையும், வறியவர்கள் வந்து கேட்டால், கொடுக்க வேண்டும்.

ஸ்ரீவிஜயவிட்டலனின் பாதங்களை பத்திரமாக பிடித்துக் கொண்டு, ஆடியவாறு பஜித்துக் கொண்டிருக்க வேண்டும்.

5. உட்டதக்கிந்த மேலு தொட்டதக்கிந்த மேலு...

நாம் உடுத்திய வஸ்திரத்தைவிட விட்டலன் உத்தமன் என்றும்; அணிந்துள்ள ஆபரணங்களைவிட அவன் மேல் என்றும்; சேர்த்த செல்வங்களைவிட மேலானவன் என்று அறிந்து, அவனை மனப்பூர்வகமாக ஒவ்வொரு அடியிலும் வணங்க வேண்டும். இந்த விட்டலனின் நாமங்களை, வாய் விட்டு சத்தமாக பாட வேண்டும். நம் பிரியமானவர்களான மனைவி, மக்களைவிட அதிக சுகம் இருக்கிறது என்று அறிந்து, ஒவ்வொரு அடியிலும் ஸ்ரீஹரியை பாடுபவர்களுக்கு, இஷ்ட ப்ராப்தி, அனிஷ்ட பரிகாரத்தை ஸ்ரீஹரி செய்கிறான்.

பிறப்பு இறப்பு இல்லாமல் அனாதி நித்யனான ஸ்ரீஹரி, தாசர்களின் மேல் கருணையைக் காட்டி, தாசரின் தாஸ்யத்தை ஏற்றுக் கொள்கிறான்.

6. ஈபரி இத்தவங்கெ அனந்தஜனுமக்கெ...

இப்படியாக திட நம்பிக்கை கொண்டவன், நூற்றுக்கணக்கான பிறவிகளை எடுத்தாலும், அவனுக்கு எந்தவொரு கஷ்டங்களும் வராதவாறு ஸ்ரீஹரி காப்பாற்றுகிறான்.

***

---

5. ஹரிதாசனின் சகலேந்திரியங்களும்

ஹரிக்காகவே சுளாதி

த்ருவதாள

நினகி3ல்லத3 ஷிர எந்தி3கு3 ப3லுபா4ர
நினகி3ல்லத3 அக்ஷி ஹாளக3வாக்ஷி
நினகி3ல்லத3 கிவி ரக்ஷிய ஹிங்கி3வி
நினகி3ல்லத3 மூகு3 ஹஸியாகாகு3
நினகி3ல்லத3 வத3ன லாளீய வத3ன
நினகி3ல்லத3 நாலிகெ3 கெரஹின நாலிகெ3
நினகி3ல்லத3 கர மொரத3 பொ3ம்பி3ய கர
நினகி3ல்லத3 பாத3 நாயி நரிய பாத3
நினகி3ல்லத3 கா3த்ர ஜீர்ணவாத3 ப1த்ர
நினகி3ல்லத3வயாக3ளு ஜனக்கித்3து3 ப2லவேனு
பி3னக3டி3து3 பூ4தாதி3க3ணகெ கொட3லிப3ஹுது3
அனிலநாமக நம்ம விஜயவிட்டல நின்ன
நெனிஸதி3த்3த3 மனுஜ அவனே நிஜத3னுஜா ||1

மட்ட தாள

பவமானமதத3ல்லி தி3வராத்ரி பி3ட3தெ3
நவவித4 ப4குதி நவவித4 த்3வேஷ
த்ரிவித4ஜீவிக3ள விவரவ திளிது3
பு4வனதொ3ளகெ3 பே4த3வனைது3 பேளி
நவனீத ஹ்ருத3யத3வனாகி3 இத்3து3
த்ரிவிக்ரம விஜயவிட்டலன்ன
ஸவியாத3 நாம கவியாகி3 நெனெது3
ஸவியத3 பத3வி ஸவிகொ3ளத3வன்ன
அவனீகா3 ஜீவனாஷவனெ காணிரோ
அவனியொளு த்ரிபு4வனதொ3ளகெ3 ||2

த்ரிவிடி தாள

ஹரி நின்ன பரதெ3ய்வவெந்து3 திளியத3வனு

ஹொரகி3னவகெ3 ஜனனவெம்போது3 ஷதஸித்3த4
ஹரி நின்ன த்3வேஷவ மாள்பன மொக3னோடெ3
மரளெ ரவிய நோட3த3லெ ஷுசி இல்ல
ஹரி மருதன த்ரோஹிக3ள மந்தி3ரத3ல்லி
மரது3 நீரு கொளலு சரிஸு சாந்த்3ராயண
ஹரிநாம விஜயவிட்டல நின்ன பாத3வ
ஸ்மரஸத3 ஹிரியனு ப3லுகாலத3 கூ3கி3 ||3

அட்ட தாள

வாரவாரக்கெ ஆசாரவந்தனாகி3
வீர வ்ரதக3ளபாரவ சரிஸி
மூரேளுஸாரிகெ3 வாரணாஸீ புண்ய
தீரத2க3ள மிந்தா3ராத4னெய மாடி3
நாராயணங்கெ3 தாரதம்யதி3ந்த3
நீரெரது3 உத்3தா4ரனாக3தி3ரே
நீரமேலெ ப3ரவ ரசிஸித3ந்தெ
தோரதெ3 ஸத்கர்ம ஹாரிஹோகு3வத3ய்யா
தா4ருண நாமக விஜயவிட்டல நின்ன
காருண்ய படெ3த3ரெ த்ருணவந்து3 மேரு ||4

ஆதிதாள

ஆ கபர்த்தி3முனி போகி3 தா கபடதி3ந்த3லி பாண்
டு3 குமாரனல்லி க்3ராஸபே3கெந்து3 எடி3க3டி3கெ3
ஹா க்ருஷ்ணனெந்து3 பாஞ்சாலகுமாரி கரெயெ ஸ்வல்ப
ஷாகத3ளவுண்டு3 தானேகஜன த்ருப்தி படி3ஸி
லோகதொ3ளகெ3 பூர்ண கமலாகாந்தனெ வலிமெ ஆப
த்து கடி3கெ3 புண்ய தூகவெனிஸுவ மேருவிகெ3
ஆக2ண்ட3புருஷநாம விஜயவிட்டலரேயன
யாகெ ப4ஜிஸதெ3 லோக ஷோகிஸுவரு நரகத3ல்லி ||5

ஜதெ

கா4ளிகெ3 பெ3வரில்ல நின்னவரிகெ3 கேடி3ல்ல
வ்யாள விஜயவிட்டல நின்ன பி3ட்டவ கெட்ட ||6

5. ஹரிதாசனின் சகலேந்திரியங்களும்

பகவந்தன் நமக்கு கை, கால், வாய், மூக்கு முதலான அவயவங்களை கொடுத்திருக்கிறான். அவை ஸ்ரீஹரியின் சேவை செய்வதற்காகவே இருக்க வேண்டும்.

ஹரியை பார்க்க வேண்டிய கண், சாஸ்திரங்களை பார்க்க வேண்டிய கண், பார்க்கக் கூடாதவற்றையெல்லாம் பார்க்கிறது. திருமணத்திற்காக தயார் செய்யப்பட்ட பொருட்கள், இறுதிக் காரியங்களுக்காக பயன்படுவதைப் போல, எதற்கோ பயன்பட வேண்டிய இந்திரியங்கள், வேறு எதற்கோ பயன்படுகின்றன. ஆனால், இவ்வாறு ஆகக்கூடாது. அனைத்து இந்திரியங்களும் ஹ்ருஷிகேஷனின் பூஜைக்காகவே இருக்கின்றன என்று இந்த சுளாதி தெரிவிக்கிறது.

1. <u>நினகில்லத ஷிர எந்திகு பலுபார...</u>

யாருடைய தலை ஒரு நாளைக்கு ஒரு முறையாவது ஸ்ரீஹரியை வணங்குவதில்லையோ, அத்தகைய தலை, தங்கமயமான மணிகளைக் கொண்டு அலங்கரிக்கப்பட்ட கிரீடத்தை தாங்கியிருந்தாலும் வீணே. வெறும் பாரமே. பார: பரம் கிரீட ஜுஷ்டமப்யுத்தமாங்கம் ந நமேன் முகுந்தம் || -- பாகவத.

தன் உற்றார் உறவினர் ஆகியோரின் துர்குணங்களை கேட்டபோது மகிழ்ந்து ஆடும் அந்த தலை, ஸ்ருதியில் சொல்லப்பட்ட பகவந்தனின் நற்குணங்களைக் கேட்டு மகிழ்ச்சியுடன் ஆடுவதில்லை.

ந ஷிரஸ்சலதீஷ மேகதாபி ஸ்ருதிஜானந்த பரேண ஸத்குணானாம் |

மங்களாங்ககெ மணிவ ஷிரபூஷண - ஸ்ரீபாதராஜர்.

ஷிரோ ஹ்ருஷிகேஷ பதாபிவந்தனே || - பாகவத 9-6-8
இவ்வாறு ஹரியின் மகிமைகளைக் கேட்டு தலையானது ஆட வேண்டும்.

நினகில்லத லக்ஷ்மி ஹாளு கவாக்ஷி:
ஸ்வாமியின் சிலைகளை, தேவாலயங்களை பார்ப்பதற்காகவும், பகவந்தனின் சாஸ்திரங்களை படிப்பதற்காகவுமே ஸ்வாமி, நமக்குக் கண்களைக் கொடுத்திருக்கிறான். முகுந்த லிங்காலய தர்ஷனீ த்ருஷௌ | -- ரங்கனைப் பார்ப்பதே கண்களுக்கு பூஷணம் இல்லையா? நம் கண்கள் சஜ்ஜனர்களின் தரிசனம் மற்றும் பகவந்தனின் சிலையைப் பார்ப்பதற்கும் பயன்படட்டும் - என்று நலகூபர் மணிக்ரீவர்கள் வேண்டினர். த்ருஷ்டி: ஸதாம் தர்ஷனேsஸ்து பவத்தனூனாம் || பாகவத 10-12-38.

இத்தகைய கண்கள், லௌகிக விஷயங்களை பார்ப்பதற்கு பயன்பட்டால், அவை கண்கள் அல்ல, இடிந்து போன வீட்டின் ஜன்னல் மட்டுமே.

நினகல்லத கிவி ரக்ஷிய ஹிங்கிவி:
காதுகள் இருந்தால், அதில் பகவந்தனின் கதா ஸ்ரவணம் கண்டிப்பாக ஆகவேண்டும். ஸ்ரவணௌ கதாயாம் || - பாகவத. பகவந்தனின் புண்ய ஸ்ரவண கீர்த்தனைகளுக்காகவே இருக்க வேண்டிய காதுகள், உலக வம்பு தும்புகளை கேட்பதற்கு மட்டுமே நீளமாகின்றன. (தயார் ஆகின்றன). அபி து வ்யபிசாரலோக வார்த்தாஸ்ரவணாயைவ மஹாதரம் ப்ரயாத: | -- விசாலமான காதுகளுக்கு விஷ்ணு கதை பூஷண. பகவந்தனின் மகாமகிமைகளைக் கேட்காத எந்த காதுகளும், சுவற்றில் இருக்கும் இரண்டு துளைகளுக்கு சமானம் அவ்வளவே. ஹரியைக் கேட்காத காதுகள், செருப்பின் பின்னால் இருக்கும் தோல் போன்றதே ஆகும்.

நினகல்லத மூகு ஹஸிய கூகு :
ஸ்ரீஹரியின் நிர்மால்யத்தை நுகராத காதுகள் வீணே.

நினகல்லதவதன லாளிய வதன:
லாளி என்றால் புனல் (குழல்). புனலானது எப்படி ஹரி காரியங்களை செய்வதில்லையோ, இந்த வாயும் அப்படியே என்கிறார் தாசர். வாயானது, பகவந்தனின் மகிமைகளைப் பற்றி பேசாமல், லௌகிக விஷயங்களை, வீண் அரட்டைகளை மட்டும் செய்து எப்படி காலத்தை வீண் அடிக்கிறதோ, அத்தகைய வாய்,

புனலைப் போன்றதாகும். வாணி குணானு கதனே. முகத்திற்கு பூஷணம், நாராயணனின் நாமமே தவிர, வீணான வெட்டி அரட்டைகள் அல்ல.

நினகல்லத நாலிகெ கிருஹின நாலிகெ:
தவளையானது, உணவிற்காக மட்டுமே தன் நாக்கினை வெளியே நீட்டி, உணவை பெற்றுக் கொள்கிறது. நாமும் நம் நாக்கினை இதைப் போலவே ஹரி நாமத்தை சொல்வதற்காக மட்டுமே பயன்படுத்த வேண்டும். பாகவதமும் இதையே சொல்கிறது. ஜிஹ்வாஸதீ தார்துரிகேவி ஸூத ந சேத் ப்ரகாயத்யுருகாய காதாம் । ஹரியைக் கொண்டாடாத நாக்கினை ‘ஆசாரவில்லத நாலிகெ நின்ன நீச புத்தியனு பிடு நாலிகெ’ என்று புரந்தரதாசர் திட்டுகிறார்.

ந்ருஹரோऽச்யுத மாதவேஷ கிருஷ்ண - என்று பகவந்தனின் நாமங்களை கொண்டாட வேண்டிய நாக்கு, தேவையற்ற வீண் அரட்டைகளில் மட்டுமே ஈடுபடுகிறது.

ந ஹி கீர்த்தயதீஹ மே கொஜிஹ்வா அபி து துல்லிங்க பகாங்கிதான் குஷப்தான் || -- பா. மோ. ஸ்தோ.

நினகல்லத கர மொரத கொம்பிய கர:
கரங்களுக்கு பூஷண என்றால், ஹரியை வணங்குவதே ஆகும். தங்க வளையல்களைக் கொண்டு அலங்கரிக்கப்பட்டிருந்தாலும், பகவானை வணங்காத கைகள் சவத்தின் கைகளைப் போலவே ஆகும்.

ஷாமெளகரெள நோ குருத: ஸபர்யாம் || பாயச பாத்திரத்தில் மூழ்கியிருக்கும் மரக் கரண்டியே இந்த (ஸ்ரீஹரியை வணங்காத) கைகள்.

நினகல்லத பாத நாயி நரியபாத:
எந்த பாதங்கள் ஹரியின் தீர்த்த க்ஷேத்திரங்களுக்கு செல்வதில்லையோ, அவை வெறும் மரங்களே ஆகும். பாதெள ந்ருணாந்தெள த்ருமஜன்மபாஜெள || பாகவத.

ஹரியின் க்ஷேத்திரங்களுக்கு செல்லாமல், நல்ல ஆபரணங்களால் அந்த கால்கள் அலங்கரிக்கப்பட்டிருந்தாலும், அது வீணே. கெட்ட / போகக்கூடாத இடங்களுக்கு செல்வதற்கு கால்கள் வேகமாக போகின்றன. ஆனால், பகவந்தனின் க்ஷேத்திரங்களுக்கு செல்வதற்கு பின்வாங்குகின்றன. ந து மாதவ தாவகாலயாம்ஸ்ச ப்ரதிமாமீஷ ||

ஆகாரத்திற்காக மட்டுமே சுற்றித் திரியும், நாய் நரிகளின் கால்கள் ஆகக்கூடாது நம் கால்கள்.

நினகல்லத காத்ர ஜீர்ணவாத பத்ர:
சாதனை செய்யவேண்டும் என்பதற்காக பகவந்தனால் கொடுக்கப்பட்டது இந்த சரீரம். ஸாதன ஸரீரவிது நீ தயதி கொட்டத்து. இந்த சரீரத்தை வெறும் சம்சாரத்தை நடத்தி பயன்படுத்தினால், 84 லட்ச யோனிகளில் வந்து, வைஷ்ணவ ஜன்மத்தை பெற்றிருக்கும்போது, இதை வீணாக்கினால், இத்தகைய பிறவி மறுபடி கிடைக்காது. அதுலம் ந்ருபு வைஷ்ணவம் ஸூஜன்ம: ||

நாம் பிழைத்திருப்பது 100 ஆண்டுகள் என வைத்துக் கொண்டாலும், இரவில் தூக்கத்தினால் பாதி ஆயுள் சென்றுவிடுகிறது. இது தண்ணீரில் ஹோமம் செய்ததைப் போலவே ஆகும். ராத்ரி காலோ ஜலஹோமோ பமதாமுபைதி நூனம் ||

மற்ற 50 ஆண்டுகளில், 20 ஆண்டுகள் பால்ய யௌவனத்தில் போய் விடுகிறது. இத்துடன் நோய் நொடிகளின் தொந்தரவு, பற்பல விளையாட்டு, அரட்டைகளில் இன்னொரு 20 ஆண்டுகள் சென்றுவிட்டால், மிச்சம் இருப்பது 10 ஆண்டுகள் மட்டுமே. இத்தகைய 10 ஆண்டுகளில், பாரதத்தில் பிறந்து, பாவ காரியங்களில் ஈடுபட்டால், எனக்கும் பசுக்கும் என்ன வித்தியாசம்?

இத்தகைய சரீரத்தைப் பெற்றபோது, பூஜைகளை செய்து அர்த்தமுள்ளதாக ஆக்கிக் கொள்ளாவிடில், இந்த சரீரமானது உலர்ந்த இலையைப் போல காற்றிற்கு பறந்து போய்விடுகிறது.

5. ஹரிதாசனின் சகலேந்திரியங்களும்

நினகில்லத வயஸுகளு ஜனக்கித்து பலவேனு?

100 ஆண்டு காலம் நாம் வாழ்ந்திருந்தாலும், அந்த முழு ஆயுளும் ஹரியின் கைங்கரியத்திலேயே ஈடுபட வேண்டும். அதை விட்டு தேகத்தை வளர்ப்பதில் ஈடுபட்டால், இந்த ஆயுள் இருந்தால்தான் என்ன பயன்?. இத்தகைய வீணான தேகத்தை, கோடாலியால் துண்டுதுண்டாக்கி, முதலை, மீன் ஆகியவற்றிற்குப் போட்டாலும் அதனால் பாவம் வந்து சேர்வதில்லை. அனில நாமக விஜய விட்டலனை நினைக்காத மானவனே, உண்மையான அர்த்தத்தில் துர்ஜன தைத்யன் ஆகிறான்.

<u>2. பவமானமததல்லி திவராத்ரிபிடதெ...</u>

நாம் செய்ய வேண்டிய கடமைகள் என்ன என்பதை இந்த பகுதியில் சொல்கிறார். பஞ்சபேத, தாரதம்ய, நவவித பக்தி, நவவித த்வேஷ, த்யாக, ஸாத்விக ராஜஸ தாமஸ ஜீவிகளை அறிந்து பகவந்தனை அர்ச்சிக்க வேண்டும்.

பவமான மததல்லி திவராத்ரி பிடதெ:

பவமான வாயுதேவரின் அவதாரம் ஸ்ரீமத்வர். அவர் சொல்லியிருக்கும் நவவித பக்தி - நவவித த்வேஷ, தியாகம், ஸாத்விக ராஜஸ தாமஸ ஜீவிகளை பஞ்சபேதங்களை அறிந்து, ம்ருது ஹ்ருதயத்தை அடைந்து, யாரையும் த்வேஷிக்காமல், ஹரியின் நாமாம்ருதத்தை பக்தியுடன் சுவைத்தவாறு, வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக ஆக்கிக் கொள்ள வேண்டும். இவ்வாறு அர்த்தமுள்ளதாக ஆக்கிக் கொள்ளாதவனின் வாழ்க்கை வீணே ஆகும். ஸ்ரவண, கீர்த்தன, ஸ்மரண, பாத ஸேவன, அர்ச்சன, வந்தன, தாஸ்ய, ஸக்ய, ஆத்ம நிவேதன - இவையே நவவித பக்தியாகும்.

இவற்றை செய்வதுடன், ஜீவாபேத, நிர்குணத்வ, அபூர்ண குணஹரி, ஸாம்யதை, பிரம்மாதிகள் ஹரியைவிட உத்தமர், ஹரியின் ரூப குணாதிகளில் பேதம் சொல்வது, மனிதர்களைப் போல பிறப்பவன் ஸ்ரீஹரி, ஹரிபக்தர்களை த்வேஷிப்பது, வேதாதி பிரமாணங்களை நிந்திப்பது - ஆகிய நவவித த்வேஷங்களை விடவேண்டும்.

ஸாத்விக, ராஜஸ, தாமஸ முக்தி யோக்யர் - நித்ய சம்சாரிகள் - தமோ யோக்யர் ஆகிய த்ரிவித ஜீவர்களின் விவரங்களையும் அறிய வேண்டும்.

புவனதொளகெ பேதவனைது திளிது:
பஞ்சபேதங்களை அறிந்து, ஜீவ பரமாத்ம பேத, ஜீவ ஜீவ பேத, ஜீவ ஈஷ பேத, ஜட ஜட பேத, ஜீவ ஜட பேத ஆகியவற்றை அறிய வேண்டும். இவ்வாறு பாவமானி மதத்தை அறிந்து, பக்தியைக் கொண்டு, த்ரிவிக்ரம விஜயவிட்டலனின் அமிர்தத்திற்கு ஒப்பான நாமத்தை சுவைக்க வேண்டும். இத்தகைய பக்தனுக்கு, புனராவ்ருத்தி இல்லாத (திரும்ப வரத் தேவையில்லாத) மோட்ச பதவி கிடைத்தால் மட்டுமே, இந்த சாதன ஷரீரத்தைப் பெற்றதற்கு தக்க அர்த்தம் கிடைக்கிறது. இத்தகைய சாதன சரீரத்தைப் பெற்ற போது, அதனை செல்வம் சம்பாதிப்பதற்காக பயன்படுத்தினால், இந்த சரீரம் அழிந்ததைப் போலவே ஆகும்.

3. <u>ஹரி நின்ன பரதெய்வவெந்து திளியதவனு...</u>

இந்த பகுதியில் தாசர், ஹரியே சர்வோத்தமன், வாயுவே ஜீவோத்தமன் என்று அறியாதவர்களை பக்தர்கள் கும்பலிலிருந்து வெளியே வைக்கிறார். இத்தகைய ஹரிவாயு த்வேஷிகளுக்கு திரும்பத் திரும்ப பிறவியே கிடைக்கிறது. ஹரிவாயுகளின் த்வேஷிகளின் முகத்தை பக்தர்கள் பார்க்கக்கூடாது. அப்படியே பார்த்துவிட்டால், வந்த பாவத்திற்கு, சூரியனின் தரிசனத்தை செய்ய வேண்டும் என்று சொல்கிறார். (ரவிய நோடதலே ஷுசி இல்ல).

ஹரி வாயுகளின் துரோகத்தை செய்தவர்களின் வீட்டில் தண்ணீர் குடித்துவிட்டால், அந்த பாவத்தை கழிப்பதற்கு சாந்திராயண விரதத்தையே செய்ய வேண்டும். அனைத்து பாவங்களையும் போக்கும் விஜயவிட்டலனின் பாதங்களை சிந்திக்காமல், பல ஆண்டுகளை கழித்துவிட்ட முதியவன், ஒரு வயதான ஆந்தையே ஆகிறான்.

4. வாரவாரக்கெ ஆசாரவந்தனாகி...

வீர வைஷ்ணவன் ஆகும் வழியினை இந்தப் பகுதியில் தாசர் உபதேசிக்கிறார். அனைத்து காலங்களிலும் ஆசாரவந்தனாக இருக்க வேண்டும். ஏகாதசி முதலான வீர வைஷ்ணவ விரதங்களை பின்பற்று. குறைந்த பட்சம் 10 முறையாவது, காசி, பதரி, முதலான புண்ய க்ஷேத்திரங்களுக்குச் சென்று, கங்காதி புண்ய நதிகளில் நீராடி, பாவங்களை போக்கிக் கொள்ள வேண்டும். க்ஷேத்ர மூர்த்தியில், பிம்ப மூர்த்தியின் ஐக்யத்தை சிந்தித்து ஆராதனை செய்ய வேண்டும்.

ஸ்ரீஹரியில் தொடங்கி, தத்வாபிமானி தேவதைகளின் தாரதம்யத்தை அறிந்து, அபிஷேகங்களை செய்து பூஜித்தால், இதுவே மோட்சத்திற்கான ஒரு வழியாகும். இவ்வாறு செய்யவில்லை எனில், தண்ணீரில் எழுத முயன்று வீணான முயற்சியைப் போல, நீ செய்த கர்மங்கள் அனைத்தும் வீண் ஆகின்றன. அவற்றை தைத்யர்கள் அபகரிக்கின்றனர். உனக்கு அதன் பலன்கள் கிடைக்காது. அனைவரையும் தரித்திருக்கும் விஜயவிட்டலன், உன் மேல் மகிழ்ந்தால், ஒரு சாதாரண கிருமியும்கூட மேரு பர்வதம் போல பெரியதாகிவிடும்.

5. ஆ கபர்த்திமுனி போகி தா கபடதிந்தலி...

கிருமி மேரு ஆவது எப்படி? என்பதற்கு இங்கு உதாரணத்தைக் கொடுக்கிறார். ஆகபர்த்திமுனி (துர்வாசர்) துரியோதனாதிகளின் உபசாரத்தினால் மகிழ்ந்து, வரம் கேளுங்கள் என்றபோது 'நம்மை பரிட்சை செய்ததைப் போல, பாண்டவர்களையும் பரிட்சை செய்யுங்கள். த்ரௌபதியின் போஜனத்திற்குப் பிறகே இவ்வாறான பரிட்சை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். அதன்படியே, ஆயிரக்கணக்கான சிஷ்யர்களுடன் பாண்டவர்கள் இருந்த இடத்திற்கு துர்வாசர் வந்தார். தன் சிஷ்யர்களுடன் தனக்கு உணவு உபசாரம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

ஆனால், அன்றைய உணவினை அட்சயபாத்திரம் ஏற்கனவே கொடுத்து முடித்திருந்தது. ஆனால் இந்த முனிவருக்கு பயந்த திரௌபதி, 'ஹா கிருஷ்ண, த்வாரகா வாஸின். ரக்ஷரக்ஷ' என்று

ஸ்ரீகிருஷ்ணனை ஸ்தோத்திரம் செய்த உடனே, ஸ்ரீகிருஷ்ணன் ஓடி வந்தான். வந்தவன், எனக்கும் பசிக்கிறது என்றவுடன், திரௌபதி அட்சய பாத்திரத்தைக் கொண்டு வந்து அவன் முன் வைத்தாள். ஒரு துண்டு காய்கறியை தானே அதில் ஸ்ருஷ்டித்து, அதனை தானே எடுத்துத் தின்று 'யத்ர க்ருஹே ஹரி: புங்க்தே தத்ர புங்க்தே ஜகத்ரயம்' என்று சொல்வதைப் போல, அங்கு துர்வாசர் மற்றும் அவருடைய சிஷ்யர்களுக்கெல்லாம் வயிறு நிரம்பியதைப் போல ஆயிற்று.

இவ்வாறு திரௌபதிக்கு வந்த மேருவை போன்ற பெரிய ஆபத்தினை ஸ்ரீகிருஷ்ணன் பரிகரித்தான். அதே மேருவைப் போன்ற புண்ணியத்தைக் கொடுத்தான். இத்தகைய ஆபத்பாந்தவனை வணங்காமல், மக்கள் அனைவரும் யமனுக்கு அதிதி ஆவதன் காரணம் என்னவோ தெரியவில்லை.

6. காளிகெ பெவரில்ல நின்னவரிகெ கேடில்ல...

அனைவரின் வியர்வையையும் போக்கும் காற்றிற்கு, அல்லது காற்று தேவனுக்கு எவ்வித சிரமமும் இருப்பதில்லை ஆகவே, அவனுக்கு வியர்வை வருவதில்லை.

சர்வஷயன விஜயவிட்டலனே, உன்னை விட்டவன், வாழ்க்கையில் கெட்டான்.

***

---

6. ஹரிபக்தனுக்கு நிர்பயத்வ சுளாதி

த்ருவ தாள

ப4யவ்யாகெ நினகெ3 நிர்ப4யனாகு3 எல்லோ ப்ராணி, ப4வ
ப4யதூ3ர ஶ்ரீஹரிய கருணாகடாக்ஷ
ஸயவாகி3 ரலு ஸஹாயகெ மத்தொப்3ப3ரன்னு
ப3யஸுவத3ல்ல அபஜயக3ளு எந்தி3கி3ல்ல
ஹயக3மனனாகி3 கத்தெயன்னு ஹாரயிஸுவந்த2
ப3யலாஷெ பி3டு3பி3டு3 ஹுயலிடா3தி3ரு, து3ரம
தியல்லிப்ப மதாஸ்ரயவாடி3 பரரிகெ3 நோயிஸதி3ரு
த்ரயலோகனுத விஜயவிட்டலனெம்போ3 க
ரெய மணிகட்டிரெ ப4யவெத்தணதோ3 பேளு ||1

மட்ட தாள

ஆவ பிதனு ஸாகித3னு ப்ரஹ்லாத3ன்ன
ஆவ ஜனனி ஸாகித3ளு த்4ருவன்ன
ஆவ அண்ண ஸாகித3னு விபீ4ஷணன்ன
ஆவ புருஷ ஸாகித3 பாஞ்சாலிய
அவ ப3ந்து4 ஸாகித3 பரீக்ஷிதன்ன
ஆவ தெ3ய்வ ஸாகிது க3ஜேந்தி3ரன்ன
ஆவ தீ4ர ஸாகித3னு ப2ல்லுணன்ன
ஆவ ப4ட ஸாகித3 உக்3ரஸேனன்ன
ஆவ ராய நாரியர பி3டி3ஸித3வனு
ஆவ ஜாதி ஸாகிது அஜமிளன
ஆவாவ நாவவனு நோவு களெது3 ப4கு
தாவளிகெ3 வேக3 கைவல்ய பாலிப
தே3வனெம்பு3வனு மத்தாவவனாவவனு
ஈ விசாரவன்னு பா4வத3ல்லி திளிது3
பா4வஜன பெத்த விஜயவிட்டலனங்க்4ரி
தா3வரெயக3ளத3லி பாவனனாகு3வரு ||2

த்ரிவிடி தாள

ஒட3லொளு அபு3ஜப4வாண்ட3 கோடிய கோடி
அட3கி3ஸி கொண்டி3ப்ப மஹாமஹிமன
ஒட3னெ தொட்டிலொளு ப1வளிஸித3னெம்ப3
நுடி3 எத்தணதோ3 ப3லுஸோஜிக3வோ
நுடி3க3கோ3சரனாத3 தே3வரிகெ3 ஜோக3ள
பி3ட3தெ3 பாடி3து3தே3னோ மோஹக1வோ
பொட3விஸாக3ர த்3வீபதா3தா4ர கர்த்தனு
நடெ3 நுடி3க1லிதனெம்பு3வது3 ஏனோ
எடி3யவல்லத3 நித்யத்ருப்தனு மொலெபாலு
குடி3த3னெம்ப3வதி3து3 நிஜவென்னிரோ
பெடெ3த4ர, க3ருட3ரிகெ3 பெ3ட3கு3தோருவ ஹரிய
மட3தெ3ரெத்தித3ரெம்போ3 க4னவாவதோ3
அடிக3ளொளகெ3 க்ஷோணி அட3கி3ஸித3 தி4ட்ட
ஸட3க3ரத3 தெ3ய்வ பொலிதி3ரலு
பட3தி3ரு தை3ன்யவ ஒப்3ப3ர ப3ளியல்லி
கொட3ரு மனஸினந்தெ நெனெஸித3 ப2ல
ப3ட3வராதா4ர ஸ்ரீவிஜயவிட்டல கருணி
பி3ட3னு நின்னவனெந்து3 நுடி3த3ரோம்யாத3ரு ||3

அட்ட தாள

ஜனனத3 ப4ய மரணத3 ப4ய ப3ருதிப்ப
மனோ இந்தி3ர்யங்க3ளு எரகு3வ ப4ய து3
ர்தி3ன ப4ய ப3லுரோக3தொ1ட3கு1வ ப4ய, கா
லன ப4ய, தனகி3க்குவ விஷத3 ப4ய தீவ்ரவாத3 தம
ஸின ப4ய, நானாக1 ப4யக3ளு ப3ந்த3ரு
க3ணனெமாட3ரு காணோ ஹரிய நம்பி3த3 ஜன
ரனுமான ஸல்லது3 ஸதத திளிவது3
ஜனுஜமாதி3கர்த்த விஜயவிட்டலன்ன அ
ர்ச்சனெ மாடு3, அனுதி3ன, ப4யக3ள நீகு3 ||4

ஆதிதாள

து3ரிதகி3ரிகெ3 வஜ்ர ஹரிநாம, ப4க்தரிகெ3

6. ஹரிபக்தனுக்கு நிர்பயத்வ சுளாதி

நிருத வஜ்ரத3 ஜோடு3 ப4யவிட்டு நட3வங்கெ3
ஸூரிவது3 மது4ரபான பி3ட3தெ3 நெனெவங்கெ3
நெரெ நம்பி3த3வரிகெ3 ஸூத்த திரகு3வ ப
ஹரெ, கரெயலு வைகுண்ட2 கரதளதி3 இப்பது3
ஹரி எந்து3 நெனெத3வர ஸங்க3தியல்லி க்ஷண
விரலு முக்திகெ3 மார்க்க3 ப3யலாகி3 தோருவது3
ஹரிய பாத3த3ல்லி ஆஸக்தனாகி3த்3த3வனிகெ3
இருளுஹக3லு ம்ருத்யுகாய்தே3னு மாடு3வது3
அரிப4யங்கர நம்ம விஜயவிட்டலேஷ
ஸரியதெ3 ஸமீப இரலு எத்தண ப4ய ||5

ஜதெ

உண்டுண்டு விஜயவிட்டலனெந்த3வகெ3, ப4யத3
க3ண்டலனோத3து3 வைகுண்டபுரத3 க3தி ||6

***

<u>1. பயவ்யாகெ நினகெ நிர்பயனாகு எல்லோ ப்ராணி...</u>

ஸ்ரீஹரியின் கருணைப் பார்வையைப் பெற்றிருக்கும் ப்ராணதேவனின் பக்தர்களுக்கு (ப்ராணி) எங்கு சென்றாலும் பயப்படத் தேவையில்லை. நிர்பயனாக இருக்கலாம். சம்சாரத்தின் பயங்களையே பரிகரிக்கும் ஸ்ரீஹரியின் கருணையைப் பெற்றபிறகு, வேறு எந்த பயமும் வேண்டாம்.

ஸ்ரீஹரி மற்றும் வாயுதேவனின் கருணைப் பார்வை நம் மேல் இருந்தபோது, உதவி செய்யுங்கள் என்று வேறு எந்த தேவதைகளையும் வேண்டத் தேவையில்லை. கஜேந்திரன் ‘நாராயணா அகிலகுரோ பகவன் நமஸ்தே’ என்றபோது, ஸ்ரீஹரியே வந்து அவனைக் காப்பாற்றினான். நம் உற்றார் உறவினர் யாரும் என்னை தற்போது காப்பாற்றுபவர் இல்லை.

நமாமிமே ஞாதய ஆதுரங்கஜா: |
க்ராஹேண பாஷேன விதாதுராவ்ருதோ ||

முதலையின் வாயில் சிக்கிய என்னை இந்த ஆண் யானைகளோ, பெண் யானைகளோ காப்பாற்றவில்லை. ஆகையால், பரமாத்மனையே சரணடைய வேண்டும். பரம் ச தம் யாமி பரம் பராயணம் |

ஹயகமனனாகி கத்தெயனு:
குதிரை இருக்கும்போது, பிரயாணத்திற்காக கழுதையை பயன்படுத்தக்கூடாது. கருதுரகவிரலாகி கத்தெயேரலு ப்யாடவோ - ஸ்ரீவியாசராயர்.

ஹரிம் பரித்யஜ்ய ஜான்யம் தேவமுபாஸதே |
காம் த்யக்த்வா விமாடாத்மா கர்த்தபீம் மததே யதா ||

ஹரி கருணை ஆவதற்கு, முதலில் விருப்பங்களை விடவேண்டும். பொய் பேசுவது, மோசம் செய்வது கூடாது. கெட்ட மதங்களை சேர்ந்தவர்களை (துருமதியப்ப) சேரக்கூடாது. மூன்று உலகங்களிலும் வேதாதிகளால் வணங்கப்படுபவனான விஜயவிட்டலன் இருந்தபோது, பக்தர்களை 16 ஆயுத, 16 கைகளால் அருள்வதற்கு காத்துக் கொண்டிருந்தபோது, வேறு யோசனை எதற்கு?.

அனைத்து ஆபத்துகளிலிருந்து காப்பாற்றும் ஆயுதம் இடுப்பில் இருக்கும்போது, வேறு எதற்கும் ஏன் பயப்பட வேண்டும்?

ஸ்வோசிதகர்மகளாசரிஸுவ பலு
நீசரல்லி போகி யாசிஸதெ
கேசரவாஹ சராசர பந்தக
மோசக நஹுதெந்து யோசிஸுதிப்ப்புதே ||

2. ஆவ பிதனு ஸாகிதனு ப்ரஹ்லாதன்ன....

எந்தெந்த பக்தர்களை எப்படி எப்படி பகவந்தன் காத்தான் என்பதை இந்த பகுதியில் தாசர் விவரிக்கிறார். பகவந்தனே தந்தை. தாய். அண்ணன். கணவன். உற்றார். உறவினர். தெய்வம். சேவகன் என்கிறார்.

6. ஹரிபக்தனுக்கு நிர்பயத்வ சுளாதி

ஆவ பதினு ஸாகிதனு ப்ரஹ்லாதன்ன :

பற்பல விதமான கஷ்டங்களைக் கொடுத்து, பிரகலாதனை கொல்ல வேண்டும் என்னும் துர்ப்புத்தியைக் கொண்ட ஹிரண்யகசிபுவை, தன் கூரான நகங்களால் கிழித்து, பிரகலாதனைக் காத்தான். பிரம்மனின் வரம் பெற்றிருந்த ஹிரண்யகசிபுவை, வேறு யாரும் காக்கவில்லை. ஸ்ரீஹரியே, பிரகலாதனை முன் பின் என்றும் நின்று காத்தான் என்றால், இந்த உதாரணம் போதாதா? இதையே ஜகன்னாததாசர்:

பக்தனு அபராத மாடித்தரு தாயியந்ததி
தானெ காருண்யதிம் காயவாகதந்தெ தண்டிஸிபாலிஸுவ |
தைத்யனுதரவ ஸீளி ஸந்தெயிஸிதனு
பிரஹ்லாதனன க்ருபாஸாந்த்ர ||

ப்ராரப்த போகமான அரசாட்சியை செய்யும்போதும், பிரகலாதனை ஸ்ரீஹரி காத்தான். ஷிஷும்ப்ரஹ்லாதம் நாமானம் அபீபலத்தரி: ஸ்வயம் ||

த்ருவனு ஸுனீதிபுத்ர:
சித்தியின் நடத்தையால் மனம் நொந்து காட்டிற்குச் சென்றான், ஸுனீதியின் புத்திரனான துருவன். அவனை காப்பதற்காக ஸ்ரீஹரி நாரதரை அனுப்பினார். நாரதரின் உபதேசம் கிடைத்தது. ஆறு மாதங்களில் ஸ்ரீஹரியைக் கண்டான். த்ருவ மொதலாத பக்தரிகிந்த புருஷார்த்த || ஹரி.ஸார. 22-10

ஆவ அண்ண ஸாக்ஷிதனு விபீஷணன்ன:
ராவண கும்பகர்ண விபீஷண இந்த மூவரும் விஸ்ரவஸ்ஸின் மக்கள். ராவணன், சீதையை அபகரித்ததற்காக, அவன் ராமனுடன் போய் புரிய வேண்டியதாயிற்று. விபீஷணன் அவனுக்கு உபதேசம் செய்தான். ஆனால் ராவணனுக்கு விபீஷணனின் பேச்சு பிடிக்கவில்லை. அவனை திட்டி, இலங்கையிலிருந்து வெளியே துரத்தினான். இவனுக்கு அருளியவன் ஸ்ரீராமன்.

ஆவ புருஷஸாக்ஷித பாஞ்சாலிய:
திரௌபதி கேட்டவுடன் சபையில், அக்ஷய வஸ்திரங்களைக் கொடுத்த ஹரியின் கருணை அபாரம். திரௌபதிக்கு எவ்வித துக்கங்களும் வருவதில்லை. தேகாபிமானம் இல்லாதவளான அவள், தனக்காக எதையும் கேட்பதில்லை. பிரம்மனின் சாபம் பெற்றவரான சசி, ஷ்யாமலா, உஷாதேவியர்களுக்காக, அவர்களுக்கு வந்த ஆபத்துகளுக்காக, வஸ்திரங்களைக் கொடுத்து காத்தான்.

பாஞ்சாலியில் இருக்கும் சசி, ஷ்யாமலாதிகளுக்கு ஆபத்து வந்தபோது இந்திர, யம, அஷ்வினி போன்ற எந்த பதிகளும் அவர்களை காக்கவில்லை. ஸ்ரீஹரியே காத்தான்.

ஆவ பந்து ஸாகித பரீக்ஷிதன்ன:
பரீக்ஷித் ராஜா, பாண்டவர்களின் பேரன். ஸ்ரீஹரியின் பரம பக்தன். அவன் சாபத்தினால் சர்ப்ப ம்ருத்யு பயத்தினால் கஷ்டப்பட்டபோது, சர்ப்ப பயத்தை போக்க, சர்ப்பபூஷணரான சுகாசார்யரை அவனிடம் அனுப்பி, பாகவதாம்ருதத்தை கொடுத்து காத்தான். எந்த உறவினரும் இவனை காக்கவில்லை.

ஆவ தெய்வ ஸாகிது கஜேந்த்ரன்ன:
கஜேந்திரன் முதலையின் வாயில் சிக்கினான். அருகில் இருந்த எந்த உறவினரும் அவனை காக்காதபோது, தூரத்தில் இருந்த ஸ்ரீஹரியே கஜேந்திரனை காத்தான்.

ஆவ தீர ஸாகிதனு பல்குணன்ன:
மகாபாரத போரில் அர்ஜுனன் அனேக அஸ்திரங்களால் தாக்கப்பட்டபோது, ஸ்ரீகிருஷ்ணன் தானே முன் நின்று அந்த அஸ்திரங்கள் அனைத்தையும் தான் தாங்கினான்.

ஆவ பட ஸாகித உக்ரஸேனன்ன:
அரசைக் கைப்பற்ற வேண்டும் என்று தந்தையான உக்ரஸேனனை சிறையில் அடைத்து, தானே அரசாட்சி புரிந்து வந்தான் கம்சன். மதுராவிற்கு துன்பத்தைக் கொடுத்தவனான கம்சனைக் கொன்று, அவனின் சேவகர்களை அழித்து, உக்ரஸேனனுக்கு மதுராவில் மறுபடி பட்டாபிஷேகம் செய்து, தான் அவனுடைய ரக்ஷணைக்காக நின்றான்.

6. ஹரிபக்தனுக்கு நிர்பயத்வ சுளாதி

ஆவ ராய நாரியர பிடிஸிதவரு:
நரகாசுரன் 16,100 பேர் ராஜகுமாரிகளை சிறைபிடித்திருந்தான். அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஸ்ரீகிருஷ்ணனை துதித்தனர். நரகாசுரனிடமிருந்து அவர்களை விடுவிக்க எந்த அரசர்களாலும் முடியவில்லை. அப்போது ஸ்ரீகிருஷ்ணனே நரகாசுரனைக் கொன்று, ராஜகுமாரிகள் அனைவரையும் விடுவித்து, அவர்களை த்வாரகைக்கு அனுப்பி காத்தான்.

ஆவ ஜாதி ஸாகிது அஜாமிளன:
அஜாமிளன் கெட்ட பெண்களை அடைந்து 10 மக்களைப் பெற்றான். இறுதிக் காலத்தில் தன் மகன் மேல் இருந்த பாசத்தினால் நாராயண என்று அவனின் பெயரைச் சொல்லி அழைக்க, ஸ்ரீஹரியிடம் பக்தி கொண்டதால், ஸ்ரீஹரி அவனை காத்தான். இந்த அஜாமிளனை பிராமணர்களோ, வேறு யாரோ காக்கவில்லை. ஸ்ரீஹரியே அவனை காத்தான். இவ்வாறு ஸ்ரீஹரியின் பக்தன் ஆனபிறகு, அவன் தன் பக்தர்களை, தாய் குழந்தையைக் காப்பது போல, அவர்களுக்கு வரும் ஆபத்துகளை போக்கியவாறு, கடைசியில் மோட்சத்தையும் கொடுக்கிறான்.

இவ்வாறாக எந்த பக்தனாக இருந்தாலும், அவர்களைக் காப்பவனான பாவஜன பித (மன்மத பித) விஜயவிட்டலனின் பாத கமலங்களில் தன்னை அர்ப்பித்துக் கொண்டு, பவித்ரம் ஆக வேண்டும். அப்போது பவனனய்யன், நம்மை பவித்ரமாக்கி, காக்கிறான்.

<u>**3. ஒடலொளு அபுஜபவாண்ட கோடிய கோடி...**</u>

14 உலகங்களின் தலைவன் ஸ்ரீஹரியே. தன் தேகத்தின் ரோம ரோமங்களில் அனேக கோடி பிரம்மாண்டங்களை தரித்தவன் அவன். விஷ்ணு மஹாமஹிமன். அவன் ஒரு பிரம்மாண்டத்தையே, அனேக பிரம்மாண்டங்களாக ஆக்கி, தன் அணு ரோமகூபத்தில் தரிக்கவல்ல மகிமன். இத்தகைய அற்புத மஹிமன், தேவகியின் கர்ப்பத்தில் அடங்கியது எப்படி?. இத்தகையவனை ஒரு சிறிய தொட்டிலில் படுக்க வைத்து தாலாட்டு பாடுவது என்றால் என்ன?.

'ஸூனோஸ்தனௌ வீக்ஷ்ய விதாரிதாஸ்யே' என்று பாகவதத்தில் கிருஷ்ணன் மண்ணைத் தின்று வாயைக் காட்டினான். தன் தாய்க்கு பிரம்மாண்டத்தின் தரிசனத்தைக் காட்டினான். அந்த சிறிய வாயில் இருக்கும் பிரம்மாண்டத்தில் கோகுலம், யசோதை, யசோதையின் முன் வாய் திறந்து நிற்கும் கிருஷ்ணன், அவனின் வாயில் மற்றொரு பிரம்மாண்டம் என அனந்த பிரம்மாண்ட தரிசனத்தை செய்வித்தான் ஸ்ரீகிருஷ்ணன். விஷ்ணு ஸாமர்த்ய தோsண்டானாம் பஹூத்வம் நான்யதோ பவேத் ||

இத்தகைய ஸ்ரீஹரி ஒரு சிறிய கர்ப்பத்தில் அடங்குகிறான் என்றால், யானையை ஒரு சிறிய பாத்திரத்தில் அடக்குவதைப் போல ஆகிறது. கர்ப்பத்தில் சேராதவனை, தொட்டிலில் படுக்க வைத்து தாலாட்டு பாடமுடியுமா?.

வேத நுடிகளுக்கு சிக்காத ஸ்ரீகிருஷ்ணன், தாலாட்டு பாடல்களுக்கு சிக்குவானா? தைத்யர்களுக்கு இது ஒரு மோகத்தின் லீலை. ஸாது சந்தர்களுக்கு இது ஒரு மகிமை. கடல், சப்த த்வீபங்கள், கண்டங்கள் என அனைத்திற்கும் ஆதாரனாக இருந்து, இதன் கர்த்ருவும் இவனே ஆகியிருக்கிறான். இவனே ஜகஜ்ஜன்மாதி கர்தன். ஹரியின் நாபியிலிருந்து மூலரூபி பிரம்மதேவன் பிறந்தான். ஹரியின் க்ரோதத்திலிருந்து ருத்ரதேவன் பிறந்தான்.

இத்தகைய ஹரி பாலலீலை காட்டினான் என்றால், அது பக்தர்களை மகிழ்விப்பதற்கு மட்டுமே. இவன் தன் சிறு காலடி தடங்களை வைத்து, நடை பழகினான் என்று சொல்லலாமா?. இவன் நித்ய த்ருப்தன். யசோதை இவனுக்கு பால் கொடுத்தாள் என்பது, தர்க்கத்திற்கும் சிக்காத விஷயம். நித்ய த்ருப்தனுக்கு பாலிலிருந்து திருப்தி கிடைக்குமா? பிரளயத்தில் நூறு ஆண்டுகள் குழந்தையாக படுத்திருந்தவனுக்கு, எந்த யசோதை பால் கொடுப்பதற்கு சாத்தியம்? பால் குடித்தது, யசோதையின் இதயத்தில் இருந்த பாலினை காலி செய்து, அங்கு புண்ணியத்தை நிரப்புவதற்கு மட்டுமே தவிர, இவனுக்கு அதனால் ஒரு பலனும் இல்லை.

6. ஹரிபக்தனுக்கு நிர்பயத்வ சுளாதி

க்ஷீரஸாகரதல்லி லோலாடுதலிருவ:
பாலகலந்த பந்து பாலு ஸவிதனெந்து | தூரதிரெ ஹரிய - என்கிறார் புரந்தரதாசர். அனைவருக்கும் வழி காட்டுபவனான ஸ்ரீஹரியை, நந்தகோபனின் மனைவி ஆகியோர் தூக்கிக் கொண்டனர் என்பது சரியா?.

தன் ஒரு வயிற்றில் பூமண்டலத்தையே அடக்கக்கூடிய ஸ்ரீஹரி, சர்வோத்தமன் என்று அறி. இத்தகைய தெய்வம், உனக்கு தரிசனம் அளிக்கிறான் என்றபிறகு, மற்ற தேவதைகளிடம் எதற்கு வேண்ட வேண்டும்?

காக்கும் தெய்வங்கள் எவ்வளவு பேர் இருக்கின்றனர்?. நீ ஒருவனே என் ஸ்வாமி என்று அறி. குசேலனைக் காத்த ஸ்ரீஹரி, அனைவருக்கும் ஆதாரனாக இருக்கையில், வேறு யாரிடமும் சென்று பயபக்தியுடன் வேண்டக்கூடாது.

ஸ்ரீஹரி விட்டல ஸலஹெந்தனலு
கைகொட்டு காவ க்ருபாளு தன்ன பகுதரனு ||

தேவஷர்மா என்னும் பிராமணன், தன் குடும்பத்திற்கு பிழைக்க வழியில்லை, தேவதேவா, என்னை காப்பாற்று என்று வேண்டியபோது, கருணைக்கடலான பகவந்தன் இவனை ஓடோடி வந்து காத்தான்.

4. ஜனனத பய மரணத பய பருதிப்ப...

* ஹரியை நினைத்தவனுக்கு எந்த பயமும் வராது. ஹரியை நினைத்தவனுக்கு பிறப்பின் பயமும் இல்லை -- பரீக்ஷித்.
* மரணத்தின் பயமும் இருப்பதில்லை - பிரகலாதன்
* இந்திரியங்களின் ஏதோவொரு பயம் - ஹனுமன்
* பாவங்களின் பயம் - துர்வாசர்
* யமனின் பயம் - அஜாமிளன்
* விஷய பதார்த்தங்களின் பயம் - பீமசேனன்
* தமஸ்ஸின் பயம் - அர்ஜுனன்.

இவ்வாறு பற்பல வித பயங்கள். சுர லோகத்தில் த்ருவன், பூமியில் விபீஷணன். பூமியின் கீழ் சுதலத்தில் பலிசக்ரவர்த்தி. இவ்வாறு மூன்று உலகத்து மக்களே சாட்சி. இவர்கள் அனைவரும் விதம்விதமான பயங்கள் தமக்கு வந்தாலும், ஸ்ரீஹரியை நம்பி, அந்த பயங்களைப் போக்கிக் கொண்டு வாழ்ந்தனர். இவர்கள் ஹரியை நம்பிய மக்கள்.

தசாவதாரங்களில் பக்தர்களின் பயங்களைப் போக்கி, அவர்களைக் காப்பவன், ஸ்ரீவிஜயவிட்டலரேயனே ஆகிறான்.

5. <u>துரிதகிரிகெ வஜ்ர ஹரிநாம, பக்தரிகெ....</u>

* கஷ்டங்கள் என்னும் பர்வதத்திற்கு வஜ்ராயுதம் போன்றது ஹரி நாமம். (அஜாமிள).
* பக்தர்களுக்கு வஜ்ர கவசம் போன்றவன் ஹரி (பிரகலாத ராஜர்).
* ஸ்ரீஹரியை விடாமல் நினைப்பவர்களுக்கு மதுர பானம் (தேவதைகளுக்கு அமிர்த பானம்).
* நினைப்பவர்களுக்கு சுற்றிலும் நின்று காப்பவன் (5 வயதேயான த்ருவனை காத்தான்).
* அழைத்தால், வைகுண்டத்திலிருந்து வந்து காக்கிறான் (பரீக்ஷித்)

இத்தகைய ஹரியை நினைப்பவர்களின் சங்கத்தில் ஒரு நொடி இருந்தாலும் சரியே. அதிலிருந்து, முக்திக்குத் தேவையான ஞானம் கிடைக்கிறது. நரசிம்மனை வேண்டிய பிரகலாதனுக்கு அருளினானே? ம்ருத்யும்ருத்யு பயங்கரனான நரசிம்ம விஜயவிட்டலன், நம்மை இடைவிடாமல் தொடர்ந்து நம் அருகிலேயே இருந்து காக்கையில், நமக்கு வேறு என்ன பயம்?.

6. <u>உண்டுண்டு விஜயவிட்டலனெந்தவகெ, பயத...</u>

இவ்வாறு ஹரிபதம் நம்பியவர்களுக்கு நரகத்தின் பயம், மாயையின் பயம், விஷயத்தின் பயம், சம்சார பயம், பிறப்பு, இறப்பின் பயம் எதுவும் இருப்பதில்லை. இது வெறும் வீண் பேச்சு அல்ல. விஜயவிட்டலா என்றவனுக்கு பயத்தின் சாயலே தெரியாமல், வைகுண்டத்தின் வழியை அவன் காட்டுகிறான்.

****

----

7. தாரதம்ய சந்தி (அவரோகண)

த்ருவ தாள

த்ரிஜக3 வந்தி3த த்ரிகு3ணரஹித லகுமிநாதா2
அஜவாததா1த அண்டஜராஜ வரூதா2
பு4ஜக3தலோபநீதா பு4ஜக3பூ4ஷித தா3த
பூ4ஜகோ3த்தமக்2யாதா விஜயவிட்டல ப்ரீத
ஸுஜனர மனோரதா2 நிஜதெ3ய்வதக்கு ||1

மட்ட தாள

அஷேஷ தோ3ஷதூ3ர கு3ணபரிபூர்ண
அஷேஷ அவதார அக3ணிதவர்ண
அஷேஷமானந்த3 அத்3பு4தக4ன்ன
சுஷேண நாம விஜயவிட்டலனு
ஈஷ பொ3ம்மாத்3யரிகெ3 விசேஷ மஹிம ||2

ரூபக தாள

இந்தி3ரெ தருவாய விதி4யு மாருதரு
வொந்து3 கோடி கு3ணதி3ந்த3 கடிமெ அவ
ரிந்த3லவர ஸ்த்ரீயரு ஒந்து3 நூரு கு3ண
தி3ந்த3லி அத4மரு யந்து3 திளிவத3
ல்லிந்த3 க3ருட3 சேஷ இந்து3த4ரரிவரு மூவரு
எந்தூ3 ஹத்து ஹத்து கு3ண கடி3மெயெணிஸுரு
த்3வந்த்3வரொளகெ3 மித்ரவிந்தாதி3க3ளுண்டு
இந்தி3ராபதி விஷ்ணு விஜயவிட்டலனாரு
மந்தி3 ஸ்த்ரீயரு யெந்து3 வந்தி3ஸுவரு பி3ட3தெ3 ||3

ஜம்பெ தாள

ஸுரபகாமரு ஸம ஸௌபர்ண்யாதி3ய நோடெ3
எரடை3து3கு3ணகெ ந்யூனவெந்து3 திளிவரு
தருவாய அஹங்கார ப்ராணனெம்பு3வனு
த்வரிததி3 யீரைது3 கு3ண கடி3மெயென்னி

ஸ்தி2ரவஹூது3 அனிருத்3த4 ரதி ஸ்வாயும்பு3வமனு
கு3ரு த3க்ஷ ஷசிக3ளிவராருமந்தி3 ஸமான
மருத அஹங்காரிகெ3 ஹத்து கு3ணகெ நீசா
ரரிவரு ப்ரவாஹ மருதனெம்பு3வனு
வர அனிருத்3த4கி3ந்த ஐது3கு3ணக1த4ம நீ
பரியிது3 யம மானவீ சந்தி3ர ஸூர்யரு ஸம
ஸரி ப்ரவாஹனிகி3ந்த எரடு3 கு3ணகெ நீசா
வருணதே3வரு த4ர்மாதி3க3ள த3ரெயிந்த3லி
அரெவொந்து3 கு3ணகடி3மெ சன்னாகி3 திளிவது3
ஸூரமுனி நாரத3னு ஆபங்கெ3 யெணிஸலு
தருவாய இதரந்தெ யெணிஸுவது3 ஞானிக3ளு
உரராதி3 விஜயவிட்டலன்ன த3யதி3ந்த3 வி
ஸ்தரிஸுவெனு, காம இந்தி3ரகெ3 ஸ்வல்பு நீசா ||4

த்ரிவிடி தாள

ரிஷிபுங்க3வ ப்4ருகு அனலகுமீந்தி3ரனு
ப்ரஸூதி மூவரு விஷமரல்ல
ரஸாதி4பதிய நோடெ3 பாத3கு3ண ந்யூனரு
உஸருவெ கௌஷிகா விதி4ய ஸுதரா
பெஸராத3 மரீசி அத்ரி முனீஷாங்கி3
ரஸ புலஹ க்ரது வஸிஷ்டானு ரஞ்
ஜிஸெ வைவஸ்வதமனு யிந்தெ1ண்டொ1ந்து3ஜனா
மிஸுகத3 ஸமானரு நிஜ ப்4ருக்3வாதி3க3ள
தெ3ஸெயிந்த3 ஸ்வல்பு நீசரு கு3ணத3லி முந்தெ3
பி3ஸஜமித்ர தாரெ நிரருதி ப்ராவஹி
ஷ்வஸனன மட3தி3 ஸஹ நால்வரு ஸமானரு
ரிஷி மரீச்யாத்3யரிகெ3 த்3வௌகு3ணக1த4மரு
ஷஷிரநாமா ஸிரி விஜயவிட்டலன்ன
பி3ஸஜபாத3க்கெ நமிஸுவ குஷலரென்னி ||5

அட்ட தாள

விமல விஷ்வக்ஸேன நாஸத்ய கு3ணபதி
அமல த4னேஷ்வர மருதுக3ளு அ

7. தாரதம்ய சந்தி (அவரோகண)

ர்யமரு ருத்3ரரு வஸூ விஷ்வேதே3வதிக3ளு
அமமக3க3ன த4ரெ பிதராத்3யரு ஸரி
ஸமரெந்து3 கு3ணிபது3 இத3ரொளுவுக்த
க்ரம தாரதம்யவு நமிஸுவெ சவனாதி3 ரிஷி ப்ருதூ2
த்தம கார்த்திவீர்ய ஷஷிபி3ந்த்3வாதி3 ஸார்வ
பௌ4மரு ஸமானரு அஷ்வின்யாத்3யர
க்ரமத3லி இவரு கிஞ்சிது கு3ணன்யூனரு
அமர தட1னி பர்ஜன்ய ஸஞ்ஞளு
ஹிமகரனங்க3னெ ஷ்யாமலெ விராடியரு
ஸமரு க3ணபதிகி3ந்த த்3விகு3ணஹீன
ஸமனஸர முக2னங்க3னெ ஸ்வஹாதே3வி
ஷ்யாமலாத்3யர நோடெ3 கிஞ்சிதுகு3ணஹீன
ஹிமகரனந்த3ன அக்னிராணிகெ3 ஹீன
ஷமத3மெ உஷாதே3வி பு3த4கி3ந்தலி க
டி3மெயொரடு3 கு3ணா ஷனி புஷ்கரனெம்போ3 க
த3ர்ம தே3வதிக3ளிகி3ந்த அஜானஜரு
ப்ரமேயதி3 திளிவது3 ஷதகு3ணக1த4மரு
ப்ரமோத3 நாம ஸ்ரீ விஜயவிட்டலன்ன
நமிஸி இவர அனுக்ரமகு3ண அரிவது3 ||6

ஆதி தாள

தே3வக3ந்த4ர்வரு கெலரு அப்ரதி ரிஷி நூரு
ஆ பூர்வ ஷ்யாத்3யப்ஸர ஸ்த்ரீயரெணிஸு கர்ம
தே3வதிக3ளிகெ3 ஸமானரெந்து3 இத்த க3ன்
த4ர்வ மிக்க முனிக3ளு அஜானஜரிகெ3 ஸ
மவெந்து3 திளிதீ3க3 சிரபித்ருக3ள கு3
ணாவளி அஜானஜரிகெ3 நூறுமடி3 கடிமெயெந்து3
பா4விஸோது3 பிதுர நோடெ3 வுளித3 தே3வதிக3ளு
யாவத்து நூரு மடி3 ஹீனரென்னி மனுஷ்ய க3ன்
த4ர்வரு அவர நோடா3 நீசரு நூருகு3ணகெ1
இவர நோடெ3 க்ஷிதிபரு அவரந்தெ திளிவது3
பூ4வல்லப4ர நோடா3 மனுஷ்யோத்தமரிதெ ஸங்க்2யெ
இவரிந்த3 தாரதம்யவுண்டு1 பஷ்வாதி3ய
ஜீவரவரவரொளக3வாந்தர தாரதம்ய

கோவித3ரு நோடி3 பஷ்வாதி3 ஜீவிக3ள நோடெ3 வ்ருக்ஷ
ஸ்தா2வர ஜங்க3ம ந்யூனருயெந்து3 திளிது3 த்ருண
ஜீவரு கடி3மெ இவரு ஸத்யாஸத்யவெந்து3 அரிது3
ஈ விசாரத3லி நடெ3து3 முக்தி தாரதம்யவெந்து3
பாவமானீ மதத3லி பரிபூர்ண சித்தவிட்டு
பா4வநாம விஜயவிட்டல ஜீவாகி2ல பி4ன்னனெந்து3
ஆவாவ வாக்யத3லி ஸித்3த4வெந்து3 ப4ஜிஸு ||7

ஜதெ

தாரதம்யவெ திளிது3 நடெ3தா3 விஷிஷ்ட2ரிகெ3
பாரு மாடு3வ வத்ஸா விஜயவிட்டலரேயா ||8

****

<u>1. த்ரிஜக வந்தித த்ரிகுண ரஹிதா லகுமிநாதா...</u>

த்ரிஜக வந்தித - 14 உலகங்களாலும் பூஜிக்கப்படும் மகாமகிமன்
த்ரிகுண ரஹித - சத்வ ரஜஸ் தமஸ் குணங்கள் இல்லாதவனாக, திவ்ய அப்ராக்ருத தேகத்தைக் கொண்டவன்.
லகுமிநாதா - அனைத்து வேதாபிமானியான லட்சுமியாலும் பூஜிக்கப்படுபவன்
அஜவாத தாத - பிரம்ம வாயுகளின் தந்தை
அண்டஜ ராஜவரூத - பக்ஷிராஜனான கருடனை ரதமாக கொண்டவன் (அண்டஜ வாகனன்)
புஜக தலோபனீத - சேஷனின் சரீரத்தையே படுக்கையாகக் கொண்டவன்
புஜகபூஷிததாத - சர்வபூஷணருக்கு பிராணதாத
புஜகோத்தம க்யாத - 2,000 நாக்குகளைக் கொண்ட சேஷனால் வணங்கப்படுபவன்
நிஜ தைவதக்ஞ - தன் பக்தர்களான தேவதைகளால் மட்டும் அறியப்படும் மகிமைகளைக் கொண்டவன்.

7. தாரதம்ய சந்தி (அவரோகண)

---

2. அசேஷ தோஷ தூர குண பரிபூர்ண...

அசேஷ தோஷ தூர - சர்வகுண பூர்ணன் ஆகையால், அஸ்வதந்த்ர்யாதி எவ்வித தோஷங்களும் அற்றவன்.
குணபரிபூர்ண அசேஷாவதார - அனைத்து அவதாரங்களும் குணபரிபூர்ணமானவையே.
அகணிதவர்ண - சுக்ல ரக்த பீத கிருஷ்ண ஆகிய வண்ணங்களைக் கொண்டவன்.
அசேஷமானந்த - அனைத்து அவதாரங்களும் ஆனந்தபூர்ணமானவையே.
அத்புதகன்ன - அனைத்து அற்புத மகிமைகளையும் கொண்டவன்
ஸுசேஷ நாமா - அனைத்து இஷ்டங்களையும் நிறைவேற்றுபவன். பிரம்மாதி தேவதைகளுகு ஸ்வாமியாக இருப்பவன். விசேஷ மகிமைகளைக் கொண்டவன். இவன் முதலாம் கக்ஷையை சேர்ந்தவன்.

3. இந்திரே தருவாய விதியு மாருதரு...

இந்திராதேவி, தாரதம்யத்தில் இரண்டாம் கக்ஷையில் வருபவள். இந்திரைக்குப் பிறகு, பிரம்ம வாயுகள் வருகின்றனர். இவளைவிட பல கோடி குணங்களால் குறைவானவர்கள்.

அவர்களைவிட ஒரு நூறு கோடி குணங்களால் குறைவானவர்கள் - அவர்களின் மனைவியரான சரஸ்வதி பாரதியர்.

அடுத்து, கருட சேஷ சந்திரசேகரர் சமமாக இருந்து, அடுத்து அவர்களின் மனைவியர் இவர்களைவிட 100 குணங்களால் குறைவானவர்கள்.

இவர்களுக்குப் பிறகு, காளி, நீலா, பத்ரா, லட்சணா, மித்ரவிந்தாதி தேவியர். இந்த ஷண்மஹிஷியர்கள் கருடாதிகளைவிட ஐந்து குணங்கள் குறைவு என்று இந்த கிருஷ்ணனின் ஆறு மனைவியர்களை வணங்க வேண்டும். இவர்களில் ஜாம்பவதி என்பவள், ரமாதேவியின் ஆவேசம் கொண்டிருப்பவள்.

4. ஸுரபகாமரு ஸம ஸௌபர்ண்யதிய நோடெ...

ஸுரபகாமரு ஸம - இந்திர காமர்கள் சமமாக இருந்து, ஸௌபர்ணி ஆகியோர்களைவிட 10 குணங்கள் குறைவானவர்கள். மன்மதன், பதவியால் சிறிது குறைவானவன்.

தருவாய அஹங்காரிக பிராண - அஹங்காரிக பிராணன் இந்திர காமர்களைவிட 10 குணங்கள் குறைவு.

காமபுத்ர அனிருத்த, ஸ்வாயம்புவ மனு, குரு, தக்ஷ, சசிதேவி, ரதி இவர்கள் சமானர்கள். மற்றும் அஹங்காரிக பிராணனைவிட 10 குணங்கள் குறைவானவர்கள்.

பிரவஹ மாருதன் அனிருத்தாதிகளைவிட ஐந்து குணங்கள் குறைவானவர்.

யம, சூர்ய, சந்திர, ஷதரூபா தேவி ஆகியோர் பிரவஹனைவிட இரு குணங்கள் குறைவானவர்கள்.

யம ஆகியோரைவிட வருணதேவன் பாதபாதார்த்த (3/8) குணங்கள் குறைவானவர்.

சுரமுனி நாரதர் வருணனைவிட (ஆபங்கெ எணிஸலு) பாதார்த்த குண குறைவு.

இந்திரனைவிட காமன் பதவியினால் சிறிது குறைவு.

5. ரிஷிபுங்கவ ப்ருகு அனலகுலேந்த்ரனு...

ரிஷி ஸ்ரேஷ்டரான ப்ருகு, அக்னிதேவ, தக்ஷ இவர்கள் நாரதரைவிட பாதார்த்த குணங்கள் குறைவு.

அடுத்து நதி புத்திரர்களான சப்த ரிஷிகள் - மரீசி, அத்ரி, அங்கிர, புலஸ்த்ய, புலஹ, க்ரம, வசிஷ்ட ஆகியோர் விஷ்வாமித்ர, வைவஸ்வத, மனு, அகஸ்த்ய - ஆகியோருக்கு இரு குணங்கள் குறைவு.

7. தாரதம்ய சந்தி (அவரோகண)

மித்ர நாமக சூர்ய (பிஸஜமித்ர), தாரை, நிரருதி, ப்ராவஹி, இவர்கள் சமானர்கள். மற்றும் மரீச்யாதிகளைவிட இரு குணங்கள் குறைவானவர்கள்.

6. விமல விஷ்வக்ஸேன நாஸத்ய கணபதி...

விமல விஷ்வக்ஸேன, அஷ்வினி தேவதைகள், கணபதி, குபேர (தனேஷ்வர), 49 மருத் கணர்கள், அஷ்டவசுக்கள், த்வாதஷ ஆதித்யர்கள், ஏகாதஷ ருத்ரர்கள், தஷ விஷ்வ தேவதைகள் என மொத்தம் 85 பேர். இவர்கள் சமானர்கள். இவர்களுக்கு நமஸ்காரங்கள்.

உக்த தேவதைகளைத் தவிர, சேஷ ஷதஸ்தர்கள், ஏகாதச மனுகள், உபத்ய, ச்யவன என்னும் ரிஷிகளுக்கும், கர்மஜ தேவதை எனப்படும் கார்த்தவீர்யார்ஜுனனே முதலான 100 பேர் சக்ரவர்த்திகள். இவர்கள் அஷ்வினி தேவதைகளைவிட சிறிது குறைவானவர்கள்.

பர்ஜன்ய என்னும் சூரியன், கங்காதேவி (அமரதடனி), ஆதித்ய என்னும் சூரியன், ஷ்யாமலெ, சந்திரபத்னி ரோகிணி (ஹிமகரனங்கனெ), விராடபிமானினி, அனிருத்த பத்னி உஷெ, சங்ஞெ, இவர்கள் கர்மஜ தேவதைகளைவிட சிறிது குறைவானவர்கள்.

அக்னி பத்னி ஸ்வாஹாதேவி. ஹிமகர நந்தன புத, கங்கை ஆகியோர் இரு குணங்கள் குறைவு.

ஸ்வாஹாதேவியைவிட புதன் இரு குணங்கள் குறைவு. (ஹிமகரனந்தன அக்னிராணிகெ ஹீன).

அஷ்வினி பார்யா உஷெயு - புதனைவிட இரு குணங்கள் குறைவு.

ஷனைஸ்சர மற்றும் தரணீதேவியர், உஷைக்கு இரு குணங்கள் குறைவானவர்கள்.

சனிதேவனைவிட, புஷ்கர கர்மாதிபதி, இரு குணங்கள் குறைவு. அஜானஜ தேவதைகள், புஷ்கரனைவிட சிறிது குணங்கள் குறைவானவர்கள், சிரபித்ருகள்.

7. தேவ கந்தர்வரு கெலரு அப்ரதி ரிஷி நூரு...

சிரபித்ருகளைவிட தேவ கந்தர்வர்கள் சிறிது குறைவானவர்கள்.
தேவ கந்தர்வர்களைவிட மனுஷ்ய கந்தர்வர்கள் 100 குணங்கள் குறைவானவர்கள்.
மனுஷ்ய கந்தர்வர்களைவிட சக்ரவர்த்திகள் 100 குணங்கள் குறைவானவர்கள்.
சக்ரவர்த்திகளைவிட மனுஷ்யோத்தமர்கள் 100 குணங்கள் குறைவானவர்கள்.

ஜீவர்களில் மூன்று விதம். ஸ்வர்க்க, பூ, நிரயப்ரசுரர்.

தமோதிகாரிகள் நான்கு விதம் - தைத்ய, ராக்ஷஸ, பிஷாச, மர்த்யாதமர்.
பசுக்களிலும் தாரதம்யம் உண்டு - இதனை கோவிதர்கள் (அறிஞர்கள்) அறிய வேண்டும்.

பசுக்களைவிட வ்ருக்ஷ ஜீவர்கள் அதமர். த்ருண ஸ்தாவரர்களைவிட கிருமி ஜீவர் உத்தமர். கிருமியைவிட ஆடு, யானை, புலி, சிங்கம், வைஷ்ய, க்ஷத்ரியர், நான்காம் வர்ணத்தவர் ஆகியோர் உத்தமர்.

இத்தகைய தாரதம்யமானது, சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட ஆதாரங்களின்படி உள்ளது என்பதை அறிந்து, இவ்வாறே உபாசனை செய்ய வேண்டும். இந்த தாரதம்யம், முக்தியிலும் உண்டு என்று, ஸ்ரீமதாசார்யரின் மதத்தில் முழுமையாக நம்பிக்கை வைத்து, விஜயவிட்டலன் இந்த அனைத்து ஜீவகோடிகளைவிடவும் மிகவும் வேறுபட்டவன் என்று, இது பிரமாணத்தால் அறியப்பட்டது என்றும் அறிந்து வணங்க வேண்டும்.

---

8. தாரதம்யவெ திளிது நடெதா விஷிஷ்டரிகெ...

தாரதம்யத்தை அறிந்து, தாரதம்யத்தில் முதன் முதலாக இருந்து, குணங்களில் சிறந்தவனாக ஸ்ரீஹரி இருக்கிறான் என்பதை அறிந்தால், சம்சாரத்திலிருந்து நம்மை அவன் விடுவிக்கிறான்.

***

8. ஸ்வோத்தமர நிந்தாவர்ஜன சுளாதி

த்ருவ தாள

நிந்தி3ஸதி3ரு மனவெ மத்4வமதவெ க3தி
எந்து3 நெரெ நம்பி3த3ரெ வைஷ்ணவர
முந்தெ3 நினகெ3 புண்யபா3ரது3 தொ3ரகது3
ஹிந்தெ3 நெஸகி3த3 ஸுக்ருத ப3யலாஹதோ3
இந்த4னபோகி3 அக்3னி மேலெ பி3த்3த3ந்தெவோ
மந்த3னாகி3 கெட3தி3ரு மூர்க்க2மனவெ
நிந்தி3ஸித3 மேலெ ஜனர ப3ளிகெ3 போகி3
வந்தி3ஸி மாதனாடி3த3ரெந்தஹதோ3
முந்த3லெ கொய்து3 முடி3 ஹுவ்வனிட்டந்தெ காணோ
நந்தா3வாகு3வதே3னோ திளிது3 நோடு3
கெந்த3வு பி3ளுபு கப்பு கபிலா மொத3லாகி3
ஒந்தொ3ந்து3 ப3ண்ணத3 கோ3வுக3ளிரலு
நிந்த்3யக்கெ யோக்3யவாத3 கோ3வு மத்தாவதோ3
இந்து3 நின்னொளகெ3 நீனெ விசாரிஸோ
ஸந்தே3ஹகொ3ளஸல்ல ஸதத நீனெஸகு3வ
நந்த3வ கேளெலோ, பஷுவிகெ3 போகி3
வந்த3னெ மாடி3 புண்ய ஸம்பாதி3ஸுவதே3னோ
அந்த3வாகி3த்3த3 பூ4மிஸுரன நோடி3
நொந்து3 ஸைரிஸலாரதெ3 தோ3ஷிஸுவதே3னோ
எந்தெ3ந்தி3கெ3 நினகெ3 புண்யவில்ல
அந்து3 ப்ராம்ஹணனொப்3ப3 ஜாதிஹீனனாகி3
குந்த3தெ3 கிராத ஸ்த்ரீயளல்லீ
நந்த3னரன்னு படெ3து3 இருதிரெ வைனதேய
தந்தெ3 ஆஞ்ஞதி3ந்த3 வேக3தெரளி
ப3ந்து3 அவன நுங்கெ3 க3ண்டலு ஸுட்டு ஆஹா
எந்து3 நுக3ளித3 நோடு3 ஸமஸ்தர
தந்தெ3 பேளித3 மாது நெனெஸிகொண்டு3 மனகெ
தந்தா3 பி3ரம்மா பீ3ஜத3 பௌருஷவ
நந்த3ன்ன கந்த3ஷிரி விஜயவிட்டலரேயன
பொந்தி3த3 தா3ஸர நிந்த்3யவெ ஹரிய நிந்த்3யா ||1

8. ஸ்வோத்தமர நிந்தாவர்ஜன சுளாதி

மட்ட தாள

ஸல்லது3 ஸல்லது3 ப4ய ஹாரிய ப4க்தர
நில்லதெ3 தூ3ஷிஸுவ நிஷ்டுரவசனக3ளு
எல்லித்3த3ரெ ஏனு எந்து நடெ3த3ரேனு
ப3ல்லித3ரு காணோ அவரு ஜக3த்தினொளு
ஸல்லுவரு ஹரிய பாத3ப1ல்ல ஸவஸேவிகெ3
ப3ல்லவரு என்னு யோக்3யதானுஸார
கல்லுமரன தெரதி3 காணிஸிகொளுதிப்பரு
எல்ல கர்மகெ ஹரி தானே ப்ரேரிஸுவனு
மல்லமர்த3ன நம்ம விஜயவிட்டல நித்ய
வல்லப4 நமகெ3ந்து3 நலிதா3டு3வரோ ||2

த்ரிவிடி தாள

இந்தி1ப்ப ப4க3வத்ப4க்தரன நிந்த்3ய மாடு3வவ
ஹந்தமானவர க3தியு கேளு எலெ மனவெ
ஸந்ததி ஸஹவாகி3 நரகத3ல்லி பி3த்3து3
ஸந்ததத3லி ப3ளலி ஆ தருவாயத3ல்லி புட்டி
காந்தாரத3லி பிஷாசிதே3ஹவ தெத்து
ஸந்தாபத3லி பெ3ந்து3 ஹொரளுவரு
பிந்தெ1 பார்வதிபதிய நிந்தி3ஸி த3க்ஷனு
எந்தாத3னு நோடு3 ஸுரர மத்4ய
முந்தெ1 யது3குலத3வரு முனிய வஞ்சிஸலாகி3
அந்த1கன ஸாரித3ரு தமகெ3 தாவெ
நிந்த1 கோ3ஷ்பாதோ3த3க தா3டலாரத3லித்3த3
மந்த்ரோக்த முனிவாலிகி2ல்யாஜனர
ப்4ராந்தியிந்த3லி இந்த்3ர ஆபா4ஸமாட3லு
சிந்தெயிந்த3லி ப3லுவ்யாகுல ஐதி3த3னு
ஸந்தஜனர நிந்த்3ய ஒளிதல்ல ஒளிதல்ல
ஜந்துக3ள அந்த:கரணவ பரியல்லி
ஸந்திஹ்யதோ3 ப3ல்லவராரு வ்ருத்தி
எந்த2வனாத3ரு உத்தமர ஹளித3ரெ
ஷாந்தனாக3தெ3 போ1கா3 ஞானியாகெ3

பந்த2வெ பி3டு3பி3டு3 ஹ்ருத3யதொ3ளகெ3 இத்3த3
க்3ரந்தி2ய களெகொம்ப3 யோக3வல்ல
கிந்து பு3த்3தி4யலிந்த3 கெட்டுபோத3ரெ ஸ
த்பந்த2 தொ3ரகது3 காணோ நானாகர்ம
தந்த்ரமந்த்ரக3ளிந்த3 மாடி3த3 காலக்கு
இந்து மஹாத்மர நிந்த்3யெ ஒந்தே3
அந்தரங்க3த3லி யோசிஸலு ஸ்வஹா
காந்தா மேலுவனய்ய எல்லா புண்ய
ஸந்தோஷத3லி மனுஜ ரத்னபா4ண்ட3வ ரசிஸி
ஷாந்தவாகி3த்3த3 கபிலாவின ஹாலு
க்லாந்தாரஹிதனாகி3 தும்பி3த3 மேலொந்து3
தந்தி மனெயல்லி அத்3தி3 மத்3யத3 பி3ந்து3
ப்1ராந்திகெ3 ஹாக1லு ஷுத்3த4வாஹதெ3, அத3
ரந்தெ திளியபே3கு மாள்பபுண்ய
கந்துஜனக நம்ம விஜயவிட்டலரேய
எந்த2 மாதிகெ3 ஒலிய இது3 இல்லத3வகெ3 ஊளிக3 ||3

அட்ட தாள

ஸ்னான ஸந்த்4யான ஜபதப வ்யாக்2யான
மௌன ஸ்ரவண நீதி1 ஸ்மரணெ கீர்த்தனெ ஸேவெ
ஞான ப4குதி நிர்வேத3 யாக3 யோக3
கா3ன யாத்ரீதீர்த்த2 நானா பரிபரி
தா3ன வித்3யாப்3யாஸ சிஷ்யஸந்ததி ஸன்
தான ஷரீர காந்திபூ4ஷண
மான மந்தி3ர வஸ்த்ர மித்ர ப3ந்து4 ப3ளக3
யான ம்ருஷ்டான்ன போ4ஜன க3ஜாஷ்வகோ3வு
தா4ன்ய த4ன வ்ருத்தி க்ஷேத்ர வன தடாக வாபி
க்ஷோணி விபு3த4ஸ்தோத்ர ஜனகஜனனி ப்4ராத்ரு
ஆனந்த3 அதிஷய த4ன தா4ன்ய ஆஷ்ரம
த்ராணா ப்ரீணா ஸர்வஜாதி பூ4தத3ய
பாணிசரண மிக்க இந்தி3ரிய வ்யாபார
ஏனேனு வைதி3க லௌகீக த4ர்மவு
ஸ்ரீனிவாஸகெ3 ப்ரீதிகரவாகி3 நிருதார
ஆனந்த3தீர்த்த2ர கி3ரந்த2 ஸம்மததி3ந்த3

8. ஸ்வோத்தமர நிந்தாவர்ஜன சுளாதி

அனந்தானந்த ஈ ப3கெ3யல்லி இத்3த3ரு
நானல்ல இத3கெல்ல ஹரியெ கர்த்ருனெந்து3
நானெம்பு3து3 உண்டு ஹரி இத்1த1ரு எந்து3
நானெ அஸ்வாதந்த்ர ஹரி ஏகா ஸ்வாதந்த்ர
ஸானுராக3தி3ந்த3 அதீ4னசிந்திஸி
அனாதி3காலக்கெ இது3 ஸத்ய இது3 ஸத்ய
மாணாதெ3 ப3ஹுவித4 ஆபத்து ப3ந்த3ரு
அனாத2ப3ந்து4வெ அசிந்த்யத்3பு4தஷக்த
நீனெ க3தி எந்து3 இரளுஹக3லு ஹீகெ3
ஞானோபாஸனெ மாடி3த3 மனுஜன்ன
நீ நிந்தி3ஸலாக3து3 பே3டி3கொம்பெ3
பூ4னிர்ஜரமணிய அவஞாதி3ந்த3
அனர்த்த2வாகோ3து3 இந்த2 உத்தமகு3ண
ஞானிய திரஸ்காரமாட3லு விபத்து
எணிஸலாக3து3 எலோ மனவெ திளி
மௌனவெ தாளி து3ஷ்டவாக்யக3ளிந்த3
ஏனேனு அவரல்லி இத்3த3 ஸம்பத்துனெ
நீ நோடி3 நிந்தி3ஸெ நினக3தெ3 எந்தி3கு3
தானில்லதெ3 போகோ3தோ3 மூடா4த்மா
ஈ நுடி3 நிஜவென்னு முக்தியோக்3யர மெச்சு
நானெம்ப3வகெ3 விஷ்வாஸபுட்டது3 காணோ
தா3னவாந்தக ரங்க3 விஜயவிட்டலரேய
ஞானியாத3வனிகெ3 ஸோதிஹனோ நித்ய ||4

ஆதி தாள

ரணத3ல்லி பார்த்த2ன்ன ஸம்ஹரிஸுவனெந்து3
ஹொணகி1யிந்த3லி ப3ந்து3 ஸ்ருதாயுத4 கோபத3லி
க4னக3தெ3யனு திருஹி இடு3வெனெந்து3 ஸ
ர்ரனெ ஸமீபக்கெ ஸாரெ ஹரி ரத2 ஓட்3யாடி3ஸி
த3ணிஸலாக்ஷண அவனு உக்3ரக3தெயிந்த3
வனஜனாப4ன ஹொய்யெ தத்காலகெ உரளி
த்ருணவ உரஹித3ந்தெ ஷ்ருதாயுத4ன ம
ர்த்த3ன மாடி3து நோடா3 ஏனெம்பெ3 கௌதுகவ
முனிது3 பாண்ட3வர மேலே வைஷ்ணவாஸ்த்ரவ ப4க3த3

த்தனு ஹாகலு மஹாப்ரளயாக்3னியந்தெ ப3ரலு
அணுமஹத்து ரூபக்ருஷ்ண ப4க்தரிகா3கி3
அனுகம்பனதிந்த3 உரத3ல்லி தாளித3னு
இனிது1 ப4க்தவத்ஸல ஷரணரிகெ3 ப3ந்த3 மாது
தனகெ3 மேலெ ஹாகிகொண்டு3 பாலிஸுவவனு க3ட3
மனுஜன்ன கு3ணகர்மவளகெ3 நிந்தி3ஸித3ரெ
அனிமிஷவ்ராதக்கெ நிந்தி3ஸித3ந்தெ காணோ
அனுதினல்லி இவரு அபி4மானிக3ளாகி3
தி3னதி3னகெ1 மாடி3ஸுவரு ஸத்ப்ரவர்த்திமார்க்க3
கு3ணவந்தனெ கேளு பூ4மியொளகெ3 ஓப்3ப3
த4னவந்தனிருதிப்ப நானா ஸௌக்2யத3ல்லி
அனுஸூய தொரெது3 நித்யத3ல்லி பா4க்யவந்தன
மனெ மிகி3லாத3 ஜனகெ நிந்தி3ஸலு ஸும்மனிஹனெ
மனவெ லாலிஸு மாது தே3வதிக3ளு தாவெ
க3ணனெ இல்லதெ3 சரியா இவனிந்த3 மாடி3ஸுவரு
க1னஸிலி மனஸிலீ பரனிந்த்ய பி3டு3பி3டு3
த்ரிணி நேத்ரகா3த3ரு ஈ கு3ணஸல்லது3
ஜனனமரண ப3ஹுஸாரிகெ3 தெத்தத3ராகெ3
எணிஸுவரு நின்ன நிந்த3கத3வனெந்து3
இன ஷஷிவுள்ளனக அபகீர்த்தி பா4ஜனனாகி3
பி3னகு3மதியல்லி ப3து3கித3ரேனு கு3ணவோ
வனஜபீட2ன கல்பஷத ஸா
த4ன மாடி3கொண்டி3ரலு யாவத்து கெடி3ஸுவதோ3
மணிக3ணதி3ந்த3 ஒள்ளெ ப்ரவாள ஸரரசிஸி
கொனெகெ3 அஸ்தி2ய மணி இட்டு த4ரிஸித3ந்தெ
தனுவு ஷிசியல்லா மெச்சரு நோடி3த3வரு
க4னதன உளியது3 முந்த3கெ கத்தெயாஹ
சினுமயமூருதி நம்ம விஜயவிட்டலனங்க4ரி
நெனெத3வரு ப3லுபா4க்ய கு3ணாட்3யரென்ன மனவெ ||5

ஜதெ

ஸகலதோ3ஷககெ3 ப்ராயஸ்சித்த உண்டு1, நின்
த3ககெ3 இல்லவு காணோ விஜயவிட்டல ப3ல்ல ||6

8. ஸ்வோத்தமர நிந்தாவர்ஜன சுளாதி

***

<u>1. நிந்திஸதிரு மனவெ மத்வமதவெ கதி...</u>

பகவத்பக்தர்களை, தன்னைவிட உத்தமர்களை, குரு, பெரியவர்களை என்றும் நிந்திக்காதீர்கள். குரு, பெரியவர்களை நிந்தித்துவிட்டு, மத்வ மதமே நமக்கு கதி என்று விடாமல் நம்பினாலும், சிறிது கூட புண்ணியம் கிடைக்காது. வைஷ்ணவர்களின் கூட்டத்தில் நீயும் சேர்ந்து ஆடினாலும், புண்ணியம் கிடைக்காது.

இப்படியாக ஸ்வோத்தமரின் நிந்தனையினாலேயே கர்ணன் பரசுராமனின் சிஷ்யனாக ஆனாலும், அவனுக்கு அவர் கற்றுக் கொடுத்த எந்த மந்திரமும் நற்செயல்களும் தக்க பலன்களைக் கொடுக்கவேயில்லை.

ஹிந்தெ நெஸகித ஸுக்ருத பயலாஹுதோ:
ஸ்வோத்தமரின் நிந்தை, இந்த பிறவியில் செய்த புண்ணியங்களின் பலன்களைக் கொடுப்பதில்லை. அதுமட்டுமல்ல, முற்பிறவிகளில் செய்த புண்ணியங்களும்கூட, நிந்தித்தவர்களிடம் போய் சேர்ந்துவிடுகிறது.

இந்தன போகி அக்னிய மேலெ பித்தந்தெ:
தகதகவென்று நன்றாக எரியும் நெருப்பின் மேல் உலர்ந்த கட்டையை போட்டால், அது நன்றாக எரிந்து சாம்பல் ஆவதைப் போல, ஸ்வோத்தமரை திட்டுவது என்னும் நெருப்பில், புண்ணியம் என்னும் உலர்ந்த கட்டை விழுந்து, பஸ்மம் ஆகிவிடுகிறது. இந்த உண்மையை அறிந்து, நெருப்புடன் விளையாடப் போய் அதிலேயே விழுந்துவிடும் விட்டில்பூச்சியைப் போல - கெட்டுப் போகாதே, முட்டாள் ஆகாதே.

நிந்திஸி மாதனாடிதரெந்தஹுதோ:
விப்ரா: பஷ்சமிபுத்தய: - என்று சொல்வதைப் போல, முதலில் திட்டிவிட்டு, பிறகு அவரிடம் சென்று அவரை வணங்கி, நல்வார்த்தைகளை பேசினால், முன்னர் திட்டியதால் உண்டான மனக்கசப்பு நீங்கி விடுமா?. இது எப்படி இருக்கிறது என்றால்,

தலைமுடிகளை நன்றாக வெட்டிவிட்டு, பிறகு மல்லிகைப்பூ வாங்கினால், கத்தரிக்கப்பட்ட கூந்தல் மறுபடி வந்துவிடுமா?.

நந்தமாகுவுதேனோ திளிது நோடு:
பாண்டவர்களுக்கு பாதி ராஜ்ஜியத்தைக் கொடு. அவர்களையும் உன் மக்கள் என்றே கருது - என்று உபதேசம் கூறிய விதுரனை, திருதராஷ்டிரன் திட்டி, வெளியே அனுப்பினான். அதனால், விதுரன் பாண்டவர்களிடம் வந்தான். இதனை அறிந்த திருதராஷ்டிரன், மறுபடி விதுரனை அழைத்து, நீ என்னிடமே இருக்க வேண்டும். நீ இல்லாமல் எனக்கு இறந்து விட்டதைப் போல தோன்றுகிறது என்றெல்லாம் சொல்லி, விதுரனிடம் மன்னிப்பு கேட்டு, சமாதானம் செய்தான். ஆனால், முன்னர் திட்டிய கடுஞ்சொற்களால் மனதிற்கு உண்டான துன்பங்கள் போவதாக இல்லை.

நாவிதரிடம் முடி வெட்டு என்று சொல்லி, அவர் தவறுதலாக முழு கூந்தலையும் வெட்டி விட்டு, பின் தவறுக்கான பிராயச்சித்தமாக தலையில் வைத்துக்கொள்ள பூ வாங்கிக் கொடுத்ததைப் போல இந்த சம்பவம் இருக்கிறது. பூ வாங்கிக் கொடுத்தால், முன்னர் போன முடி திரும்ப வருமா? அவர்களுக்கு நந்த (மகிழ்ச்சி) ஆவதில்லை.

கெண்டவு பிளிபு கப்பு கபிலா மொதலாகி:
கங்கு கருப்பு, வெள்ளை, சிவப்பு என பல வண்ணங்களில் இருக்கிறது. அப்படியே ஹரிபக்தரும்கூட பல வண்ணத்தில் இருக்கின்றனர். தேவதைகள், ரிஷிகள், மானவர்களாக இருப்பர். இந்த யாரையும் திட்டுவது சரியல்ல. விபீஷணன் அசுர குலத்தை சேர்ந்தவன். ஆனால், ராம ஹனுமர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டான். பிரகலாதன் அசுர குலம். நரசிம்மனின் அபய ஹஸ்தத்தைப் பெற்றவன். பக்தர்கள் எந்த வண்ணத்தில் இருந்தால் என்ன?. அவர்களை திட்டுவது சரியல்ல.

பசுக்கள் சிவப்பு, வெள்ளை, பழுப்பு என பல நிறங்களில் உள்ளன. அதில் வெள்ளைப் பசு மட்டுமே பூஜைக்கு உரியது. பழுப்பு பூஜைக்கு ஏற்றதல்ல என்று சொல்ல முடியுமா?. அதேபோல, சுக்ல ஏகாதசி உபவாசம் செய்ய வேண்டும். கிருஷ்ண ஏகாதசி உபவாசம்

தேவையில்லை என முடியுமா? இதனை சரியாக அறிந்து பயன்பாட்டிற்குக் கொண்டு வரவேண்டும்.

ஸதத நீனெஸகுவ புண்யவ கேளலோ:

தினமும் நீ செய்யும் புண்ணிய காரியத்தை சொல்கிறேன் கேள். ஸ்ரீஹரியின் சல பிரதிமைகளில், பிராமண, பசு, சூர்ய ஆகியவற்றில் ஸ்ரீஹரியின் விசேஷ சன்னிதானம் உள்ளது. பசுவிடம் சென்று, வணங்கி, புண்ணியம் சம்பாதித்தது சரியே. ஆனால், இன்னொரு பிரதீகமான பூமியின் தேவதை என்று சொல்லக்கூடிய பிராமணனை திட்டி தூஷித்தால் உனக்கு என்றென்றும் புண்ணியம் வருவதில்லை. இதற்கு மகாபாரதத்தில் சரியான உதாரணம் இருக்கிறது.

கருடன் அமிர்தம் கொண்டு வரப் புறப்பட்டான். நடுவில் பசி எடுத்ததால், நிஷாதர்கள் இருக்கும் ஒரு தீவிற்கு வந்தான். அங்கிருந்த துஷ்டர்களை முடித்துவிட்டுப் போ என்று தந்தையான கஷ்யபர் சொல்லியிருந்தார். ஆனால், அவர்களில் ஒரு பரமபக்தனும் இருந்தான். விதிவசத்தால், அவன் தகாத உறவில் ஈடுபட்டு ஜாதி-பிரஷ்டம் செய்யப்பட்டிருந்தான். அவனை மட்டும் விட்டுவிடு என்றும் சொல்லியிருந்தார் தந்தை.

தந்தையின் ஆணைப்படி புறப்பட்ட வைனதேயன் (கருடன்), துஷ்ட நிஷாதர்களை விழுங்கும் சமயத்தில், அங்கிருந்த சண்டால காமுகர்களையும் விழுங்கினான். விழுங்கும்போது நெருப்பு கோளத்தை விழுங்கியதைப் போல ஆயிற்று. அவர்களை மறுபடி துப்பினான். தந்தை கூறியது நினைவுக்கு வந்தது. பிராமண குலத்தின் சிறப்பு என்னவென்று புரிந்தது.

இவ்வாறு நந்தனகந்த விஜயவிட்டலனை அடைந்தவர்களை திட்டினால், அது ஹரியை திட்டுவதைப் போலவே ஆகிறது.

<u>2. ஸல்லது ஸல்லது பய ஹாரிய பக்தர</u>...

ஹரிக்கு சம்பந்தப்பட்ட ஹரிதாச வர்க்கத்தவர்களுக்கு, பிறரின் கெட்ட சொற்களால் எவ்வித பயமும் தேவையில்லை. ஹரியின்

நாமாம்ருதத்தை தினமும் பானம் செய்து கொண்டிருக்கும் அவர்கள், மஹாபுண்யவந்தர். இத்தகையவர்களை, எங்கும், எப்போதும், எவ்விதமாகவும், கெட்ட சொற்களைப் பேசினால், அவர்கள் ஸ்ரீஹரியின் பக்தர்கள் ஆகையால், எவ்வித பயமும் அவர்கள் கொள்வதில்லை.

ஹரியின் சேவையை அனுதினமும் செய்து கொண்டிருக்கும் இவர்கள், யார் எதை சொன்னாலும், அதனால் அவர்களுக்கு எவ்வித பயமும் இருப்பதில்லை. ஹரியின் பாத பத்ம சேவையில் ஈடுபட்டிருக்கும் இவர்கள், யார் என்ன சொன்னாலும் அதனால் பாதிக்கப்படுவதில்லை. ஹரியை அறிந்த இந்த மக்கள், திட்டுபவர்களுக்கு மிகப்பெரிய பாறைகளைப் போலவும், பெரிய மரத்தைப் போலவும் காட்டியவாறு, அவர்களின் வசவுச் சொற்களுக்கு செவிசாய்க்க மாட்டார்கள். சாம்பல் மூடிய கங்கினைப் போல, தம் உண்மையான தகுதியை மெச்சிக் கொண்டு சஞ்சரிப்பார்கள். அனைத்து கர்மங்களுக்கும் ஸ்ரீஹரி தானே ப்ரேரகன். அவர்களை திட்டுமாறு செய்விப்பவனும் ஸ்ரீஹரியே. அனைவரையும் வழி நடத்தும் விஜயவிட்டலன், நித்யவல்லபன், நம்மவன் என்று மகிழ்ச்சியுடன் காலத்தை கழிப்பார்கள், ஹரிபக்தர்கள்.

3. இந்திப்ப பகவத்பக்தரன நிந்த்ய மாடுவவ...
பகவத் பக்தர்களை திட்டுபவர்கள், கொல்பவர்களின் கதி அதோகதி. இத்தகையவர்கள், தாம் மட்டுமல்ல, தம் சந்ததியுடன் நரககூபத்தில் விழுந்து, அங்கு பற்பல துன்பங்களை அனுபவித்து, வாடி வதங்கி, மறுபடி பூமியில் பிறக்கின்றனர். அடர்ந்த காடுகளில் பிசாசு தேகத்தைப் பெறுவார்கள். பிசாசு பிறவியில் உணவு, தண்ணீர் எதுவும் கிடைக்காமல் துக்கத்தில் வீழ்வார்கள்.

பிந்தெ பார்வதிபதிய நிந்திஸி:
முன்னர், பார்வதிபதியான ருத்ரதேவரை திட்டிய தக்ஷ பிரஜாபதி, பின்னர் தேவதைகளின் நடுவில் தலை தூக்கமுடியாதவாறு அவமானப்பட்டார்.

8. ஸ்வோத்தமர நிந்தாவர்ஜன சுளாதி

த்வாபர யுகத்தில், 5,000 பேர் யதுகுலத்தவர்கள், விஷ்வாமித்ரரிடம் நகைச்சுவைக்காக, சாம்பனுக்கு பெண் வேடம் போட்டு, 'இவளுக்கு எந்த குழந்தை பிறக்கும்?' என்று கேட்க, அவரும் 'இவனுக்குப் பிறக்கும் தண்டாயுதத்தால், யாதவ குலமே அழியப்போகிறது' என்று சபித்தார். பின், அதைப் போலவே ஆயிற்று.

வாலகில்யர்கள் 60,000 பேர் இருந்தனர். கட்டைவிரல் அளவு அவர்களின் உயரம் இருந்தது. கஷ்யபர் ஒரு யக்ஞத்தை துவக்கினார். அந்த யக்ஞத்தில் பங்கு பெற்ற இவர்கள், பசுவின் குளம்பில் தேங்கி நின்ற நீரினை தாண்ட முடியாமல் நின்றனர். இவர்களின் நிலையைக் கண்ட இந்திரதேவர், இவர்களை கேலி செய்தார். கருடன் உன் கர்வத்தை போக்குவான் என்று இவர்கள் இந்திரனை சபித்தனர். பின் அதன்படியே ஆயிற்று. ஆகவே, சந்தஜனர்களின் நிந்தனையை யாரும் செய்யக்கூடாது. எந்த புருஷர்களில் என்ன சக்தி இருக்கிறதோ என்று நமக்குத் தெரியாது. அவர்கள் செய்யும் தொழில் நீச தொழிலாகவே இருந்தாலும், அவருடைய சக்தி தெரியாமல் திட்டக்கூடாது.

தர்மவியாதர், மாமிசம் செய்யும் தொழிலை செய்து வந்தாலும், பகவத் பக்தராக இருந்தார். அவரின் செயல்களைக் கண்ட கௌஷிக பிராமணன் அவரைத் திட்டினான். பிறகு உண்மையை அறிந்து மன்னிப்பு கேட்டான். ஆகவே, ஒருவன் எத்தகையவனாக இருந்தாலும், அவனுடைய உண்மையான ஸ்வரூபத்தை அறியாமல் அவரைத் திட்டினால், வாழ்க்கையில் அமைதி கிடைக்காது. உத்தமர்களை திட்டும் மக்களை, அந்த குலத்தையே நாம் விட்டு விலக வேண்டும். அப்படி செய்தால் மட்டுமே, இதயத்தில் இருக்கும் அஞ்ஞானத்தை நாம் விலக்கிக் கொள்ள முடியும்.

புத்தி கெட்டுப் போய், திட்டக்கூடாதவர்களை திட்டினால், சஜ்ஜனர்களின் சங்கம் நமக்குக் கிடைக்காது. சஜ்ஜனர்களை திட்டி, அவர்களை அவமானப்படுத்தி, பிறகு, என்னென்ன பிராயச்சித்தம் செய்தாலும், மந்திர ஜப பாராயணாதிகளை செய்தாலும், முன்னர் மகாத்மரை திட்டிய பாவத்தினால் அவை அனைத்தும், ஸ்வாஹா என்று அக்னியில் போட்ட அனைத்து பொருட்களும் சுட்டுப்

பொசுங்குவதைப் போல, அந்த மந்திர தந்திரங்களும், நிந்த்யா என்னும் அக்னியில் விழுந்து பஸ்மம் ஆகிறது.

மனுஜ ரத்னபாண்டவ ரசிஸி:

இதற்கு ஒரு உதாரணம் இருக்கிறது. ரத்னமய பாத்திரம் ஒன்றை செய்து, ஷாந்த ஸ்வரூபமான ஒரு பசுவின் பால் அதில் நிரப்பி, அதில் ஒரேயொரு துளி சுரா (மத்ய பானம்) அதில் சேர்த்தால், அந்த மொத்த பாலே பூஜை, நைவேத்தியத்திற்கு தகாததாக ஆகிறது. அப்படியே, சஜ்ஜனர்களை திட்டியவர்கள் செய்த புண்ணியங்கள் அழிகின்றன. இத்தகைய பேச்சுகளுக்கு ஸ்ரீஹரி மகிழ்வதில்லை. இத்தகைய தோஷம் இல்லாதவர்களுக்கு, தான் சேவகனைப் போல இருந்து காக்கிறான்.

4. ஸ்னானஸந்த்யான ஜபதப வியாக்யான...

நாம் செய்யும் தீர்த்த ஸ்னான, த்ரிகால சந்த்யாவந்தனம், பற்பல மந்திர ஜபங்கள், உபன்யாஸ, மௌன, சாஸ்திர ஸ்ரவண, நியாய மார்க்கத்தை பின்பற்றுவது, ஹரிஸ்மரணை, ஹரி பஜனை, குரு மூத்தவர்களின் சேவை, சாஸ்திர ஞானம், ஹரிபக்தி, விஷய வைராக்ய (நிர்வேத), யக்ஞ யாகாதிகள், ஹரியிடமே மனதை வைப்பது (யோக), சங்கீத சேவை (கானம்), யாத்திரைகள், தீர்த்த க்ஷேத்ரங்களுக்கு செல்வது, பற்பலவித கோதானங்கள், வித்யாப்யாஸம் செய்விப்பது, சிஷ்யர்களை தயார் செய்வது, சந்தான அபிவ்ருத்தி, சரீரத்திற்கு காந்தி கொடுக்கும் அலங்கரணங்கள், கௌரவ (மான) மந்திரத்தைக் கட்டுவது, ம்ருஷ்டான்ன தான, ம்ருஷ்டான்ன போஜன, கஜ, அஷ்வ கோ ஆகியவற்றை காப்பது, தான்ய தன சம்பாதனம், பூ-தானம் கொடுப்பது, ஞானிகளின் ஸ்துதி, பிரம்மசர்யாதி ஆசிரமங்களை பின்பற்றுவது, பிராணிகளை ஆபத்திலிருந்து காப்பது, மற்றவரை மகிழ்ச்சிப்படுத்துவது, அனைத்து பிராணிகளிடம் கருணை, கை-கால் முதலான இந்திரியங்களின் நடவடிக்கைகள் -- ஆகிய அனேக லௌகிக வைதிக தர்மங்கள் எவ்வளவு இருக்கின்றனவோ, அவை

அனைத்தும் ஸ்ரீமன் மத்வரின் கிரந்தத்தில் கூறியுள்ளபடி, ஸ்ரீநிவாஸனுக்கு ப்ரீதிகரமாக இருக்கின்றன.

இந்த செயல்கள் அனைத்தும் அனந்தானந்த விதமாக இருந்தாலும், இவற்றிற்கு நான் ஸ்வதந்த்ர கர்தன் அல்ல, ஸ்ரீஹரியே பிரதான கர்தன். ஹரியால் கொடுக்கப்பட்ட அஸ்வதந்த்ர கர்தன் நான் என்று அறிய வேண்டும். இப்படியாக பக்தியுடன் அவனின் அதீனன் நான் என்று சிந்தித்து, ஹரியின் அதீனத்தை என்றும் மறக்கக்கூடாது. இந்த ஹரி அதீன கர்த்ருத்வத்தை பலவிதமான ஆபத்துகள் வந்தாலும், இதனை விடக்கூடாது (மாணாதெ).

அனாத பந்து, ஆபத்பாந்தவனே, அசிந்த்யாத்புத சக்தி உள்ள நீயே எனக்கு கதி, கோத்ரம் என்று இரவும் பகலும் உபாசனை செய்த மானவனே உண்மையான உத்தம பக்தன். இத்தகைய அனுசந்தானம் உள்ள சஜ்ஜனர்களை திட்டாதீர்கள் என்று வேண்டிக் கொள்கிறேன்.

பூ-நிர்ஜரமணியை (பூதேவமணி - பிராமணன்) புறக்கணித்தால் மகா அனர்த்தம் உண்டாகிறது. இத்தகைய உத்தமர்களை புறக்கணித்தால், மகா விபத்தினை சந்திக்க சாத்தியம் இருக்கிறது என்று அறிய வேண்டும். அவர்களிடம் துஷ்ட கடும் சொற்களை பேசாமல், அப்போது மௌனமாக இருக்க வேண்டும். தன்னைவிட உத்தமர்களிடம், ஞானாதி எவ்வித உத்தம செல்வங்கள் இருக்கின்றவோ, அவற்றைப் பார்த்து நீ பொறாமை கொள்ளாதே. அப்படி இருந்தால், அந்த ஞானாதி செல்வங்கள் உனக்கு வருவதில்லை. இந்த வாக்கியங்கள் அனைத்தும் உண்மை என்றே அறி. இது முக்தி யோக்யருக்கு தக்க வாக்குகள் ஆகும்.

அனைத்தும் நானே, என்னாலேயே அனைத்தும் நடக்கிறது என்னும் கர்வம் கொண்டவர்களுக்கு இந்த வாக்கியங்களில் நம்பிக்கை ஏற்படாது. விஜயவிட்டலன் ஸ்வதந்த்ர கர்த்தனான ஸ்ரீஹரியே என்பதில் நம்பிக்கை உள்ளவனுக்கு தன்னையே கொடுப்பான்.

5. ரணதல்லி பார்த்தன்ன ஸம்ஹரிஸுவனெந்து...

ஸ்ரீஹரி, பகவத் பக்தர்களை ஒவ்வொரு அடியிலும் காக்கிறான் என்பதற்கான தக்க உதாரணங்களை இந்த தாளத்தில் கொடுக்கிறார் தாசர்.

போர்க்களத்தில், பார்த்தனைக் கொல்கிறேன் என்று கோபத்துடன் ஸ்ருதாயுதன் வேகமாக தன் கதாயுதத்தை சுற்றியவாறு, அர்ஜுனனின் மேல் எறிய, ஹரியின் ரதத்தின் பக்கம் ஓடி வந்தான். அப்போது ஸ்ரீகிருஷ்ணன் அவனிடம் சிக்காமல், ரதத்தை ஓட்டியவாறு, அவனையும் ஓட வைத்தான்.

இதனால் கோபம் கொண்ட ஸ்ருதாயுதன், தன் உக்ர கதையை உபேந்திரனின் இதயத்தில் அடிக்க புறப்பட்டபோது, அந்த கதை அவனையே அடித்தது. ஒரு கிருமியை அடிப்பதைப் போல, அந்த கதை, அவனையே பூமியில் அடித்துத் தள்ளியது. இத்தகைய ஆச்சரியத்தை என்னவென்று சொல்வேன்?.

முனிது பாண்டவர மேலெ:

ஸ்ரீஹரியின் பக்த வாத்ஸல்யத்தைப் பற்றிய இன்னொரு உதாரணம் இது.

நரகாசுரனுக்கு, வராகரூபி ஸ்ரீஹரி, வைஷ்ணவ அஸ்திரத்தை கொடுத்திருந்தான். அது நரகாசுரனின் மகனான பகதத்தனிடம் வந்தது. அவன் போரில் அதனை அர்ஜுனன் மேல் எறிந்தான். அது மகா பிரளய காலத்து அக்னியைப் போல ஒளிர்ந்தவாறு வந்து கொண்டிருந்தது. அணுவாகவும், மஹத் ஆகவும் ஆக வல்லவனான ஸ்ரீஹரி, அதனை தானே தரித்து, பக்தனை காப்பாற்றுவேன் என்னும் தன்னுடைய வாக்கினை காப்பாற்றிக் கொண்டான். இவ்வாறு பக்தர்களுக்கு வந்த ஆபத்துகளை தன் மேல் போட்டுக் கொண்டு காப்பாற்றுவான்.

இத்தகைய பக்தர்களின் குண கர்மங்களை அறியாமல் அவர்களை நிந்தித்தால், தத்வாபிமானி தேவதா சமூகத்தை நிந்தித்த பாவத்திற்கு ஆளாகிறார்கள். இந்த தேவதைகளே இவர்களின் அபிமானிகளாக இருந்து, அனேக சத்கர்மங்களை, இந்த பக்தர்கள் மூலமாக செய்விக்கின்றனர்.

8. ஸ்வோத்தமர நிந்தாவர்ஜன சுளாதி

ஒரு செல்வந்தன் பற்பல சுகங்களை அனுபவிக்கிறான். அவனின் வீடு, உறவினர்களை திட்டினால் அவன் சும்மா இருப்பானா? இப்படியிருக்கையில், தேவதைகள் தாமே சிறிய கர்மங்களை (சரியா) இவன் மூலமாக செய்விக்கிறார்கள். இவற்றை அறிந்து, கனவு நினைவுகளிலும் பர நிந்த்யை செய்தால், இந்த தேவதைகள் பார்த்துக் கொண்டு சும்மா இருப்பார்களா?.

பல பிறவிகளை எடுத்து வந்தாலும், இவன் நிந்தகன் என்று அந்த தேவதைகள் அறிந்து கொள்வார்கள். இவனுக்கு சூரிய சந்திரர்கள் இருக்கும்வரை அபகீர்த்தியே வரும். இத்தகைய வாழ்க்கையை எடுத்து என்ன லாபம்?.

பிரம்மதேவனின் 100 கல்ப சாதனை செய்தாலும் (வனஜபீடன கல்பஷத), பெரியவர்களைத் திட்டிய பாவம் போகாது. இவ்வளவு சாதனை செய்தாலும் அந்த பாவம் போகாது என்று அர்த்தம். அனேக சாதனைகளை செய்து, ஸ்வோத்தமரைத் திட்டுவது எப்படி இருக்கிறது என்றால், முத்து, மாணிக்கம், பவழம் ஆகிய நவரத்தினங்களால் முத்து மாலை ஒன்றினை தயார் செய்து, கடைசியில் இறந்தவனின் எலும்புத்துண்டு ஒன்றினை அதனுடன் சேர்த்து அணிந்தால், சரீரமே அபவித்ரம் ஆகிறது. அவனின் தேகம் சுத்தம் ஆவதில்லை. இவனை பார்ப்பவர்கள், தம் அருகில் அவனை சேர்ப்பதில்லை. இந்த சாதனையில் எந்த பலனும் இல்லை. அடுத்த பிறவியில் கழுதை ஆகிறான். விஜயவிட்டலனை நினைப்பவர்கள், மிகவும் பாக்யவந்தர்கள், அத்யந்த மரியாதையை அடைவார்கள்.

6. ஸகலதோஷககெ ப்ராயஸ்சித்த உண்டு...

அனைத்து தோஷசாலிகளுக்கும் பிராயஸ்சித்தம் உண்டு என்றாலும், நிந்தனை செய்யும் மனிதனுக்கு பிராயஸ்சித்தமே இல்லை. இது விஜயவிட்டலனே அறிவான்.

****

9. ஜீவர அஸ்வதந்த்ர சுளாதி

த்ருவ தாள

சிந்தெ மாடு3வுத3ல்ல சின்மயமூர்த்தி பாதா3
க்ராந்தனாகி3த்3த3 மேலெ எலெ மனவே
எந்தாகு3வுதெ3 க3தி எனகெ3ந்து3 வ்யாகுலதி3
ஸந்தத ப3ளலதி3ரு த்3ருட4வ தொரது3
சிந்தாமணியு ஒலிது3 பெ3ம்பி3ட3த3லெ இத்3து3
நிந்த1ல்லி நிதா3னக3ரிவுதி1த3கோ
ப்4ராந்தனாகி3 ப3ரிதெ3 கண்ட3த்3து3 ஹம்ப3லிஸி
அந்தவில்லத3 நரகக்கெளியதி3ரு
மந்த்ரதந்த்ரக்கெ ஷிலுக மஹதா3தி3க3ள ஒடி3ய
ஸந்தரிஸுவ நோடு3 கெ3ளெயனாகி3
இந்தீ1பரி நினகெ3 ஆனந்த3வைப4வ
முந்தெ1முந்தா1கி3 நிந்தி3ருவது3 கேளெலோ
சிந்திஸித3ந்தெ ஜனகெ ஸாத4ன மாடி3ஸுவ
கந்துபித நம்ம விஜயவிட்டலரேய
ஷாந்தமூருதி நம்பி3த3வரிகெ3 ஸுதா4ஹ்ருத3வோ ||1

மட்ட தாள

எத்திகெ3 ப4க்தத3 சிந்தெ யாதக்கெ
கத்திகெ3 ப3ணவிய யோசனெ யாதகெ
தொத்திகெ3 ஒடெ3யன ப4விஷோ2த்தரவ்யாகெ
ஹொத்தஹொத்திகெ3 பா1லு குடி3வோ பாலகனிகெ3
ஸுத்தலித்3த3வர தா4வதிகொ3ட3வ்யாகெ
மத்தவாத3 க3ஜகெ அரஸு போகி3 ப3ருவ
க்ருத்ய ஹச்சிகொண்டு3 ப3ட3வாகு3வதே3கெ
உத்தமகு3ணநிதி4 விஜயவிட்டலரேய
பெத்த ஜனகனந்தெ ஹக3லிருளு பி3ட3தெ3
துத்து மாடி3 தந்து3 உணிஸுவனு ஸத்யவோ ||2

த்ரிவிடி தாள

9. ஜீவர அஸ்வதந்த்ர சுளாதி

ஸர்வாதி4ஷ்டா2னத3ல்லி ஹரியெ ஸந்தத இத்3து3
ஷர்வாதி3க3ள கை1ய்ய வ்யாபாரவ
நிர்வஹிஸிகொம்ப3னு நிர்தோ3ஷ2னாகி3 ப3லு
ஊர்வியொளகெ3 தானெ வ்யாப்தனாகி3
து3ர்விஷயங்க3ளு நினகெ3த்தலோ மனவெ
த3ர்வியந்த3தி3 காணோ நினகி3ப்பது3
ஸர்வத3 கேளுவது3 ஹொரகெ3 பி3ட்டு ஷ்வாஸ
ஓர்வனாத3ரு ஒளகெ3 ஸேரிகொம்ப3
க3ர்வர காணெனோ நினகெ3 ஸம்ஷயயாதகெ
ஸர்வதா2 து3ஸ்சிந்தெ ப3ட3தி3ரெந்தோ3
நிர்வாணதா3யக விஜயவிட்டலரேயா
நிர்வாஹ கர்தனு நமகா3வ ப4யவில்லா ||3

அட்ட தாள

நுடி3ஸுவ வருணனு மெலுவனு பாவக
நடெ3வனு ஜயந்த கேளுவ தி3க்தே3வ
பி3ட3த3ப்பி கொம்ப3 அஹங்காரிக ப்ராண
ஒட3னெ கு3ஹ்யக3ளல்லி மனுமித்ர மனத3ல்லி
பி3ட3தெ3 இந்தி3ரனு இப்ப அஹங்காரத3ல்லி ருத்3ர
பிடி3வனு த3க்ஷக நோடு3வ ஸூர்யனு
எடெ3 தொலக3த3லெ இவரிந்த3லாகு3திரெ
பொட3வியொளகெ3 நினகா3வதோ3 அதீ4ன
கடலஷயன நம்ம விஜயவிட்டலனல்லி
த்4ருடப4குதியனெ மாடு3 இதெ3 ஸாத4ன ஸித்3த4 ||4

ஆதி தாள

நானெ போகு3தலிப்பெ நானு ப3ருதலிப்பெ
நானெ கொடு3தலிப்பெ நானெ கொளுதலிப்பெ
நானெ பு3ஞ்சிஸுதிப்பெ நானெ ப3லவந்தனிப்பெ
நானெ த4னாட்4யனிப்பெ நானெ எந்து3 பேளிகொண்ட3 நரனு
நானயாதனெக3ள ப3ட3வனு ப்ரதிதி3ன
தீ3னமந்தா3ர ஹரி விஜயவிட்டலரேய
நேனெ மாள்பவனென்னி ப4க்தர கைபி3ட3னோ ||5

ஜதெ

ப^{4}க்திகெ^{3} ப்ரதா^{4}னவாத^{3} சிந்தனெ மாடு^{3}
முக்திதா^{3}யகதே^{3}வ விஜயவிட்டல வொலிவா ||8

***

<u>1. சிந்தெ மாடுவுதல்ல சின்மயமூர்த்தி...</u>

சின்மய மூருதியான சிதானந்த விக்ரகன் நம்மை காக்கிறான் என்னும் நிஸ்சித ஞானம் வந்தபிறகு, எனக்கு என்ன ஆபத்து வருமோ என்று துக்கத்துடன் கவலைப்படத் தேவையில்லை. ஸ்ரீஹரி நம்மைக் காப்பான் என்னும் திட நம்பிக்கை இருக்க வேண்டும். சிந்தாமணியைப் போல, பலன்களைக் கொடுப்பவனான ஸ்ரீஹரி, நம்மை விடாமல் காக்கிறான் என்று அறிவாயாக. ஸ்ரீஹரியை நம்பாமல், அனைத்தும் என்னுடையதே, நான், எனது - என்னும் கர்வம் கொண்டு, கடைசியில் துக்கத்துடன் நரகத்தில் வீழாதே.

பக்தர்களின் பக்தி என்னும் கயிற்றுக்கு மட்டுமே அவன் கட்டுப்படுகிறானே தவிர - மந்திர தந்திரங்களால் அவனை பிடிப்பதற்கு சாத்தியம் இல்லை. சாதாரண தேவதைகளே மந்திர தந்திரங்களுக்கு சிக்குவர். இவனோ சர்வோத்தமன். இவனை நம்பினால், நண்பனைப் போல உதவுகிறான். இவன் மகிழ்ந்த பிறகு, ஆனந்த வைபவங்கள் அனைத்தும் நம் முன்னேயே நிற்கின்றன.

பக்தர்கள் எப்படி அவனை சிந்திக்கிறார்களோ, அப்படியே அவன் அருள்கிறான். மன்மத ஜனக ஸ்ரீவிஜயவிட்டலனான இவனை நம்பியவர்களுக்கு அமிர்தமயமான இதயம் கிடைக்கிறது.

<u>2. வித்திகெ பத்தத சிந்தெ யாதக்கெ...</u>

நெல்லைப் பற்றிய கவலை யஜமானனுக்கு தேவையே தவிர, எருதுக்கு அந்தக் கவலை எதற்கு? கழுதைக்கு புல் பற்றிய கவலை எதற்கு? சேவகனுக்கு யஜமானனின் எதிர்காலத்தைப் பற்றிய சிந்தனை எதற்கு?. வேளாவேளைக்கு தாய்ப்பால் குடிக்கும்

குழந்தைக்கு, தன்னைச் சுற்றியிருக்கும் அனைவரும் செய்யும் வேலைகளைப் பற்றிய கவலை எதற்கு? மதயானைக்கு அரசன் செய்யும் செயல்களைப் பற்றி என்ன கவலை? உத்தம குணங்களைக் கொண்டிருப்பவனான விஜயவிட்டலராயன், பெற்ற தாய் தந்தையர்களைப் போல, இரவும் பகலுமாக, நம் அருகிலேயே இருந்து நமக்கு உணவு அளிக்கையில், பிற கவலை நமக்கு எதற்கு?.

3. ஸர்வாதிஷ்டானதல்லி ஹரியே ஸந்தத இத்து...

அனைத்து இடங்களிலும் பிம்ப வியாபார அறிவதே பெரிய உபாசனையாகும்.

ஸர்வாதிஷ்டானதலி ஹரியெ இத்து...

நாம் பூஜை செய்யும் பிரதிமை, சாலிகிராம, பசு, அழையா விருந்தினர், அழைத்த விருந்தினர், ஸ்ரீதுளசி, அரச மரம், யதி, வானபிரஸ்தர், கிருஹஸ்தர், வடு, யஜமான, ப்ருதிவி, ஜல, அக்னி, காற்று, நட்சத்திரங்கள், நவகிரகங்கள், யோக, கரண, ஆகியவை ஸ்ரீஹரியின் அதிஷ்டானங்கள் என்று அறிய வேண்டும்.

இந்த அதிஷ்டானங்களில் பற்பல ரூபங்களால் இருந்து, அரணிக்கட்டையை கடைந்தபோது அதிலிருந்து நெருப்பு வருவதைப் போல, சுரர்களில் நின்று தன்னுடைய விசேஷமான ஸாமர்த்தியத்தைக் காட்டி, வேண்டிய இஷ்டார்த்தங்கள் அனைத்தையும் ஸ்ரீஹரி நிறைவேற்றுகிறான். அனைவரின் செயல்களை தானே செய்து செய்விக்கிறான்.

பிம்பரூப ஹரி, இவ்வாறாக ஜடபிரதிமை மற்றும் பிரம்ம தேவருக்குள் அந்தர்யாமியாக இருக்கிறான் என்பதை அறிந்து, தர்மார்த்த காமங்களை விரும்பாமல், பகவந்தன் அளித்த அன்னம், கம்பளி, ஆகியவையே நமது சௌபாக்கியம் என்று அறிந்து அவனுடைய பாத கமலங்களை வணங்க வேண்டும்.

இவ்வாறாக ஸ்ரீஹரி அனைத்து இடங்களிலும் வியாப்தன் என்று அறிந்து வணங்கியபோது, துர்விஷயங்கள் நம்மை

அண்டுவதில்லை. நீ பாயசத்தில் மூழ்கிய கரண்டியைப் போல நிர்லிப்தனாக (எதற்கும் சம்பந்தப்படாமல்) இருப்பாய்.
மூச்சு விடக்கூட சாமர்த்தியம் இல்லாதவர்கள் நாம். ஆகையால், அனைத்தையும் நானே செய்தேன் என்று சொல்லும் கெட்ட சிந்தனையை விடு. அனைத்தையும் நிர்வகிப்பவனான விஜயவிட்டலன் இருக்கையில், நமக்கு எந்த பயமும் தேவையில்லை.

செல்வம், சரீரம், வீடு, மனைவி, மக்கள், நண்பன் ஆகிய அனைத்து சேதனர்களிலும் அந்தர்யாமியாக அதே பெயரில் ஸ்ரீஹரி இருக்கிறான். அந்தந்த பெயர்களால் அழைக்கப்பட்டு தன் இஷ்டத்திற்கேற்ப அனைத்தையும் செய்து செய்விக்கிறான். இதுவே த்ரவ்யாத்வைத உபாஸனை.

4. நுடிஸுவ வருணனு மெலுவனு பாவக...

நீ பேசும் பேச்சு உன்னுடையதல்ல. நாக்கில் இருக்கும் வருணனுடையது. அவனுடைய செயல்களும் ஸ்வதந்த்ரமானதல்ல. அது மத்ஸ்ய ரூபியுடைய செயல்களாகும்.

தின்பது நாம் அல்ல. ப்ரிதிபிம்ப க்ரியையானது, பிம்ப க்ரியையின் அதீனமாகையால், பிம்பன் போக்த்ருகளில், சங்கர்ஷண, பிரத்யும்ன ரூபங்களில் இருந்து, அன்னம் உண்ணும் செயலை செய்கிறான். நாராயண, அனிருத்த ரூபங்களால் போஜ்யங்களில் இருந்து, போஜன செயலை செய்விக்கிறான்.

நடக்க வைப்பவன் ஜயந்தன். ஜயந்தன் பாத அபிமானி. அவன் நடந்தான், நாம் நடக்கிறோம். காதுகளுக்கு அபிமானி தேவதை சந்திராதி 10 தேவதைகள். கேட்பது நாம் அல்ல, இந்த திக்தேவதைகளே. ஷரீராபிமானி தேவதை அஹங்காரிக பிராண. அவனுடைய அருளாலேயே ஆலிங்கன காரியம் நடக்கிறது. ஸ்வாயம்புவ மனு மற்றும் மித்ரர்கள் பாயு, உபஸ்த இந்திரியங்களுக்கு (மல மூத்ர உறுப்புகளுக்கு) அபிமானிகள். அந்தந்த செயல்களை செய்பவர்கள் இவர்களே. மனோ நியாமகரான கருட ருத்ராதிகளும் தேவதைகளே. அந்தந்த

செயல்களை செய்வது 'மனனான்மன உத்திஷ்ட:' என்பது போல ஸ்ரீஹரியே.

சூரியனில் இருந்து பார்க்கிறான். தக்ஷனின் கையிலிருந்து கொடுக்கிறான். அக்னியில் இருந்து வாயினால் பேசுகிறான். சூர்ய, சந்திர, ஆகியோர் ஸ்ரீஹரியின் விருப்பத்தின்படி நடக்கின்றனர். ஸ்ரீஹரிக்கு யாருடைய விருப்பமும் தேவையில்லை.

அஹங்காரத்தில், அஹங்கார தேவதையான ருத்ரனின் செயல்கள் இருக்கின்றன. இவ்வாறு அனைத்து ஞானேந்திரிய, கர்மேந்திரிய செயல்கள் தத்வாபிமானி தேவதைகளால் நடக்கும்போது, இந்த பூமியில் மனிதனுக்கு எந்த இந்திரியங்களும் அதீனமாக இருப்பதில்லை. இவ்வாறு இருக்கையில், பாற்கடலில் படுத்திருப்பவனான விஜயவிட்டலனில் திடமான பக்தி செய்தால், அதுவே மோட்ச சாதனையாகும்.

5. நானே போகுதலிப்பெ நானு பருதலிப்பெ...

அனைத்து காரியங்களும் ஸ்ரீஹரி மற்றும் தத்வாபிமானிகளால் ஆகின்றன என்று அறிய வேண்டும். இதை விட்டு, நானே தீர்த்த யாத்திரை செய்தேன், தானம் பெற்றேன், நானே உண்டேன். நானே பலசாலி. நானே அனைவரை விடவும் சிறந்தவன். நானே செல்வந்தன். என்று அனைத்தையும் நான், நானே என்று ஸ்வதந்த்ர கர்த்ருத்வத்தை சொல்லிக் கொண்டு, பகவந்தனின் செயல்களை மறக்கும் மனிதன், பற்பல துக்கங்களை அனுபவிக்கிறான். விஜயவிட்டலனே ஸ்வதந்த்ர கர்தன் என்று அறிந்து, அவனே செய்விக்கிறான் என்று அறிந்தவனை, ஸ்ரீஹரி கை விடுவதில்லை.

6. பக்திகெ ப்ரதானவாத சிந்தனெ மாடு...

நம் சிந்தனைகள் அனைத்தும் ஹரியின் செயல்களாலேயே ஆகின்றன என்று பக்தியுடன் சிந்திப்பவர்களுக்கு விஜயவிட்டலன் அருள்கிறான்.

****

10. மடி சுளாதி

த்ருவ தாள

மடி3 மாடு3வது3 மானவ நட3தி நுட3தி திளிது3
பிட3தெ3 ப்ரதிதி3ன மிர்மலதி3 மடி3, நீரொளகெ3 ஒகெ3து3
மடி3ஸி ப3கெ3ப3கெ3யிந்த3 மட3கி ஹாகிட்டரெ மடி3யல்ல |
த்3ருட3த3லி திளிது3நோடி3 மடி3 நீரொளகெ3 இல்ல
மடி3 தே3ஷதொ3ளகி3ல்ல மடி3 வஸனதொ3ளகி3ல்ல
மடி3 நப4த3ல்லி இல்ல மடி3 மாடோ 3 திருக3லு ஸல்ல
அடி3க3டி3கெ3 த3ணிவுத3ல்ல அடி3க3ளிட்டு நோடி3
நடெ3த3ரெ மடி3யல்ல மடி3யாப்பனெந்து3 உடி3கெ3 மாது3ரி கொண்டு3
அடிஅடிக்3ஹாரித3ரெ மடி3யாகு3வுதே3னோ
கடு3 முத்3து3 மோஹன விஜய விட்டலன்ன
அடி3கெ3ரக3த3வன மடி3யாதக்கெ ஒப்பதோ3 ||1

மட்ட தாள

காமக்ரோத4த3லி திருக3லு மடி3 அல்ல
காமன ப3ளக3க்கெ ஸோலலு மடி3யல்ல
தாமஸ வ்ருத்தியலி இத்3த3ரெ மடி3யல்ல
ஹேமத3 ப3யகெயலி சரிஸலு மடி3யல்ல
யாம யாமக்கெ ஹரிய மரெத1ரெ மடி3யல்ல
நாமவ த4ரிஸித்3த3ரெ அது மடி3 அல்ல
நேம நித்யக3ள தொரெத1ரெ அது3 மடி3 அல்ல
பூ4மி பாலக நம்ம விஜயவிட்டல ரேயன
நாமவனு மரெத3வனு எந்3தி3கு3 மடி3யல்ல ||2

த்ரிவிடி தாள

ஹஸுவ காலலி ஒதெ3த3ரெ மடி3யல்ல
ஹஸு மக்கள நூகி பி3ட்டரெ மடி3யல்ல
வஷளாத3 நாரிய தொரெத3ரெ மடி3யல்ல
வஸுதி4 ஸுரர கண்டு3 பை3த3ரெ மடி3யல்ல
விஷ2விக்கெ ஜனர கொந்த3ரெ மடி3யல்ல

நிஷெயலி உண்ட3வனு எந்தி3கு மடி3யல்ல
அஸூயெ ப3ட்டுகொண்ட3ரெ அது3 மடி3யல்ல
அஷனகா4தகவாகி3 இத்3த3வனு மடி3யல்ல
த3ஷமி த்3வாத3ஷி கன்யாதா3னவு மடி3யல்ல
குஷல மூருதி நம்ம விஜயவிட்டல ரேயன
பெ3ஸன ப4குதிய பே3ட3தி3த்3த3ரெ மடி3யல்ல ||3

அட்ட தாள

ஸகேஷி கையிந்த3 உண்ட3ரெ மடி3யல்ல
ஸிக்கித3வர ப3ளலிஸித3ரெ மடி3யல்ல
வாகுப3த்3த4வில்லத3வனிகெ3 மடி3யல்ல
ஶ்ரீகாந்தன ஸ்மரணெ மரெத1ரெ மடி3யல்ல
ஏகாந்த த்4யானவு இல்லதெ3 மடி3யல்ல
பாகஷாஸன வந்த்3ய விஜயவிட்டலரேயனு
ஸாகுவனென்னதி3த்3த3ரெ அது3 மடி3யல்ல ||4

ஆதிதாள

கு3ருக3ளிகெ3 ஸமிஸதி3த்3த3ரெ அது3 மடி3யல்ல
து3ருள ஜனர ஸங்க3வித்3த3ரெ மடி3யல்ல
கரெகரெ ஸதியிந்த3 தா3னாதி3கெ3 மடி3யல்ல
தரணிய த்3ருஷ்டிஸே கேவல மடி3யல்ல
பரமஷுத்3த4 நம்ம விஜயவிட்டலன
சரணத3லி ரதி இல்லத3லெ மடி3 அல்ல ||5

ஜதெ

கோ1பத3வன ஸங்க3ட3த3லிரெ மடி3யல்ல
ஶ்ரீபதி விஜயவிட்டலனொலியதி3ரெ மடி3யல்ல ||6

***

இந்த மடி சுளாதியில், மடி என்றால் என்ன என்பதன் சரியான விளக்கத்தை கொடுத்திருக்கிறார் விஜயதாசர். சிலர் மடி மடி என்று கத்தியவாறு, மைலிகெயில் (விழுப்பில்) இருக்கின்றனர். நம் பொடவீஷனின் (ஸ்ரீஹரியின்) நினைவிலேயே எப்போதும்

இருப்பவனே உண்மையான மடியை பின்பற்றுபவன்.

குளத்தில் இருக்கும் தண்ணீர் ஜடப் பொருள். மடி என்று உடுத்தும் வஸ்திரமும் ஜடம். சரீரமும் ஜடம். இவ்வாறு ஜட-ஜடத்திற்கு சம்பந்தம் உண்டானால் மட்டுமே நீ மடி ஆகிறாய் என்றால், விஜயவிட்டலனை நினைப்பவன் எப்போதும் மகா மடிவந்தன் என்று கூறுகிறார் தாசர்.

<u>1. மடிமாடுவது மானவ நடதினுடதி திளிது...</u>

மானவனே. நல்ல நடவடிக்கைகளால், பெரியவர்களின் அறிவுரைகளால் மடியைப் பற்றி அறிய வேண்டுமே தவிர வீண் அரட்டைகளால் அல்ல.

தினமும் நிர்மலமான தண்ணீரில் துணியை நனைத்து, காயவைத்து, ஆறு கச்சை வருமாறு தரித்தால், அது மடி எனப்படுவதில்லை. துணியைத் துவைத்து மடித்து வைக்கும் வண்ணானைப் போல செய்தால், துணியில் இருக்கும் அழுக்கு போகிறதே தவிர, உனக்குள் இருக்கும் காம, கிரோதாதி அழுக்கினை போக்கிக் கொள்ள வேண்டுமல்லவா? அழுக்கு சென்றால் துணி மடி ஆயிற்றா?. மது நிரம்பிய குடத்தை எந்த தண்ணீரில் முக்கினாலும் அது மடி ஆகிவிடுமா?.

சரியாக அறிந்து நீ செய்ததைப் பார். தீர்த்த க்ஷேத்திரங்களுக்குச் சென்று, அங்கிருக்கும் தீர்த்தங்களில் மூழ்கினாலும், அந்த தேசத்தில் மடி இல்லை என்பதால், உன் துணிக்கு மடி வருவது எப்படி? சிந்தித்துப் பார். மடி இருப்பது உன்னில்தானே தவிர, ஆகாயத்தில் இல்லை ஆகையால் கவலைப்படாதே. மடி செய்யும் விதம் தெரிந்தபோது, அது உன்னிலேயே இருக்கிறது என்று அறிவாய்.

விழுப்பு ஆகிவிட்டது என்று பூமியை (இடத்தை) சுற்றி சுற்றி வருவது மடியல்ல. ஒவ்வொரு காலடியிலும், விழுப்பு ஆகிவிட்டது என்று, தண்ணீரில் மூழ்கி மூழ்கி எழுவது மடியல்ல. விழுப்பு, வஸ்துகளில் இருக்கிறது என்று பார்த்து, அதன் மேல் கால் வைக்காமல், வேறு இடத்தில் கால் வைப்பது மடியல்ல.

ஸ்னானம் செய்து சுத்தமான வஸ்திரத்தை தரித்து, தான் மடி என்று காட்டியவாறு, துணியை மடித்துக்கொண்டு நடந்தால் மட்டும், அவன் மடி ஆவதில்லை.

ஒவ்வொரு அடிக்கும் தாவினால் அவன் மடி ஆவதில்லை. கடுமுத்து மோகன்ன விட்டலனின் பாதாரவிந்தங்களை நினைத்தவாறு, அவனை ஒவ்வொரு அடியிலும் நினைப்பதே மகா மடி. பவித்ர நாமக பகவந்தனை வணங்காமல், எவ்வளவு போராடினாலும், அவன் மடி ஆவதில்லை.

2. காமக்ரோததலி திருகலு மடியல்ல...

காம க்ரோதங்களை வைத்துக்கொண்டு, அனைவரின் மேலும் கோபம் கொண்டவாறு சுற்றினால், அது மடியல்ல.

காமனின் உறவினரான காமினியர்களிடம் மனம் வைத்தால் விழுப்பு ஆகிறது. அதற்குப்பின், எந்த தண்ணீரில் மூழ்கினால் என்ன?. ஸ்னானம் செய்யும்போது அங்கு சுற்றிக் கொண்டிருப்பவர்களின் மேல் பார்வையை வீசிக் கொண்டிருந்தால், அவன் மடி ஆவதில்லை. தங்கம் முதலான பொருட்களை விரும்பி, அதற்கான தீர்த்த யாத்திரை செய்து, ஸ்னானாதிகளை செய்தால், அது மடியா? குரு துரோகம், ஸ்வாமி துரோகம் ஆகியவற்றை செய்து, பின் ஸ்னானம் செய்து நடந்தால் அது மடி எனப்படுவதில்லை.

ஒவ்வொரு காலத்திலும், ஸ்ரீஹரி, நாராயண, கோவிந்த, என்று ஹரி நாமஸ்மரணை செய்யாமல், கண்ட கண்ட தண்ணீரில் மூழ்கினால், அது மடி ஆவதில்லை. ஸ்னானம் செய்து நாம தாரணை செய்யாமல் இருந்தால், அதற்குப் பின் செய்யும் அனைத்து செயல்களும் வீணே. நித்ய நைமித்திக காரியங்களை செய்யாமல், சரோவரங்களில் மூழ்கினால் அவன் மடி ஆவதில்லை.

ஹரி நாமஸ்மரணை எப்போதும் செய்து கொண்டிருந்த ஜடபரதன் ஸ்னானம் செய்து வந்தானா?

----

3. ஹஸவு காலலி ஒதெதரெ மடி அல்ல...

* மூன்று கோடி தேவதா சன்னிதானம் இருக்கும் பசுவை காலால் தள்ளி, தீர்த்த ஸ்னானம் செய்தால் அது மடியா?
* களங்கமில்லா மனம் கொண்ட குழந்தைகள் அருகில் வந்தால், விழுப்பு ஆகிவிட்டது என்று அவர்களை விலக்கி விட்டால், நீ மடி ஆகிறாயா? குழந்தைகளிடம் இருக்கும் வேணுகோபாலனிடமிருந்து தூரம் விலகிவிட்டாயே?
* பதிவிரதையான ஒரு உன்னத பெண்ணினை, வேறொரு பெண்ணிற்காக துறந்து, எந்த தீர்த்தத்தில் ஸ்னானம் செய்தால் என்ன?
* வஸுதி சுரர் (பிராமணர்) இவர்களைக் கண்டு திட்டினால், பிரம்மஹத்யை இருக்கும் மனிதன், எங்கி மூழ்கினாலும் என்ன பலன்?
* விஷம், மருந்து ஆகியவற்றை பயன்படுத்தி மக்களை துன்பறுத்திவிட்டு, மடி மடி என்றால், அது மடியா?
* நடு இரவில் பாரணை செய்தவன், மடி ஆகிறானா?
* சஜ்ஜனர்களை காப்பதற்காக பொய் சொல்லலாம் என்றாலும், தன் நலனுக்காக பொய் சொன்னால், அவன் மடி ஆகிறானா? கஷ்யப என்னும் பிராமணன், சபதம் செய்து, உண்மையையே பேசி, பிராமண வதைக்கு காரணமான கதை உங்களுக்கு தெரியமல்லவா?
* இன்னொருவர் மேல் வயிற்றெரிச்சல் பட்டால் உனக்குதான் பிரச்னையே தவிர, அதனால் அவனுக்கு என்ன தொந்தரவு ஆயிற்று? பாண்டவர்களின் மேல் வஞ்சம் கொண்ட துரியோதனனுக்கு ஆன கதியே உனக்கும்.
* ஹரி ஸ்மரணை இல்லாமல் செய்தது, எவ்வளவே சிறப்பான காரியமாக இருந்தாலும், வீண் எனப்படுகிறது. இத்தகைய விஷ்ணு ஸ்மரணை இல்லாத வீணான காரியங்களையே செய்தவாறு, கங்கையில் மூழ்கினால் அவன் மடி ஆகிறானா?
* இன்னொருவரின் சாப்பாட்டிற்கு (பிழைப்பிற்கு) தடை செய்து, தான் மட்டும் நன்றாக இருக்குமாறு பார்த்துக் கொள்பவன், மிகப்பெரிய விழுப்பினைக் கொண்டவன்,
* தசமி, ஏகாதசி, த்வாதசி இந்த மூன்று தினங்களும் ஹரிதின எனப்படுகின்றன. திருமணம் முதலான எந்த ஒரு சுப

நிகழ்ச்சிக்கும் இது சரியல்ல. இத்தகைய நிஷித்த நாட்களில் கன்யாதானம் செய்தால், அது சுத்த காரியம் எனப்படுவதில்லை.

* அனைவரின் நலன்களையே செய்து கொண்டிருக்கும் விஜயவிட்டலன் மேல் திடமான பக்தியை செலுத்தாமல், லௌகிகத்திற்காக அவனை வணங்கினால், அது மடியல்ல.

4. ஸகேஷி கையிந்த உண்டரெ மடியல்ல...

* பதிவிரதை செய்த போஜனாதிகள் நைவேத்தியத்திற்கு வருகிறது. ஸகேஷி, கைம்பெண்கள் ஆகியோர் செய்த அன்னாதிகளை தின்றால், தர்மபிரஷ்டம் ஆகிறது.

* தன்னுடைய நலனுக்காக வேறு சிலரை இம்சித்து துன்புறுத்தினால், ஹரி மெச்சுவதில்லை. இவ்வாறு ஹரி மெச்சாதவர்கள் ஸூதகம் வந்தவர்கள் ஆவர்.

* ஹரியின் பெயர்களை உச்சரிக்கும் வாய் இருக்கையில் அவாச்ய (சொல்லக்கூடாத) சொற்களை சொல்லி, செய்யும் மடி, மடி எனப்படுவதில்லை.

* ஸ்ரீஹரியின் ஸ்மரணையை மறந்து, நிரந்தர ஸ்னானாதிகளில் ஈடுபட்டாலும் அது மடி ஆவதில்லை.

* மகா கர்வத்தினால் (ஹேகேதன) செயல்களை செய்து கொண்டிருக்கும் கர்விஷ்டன், மகா விழுப்பு கொண்டவன் ஆகிறான்.

* ஸூதகிகளின் அன்னம், நான்காம் வர்ணத்தவர் தயாரித்த அன்னாதிகள், ரஜஸ்வலா பெண்கள் பார்த்த அன்னாதிகள் - இவையும் புறக்கணிப்பட வேண்டியதே.

* இவற்றை அறிந்தாலும், அத்தகைய அன்னத்தை உண்பவனுக்கு எந்தவொரு விதமான சுத்தியும் இருப்பதில்லை.

* ஏகாந்த நாமக ஸ்ரீஹரியின் தியானம் இல்லாமல், எந்தவொரு வஸ்துவும் மடி ஆவதில்லை.

* பாக என்னும் அசுரனை வென்ற இந்திரதேவனால் பூஜிதனான ஸ்ரீகிருஷ்ணனே 'நம்மன்னெல்ல ஸாகுவ தொரெ' (நம் அனைவரையும் காக்கும் தலைவன்) என்னும் ஞானம் இல்லாமல், ஒரு துணியை தண்ணீரில் அழுத்தினால், அது சுத்தமான துணி ஆகிறதா?

---

5. குருகளிகெ ஸமிஸாதித்தரது மடி அல்ல..

* பூஜை செய்யும் காலங்களில் நம் குரு மற்றும் மூத்தவர்கள் வந்தால், அவர்களுக்கு சாஷ்டாங்கமாக நமஸ்காரங்களை செய்யாமல், பூஜை செய்கிறேன் என்னும் கர்வத்தில், அகௌரவம் செய்தால், அது மடிவந்தரின் லட்சணம் அல்ல. அகஸ்த்யர் வந்தபோது இந்திரத்யும்ன அரசன் செய்த அகௌரவத்தினாலேயே, அவன் கஜேந்திரனாக பிறக்க வேண்டியதாயிற்று அல்லவா?

* சஜ்ஜனர்களின் சங்கம் தேன் துளியைப் போன்றதாகும். அனைவரின் சங்கத்தையும் விரும்பக்கூடாது. சஜ்ஜனர்களின் சங்கத்தை மட்டுமே விரும்ப வேண்டும். துர்ஜனர்களின் சங்கத்தை என்றும் செய்யக்கூடாது. பீஷ்மாதிகள், சஜ்ஜனர்களே ஆகியிருந்தாலும், துஷ்ட துரியோதனனின் சங்கம் செய்ததால், ஹரி த்வேஷிகள் எனப்பட்டனர். இத்தகைய கலியின் தொடர்பினை செய்த துரோண, பீஷ்ம, கிருப, அஷ்வத்தாமர்கள் சுத்தமானவர்கள் எனலாமா?

* நிரந்தரமாக கணவனுடன் சண்டை, அரட்டை செய்து துன்புறுத்தும் மனைவியர் இருந்தால், தியானாதிகளை செய்யாமல் கணவனால் மடி ஆக முடிவதில்லை. 'ஹெண்டதி பிராண ஹிண்டுதி' என்னும் பாடலுக்கேற்ப, மனைவியால் தியானாதிகளுக்கு தடை வந்தபோது, அவன் மடி ஆவதில்லை.

* ஸ்ரீராமனையே காட்டிற்கு அனுப்பிய கைகேயியின் பதி தசரதன், ராமனை இழந்ததால் இறந்தபோது, தியானம் செய்ய முடிந்ததா? ஸ்ரீராமனை நிரந்தரமாக தியானம் செய்த தசரதன், மகா மடி என்றால், கைகேயி, கெட்ட விழுப்பு கொண்ட ஸ்த்ரி ஆகிறாள்.

* பர ஸ்த்ரீயரை பார்க்கும் விருப்பம் கொண்டவனுக்கு மடி என்றும் இல்லை. தலையில் துணி போர்த்திக்கொண்டு, பிற பெண்களின் அழகினை ரசிக்கும் மனிதனுக்கு, ஸ்ரீஹயவதனனின் சரணத்தை நம்புவதற்கு சாத்தியம் இல்லை.

ஸ்ரீஹரி கொடுத்த வஸ்துகளை ஹரிக்கு நிவேதனம் செய்து உண்ண வேண்டும். ஹரியின் நைவேத்யமே வயிற்றில்

கொண்டவன், ஹரி சன்னிதானம் கொண்டவன் ஆகிறான் அல்லவா? ஹரிக்கு நிவேதனம் செய்யப்படாத பதார்த்தங்கள், மலத்திற்கு சமானம் ஆகும். ஹரிக்கு நிவேதனம் செய்யாமல் உண்ட மானவன், நாய் பன்றிக்கு சமானம்.

தன் மனைவியை விட்டு, பிறர் மனையை சேர்பவன் மகா அஷுத்தன். பரம பவித்ர பகவந்தனின் ஸ்மரணை செய்யாதவர்களுக்கு எப்போதும் மடி இல்லை.

6. கோபதவன ஸங்கடலிரெ மடியல்ல...

கோபம், பொய், வஞ்சனை, விருப்பங்களைக் கொண்ட மனிதனுடன் சேர்ந்திருந்தால், அது மடி ஆவதில்லை.

உலகத்தையே ஒளிர்விக்கும் சூரிய அம்சனான கர்ணன், ஸ்வத: பவித்ரனாக இருந்தாலும் ஸ்ரீபதியை, பாண்டவர்களை மதிக்காததால் அபவித்ரன் எனப்பட்டான்.

சாஸ்திரங்களில் சொல்லப்பட்டவாறு, தத்தம் வர்ணாசிரம தர்மங்களுக்கு ஏற்ப உள்ள கடமைகளை, விடாமல் ஹரிபக்தியுடன், எவ்வித பலன்களையும் எதிர்பார்க்காமல் செய்து வந்தால், இவனே மகா மடிவந்தனான மனிதன் எனப்படுகிறான்.

***

11. ஹப்ப சுளாதி

த்ருவ தாள

ஹப்3ப3ங்க3ளிவெ கேளி ஊர்பி3யொளகெ3 வை
த3ர்ப்ப4ரமண கருணாப்3தி4 ஒலித3 ப3ளிக
ஒப்3ப3ர காடி3பே3டி3 ஒப்3ப3ர ஹப்3ப3 மாடி3த3ரிந்த3
உப்3பு3தீரது3 காணோ ஆர்பு3த3 ஜனக்கெ
அப்3பி3தா3வர்தி தா4ன்யருப்3பி3க3ஞ்சிய காஸி
ஹப்3பி3த3 ஸுக2மான வப்3பி3கெ3 ஸதிபதி
இப்பரானந்த3ல்லி ஹெப்பட்டினல்லி ஸவிது3
ஸப்4யவாகி3ப்பது3 ஹப்3ப3வெ ப3லஹப்3ப3
நிர்ப4யவாத3 ரத்னக3ர்ப்ப4த3ல்லி குடீர
கு3ப்பி3கூ3டி3னஷ்டு க3ர்ப்ப4வாஸவெ ரசிஸி
ஹப்3பி3கி3க்கதெ3 ஏனு நிர்ப்3ப3ந்த4னவில்லதெ3
லப்4யவாகி3ப்ப க3ர்ப்ப4த3 ஸுகி2க3ளவரு
கர்ப்3பு3ரனந்தெ திந்து3 கொப்3பி3 திருகு3வங்கெ3
து3ர்பா4க்3யவல்லதெ3 ஹப்3ப3வெனிஸுவுதெ3
கப்3பு3 பி3ல்லினய்ய விஜயவிட்டலரேய
த3ர்ப்பெ4 ஏரிஸலு ஹிப்3ப3ர கரவபிடி3வா ||1

மட்ட தாள

காமக்ரோத3ங்க3ளு பி3டு3வுதே3 ப3லு ஹப்3ப3
நேம நித்யவன்னெ மாடு3வுதே3 ஹப்3ப3
தாமஸ ஜனருக3ள பி3டு3வுதே3 மஹா ஹப்3ப3
காமன உபஹதிகெ3 அஞ்சுவதே ஹப்3ப3
பூ4மியொளகெ3 ஞானியாகு3வதே3 ஹப்3ப3
ஸ்வாமி ப்4ருத்யன்யாய திளியுவதே3 மஹா ஹப்3ப3
ஸ்ரீ மாருதி மதவ ஹாரைபுதே3 ஹப்3ப3
யாமயாமக்கெ ஹரிநாம நெனெவுதே3 ஹப்3ப3
வ்யோமக3ங்கெ3ய ஜனக விஜயவிட்டல ஹரிய
தா4மவ ஜயஸுவதே3 த4ரெயொள மஹா ஹப்3ப3 ||2

த்ரிவிடி தாள

ப3ந்த3 து3ரிதக3ள போ1கா3டுவுதே3 ஹப்3ப3
மந்தா3கினியல்லி மஜ்ஜனவே ஹப்3ப3
நிந்த்3யகாரர நித்ய நிந்தெ3 மாள்புதே3 ஹப்3ப3
வந்தி3ஸி கு3ருக3ளிகெ3 எரகு3வதே3 ஹப்3ப3
முந்தெ3 புட்டுவ ஜனனவ நீகி3கொம்பு3தே3 ஹப்3ப3
ப3ந்த4னவாக3த3 யோசனெ ப3லு ஹப்3ப3
தந்தெ3 தாயிக3ளிகெ3 அனுகூலவே ஹப்3ப3
அந்த3னகு3த ஸந்தோஷவாஹுதே3 ஹப்3ப3
குந்து3 ஸஜ்ஜனரிகெ3 நுடியதி3ப்பதே3 ஹப்3ப3
பிந்து3 மாதுர போ4க3 ப3யஸதி3ப்பதே3 ஹப்3ப3
ப3ந்த3 அதிதி2க3ள பூஜிஸுவுதே3 ஹப்3ப3
மந்தி3ரத3ல்லி கலஹவில்லத்3தே3 மஹ ஹப்3ப3
இந்து3 நாளிகெ3 இம்போ3 சிந்தெ பி3டு3வுதே3 ஹப்3ப3
ஸந்த3ணெ தொரெது3 ஏகாந்த வாஹதெ3 ஹப்3ப3
நிந்தி3த்3த3கி2ளரொளு நரெயதி3ப்புதே3 ஹப்3ப3
நிந்தெ3 பா3ரத3ந்தெ பா3ளுவுதே3 ஹப்3ப3
இந்த்3வர்க்க1வுள்ள நக1 விஜயவிட்டலரேயன
ஒந்தே3 ப4குதியலி ப4ஜிபதே3 மஹா ஹப்3ப3 ||3

அட்ட தாள

ருணரூபவாக3த3 ஸம்ஸாரவே ஹப்3ப3
கு3ணவந்தனாகி3 ஸஞ்சரிஸுவுதே3 ஹப்3ப3
கனஸீலி ஹணவன்னு ப3யஸதிப்பதே3 ஹப்3ப3
மனவாச காயக ப3டதனவே ஹப்3ப3
வனஜனாப4ன நோடி3 பாடு3வுதே3 ஹப்3ப3
தி3னப்ரதிதி3ன ஸத்கர்மாசரணே ஹப்3ப3
மணிகர்ணிகெயல்லி தே3ஹத்யாக3வே ஹப்3ப3
மனெ நெரெ ஹொரெ நோடி3 ப3ளலதி3ப்பதெ3 ஹப்3ப3
அனிமிஷ ஜாக3ர ஹரிவாஸரவெ ஹப்3ப3
தனுவிகெ3 வ்யாதெ4 பா3ரத்3தொ3ந்தே3 மஹா ஹப்3ப3
சினுமய மூருதி விஜயவிட்டலரேயன

மனஸினொளனுதி3ன ஈக்ஷிஸுவுதே3 ஹப்3ப3 ||4

ஆதிதாள

காலன பா4தி3கெ3 ஸிலுகதி3ப்பதே3 ஹப்3ப3
காலகாலக்கெ தீர்த்த2யாத்ரெ மாள்பதெ3 ஹப்3ப3
கேளுவ ஹரிகதா2 ஸ்ரவணவே தொ3ட்3ட3 ஹப்3ப3
நாலிகி3ந்த3லி ஹரிய ஸ்தோத்ர மாள்பதே3 ஹப்3ப3
ஆளாகி3 ஒப்3ப3னல்லி வஷவாக3த்3தொ3ந்து3 ஹப்3ப3
ஹாளு ஹரடெ பி3ட்டு பி3ட்டு ஹொத்து க3ளியுவுதே3 ஹப்3ப3
ஸ்ரீலோல பரனெந்து3 கூக்3யாடு3வதே3 ஹப்3ப3
வாலயக3யத3ல்லி குலபவித்ரவே ஹப்3ப3
பா4ளலிபிகெ3 நோய ஆட3தி3ப்பதே3 ஹப்3ப3
வேளெகெ3 தொ3ரெதது3 பு4ஞ்சிஸுவுதே3 ஹப்3ப3
பாலாப்3தி3ஷாயி நம்ம விஜயவிட்டலரேயன
ஊளிக3த3வனாகி3 வாலெக3யிஸுவுதே3 ஹப்3ப3 ||5

ஜதெ

த3ம்பதிக3ளு ஏகவாகி3ப்புதே3 ஹப்3ப3
ஷம்பத3ந்தெ விஜயவிட்டல பொளெவுதே3 ஹப்3ப3 ||6

***

<u>1. ஹப்பங்களிவெ கேளி ஊர்ப்பியொளகெ....</u>

ஹப்ப (பண்டிகை) என்றால் வைதர்ப்பி ரமணனான, ருக்மிணிபதி ஸ்ரீகிருஷ்ணன், தன் கருணைப் பார்வையை நம் மேல் வீசினான் என்றால், அந்த நாளே பெரிய பண்டிகை. ஹரியை மகிழ்விப்பதான ஸாதனங்களே பண்டிகைகள். ஹரியை மகிழ்விப்பதற்கு, பத்ர, புஷ்ப, பல, தோயங்களே போதும். பொருட்களைவிட, அந்தப் பொருட்களின் பின்னே இருக்கும் பக்திக்கே ஸ்ரீஹரி மகிழ்கிறான் / வசமாகிறான்.

ஸ்ரீஹரியை மகிழ்விக்கும் முயற்சியை செய்யாமல், ஒருவரை வேண்டி, கெஞ்சி, பொருட்களைக் கொண்டு வந்து பண்டிகையை செய்தேன் என்று கூறினால் அது பண்டிகை ஆவதில்லை. 1,000

கோடி (அர்ப்புத ஜனனக்கெ) பிறவிகள் எடுத்தாலும் அந்த அகங்காரம் தணிவதில்லை. அரிசி, கசகசா ஆகியவற்றை தானியங்களை நனைத்து, அரைத்து கஞ்சி செய்து, இது ஸ்ரீஹரியின் கருணையால் கிடைத்தது என்று அவனுக்கு அதனை அர்ப்பித்து, யத்ருச்சா லாபத்தினால் (இருந்ததை வைத்து திருப்தி அடைதல்) கிடைத்த இந்த பொருளை, ஒரே பொழுதில் உண்டு வாழும் நாட்களும் பண்டிகையே.

யாரையும் வேண்டாமல் ஸ்வாமி கொடுத்ததை, குடும்பத்தினருடன், கஞ்சியை கட்டை விரலில் அழுத்தி குடித்தாலும் அதுவும் பண்டிகையே. நிர்பயமான இந்த ரத்ன கர்ப்பத்தில் (பூமியில்), குருவிக் கூட்டினைப் போல சிறிய இடம் இருந்தாலும், இது ஸ்ரீஹரி கொடுத்த கூடு என்று அங்கேயே, கர்ப்பத்தில் வசித்ததைப் போல இருக்க வேண்டும். வீட்டுக்காக முயற்சி செய்யாமல் இருப்பது பண்டிகை. டாம்பீகமாக இருக்காமல், பற்று இல்லாமல் இருக்க வேண்டும். இந்த நிலையில் சுகமாக இருப்பவர்களே சுகிகள்.

ஸ்ரீஹரியின் ஸ்மரணை இல்லாமல், அவன் கொடுத்ததற்காக நன்றியை சொல்லாமல், சும்மா சுற்றுபவர்களுக்கு துர்ப்பாக்கியமே கிட்டுகிறது. இது பண்டிகை எனப்படுவது இல்லை. அருகம்புல்லினை பக்தியுடன் சாற்றினாலும்கூட, முன் செய்த பாவங்களை களைகிறான் மன்மதபிதனான (கப்புபில்லனய்யா) விஜய விட்டலன்,

<u>2. காமக்ரோதங்களு பிடுவதெ பலு ஹப்ப...</u>

* காம க்ரோதங்களை என்று விடுகிறோமோ, அன்றே நம் வீட்டில் பண்டிகை.
* விதிப்படி தேவபூஜை, சந்தியாவந்தனம் ஆகியவற்றை செய்வதே உண்மையான பண்டிகை. அக்ரூரனின் வீட்டில் தினமும் இந்த பண்டிகை இருந்தது.
* விதுரன் துஷ்ட துரியோதனனை விட்டது போல, ஹரிவாயு த்வேஷிகள், தாமஸர்களை விட்டு விலகுவதே மகா-பண்டிகை.

11. ஹப்ப சுளாதி

---

* காமன் சொல்வதைக் கேட்காமல், அவனின் வசம் சிக்காமல், அவனுக்கு பயப்படாமல், கிடைத்ததை வைத்து திருப்தியுடன் இருப்பதே பண்டிகை.

* ஸ்ரீகிருஷ்ணனால் உத்தவன் ஞானம் பெற்றதைப் போல, இந்த பூமியில் பிறவி எடுத்ததற்கு, ஞானத்தை சம்பாதிப்பதே மகா பண்டிகை.

* ஸ்வாமி- சேவகன் என்னும் பாவத்தை சொல்வதான தாஸ-தாஸ்ய பாவத்தில், ஸோஹம் என்னாமல், தாஸோஹம் என்பதே பண்டிகை.

* ஸ்ரீமாருதியின் அவதாரமான ஹனும, பீம, மத்வரின் மதத்தை பின்பற்றுபவர் என்று சொல்வதே பண்டிகை. பத்மனாப, நரஹரி, மாதவ, அக்ஷோப்ய, த்ரிவிக்ரமர்கள் இப்படியே ஸ்ரீமத்வரின் மதத்தை அறிந்து, அதையே பின்பற்றினர். நம்ம மருதன பொந்துவுதே துர்கட - கேளலோ மர்கட ||

* யாம யாமத்தில் ஸ்ரீஹரியை கோவிந்த நாராயண வாசுதேவ என்று சிந்திப்பதே பண்டிகை.

* வ்யோம கங்கை எனப்படும் ஆகாயகங்கையின் தந்தையான ஸ்ரீவிஜயவிட்டலனின் இருப்பிடங்களான ஷ்வேதத்வீபாதி தாமத்ரயங்களை விரும்புவதே பண்டிகை.

<u>3. பந்த துரிதகள போகாடுவதே ஹப்ப...</u>

* நம்மால் செய்யப்பட்ட பாவங்களை, பிராயச்சித்தம் செய்து, போக்கிக் கொள்வதே பண்டிகை.

* மந்தாகினியில் ஸ்னானம் செய்த நாளே பண்டிகை. மத்வ சாஸ்திரத்தை படிக்கும் நாளும் பண்டிகையே.

* நிந்த்யாகாரரான, 21 துர்மதங்களை விமரிசனம் செய்யும் நாளே பண்டிகை. இத்தகைய வைஷ்ணவ சித்தாந்தத்தை அளித்த ஸ்ரீமத்வருக்கு அனைவரும் தலை வணங்க வேண்டும்.

* குருகளின் எதிரில் அவருக்கு சாஷ்டாங்கமாக விழுந்து வணங்குவதே பண்டிகை.

* ஸ்ரீமதாசார்யரின் சாஸ்திரத்தை படித்து, ஞானத்தை சம்பாதித்து, அதனையே பின்பற்றி வாழ்வதே பண்டிகை.

* நாம் பின்பற்றும் கர்மங்கள் நம்மை கட்டுப்படுத்தாதவாறு, கர்ம பலன்களை எண்ணாமல், அவற்றை பக்தியுடன் ஹரியிடம் அர்ப்பிப்பதே பண்டிகை.
* வீட்டில் பெற்றோருக்கு உதவியாக இருப்பதே மகா பண்டிகை. அவர்களின் பேச்சினைக் கேட்பது, அவர்களின் காலத்திற்குப் பிறகு வார்ஷிக சிரார்த்ததை செய்வது, கயாவிற்கு சென்று விஷ்ணு பாதத்தில் பிண்ட பிரதானம் செய்வது ஆகியவற்றை செய்யும் மகனே மகன். இவற்றை செய்யும் நாளே பண்டிகை.
* சஜ்ஜனர்களை திட்டாமல், மங்களகரமான பேச்சுக்களை பேசுவதே பண்டிகை. * மாऽமங்கலம் தாத பரேஷு மம்ஸ்தா: புங்க்தே ஜனோऽயம் । மற்றவர்களுக்கு கேடு நினைத்தால், அது நமக்கே வந்து சேரும்.
* வீட்டிற்கு வந்த அதிதி விருந்தினர்களை, மரியாதையுடன் திருப்திப்படுத்துவதே பண்டிகை.
* வீட்டில் சண்டை ஆகாதவாறு பார்த்துக் கொள்வதே பண்டிகை. இது இன்றைக்கு, இது நாளைக்கு என்று பிரிக்காமல், அந்தந்த நேரத்தில் ஸ்ரீஹரி எதை கொடுக்கிறானோ, அதனை வைத்துக்கொண்டே திருப்திப்படுவது பண்டிகை ஆகும்.
* கும்பல் கூடிய இடத்தில் இருக்காமல், தனிமையில் தியானத்தில் இருப்பதே பண்டிகை.
* துர்ஜனர்களுடன் சேராதிருப்பதே பண்டிகை ஆகும்.
* எவ்விதமான களங்கமும் இல்லாமல், சுத்தமான வாழ்க்கையை நடத்துவதே பண்டிகை ஆகும்.
* சூர்ய சந்திரர்கள் இருக்கும் காலம் வரைக்குமான புகழினைக் கொடுப்பதான வாழ்க்கையை வாழ வேண்டும். ஸ்யமந்தகமணியை ஸ்ரீகிருஷ்ணனே அபகரித்தான் என்று சத்ராஜித் ராஜ அவன் மேல் பழி சுமத்தியபோது, அதை பொருட்படுத்தாத ஸ்ரீகிருஷ்ணனைப் போல இருக்க வேண்டும்.

ஆக மொத்தம், சூர்ய சந்திரர்கள் இருக்கும் வரை, ஸ்ரீவிஜயவிட்டலனின் நித்யமான பக்தியுடன் வாழ்வதே மகா பண்டிகை ஆகும்.

---

4. ருணரூபவாகத ஸம்ஸாரவெ ஹப்ப...

* கடன், கைமாற்று ஆகிய எந்தவொரு பிரச்னையும் இல்லாத சம்சாரத்தில் தினமும் பண்டிகையே. ருண என்னும் ஸூதக, எவ்வளவு பிறவிகளை எடுத்தாலும் தீர்வதில்லை.
* குணவந்தனாக சஞ்சரிப்பதே பண்டிகை
* கனவிலும்கூட மற்றொருவரின் பணத்தை விரும்பாததே பண்டிகை ஆகும்.
* மனம், வாக்கு, தேகம் ஆகிய த்ரிகரணங்களாலும் மௌனமாக இருக்க வேண்டும்.
* பகவந்தனை அனைத்து வஸ்துவிலும் கண்டு அவனின் மகிமையை பாடுவதே பண்டிகை ஆகும்.
* தினமும் சத்கர்ம ஆசரணை நடந்து கொண்டிருக்கும் வீட்டில் நிரந்தரமாக பண்டிகையே.
* காசியில் இருக்கும் மணிகர்ணிகா காட்டினில் தேக தியாகம் செய்வது பண்டிகை.
* உற்றார் உறவினர்களின் வீட்டில் நடக்கும் பஜனை, ஸ்தோத்திர, பாடாதிகளால் மகிழ்வதே பண்டிகை ஆகும்.
* ஏகாதசி ஆசரணை, ராத்ரி ஜாகரணை, பஜனைகளில் காலத்தை கழிப்பதே பண்டிகை.
* தேகத்திற்கு நோய் நொடிகள் இல்லாதவாறு ஆரோக்யத்துடன் வாழ்க்கையை நடத்துவதே பண்டிகை.
* சின்மய மூர்த்தி விஜயவிட்டலனை மனதில் பக்தியுடன் தியானிப்பதே உண்மையான பண்டிகை ஆகும்.

5. காலன பாதிகெ ஸிலுகதிப்புதெ ஹப்ப..

* நரகத்தில் யமதர்மராஜன் கொடுக்கும் தண்டனைக்கு உள்ளாகாமல் இருப்பதே பண்டிகை.
* அவ்வப்போது தீர்த்த யாத்திரை கைகொள்ளுவதும், அங்கு இருக்கும் பகவத் ரூபங்களின் தரிசனமே பண்டிகை.
* ஹரிகதா சிரவணம் செய்வதே மகா பண்டிகை
* நாக்கினில் ஸ்ரீஹரியின் ஸ்தோத்திரம் செய்வதே பண்டிகை
* நாக்கில் நிரந்தரமாக ஸ்ரீஹரி நாமத்தை நுடிப்பவன் வீட்டில் எப்போதும் பண்டிகை

* நாயைப் போல இன்னொருவருக்கு அடிமையாக இல்லாதிருப்பதே பண்டிகை.
* வீண் அரட்டை அடித்து காலத்தை கழிக்காமல், ஹரிகதைகளுக்காக இருப்பதே பண்டிகை.
* ஹரி சர்வோத்தம வாயு ஜீவோத்தம என்று சத்தம் போட்டு சொல்வதே பண்டிகை.
* கயாவில் வசிப்பதால் அவருடைய குலமே பவித்ரமாகிறது. இதுவே பண்டிகை.
* தலையெழுத்து எப்படி எழுதப்பட்டிருக்கிறதோ, அதன்படியே வாழ வேண்டும். தலையெழுத்தை திட்டக்கூடாது.
* வேளாவேளைக்கு ஸ்ரீஹரி எதனை கொடுக்கிறானோ, அதனாலேயே திருப்தியுடன் வாழ்வதே பண்டிகை.
* பாற்கடலில் வசிக்கும் விஜயவிட்டலனின் தாசானுதாசனாகி தாசர்களை வணங்கிக் கொண்டிருப்பதே உண்மையான பண்டிகை

6. தம்பதிகளு ஏகவாகிப்புதே ஹப்ப...

கணவன் மனைவியர் பரஸ்பரம் அன்புடன் இருந்து, ஒரே அபிப்பிராயத்தைக் கொண்டிருக்க வேண்டும். இவ்வாறு நடந்தபோது, மேகத்திற்கு இடையே, மின்னல் தோன்றுவதைப் போல, பகவந்தன் நம் இதயத்தில் ஒளிர்கிறான்.

****

12. கர்ப்போத்பத்தி ஹரிரக்ஷணெ சுளாதி

த்ருவ தாள

அக3ர ஸதி ஸுத ஸௌக்2யவெந்தெ3ம்போ3 து3க்க2
ஸாக3ரதொ3ளகெ3 முளுகி3 இரளு ஹக3லு
லோக3ரகோ3ஸுக3 சிந்திஸி கண்ட3கடெ3
வாக3ரகெ திருகி3 பெ3ண்டா3கு3வெ
போ4க3ரஹஸ்யதி3ந்த3 ப்4ரமணனாகி3 ப்ர
ஜாக3ரவன்னு மரெது3 மந்த3னாதெ3
பா4கா3ரமாடி3த3ரு ஸத்ஸா த4ன த4ர்ம
யோகா3ராத4னெ காணெ நகடகட
ராக3ராக3தி3ந்த3 நானு நன்னது3 யெம்போ3
ஈகா3ரண்யத3 மத்4ய ஸுத்துவேனோ
ஹாக3ரஹாக3தா3ஸெ மலதி3ந்த3 மாது பேளி
வேக3 ராஜ்ய ஸஞ்சரிஸி ஜட2ரபொரெதெ3
நாக3ராஜன படெ3து3 சா2யாத3ல்லித்து3 வை
போ4க3தா3ஸெய ப3யஸுவ மனுஜனாஹெ
ஸாக3ரஷாயி நம்ம விஜயவிட்டல ஸ்வாமி
பூ1கா3ரரந்தெ மெச்சிஸதெ3 ப4வஸார்த்தெ3 ||1

மட்ட தாள

ஸ்வர்க்க3 நரக பூ4மி சரிஸிதெ3 ஸர்வத3ல்லி
முக்3கி3முங்கா3ணதெ3 நானாபொட்டெயல்லி
வெக்3க3ளிஸி பொக்கு வ்யதெ2பட்டு மத்தெ
நுக்3கா3தெ3னோ ப3லுதே3ஹவனெ த4ரிஸி
தக்3கி3போக3லில்ல தக3லித3 ஈகர்ம
ஸுக்3கி3யொளகெ3 பி3த்3து3 ஸுக2து3க்க2வனும்பெ3
ஹிக்3கு3வெனோ விஷயா ஹிதவெந்து3 நம்பி3
மக்3க3லொளகெ3 யித்3த3 மாரிய காணத3லெ
ஸ்வர்க்க3 நரக பூ4மி சரிஸிதெ3 கருணாதெ3
கக்3க3த3லெ மத்4யஸில்கி ப3ளலுதிப்பெ

அக்3க3ளிகாதெ3ய்வ விஜயவிட்டல யென்ன
யோக்3யதெ ப3ல்லவனெ பி3ன்னபவனு கேளு ||2

த்ரிவிடி தாள

க3க3னாதி3ந்த3லி மேக4ப்ரவேஷவனு மாடி3
மிகி3 வருஷத்3வாரத3லி த4ரிகெ3 மிளிது3
ப3கெ3ப3கெ3 ப2லத3ல்லி பொக்கு பக்வவாகி3
ஹக3லிருளு ப3ளலி அன்னமுக2தி3ந்த3
விக3ட3மனுஜானல்லி ப்ரவிஷ்ட2னாகி3த்3து3
மகு3ளெ ரேதோகண ரூபதி3ந்த3
ஜிக3ளி மூத்ரத்3வார பொக்கெனய்யானகட
த்ரிகு3ணத3லி பெ3ளவா பரியேனம்பெ3
ரக3ளெ வொந்து3 தி3வஸ த்ரிராத்ரிகெ3 கலிலவு
ப3கெ3 பஞ்சராத்ரிகெ3 பொ3ப்3பு3ளியந்தெ
ஸொக3டு3 த3ஷராத்ரிகெ3 பேஷாண்ட3வு
திங்க3ளிகெ3 ஷிரஸு பா3ஹு விக்3ரஹரூப
முகி3த3 தருவாய மூரனெ திங்க3ளிகெ3 ரோம
உக3ரு சர்மஸ்தி2 நிர்மாண சி2த்3ர
சிகி3வ தா4துக3ளு நால்கனெ திங்க3ளிகெ3ன்னி
து3கு3ட3வாஹது3 ஐத3னெ மாஸக்கெ ஹஸிவி
த்ரிகு3ணாதீத நம்ம விஜயவிட்டலரேய
யுக3ளபா4வதி3ந்த3லி ஈபரி சரிஸுவெனு ||3

அட்ட தாள

ஆரனெ மாஸக்கெ வாமபா4க3தி3ந்த3
போ4ரனெ த3க்ஷணபா4க3க்கெ ஆவர்த்தி
ஈரீதியலி ஷ்ரம ஜராயுஜனாஹ
மேரெயில்லதெ3 ஸப்தமாஸக்கெ ஜீவக்கெ
பூர்வஜன்மத3 கர்மஸ்மரணெவுண்டு
பா4ரிபா4ரிகெ3 நெனிஸுவ ஸுக2து3க்க2
பாரகா3ணத3லிப்ப திங்க3ளெண்டக்கெ கடு

12. கர்ப்போத்பத்தி ஹரிரக்ஷணெ சுளாதி

க்ஷார தீக்ஷ்ண உஷ்ண ஸீதால்லுரஸத3ல்லி வி
கார உல்ப3ணயாதனெ பா3தெ4யாகோ3து3
போ4ரனெ ஒம்ப4த்து திங்க3ளிகெ3 க்ரமி
க்ரூர க்ஷததி3ந்த3 ஸர்வாங்க3ப4க்3னதி3
மொரெ கௌகா3கி3மொளகா3ல ஸந்தி3லி
கோ4ர நரகபோலுவ க3ர்ப்ப4த3லி பி3த்3து3
நாருவ து3ர்க3ந்த4 ஸன்னிருத்3த4வாகி3
த்3வாராபி4முக2தி3ந்த3 அளலி பளலுத
ஷாரீரமுரிது3 முட்டிகெ3 மாடி3 கட்டித3
சோரநந்த3தி3யிப்ப நிர்ப4ந்த3தொலக3து3
ஆரிகெ3 தூ3ரலி ஆரு பி3டி3பரில்ல
ஆரிந்த3 நிர்வஹிஸி ஆரு சிந்திபரில்ல
ஆரு யெனகெ3 க3தி காணெனோ ஷௌரி மு
ராரி ஸ்ரீவிஜயவிட்டலரேய
தா1ரி பெ3ண்டா3கு3வ த்ரைதாப வோடி3ஸோ ||4

ஆதி தாள

ஸூதிககா4ளியிந்த3 ஹோடி3ஸிகொண்டு3 ப3லு
பீ4திகா3துரனாகி3 ஸங்கடப3ட்டு அதோ4
பூதிக3ந்த4தி3ந்த3 பொரடு1 ப்ரளாபதி3ந்த3
பூ4தளதொ3ளு பி3த்3து3 ஹொரளுவனோ
வாத1 ஷைத்1ய பைத்யா தா4துவினல்லி ஹீன
ஆதுரவந்த1னாகி3 ப4வத3ல்லி முணகி3 ஸர்வ
ஜாதியல்லி புட்டிஸுவி ஈப்ரகாரதி3, க3ர்ப்ப4
யாதனெ பேளலளவெ, அஹோ அஹோ அய்யோ
பாதகமதியிந்த3 புண்யவ களகொண்டு3
ஞாதனுஷ்டானமரதெ3 மமதெயிந்த3
ஆதுமா அஹம் மமதெயலி ஸஞ்சரிஸி காலா
தீதனாதெ3 ஸ்வத4ர்மதொரெது3
மாதுலாலிஸி கேளோ ஹ்ருத3யாகாஷ நாமகனெ
மாதுரகாலவாத3ரெ ஸோததன த4ரிஸி ஈ
மாதெ க3ர்ப்ப4த3ல்லி ஒல்லெ ஒல்லெ

பூ4தாதி3வர்த்தமான ப3ல்ல வைகுண்ட2ரமண
பௌ4திககாயவ பி3டி3ஸு நின்ன நாமவெ நுடி3ஸு
ஜோதிர்மயமூர்த்தி விஜயவிட்டலரேய
கௌதுகவாகி3தெ3 நின்ன வ்யாபார நித்ய ||5

ஜதெ

புட்டிஸுவது3 பி3டி3ஸோ பூர்ணகருணாம்பு3தெ4
விட்டல விஜயவிட்டல மத்ப்ரீயா ||6

****

இந்த சுளாதியில் ஸ்ரீவிஜயதாசர், பாகவதத்தின் கபிலகீதை, கருட புராண 6ம் அத்தியாய கர்போத்பத்தி, ஹரியின் கர்ப்ப ரக்ஷணை ஆகிய பரம பிரமேயங்களை விளக்கியிருக்கிறார்.

1. அகர ஸதி ஸுத ஸௌக்யவெந்தெம்போ துக்க...

ஆகர (வீடு), மனைவி, மக்கள், உடல்நலம் ஆகிய துக்க சாகரத்தில் நாம் மூழ்கியிருக்கிறோம். இரவும் பகலும் தேக போகத்திற்காக சிந்தித்தவாறு காலத்தை கழித்துக் கொண்டிருக்கிறோம். விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக, கண்டகண்ட இடங்களில், கண்டவர்களுக்கு அடிபணிந்து, செல்வத்திற்காக பிக்ஷை வேண்டவும் நாம் தயங்குவதில்லை. போகத்திற்காக ஊரெல்லாம் சுற்றி, தூக்கத்தை மறந்து மந்தமதிகள் ஆகிறோம் (ப்ரஜாகர = தூக்கம்).

சரியாக சிந்தித்தால், நாளொன்றுக்கு சாதன தர்மத்தில் மனம் செல்வது மிகவும் குறைவான நேரமே. தக்க சாதனை சரீரத்தைப் பெற்றிருந்தாலும், அத்தகைய சாதனைகளை செய்யாமல் காலத்தை வீணாகக் கழித்த நான் எத்தகைய மூடமதி?. இதற்கு நடுவில், நான், என்னுடையது என்னும் இரு காடுகளில் (ஈராரண்ய) சுற்றியவாறு இருக்கிறேன்.

தற்காலிகமான செல்வத்தின் ஆசை (ஹாகரஹாகதாஸெ) என்னும் மலத்தில் விழுந்து அசுத்தமான நான், இந்த அல்ப ஆசைக்காக,

12. கர்ப்போத்பத்தி ஹரிரக்ஷணெ சுளாதி

கஞ்சத்தனத்தில், ஊரெல்லாம் சுற்றி, அதிலிருந்து கிடைத்த பொருட்களால் வயிற்றை நிரப்பினேன். 'ஹுட்டிஸித தேவதா ஹுல்லு மேயிஸுவனு' என்னும் தத்வத்தை மறந்தேன்.

பசியில் வாடி கோபம் கொண்டு, வெயிலின் தாக்கத்தை பொறுக்காத தவளை ஒன்று, தலை விரித்திருக்கும் நாகத்தின் நிழலில் சென்று இளைப்பாறியதைப் போல, இந்த சம்சார சர்ப்பத்தின் நிழலை நான் கதியென்று நம்பினேனே? இதன் பலனாக, நானே அதற்கு பலி ஆனேன். 'குபிதாஹிபணச்சாயா ஸமீக்ருத்ய' என்னும் டீகாராயரின் வாக்கிற்கு நானே உதாரணம் ஆகிப் போனேனே?.

ஸ்ரீவெங்கடேச என்னும் கல்பவ்ருக்ஷத்தின் நிழலை அண்டாமல், பாம்பின் நிழலை அண்டிய மந்தமதி நான். பாற்கடலில் படுத்த விஜயவிட்டல ஸ்வாமியை, ஏழையான சுதாமனைப் போல மெச்சாமல், சம்சாரத்தில் மூழ்கியிருக்கிறேனே?

இந்த விஷயம் பாகவதாதிகளில் சொல்லப்பட்டிருக்கிறது.

இரவு தூக்கத்திலும், வாலிப போகத்தினாலும் கழிந்தால், பகல் பணம் சம்பாதிப்பதில் கழிகிறது. முழு வாழ்க்கையும் குடும்பத்தை பாதுகாப்பதிலேயே கழிகிறது. தேகம், செல்வம் ஆகியவற்றில் அபிமானம் அடைந்து, அதனை வளர்ப்பதற்காக மூழ்கி, தான் யமனின் தொந்தரவில் வீழ்ந்தாலும் அது தெரிவதில்லை -- புரந்தரதாசர். பைபைவரெகு ஊடத கெலஸ உண்ட மேலே ஷயன -- புரந்தரதாசர்.

இதையே ஹரிகதாம்ருதசாரத்தில்:
க்ருஹ குடும்ப தனாதிகள ச
ந்னஹகளுள்ளவராகி விஹிதா
விஹிததர்ம சுகர்மகள திளியதலெ நித்யதலி |
அஹர மைதுன நித்ரெயொளகா
கிஹரு சர்வபிராணிகளு ஹ்ரு
த்குஹ நிவாசியனரியதலெ பவதொளகெ பளலுவரு ||(13-24)

2. ஸ்வர்க்க நரக பூமி சரிஸிதெ ஸர்வதல்லி...

ஜீவன் இந்த மானவ தேகத்தை தரித்து, யக்ஞ யாகாதி காம்யங்களை செய்தால், ஸ்வர்க்க ப்ராப்தி. பாப் கர்மங்களை செய்தால், நரக பிராப்தி. இதனால் பூமியில் மறுபடி பிறப்பு, இறப்பு என தொடர்ச்சியாக சிக்கி, அடுத்த வழி தெரியாமல், பற்பல யோனிகளில் பிறப்பு எடுக்கிறான். அந்தந்த பிராணிகளின் கர்ப்பத்தில் நுழைந்தபோது அங்கு கர்ப்பவாசத்தின் பற்பல வித துன்பங்களை அனுபவிக்கிறான்.

இவ்வளவுக்குப் பிறகும் கர்மத்தை முடிப்பதற்கு சாத்தியம் ஆவதில்லை. இந்த சம்சாரத்தின் சுழற்சியில் சிக்கி சுகதுக்கங்களை அனுபவிக்கிறான். விஷய சுகங்களில் மகிழ்ந்து அதற்காக மேலும் போராடுகிறான். சுகத்தில் மெய் மறந்திருக்கும்போது, ம்ருத்யு தேவதை அவன் அருகிலேயே இருந்தாலும், அது அவன் கண்ணிற்கு தெரிவதில்லை. ஸர்வதேவோத்தமனும் புராணபுருஷனுமான விஜயவிட்டலன், அனைவரின் தகுதியையும் அறிந்தவன். ஸ்ரீஹரியே, உன்னிடம் எனது ஒரு விண்ணப்பம் - அது என்னவென்றால்...

3. ககனாதிந்தலி மேகப்ரவேஷவனு மாடி...

த்யு - பர்ஜன்ய - பூமி - பும் - ஸ்த்ரீ என்பது பஞ்சாக்னிகள் என்று அழைக்கப்படுகின்றன. இந்த ஐந்து அக்னிகளும், கட்டை, புகை, நெருப்பு, கங்கு, நெருப்புத்துண்டு என்னும் ஐந்து அம்சங்களால் கூடியிருக்கின்றன. அக்னி மற்றும் அக்னியின் அம்சங்களில் ஹரியின் ஆறு ரூபங்கள் இருக்கின்றன.

தேவ ரிஷி பித்ரு சக்ரவர்த்தி மனுஷ்யோத்தமர் என்னும் முக்தி யோக்யர்கள் பூமியில் இந்த சரீரத்தைப் பெறுவதற்கு பஞ்சாக்னிகத நாராயணாதி பஞ்சரூபியே காரணம். ஜீவிகள், ஸ்தூல சரீரத்தினால் பிறப்பதற்கு ஸ்வர்க்கத்திலிருந்து பூமிக்கு வருகின்றனர். முன்னர் செய்த புண்ணியத்தினால் ஸ்வர்க்கத்தை சேர்ந்து, சுகத்தை அனுபவித்து, புண்ய சேஷத்தினால் பூமிக்கு திரும்ப வந்து புண்ய கர்மங்களை செய்வதற்கு வருகின்றனர். அப்படி வந்தபோது பூமியில் தாயின் கர்ப்பத்தில் சேர்கின்றனர்.

12. கர்ப்போத்பத்தி ஹரிரக்ஷணெ சுளாதி

ஆகாஷ மார்க்க, வ்ருஷ்டியின் மூலம் (வரஷத்வாரா) நிலத்தில் வந்து விழ்கின்றனர். தானியமாக பிறந்து வளர்ந்து தின்னும் ஆகாரமாக, தந்தையின் சரீரத்தில் நுழைந்து, வீர்யமாக தாயின் கர்ப்பத்தில் நுழைகின்றனர். இந்த காரியம் ஜீவனுக்கு சாத்தியம் இல்லை. தேவதைகளே இந்த காரியங்களை நடத்துகின்றனர். இந்த ஐந்து அக்னிகளில் முறையே சேர்க்கின்றனர். இதையே 'பஞ்சமஹாயக்ஞ' என்கின்றனர்.

இந்த அம்சத்தையே இந்த பகுதியில் விளக்கியிருக்கிறார் விஜயதாசர். அடுத்து, ஸத்வ ரஜஸ் தமோ குணங்களால் தேகம் வளரும் வழியை விளக்குகிறார்.

த்ரிகுணதலி பௌவ பரி:
ஓரிரவில் கலைந்திருக்கும் நிலையில் இருக்கிறது. வீர்யாணு, அண்டாணு இரண்டும் இன்னும் ஒன்றாக சேராத நிலையில் இருக்கின்றன.

மூன்று இரவுகளில் கலிலம் (கலல); ஐந்து இரவுகளில் நீர்க்குமிழி; பிறகு பத்து இரவுகளில் ஏலக்காய் போன்ற அளவில் இருக்கிறது. ஒரு மாதத்தில் தலை; இரு மாதங்களில் தோள் போன்ற அங்கங்கள், மூன்றாம் மாதத்தில் நகம், மயிர், தோல், லிங்க, பத்து த்வாரங்கள் உருவாகின்றன. நான்காம் மாதத்தில் ஏழு தாதுகளும் (ரக்த, மாம்ஸ, மேதஸ், மலம், மஜ்ஜெ, சுக்ர, ரஸ). ஐந்தாம் மாதத்தில் பசி துவக்கம். த்ரிகுண சரீரத்தாலும் த்ரிகுண சம்பந்தரஹிதனான விஜயவிட்டலன் பேதபாவத்தினால் இருக்கிறான்.

கருட புராணத்தில் சரீர ரசனை இவ்வாறாக செய்யப்பட்டிருக்கிறது.

கலலம் த்வேகராத்ரேண பஞ்சராத்ரேண புத்துதம் |
தஷாஹேன கர்கந்தூ: பேஷ்யண்டம் வா தத: பரம் ||
மாஸேன ஷிரோ, த்வாப்யாம் பாஹ்யம் காத்யங்க விக்ரஹ: |
நகலோமாஸ்தி சர்மாணி லிங்கச்சித்ரோத்பவஸ்த்ரீபி: |
பஞ்சபி: க்ஷுத் த்ருடுத்பவ: ||

4. ஆரனெ மாஸக்கெ வாமபாகதிந்த...

ஆறாம் மாதத்தில் இடது பக்கத்திலிருந்து (குக்ஷௌ ப்ராம்யதி தக்ஷிணீ). இந்த சமயத்தில் 'ஜராயு' என்னும் கர்ப்பவேஷன, சர்மத்திலிருந்து சுற்றி வருகிறது. ஏழாம் மாதம், பூர்வ ஜென்மத்தின் கர்மங்களின் சிந்தனை, மற்றும் சுக துக்கங்களை திரும்பத் திரும்ப நினைக்கும் நிலை வருகிறது.

எட்டாம் மாதத்தில் தாய் தின்ற அன்ன பானாதிகளால் குழந்தையின் தாது வளர்கிறது. உள்ளே கர்ப்பாஷயத்தினால் சுற்றப்பட்டு, வெளியே தாயின் குடலால் சுற்றப்பட்டு, தாய் தின்னும் காரம், இனிப்பு, உப்பு, புளி ஆகிய சுவைகளின் ஸ்பர்ஷத்தினால் தேகத்தின் அனைத்து அவயவங்களிலும் வலியை அனுபவிக்கிறான்.

மாத்ருபுக்த்யை: உபஸ்ப்ருஷ்ட: ஸர்வாம் கோத்திதமேதன: |

ஒன்பதாம் மாதத்தில் அங்கிருக்கும் பசியோடிருக்கும் கிருமிகளால் கடிக்கப்பட்டு, மிருதுவான அனைத்து அங்கங்களும் ஒவ்வொரு நொடியும் அதிக வலியால் கஷ்டப்படுகிறான். மூர்ச்சையாகிறான். ஏழாம் மாதத்திலேயே மூன்று ஜென்மத்தின் கர்மங்களின் நினைவு வருகிறது. ஞானம் வந்திருந்தாலும், ப்ரஸூதி வாயுவின் ப்ரபாவத்தினால் வயிற்றில் மலத்தில் இருக்கும் புழுக்களைப் போல ஓரிடத்தில் இருப்பதில்லை.

பத்து மாதங்கள் வரையும் இருந்து, ப்ரஸூதி வாயுவினால் தலைகீழாக வைக்கப்பட்டு, நாறும் துர்மணத்தினால் யோனி த்வாரத்தினால் அழுதவாறு தலை குனிந்து, மூச்சு அடைபட்டுப் போனதைப் போல மிகவும் கஷ்டத்துடன் வெளியே வருகிறான். இந்த நிலையில், திருடர்களை அடித்து உதைத்து கட்டிப் போட்டதைப் போல சுருண்டு இருக்கிறான்.

ஆரிகெ தூரலி:
இத்தகைய கஷ்டமான நிலையில், ஸ்ரீஹரி நம்மை வைத்தால், யாரிடம் சென்று முறையிடுவது?. நம்மை விடுவிப்பதற்கு யாரும் சமர்த்தர் இல்லை. வேறு யாரைக் கேட்டாலும் சேற்றினில்

விழுந்தவனிடமே என்னை சேற்றிலிருந்து காப்பாற்று என்று சொல்வதைப் போல. இந்த கஷ்டத்தின் சிந்தனை யாருக்கும் இல்லை. அதைப் பற்றி சிந்திப்பர்களும் இல்லை, அனைத்து ஆபத்துகளிலிருந்து காப்பாற்றும் விஜயவிட்டலனைத் தவிர. ஸ்வாமியே நான் சரணடைகிறேன். இந்த கர்ப்ப துக்கத்திலிருந்து என்னை காப்பாற்று, இந்த கஷ்டங்களை விலக்கு.

<u>5. ஸூதிகாளியிந்த ஹேொடிஸிகொண்டு பலு...</u>

ஜீவியின் ஸூதிக வாயுவிலிருந்து வெளிப்பட்டு, தலைகீழாக மிகவும் கஷ்டப்பட்டு துக்கத்தை அனுபவித்து, கெட்ட மணத்தால் நிரம்பியிருக்கும் உறுப்பிலிருந்து வெளிவருகிறான். அழுதவாறே பூமிக்கு வந்து விழுந்து, அழுக்கினில் விழுந்து உருள்கிறான். வாத, பித்த, கப என்னும் மூன்று தாதுகளாலான சரீரத்தைப் பெற்று, பாலகனாக வளர்ந்து, வாலிப வயதை அடைந்து, சம்சாரிக கஷ்டங்களில் விழுந்து கஷ்டப்பட்டு, துக்கப்படுகிறான். அடுத்து, பகவந்தன் அவனின் கர்மங்களுக்கேற்ப நாய், நரி முதலான குத்ஸித யோனிகளில் பிறக்க வைக்கிறான்.

இவ்வாறு கர்ப்பவாசம் அனுபவிக்க வேண்டியதாகும். வேறொருவருக்கு கூறினால் இது புரியாது. இத்தகைய துக்கம் மேலும் வரக்கூடாது என்றால், நீச காரியங்களை செய்து, புண்ணியத்தை குறைத்துக் கொள்ளக்கூடாது. மானவன் அஹங்கார மமகாரங்களால் தன் வர்ணாசிரமத்திற்கேற்ற கர்மத்தை செய்யாமல், சஞ்சரித்தவாறு, தன் ஆயுளை அழித்துக் கொள்கிறான்.

ஹ்ருதயாகாஷ நாமகனே, விஜயவிட்டலனே, என் கஷ்டங்களைக் கேள், உன் மாயா மோஹிதனாகி, மனைவி மக்களில் அபிமானம் செய்து, சம்சார கிணற்றில் விழுந்திருக்கிறேன்.

என் குடும்பத்திற்காக நான் கஷ்டப்பட்டேன். ஆனால், அந்த பலனை அனுபவிப்பவர்கள் புறப்பட்டுச் சென்றனர். ஒரு வேளை, இந்த கர்ப்பத்திலிருந்து நான் முக்தன் ஆனால், உன் பாதங்களையே நினைத்திருக்குமாறு செய். மறுபடி என்னை இந்த கர்ப்ப வாசத்தில் விழுந்து புரளுமாறு செய்யாதே.

பூதபவ்ய பவத் பிரபுவான நீ, இந்த பௌதிக சரீரம் வராதவாறு என்னை காப்பாற்று. உன் நாமத்தை என்னை நுடிக்க வை. இந்த கர்ப்பத்தில் இருந்து உள்ளே வெளியே பரீக்ஷிதனை காப்பாற்றியதைப் போல, அருளிய உன் இந்த செயல்கள் அற்புதமாக இருக்கிறது.

6. புட்டிஸுவுது பிடிஸோ பூர்ணகருணாம்புதெ...

பூர்ண கருணைக்கடலான சந்திரனே, இன்னும் எனக்கு வேறு ஜன்மங்கள் இருந்தால், அவற்றை விடுவித்து, என்னை காப்பாற்று.

***

---

13. ஸ்ரீஹரி பக்தர்களின் வசம் சுளாதி

த்ருவ தாள

மன து3ஸ்ஸங்க3திகெ3 யோசனெ மாடி3த3ரெ யோ
சனெ மாட3லீஸய்யா யோ
சன மாடி3த3ரெ அல்லி எரக3லீஸய்ய
மனவெரகி3த3ரெ அத்த போக3லீஸய்யா ஆ
க்ஷண போத3ரெ அல்லி நோட3லீஸய்யா
நெனிஸி நோட3தி3ரு நில்லரகு1ள்ளலாலீஸய்யா
மன து3ஸ்ஸங்க3திகெ3
அனுவாகி3 அல்லெல்லி மாதாட3லீஸய்யா
பி3னகு3மாதாடி3த3ரு அபவாத3 ப3ரலீஸய்யா
ஜனரபவாத3வு ப3ந்த3ரு ப4க்தனிகெ3 இரலிஸய்யா
க4னபாபங்க3ளு ப்ரத்3வம்ஸமாடு3வ தே3வ
நினகா3வதெ3து3ரெ நினகெ3ணெகா3ணெ நின்ன
மணி பூ4ஷணங்க்4ரிகெ3ணெகா3ணெ
நினகெ3 நமோ நின்ன கு3ணகர்மங்க3ளிகெ3 நமோ
எனிதோ நின்ன மஹிமெ மனமெச்ச ப4க்தரிகெ3
உணிஸி உடி3ஸி நோடி3
மனயரகி3த3 வஞ்சனெ ப்ரயோஜனங்க3ளு
அணகொ3த்தி காயுதிப்ப அணோரணி ஆஹா விபு4வெ
மன து3ஸ்ஸங்க3திகெ3 விஜயவிட்டலரேய யோ
சனெ மாட3லீஸய்யா ||1

மட்ட தாள

ப4குதி எம்போ3 கர்த3மதொ3ளகெ3
அகி2ல ப3லவந்த ஹரி தா ஸிக3பி3த்3து3
தி3க்குகெ3டு3வனய்யா
ப4குதி எம்போ3 பாஷக்கெ வஷவாகி3
லகுமிவல்லப4 ஒந்த3டி3 இட3லார
ப4குதி எம்போ3 தொட3ரிகெ3 தக3லாகி3
முகுதீஷ க்ருஷ்ண தொலக3தெ3 இப்பனய்யா
ப4குதி எம்போ3து3 மாவுதனோபாதி3

அகடதி3க்கரியந்தெ ஹரி கேளுதலிப்ப
ப4குதி எந்தெம்போ3 வஸ்த்ர பச்சிட்டகொள்ளி
கருலாதியிந்த3 ஹரி பெ3ம்ப3லவாஹ
ப4குதீகெ3 ஈடி3ல்ல ப4குதிகெ3 கேடி3ல்ல
ப4குதிய ஸம்பாதி3ஸிரோ
ப4குதி உள்ள மனுஜ முகுதனோ முகுதனோ
ப4குதிகெ3 ஒலித3ந்தெ மத்தாவது3 அல்ல
அகளங்க சரித விஜயவிட்டலரேய
ப4குதிகெ3 மனஸோது மௌனவாகி3 நிலுவா ||2

த்ரிவிடி தாள

ப4குதிகெ3 ஸிக3பி3த்3து3 ப4ண்டி3னடி3ஸித3 நோடு3
ப4குதிகெ3 தொலக3தெ3 முனிய தேரனெ எளெதா3
ப4குதிகெ3 வஷவாகி3 ஸௌபா4க்3யவனெ இத்தா
ப4குதிகெ3 மருளெனிஸி ஆளாகி3 ஸேவிஸிதா3
ப4குதிகெ3 மீரதெ3 விது3ரனல்லி உண்டா3
ப4குதிகெ3 ஔகா3கி3 தனகெ3 தானெ ஸோதா
ப4குதி உள்ளவரிமத3 ஹரி மாரிஸிகொம்பா3
பகுதி எம்போ3தொ3ந்து3 ப3லவுள்ளரெ ஹரி
ஷகுதனாத3ரு ஹேளித3ந்தெ தா மாடு3வா
ப4குதியெ, பாபபீ3ஜகெ காரண ஸுடு3வல்லி
ப4குதியெ புண்யபௌஸிகெ3 அம்ருத வ்ருஷ்டி
ப4குதவத்ஸல நம்ம விஜயவிட்டலனல்லி
ப4குதிய மாடி3ரோ ப4குதரொட3கூ3டி3 ||3

அட்ட தாள

தா3ன த4ர்மகெ1 ஷிலுக ஸ்னான மௌனகெ ஷிலுகா
கா3னயாக3கெ ஷிலுக ஞானயோக3கெ ஷிலுகா
த்4யானக்கெ குணிதக்கெ ஷிலுக காணிகெ கொட்டரெ ஷிலுகா
ஏணிஸி ஜபிஸலு ஷிலுக க்ஷோணிசரிஸலு ஷிலுகா
நானாவ்ரத மாட3லு ஷிலுக ஏனேனு த4ர்மக்கெ ஷிலுகா
மாணதெ3 த்4ருடப4க்தி மாதுரவித்3த3ரெ
தானாகி3 கரெயதெ3 ப3ளியல்லி ப3ந்தீ3க3

13. ஸ்ரீஹரி பக்தர்களின் வசம் சுளாதி

காணிஸிகொம்ப3னு ப4க்தனிகெ3 அனுதி3ன
ஏனெம்பெ3னோ ஷிரியரஸன்ன லீலெகெ3
ஆ நிர்ஜரரந்து3 கு3ணிஸி எணிஸுவரு
நானெ எந்த3வனிகெ3 எந்திகு3 ஒலியனு
மீனகேதனனய்யா விஜயவிட்டலரேயா
மானஸப4குதிகெ3 லேஷ ஆலஸவில்லா ||4

ஆதி தாள

ஸிரிகெ3 ஹேளதெ3 கரிய காய்த3
ஸிரிய ஹங்கே3னை
பரமேஷ்டி அரியதெ3 பார்த்த2வ ஸலஹிதா3
பரமேஷ்டி ஹங்கே3னை
ஹரன ஓடி3ஸி அம்ப3ரீஷன காய்தா3
ஹரன ஹங்கே3னை
ஸுரபன ப4ங்கி3ஸி கோ3குல காயதா3
ஸுருபன ஹங்கே3னை
ஷரணரிகா3ட3லு தன்னவராத3ரு
ஜரிய பி3டு3வனய்யா
ஷரணரிகெ3 பஞ்சப்ராணனாகி3 ஹரி
பொரெவனு ப்ரதிதி3னவை
து3ருளதனத3ல்லி அஜமிள கெட்டரெ
ஸ்மரிணிகெ3 காய்த3 நோடை3
ஹரி மத்தொந்த3னு ஒல்லனு ப4குதி
பரம ஸுஸாத்4யனை
பரமபுருஷ நம்ம விஜயவிட்டலா
ஷரணரிகெ3 ஆளாகி3 திருகு3வ பெ3ம்ப3லபி3ட3தெ3 ப4குதிகெ3
மருளாகி3 ப3ந்து3 ||5

ஜதெ

ப4குதிகெ3 முகுதியோ மத்தாவத3க்கில்ல
ஷகுதவிஜயவிட்டல ஸம்பள இல்லத3 ப3ண்ட ||6

****

பகவந்தன் பக்தர்களை காக்கும் விதங்களை இந்த சுளாதியில் மிகவும் அழகாக வர்ணித்திருக்கிறார் ஸ்ரீவிஜயதாசர். பக்தர்கள் தமது பிராரப்த கர்மங்களால், கெட்ட சங்கத்தில் கட்டப்பட்டு, கெட்டதையே யோசிக்கத் துவங்கும்போது, ஸ்ரீஹரி அவர்களை காக்கிறான். அவன் காக்கும் விதங்களை இங்கு சொல்கிறார். பகவந்தன் பக்தர்களின் பக்திக்கு மெச்சி, அவர்களின் வசம் ஆகும் விதத்தை மட்ட தாளம் சொல்கிறது. த்ரிவிடி தாளத்தில் தான் தேவவரேண்யன் ஆக இருந்தாலும் பக்தர்களுக்கு அஸ்வதந்த்ரனைப் போல சேவை செய்யும் விளக்கம் இருக்கிறது. அட்ட தாளத்தில், பக்தி இல்லாமல் ஸ்னான, மௌன, தானாதிகளை செய்தாலும் பகவந்தன் அதற்கு வசம் ஆவதில்லை என்கிறார். ஆதி தாளத்தில் ஸ்ரீஹரி பக்தர்களை காக்கும்போது லட்சுமி பிரம்மாதிகளின் செயல்களையும் பார்க்க மாட்டான் என்னும் விஷயம் இருக்கிறது. பக்தர் என்றால், பஞ்சபிராணனே.

1. மன துஸ்ஸங்கதிகெ யோசனெ மாடிதரெ...

தங்களின் பிராரப்தத்தினால், பக்தர்கள் மற்றொருவர்களுக்கு கெட்டதை நினைப்பதற்கு துவங்கும்போது, அந்த மனம் கெட்ட சிந்தனையில் ஈடுபடுவதை ஸ்ரீஹரி தடுக்கிறான்.

யோசனெ மாடிதரெ அல்லி எரகாலீஸய்யா...

ஒரு வேளை மனம் கெட்ட சிந்தனையில் ஈடுபட்டால், ஸ்ரீஹரி அதனை அத்தகைய கெட்ட சிந்தனையில் ஈடுபடுவதற்கு விடுவதில்லை. ஒரு நொடியில், மனம் அங்கு சென்றுவிட்டாலும், அங்கு இருக்க விடமாட்டான். நினைத்துப் பார்ப்பதானால், அங்கேயே நிற்காதவாறு காக்கிறான்.

ஒரு வேளை, மனம் கெட்ட சிந்தனையில் நிற்பதானாலும், அங்கு அதனுடன் பேசுவதற்கு ஸ்ரீஹரி விடுவதில்லை. ஒரு வேளை மனம் அங்கு அதனுடன் பேசத் துவங்கினாலும், அதனால் கெட்ட பெயர் வர விடுவதில்லை. மக்களிடம் கெட்ட

பெயர் வந்தாலும், பக்தனுக்கு அத்தகைய கெட்ட பெயர் ஸ்திரமாக இருக்க விடுவதில்லை.

முற்பிறவியின் பிராரப்தத்தினால் செய்த மகா பாவங்களை அழிப்பவன் பகவந்தனே. இத்தகைய பகவந்தனுக்கு யார் என்னதான் செய்துவிட முடியும்? தனுஜரக்கஸரெல்லரு முனிது மாடுவதேனு?. உரலில் தானியத்தைப் போட்டு, பொடி செய்வதைப் போல, அனைத்தையும் பொடிப்பொடி ஆக்குகிறான். இவனுக்கு யார் எதிரியாக முடியும்? இவனின் சாமர்த்தியத்திற்கு இணை யார் இருக்கிறார்கள்? ஸ்ரீஹரிக்கு மட்டும் சரிசமம் ஆனவர்கள் வேறு யாரும் இல்லை. மேலும், அவன் தரிக்கும் மணி பூஷணங்கள் மற்றும் பாதம் முதலான அவயவங்களுக்கும் இணையில்லை.

உனக்கு நமோ நமோ என்பேன் ஸ்ரீகிருஷ்ணனே. உன் ஸத்யஞானாதிகளுக்கும், ஜகஜ்ஜன்மாதி காரணத்திற்கும் நமோ.

பகவந்தனின் மகிமை அனந்த (எனிதோ) அது அவனின் பிரியமான பக்தர்களுக்கு மட்டுமே தெரியும். அவன் விரும்பும் பக்தர்களுக்கு, அவர்களின் அனுபவத்திற்கு வருகிறது.

மனதில் அடங்கியிருக்கும் வஞ்சனை, துர்லாப ஆகியவற்றை விலக்கி, பக்தர்களை காக்கும் அணோரணீயனும் மஹதோ மஹீயனும் ஆன சர்வசமர்த்தனான ஸ்ரீஹரி, நம் மனம் துஷ்ட விஷயங்களிடம் செல்லாதவாறு அருள்கிறான்.

<u>2. பகுதி எம்போ கர்தமதொளகெ...</u>

ஸ்ரீஹரி, சர்வ சமர்த்தனே ஆனாலும், பக்தர்களின் பக்தி என்னும் சேற்றினில், சிக்கி விழுந்து, பக்தர்கள் எந்த திசையில் இருக்கிறார்களோ, அந்த திசையைத் தவிர வேறு திசையில் தென்படமாட்டான்.

பக்தர்களின் பக்தி என்னும் பாஷத்திற்கு வசனான ஸ்ரீஹரி, லட்சுமிவல்லபன் ஆனாலும், பக்தர்கள் இருக்கும் ஸ்தானத்திலிருந்து வந்து, ஒரு அடி முன்னே வைப்பதில்லை. பக்தர்களின் பக்தி என்னும் விக்னத்திற்கு (தோடரு) கட்டுப்பட்டவனைப் போல, பக்தர்களை விட்டு விலகாமல் இருக்கிறான். மாவுத்தனின் அங்குசத்திற்கு யானை கட்டுப்படுவதைப் போல, பக்தர்களின் பக்தி என்னும் பாஷத்திற்கு பகவந்தன் கட்டுப்படுகிறான்.

பக்தி என்னும் பாஷத்தில் கட்டப்பட்ட பகவந்தன், பக்தர்களை இடைவிடாமல் காத்து வருகிறான் ஆகையாலேயே, நீங்கள் அனைவரும் பக்தி என்னும் வஸ்திரத்தினால் உங்களை மூடி வைத்துக் கொள்ளுங்கள். பக்திக்கு சரிசமானமான வேறொரு சாதனம் இல்லை. பக்தி செய்யும் பக்தர்களுக்கு என்றும் கேடு இல்லை. பக்தியை சம்பாதித்த பக்தன், உண்மையில் முக்தனே ஆகிறான்.

பக்திக்கு ஸ்ரீஹரி இரங்குவதைப் போல, வேறு எதற்கும் ஸ்ரீஹரி மயங்குவதில்லை. குசேலனின் அவலுக்கு ஸ்ரீஹரி மெச்சுவதில்லை. அவன் இரங்கியது அந்த அவலுக்குப் பின்னால் இருந்த குசேலனின் பக்திக்கு மட்டுமே.

அகளங்க சரித விஜயவிட்டல ரேயன், பக்திக்கு மெச்சி மௌனமாக பக்தரின் முன் நிற்கிறான்.

3. பகுதிகெ ஸிகபத்து பண்டினடிஸித நோடு...

பக்தர்களின் பக்தியில் கட்டுப்பட்டு, பக்தர்களுக்கு செய்யும் கைங்கர்யத்தை சொல்கிறார். பக்தாபராத ஸந்தி இதனை விளக்குகிறது. விஜயஸாரதியெந்து கருடத்வஜன மூர்த்திய பக்திபூர்வக பஜிஸுதலிப்ப மஹாத்மரிகெ ஸர்வத்ர ஒலிது விஜயதனு தானாகி ஸலுஹுவி -- பக்தாபராத ஸந்தி - 25.

பகுதிகெ ஸிகபித்து பண்டி நடிஸித நோடு:

13. ஸ்ரீஹரி பக்தர்களின் வசம் சுளாதி

பாண்டவர்களின் பக்திக்கு மெச்சிய ஸ்ரீஹரி, அர்ஜுனனின் ஸாரதியாகி ரதத்தை ஓட்டினான்.

பக்தர்களின் பக்திக்கு மெச்சி, அங்கிருந்து தூர விலகாமல், துர்வாஸ முனிவரை ரதத்தில் அமர்த்தி, தானே ரதத்தை செலுத்தினான்.

பக்தர்களின் வசமாகி, பக்தனான குசேலனுக்கு அகண்ட செல்வத்தை அளித்தான். அப்படியே தேவஷர்மனின் பக்திக்கு மெச்சி, ஏழ்மையில் வாடிய அவனுக்கு சௌபாக்யத்தினால் மகிழ்ச்சிப் படுத்தினான்.

குசேலனவலிகெ மெச்சிகொட்டனு சகல ஸம்பதவ |
தேவஷர்மாஹ்வய குடும்பக்கெ தா ஒலிது பாலிஸித ஸௌக்ய |
பக்திக்கு மயங்கி பக்தனான பலிசக்ரவர்த்தியின் வீட்டு வாயிலை, கதாபாணியாக காவல் காத்தான். பக்தனான பாண்டவர்களின் ராஜஸூய யாகத்தில் பிராமணர்களின் பாதங்களைக் கழுவினான்.

பகுதிகெ மீரதெ விதுரனல்லி உண்டா:

சமாதானம் பேச ஸ்ரீகிருஷ்ணன் வந்தபோது, பீஷ்ம துரோணாதிகள், துரியோதனாதிகள் அவரை உணவிற்கு அழைத்தாலும், திரௌபதியின் அவமான காலத்தில் அவர்கள் அவளைக் காக்கவில்லை என்னும் காரணத்தால் அவர்களின் உபசாரத்தை அவன் புறக்கணித்தான். திரௌபதிக்காக பரிந்து பேசிய ஷூத்ரனான விதுரனின் வீட்டிற்குச் சென்று அங்கு உணவு உண்டான். பக்தாபராத ஸந்தியிலும் இந்த விஷயம் இருக்கிறது.

ஓகரிஸி குருபதிய போஜன ஸ்வீகரிஸிதனு விதுரனௌதண |
பாகுளகனந்ததலி தோரித பக்தவத்ஸலதெயனு ||.

இது மட்டுமல்லாமல், ஸ்ரீனிவாஸன், பீம என்னும் குயவனின் பக்திக்கு மெச்சி, அவனுக்கு அருள்வதைப் போல, அவனின் மனைவியான தமாலினி என்பவள் தயாரித்த சமையலை உண்டு, அருளினான். குலாலஜாயயா அபுங்க்த தத்தம் ச ததன்ன முத்தமம் ||

பகுதிகெ ஒளகாகி தனகெ தானே ஸோதா:

பரசுராமதேவர் அம்பைக்காக, பக்தனான பீஷ்மனுடன் சண்டையிட்டு, நித்ய-விஜயனான பகவந்தன், தான் தோற்றதைப் போல நாடகம் ஆடி, பக்தனின் புகழினை உலகினில் பரப்பினான். இன்னொரு சந்தர்ப்பத்திலும் 'ஸ்ரீகிருஷ்ணனின் கையில் ஆயுதம் பிடிக்க வைக்கிறேன் என்று பீஷ்மர் சபதம் செய்திருந்தார். ஸ்ரீகிருஷ்ணன் தான் ஆயுதம் தரிப்பதில்லை என்று பார்த்தனுக்கு வாக்கு கொடுத்திருந்தார். அப்படியிருந்தாலும், பீஷ்மனின் சபதம் வெல்ல வேண்டும் என்று, பக்தவத்ஸலனான ஸ்ரீகிருஷ்ணன், மகாபாரத போரில் 3ம் நாளில் மற்றும் 9ம் நாளில் பீஷ்மனுக்காக தான் ஆயுதம் ஏந்தினான்.

ஸ்வனியமமபஹாய மத் ப்ரதிக்ஞாம்
ருதமதிகர்த்துமவல்புதோ கதஸ்ய -- பாகவத

பகுதிவுள்ளவரிந்த ஹரி மாரிஸிகொம்பா:

ஹரிவம்சத்தில் வரும் சத்யபாமாவின் புண்யக விரதத்தில் நடந்த கதா பாகத்தின் சாரம் இது.

கணவனைப் பெறுவதற்கு, அதிதி, பார்வதி ஆகியோர் செய்த புண்யாஹ விரதத்தை சத்யபாமையும் செய்தாள். இந்த புண்யாஹ விரதத்தின் விதிப்படி, பதியை பாரிஜாத மரத்தில் கட்டிப்போட்டு, அவனை விதிபூர்வகமாக பிராமணனுக்கு தானம் செய்யவேண்டும். பிறகு பதியை தராசில் வைத்து, அவனின் எடைக்கு ஒப்பான செல்வத்தை பிராமணனுக்குக் கொடுத்து

அவனை விடுவிக்க வேண்டும். இப்படியாக ஸ்ரீகிருஷ்ணனை நாரதருக்கு தானம் அளித்தாள். பக்தளான சத்யபாமைக்கு ஸ்ரீகிருஷ்ணன் தன்னையே ஒப்படைத்தான்.

இங்கு சொல்லப்பட்ட உதாரணங்களால் பக்தி என்னும் ஒன்றின் பலம் இருந்தால் போதும், ஹரி சர்வசமர்த்தனாக இருந்தாலும், பக்தர்கள் சொல்லியதைப் போல தான் செய்கிறான். பக்தர்கள் செய்யும் பக்தி என்னும் தாளத்திற்கு மெய் மறந்து ஆடுவான்.

பகுதியே பாபபீஜக்கெ காரண ஸுடுவல்லி:

பாவங்கள் அனைத்தும் விதைகளைப் போல. ஒரு விதை விதைத்தால், நூற்றுக்கணக்கான பாவங்கள் என்னும் விதைகள் என்னும் மரங்கள் வளர்கின்றன. அந்த விதைகள், விஷத்திற்கு சமானம். அதனை சுட்டு எரிக்கவில்லையெனில், முழுவதுமாக அழியாது. பக்தி என்னும் அக்னியினால், அந்த பாப விதைகளை வேறோடு அழிக்க வேண்டும்.

பகுதியே புண்ய பௌஸிகெ அம்ருதவ்ருஷ்டி:

பக்தியினால் புண்ய எனும் தானியம் விளைகிறது. ஆனால், தானியம் விளைவதற்கு தண்ணீர் வேண்டும். புண்ய என்னும் மரம் வளர்வதற்கு பக்திரஸம் என்பது அமிர்த மழையைப் போல. பக்தர்களின் பக்தி இருந்தால், அந்த புண்ணிய மரம், பழங்களைத் தருகிறது. ஆகையால், மந்தமதி ஜனரே. ஸ்ரீஹரியில் பக்தி செய்யுங்கள். பாபபீஜங்களை போக்கிக்கொண்டு, புண்யத்தை வ்ருத்தி செய்து கொள்ளுங்கள் என்று தெளிவாக இங்கு சொல்கிறார் தாசராயர்.

உதாரணம்: மாதவ பிராமணன், குந்தள என்னும் தகாத கன்யையின் சம்பந்தத்தால் செய்த மத்யபான - மாமிச பட்சணாதி அனைத்து பாப பீஜங்களும், வெங்கட பர்வத சன்னிதானத்தினால் சுட்டுப் போயின. விஷ்ணு சஹஸ்ர

நாமத்தில் வரும் 'க்ஷிதீஷ: பாப நாஷன:' இதையே சொல்கிறது.

4. தான தர்மக்கெ ஷிலுக ஸ்னான மௌனகெ ஷிலுகா...

பக்தி இல்லாமல், ஸ்னான தானாதிகள் என எவற்றை செய்தாலும், ஸ்ரீஹரி அதற்கு மகிழ்வதில்லை என்று இந்த தாளத்தில் விளக்குகிறார். ஹரி நாமம் இருப்பவனுக்கு வேறு எதன் தேவையும் இல்லை. இதற்கு ஸ்னான தானாதிகள் இல்லாத, ஜடபரதனே சாட்சி என்று விளக்கியிருக்கிறார்.

தான தர்மக்கெ ஷிலுக:

பல பேர் தானங்களை செய்கின்றனர். சிலருக்கு தானே தானம் செய்தோம் என்னும் பெருமை. வேறு சிலர் தங்களின் விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு இவ்வாறு பலவிதமாக தானம் செய்கின்றனர். பகவந்தனின் ப்ரீதி இல்லாமல் ஒரு சொட்டு தண்ணீர், ஒரு பிடி அரிசி கூட கொடுக்கக்கூடாது என்கிறது சாஸ்திரம். இவ்வாறு ஹரிப்ரீதியைத் தவிர வேறு எந்த சிந்தனையினாலும் தானம் செய்தாலும் ஹரி அவருக்கு கிடைப்பதில்லை. பலி சக்ரவர்த்தி, பகவானின் தங்கக் கிரீடத்தை திருடிச் சென்றான். ஆனாலும் பக்தன் என்று அறிந்து அவனின் வீட்டு வாயிலைக் காத்தான்.

ஸ்னான தர்மக்கெ ஷிலுக:

காம கிரோதாதி துர்குணங்களை உடலில் நிரப்பிக் கொண்டு எவ்வளவு புண்ணிய தீர்த்தங்களில் முழுகி எழுந்தாலும், உடல் சுத்தமாகுமா? ஹரிகதாம்ருதசாரத்தில்:

நானு நன்னது எம்ப ஜடமதி
மானவனு தினதினதி மாடுவ
ஸ்னான ஜப தேவார்ச்சனெயெ மொதலாத கர்மகள |
தானவரு செளெதோய்வரல்லதெ

13. ஸ்ரீஹரி பக்தர்களின் வசம் சுளாதி

ஸ்ரீனிவாசனு ஸ்வீகரிச ம
த்தானெ பக்வ கபித்தபல பக்ஷிசிதவோலஹுது ||(10-13)

மலரினை தும்பி சுற்றிச்சுற்றி வருவதைப் போல, அண்டஜாதிபனின் பாத கமலங்களில் தலையை வைத்து இரவும் பகலுமாக வணங்காமல், கண்ட கண்ட தண்ணீரில் மூழ்கினால் என்ன பலன்?

மதயானை செல்வதே வீதி எனப்படுவதைப் போல, பக்தர்கள் மூழ்கியதே கங்காதி புண்ய தீர்த்தங்கள் ஆகும். அவர்கள் பேசிய பேச்சுக்களே காயத்ரி மந்திரம் ஆகிறது.

கானயாகக்கெ ஷிலுக:

சர்வவந்த்யன விமலமூர்த்தி தியான உள்ளவன் - பேசியதெல்லாம் ஹரி பஜனை. செய்யும் கர்மங்கள் அனைத்தும் யாகங்களே ஆகின்றன.

ஸ்ரீஹரி, ஞான யோகத்திற்கும் கிடைக்காதவன். பக்தி இல்லாமல் குதித்தாலும் கிடைக்காதவன். லட்சுமிபதியான ஸ்ரீனிவாஸனுக்கு நம்மால் என்ன காணிக்கை கொடுக்க முடியும்?. லட்சுமிவாசனின் பூஜை என்று பக்தியுடன் நினைப்பவன் சாஸ்திர வியாக்யான, மஹாபாரத, புராணாதிகளின் கதைகளை கேட்டால்தான் என்ன?. ஸ்னான, தியான மௌனாதிகளை விடாமலேயே அனைத்து கர்மங்ளும் ஸ்ரீஹரியின் பூஜை என்னும் அனுசந்தானம் முக்கியம் என்பது இதன் கருத்து.

க்ஷோணி சரிஸலு ஷிலுகா:

க்ஷோணி - பூமண்டலம். பகவந்தன் அனைத்து இடங்களிலும் வியாப்தனானவன் என்று அறியாமல், நானே சர்வகர்த்ரு என்னும் பாவனை உள்ள மனிதன் தாத்ரியொளகுள்ளகில தீர்த்த க்ஷேதிர ஸஞ்சரிஸிதரேனு? பற்பல வித வ்ரத

நியமங்களை செய்தாலும், ஸ்ரீஹரி கிடைப்பதில்லை. பற்பல கர்மங்களை செய்தாலும், ஸ்ரீஹரி கிடைப்பதில்லை.

கீதையில் சொல்லியிருப்பதைப் போல:
நாஹம் ந வேதை: ந தபஸா ந தானேன நசேஜ்யயா |
பக்த்யா த்வனன்யயா ஷக்ய: |
என்பதன் அர்த்தமே இது ஆகும்.

மாணதெ த்ருடபக்தி மாதுரவித்தரெ:

ஸ்ரீஹரியில் திடமான பக்தியை விடாமல் செய்தால் மட்டுமே, ஸ்ரீஹரி கிடைக்கிறான். ஒரு நாட்டின் தலைவன் ஆனால் என்ன? 14 உலகங்களின் தலைவனான ஸ்ரீகேசவனின் நாமம் கிடைத்தால் அவனே தலைவன் ஆகிறான். இத்தகைய பக்தன், பகவந்தனை அழைக்காவிட்டாலும், பக்தர்களின் தேவைக்கேற்ப அவர்கள் இருக்கும் இடத்திற்கே வந்து காக்கிறான். இதுவே பகவந்தனின் பக்த வாத்ஸல்யம். ஹனுமந்தனை அருள்வதற்கு அவன் இருந்த இடத்திற்கே ஸ்ரீராமன் வந்ததைப் போல. பகவந்தனின் பக்த வாத்ஸல்யத்தை எவ்வளவு கூறினாலும் அது போதாது. பகவந்தனின் லீலைகளை இந்திராதி தேவதைகள், அவரவர்களின் தகுதிக்கேற்ப சிந்திக்கின்றனர்.

மீனகேதனனான மன்மதனின் வசம் ஆனவனுக்கு, மீனகேதனனய்யனான விஜயவிட்டலன் கிடைப்பது துர்லபம். ஆகையால், சோர்வு காட்டாமல், மனதில் பக்தி செய்யுங்கள்.

இந்த ஆதி தாளத்தில்: ஸ்ரீஹரி, மிகச் சிறிய அல்பமான பக்தராக இருந்தாலும் காப்பாற்றுகிறான். சிறிய பக்தனான அம்பரீஷனை துன்புறுத்திய ருத்ராம்சத்தைக் கொண்ட துர்வாசரை, ஸ்ரீஹரி காப்பாற்றவில்லை. தன் பக்தர்களுக்கு எந்தவொரு பிரச்னையானாலும்,
யாருடைய பேச்சினை கேட்காமலும், பக்தரவஸன அமர கண ஸஹித (தன் கணங்களுடன்) வந்து காக்கிறான் என்று இங்கு சொல்லப்படுகிறது.

5. ஸிரிகெ ஹேளதெ கரிய காய்த...

கஜேந்திரன் முதலையின் வாயில் சிக்கி துன்பப்பட்டு 'ஸ்ரீஹரி என்னை காப்பாற்று' என்று முறையிட்டபோது, ஸ்ரீலட்சுமிதேவியிடம்கூட சொல்லாமல், ஸ்ரீஹரி பாய்ந்து வந்தான். பக்தன் ஆபத்தில் இருந்தபோது, தாமதம் செய்யமாட்டான் என்று இங்கு சொல்லப்படுகிறது.

பரமேஷ்டி அரியதெ பார்த்தன ஸலஹித:

பிரம்மாஸ்திரம் பிரம்ம தேவரிடமிருந்து வந்தது. மகாபாரத போரில், கர்ணன் அர்ஜுனன் மேல், பிரம்மாஸ்திரம் முதலான அனைத்து பாணங்களையும் விட்டான். ஸ்ரீஹரி, ரதத்தை பூமிக்குள் ஐந்து அங்குலம் அளவிற்கு தள்ளி, அர்ஜுனனின் கிரீடத்தை மட்டும் பொடியாக்கி, அர்ஜுனனை காப்பாற்றினான். இதிலிருந்து பிரம்மதேவரின் கட்டுப்பாடுகள் தனக்கு இல்லை என்று நிரூபித்தான்.

ஹரனோடிஸி அம்பரீஷன காய்த:

அம்பரீஷ ராஜன், ஏகாதசி விரதத்தை செய்பவன். பரம பக்தன். ஸ்ரீஹரிக்காக தன்னுடைய அனைத்து செல்வங்க்ளையும் அர்ப்பித்தவன். ருத்ராம்ஷரான துர்வாசர், தனக்கு அவமானம் செய்தான் என்று அவனுக்கு சாபம் கொடுக்க வந்தபோது, ஸ்ரீஹரியின் சக்கரம் அதனை அழித்து, துர்வாசரை துரத்தி வந்தது.

பிரம்மருத்ர தேவர்களிடம் முறையிட்டார் துர்வாசர். அவர்களால் காப்பாற்ற முடியாமல் போனபோது, விஷ்ணுவிடம் ஓடிவந்தார். நான் பக்தபராதீனன், ஆகவே நீங்கள் அம்பரீஷனிடமே செல்லுங்கள் என்று பகவந்தன்

கூறிவிட்டான். பக்தர்களை காக்கும்போது, மகன், பேரன் என்று யாரையும் கவனிப்பதில்லை.

ஸுரபன பங்கிஸி கோகுலகாயிதா...

தேவதைகளுக்கு, அவ்வப்போது அவர்களின் அசுர ஆவேசத்தினால், ஸ்ரீஹரியைப் பற்றிய மறதி வந்தபோது, ஹரி அந்த ஆவேசத்தை அழித்து, தன் அற்புத மகிமையை காட்டுகிறான். தனக்குக் கொடுக்கவேண்டிய பக்ஷ்ய போஜ்யாதி பலியை, ஸ்ரீகிருஷ்ணன் தானே தின்றான் என்று கோபத்தில் இந்திரதேவன் (ஸுரபனு), தொடர்ந்து ஏழு நாட்களாக மழையை பெய்வித்தான். கோகுலத்தை மூழ்கடித்தான். பக்தவத்ஸலனான ஸ்ரீஹரி, கோவர்த்தன பர்வதத்தை ஒரு நாய்க்குடையைப் போல தூக்கி, ஏழு நாட்கள் அனைவரையும் அந்த மழையிலிருந்து காத்தான்.

ஷரணரிகாடலு தன்னவரன்னு ஜரிது பிடுவா:

தன் பக்தர்களுக்கு ஆபத்து வந்தபோது அவர்களை காக்கும்போது தன் உற்றார் உறவினரே ஆனாலும், அவர்களை புறக்கணித்து பக்தர்களை காப்பதற்கு ஓடோடி வருவான் ஸ்ரீஹரி. பக்தரான பாண்டவருக்கு 'மமப்ராணா: ஹி பாண்டவா:' என்று சொல்வதைப் போல, அனைத்து பக்தர்களும் என் பிராண என்பதே ஸ்ரீஹரியின் மதம். அவர்களை எப்போதும் காப்பான்.

மருளதனதல்லி அஜாமிள கெட்டரெ:

அபிசேத் ஸுதுராஜார: பஜதே மாமனன்யபாக் | என்று கீதை சொல்வதைப் போல, பிராரப்தத்தினால் சஜ்ஜனரும் மிகப்பெரிய தவறுகளை செய்யும்போதும், பிராணி இம்சை வேண்டாம் என்று வால்மிகிக்கு அருளியதைப் போல, அஜாமிளனும் துஷ்டாசாரத்தினால் வாழ்ந்து கடைசியில் நாராயண என்றபோது காத்ததைப் போல, காக்கிறான்.

13. ஸ்ரீஹரி பக்தர்களின் வசம் சுளாதி

ஹரி மத்தொந்தன்னு ஒல்லனு பகுதி:

அனைத்து பூஜைப் பொருட்களையும் வைத்துக் கொண்டு, பக்தி இல்லாத பூஜையை ஸ்ரீஹரி விரும்புவதில்லை. அந்த பூஜையை ஏற்பதில்லை. ஆக, ஸ்ரீஹரியை மகிழ்விக்கும் சாதனம் வெறும் பக்தி மட்டுமே. பக்தியுடன் சரணாகதி அடைந்தவர்களை, பரமபுருஷனான விஜயவிட்டலன் இடைவிடாமல் அவர்களை காக்கும் கருணாளு ஆகிறான்.

<u>6. பகுதிகெ முகுதியொ மத்தவதக்கில்ல...</u>

பக்தியினாலேயே முக்தியே தவிர வேறு எதற்கும் இல்லை. பக்தியை செய்தால், களங்கம் இல்லாத அன்பினைக் காட்டுகிறான்.

***

14. ஸ்ரீஹரி தானே பூஜ்ய பூஜக சுளாதி

த்ருவ தாள

பரிபூர்ணகாம விஸ்தரமஹிம பரந்தா4ம
ஷரணர ஸுரத்3ரும ஸாரஸார்வபௌ4மா
மிரகு3வனந்தர்யாம கிரணதி4க்கரிப ப்ரேம
பரிபரிகு3ண நாம ப4ரிதவாத3 ராமா
து3ருள தை3த்ய விராம து3ரிதாம்பு4தி3கெ3 பீ4ம
புருஷோத்தம நிஸ்ஸீம ஸுரக3ணலலாமா
பரமஷுத்3த4னுபமா சரித ஸுந்த3ர ஷாம
கருணாஜலதி3 ஜனனமரண ரஹித நீமா
ஹரி பராபர பொ3ம்ம மெரெவ ஜக3துத்தம
ஸரிகா3ணெ நிக3மாக3ம ஸரசிஜ ப4வகாமா
த்3யர பெத்த நித்ய நிக3மா பரிபாலப4க்த ஸ்தோம
ஷரதி4கெ3 ராகாப்3ஜஸோமா பராபரத3ல்லி ஸமா
அரரெ ஒந்தொ3ந்து3 ரோமா திரவில்லதா3க3 பொ3ம்மா
த்3யர துருகி3த3 ஹேமாம்ப3ர காஞ்சிதா3மா
த4ரிகெ3 ஸாதா4ர ஹேமகி3ரிய த4ரிஸித3 பது3மா
வரனெ விஜயவிட்டல நரனொளு நானாதா4மா
நிரது நின்ன உத்தம சரணவன்னு நிஷ்காம
கரனாகி3 ப4ஜிஸி க்ஷேம வரவெந்து1 படி3வெ ஸுதா4மா ||1

மட்ட தாள

நித்யத்ருப்தனு நீனு நித்யானந்த3 நீனு
நித்யபூ4ஷித நீனு நித்யநிர்மள நீனு
நித்யவ்யாபக நீனு நித்ய நாடகி நீனு
நித்யமங்க3ள நீனு நித்யபா4க்3யனு நீனு
நித்யமானித நீனு நித்யக்ரியனு நீனு
நித்யவஸ்துவெ நீனு நித்ய நித்யத3ல்லி
நித்யப4ரித நீனு நித்யமோஹன நீனு
நித்யோபாஸனெ நீனு
நித்யமுக்தாஸ்ரய விஜயவிட்டல ஸதா3
நித்யதெ3ய்வவே அனிமித்த பா3ந்த4வ நீனே ||2

14. ஶ்ரீஹரி தானே பூஜ்ய பூஜக சுளாதி

த்ரிவிடி தாள

ஸுரநதி3 பெத்தவங்கெ3 நினகெ3 மஜ்ஜனவெ, பா
லரமனெ மனெவுள்ளவகெ3 க்ஷீராபி4ஷேகவெ
ஸரஸிஜகுஸும, ஶ்ரீதுலஸி படெ3த3 தெ3ய்வவெ
த4ரெயொளகி3த்த3 குஸுமதி3 நினகெ3 மெச்சி
ஸிரி உரத3ல்லி க3ந்த4பரிமள எஸெவனெ
பரிபரிபரிமள க3ந்த4தி3ந்தே3னய்யா
பரமேஷ்டியிந்த3ர்க்4ய கைகொண்ட3வனெ நின்ன
சரணதொளெது3 ஸுக2படி3ஸலாபெனெ நானு
எரடு3கங்க3ளிந்த3 லோகபெ3ளகு3திப்பனெ
விரசிஸித3 தீ3பதி3ந்த3 வெக்3க3ளவேனோ நினகெ3
கருணிஸி த்ரௌபதிகெ3 வஸனக3ளித்தவங்கெ3
நர நானு நினகொ3ந்து3 வஸ்த்ர ஈயப3ல்லெனெ?
வரப்ரளயத3லி ஸர்வவு த3ஹிஸுவனெ
ஹிரிது தூ4பாரதியு எத்துவது3 க4னவெ
கரதொ3ளு முனிகெ3 ரஸாயன உணிபங்கெ3
த4ரிஸி தோரிஸித3 பதா3ர்த்த2தி3ந்தே3னய்யா
எரடை3து3 ஸாக3ர போஷணெகொ3ம்ப3வங்கெ3
எரத3 நீரிந்த3 போஷக நினகே3னோ
ஸரிகா3ணெ நின்ன நக2த3 காந்திகெ3 எல்லி
மருளெ எத்துத3 மங்க3ளாருதிய பெ3ளக்3யாகெ
ஹரஸக2 குபே3ர நின்னவனாகி3ரே
ப3ரிதெ3யல்லதெ3 என்ன ஸுவண்ணபுஷ்பவு
பரிவாரவெல்ல ஸர்வஸுராதி3க3ளு நலியெ
வரது3ந்த3மதியிந்த3 நினகே3னு வாலக3வெ
க3ருடவாஹன நம்ம விஜயவிட்டலரேயா
எரகி3 கைமுகி3வெனோ தருளதனத3லி நானு ||3

அட்ட தாள

நிக3மக3ளிகெ3 நிலுகதி3ப்ப மனத3 தெ3ய்வ
அக3ணித ஸ்தோத்ரக3ளிந்த3 ஹீயாளிகெ1
ஜக3ஜகி3ப பூ4ஷணத4ரிஸிதெ3 தெ3ய்வனெ
மிக3லேனோ நினகெ3 ஈ லோகராப4ரணவு

க2க3ராஜ, உரக3 வாஹன ஹாஸிகெ3 இரெ
மகு3ளெ நா நுடித3 வாஹன ஹாஸிகெ3 பே3கெ
ப3கெ3ப3கெ3ய கா3யனவ நாரதா3த்3யரு பாடெ3
பொக3ள ப3ல்லெனெ நின்ன ப3லுபரிமஹிமெய
ஸுகு3ண ஸாஹஸமல்ல விஜயவிட்டலரேய
க3க3ன மணியந்தெ பொளெவ அனாதி3கர்த்தா ||4

ஆதி தாள

ஸகல ஸம்பூஜியு ஈபரி இரலு மத்தெ
லகுமி பூஜிஸுவளு லகுமிகெ3 நீனெ ப்ரே
ரகனாகி3 ஒளகெ3 நிந்து நினகெ3 நீனெ அ
ர்ச்சகனாகி3 அனுகா3ல ஸுகி2ஸுவ ஹெத்தெ3ய்வ
ப4குதரிந்த3லி நினகெ3 ஆவதூ3 பரிபூர்ண
முகுதாமுகுதரொளு எணிஸி குணிஸித3ரு
ப4குதரொளகெ3 நானொப்3ப3 அல்லரிகெ3 அல்பரிவெனய்யா
அகுடிலனாகி3 நின்ன மெச்சிஸப3ல்லனெ
அகி2ளஜீவரொளு வ்யாப்யனாகி3 இத்3து3
ஸக2னாகி3 ப்ரதிதி3ன பாலிப பரமாத்ம
லகுமி மிக்காத3 தாரதம்ய பா4வதி3ந்த3
ப4க்தரரர்ச்சனெ மாடெ3 லேஷபே3காது3தி3ல்ல
ஸகலாப4ரணவிட்டு மருளெ தன்ன
நக2ஷிக2பரியந்த நஸுநகெ3யலி நித்ய
முகுரதொ3ளகெ3 ப்ரதிபி3ம்ப3 நோடி3கொளுத
ஸுக2வ ப3ட்டந்தெ நமக3ல்லதெ3 நினகே3னு
லகுமிவல்லப4 நம்ம விஜயவிட்டலரேய
ப4குதரிகெ3 நின்ன இச்செயாக3த3லெ க3தியில்லா ||5

ஜதெ

நினகெ3 நீனே பூஜெமாடி3கொம்ப3 தே3வ
எனகா3வ ஸதி2யில்லா விஜயவிட்டல வொலியோ ||6

****

14. ஸ்ரீஹரி தானே பூஜ்ய பூஜக சுளாதி

---

1. பரிபூர்ணகாம விஸ்தரமஹிம பரந்தாம...

பகவந்தனுக்கு யார் மூலமாகவும் எந்த பலனும் இல்லை. ஆனாலும், பக்தர்கள் சமர்ப்பிக்கும் பதார்த்தங்களை ஏற்றுக்கொண்டு அவர்களை காக்கிறான் என்று இந்த சுளாதி சொல்கிறது. ஸ்ரீஹரி, பரிபூர்ணகாமன். அவனுக்கு இதுவரை கிடைக்காதது / பெறாதது என்று எதுவும் இல்லை. முக்தர்களுக்கு நினைத்த மாத்திரத்திலேயே அனைத்தும் கொடுப்பவனுக்கு, யார்தான் என்ன கொடுத்துவிட முடியும்? லட்சுமிதேவியில் தன்னுடையதேயான ஒரு ஸ்த்ரீ ரூபத்தை வைத்து செயல்களை செய்கிறான். லட்சுமிதேவி ஸ்ரீஹரிக்கு மகிழ்ச்சியைக் கொடுப்பவள் அல்ல.

விஸ்தர மஹிமெ:
தேவதைகள் அனைவரும் ஒன்று சேர்ந்து கூறினாலும்கூட விஷ்ணுவின் மகிமையை அவர்களால் முழுமையாக சொல்லி முடிக்க முடியாது. விஷ்ணுவின் மகிமையில் ஒன்றினை எடுத்துக்கொண்டு, அதனை கோடி பாகமாக மாற்றி, மறுபடி அதனை ஒரு கோடியாக பிரித்து, அதில் இருக்கும் ஒரு அம்சத்தினை அனந்தமாக பிரித்து, மறுபடி ஒரு கோடியாக பிரித்தாலும், அதனை விளக்குவதற்கு, பிரம்ம ருத்ரர்களால் முடிவதில்லை. அபார மஹிமெ ஸுப்பரணவாஹன |

பரந்தாம:
பிரம்ம நாம என்று அர்த்தம். வாயுதேவரையே வீடாகக் கொண்டிருப்பவன். பரம் - ஷ்வேதத்வீபாதி மூன்று தாமங்களில் இருப்பவன். ஷரணாகதி அடைந்தவர்களுக்கு கல்பவ்ருட்சத்தைப் போல கேட்டதையெல்லாம் கொடுப்பவன். கல்பவ்ருட்சத்தைப் பார்க்கும் வயோதிகர், வாலிபராக மாறுவர். நல்ல நறுமணம். மதுரமான சங்கீத த்வனி. அதன் நிழலில் அமர்ந்தால், பூர்வஜென்மத்தின் சிந்தனை வருகிறது. வணங்கினால் மட்டுமே கல்பவ்ருட்சாதிகள் பலன்களைத் தருகின்றன. ஆனால், ஸ்ரீஹரியோ, அவனுடைய நாமத்தை படித்தாலே தத்வஞானத்தை அருள்கிறான்.

ஸுரஸார்வபௌம:

33 கோடி தேவதைகளுக்கும் சார்வபௌம எனப்படுகிறான். பிரளய காலத்தில் பிரம்ம மற்றும் அனைவரும் பரமாத்மனின் அன்னம் ஆகின்றனர். ம்ருத்யு தேவதை மற்ற ஆகார பதார்த்தங்கள் ஆகிறார்கள். இவனின் மகிமையை யார் அறிவார்கள் - 'க இத்தாவேத்துமர்ஹதி' - காடக.

மிகுருவவனந்தயர்யாமி:

சூர்யாதிகளுக்கும் அவர்களில் இருந்து, அவர்களை தன் வெளிச்சத்தினால் ஒளிர்விப்பவன். சந்திர, அக்னிகளில் இருக்கும் சக்திகள் அனைத்தும் அவர்களின் அந்தர்யாமி ஸ்ரீஹரியுடையதே ஆகும்.

அனக்ருதேஸ்தஸ்யச - என்னும் ஸ்தோத்திரம் இதே விஷயத்தை விளக்குகிறது. 'யஸ் பாஸா ஸர்வமிதம் விபாதி | யதாதித்யகதம் தேஜோ ஜகத்பாஸயதே'. இவன் சூரியாதிகளில் இருப்பதால், அவனின் ஒளிக்கு முன்னர், அனைவரும் ஒளி இல்லாதவர்கள் ஆகின்றனர்.

பரிபரிகுணதாம:

உலகம் அனைத்தையும் படைக்கும், காக்கும், அழிக்கும் குணங்கள் அபாரம். ராமகிருஷ்ணாதி அவதாரங்களில் பல (வலிமை) கார்யனான ஸ்ரீஹரி, ராவண கும்பகர்ணாதி நிஷாசரர்களைக் கொன்று, ராவணன் மட்டுமல்ல, அவனைப் போன்ற பல துஷ்டர்களையும் கொன்றது, உலகத்தின் மேல் உள்ள கருணையாலேயே. தேனுகசுரன், வத்ஸாசுரன், ஷகடாசுரன், பூதனி முதலான தைத்யர்களைக் கொன்றான். கோகுலத்தைக் காத்தான்.

இந்த மகிமைகளை நினைப்பவர்களின் கஷ்டங்கள் என்னும் கடலுக்கு எதிரானவை. க்ஷர அக்ஷரர்களில் பிரம்மாதி க்ஷர ஜீவர்கள், தேகத்தினால் நாசம் இல்லாத லட்சுமிதேவியைவிட உத்தன் ஆனதால், புருஷோத்தமன். அவனின் குணங்களுக்கு எல்லையே இல்லை. ப்ரத்யேகஷோ குணானாம் து நிஸ்ஸீமத்வம் விதீயதே |. தேவதா கணத்தில் சிறந்த புருஷன் இவனே.

அவனின் சரித்திரங்கள், கேட்பவர்களை பவித்ரமாக்கும் சாமர்த்தியம் கொண்டது. அனைத்து பவித்ரங்களுக்கும் பவித்ரங்களைக் கொடுப்பவன் ஸ்ரீஹரியே. இவனுடைய சரித்திர மகிமை வேறு யாரிலும் காணக்கிடைக்காதது.

ஸுந்தர:

கபி எனப்படும் ஹனுமனே ஸுந்தர என்றபிறகு, இந்த ஸுந்தரேஷனைப் பற்றி சொல்ல என்ன இருக்கிறது? சாக்ஷான்மன்மத மந்தனன் இவனே. மோகினி வேடம் தரித்த பகவந்தனின் பெண் ரூபத்தினைக் கண்டு, இவனுக்கு என்னைப் போன்ற பிறர் எதற்கு என்று மயங்குகிறாள்.

நீலமேகஷ்யாமனான பகவந்தனின் கருணைக்கு இணையில்லை. அவன் நிரந்தர கருணாளு. அனாதி காலத்தினாலும் நித்யமுக்தனாகவே இருக்கிறான் பகவந்தன். அனைத்திற்கும் ஆதியான இவன், பிறவி எடுப்பது எப்படி? பிறவி என்றால் 'ஜனீப்ராதுர்பாவே' தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறான் அவ்வளவே. அவனுக்கு மரணமும் இல்லை. பிறந்தால்தானே மரணம் வரும்? ஜனன மரண முதுமை என எதுவும் இல்லாதவன். எப்போதும் 16 வயதினன். விதி மற்றும் விதிவிலக்குகளுக்கு ஸ்ரீஹரி அப்பற்பட்டவன்.

பராபரபொம்ம:

பிரம்ம ஷப்த, ஜீவர்களில், சதுர்முகனில், முக்தர்களில் - மமயோனி: மஹத்பிரம்ம - என்று சொல்வதைப் போல லட்சுமிதேவியிலும் இருக்கிறது. ஆனால், இவர்கள் அனைவரும் சம்பிரதாயத்தின்படி பிரம்ம ஷப்த வாச்யர்கள். பிரம்ம ஷப்தத்தின் முக்கிய அர்த்தமான, பரிபூர்ண குணங்கள் இவர்களில் வராது. அஸம்பூர்ணா: பரெ யஸ்மாத் உபசாரேண வா பவேத் ||.

அபரபொம்மாதிகளுக்கும் பரபொம்மன் இவன். ஜீவர்கள் பிரம்மர்; முக்தர்கள் பரபிரம்மர்; லட்சுமிதேவி பரமபிரம்மள்; ஆனால் இவனோ பரமமஹத் பிரம்மன். உலகின் சராசர பிரபஞ்சத்தைவிட மிகவும் வேறுபட்டவனான ஸ்ரீஹரி, மூன்று உலகங்களில் சஞ்சரித்த ஜகன்னாதன். இவனுக்கு சரிசமானர் என யாரும்

இல்லை. இருப்பது ஆறு ரசங்கள் மட்டுமே. ஏழாவது ரசம் இல்லை என்றபிறகு, எட்டாவது ரசம் இல்லவேயில்லை. அப்படியே சரிசமானரே இல்லை என்றபிறகு, இவனைவிட அதிகம் என்று யாருமே இல்லை.

பகவந்தனை வர்ணிப்பதற்கு நிகம ஆகமங்கள் போதாது. யதோவாசோ நிவர்த்தந்தே |உலகிற்கு தத்வோபதேஷகரான பிரம்ம ருத்ர மன்மதாதிகளுக்கு ஜனகன் இவன். உலகின் மக்கள் அனைவருமே தந்தை ஆகிறான். யோ ந: பிதா யோ விதாதா | நித்யமும் சகல சாஸ்திரங்களால் முக்ய பிரதிபாத்யன்.

பரிபால பக்தஸ்தோம:

ஸ்ரீஹரியின் பக்தர்களின் கூட்டமே இருக்கிறது. கஜேந்திர, அஜாமிள, ருத்ர, பிரகலாத, அம்பரீஷ, விதுர, அக்ரூர, உத்தவ, குசேல, ஸ்ருததேவ, ஸுதாம, குப்ஜை, விபீஷண ஆகியோர் இந்த பக்த சமூகம் ஆகும். இவர் அனைவருக்கும் பௌணிமா சந்திரன், இந்த ராமசந்திரன். சந்திரனைப் பார்த்து ஆர்ப்பரிக்கும் கடலைப் போல, ஸ்ரீஹரியைக் கண்ட பக்தர்களின் முகம் மகிழ்ச்சியில் மலர்கிறது.

ஒந்தொந்து ரோமா தெரவில்லதாக:

பகவந்தனின் ஒவ்வொரு ரோமத்திலும் அனந்த கோடி பிரம்மாண்டங்கள் இருக்கின்றன. ஸ்ரீகிருஷ்ணன் தன் ரோமரோம கோடிகளால் அனேக ஸ்ருஷ்டிகளை செய்கிறான். அவனின் ஒவ்வொரு ரோமமே, அனந்த பிரம்மாண்டங்களை மீறிய அளவில் இருக்கின்றன.

யத்ரோமகூபமபி பூரயிதும் ந ஷேகு: |
பிரம்மாண்ட கர்பர ஷதாயுத கோடியோऽபி ||

பிரம்மாண்டம் என்பது 10 ஆவரணங்களைக் கொண்டது.

ஏகஸ்மின் பரகாலே து ஏகமுண்டம் ஜகத்குரு: |
நைகதாஜாண்ட பஹுலம் ஸ்ருஜத்யமதி ஹந்த்யஜ: ||

14. ஸ்ரீஹரி தானே பூஜ்ய பூஜக சுளாதி

விஷ்ணுவின் அசிந்த்யாத்புத சக்தியினால் ஒரே பிரம்மாண்டம், அனந்த எனப்படுகிறது. விஷ்ணுஸாமத்யதோsண்டானாம் பஹுுத்வம் நான்யதோ பவேத் |
அனேக கோடி அஜாண்டவ அணுரோம கூபதலி ஆள்வ -- ஸ்ரீவாதிராஜர்.

பொம்மாத்யர துருகித ஹேமாம்பவ காஞ்சிதாமா:
பிரளயத்தில் பிரம்மாதி அனைத்து ஜீவர்களையும் தன் சிறிய உதரத்தில் வைத்துக்கொண்டு படுத்திருந்த ஸ்ரீஹரிக்கு லய இல்லை.

லயேsபி லயஹீனஸ்ய ஷயானஸ்ய ஸ்ரீயா ஸஹ |
லயகாலத்திலும் பிரம்மனின் நூறு ஆண்டு வரை ஆலயிலையின் மேல் படுத்திருப்பவனுக்கு பசி, தாகம் உண்டா?

இத்தகைய சிறிய உதரத்தில் பிரம்மாதி ஜீவர்களையும், முக்தர்களையும், முக்தி யோக்யர்களையும், அந்தம்தமஸ்ஸில் விழுந்தவர்களையும், விழாதவர்களையும், நித்ய ஸம்ஸாரிகளையும் வைத்துக் கொண்டு படுத்திருக்கிறான். ஹரியின் சேவைக்காக லட்சுமிதேவி பீதாம்பரதாரியாக இருக்கிறாள். பீதாம்பரத்தை உடுத்தி தோன்றுகிறான். (ஹேமாம்பர). பூமிக்கும் ஆதாரமான ஸ்ரீஹரி கூர்ம ரூபத்தினால் தன் முதுகின் மேல் தங்க மலையை தாங்கியிருக்கிறான். அனைவரின் பாரத்தையும் தாங்கியிருப்பவன் கூர்மரூபி.

பத்மாலயளான லட்சுமிதேவியின் பதியே, வைகுண்ட முதலான முக்த ஸ்தானங்களில் வசிப்பவன் (ஸுதாமா). அனேக ஸ்தானங்களில் இருந்து நியமன செய்யும் உன் உத்தம சரணத்தை நிஷ்காமத்தினால் வணங்குமாறு வரம் எப்போது பெறுவேன்?

2. நித்யத்ருப்தனு நீனு நித்யானந்த நீனு...
பகவானின் அனேக மகிமைகள் இங்கு சொல்லப்பட்டுள்ளன. பகவந்தன் நித்ய த்ருப்தன். அவனுக்கு அடைய வேண்டியது என்று எதுவும் இல்லை. ஆனாலும், பக்தர்கள் கொடுத்த அன்னாதிகளை ஏற்றுக் கொள்கிறான். பகவந்தன் ஷுபரஸத்தை மட்டும் ஏற்றுக்

கொள்கிறான். 'ஷுபம் பிபத்யஸௌ'. பக்தர்கள் கொடுக்கும் அன்ன ரஸத்தை - அதாவது, ஸ்வாக்ய ரஸத்தை உண்கிறான்.

நித்யானந்த நீனு:
பகவந்தன் எப்போதும் ஆனந்தத்தின் சுரங்கம். சச்சிதானந்த ஸ்வரூபன். அப்ராக்ருதன். யார் மூலமாகவும் சுகத்தைப் பெறத் தேவையில்லாதவன். கோபியர்களுடன் க்ரீடை செய்தாலும், அது ரமாதேவியுடன் மட்டுமே தவிர, வேறு பெண்களுடன் அல்ல. ரமாதேவியிலும்கூட தன்னதே ஆன ஸ்த்ரீ ரூபத்தை வைத்து அங்கு க்ரீடை செய்கிறான்.

ஸ்ரீஹரி ஸ்வரமணன்.
நைவான்யாம் ரமயேத் கன்யாம் பூர்ணோऽயம் புருஷாக்ரணீ: ||

தினமும் ஆனந்தமாக இருப்பவனுக்கு துக்கம் என்பது எங்கிருந்து வரும்?பகவந்தன் நித்யானந்த உள்ளவன் என்றால், இந்த ஜகத்தினை நடத்துபவன் யார்? கர்மாதி ப்ரேரகனாக இருக்கிறான். இந்த ஜகத்தின் ஸ்ருஷ்டி, ஸ்திதி, லயாதி செயல்களால், ஸ்ரீஹரிக்கு எந்தவித பிரயோஜனமும் இல்லை. என்றபிறகு, ஆனந்தத்தினாலேயே இந்த செயல்களை நடத்தியிருக்க வேண்டும். தத்தேதுவ்யபதேஷாச்ச - என்னும் பிரம்ம சூத்திரத்தில் இவ்வாறு சொல்லியிருக்கின்றனர்.

நித்யபூஷித:
பகவந்தனின் தேகத்தில் இருக்கும் ஆபரணாதிகள் அனைத்தும் லட்சுமிதேவியே ஆகும். அவளே இந்த ரூபங்களை தரித்து, பதியின் சேவையை செய்கிறாள். பீதாம்பர ஒட்டியாணம், காது தோடு, பூணல், கிரீடங்கள் என அனைத்தும் லட்சும்யாத்மகமாக இருந்து லட்சுமி நாராயணருக்கு எப்போதும் வியோகம் இல்லாததால், அவன் அந்த ஆபரணங்களை என்றும் தூர விலக்குவதில்லை.

நித்ய நிர்மல:
நிர்மலமான வஸ்து என்றால், தோஷங்கள் அற்ற வஸ்து. நிர்மல வஸ்துகள் ஏராளமாக இருக்கின்றன. ஆனால், அதற்கு பவித்ரத்தை கொடுப்பவன் ஸ்ரீஹரியே. பவித்ர வஸ்துகளை பவித்ரம்

ஆக்குபவன் அவனே. பவித்ராணம் பவித்ர யோ மங்கலானாம் ச மங்களம் ||

நித்யவ்யாபக நீனு:
அணுரேணு த்ருண காஷ்டகங்களிலும் வியாப்தனாக இருக்கிறான். கண்களே முதலான இந்திரியங்கள் பார்ப்பது, கேட்பது, ஆகியவை அவற்றின் குணங்கள். ஆனால், பஞ்ச ஞானேந்திரிய, பஞ்ச கர்மேந்திரிய அனைத்தும் ஹ்ருஷிகேஷனின் அதீனம் ஆகும். அந்த இந்திரியங்களில் இருப்பது மட்டுமல்ல, அவை செய்யும் காரியங்களிலும் இருக்கிறான். அனைத்து வஸ்துகளில் பகவந்தன் இல்லையெனில், அவற்றில் சிறப்பு (வைபவம்) இருப்பதில்லை.

நித்ய நாடகி நீனு:
பகவந்தன் உலகின் நாடகத்தின் சூத்ரதாரி. நித்யமும் துக்காதிகள் இருப்பதைப் போல நாடகம் நடத்துகிறான். ராம, பரசுராமரில் பேதம் இருப்பதைப் போல நாடகம். ஸ்ரீனிவாச - வராஹனில் வேறு வேறாக இருப்பதைப் போல நாடகம். நித்யபல சம்பூர்ணனுக்கு கபிகளின் உதவி ஏற்றுக் கொள்வதாக நாடகம். உலகம் அனைத்தும் ஈசனின் இருப்பிடம் என்றானபிறகு, மூன்று அடி தானம் பெறுவது ஆகியவை நாடகங்களே.

பகவந்தனை அனுசரித்து, லட்சுமிதேவியும் ஸத்யபாமா - ருக்மிணி இருவரும் வெவ்வேறாக இருப்பதாக நாடகம். இவர்கள் இருவரையும் பார்த்து, ஹனும பீமரின் வேறு வேறு என்னும் நாடகம். நித்யமும் மகான் (அபாரமான) நாடககாரன் ஸ்ரீஹரி.

நித்யமங்கள நீனு:
பகவந்தன் அளவிற்கு மங்களம் வேறொரு வஸ்துவில் இல்லை. பகவந்தன் பரம மங்கள ஸ்வரூபன். மங்கள பதார்த்தங்களுக்கும் மாங்கல்யத்தைக் கொடுப்பவன். மங்கலானாம் ச மங்கலம். மங்கலத்திற்கு ஆதாரனும் ஹரியே - மங்கலாயதனோ ஹரி. பக்தர்களின் அஷுபங்களை பரிகரித்து - ஷுப பிரவாகங்களைக் கொடுப்பவன் ஆகையால், ஸ்ரீஹரி 'மங்கல' எனப்படுகிறான் என்று விஷ்ணு புராணம் சொல்கிறது. லட்சுமிதேவி சர்வமங்களள். மற்ற வஸ்துகளுக்கு மாங்கல்யத்தை கொடுப்பவள். ஸர்வமங்கள

மாங்கல்யே.மற்ற வஸ்துகளில் மங்கலத்வம் இருப்பது, ஹரியின் சன்னிதானத்தினால் மட்டுமே. ஸ்ரீஹரி, நிருப சரித மங்கலன் ஆகிறான்.

ம = துஷ்டர்கள். க = போக்கி. லாலம் - இஷ்டார்த்தங்களைக் கொடுப்பவன். ஸ்ரீஹரி, பக்தர்களுக்கு மட்டும் மங்கல 'ஸுகஹேது'. அனைவருக்கும் அல்ல. நோய் இல்லாதவர்களுக்கு பால் சுகத்தைக் கொடுத்து, நோய் கொண்டவர்களுக்கு அது துக்கத்தைக் கொடுப்பதைப் போல.

நித்யபாக்யனு:
பிரம்மாதி தேவதைகளுக்கும் ஸத்யலோகாதிபத்யத்தைக் கொடுப்பவன் என்றால், அவன், பாக்யவந்தனே அல்லவா? பாக்யாத்மளான மகாலட்சுமிக்கு பதி ஆனவன். பகவந்தனை நித்யபாக்யன் என்று உபாசனை செய்பவர்களுக்கு அவர்களின் தகுதிக்கேற்ப ஐஸ்வர்யாதி செல்வங்களைக் கொடுப்பவன்.

நித்யமானித நீனு:
எப்போதும் அனைவராலும் மரியாதை பெறுபவன். காயத்ரி ஆகிய மந்திரங்களால் போற்றப்படுபவன். அஷ்ட மஹா மந்திரங்களால் போற்றப்படுபவன். அனைத்து வேதங்களும் இவனை புகழ்பவையே. பகவந்தன் சர்வேஸ்வரனாகையால், அனைவராலும் பூஜ்யனாகிறான். படுத்திருப்பவர்களுக்கு பூஜை இல்லை என்று பொதுவாக சொல்கிறோம். பகவந்தன் அனந்த பத்மனாப, ஸ்ரீரங்கனாத, கோவிந்தராஜ ஆகிய ரூபங்களால் படுத்திருந்தாலும் நித்யமும் பூஜை செய்யப்படுபவன் ஆகிறான்.

நித்யக்ரியனு நீனு:
ஹரிகதாம்ருத வியாப்தி சந்தியில் இதன் விவரம் இருக்கிறது. கோபாலதாசரும் கூட பாடியிருக்கிறார். ஜீவர்களின் காது, கண், பிராண, நாக்கு, வாக்கு, பாத, பாயு, உபஸ்த ஆகிய அந்தந்த செயல்களை செய்விக்கும் தத்வாபிமானிகளில் வியாப்தனாக இருந்து, பலவித செயல்களை நடத்தி, ஜீவர்களின் சம்சாராதிகளுக்கு காரணன் ஆகிறான். கண்ணில் தெரியும் இந்திரியங்களிலும், மிகச்

சிறியதான இந்திரியங்களிலும் இருந்து, தானே செயல்களை நடத்துகிறான்.

காதி இந்திரியத்திற்கு சந்திர - யமாதிகளில் தான் செயல்களை செய்து, செய்விக்கிறான். சஞ்சித, பிராரப்த, ஆகாமிகளான நித்ய நைமித்திக, காம்ய கர்மங்களையும், ப்ரவ்ருத்தி, நிவ்ருத்தி கர்மங்கள் அனைத்தையும், தான் பிம்பனாக இருந்து செய்தால் மட்டுமே பிரதிபிம்பரில் இத்தகைய செயல்கள் நடக்கின்றன.

பகவந்தன் இந்திரிய, அபிமானிகளான தேவதைகள், அசுரர்களின் மூலம் பந்தக கர்மங்களை செய்து, ஜீவர்கள், பற்பல யோனிகளில் வருமாறு செய்கிறான். ஸ்ருதியும்கூட - நீயில்லாமல் இந்த உலகில் எந்த செயல்களும் நடக்காது என்கிறது. ந ருதே த்வத் க்ரீயதே ||.

நித்ய வஸ்துவே நீனு:
பிரளய காலத்தில் பிரம்மாதி அனைத்து வஸ்துகளும் ஹரியின் உதரத்தில் சேர்கின்றன. பிரளயத்திலும் பகவந்தன் மட்டும் 100 ஆண்டுகள் படுத்திருக்கிறான். ஏகோ நாராயண ஆஸீத் ந பிரம்மா ந ச ஷங்கர: ||

ஒரு பொருள் முன்னர் இல்லாமல், இப்போது புதிதாக இருப்பிற்கு வந்தால், அது பிறந்தது என்பார்கள். பிரளய காலத்திலும் இருக்கும் வஸ்து பகவந்தன். அவனை மறுபடி உற்பத்தி செய்பவர்கள் யார் இருக்கிறார்கள்?.

பொம்மன பிரளயதலி ஸும்மனெயாகிர்த்த
நம்ம தேவகெ ம்ருத்யு இல்ல ||

நித்யமான ஆகாஷாதிகளுக்கும் ஸ்ரீஹரி நித்யத்வத்தைக் கொடுக்கிறான். பகவந்தன் த்ரிகாலாதீதன். லட்சுமிதேவியரும்கூட காலாதீதர்களாக இருந்தாலும், ஸ்வதந்த்ரர்களாக காலாதீதர்கள் அல்ல. நித்யமான நித்ய வஸ்துகளிலும் நித்யத்தை நிரப்புகிறான் என்றால், அது ஹரி ஒருவனே.

நித்யமோஹன:

மோஹனன் என்றால், ஸௌந்தர்யஷாலியும் ஸர்வஷுப லட்சணங்களாலும் நிறைந்தவன். பகவந்தன் தன் அழகினால் அனைத்து வஸ்துகளையும் தன்னிடம் இழுத்துக் கொள்கிறான். பகவந்தனை 'ஸௌந்தர்யஸார' என்கிறோம். பகவந்தனை மன்மத ஜனக என்று சொல்கிறார்கள். மன்மதன் அவ்வளவு அழகாக இருக்க வேண்டுமெனில், பகவந்தன் எவ்வளவு மோஹகனாக இருக்க வேண்டும்?. உலகில் இருக்கும் பொருட்கள் அனைத்தும் அவனுடையதே ஆனால், எந்தவொரு மதமோ, மோகமோ இல்லாதவன் என்பதால் 'மதன மோஹன'. மத + ந. மோஹ + ந. மனமோக இல்லாதவன்.

நித்யோபாஸனே நீனு:
நித்யமும் பூஜ்ய, பூஜகன் நீயே. பூஜ்யரான தேவதைகளில் இருந்து பூஜையை ஏற்றுக் கொள்பவனும், பூஜகனில் இருந்து, பூஜிப்பவனும் நீயே. உபாசனைக்கு ஏற்றவனும் பகவந்தனே. உபாசகர்களில் இருந்து உபாசனை செய்பவனும் அவனே. நித்யமுக்தளான லட்சுமிதேவிக்கும் கதி ஸ்ரீஹரியே. முக்தரான பிரம்மாதிகளுக்கும் கதி அவனே. உதாம்ருதத்வஸ்யேஷான:

முக்தர்கள் பகவந்தனையே அடைகிறார்கள் என்று - முக்தோபஸ்ருப்யவ்யபதேஷாத் - என்று சூத்திரத்தில் நிர்ணயம் செய்திருக்கிறார்கள். அம்ருதஸ்யைவ ஸேது: என்று முக்தர்களுக்கு பிரதான கதியாக இருக்கிறான். இறந்த, நிகழ், எதிர்காலங்களில் தேவதைகளுக்கு தேவதை பகவந்தனே. ஆனால், அனிமிருத்த பந்துவாக இருக்கிறான்.

<u>3. ஸுரநதி பெத்தவங்கெ நினகீ மஜ்ஜனவே...</u>

பூஜையில் ஷோடஷ உபசார, பஞ்ச உபசார, தஷ உபசார பூஜை முதலான பூஜைகளை செய்யும் விதி இருக்கிறது. ஆனால், இந்த பூஜை பகவந்தனுக்காக அல்ல. நமக்காக. அவனுக்கு நம் பூஜையால் ஆகவேண்டியது ஒன்றும் இல்லை.

1. சுரநதி கங்கையையே பாதத்தில் படைத்த கங்காஜனகனுக்கு நாம் செய்யும் ஒரு கலச தண்ணீர் பூஜையா?
2. பாற்கடலிலேயே வீடு உள்ளவனுக்கு பால் அபிஷேகமா?

---

3. தாமரை, ஸ்ரீதுளசியை படைத்த பரதெய்வனுக்கு பூமியில் விழுந்த பூக்களால் ஆவதென்ன?
4. தன் பத்னியான லட்சுமிதேவியை ஆலிங்கனம் செய்யும்போது, தன் இதயத்தின் பரிமளத்தை அவளுடைய இதயத்தில் நிரப்புபவனுக்கு கந்த அர்ப்பணமா?
5. பிரம்ம தேவரிடமிருந்தே அர்க்யத்தைப் பெறுபவனுக்கு நம் அர்க்யத்தினால் ஆவது என்ன? உன் பாதத்தை கழுவுவதற்கு என்னால் எப்படி சாத்தியம்?
6. சூர்ய சந்திரர்களை கண்களாகக் கொண்டு உலகத்தையே ஒளிமயமாக்குபவனுக்கு, பக்தன் கொடுக்கும் இரு தீபங்களால் ஆவது என்ன?
7. திரௌபதியின் வஸ்திரத்தை துச்சாதனன் இழுத்தபோது, அக்ஷய வஸனங்களைக் கொடுத்தவனுக்கு, நர மானவனான நான் கொடுக்கும் துண்டு வஸ்திரம் போதுமா?
8. மகா பிரளயத்தில் அனைத்தும் சுட்டுப் போடுபவன் நீ, உனக்கு நான் தூபாரத்தி காட்ட முடியுமா?

ஏற்கனவே தயாரான அன்னம் வேண்டாம்; இனி தயார் செய்ய வேண்டுமெனில் நான் காத்திருக்க மாட்டேன் என்று கூறி, ஸ்ரீராமரிடம் துர்வாசர் வந்தபோது, நான்கு விரல்களாலேயே பக்ஷ்ய, போஜ்ய, லேஹ்ய, பேய ஆகிவற்றை கொடுத்தவனுக்கு, பதார்த்த தட்டில் கொண்டு வந்து கொடுத்த நைவேத்தியம் எதற்கு?

ஏழு கடல்களின் தண்ணீரை (எரடைது ஸாகர) ஆபோஷனம் எடுத்துக் கொள்பவனுக்கு, கிணற்றிலிருந்து இறைத்த தண்ணீரினால் அபிஷேகம் உனக்கு எதற்கு ஹரியே?உன் நகத்தின் ஒளிக்கு சமமான ஒளி வேறொன்றும் இல்லை. ஒளி கொண்ட அனைத்திற்கும் ஒளி பாய்ச்சுபவனான உனக்கு, ஐந்து வர்த்தியின் மங்களாரதி தேவையா?

ஸுவர்ண புஷ்ப தக்ஷிணை:
சிவ மித்ரனான தனாதிபதி குபேரனே, உன் தாஸனாக இருக்கையில், நான் கொடுக்கும் ஸுவர்ணபுஷ்ப தக்ஷிணையால் உனக்கு என்ன ஆக வேண்டியிருக்கிறது?

பிரம்மாதி குடும்ப தேவதைகள் அனைவரும் நிரந்தரமாக உன்னை பாடிக் கொண்டிருக்கையில், என் கண்டாமணி வாத்தியம் எதற்கு?

கருட வாகன விஜயவிட்டலரேயனே, உனக்கு எதுவும் தேவையில்லை. பக்தியுடன் உன் காலில் விழுந்து கை குவித்து வணங்குவேன்.

4. நிகமகளிகெ நிலுகதிப்ப மனத தெய்வ...

நிகமங்களுக்கு சிக்காத, பக்தர்களின் மனதின் தெய்வமான நீ, நாம் செய்யும் ஸ்தோத்திரங்களால் கட்டுப்படுவதைப் போல..லட்ச்ம்யாத்மக நானாரத்ன கிரீட குண்டல முதலான சுவர்ண அலங்கார பூஷணங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ள உனக்கு, உலக மக்கள் தயாரித்த ஆபரணங்கள் தேவையா?

கருடனின் தோள்களின் மேல் சஞ்சரிக்கும், சேஷனின் மெத்தென்று இருக்கும் படுக்கையில் படுத்திருக்கும் உனக்கு, நான் அர்ப்பணிக்கும் ஆசன, வாகனங்கள் தேவையா?

நாரதாத்யர்கள் விதவிதமாக கானம் பாடிக் கொண்டிருக்கின்றனர்.

இந்தஹ நின்ன மஹிமெய பொகளலு என்னளவெ? அனந்த குணங்களின் இருப்பிடமான விஜயவிட்டலனே, நீ, வானில் ஒளிரும் சூரியனைப் போல, உலகினை குணங்களால் ஒளிர்விக்கிறாய்.

5. ஸகல ஸம்பூஜெயு ஈபரி இரலு மத்தெ...

நாம் செய்யும் ஷோடஷ உபசாராதி அனைத்து பூஜைகளாலும், உனக்கு எந்தவித பிரயோஜனமும் இல்லை. லட்சுமிதேவி உன்னை பரமபக்தியினால் பூஜிக்கிறாள். கோடி கோடி சேவகர்கள் இருந்தாலும், உன் பூஜையை அவளே செய்கிறாள். இத்தகைய பரம பூஜ்யளான லட்சுமிதேவிக்கும், இப்படியான பூஜை செய்வதற்கு பிரேரணை செய்தவாறு, உன் பூஜையை நீயே செய்துகொள்கிறாய். இப்படி இருக்கையில், பக்தர்கள் கொடுக்கும் பூஜாதிகளால் உனக்கு ஆகவேண்டியதுதான் என்ன?

14. ஸ்ரீஹரி தானே பூஜ்ய பூஜக சுளாதி

பரிபூர்ண குணங்களைக் கொண்ட உன்னை முக்தர்கள் மற்றும் அமுக்தர்கள் எவ்வளவு துதித்தாலும், அதனால் உனக்கு ஆவது ஒன்றும் இல்லை. அல்ப அறிவுள்ள நான் பூஜித்தாலும், எந்தவொரு பலன்களையும் கேட்காமல் பூஜிப்பதில்லை. அனைத்து ஜீவர்களுக்குள் நியாமகனாகி, வியாப்தனாக இருந்து, ஒரு நண்பனைப் போல என்னை காக்கும் அனிமித்த பந்து நீயே. தாரதம்யத்தை அறிந்து உன் பக்தரான தேவதைகளை பூஜித்தால், இந்த ஷோடஷோபசார பூஜை செய்த பலன் எனக்கு கிடைப்பது நிச்சயம்.

பிம்பனான உனக்கு நம் தகுதிக்கேற்ப பூஜை செய்து, அனைத்து ஆபரணங்களால் அலங்கரித்து பூஜித்தால், கண்ணாடி பார்க்கையில் அதில் நம் பிரதிபிம்பம் காண்பதைப் போலவே, உனக்கு செய்த அலங்காரங்கள் அனைத்தும் பிரதிபிம்பரான நமக்கு திரும்ப வருகிறது. அப்படியெனில், பூஜாதிகளெல்லாம் ஸ்ரீஹரிக்கு எவ்வித பிரயோஜமும் இல்லை. அவை நம் பிரயோஜனத்திற்காகவே செய்ய வேண்டும் என்று அபிப்பிராயம்.

<u>6. நினகெ நீனே பூஜெமாடிகொம்ப தேவ...</u>

அனைவரிலும் நின்று பூஜ்ய பூஜகன் எனப்படுபவனான உனக்கு, நான் என்ன பூஜை செய்யட்டும்? எனக்கு எவ்வித ஸ்வதந்த்ரமும் இல்லை. நீ மகிழ்ச்சி அடையவேண்டும் அவ்வளவே.

***

15. நிந்தா ஸ்துதி சுளாதி

ராக : கௌள. தாள: த்ருவ தாள

அஞ்சுவெவு நின்ன கபட நாடகதனகெ
அஞ்சுவெவு நின்ன மாயத3 லீலெகெ3
அஞ்சுவெவு நின்ன அத்3பு4த கர்மக்கெ
அஞ்சுவெவு நின்ன அக3ணிதகு3ணக்கெ
அஞ்சுவெவு நின்ன காலாக்2ய ரூபக்கெ
அஞ்சுவெவு அஞ்சி
அஞ்சாலி பே3கு நின்ன தொ4ரெதனக்கெ
ப்ராஞ்சலிமுகி3து3 நமோ நமோ யெம்பெ3
முஞ்சியாக3த3 முன்ன மக்கள படெ3தெ3
சஞ்செயமாடி3 ஸைந்த4வன கொந்து3
அஞ்சானெஸுத கேதுவின ஸாகிதெ3
அஞ்சுவேவு நின்ன மரெ மோஸதனக்கெ
அஞ்சநாப4 க2ண்ட3தொ3ளு புட்டிஸி கர்ம
பு4ஞ்சிஸி ஹலுபு3வந்தெ என்ன மாடி3தி3
கஞ்சனாப4னெ நினகே3னன பா3ரது3
க3ஞ்சிஹாகுவெனெம்போ3 க3ர்வாவு நினகெ3
அஞ்சத3லெ நினகெ3 நுடிதெ3நாத3டெ3 அத3
கஞ்சிகெ நினகே3னு லேஷவில்ல
கு3ஞ்சித3வரிகெ3 வஜ்ரபஞ்சராகு3வெ
குஞ்சரவரத3 ஸ்ரீவிஜயவிட்டல, ப்ரா
ப4ஞ்சன்ன பாபஜீமூதக்கெ, அஜித ||1

மட்ட தாள

ஒந்து3 கர்மவன்னு தந்து3 நமகெ3 ஹச்சி
இந்தி3ரெரமணனெ அந்து3 ஸ்ருஜிஸி ஜக3வ
ஒந்தொ3ந்து3 பரியல்லி முந்து3கெ3டி3ஸி ப4வத3
ஸிந்து4வினொளகி3ட்டு பொந்தி3ஸிதெ3 ஹீகெ3
நொந்து3 நோவாத3ரு அந்தே3 ஒல்லத3லெ
அந்த3ரெ நினக3த3ரிந்தே3னாகு3வதோ3
தந்தெ3ய தந்தெ3 விஜயவிட்டல தீ3ன

15. நிந்தா ஸ்துதி சுளாதி

ப3ந்து4வெ நினகொ3ம்மெ அந்தா3ரெ பி3டு3வ ||2

ரூபக தாள

ஏனாகு3வுது3 நினகெ3 நானந்த3 நுடி3க3ளு
ஹானி வ்ருத்3தி4க3ளில்லத3 ஶ்ரீ நாராயண மூர்த்தி
கேணிகொ3ண்டா3 நீசமானவ நானய்ய
வானர மனவென்னாதீ4னவல்லவெ கேளு
பா4னுகுலோத்ப4வ விஜயவிட்டல நினகெ3
ஏனேனு அந்த3ரெ ஊன ஆகு3வுதே3னோ ||3

ஜம்பெ தாள

கடி3மெ ஆயுஷவெந்து3 நுடி3வெனெந்தா3த3டெ3
கடெ3யாவது3 நின்ன தி3வஸக3ளிகெ3
குடி3யலி நீரு தொரக3லி ப்3யாட3வெம்பெ3னெ
படெ3தெ3 நின்னுங்க3டத3லி க3ங்கெ3ய
ப3ட3ல க்ஷுதி4யன்ன வெக்3க3ளிஸிதெ3ம்ப3னெ
பி3ட3தெ3 எந்தி3கு நீனு நித்யத்ருப்த
கடு3தா3ரித்3ர்யனாகி3ன்னிரு போகு3 எம்பெ3னெ
ஒட3னெ இப்ப1ளு லகுமி நின்னக3லதெ3
உடலி வஸனவ காணத3லெ போகு3 எம்பெ3னெ
கடு3ரம்யவாத3 பீதாம்ப3ரவோ
ப3ட3வனல்லி நீனு விஜயவிட்டல நினகெ3
எட3பி3ட3தெ3 நுடி3த3வனு அவனெ தா3ரித்3ர ||4

த்ரிவிடி தாள

பூ4ஷணவில்லதெ3 போக3லி ஏனம்பெ3னெ
தோ3ஷரஹித அப்ராக்ருத பூ4ஷண
லேஸு நினகெ3 ஆக3தெ3 போக3லெம்பெ3னெ
லேஸு கொடு3வெ நீனு பொ3ம்மாதி3கெ3
ஈ ஸம்ஸார பாஷதொ3ளகி3ரு எம்பெனெ
ஏஸேஸு ஸம்ஸாரிக3ன தா3டிஸுவெ
ஹாஸிகெ3யில்லதெ3 போக3லி எம்பெ3னெ
ஷேஷனெ நினக3ய்ய க4னஹாஸிகெ3

த்3வேஷிக3ள கை1ய்ய ஸோதுபோகெ3ம்பெ3னெ
நீ ஸமர்த்த2னு காணோ நித்யத3ல்லி
பாஷத4ரார்ச்சித விஜயவிட்டலரேய
ஏஸு பரிபா4க்3யவந்தனு நீனய்ய ||5

அட்ட தாள

தொ3ரெதன நினகெ3 இல்லதெ3 போக3லியெம்பெ3னெ
அரஸாகி3 ஸர்வர நீனஞ்சிஸிகொம்பெ3
ப4ரதி3ந்த3லேருவ ரத2 ப்3யாட3வெம்பெ3னெ
திருகு3வ க2க3ராஜ ஈரேளு லோகவ
பரிவாரயில்லதெ3 இரு நினகெ3ம்பெ3னெ
ஸுரரு மொத3லாத3வரு ஸேவகரய்ய
அரமனி நினகா3க3லி பே3ட3வெம்ப3னெ
மிருகு3வ த்ரி தா4ம ஜக3கெ விரஹித
தருள யத்3வள ஜரதனவாக3லெம்பெ3னெ
பரமபுருஷ நின்ன ஜனன மத்தாவதோ3
த4ராத4ர விஜயவிட்டலனிகெ3 மந்த3ரு
அரியாதெ3 நுடிது3 ப4வதொ3ளகி3ப்பரு ||6

ஆதி தாள

குலகோ3த்ரதி3ந்த3 நின்ன கெலஸாரு எம்பெ3னெ
திளியாது3 நின்ன குலகோ3த்ரவெனகெ3
சலுவனாக3தெ3 போகு3 சன்னிக3னெம்ப3னெ
எளெ நக2காந்திகெ3 பௌகு3வுது3 லோக
ச2ளி கா4ளி பி3ஸலு தாக3லி நினகெ3ம்பெ3னெ
ஒளகெ3 ஹொரகெ3 நீனெ ஸர்வவ்யாபகனு
ஷௌவ ம்ருத்யு நின்ன தட3ஹலி எம்பெ3னெ
ப3லு ம்ருத்யுக3ள நீனெ தலெமெட்டி ஆளுவெ
ஸுலப4னெ |நினகொ3ந்து3 அம்வர காணெ
நெலெயாவுது3 நின்ன ப3லவந்ததனக்கெ
குலதே3வ கமலேஷ விஜயவிட்டலரேய
ஸலகெ3லி நுடி3தே3னு ஸலஹுவ தா3தார ||7

ஜதெ

ஸ்தோத்ர ரூபவித3ந்து3 நின்ன கொண்டா3டி3தெ3
மித்ரனாகி3 காயோ விஜயவிட்டல ப்ரபு4வெ ||8

***

1. அஞ்சுவெவு நின்ன கபட நாடகதனகெ...

பகவந்தனின் லீலைகள் அனைத்து அசுர மோகனத்திற்காக மற்றும் சஜ்ஜனர்களின் மேம்பாட்டிற்காகவே ஆகியுள்ளன. மொத்த மகாபாரத போருக்கான ஆயத்தம், சமாதானத்திற்கான தூது இவை அனைத்தும் கபட நாடகமே. பூபாரத்தை குறைப்பதற்கு புறப்பட்டவன், இந்த நாடகத்தை ஆடி, பஞ்ச பாண்டவர்களை வைத்து ராஜசூயா நாடகத்தை செய்வித்து, பீமனுக்கு விசேஷ பலன்களைக் கொடுத்து, இந்திரனின் வாக்கினை நிறைவேற்றுவதற்கு அர்ஜுனனின் சாரத்யத்தை செய்தான். பகவந்தனின் இத்தகைய கபட நாடகத்திற்கு அனைவரும் பயப்படவே வேண்டும்.

அஞ்சுவெவு நின்ன மாயத லீலெகெ...
பகவந்தனின் மாயை என்றால், அவனின் விருப்பம். பிரபஞ்சத்தில் அனைத்து செயல்களும் ஹரியின் இச்சைக்கேற்பவே நடக்கிறது. பிரம்மாதிகளுக்கும் பதவிகள் கிடைப்பது ஹரியின் இச்சைப்படியே. இவனின் விருப்பத்திற்கு அனைவரும் பயப்படவே வேண்டும். பாம்பு, தன் முட்டையை தானே விழுங்குவதைப் போல, உலகத்தை விழுங்கும் பகவந்தனின் லீலை அற்புதம்.

அஞ்சுவெவு நின்ன அத்புத கர்மக்கெ:
ஜகத் என்னும் அற்புத வஸ்துவை படைத்த பகவந்தனே மஹா அற்புதம். ‘பஹுசித்ர ஜகத் பஹூதாகரணாத்’ வெகு விசித்திரமான உலகத்தை பார்த்தால் போதும். அவனின் அற்புத காரியம் தெரிகிறது. தன் போகத்திற்காகவே இத்தகைய ஸ்ருஷ்டி என்று சிலரும், க்ரீடைக்காக என்று வேறு சிலரும் சொல்கின்றனர். இதெல்லாம் கிடையாது, படைப்பது அவனுடைய ஸ்வபாவம்.

அஞ்சுவெவு நின்ன அகணித குணக்கெ 'லோகவத்து லீலா கைவல்யம்' என்னும் ஸூத்ரம் இவ்வாறு சொல்கிறது.

பகவந்தன் இத்தகைய அற்புத ஜகத்தினை படைத்தான் என்ற பிறகு, அவன் எண்ணிக்கையற்ற எல்லையற்ற குணபூர்ணனாக இருக்கவே வேண்டும். பூர்ண ஞானானந்த மயனான ஸ்ரீஹரிக்கு ஒரு ரூபத்தில், ஒரு குணத்தில் அனந்த குணங்கள் இருக்கின்றன. அனந்தானந்த ரூபங்கள் இருக்கின்றன. ஒரு ரூபத்திலும் அனந்தானந்த குணங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு குணத்திலும் மறுபடி அனந்தானந்த குணங்கள் இருக்கின்றன. இந்த எல்லையற்ற குணம் வேறு யாரிலும் இல்லை. இத்தகைய குணங்களுக்கு அனைவரும் பயப்படவே வேண்டும். உலகில் இருக்கும் அனைத்து மண் துகள்களை பிரம்மதேவன் எண்ணுவதற்கு சாமர்த்தியம் கொண்டவன். ஆனால், மாதவனின் ஆனந்தாதி குணங்கள், அனாதி அனந்த காலம் வரை எண்ண முடியாததாக இருக்கிறது.

அஞ்சுவெவு நின்ன காலாக்யரூபக்கெ:
ஸ்ரீஹரி, காலத்தின் சூக்ஷ்ம அம்சங்களான நிமிடம், நொடி ஆகியவற்றில் நிலைத்திருந்து கால நியாமகனாக இருக்கிறான். கால நாமகனும் அவனே. காலாதீதனும், கால நியாமகனும், த்ரிகாலக்ஞனும், கால பிரவர்த்தகனும், நிவர்த்தகனும், காலோத்பாதகனும், காலமூர்த்தியும் ஸ்ரீஹரியே ஆகிறான்.

நின்ன தொரெதனக்கெ அஞ்சாலிபேகு:
பகவந்தன், 14 உலகங்களுடன், தச ஆவரணங்களுடன் சேர்ந்த, அனேக பிரம்மாண்ட கோடி நாயகன். இத்தகைய நாயக பாவத்தில் வேறு யாரும் காணப்படுவதில்லை. இவனின் ஆளுமைக்கு அனைவரும் அஞ்சவே வேண்டும். நின்ன தொரெதனக்கெ அஞ்சலி ஜோடிஸி நமோ நமோ எம்பெ.

முஞ்சியாகத முன்ன மக்கள படெதெ:
ஸ்ரீகிருஷ்ணனின் உபனயன சம்ஸ்காரத்திற்கு முன்னரே, சில கோபியர்கள், நமக்கு திருமணம் ஆகவேண்டும் என்று அவனைக் குறித்து தவம் செய்தனர். இவர்களுக்காக எட்டு வயதிற்குள்ளேயே

திருமணம் செய்தான். மக்களையும் பெற்றான். உலகத்தின் விதிகள் ஜகன்னாதனுக்கு எப்படி பொருந்தும்?. ஸம்ஸ்காரத: ப்ரதமமேவ ஸுஸங்கமோ மே ||

ஸஞ்செய மாடி ஸைந்தவன கொந்தெ:

அர்ஜுனனின் மகனான அபிமன்யுவின் மரணத்திற்கு சைந்தவன் காரணமாக இருந்தான். ஆகவே, அவனை சூரிய அஸ்தமனத்திற்கு முன்னரே நான் கொல்வேன் என்று அர்ஜுனன் சபதம் செய்தான். அத்தகைய அர்ஜுனனுகாக, ஸ்ரீகிருஷ்ணன் இருட்டினை படைத்து, சைந்தவனை கொல்ல வைத்தான்.

அஞ்சானெ ஸுத கேதுவினெ ஸாகிதெ:

அஞ்சானெ: அஞ்சனெய புத்ரனே ஹனுமந்தன். அவனை த்வஜத்தில் வைத்துக் கொண்ட அர்ஜுனனை எந்த மஹா அஸ்திரங்களும் கொல்லாதவாறு காத்தான்.

அஞ்சுவெவு நின்ன மரெ மோஸதனகெ:

தன்னிடம் சரணாகதியடைந்த, ஹனுமனின் நண்பனான சுக்ரீவனை அருள்வதற்காக, தாரதம்யத்தில் அதிகமாக இருந்தாலும், வாலியை மறைந்திருந்து கொன்ற உன்னை (ஸ்ரீராமனை), வாலி - இவ்வாறு மோசம் செய்யலாமா என்று கேட்டான். இதன் உள் அர்த்தம் வேறாகவே இருக்கிறது. வாலி, ராவணனை புகழ்ந்தவாறு, அவனிடம் நட்பு பாராட்டியிருந்தான். இத்தகைய துஷ்டர்களை கொல்வதற்கு எவ்வித விதிகளும் தேவையில்லை. மேலும், சரணாகதி அடைந்த பக்தனை (சுக்ரீவனை) காப்பதாக வாக்கு கொடுத்திருந்ததால், அந்த வாக்கினை காப்பதற்காக மறைந்திருந்து வாலியைக் கொன்றான்.

அஞ்சனாப கண்டதொளு:

நம் நாட்டின் புராதன பெயர் - பாரதம். ரிஷபன் கண் மையைப் போல வண்ணம் கொண்டிருந்ததால், இந்த தேசத்திற்கும் அஞ்சனையைப் போல ஆப = ஒளி என்று பெயர் வந்தது. இத்தகைய பாரதத்தில் நம்மை பிறக்க வைத்தாய். பிராரப்தத்தை அனுபவிக்குமாறு செய்தாய். இதனால் உனக்கு எதுவும் லாபம் இருக்கிறதா? ஏதும் இல்லை. கஞ்சனாபனே. நீ செய்த இந்த

கஷ்டத்திற்கு உன்னை எதுவும் திட்டக்கூடாது. வேளாவேளைக்கு உணவு, உபசாரம் செய்விக்கிறாய் என்னும் கர்வம் உனக்கு இருக்கிறது. நான் பயப்படாமல் உன்னை எப்படி திட்டினாலும், உனக்கு யாரைப் பற்றியும், எதுவும் பயம் இல்லை.

குஞ்ஜிதவரிகெ:
உன் பாதங்களில் விழுந்து, உன்னையே நம்பியவர்களுக்கு வைரக் கூண்டு போல இருந்து அவர்களை காக்கிறாய். கஜேந்திர வரத தாயக விஜயவிட்டலனான நீ, பாபங்கள் என்னும் மேகங்களுக்கு (ஜீமூத - மோட), சூறாவளிக் காற்றினைப் போல இருப்பாய். என்னை காப்பாற்றுவாயாக.

<u>2. ஒந்து கர்மவன்னு தந்து நமகெ ஹச்சி...</u>

ப்ராரப்தத்தில் ஒரு கர்மத்தை எடுத்து, அதனை நமக்கு கொடுக்கிறாய். உலகைப் படைத்து, அந்த உலகிலும் பற்பல ஜீவர்களை படைத்தாய். அந்த ஜீவர்களை சம்சார சாகரத்தில் வைத்து, அபிமானத்தைக் கொடுத்து, உற்றார், உறவினர், தேகம், மக்கள், ஆகியவற்றையும் கொடுத்தாய். இவ்வாறு சம்சார தாபத்ரயத்தில் விழுந்து, போய்க் கொண்டிருக்கும் என்னைப் பார்த்தும், காப்பாற்றாமல் இருக்கிறாய். தந்தையான பிரம்மனுக்கும் தந்தையான உனக்கு நான் என்ன ஆனால் என்ன? உனக்கு அதில் எதுவும் பிரச்னை இல்லை அவ்வளவுதான். தீன பந்துவான உன்னை, ஒரு முறை வணங்கினால் போதும், இந்த சம்சார சாகரத்திலிருந்து விடுவிக்கிறாய்.

<u>3. ஏனாகுவுது நினகெ நானந்த நுடிகளு...</u>

நாராயணனே, அப்ராக்ருத ஸச்சிதானந்த மூர்த்தியான உனக்கு நான் ஏதாவது நிந்தா ஸ்துதி வசனம் சொன்னால், உனக்கு அதனால் எவ்வித பிரச்னையும் இல்லை. வியாபர சிந்தனை கொண்ட அல்பமானவன் நான். சஞ்சல ஸ்வபாவத்தைக் கொண்ட குரங்கினைப் போல இருக்கிறது என் மனம். இந்த மனமானது நான் சொல்வதைப் போல கேட்பதில்லை. சூர்யவம்சத்தில் அவதரித்த விஜயவிட்டலனே, நான் என்ன சொன்னாலும்,

---

பரிபூர்ணனாக இருக்கும், தோஷங்கள் அற்றவனான உனக்கு எந்த லாப நஷ்டங்களும் இல்லை.

4. கடிமெ ஆயுஷவெந்து நுடிவெனெந்தாதடெ..

நீ என்னை சம்சாரத்தில் மூழ்கடித்து, அந்த காட்சியை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறாய். 'நீ அல்பாயுசைக் கொள்வாயாக' என்று நான் உன்னை சபித்தால், அனாதி நித்ய என்னும் உன் குணம் குறைந்துவிடுமா? பிரளய காலத்திலும் எவ்வித சலனமும் இல்லாமல் நீ இருக்கிறாய்.

நீ குடிப்பதற்கு தண்ணீரே கிடைக்க வேண்டாம் என்று சபிக்கட்டுமா? உன் கால் கட்டை விரலிலிருந்து கங்கையைப் பெற்ற நீ, கங்காஜனகன் ஆகியிருக்கிறாய். ஆகவே அந்த சாபம் உன்னை எதுவும் செய்யாது.

உனக்கு பயங்கர பசி உண்டாகட்டும் என்று சாபம் கொடுக்கட்டுமா? நித்ய த்ருப்தனான உனக்கு ஆகாரம் கிடைக்கிறதோ, கிடைக்கவில்லையோ உனக்கு அதனால் எவ்வித தொந்தரவும் இல்லை.

உனக்கு கடும் ஏழ்மை வரட்டும் என்று சபிக்கட்டுமா? நித்யவியோகினியான லட்சுமிதேவி, உன்னை ஒரு நொடியும் விடாமல் கூடவே இருக்கிறாள்.

உடுத்த ஆடை கிடைக்கக்கூடாது என்று சபிக்கட்டுமா? லட்ச்ம்யாத்மகமான சிறந்த பீதாம்பரதாரியான உனக்கு இந்த சாபம் எதுவும் செய்யாது.

லட்சுமிபதியான உனக்கு எதுவுமே கிடைக்கக்கூடாது என்று சபிக்கும் மனிதனுக்கு, கடும் ஏழ்மையே கிடைக்கிறது. விஜயவிட்டலனான நீ ஏழையா? ஏழையான குசேலனை, ஸுசேலன் ஆக்கியவன் நீயே.

5. பூஷணவில்லதெ போகலி ஏனம்பனெ...

உனக்கு எவ்வித ஆபரணாதி பூஷணங்களும் கிடைக்காதிருக்கட்டும் என்று சொல்லட்டுமா?. அப்ராக்ருதமான பூஷணங்கள் உன்னிடம் ஏராளமாக இருக்கின்றன. உனக்கு எவ்வித நல்லதும் ஆகவேண்டாம் என்று சொல்லவா? பிரம்மாதிகளுக்கும் நீயே அவர்களுக்கு அதிகாரங்களைக் கொடுத்து நல்லது செய்கிறாய் அல்லவா?. சம்சார பந்தத்தில் நீ சிக்க வேண்டும் என்று சொல்லவா?. எவ்வளவோ பேர் உன்னாலேயே தங்களின் சம்சார பந்தத்தினை கத்தரித்துக் கொண்டு, முக்தர் ஆகியிருக்கின்றனர். சம்சாரத்தை கத்தரிப்பதில் சிறந்த குணவந்தன் நீயே.

படுப்பதற்கு படுக்கையே இல்லாது ஆகட்டும் என்று சபிக்கவா? சேஷதேவனே உனக்கு மிருதுவான படுக்கையாக இருந்து சேவிக்கிறான். த்வேஷிகளான ராவணாதிகளின் கைகளில் தோற்றுப் போ என்று சபிக்கட்டுமா? பிரம்மனின் வரத்தினால் வெல்லப்பட முடியாதவர்களே ஆனாலும் அவர்கள், உன்னால் அழிக்கப்படுகின்றனர். உன்னைவிட சமர்த்தர் வேறு யார் உளர்?.

உன் மாப்பிள்ளையும், மாமனாரும் ஆகியிருக்கும் வருணனே உன்னை பூஜிக்கிறான் என்றபிறகு உன்னுடைய பாக்கியத்திற்கு எல்லை இருக்கிறதா?

6. தொரெதன நினகெ இல்லதெ போகலியெம்பேனே...

உனக்கு தொரெதன (ஆளுமை) இல்லாது போகட்டும் என்று சபிக்கவா?. ஈரேழு உலகிற்கும் நீயே ஸ்வாமியாக இருந்து, பூஜையை ஏற்றுக் கொள்கிறாயே?. உனக்கு சஞ்சாரம் செய்வதற்கு ரதமே கிடைக்க வேண்டாம் என்று சொல்லட்டுமா?. பராக்கிரமங்களில் முதலானவனான கருடனே உன் வாகனமாக இருக்கிறானே?. உனக்கு குடும்பத்தவரே கிடைக்காதிருக்கட்டும் என்று சபிக்கட்டுமா? 14 உலகத்தின் சுராசுர யக்ஷ கந்தர்வ கின்னரர்கள் அனைவருமே உன் குடும்பத்தினரே ஆகின்றனர்.

வசிப்பதற்கு அரண்மனை கிடைக்காமல் போகட்டும் என்று சபிக்கவா? லட்சுமியாத்மகமான வைகுண்ட, ஷ்வேதத்வீப, அனந்தாஸனங்களே உனக்கு திவ்ய தாமங்களாக இருக்கின்றன. உனக்கு மனிதர்களைப் போல பால்ய, வாலிப, முதுமை ஆகிய

நிலைகள் வரட்டும் என்று சபிக்கட்டுமா?. பரமபுருஷனான க்ஷராக்ஷர புருஷர்களால் வணங்கப்படும் உத்தமனான உனக்கு பிறப்பு இறப்புகளே இல்லையே?. இப்படி எதையுமே அறியாத மந்தமதிகள் உனக்கு சாபமிட்டால், அவை அனைத்தும் அவர்களுக்கே திரும்ப வந்துவிடுகின்றன.

7. குலகோத்ரதிந்த நின்ன கெலஸாரு எம்பெனெ...

உனக்கும் குல கோத்திரங்கள் உண்டாகி நீயும் குல கோத்திரங்களில் இரு என்று சாபம் கொடுக்கட்டுமா? உன் குலம் எது? கோத்திரம் எது?. நீ சுந்தரன் ஆகாமல், குரூபியாகிவிடு என்று சபிக்கட்டுமா? உன் நகத்தின் ஒளியினாலேயே சூரிய சந்திரர்கள் ஒளிர்ந்து கொண்டிருக்கையில், உன் ஒளியைப் பற்றி நான் என்ன சொல்வது?.

உனக்கு வெயில், குளிர், காற்று ஆகியவை நிரந்தரமாக தொந்தரவு கொடுக்கட்டும் என்று சொல்லட்டுமா? அனைத்து இடங்களிலும் உள்ளே வெளியேயாக இருக்கும் உனக்கு, குளிர், வெயில் ஆகியவை எப்படி தொந்தரவு கொடுக்க முடியும்?.

அனைவரையும் இழுத்துக் கொள்ளும் ம்ருத்யுதேவதை, உன்னையும் இழுத்துக் கொள்ளட்டும் என்று சொல்லவா? ம்ருத்யு தேவதை எனப்படும் யம, ருத்ர ஆகியோருக்கு நீயே ம்ருத்யு ஸ்வரூபமாக இருக்கிறாய். ம்ருத்யுவிற்கும் ம்ருத்யு நீயேதானே?. பக்தர்களுகு சுலபதேவனான உனக்கு சாபம் கொடுப்பதற்கும்கூட யார் இருக்கிறார்கள்?. உன்னிடம் தைத்யர்கள் எப்படி கோபப்பட முடியும்?.

நம் குலத்திற்கு ஸ்வாமியான விஜயவிட்டலரேயனே, நிந்தா ஸ்துதி ரூபத்தில் உன்னிடம் இருக்கும் ஒரு சலுகையால் இவ்வாறு பேசினேன், ஜீயனே. அனைவரையும் காக்கும் தலைவன் நீ ஒருவனே.

8. ஸ்தோத்ரரூபவிதந்து நின்ன கொண்டாண்டிதெ...

ஸ்தோத்ர ரூபத்தில் இருக்கும் உன் இந்த மகிமையை கொண்டாடிக் கொண்டிருப்பேன். ஒரு நண்பனைப் போல என்னை எப்போதும் எங்கேயும் காத்துக் கொண்டிரு, நம்ம அனவரத..

***

16. ஆத்ம சமர்ப்பண சுளாதி

தாள: த்ருவ தாள

அணுவெந்து3 நின்னனு க4னவாகி3 பூஜிஸுவெனெ
அணுவல்ல அணுவல்ல அபு3ஜினல்ல
க4னவெந்து3 நின்ன நானு
அணுயாத்ர அர்ச்சிஸுவெனெ
க4னவல்ல க4னவல்ல க4னஸத்3ருஷ
அணுவல்ல க4னவல்ல கு3ணக3ண நிலயனெ
எனெம்பெ3 நின்ன ஸோஜிக3வு நெலெயில்ல
அனிமிஷரீஷ நின்ன அனிமிஷ க3ணத3வரு
எணிஸி கு3ணிஸி கு3ண நெலெகா3ணரோ
மனுஜ வனஜதனுஜ ஜீவாதி3க3ள
தனுவினொளகெ3 ஒந்தி3னவக3லதெ3
த4னவ காயிவ ஸர்ப்பன தெரதி3 ந
ம்மனு பாலிஸுவ காஸனு பே3ட3தெ3
க4ன மஹிம விஜயவிட்டல
முனினுத நின்ன அணு க4னரூப காணெனோ நானு ||1

புருஷர மோஹிஸுவ பரமஸுந்த3ரதே3வ
புருஷோத்தம நீனெ புருஷ ப்ரதா4னனெ
புருஷனு நீனே புருஷபீ3ஜனு நீனெ
புராணத3ல்லி பரிபூர்ணமய நீனெ
புராரி புரந்த3ர புருஷார்த்த2வ நீவ
புருஷ ம்ருக3வ தந்த3 புருஷன ப்ராண, கிம்
புருஷவந்தி3த பாத3 விஜயவிட்டல
பரமபுராதனெ புருஷரூபத்ரயனெ ||2

16. ஆத்ம சமர்ப்பண சுளாதி

த்ரிவிடி தாள

பொட3வி சிம்ஹாஸன, கொடெ3ய க3க3ன நினகெ3
மடு3வினுத3க, கோ3வு கொடு3வ பாலபி4ஷேக
அட3வி துலஸி, அதெ கி3ட3 குஸும நின்ன
அடி3கே3ரிஸுவெனய்யா நு3டி3 மந்த்ரக3ளிந்த3
பி3ட3தெ3 திருகு3வ ரவி கட3லஸுதனு தீ3ப
ஒடெ3ய, தாரெக3ளு நினகி3டு3வ ஆப4ரணவு
ப3டி3வாணவெல்ல அங்க3டி3ய பதா3ர்த்த2க3ளு
கொடு3வ கப்பக3ளு நினகி3டு3வ காணிகெ தே3வ
ஸுடு3வ தா3வாக்3னியெ கடு3தேஜதா3ரதி
அடி3க3டி3கெ3 ஸம்ஷயவிடி3யத3லெ நானு
ஒட3னொட3னெ ஆவாவ எடி3யல்லித்3த3வெல்ல
தடெ3யதெ3 மனத3ல்லி கொடு3வெனர்ப்பிதவெந்து3
குடுதெஜலகெ முகுதிகொடு3வ விஜயவிட்டல ||3

அட்ட தாள

ஏளுவாகலி முக்3கி3பீ3ளுவாக3லி ஹரடெ
ஹேளுவாக3லி வார்த்தெ கேளுவாக3லி தே3ஷ
ஆளுவாக3லி பா4ர தாளுவாக3லி த4ன
ஹோளுவாக3லி ஸுக2 பாளுவாக3லி நித்ய
வ்யாளெயாக3லி அவேளெயாக3லி மன
தாலோசனெயெல்லி வாலக3 ஹரியென்னி
வேளெ ஸவியத3ர வேளெ ஸவெயலில்ல
நாலிகெ3யிந்த3லி பேளுவத3ல்லவெ
ஆலதெ3லெயஷாயி விஜயவிட்டல தாயி
லாலிஸித3ந்தெ மாதாலிஸிகொம்ப3 ||4

ஆதிதாள

எத்தண ஸமர்ப்பணெ எத்தண ஸமர்ப்பணெந்து3
எத்தலித்3த3 ஹரியு எத்த த்ருப்தநாஹனெந்து3
சித்தத3ல்லி பே4த3கொ3ண்டு3 தத்தளகொ3ம்பு3வத3ல்ல
நித்ய ப4க்தி யில்லத3வனு ஹத்திலி பதார்த்த2வெல்ல
ஜத்தா கி3ரிஸிகொண்டு3 ஸுத்த ஸமர்ப்பணெயெந்து3

இத்து நலிதா3டி3த3ரெ உத்தமஷ்லோகனு ஒப்ப
சித்த ஷுத்3த4னாகி3 கரவெத்தி ப3லுதீ3னனாகி3
அத்தவித்த உத3கவு அத்த லர்ப்பிதவெனலு
சித்த ஜபிதனு மெச்சி சித்தத3ல்லி ஒப்பிகொண்டு3
ஹத்தக்கெ நூராருமடி3 பி3த்தி பெ3ளஸி உணிஸுவ
இத்த ப3ருவ ப4வதூ3ர விஜயவிட்டலரேய
எத்தலாத3ரேனு தன்ன ப்4ருத்யனெந்த3ரொட3ம்ப3டு3வ ||5

ஜதெ

அச்சுக3ர்ப்பிதவெந்து3 தா3ஸரெனலு கல
க3ச்சு குடி3த3 காணோ விஜயவிட்டல மெச்சி ||6

***

<u>1. அணுவெந்து நின்னனு கனவாகி பூஜிஸுவெனெ...</u>

பகவந்தனே! மந்தமதியான நான் உன்னை என்னவென்று பூஜிக்கட்டும்? அணுவானவன் என்று சொல்லட்டுமா? த்ரிவிக்ரமனாக வளர்ந்து நின்ற உன் ரூபத்தை பலி பார்க்கவில்லையா என்ன? ஹே லட்சுமிலோலனே (அபுஜினல்ல), மிகப்பெரிய உருவம் கொண்டவனே, என் தகுதிக்கு ஏற்ப, அணுவாகவே பூஜிக்கட்டுமா?. உன் மகிமை மிகப் பெரியது. ஹே நீலமேகஷ்யாமனே (கனஸத்ருஷ), நீ அனந்த குணங்களின் இருப்பிடமாக இருக்கிறாய். உன்னை என்னவென்று பூஜிப்பது என்றே எனக்குத் தெரியவில்லை.

ஹே தேவதாவ்ருந்த வந்தித பாதனே | (அனிமிஷரீஷ). லட்சுமி பிரம்ம வாயு கருடாதி தேவதைகள் அனைவரும் ஓரிடத்தில் சேர்ந்து, உன் மகிமைகளை கோடி பாகமாகப் பிரித்து, அதில் ஒரு பாகத்தை மறுபடி கோடி பாகமாகப் பிரித்துப் பார்த்தாலும், அதில் ஒரு அம்சத்தையும் முழுமையாக அறிவதற்கு அவர்களால் சாத்தியம் ஆகவில்லை. இப்படி இருக்கையில், அனந்த குணங்களைப் பற்றி அறிவதற்கு எப்படி சாத்தியம்?

16. ஆத்ம சமர்ப்பண சுளாதி

பகவந்தனே. நீ அணு, மஹத் என இரண்டுமே இல்லாதவன் ஆனாலும், அனைத்து மானவ, பிரம்மாதி (வனஜ தனுஜ) தேவதைகளின் தேகத்தில் இருந்து, அவர்களை ஒரு நொடிகூட பிரியாமல், செல்வத்தை காவல் காத்திருக்கும் பாம்பைப் போல, எந்த ஒரு பிரதிபலனையும் எதிர்பார்க்காமல், நம்மை காக்கும், சர்ப்பஷயனனான விஜயவிட்டலனே.

உன் அணு ரூபமோ, கன ரூபமோ நான் இதுவரை கண்டதில்லை. நீ அவ்யக்த ஸ்வபாவன். தேவையான சாதனைகளை செய்வித்து, உன்னைக் காண்பதற்குத் தேவையான திவ்யத்ருஷ்டியைக் கொடுப்பாயாக.

<u>2. புருஷர மோஹிஸுவ பரமஸுந்தரதேவ...</u>

உலகில் புருஷர்கள் பெண்களை மோகிப்பது உண்டு. ஆனால், உன்னை பிரம்மாதி புருஷர்களே மோகிக்கிறார்களே? அத்தகைய பரம சுந்தர தேவன் நீ. புருஷோத்தமன் நீயே. பும்-ஷக்தியைக் கொண்டு, புருஷள் எனப்படும் லட்சுமிதேவிக்கும் நீயே பிரதான புருஷன். உண்மையாக புருஷ என்றால் நீ ஒருவனே ஆவாய்.

உலகத்தையே படைக்கும் புருஷன் பிரம்மதேவன். அவனுக்கும் நீயே ஜீவ பிரதனாக இருக்கிறாய். 18 புராணங்களில் இதுவே சொல்லப்பட்டிருக்கிறது. நீயே பரிபூர்ண குணமயன். நீயே த்ரிபுராரியான சிவ, புரந்தர, இந்திராதி தேவதைகளுக்கும் புருஷார்த்தத்தை கொடுப்பவன்.

புருஷாகார - மிருக உருவம் உள்ள புருஷ மிருகத்தை அழைத்து வந்த பீமசேனனுக்கும் பிராணனாக இருக்கிறாய்.

கந்தர்வ, யக்ஷ, ராக்ஷஸ, கிம்புருஷ ஆகியோர்களால் வணங்கப்படுகிறாய். பரமபுராதன புருஷனே, புருஷ ரூபத்ரய தரித்த நீ 'நாராயணோவா இதமக்ர ஆஸீத்' என்று சொல்வதைப் போல ஸ்ருஷ்டிக்கு முன்னரே பிரளயோதகத்தில்.

<u>3. பொடவிஸிம்ஹாஸன, கொடெய ககன நினகெ...</u>

இத்தகைய உன்னை பூஜிப்பதற்கு என்னிடம் இருக்கும் பொருட்கள் போதாது. அதற்காக இவ்வாறு சிந்திக்கிறேன்.

பூமியே நீ அமரும் சிம்மாசனம். (ஸிம்ஹாசனம் சமர்ப்பயாமி). விசாலமான ஆகாயமே குடை. கங்காதி அனைத்து தண்ணீரும் உனக்கு அபிஷேக தண்ணீர். பசுக்கள் கொடுக்கும் பால் அனைத்தும் உனக்கு பால் அபிஷேகம். காட்டில் கிடைக்கும் அனைத்து துளசியும் உனக்கு அர்ப்பிதம் ஆகட்டும். செடி, கொடிகள் கொடுக்கும் பூக்கள் அனைத்தும் உனக்கு புஷ்ப மாலை. நான் பேசுவதெல்லாம் உனக்கான பூஜா மந்திரங்கள் ஆகட்டும். சூர்ய, சந்திரரே உனக்கு விளக்குகள். நட்சத்திரங்களே ஆபரணம். அனுபவிக்கும் விஷய பதார்த்தங்கள் அனைத்தும் உனக்கு சமர்ப்பிக்கும் காணிக்கை. காட்டுத்தீயே உனக்கான மங்களாரத்தி.

இவ்வாறு உலகில் இருக்கும் பொருட்களாலேயே உன்னை பூஜிக்கிறேன். இப்படியே பூமியில் கிடைக்கும் அனைத்து பொருட்களையும் ஸ்ரீஹரிக்கு அர்ப்பணம் செய்தால், பகவந்தன் மிகவும் மகிழ்கிறான். ஒரு சிறிய பால் அபிஷேகத்திற்கு, பாற்கடலையே அளிக்கும் கருணாமயியான ஸ்ரீஹரிக்கு அனைத்து பொருட்களையும்
அர்ப்பித்தால் மகிழமாட்டானா?

இவ்வாறு விஷய பதார்த்தங்களில் வியாபித்திருக்கும் பகவந்தனுக்கு அர்ப்பிப்பதே மகாபூஜை எனப்படுகிறது.

4. ஏளுவாகலி முக்கிபீளுவாகலி ஹரடெ...

பகவந்தனின் ஸ்மரணை நிரந்தரமாக அனைத்து காலங்களிலும் இருக்க வேண்டும். அமர்ந்து எழும்போது, குனிந்து விழும்போது, லௌகிக அரட்டை காலத்தில், நாட்டு நடப்புகளை கேட்டும்போது, நாட்டை ஆளும்போது, பாரத்தை தூக்கிக் கொண்டு நடக்கும்போது, தர்மத்தை ரட்சிக்கும் பொருட்டு பூமியில் விவசாயம் செய்யும்போது, சுகமாக வாழும்போது, கால அகாலத்திலும் மனதில் சிந்திக்கும்போதும், ஸ்ரீஹரி நமக்கு நற்கதியைக் கொடுக்கும் தயாநிதி என்று சிந்தித்தவாறு ஒரு நொடி விடாமல் நாக்கில் ஹரி நாமத்தை சொல்லியவாறு இருக்கும் மனிதனை, ஆலயிலையில்

படுத்திருக்கும் முகுந்தன், குழந்தையின் அழுகையினை தாய் சமாதானம் செய்வதைப் போல ஓடி வந்து காக்கிறான்.

5. எத்தண ஸமர்ப்பணெ எத்தண ஸமர்ப்பணெந்து...

அனைத்து இடங்களிலும் வியாப்தனான (எத்தலித்த ஹரியு) ஸ்ரீஹரிக்கு, எங்கிருந்து எங்கு வரை சமர்ப்பணம் செய்வது?. அனைத்து இடங்களிலும் இருப்பவனான ஸ்ரீஹரி நாம் கொடுப்பதை ஏற்றுக் கொள்வானா? எப்போதும் திருப்தி அடைபவனான அவன், நாம் கொடுத்ததால் திருப்தி அடைகிறான் என்றால் என்ன? ஆகிய சிந்தனைகளால் மனதினை குழப்பிக் கொள்ளத் தேவையில்லை. ஸ்ரீஹரிக்கு தேவையானது வஸ்து / பொருட்கள் அல்ல. அந்த பொருட்களின் பின்னால் இருக்கும் பக்தியே அவனுக்குத் தேவையானதாகும். நித்ய பக்தி இல்லாமல், அருகில் இருக்கும் அனைத்து பொருட்களையும் சேர்த்துக் கொண்டு, இவை அனைத்தும் உனக்கு சமர்ப்பணம் என்றால், ஸ்ரீஹரி மெச்சுவதில்லை.

அதற்குப் பதிலாக சுத்தமான சித்தத்துடன், அங்கேயே இருந்த தண்ணீர் உனக்கு அர்ப்பிதம் என்று சொல்ல, சித்தஜ-பிதன் மெச்சி, தன் சித்தத்தில் அதனை ஸ்வீகரித்து, சமர்ப்பிக்கப்பட்ட பொருட்களுக்கு நூற்றுக்கணக்கான மடங்காக அதனை திருப்பிக் கொடுத்து அருளும் தயாநிதி. எங்கிருந்தாலும் பக்தியுடன் கிருஷ்ணார்ப்பணம் என்றால், தன் பக்தர்களை கை கொடுத்து காக்கிறான்.

6. அச்சுகர்ப்பிதவெந்து தாஸரெனலு...

புரந்தரதாசர் தம் வீட்டில் நைவேத்யம் செய்யாமல், குருகளின் வீட்டிற்கு வந்திருந்தார். சமையல் செய்த கஞ்சி உள்ளிருந்து வெளியே வந்து கொண்டிருந்தது. அதையே அவர் கிருஷ்ணார்ப்பணம் என்று அர்ப்பித்தார். அவருடைய பக்திக்கு மெச்சிய ஸ்ரீகிருஷ்ணன், தான் அதனைக் குடித்தான் என்பதைக் காட்ட, தன் வாயிலிருந்து கஞ்சி வெளிவருமாறு செய்து காட்டினான்.

***

---

17 வாயுதேவரின் சுளாதி

ராகம்: ஆனந்தபைரவி. த்ருவ தாள

ப்ராண அபான வ்யான ஸமான உதா3ன
ஞானமய ஸத்வஷரீர ஸமீர
ஆனந்த3ஸாந்த்3ர ஹரிநந்த3ன பவமான
மானத3பி4மானியெ வாணிப்ரிய
நீனெ ஸர்வரல்லி கீ3ர்வாணரிகெ3 மொத3லு
நானா ப்ரகார ஜீவிக3ளாதா4ர
ஸ்னான ஜப தப ஹோம மௌன தீர்த்த2யாத்ரெ
நீ நடெ3ஸலத3ரிந்த3 ஸித்3தி4பவு
நீனெல்லி அல்லி ஸ்ரீநாராயணனு இப்ப
ஏனெம்பெ3 நின்னய கர்த்ருதனகெ
கோணி விகோணியல்லி ஸர்வ வ்யாபார பஞ்ச
ப்ராணஜனக வாயு நின்னத3ய்ய
தா3னமாமரநரர மத்4ய பந்து3 ஆ கோ4ரவிஷ2
பானவன்னு மாடி3த3 ப்ரப4ஞ்சன
தீ3னவத்ஸல நம்ம விஜயவிட்டல நங்க்4ரி
ரேணு ஷிரத3ல்லி இட்ட த்3யுரமண ||1

மட்ட தாள

ஸுரரு தம்மொளு தாவெ நெரெது3 யோசிஸித3ரு
மருதனு நமகெ3ல்லி ஹிரியனு அஹுதெ3ம்ப3
க3ருவிகெதனவேனு ஸரி ஸரி ப3ந்தா3கு3
த்தரவ நாடு3திரெ, ஹரி அந்து3 ஒந்து3
ஷரீரவன்னு மாடி3 பரிபரிய த
த்வர ஒளகெ3 போ1கி3ஸித3 மருதன ஸஹவாகி3
புருஷ நாமக தே3வ விஜயவிட்டலரேய
ஸுரரிகெ3 ப்ராணனிகெ3 பரிக்ஷிஸி தோரித3 ||2

த்ரிவிட தாள

சரணதி3ந்த3லி இந்த்3ரஸூனு போக3லு ஹௌவ

கரக3ளிந்த3லி த3க்ஷ போக3லு கரஹீன
மரளெ நயனதி3ந்த3 பா4னுபோக3லு குருட3
த1ரணி மக்களு போகெ3 பரிமளவாக3து3
மரண போக3லு ருசியெ தோரது3 காணோ
மருதஸக2னு போகெ3 மூகனாஹ
தெரளி தி3க்தே3வதெக3ளு போகெ3 கிவுட3னு
தரணி ஸ்வாயம்பு4 போக3லு அல்லி யோனில்ல
மருதனு போக3லு மை ஸ்மரணெயு இல்ல
க3ருட3 சேஷ ருத்3ர போக3லு ஹானில்ல
இரதெ3 க3ணேஷாதி3 போகெ3 அன்னிஸலில்ல பெணனெந்து3
வரமுக்2யப்ராண ஸ்தா2னதி3ந்த3லி வேக3
தெரளி போக3லு தே3ஹ பெணனெந்தெ3னிஸிது
பரிக்ஷிஸி திளிது3 நாசிகெ உள்ளவராகி3
மரளெ ப்ரவேஷிஸி ஆ தே3ஹ ஏளதி3ரெ அந்து3
ஹரிகெ3 கேவல முக்2யதா3ஸ முக்2யபிராண
திருகி3 ப3ந்து3 போக3லு சேதனாகெ3
ஸுரரு தம்மொளு தாவு நோடி3 கொள்ளுதலெ
மருத தே3வனெ நமகெ3 ஹிரியனெந்து3
கரவ முகி3து3 நிந்து3 ஜயவெந்து3 கொண்டா3டி3
கு3ருவெ நீனெந்து3 பவனன கொண்டா3டெ3
மிருக3வாம்ப3ரத4ர விஜயவிட்டலன
ஷரணரொளகெ3 முக்2ய ஷரண ஈதனு காணோ ||3

அட்ட தாள

தந்தெ3 ஈதனு காணோ, தாயி ஈதனு காணோ
ப3ந்து3 ப3ளக3 ஸர்வார்த்த2வு ஈதனு
ஹிந்தெ3 முந்தெ3 நமகா3தா4ர ஈதனு
எந்தெ3ந்தி3கெ3 ஸம்ப3ந்தி4க3 நீதனு
சந்த3த3 ரஸாயன போ4க்தனு ஈதனு
இந்த்3ரியங்க3ளிகெ3 ப்ரதிதி3ன நியாமக
நந்த3மாருதி நம்ம விஜயவிட்டலனங்க்4ரி
நிந்தி3ரார்ச்சிப க3ரளப4ஞ்சன தே3வ ||4

17 வாயுதேவரின் சுளாதி

ஆதிதாள

தரணி அயனுத்தர கௌ3ரபக்ஷ ஹக3லு
நர பூ4தவாயு வ்யோமாதி3யல்லி நீனெ
இரளு வல்லபெ4 த3க்ஷிணாயன க்ருஷ்ணபக்ஷ
இரலு ஸ்த்ரீ தேஜாதி3யல்லி நின்ன ரமணி
பரிபூர்ணவாகி3 நீவிப்3ப3ரு ஸர்வத3
ஹரி ஆக்3ஞெயிந்த3 வ்யாபார மாள்புது3
கரண ஷுத்3தி4யல்லி ஈ பரி திளித3வரிகெ3
து3ரிதக3ளோடி3ஸி வர பத3வியனீவெ
ஸரிகா3ணெ நின்ன அத்3பு4த லீலெகெ3 நானு
எரகி3 நமோ நமோ எம்பெ3 மருத ப்ரதா4னனெ
ஸிரியரஸ விஜயவிட்டலன்ன நெச்சித3
பரமப4க்தனு நீ எனகெ3 ப4ரத3 ப4க்தி கொடு3 ||5

ஜதெ

மூரவதாரத3 கு3ருவெ ஸூரதருவெ
வாரவாரக்கெ விஜயவிட்டலன்ன ப்ரதிபி3ம்ப3 ||6

***

<u>1. ப்ராண அபான வ்யான ஸமான உதான…</u>

உபநிஷத்களில் வாயுதேவரின் மகிமைகள் அற்புதமாக வர்ணிக்கப்பட்டுள்ளன. தலவகார, சாந்தோக்ய, ஷட்பிரஷ்ன, ப்ருஹதாரண்யக, ஐதரேய இந்த ஐந்து உபநிஷத்களிலும் அனேக இடங்களில் வாயுதேவரின் மகிமை வர்ணிக்கப்பட்டுள்ளது.

தமேவைகம் ஜானத ஆத்மானம், அன்யாவாசோ விமுஞ்சத என்னும் அதர்வண வாக்கு, ஸ்ரீஹரியைத் தவிர அபர-தத்வங்களை தூர விலக்குங்கள் என்று சொல்லியிருந்தாலும், ஸ்ரீஹரியின் சாட்சாத் பிரதிபிம்பனான வாயுதேவனின் மகிமை தெரியாமல், அவை பூர்ணமாவதில்லை. வாயுதேவன், பிராண அபான வியான உதான ஸமான ஆகிய ரூபங்களால் தேகங்களின் உள்ளே இருந்து, மூச்சு விடும் செயல்களை செய்விக்கிறான்.

பிராணாதி பஞ்சரூபங்கள் மட்டும் அல்லாமல், நாக கூர்ம க்ருகல தேவதத்த தனஞ்சய என்னும் வேறு ஐந்து ரூபங்களாலும் நம்மில் இருந்து செயல்களை செய்விக்கிறான்.

ஹ்ருதய - பிராண, குதத்தில் - அபான, நாபி - ஸமான, கழுத்தில் - உதான; சர்வ சரீரத்திலும் வ்யான எனப்படுகிறான்.

கண் திறக்கும்போது நாகனும்; கண் மினுக்கும்போது கூர்மனும்; தும்மும்போது க்ருகலனும்; கொட்டாவி விடும்போது தேவதத்தனும்; தங்கள் செயல்களை செய்கின்றனர்.

நாம் தின்ற ஆகாரத்தை, வாயுதேவர், ஸ்தூல மற்றும் சூக்ஷ்ம என்று இரு பாகங்களாக பிரிக்கிறார். குடித்த தண்ணீரை நாபியின் மேல் வைத்து, ஸமானாக்னியை எரித்து, தண்ணீரை கொதிக்க வைத்து, உண்ட ஆகார பதார்த்தங்களை கொதிக்கும் தண்ணீரின் மேல் வைத்து; மறுபடி வேக வைத்து, ஜீர்ணமாகுமாறு செய்யும் மகானுபாவனுக்கு நாம் என்ன கைம்மாறு செய்ய முடியும்?

ஞானமய:
ஸ்ரீமத்வர் பிரம்மஸூத்ரங்களுக்கு சுத்தமான நான்கு பாஷ்யங்களை இயற்றினார். தாமே பண்டிதர் என்று அறிந்திருந்த மக்களை வாதத்தில் வென்றார். இத்தகைய முக்கிய பாண்டித்யத்திற்காகவே குருகள் வேதாந்த சாம்ராஜ்யத்தில் 'ஆனந்ததீர்த்த' என்று அழைக்கப்பட்டார். பூர்ணபிரக்ஞ என்பது ஆசிரம நாமம் என்றால், ஆனந்ததீர்த்த என்பது பீட நாமம்.

வித்யாபிமானி பாரதிபதியான ஸ்ரீமத்வர், அனேக சபைகளில் அனேக சாஸ்திரங்களில் எவ்வித வித்யையில் வாதம் செய்தாலும், அந்த அனைத்து வித்யைகளிலும் அவர்களை வென்றார்.

ஒரு யோகி, 30 வராஹ மந்திரத்தை கூறினான். ஆசார்யர் அவன் கூறிய 30 மந்திரங்களைக் கூறி, அவனுக்கும் தெரியாதிருந்த மேலும் பல வராஹ மந்திரங்களைக் கூறினார். ஸூசிதேஷ்டேவ ஸர்வேஷு மத்வேனாப்யதிகேஷ்வபி || 5/48.

விஷ்வ என்னும் சொல்லுக்கு 100 அர்த்தங்களைக் கூறி விஷ்வக்ஞ எனப்பட்டார்.

அனைத்து விஷயங்களையும் அறிந்த இவரை ‘ஸர்வவித் யதி’ என்று புகழ்ந்தனர். ஸர்வதா சதஸி ஸர்வபுதானாம் ஸர்வவித் யதிரிதி ப்ரதிதோऽபூத் ||

த்ரிவிக்ரம போன்ற சிறந்த பண்டிதர்களை 15 நாட்கள் வாதம் செய்து, தோற்கடித்து சிஷ்யராக ஆக்கிக் கொண்டார்.

ஸத்வ ஷரீர:

ஸத்வமய ஷரீரம் என்று பொருள். ஸாத்விகர் அனைவரும் ஸத்வ ஸ்வரூபத்திலேயே இருக்கின்றனர். ஆனால், பிரம்மவாயுகளுக்கு ப்ரக்ருதி பந்தனம் இருந்தலும், கார்யகாரி இல்லை ஆகையால், ஸ்வரூபத்தில் இருக்கும் ஸத்வகுண வ்யக்தமாகவே இருக்கிறது. வாயுதேவனின் புற சரீரமும் ஸத்வ ப்ரசுரமே, ஆனாலும் பஞ்சபூதங்களின் சம்பந்தமும் இருக்கிறது. ஸத்வர்களைவிட மகாஸத்வம் உள்ளவர்கள் வாயுபிரம்மதேவர்கள்.

இந்திராதிகள் ஸாத்விகர்கள். அவர்களைவிட ஸாத்விகர்கள், கருடசேஷ ருத்ரர்கள். அவர்களைவிட பாரதி சரஸ்வதிதேவியர் ஸாத்விகர்கள். இவர்களைவிட ஸாத்விகர் பிரம்மவாயுதேவர். அதாவது, அவர்களைவிட ஸூக்ஷ்ம ஸத்வ உள்ளவர்கள். பிரம்ம வாயுகளின் பிரம்மாண்டத்திற்குள் உண்டான சரீர பாஞ்சபௌதிகமானாலும் சூக்ஷ்ம ஸ்ருஷ்டியில் உண்டான சரீரமான மஹத்தத்வ நிர்மிதமானது. ருத்ராதிகளுடையது அஹங்கார நிர்மிதமானது. மஹத் தத்வத்தில் ஸத்வமே அதிகமாக இருக்கிறது. இந்த காரணத்தினால் சத்வஷரீர என்கிறார்கள்.

ஸமீர:

ஸம் - ஸம்யக் ஈரயதே ப்ரேரயதீதி ஸமீர: || பிராணாதிகளால் சகல ஜகத்தின் செயல்களை நடத்துகிறான்.

பிராணாதிகளில் ஐந்திலும் ப்ர+அன, அப+அன, வி+அன, ஸம்+அன, உத்+அன என்று அன என்னும் சொல் சேர்ந்திருக்கிறது. அன

சேர்ந்ததால், இந்த சொற்கள் சர்வசேஷ்டாதாரகமானவை என்று சொல்கிறது. வாயுதேவன் ஸ்வரூப, லிங்க, அனிருத்த, ஸ்தூல என்னும் நான்கு தேகங்களில் நான்கு தேகங்களால் ஆகும் அனைத்து செயல்களையும் செய்கிறார். ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நொடியும் நற்புத்தியைக் கொடுப்பவனும், சர்வகர்ம கர்தனும், சர்வகர்ம ஸ்வாமியும் வாயுதேவனே ஆகியிருக்கிறான். இதனால் சமீர என்று அழைக்கப்படுகிறான்.

ஆனந்த ஸாந்த்ர:

வாயுதேவருக்கு அவதார ரூபங்களுக்கு என்றும் எந்த விதமாகவும் துக்கங்கள் வருவதில்லை. ஆனந்தபூர்ணனான ஹரியின் பிரதிபிம்பனுக்கு சிறிதளவாவது துக்கம் உண்டா? ஹனும பீம மத்வ இந்த மூன்று ரூபங்களில் என்றும், எங்கும் துக்கத்தை அனுபவித்த சந்தர்ப்பங்களே இல்லை. மற்றவர்களுக்கு சுகத்தையும், ஆனந்தத்தையும், மோட்சத்தையும் கொடுப்பவன் ஆகையால், 'ஸுகதீர்த்த' என்னும் காரணப் பெயர் வந்திருக்கிறது.

ஹரிநந்தன:

சங்கர்ஷண ரூபி மற்றும் ஜயாதேவியர்கள் மூலமாக அவதரித்த சூத்ர நாமகன், வாயுதேவன். 'ஆத்மபவ' என்பது ஸ்ரீஹரியின் பெருமைக்குறிய புத்திரன் என்பதை குறிக்கிறது.

பவமான என்னும் ரூபத்தினால் வாயு ஸாத்விக ஜீவர்களின் சரீரத்தில் இருக்கிறான். பவமான என்னும் பெயரால் அனிருத்த சரீரத்தில் இருக்கிறான். ஸூக்ஷ்ம தேஹகத: ஸோऽபி பவமானேதி ஜ்யோசதே ||.

பக்தர்களை பவித்ரமாக்கி, ஆனந்த சாகரத்தில் மூழ்க வைக்கிறான் ஆகையால், பவமான என்று அழைக்கப்படுகிறான்.

மான என்றால், ஞான, லய, மரியாதை, உற்பத்தி, சங்க்யானங்கள் என்னும் அர்த்தங்கள் இருக்கின்றன. இவற்றிற்கெல்லாம் அபிமானி ஆனவனே, வாயுதேவன்.

ஸூக்ஷ்ம ஸ்ருஷ்டியில்

* மாயா வாசுதேவரிடமிருந்து பிரம்மதேவன் பிறந்தார்.

17 வாயுதேவரின் சுளாதி

---

* சங்கர்ஷண - ஜயாதேவியிடமிருந்து சூத்ர நாமக வாயு பிறந்தார்.
* ப்ரத்யும்ன க்ருதியிடமிருந்து ஸ்ரத்தா பாரதி என்னும் இரட்டையர் பெண்கள் பிறந்தனர்.

இவர்கள் இருவரையும் முதலில் பிறந்த பிரம்ம மற்றும் ஸூத்ர திருமணம் புரிந்தனர். இதனால், வாயுதேவர், பாரதிபதி ஆனார். பாரதியே அடுத்து சரஸ்வதி ஆகிறார் ஆகையால், வாணிப்ரிய என்ற பெயரும் இவருக்கு வந்தது.

நீனே ஸர்வகீர்வாணரிகெ மொதலு:
இந்த அம்சம் ஷட்பிரஷ்ன உபநிஷத்தில் வரும் விளக்கத்தில் இருக்கிறது.

ஷரீரத்தில் இருக்கும் தாரக பிரகாஷக தேவதைகளெல்லாம் - இந்த சரீரத்தினை நாமே முக்கியமாக தரித்திருக்கிறோம். நாமே ஷப்தாதி விஷயங்களை செய்விக்கிறோம் என்று கர்வத்துடன் இருந்தனர். இவ்வாறு அஹங்காரி தேவதைகளுக்கு, வாயுதேவர், 'தேவதைகளே. மக்களின் சரீரத்தில் பிராணாபானாதி பஞ்சரூபங்களால், வாகாதி ரூபங்களாலும், நானே இருந்து, இந்த சரீரத்தை தரிப்பவனும், நடத்துபவனும் ஆகிறேன்' என்றார்.

தான் வரிஷ்ட: ப்ராண உவாச |
அஹமே வைதத் பஞ்சதாSSத்மானம் விபஜ்ய ஏதத் பாணமவஷ்டப்ய விதாரயாமீதி ||

என்றபோது, அவர்கள் யாருக்கும் நம்பிக்கை வரவில்லை. அவர்களுக்கு நம்பிக்கையை கொண்டு வருவதற்கு, வாயுதேவர் இந்த சரீரத்தை விட்டுச் சென்றார். அப்போது தேவதைகளுக்கு அந்த சரீர தாரணை செய்வதாகட்டும், சரீரத்தில் இருப்பதற்கும்கூட அவர்களால் ஆகவில்லை. வாயுதேவர் மறுபடி உள்ளே நுழைந்தார். உடனே அவர்கள் அனைவரும் முன்னர் இருந்த சாமர்த்தியத்தினை பெற்றனர். இதனால், தேனீக்கள், ராணித் தேனியை பின்பற்றி, ராணி வெளியே செல்லும்போது தாமும் சென்று, ராணி திரும்ப கூட்டிற்கு வரும்போது, தாமும் வருவதைப் போல, முக்யபிராணனுக்கேற்ப தேவதைகளின் பிரவேசம் -

வெளியேற்றம் இருக்கிறது. இவ்வாறு முக்யபிராணனே சிறந்தவன் என்று தேவதைகளுக்கு தெரிந்தது.

வாயுதேவனே. அனைத்து தேவதைகளிலும் இருந்து, சூர்யாதி நாமகனாக, சூர்யாதி குண க்ரியைகளை செய்பவன் ஆகிறாய். சூர்யாக்னி ஸ்வரூபனாகி சுடத் தக்கவனாகவும், பர்ஜன்ய ரூபனாக மழை பெய்விப்பவனாகவும், ப்ருதிவி ரூபனாக அனைத்து பிராணி தாரகனாகவும் நீனே ஆகிறாய் - என்று அனைத்து தேவதைகளும் வணங்கினர். இதனால், வாயுதேவனே சர்வ தேவதைகளைவிடவும் சிறந்தவனும், மூத்தவனும் ஆனவன் என்று தெரிய வருகிறது.

இதனால், பற்பல ஜீவிகளுக்கும் ஆதார தூணாக இருப்பவன் முக்யபிராணனே. பிராணிகள் செய்யும் ஸ்னான, ஜப, தப, ஹோம, மௌனாதிகள், தீர்த்த யாத்திரை முதலான அனைத்து வியாபாரங்களையும் முக்யபிராணன் செய்தால், நாம் செய்கிறோம்.

நீனெல்லி அல்லி ஸ்ரீநாராயணனிப்ப:

உபநிஷத்தில் இவ்வாறு இருக்கிறது:
கஸ்மின்வஹமுத்க்ராந்தே உத்க்ராந்தோ பவிஷ்யாமி |
கஸ்மின் வா ப்ரதிஷ்டேதே ப்ரதிஷ்டாஸ்யாமீதீஸ ப்ராணமஸ்ருஜத ||

ஜீவர்களின் சரீரத்திலிருந்து யார் வெளியேற வேண்டுமென்றாலும், நானும் வெளியேற வேண்டும். தேகத்தில் யார் இருக்கவேண்டுமென்றாலும், நானும் இருக்க வேண்டும் என்று சிந்தித்து, ஜீவர்களின் தேகத்திற்கு தன் பிரவேஷ - வெளியேற்றங்களுக்கு மூலமாக முக்யபிராணனை படைத்தான். வாயுதேவனே ஸ்ரீஹரியின் வாஸஸ்தானம்.

ப்ரதானம் தாம விஷ்ணோऽஸ்து ப்ராண ஏவ ப்ரகீர்த்தித: |
தேஹேऽபி யத்ர பவஸ: அத்ர ஹரிர்யதோऽஸௌ |
தத்ரைவ வாயுரிதி வேதவச: ப்ரஸித்தம் ||

என்று இதன் தாத்பர்யமே மேலே சொல்லப்பட்டிருக்கிறது.

ஸ்ரீபாதராஜர், தம் மத்வநாமாவில்:
ஆவவனு தேஹதொளகிரலு ஹரி தா நெலெஸிஹனு ।
ஆவவனு தொலகெ ஹரி தா தொலகுவ ।। என்கிறார்.

ஜகன்னாததாசரும்:
பரிஸர நீனிரெ ஹரி தா நிஹனு, இல்லதிரெ இரஹ । என்று ஹரிவாயுகளின் சம்பந்தத்தை அழகாக நிரூபித்திருக்கிறார்.

கோணி விகோணியல்லி ஸர்வவ்யாபார:
முக்யபிராணன் தினமும் ஜீவர்கள் மூலமாக, அவர்கள் செய்வதான அனைத்து கர்மங்களையும் தானே செய்து, செய்விக்கிறான்.

சர்வஜீவர்களின் சர்வகர்மங்களில், அனைத்து விதமான அதிபத்யத்தையும் கொண்டிருப்பவன். நம்மில் இருந்து, கர்மங்களை செய்யும் தத்வாபிமானிகளில் நின்று, முக்கிய பிரேரகனாக இருக்கிறான். ஸாத்விகர்கள் தம் கர்த்ருத்வாபிமானத்தை விட்டு, ஸ்ரீஹரியில் சமர்ப்பிப்பது இவன் மூலமாகவே. கர்மத்தின் பலமான ஞான பக்தி வைராக்யாதி ஹரிபிரஸன்னதைகளுக்கு பிராணனே முக்யனாக இருக்கிறான்.

ஸர்வகர்ம ஸ்வாமியும், ஸர்வகர்ம ஸமர்ப்பகனும், ஸர்வகர்ம பல போக்த்ருவும், போஜயித்ருவும், ஸர்வகர்ம ப்ரேரகனும், ஸர்வகர்ம உத்போதகனும், ஸர்வகர்ம சாட்சியும், ஸர்வகர்மங்களில் இருக்கும் பகவத் ரூபங்களின் உபாசகனும் பிராணதேவனே. இவனின் செயல்கள் இல்லாமல் எந்தவித செயல்களும் நடக்காது. உச்சாவசா யேன சமஸ்த சேஷ்டா: ।।

பிராண அபான வ்யான உதான சமான என்னும் பிராணனின் மக்கள். அல்லது பிராணனின் ஐந்து ரூபங்கள் ஆகும். பரபுருஷனிடமிருந்து, 10 விதமான விராட்பிராணன் பிறந்தான். பிராணாபானாதி ஐந்து மற்றும் நாக கூர்மாதி ஐந்து என 10 வித பிராணன்.

தானவாதுரர மத்யெ பந்து ஆகோர விஷ:
பாற்கடலைக் கடையும் காலத்தில், காலகூட விஷம் வந்தபோது வாயுதேவன் பகவந்தனின் ஆணைப்படி, அதனை தன்

உள்ளங்கையில் வைத்து ஊதி, அதன் தீவிரத்தைக் குறைத்து, ருத்ரதேவனுக்குக் கொடுத்தான். இதனை குடித்து, ருத்ரன் மூர்ச்சையானான். வாயுதேவனோ, அதனை ஒரு தங்க பாத்திரத்தில் வைத்து, அதன் சாமர்த்தியத்தை குறைக்காமல் அப்படியே குடித்தான். அப்படியே ஜீர்ணித்தும் கொண்டான். காலகூட குடித்த வாயுதேவனுக்கு எந்தவொரு பிரச்னையும் ஆகவில்லை. விகாரோ ந பபூவ வாயோ: ||. வாயுதேவன் விஷம் குடித்தாலும் அமிர்தனாக இருந்தான்.

ப்ரபஞ்சன:

முக்யபிராணன் தேஹேந்திரியாதி தாத்விக தேவதைகளையும், தாத்விக அசுரர்களையும் நியமிக்கிறான். நம் தேகத்தில் காம க்ரோதாதிகளின் தந்தையும், துஷ்கர்மங்களை நடத்துபவனும் ஆன தைத்யாபிமானிகள் இருக்கின்றனர். தாத்விக தைத்யர்கள் காலநேமி, விப்ரசித்தி, கலி ஆகியோரே அவர்கள்.

முக்யபிராணதேவர் தேவ தைத்யர் என்னும் இரு தாத்விகருக்கும் முக்கிய பிரேரகர் ஆவார். தைத்யர்கள் என்னும் இரு தாத்விகர்களுக்கும் பிரதான ப்ரேரகர் இவரே. தைத்யர்களின் மனதில் இருந்து, அவர்கள் பாவ கர்மங்களில் ஈடுபடுமாறு செய்கிறார். சாத்விக ஜீவன் என்றால், அவர்களை புண்ணிய கர்மங்களில் ஈடுபடுமாறு செய்கிறார். இவ்வாறு சாத்விகர்களில், பாவத்தை செய்யும் முயற்சிகளை நிறுத்தி, பக்தர்களை காப்பாற்றுவதால் முக்யபிராணன் 'பிரபஞ்சன' என்று அழைக்கப்படுகிறான்.

ஸர்வதாத்விகாஸுர பஞ்சகேன, ததா தத்ப்ரேரணா ப்ரயுக்த |
அசேஷ துர்மத பஞ்சகேன, அத ஏவ ப்ரபஞ்சன வாச்யேன ||
-- ப்ராத: ஸங்கல்ப கத்ய.

பக்தர்களை கருணையுடன் பார்க்கும் ஸ்ரீமன் நாராயணனின் பாதங்களில் தன் தலையை வைத்து, இந்த காரியங்கள் அனைத்தும் உன்னுடையது என்று அர்ப்பணம் செய்கிறான். ஸமர்ப்ய க்ருத்யானி க்ருதி க்ருதானி வ்யாஸாய பூம்னே ||

2. ஸூரரு தம்மொளு தாவே நெரெது யோசிஸிதரு...

தேவதைகள் அனைவரும் தமக்குள் அகங்காரத்தினால் நானே சிறந்தவன், நீ அல்ல என்று ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக்கொண்டு, அதன் முடிவுக்காக பிரம்மனிடம் சென்றனர்.

பிரம்மதேவர்: உங்களில் யார் வெளியே வந்தால், சரீரம் சவம் போல அமங்கலம் ஆகிறதோ, அவனே சிறந்தவன் - என்றார். கண், காது, மூக்கின் தேவதைகள் வெளியே வந்தனர். இதனால், தேகத்திற்கு எதுவும் தொந்தரவு ஆகவில்லை. இறுதியாக, பிராணன் வெளியே வந்தபோது, தேகத்தில் இருக்கும் தேவதைகளுக்கு அதிக தொந்தரவு உண்டாயிற்று.

யதைவோத்க்ரமணோத்யோகம் வாயுஷ்சக்ரே ஷரீரத: |
ததாதி ஸங்கடம் ப்ராப்தா: சக்ஷுராத்யபிமானின: ||

தேவதைகளுக்கு நானே இந்த சரீரத்தை கொடுக்கிறேன் - என்று கூறினாலும், மருதன் நமக்கு சமம் அல்ல என்று கர்வத்துடன் கூறியவாறு இருந்தனர். ஸ்ரீஹரியின் ஆணைப்படி பிரம்மன் ஒரு சரீரத்தை தயாரித்து, யார் இந்த சரீரத்திலிருந்து வெளியே வந்தபோது, சரீரம் விழுகிறதோ மற்றும் யார் நுழைந்தபோது சரீரம் எழுந்து நிற்கிறதோ, அவனே உங்களில் சிறந்தவன் என்றான். மருதன் அதில் நுழைந்தபோது, சரீரம் நின்றதால், இவ்வாறு பிராணதேவனே சிறந்தவன் என்று நிரூபிக்கப்பட்டது.

3. சரணதிந்தலி இந்திரஸூனு போகலு ஹௌவ...

யார் யார் வெளியே சென்றனர், அப்போது என்னென்ன ஆயிற்று என்று இந்த தாளத்தில் சொல்கிறார்.

1. சரணதிந்தலி இந்திர ஸூனு: பாதாபிமானியான ஜயந்த வெளிவந்தபோது, கால் விழுந்தது. ஆனால் அவன் இறக்கவில்லை.
2. ஹஸ்தாபிமானி தக்ஷ ப்ரஜாபதி வெளியேறியபோது, கையின் செயல்கள் நின்றன.
3. நேத்ராபிமானி ஸூர்யன் வெளியேறியபோது, குருடன் ஆனான்.

4. ஸூர்ய புத்திரனான (தரணி மக்களு) அஷ்வினி தேவதைகள், மூக்கிலிருந்து வெளியேறியபோது, துர்கந்த- ஸுகந்தத்தின் ஞானம் இல்லாமல் போனது.
5. நாக்கின் தேவதை வருணன் புறப்பட்டபோது, அறுசுவைகளின் ஞானமே ஆகவில்லை.
6. வாயு-ஸக அக்னி வாயிலிருந்து புறப்பட்டபோது, வாயிலிருந்து பேச்சே வரவில்லை.
7. காது தேவதை சந்திராதி தஷ திக்தேவதைகள், வெளியேறியபோது, செவிடன் ஆனான்.
8. மித்ர நாமக சூர்ய (தரணி) ஸ்வாயம்புவன், குஹ்யேந்திரியத்திலிருந்து வெளியேறியபோது, குஹ்யேந்திரியத்தின் செயல்கள் நின்றன.
9. அஹங்காரிக பிராண (மருதன்) புறப்பட்டபோது, உடம்பில் சைதன்யன் இல்லாததாக ஆனது.
10. மனோ நியாமகனான கருட சேஷ ருத்ரர் வெளியேறியபோது, மனதின் செயல்கள் நின்றன. யோசனையே இல்லாமல் போனது. தேகத்திற்கு எந்தவொரு பிரச்னையும் ஆகவில்லை.
11. ஆகாஷாபிமானி கணபதி வெளியேறியபோது, தேகத்திற்கு பிரச்னை எதுவும் ஆகவில்லை.
இவர்கள் அனைவரும் வெளியேறியபோதும், தேகம் - பிணம் ஆகவில்லை. ஆனால், பரமமுக்யபிராணன் தேகத்தை விடும்போதே, தேகம் விழுந்துவிட்டது.

மத்வநாமாவில் - பரம முக்யபிராண தொலகலா தேஹவனு அரிது பெணவெந்து பேளுவரு புதஜன - என்று இருக்கிறது. இவ்வாறு, தேவதைகள் வாயுதேவனின் சிறப்பினை, ஆளுமையை பரிசோதித்து அறிந்தனர். தம் செயலுக்கு வெட்கப்பட்டனர். ஆனாலும், நாம் அனைவரும் இறந்த தேகத்தில் நுழைந்தால், அது எழுமோ என்னவோ என்று மறுபடி சோதிக்க விரும்பினர்.

ஒவ்வொருவராக, அனைவரும் அந்த தேகத்தில் நுழைந்தனர். ஆனால், அந்த தேகம் எழவில்லை. முக்யபிராணர் அதில் நுழைந்த உடனேயே, அந்த தேகம் எழுந்து நின்றது. சுரர்கள் அனைவரும் தங்களை திரும்பத் திரும்ப பார்த்துக் கொண்டனர். நீயே எங்களைவிட சிறந்தவன், மூத்தவன் என்று வாயுதேவனிடம்

சரணாகதி அடைந்தனர். வாயுதேவனின் சிறப்பினை ஜயஜய என்று சொல்வதன் மூலம் உலகிற்குக் காட்டினர். அன்றிலிருந்து வாயுதேவனின் சேவையில், நான் முந்தி, நீ முந்தி என்று அனைவரும் முண்டியடித்தனர்.

இந்த சம்பவத்தினால், வாயுதேவர் லக்ஷ்ம்யாத்மக பீதாம்பரதாரி ஸ்ரீவிஜயவிட்டலனின் தாசர்களில் முக்கிய தாசன் என்று அறியப்பட்டான். ஹனும பீம மத்வராகி அவதரித்தது கூட, ராமகிருஷ்ண வியாசரின் சேவையை செய்வதற்காகவே ஆகும்.

4. தந்தெ ஈதனு காணோ, தாயி ஈதனு காணோ...

ஸ்ரீஹரியே தந்தை தாய், உற்றார் உறவினர், சகோதரன் நண்பன், கல்வி, செல்வங்கள் ஆகிறான். பகவந்தனுக்குப் பிறகு, பிறப்பினைக் கொடுத்த தந்தை தாயைப் போல, பால், அன்னம் கொடுத்து காப்பவனும், அனைத்து உற்றார் உறவினர்கள் செய்யும் காரியங்கள் அனைத்தும் முக்யபிராணனுடையதே. முன்னர் நம்மை காத்தவனும், அடுத்து இருந்து காப்பவனும் இவனே. உள்ளே, வெளியே, முன்னும் பின்னும் என அனைத்து பக்கங்களிலும் இருந்து காக்கிறான். இவ்வாறு அனைத்து இடங்களிலும் இருந்து காத்தாலும், இரும்பினை பழுக்கக் காய்த்து, அடித்தால், அந்த வலி இரும்பிற்கே ஆகும். நெருப்பிற்கு ஒன்றும் ஆவதில்லை. அதுபோலவே, அனிலனுக்கு எந்தவொரு துக்கங்களும் ஆவதில்லை.

வாயுஸ்துதியில் வரும்: மாதர்மே மாதரிஷ்வன் பிதரதுலகுரோ - என்பதின் அர்த்தம் இங்கு வெளிப்படுகிறது.

புரந்தரதாசர்:
ஹனும நம்ம தாயி தந்தெ | பீம நம்ம பந்து பளக |
ஆனந்ததீர்த்தரே நம்ம கதி கோத்ரவய்யா || என்று இதையே குறிப்பிடுகிறார்.

அனாதி காலத்திலிருந்தும் வாயுதேவனே உண்மையான உறவினன். ஜீவாத்ம பரமாத்மர்களை ஒன்று சேர்ப்பவன்.

சந்தத ரஸாயன போக்தனு:
வாயுதேவன் ஹரி நாமாம்ருத என்னும் ரஸாயனத்தை (சாற்றினை) பருகுபவன். ஹனுமன் இப்போதும் கிம்புருஷத்தில் ராம நாமாம்ருதத்தை பருகிக் கொண்டிருக்கிறான். ஸ்ரீமத்வரும்கூட மேல் பதரியில் வியாசரிடமிருந்து பாடம் படித்துக் கொண்டிருக்கிறார்.

ரஸாயன என்றால், ஸோமரஸ. ரிக்வேத ஐதரேய பிராமணத்தில் 1-9-1ல் ஒரு குறிப்பு இவ்வாறு இருக்கிறது.

அஹம் ஸோமம் ப்ரதமம் பிபேயம் - என்று தேவதைகள் விவாதம் செய்தவாறு, யார் நம்மை போரில் வெல்கிறார்களோ அவர்கள் முதலில் ஸோமபானம் குடிப்பார்கள் என்று தீர்மானம் செய்து போரினைத் துவக்கினர்.

அப்போது வாயுதேவன் வேகமாக அனைவரையும் தோற்கடித்து, தானே மூன்று முறை ஸோமபானம் குடித்தான். இதை மத்வ விஜயத்தில்: வாயுனா த்ரிரபி பூர்வ பாயினா ஸர்வதெய்வதஜிதா தரஸ்வினா || (9-50) என்று சொல்லப்பட்டிருக்கிறது.

முக்யபிராணன் சகலேந்திரிய நியாமகன். மனஸ் முதலான இந்திரியங்கள் தம் செயல்களை செய்வதற்கு ருத்ராதி ப்ரேரக தேவதைகள் இருக்கவேண்டும். ஆனால், அந்த தேவதைகளும்கூட முக்யபிராணன் இருக்கையில் மட்டும் தம் கடமையை செய்கிறார்கள். முக்யபிராணர் இல்லையெனில், அவர்கள் அந்த தேகத்தில் இருக்கவும் சாத்தியம் இல்லை என்றபிறகு, செயல்களை செய்வது எப்படி?.

ந வை வாசோ ந பக்ஷோம்ஷி ந ஸ்ரோத்ராணி ந மனாம்ஸீத்யாக்ஷதே |
ப்ராணோ ஹ்யேவைதானி ஸர்வாணி பவதி || -- சாந்தோக்ய 5-1-11
ஸர்வேந்திரியாணாம் வ்யாபாரான் ப்ராண ஏவ கரோத்யயம் |

நந்த மாருதி:
இது பீம என்னும் சொல்லின் அர்த்தம். பீ: = பயம். மா - வேண்டாம். பவது பீர்மேதி ஸாந்த்வ்யந்தம் || (பயப்படாதீர்கள்

என்று நம்மை அமைதிப்படுத்துபவன் பீமன்). மா = வேண்டாம். ருதி = கவலை. கவலைப்படாதீர்கள். நான் இருக்கிறேன் என்று அபயம் அளித்து, நந்தத்தைக் கொடுப்பவன்.

கரளபஞ்சன தேவ:

பாற்கடலைக் கடையும் காலத்தில் வந்த விஷத்தைக் குடித்து ஜீர்ணித்துக் கொண்ட வாயுதேவன் 'கரளபஞ்சன' என்று பெயர் பெற்றது சரியே. ருத்ரதேவனுக்கு முதலில் கொடுத்த விஷத்தை, பீமாவதாரத்தில் தின்று, ஜீர்ணம் செய்துகொண்டார். இது மட்டுமல்லாமல், துரியோதனன் சுக்ராசார்யரிடமிருந்து ஒரு மந்திரத்தைப் பெற்றான். அதனை ஜெபித்ததால், எட்டு ஜாதிகளின் சர்ப்பங்கள் வசமானது. அவற்றை பீமன் மேல் ஏவினான். அந்த சர்ப்பங்கள் பீமனை கடித்தன. அவற்றின் பற்கள் முறிந்து போயின. பீமனின் தேகத்தில் சிக்கி சில சர்ப்பங்கள் இறந்து விழுந்தன. விஷத்தை உண்டவன், விஷம் கொண்ட பாம்புகளையும் கொன்றான். இவன் அர்ச்சிக்கும் விஜயவிட்டலனின் பாதகமலங்களை இந்திராதேவியும் அர்ச்சிக்கிறாள்.

<u>5. தரணி அயனுத்தர கௌரபக்ஷ ஹகலு..</u>

வாயுதேவரின் மற்றும் பாரதிதேவியரின் வியாப்தி மற்றும் அவர்களின் செயல்களை இந்த தாளத்தில் தெரிவிக்கிறார்.

வாயுதேவன், சூரியன், உத்தராயண, பகல், சுக்லபட்ச ஆகியவற்றிற்கு அபிமானி. பூதவாயு, பூதாகாஷத்தில் வியாப்தனாக இருந்து, அவற்றின் செயல்களை செய்கிறான். ஸ மிதுன முத்பாதயதே | ரயிம் ச ப்ராணம் சேதி ||.

பகவந்தன், நான் பிராண பாரதியர்களை படைத்தால், அவர்கள் பலவிதமான ஜீவிகளை படைக்கிறார்கள் என்று அறிந்து, வித்தாபிமானி பாரதியையும், முக்யபிராணனையும் படைத்தான்.

பாரதிதேவி - ப்ருத்வி, தண்ணீர், தேஜஸ் என்னும் மூர்த்த பதார்த்தங்களில் இருக்கிறாள். அமூர்த்தங்களில் பிராணன் இருக்கிறார்.

சம்வத்ஸரத்தில் தக்ஷிணாயன, உத்தராயண என்று இரு பாகங்கள் இருக்கின்றன. இவற்றில் பாரதி பிராணர் இருந்து நியமிக்கின்றனர். இதன்படியே, மாதத்திலும், சுக்ல கிருஷ்ண பட்சங்களிலும் பாரதி வாயுதேவர் நியாமகராக இருக்கின்றனர். சுக்லத்தில் வாயு, கிருஷ்ணத்தில் பாரதிதேவி. அப்படியே புருஷரில் பிராணனும், ஸ்த்ரீயரில் பாரதியும் இருக்கின்றனர். பகலில் புருஷனில் பிராணனின் சன்னிதானம் அதிகம்; இரவில் பெண்களில் பாரதியின் சன்னிதானம் அதிகம். ஆகையால், பகலில், ஸ்த்ரீ சங்கம் செய்யாமல், இரவில் செய்தால், பாரதி பிராண சங்கம் செய்ததைப் போல ஆகிறது. பிராண பாரதியரின் அனைத்து வியாபாரங்களும் பகவந்தனின் ஆணைப்படி நடக்கின்றன. இப்படியாக பிராண பாரதியரின் செயல்களை, இவர்களின் நியாமக ஸ்ரீஹரியின் செயல்களை அறிந்தவர்களுக்கு, நல்ல ஸந்ததி கிடைக்கின்றன. யாருக்கு தபஸ், பிரம்மசர்ய, ஸத்ய, நேர்புத்தி இருக்கிறதோ, அவர்களுக்கு சதுர்முக லோகம் கிடைக்கின்றது. இதையே - வரபதவிய நீவெ - என்று சொல்லப்படுகிறது. இவை அனைத்தும் ஷட்பிரஷ்ன உபநிஷத்தின் பிரதம அத்தியாயத்தின் தாத்பர்யம் விளக்குகிறது.

6. மூரவதாரத குருவெ ஸுரதரவெ...

ஹனும பீம மத்வர் என்னும் மூன்று அவதாரங்களை எடுத்த வாயு தேவகுருவே, நீ கல்பவ்ருக்ஷமே ஆகிறாய். அனைத்து செயல்களை செய்யும் ஸ்ரீஹரிக்கு சாட்சாத் பிரதிபிம்பனாக இருக்கிறாய்.

***

18. அவதார த்ரய சுளாதி

ராக : பைரவி. தாள : த்ருவ

தா4த்ரித்ரயகெகு3ரு ஸூத்ர நாமகவாயு
புத்ரனு ஜய ஸங்கர்ஷண தே3வகெ3
நேத்ர த்ரயாதி3க3ளு பரம சிஷ்யரு ஈதகெ3
ஸுத்ராம விபு3த4ரு த3னுஜ ப3லவொந்தா3கி3
மித்ரபா4வத3லி மந்த3ர தந்து3 மர்த்தி3ஸலு
கா4த்ரவாத3 மஹ ஹலஹல உது3ப4விஸெ
கா3த்ரவன்னு ப3ச்சிட்டு தா3னவமரரோடெ3
சித்ரவேக3த3ல்லி ஸ்ரீ ஹரிசரணானுக்3ரஹ
பாத்ரனெந்தெ3னிஸி மங்க3ளவாத3 தபனெய
பாத்ரியொளகெ3 காளகூடவே பு4ஞ்சிஸி
மாத்ரத3லி தேகி3த3னு ஜீர்ண மாடி3கொண்டு3
சித்ரசாரித்ர அச்யுத விஜயவிட்டலன்ன
ஸ்தோத்ரனு பா4ரதிகளத்ர ஷுசிமித்ர ||1

மட்ட தாள

பஷுபதி மூரூர அஸுரர கெ3லபோகெ3
அஸம ஸூதனு ஸரஸிஜ ஸம்ப4வனு, ரா
ஜிஸுவ ஸுவாஸு, மேரு த4னுஸு, நாராயண
அஸிமார்க்கணனு, த்ரித3ஷப3லரு, வேத3
எஸெவவாஜிக3ளு, ஸாஹஸிக3னு தானாகி3
யஷத3ல்லிருதிரெ அஸுராரி கெ3லிஸெ,
அஸஹாய ஷூர ஹனும, பி3ஸிநிதி4கெ3 ஹாரி
த3ஷஷிரன ப4ஞ்சிஸி, நக3ரவ உருபி
அஸுருஹ கோடிலிங்க3 அஸம விஜயவிட்ட
லஸத3ன்ன நாம ரஸவாகு3ம்போ3 பஷுபதிகி3ந்த3தி4க ||2

ரூபக தாள

முந்தெ3 ஈதனு பி3ரம்மா 'வாயுர்வை பி3ரம்மா'
எந்தெ3ம்போ3 நிக3மார்த்த2 பேளுதலிவகோ

ஸந்தே3ஹஸல்லது3 தத்வேஷவ மரது3
பொந்தி3 வைஷ்ணவராகி3 வாதன்னபாத3
வந்தி3ஸி பாப விமுக்தராகு3வது3
தந்தெ3 தாயி மத்தெ ப3ந்து4ப3ளக3 கு3ரு
வெந்த3ரெ இவரே நமகெ3 ஸர்வரிகெ3
மந்த3மார்க்க3வ பி3டு3 மனவீதனலிடு3
'ஸ்கந்த3' நாம ஸிரி விஜயவிட்டலன்ன
த்3வந்த்3வபாத3 தோரி ஸாந்த்3ர ஸுக2வீவ ||3

ஜம்பெ தாள

ஹனுமன நம்பி3த3ரெ ஸுக்3ரீவனு கெ3த்3த3
ஹனுமன நம்பி3த3ரெ விபீ4ஷண பிரஸித்3த4
ஹனுமன நம்பி3த3ரெ ஸர்வகார்யவெ ப3த்3த4
ஹனுமன நம்பத3வ பாபத3லி பி3த்3த3
ஹனும ஹனும நெம்போ3து3 ஞானக்கெ ஷ3ப்3த4
ஹனுமனெ மஹதத்வக்கபி4மானியெ ஸித்3த4
ஹனுமகெ வனஜ ஸம்ப4வகெ3 அபே4த3
மனோஜவ ஜீவ விஜயவிட்டலனல்லி இத்3த3 ||4

த்ரிவிட தாள

க2க3னு கலஷவ தந்து3 ஜக3தொ3ளு பெ1ஸராத3
க3க3னாங்க3ணத3லி ஸஞ்சீவனக3வ
ப3கெ3து3 த்ருணவ மாடி3 எரகி3ஸிகொண்டு3 எளெ
நகி3யிந்தா3ணெ கல்லந்தெ ஹாரிஸுத்த
ஹகெ3யிந்த3 மடி3த3 கபிக3ளனெப்3பி3ஸி மூரு
ஜக3த3பதிகெ3 ஸேவெ அர்ப்பிஸித3னு
ஜக3த ஸேதுவெ நாம விஜயவிட்டல பல்ல
மிகி3லாரு ஹனுமகெ3 யுக3யுக3தொளகெ3 ||5

அட்ட தாள

ரணதொ3ளு க4ணிபன்ன அவதாரவாத3 ல
க்ஷ்மணனு பி3த்3தா3க3 மூல ரூப ஸ்மரிஸிரெ
க3ணனெ இல்லதெ3 ஒந்து3 கரத3ல்லி எத்தெ, ரா

18. அவதார த்ரய சுளாதி

வணனு ஸூஜிகபொந்தி3 ஹனுமன பொக3ளித3
எணெயாரு ஈ ஹனுமகெ3 ஸுராஸுர
க3ணதொ3ளு விக்ரமகெ3 நிஜநாம
ரணப்ரிய விஜயவிட்டல தா3ஸர ப்ரேமகெ3 ||6

ஆதிதாள

பீ4மனாத3 ஹிடி3ம்பா3தி3 ஆ மாக3த4ன ஸீளித3
பூ4மினேயெ நெம்போ3 ந்ருபன யமனபுரிகெ3 களுஹித3
காமனய்யன ப்ரீதி ப3டி3ஸி தாமஸர பரிஹரிஸித3
ஶ்ரீமதாசார்யராகி3 குமதக3ள த3ஹிஸித3
ஆ மஹாதத்வத3 உரளி ஹரிஹி வைஷ்ணவர உத்3த4ரிஸித3
காமனாம விஜயவிட்டலன ஈமஹியொளகெ3 மெரஸித3 ||7

ஜதெ

வனஜாண்ட3க3ளெல்ல தி3னதி3ன பாலிப
த4னுர்த4ர விஜயவிட்டலன ப்ரேமத3தா3ஸ ||8

***

<u>1. தாத்ரித்ரயகெகுரு ஸூத்ர நாமகவாயு...</u>

இந்த சுளாதியில் வாயுதேவரின் மகிமைகளை, தாசர் மிகவும் அழகாக வர்ணித்திருக்கிறார்.

த்ரித்ரித்ரயகெ குரு: ஊர்த்வலோக, மத்யபூலோக, அதோலோக, ஆகிய மூன்று உலகங்களுக்கு வாயுதேவர் குருவாக இருக்கிறார். வாயுஸ்துதியில்: ஶ்ரீமதானந்த தீர்த்த த்ரைலோக்யாசார்ய பாதோஜ்வல ஜலஜலஸத் பாம்ஸவோऽஸ்மான் புனந்து -- என்று இருக்கிறது.

மூன்று உலகங்களுக்கு மட்டும் எதற்கு? 14 உலகங்களுக்கும் அவரே ஞானத்தைக் கொடுக்கும் குரு. இவரை 'குருதம' என்று அழைக்கிறார்கள். ருத்ராதி சமஸ்த ப்ரபஞ்சத்திற்கு குரு எனப்படுகிறார். அயுமேஷாம் ருத்ராதீனாம் அதிஷயேன குரு:

குருதம: || (வி.ப). . ருத்ராதி தாத்விக தேவதைகளுக்கும் அதாத்விக தேவதைகளைவிடவும், தாரதம்யத்தில் சிறந்தவர் மற்றும் மூத்தவர்.

யஸ்ய தேவே பராபக்தி: யதாதேவே ததா குரௌ | என்று சொல்வதைப் போல குருகளில் தேவதைகளிலும் தாரதம்ய பூர்வக பக்தி செய்ய வேண்டும். தத்வத்தில் தமக்கு சந்தேகம் இருக்கக்கூடாது. மற்றவர்களின் சந்தேகங்களை பரிகரிக்கக்கூடிய சாமர்த்தியம் உள்ளவரே குருகள். ஆகையால், பிரம்ம வாயுகளே உண்மையான குரு எனப்படுகின்றனர். அஸம்ஷய: ஸம்ஷயச்சித் குருருக்தோ மனீஷிபி: || தா. நி. 1-121.

தஸ்மாத் பிரம்ம குருர்முக்ய: ஸர்வேஷாமேவ ஸர்வதா || ஸ்ரீமத்வரில் 32 லட்சணங்கள் அனைத்தும் ஸ்பஷ்டமாக தென்பட்டன. ப்ரத்யக்ஷமேவ சைதல்லக்ஷணம் த்ருஷ்யதெ பகவதி பாஷ்யகாரே || (த.பு).

ஸூத்ர நாமக வாயு:
ஸூக்ஷ்ம ஸ்ருஷ்டியில் சங்கர்ஷணன் - ஜயாதேவியில் அவதரித்தவரே ஸூத்ர நாமக வாயுதேவர்.

ஸங்கர்ஷணாச்ச ஜயா தனூஜ: |
முக்யபிராணனில் இந்த சமஸ்த ஜகத்தும் அடைக்கலம் கொண்டிருப்பதால், ஸூத்ரன் என்று வாயுதேவருக்குப் பெயர் என்று பிருஹதாரண்ய உபநிஷத் சொல்கிறது. ஸூத்ரம் ஜகதிதம் யஸ்மின் ஸூத்ரம் வாயுரஸௌ ||

இந்த வாயுதேவனுக்கு த்ரிநேத்ர ருத்ர, கருட, சேஷதேவர் அனைவரும் பரம சிஷ்யராக இருக்கின்றனர். இவரிடமிருந்தே ஞானத்தைப் பெற்று பண்டிதர் ஆயினர் அவர்கள். ஈஷானாஸ: ஷவஸா க்ரந்த சூரய: || (ப.ஸூ).

ஈஷானாஸ: - ருத்ராதிகள். நி - விசேஷமாக. ஸூரய: - பண்டிதராகி. ஷவஸா - சுகமாக. க்ரந்த - ஆயினர். வாயுதேவர், மத்வ ஆனபோதும் சேஷதேவர் மத்வரிடமிருந்து பாடம் படித்தார். ப்ரசுராந்தர ப்ரவசனம் பணிராடுபஷுஸ்ரவான் || - (சுமத்வ விஜய).

பத்மனாப தீர்த்தர் சேஷ அம்சரே. நரஹரி தீர்த்தரில் கருடனின் ஆவேசம் இருந்தது. ஆகையாலேயே கலிங்க தேசத்திலிருந்து ஸ்வாமியை கொண்டு வந்தார். த்ரிவிக்ரமர், ருத்ராம்சர் என்றே சொல்லப்படுகிறது. டீகாராயர், இந்திர அம்சம் என்றும், ரிஷப ரூபத்தில் சாஸ்திரங்களை கேட்டிருக்கிறார் என்பதையும் அறிகிறோம். வ்ருஷபஸ்ய தோஹஸே.

ஸ்ரீமத்வர் பூர்ணப்ரக்ஞராக இருந்து, முக்ய குருத்வத்தைப் பெற்றிருந்தார். அனைத்து முமுக்ஷுவிற்கும் முக்தி அடைவதற்கு இவரின் உபதேசம் அவசியம் ஆகிறது. பிரம்மணோ உபதேஷஸ்து ஸர்வஷாமேவ முக்தயே ||

ஸுத்ராம விபுதரு...

தேவதைகள் + அசுரர்கள் இருவரும் சேர்ந்து பாற்கடலைக் கடைந்தனர். இது வைவஸ்வத + சாக்ஷுஷ என இரு மன்வந்தரங்களிலும் நடந்தது. ஆனால், இந்த பாற்கடலைக் கடைந்தது, தேவ தானவர் அல்ல ஸ்ரீஹரியே இதனை நடத்தினான். தேவதைகள் அனைவரும் பிரம்மனிடம் சென்று, நாங்கள் அனைவரும் குழப்பத்தில் இருக்கிறோம். இன்னும் அமிர்தம் கிடைக்கவில்லை என்றனர். அப்போது பிரம்மதேவனின் பிரார்த்தனையின்படி, ஸ்ரீஹரி, தேவ அசுரர்களில் ஒவ்வொரு ரூபத்தினால் இருந்து, சக்தியை நிரப்பினான். பிறகு மதன காரியத்தில் ஸ்ரீஹரியும் பங்கு பெற்றான். மலை தண்ணீரில் மூழ்கியபோது, கூர்ம ரூபத்தினால் அதனை மேலே தூக்கினான். மலை, வாசுகி இவர்களிலும் தனது ஒரு அம்சத்தை வைத்து அருளினான்.

ஹாலாஹல என்னும் கலியினால் பாதிக்கப்பட்ட பயங்கரமான விஷம் மேலே வந்தது. மூன்று உலகங்களும் இதனால் சுடத் தொடங்கின. ஸ்ரீஹரியின் ஆணைப்படி, வாயுதேவர், அந்த ஹாலாஹல விஷத்தை, தங்கமயமான பாத்திரத்தினால் குடித்தார். அதிலிருந்து சிறிதளவே எடுத்து, அதன் சக்தியை பலமாகக் குறைத்து, சிவனுக்குக் கொடுத்தார். அவரின் கழுத்தில் சென்று கொண்டிருந்தபோதே, அவருக்கு துன்பத்தைக் கொடுத்தது அந்த

விஷம். ருத்ரதேவர் மூர்ச்சை அடைந்தான். ஸ்ரீஹரி மற்றும் வாயுதேவரின் அம்ருதகர ஸ்பர்ஷத்தால் எழுந்து நின்றான். தனது வேதனையின் பரிகாரத்திற்காக, சந்த்ரனை, கங்கையை தலை மேல் தரித்து, அபிஷேக ப்ரியன் ஆனான். ராம நாமாம்ருத, நாமத்ரய ஜபம் ஆகியவற்றால் தன் நிலையை அடைந்தான். வாயுதேவரோ காலகூட விஷத்தை அப்படியே முழுமையாகக் குடித்து ஜீர்ணித்துக் கொண்டார்.

இந்த விஷயத்தை: ருத்ரோபி வாயு கரமர்த்தித காலகூடபிந்தும் | என்று கருட புராணம் சொல்கிறது. ரிக்வேதத்தில் வரும் கேஷீ சூக்தம் இவ்வாறு சொல்கிறது:

வாயுரஸ்மா உபாமந்தத் |
ஸ்வயம் த்வ நிர்மத்ய பலோபபன்னம் பபௌ ஸ வாயு: ததுதாஸ்ய ஜீர்ணம் ||

இத்தகைய விஷத்தை பானம் செய்தாலும், வாயுதேவனுக்கு எந்தவொரு தொந்தரவுகளும் ஆகவில்லை. இத்தகைய விஷபானம் செய்தாலும், மகாலட்சுமி நாராயணர் அதனால் ஆச்சரியப்படவில்லை. யஸ்ய த்ரிலோக ஜனனி ஜனனி விஷேऽபி பீதே ந விஸ்மயமவாப.

ஹாலாஹல என்றால் ஹல - ஏர். ஆஹலதி - பூமியை உழும் ஏர், பூமியை கிழிக்கும் சாமர்த்தியம் உள்ளது. இத்தகைய பயங்கர விஷம் வந்ததால், அதன் முன் இருக்கமுடியாமல் பயம் கொண்டு, தானவர்கள், அசுரர்கள் தூர ஓடினர். ஸ்ரீஹரியின் ஆணைக்கேற்ப, எவ்வித பயமும் இல்லாத, ஸ்ரீஹரியின் விசேஷ அருளைப் பெற்றவரான வாயுதேவர், மங்கள தபனீய பாத்திரத்தில் (தங்கமய பாத்திரத்தில்) இருந்த காலகூடத்தை குடித்து, ஜீர்ணம் செய்து கொண்டார்.

பஷ்சாத்து தத்விஷம் ஸர்வம் ஏகீக்ருத்ய ஸ பாத்ரகே |
அனாயாஸாத் பபௌ வாயு: ஸர்வேஷாம் ரக்ஷணாய ச |
பபௌ ஸ வாயு: ததுதாஸ்ய ஜீர்ணம் ||

இவ்வாறு வாயுதேவர் காலகூடத்தை உண்டு உலகத்தை காத்தார். ஹரிவாயுகளின் அருளால் அவருடைய தாசனான சிவனும், அமிர்த என்று அழைக்கப்பட்டார். சிவனே காலகூடத்தை குடித்தார் என்று சில புராணங்களில் இருக்கிறது. ஆனால், ஸ்ருதிகளிலும், பத்ம புராணத்தில் உண்மையான நிலை இருக்கிறது.

2. பஷுபதி மூருர அஸுரர கெலபோகெ...

தாராக்ஷ, கமலாக்ஷ, வித்யுன்மாலி என்னும் மூன்று அசுரர்களே - த்ரிபுராசுரர்கள். ஆகாயத்தில் சஞ்சரிக்கும் இவர்களுக்கு, மயாசுரன், மூன்று பட்டணங்களை நிர்மாணம் செய்து கொடுத்தான். அது யாராலும் வெல்லப்பட முடியாததாக இருந்தது. இந்த பட்டணத்திற்குள் ம்ருதசஞ்சீவினி தண்ணீர் நிரம்பிய கிணறுகள் இருந்தன. த்ரிபுராசுரர்களின் மனைவியர் மகா பதிவிரதைகளாக இருந்தனர். இவ்வாறு மூன்று காரணங்களால் இவர்கள் யாராலும் வெல்லப்பட முடியாதவர்களாக இருந்தனர்.

இந்த சமயத்தில் பிரம்மதேவன் ஒளிமயமான மேருவையே தனுஸ்ஸாகவும், நாராயணனை பாணமாகவும், நான்கு வேதாபிமானி தேவதைகளை குதிரைகளாக வைத்துக்கொண்டு, இத்தகைய ரதத்தில் அமர்ந்து, ஸ்ரீஹரியின் உதவியுடன் த்ரிபுராசுரர்களைக் கொன்று 'த்ரிபுராரி' எனப்பட்டான். மூன்று பட்டணங்களை தன் கொம்பினால் ஒரே வரிசையில் அவற்றை நிறுத்தியபோது, ருத்ரதேவர் அவற்றை நாசம் செய்தார். பதிவிரதையரான அவர்களின் மனைவியரின் முன் திகம்பரனாக நின்றான். நம் கணவர்கள் இவ்வாறு இருக்கக்கூடாதா என்றனர். இதனால் அவர்களது பதிவிரதம் அழிந்து, கணவர்கள் இறந்தனர். இவ்வாறு அசுராரியின் அருளால், த்ரிபுராரி எனப்பட்டார் சிவன்.

ஷதயோஜன தூரமான கடலைத் தாண்டி, (வடவாக்னி இருக்கும் கடல்), தஷகண்டனான ராவணனின் அசோக வனத்தை அழித்து, அக்ஷகுமாரனைக் கொன்று, 88 கோடி சேனாதிபதிகள் இருக்கும் சைன்யத்தை, தன் கையினாலேயே கொன்று போட்ட ஹனுமந்தனுக்கு சிவன் சமன் ஆகமுடியுமா?

இது அல்லாமல், சிவனின் மூர்த்தியான லிங்கங்கள் வாயுதேவனின் கூந்தல்களில் கோடி எண்ணிக்கையில் இருக்கின்றன. இத்தகைய ரோமரோமக்கெ கோடி கோடி அங்கங்களை தரித்திருக்கும் வாயுதேவனுக்கு ஈரேளு உலகங்களில் இணை யார்தான் இருக்கிறார்கள்? அப்படியே நிரந்தரமாக பகவந்தனின் நாமஸ்மரணை செய்தவாறு, ராமாம்ருதத்தை எப்போதும் மென்று கொண்டிருக்கும் ஹனுமனுக்கு சிவன் சமம் ஆகமுடியுமா?

3. முந்தெ ஈதனு பிரம்மா வாயுர்வைப்ரம்மா...

கல்கி, தாஸ, ஸுதாச ஆகிய பிரம்மதேவனின் வரைக்கும் 100 பேர் ருஜுகணஸ்தர்கள் இருக்கின்றனர். இவர்களில் பிரம்மா வாயுகள் ஸ்ரீஹரியின் புத்ரனாக இருப்பவர்கள். வாயு பிரம்ம இருவரும் உடன் பிறந்தவர்கள். பிரம்மன் மூத்தவர் என்று சொல்லும் வாக்கியங்களுக்கு, பதவியில் மூத்தவர் என்று அர்த்தம் கொள்ள வேண்டும். வாயுதேவனே அடுத்து பிரம்மன் ஆகப் போகிறவர்.

பவிஷ்யாத் விதாத்ரே - அடுத்த பிரம்மன் என்று சாஸ்திரம் சொல்கிறது. பவமான: ப்ரஜாபதி - என்று ஸ்ருதியும்கூட சொல்கிறது. இவ்வாறு இருப்பதால், த்வேஷம் இல்லாமல், அன்புடன் அவரை வணங்க வேண்டும்.

வாயுதேவரின் பாதம் பிடித்தவனின் அனைத்து பாவங்களும் அழிகின்றன. வாயுதேவனில் த்வேஷ, அஸூயைகளை செய்யக்கூடாது. இவ்வாறு த்வேஷம் செய்த துரியோதனாதிகளுக்கு என்ன ஆயிற்று என்று தெரியும் அல்லவா?

வாயுதேவரை வணங்கினால் மட்டும் நாம் வீர வைஷ்ணவர் ஆகமுடியும். வாயுதேவன் நம்மை நாக, கூர்ம, க்ருகல, தேவதத்த, தனஞ்சய ரூபத்தினால் ஐந்து ஞானேந்திரியங்களையும், ப்ராணாபானாதிகளால் பிராண அபானங்களையும் காத்துக் கொண்டிருக்கிறார். இவருடைய பாதங்களை பற்றிக் கொண்டால், அனைத்து பாவங்களும் பரிகாரம் ஆகின்றன. (வா தன்ன பாத வந்திஸி பாபவிமுக்தராகுவனு).

18. அவதார த்ரய சுளாதி

இத்தகைய சர்வோபகாரகனான வாயுதேவர் நமக்குக் கிடைத்திருக்கும்போது, யார் அவரை உதாசீனம் செய்கிறார்களோ, அவர்களின் ஆனந்தம் அதிகரிக்காமல், அவர்கள் தொடர்ந்து சம்சாரத்திலேயே உழல்பவர்களாக இருக்கின்றனர். யஸ்தூதாஸ்தே ஸ ஆஸ்தே அதிபவமஸுலபக்லேஷ நிர்மோக மஸ்து ப்ராயானந்தம் || வாயுஸ்துதி - 12. அத்தகையவனுக்கு சுகம் இருந்தாலும், துக்கமயமான இந்த சம்சாரம் என்னும் கிணற்றிலேயே பல காலம் விழுந்திருப்பான்.

விஷ்ணுவிடம் மற்றும் வைஷ்ணவர்களிடம் செய்யும் பக்தி, அதிகமான சுகத்திற்கு காரணம் ஆகிறது. அதற்கு எதிராக அவர்களில் செய்யும் த்வேஷம் அதிகோரமான நரகத்திற்கு காரணம் ஆகிறது. இத்தகைய நரகங்களில் ரௌரவ, மஹாரௌரவ, வன்ஹி, வைதரணி, கும்பீபாக என்னும் பஞ்ச கஷ்டங்களைக் குறிக்கும் ஐந்து நரகங்கள் உள்ளன. இவை 21 நரகங்களைவிட மிகவும் கோரமானவை. இவற்றைவிட கோரமான நித்ய நரகங்களும் உள்ளன. தாமிஸ்ர, அந்தம்தாமிஸ்ரங்களே அவை. இவற்றில் விழுந்தால், திரும்ப வருவதற்கான வாய்ப்பு இல்லை. தாமிஸ்ரோSந்ததாமிஸ்ரோ த்வௌ நித்யௌ ஸம்ப்ரகீர்த்திதௌ ||.

ஹரிவாயு த்வேஷிகளுக்கு இத்தகைய நித்ய நரகத்திலேயே இடம் கிடைக்கிறது. இவற்றிலும் ஊர்த்வ, மத்ய, அதம என்னும் மூன்று பாகங்கள் உள்ளன. மேல் பாகங்களைவிட கீழான பாகங்கள் கடுமையானவை. வாயுதேவரை த்வேஷிக்கும் கல்யாதிகள் இதிலேயே வீழ்கின்றனர். இங்கு கொடுக்கப்படும் தண்டனைகளை கேட்டால், நமக்கு மயக்கம் அடையும் நிலை வருகிறது என்று கூர்ம புராணம் சொல்கிறது. ஸ்ரவணாதேவ மூர்ச்சாதி: அதரஸ்ய யதோ பவேத் || ஆகையால், வாயுதேவரை த்வேஷிக்கக் கூடாது.

தந்தெ தாயி மத்தெ பந்து பளக குரு:

வாயுஸ்துதியில் இருக்கும் 'மாதர்மே மாதரிஷ்வன் பிதரதுலகுரோ ப்ராதரிஷ்டாப்த பந்தோ' என்பதின் விளக்கமாக இது இருக்கிறது. துர்மார்காத்ருத்ய ஸன்மார்கஸ்தாபகானாம் | - ப்ராத: ஸங்கல்ப கத்ய. குருவைப் போல ஹிதோபதேசகன் இவன். சமானம்

இல்லாத குரு. உடன் பிறந்தவர்களைப் போல, எதையும் எதிர்பார்க்காத அன்பினை செலுத்துபவன். ஆப்தன். யதார்த்தவாதி. விஷ்ணு பக்தர் ஆனதால், உறவினர் ஆகிறார். பாந்தவா: விஷ்ணுபக்தாஸ்ச.

பாகவதத்தில் இருப்பதைப் போல - நம் மூச்சு, புத்தி, மனஸ், கண் ஆகிய இந்திரியங்கள், ஜீவ, தேக, மனைவி, மக்கள், செல்வம், வீடு ஆகியவை எந்த ஹரிவாயுகளின் சன்னிதானத்தினால் ப்ரியமாக இருக்கிறதோ, அவரைவிட ப்ரியமானவன் வேறு யார் இருக்கிறான்?.

பிராணபுத்திமன: காத்மா தேஹாபத்ய தனாதய: |
யத் ஸம்பர்க்காத் ப்ரியா ஆஸன் தத: கோன்வபர: ப்ரிய: ||

இரும்புத் துண்டானது நெருப்பில் காய்ச்சியபோது, நெருப்பைப் போலவே சிவப்பாக தெரிந்தாலும், குளிர்ந்தால் அது இரும்பாகவே இருக்கிறது. அதைப் போல, பகவந்தன் மற்றும் வாயுதேவர், தந்தை, தாய், உற்றார், உறவினர்களில் சன்னிதானம் கொண்டிருப்பதால் மட்டும் இவர்கள் அனைவரும் ப்ரியமாக இருக்கிறார்கள். ஒரு வேளை அவர்கள் புறப்பட்டுச் சென்றால், அனைவரும் தூரமாகிறார்கள். அதாவது, பரமப்ரியனான ஸ்ரீஹரி இவர்களில் வியாபித்திருப்பதாலேயே, அனைவரும் ஹிதகாரிகளாக இருக்கின்றனர்.

யாக்ஞவல்க்யர் தம் மனைவியான மைத்ரேயிக்கு - கணவன், மனைவி, புத்திரர், இஷ்ட மித்திரர் ஆவார். இன்னொருவருக்கு தாம் ப்ரியராக வேண்டும் என்று விரும்பினால், உடனே ப்ரியராவதில்லை. ஹரிவாயுகளின் விருப்பத்தினாலேயே அவர்கள் ப்ரியர் ஆகின்றனர் என்கிறார் தாசர்.

நவா அரே பத்யு: காமாய பதி: ப்ரியோ பவதி |
ஆத்மனஸ்து காமாய || -- ப்ரு. உப. 4-4-5.

ஹரிவாயுகளே கணவன் மனைவியர்களில் நின்று, நம்மிடம் அன்பு செய்து அருள்கிறார்கள். தத்வ சுவ்வாலியிலும் இவ்வாறு இருக்கிறது.

18. அவதார த்ரய சுளாதி

ஸன்னிதானவு நின்னதென்னல்லி இரலாகி
மன்னிஸுத்திஹரு ஜனரெல்ல நின்ன
காருண்ய காரணவோ கமலாக்ஷ ||

த்வமேவ மாதா ச பிதாத்வமேவ த்வமேவ பந்து: ஸகா த்வமேவ | த்வமேவ வித்யா த்ரவிணம் த்வமேவ த்வமேவ ஸர்வம் மம தேவ தேவ ||

ஷாண்டில்ய ஸ்ருதியின் இந்த விளக்கத்தையே தாசராயர் இங்கு விவரித்திருக்கிறார். வாயுதேவர், அனைத்து உறவினர்களைவிடவும் ப்ரியராக இருக்கிறார். ததேதத் புத்ராத் ப்ரீய: வித்தாத் ப்ரீய: ஸர்வஸ்மாத் ப்ரீய: | - ப்ரு. உப. 3-5-2.

மந்த மார்க்கவ பிடு மனவீதனல்லிடு:
குருவாக இருக்கும் வாயுதேவரைத் தவிர, யதார்த்த ஞானத்திற்காக வேறு யாரையும் வேண்டக்கூடாது. 21 பாஷ்யகாரர்கள் வந்திருந்தாலும், அவர்களுக்கு சந்தேகம் தீரவில்லை. இன்னொருவரின் சந்தேகங்களை பரிகரிக்க முடியாதவர்கள், குரு என அழைக்கப்படுவதில்லை. அஸம்ஷய: ஸம்ஷயஷ்சித் குருருக்த: |

குரு என்றால் 'க்ருணாதி உபதிஷதி வேதாதிஷாஸ்திராணீதி குரு:' |. வேதாதி சாஸ்திரங்களின் யதார்த்த ஞானத்தைக் கொடுப்பவரே குரு. அல்லது 'கிரதி அஞ்ஞானமிதி குரு:'. அஞ்ஞானத்தை பரிகரிப்பவரும் குருவே. கு என்றால் இருட்டு. ரு - என்றால் தடுப்பவர். இந்த குணங்கள் வாயுதேவரில் இருக்கின்றன. ராயர் - த்வாத்ரிம்ஷல் லக்ஷ்ணோ பேதானாம் சமக்ர குருலட்சணோபேதானாம் || என்கிறார்.

இதற்காகவே ஆனந்ததீர்த்தர், ஆனந்த பிரதமான தீர்த்த சாஸ்திரங்களை இயற்றினார். த்ரைலோக்யாசார்யரை பிடித்துக் கொள்ள வேண்டுமே தவிர, மந்தமதிகள் சொல்லியிருக்கும் மந்த மார்க்கங்களை பிடிக்கக்கூடாது.

இந்த உலகத்தில், துர்மார்க்கங்களை அனுசரித்து, நரகம் முதலான அனர்த்தங்களுக்கு செல்லவிருந்த நான், துர்மார்க்கத்தை விட்டு, வைஷ்ணவ சித்தாந்த என்னும் சன்மார்க்கத்தில் நடக்குமாறு உபதேசித்த பூர்ணபிரக்ஞரை வணங்குகிறேன். யேனாஹமிஹ துர்மார்க்காத் உத்ருத்யாபி நிவேஷித: । ஸம்யக் ஸ்ரீ வைஷ்ணவே மார்க்கே பூர்ணபிரக்ஞம் நமாம்யஹம் ||.

ஸ்கந்தநாம ஸிரி விஜயவிட்டலன்ன:
அனைத்து பிராணிகளையும் காக்கும் பொறுப்பினை ஏற்றுக் கொண்டிருப்பதால், ஸ்ரீஹரி, ஸ்கந்த எனப்படுகிறான். அத்தகைய ஜகஜ்ஜன்மாதி கர்த்தனான பகவந்தனை நமக்கு காட்டுபவன் இவனே. அபரோக்ஷ ஞானம் கிடைத்து, இதனால் முக்தி கிடைத்து, நம் தகுதிக்கேற்ப மோட்சானந்தமும் கிடைக்கிறது.

விஷ்ணுவின் ஆணைப்படி வாயுதேவனும் மோட்சம் கொடுக்க வல்லவனாக இருக்கிறான். விஷ்ணுர்ஹி தாதா மோக்ஷஸ்ய வாயுஸ்ச ததனுக்ஞயா ||. வாயுதேவனின் சிபாரிசு இல்லாமல், ஸ்ரீஹரி யாருக்கும் மோட்சம் கொடுப்பதில்லை என்னும் ஆதாரம், இந்த ரூபக தாளத்தில் இருக்கிறது.

<u>4. ஹனுமன நம்பிதரெ ஸுக்ரீவனு கெத்த...</u>

வாயுதேவரை நம்பி யார்யார் பகவந்தனின் அருள் பெற்றனர்; அவரை புறக்கணித்ததால் யார்யார் கெட்டுப் போனார்கள் என்னும் விவரங்களை இங்கு கொடுத்திருக்கிறார் தாசர்.

ராமாயணத்தில் ஸ்ரீராமசந்திரன், சுக்ரீவன் பட்சத்தில் சேர்ந்ததன் காரணம் என்னவென்றால், அங்கேயே ஹனுமந்தன் இருந்தான். வாலி இந்திரனின் அம்சம். எட்டாம் கக்ஷை. சுக்ரீவன் சூர்ய அம்சம். 12ம் கக்ஷை. இவ்வாறு இருக்கையில், வாலி பகவந்தனின் பரம பக்தன் ஆனாலும், வாயுதேவனை விட்டிருந்தான். சுக்ரீவன், ஹனுமந்தனை கெட்டியாக பிடித்திருந்தான். ஆகையால், ராமன் சுக்ரீவனையே சேர்ந்தான்.

மனிதன் எத்தகைய யோக்கியனாக இருந்தாலும், அவன் எந்த அளவிற்கு வாயுதேவரின் அன்பிற்கு பாத்திரன் ஆகியிருக்கிறான் என்பதைப் பொறுத்தே அவனின் எதிர்காலமே அமைகிறது.

பூர்வம் ஹி மாருதிமவாப ரமே: ஸுதோsயம் |
தேனாஸ்ய வாலினமஹன் ரகுப: ப்ரதீபம் || தா. நி. 5-47.

அடுத்து, வாலி சுக்ரீவ யுத்தத்திலும், முதலில் ராமன் வாலிக்கு பாணம் விடவில்லை. பிறகு ஹனுமனால் அவனின் கழுத்திற்கு மாலையை அணிவித்த பிறகு, வாலியைக் கொன்றான். எந்த வெற்றி கிடைக்கவேண்டும் என்றாலும், ஹனுமனின் அருள் இருந்தால் மட்டுமே என் அருள் கிடைக்கும்; இல்லையெனில், என் அருள் கிடையாது என்பதை தெளிவுபடுத்தினான். ஸுக்ரீவஸ்ய ததா மாலாம் ஹனுமான் கண்ட ஆஸஜத் || ம.பா.வன - 280-33. அதன்படியே, வாயுதேவனின் சித்தாந்த ரத்னமாலையை தரித்தவனுக்கு மட்டுமே வெற்றி என்பதை குறிப்பிட்டான்.

ஹனுமன நம்பிதரெ விபீஷண பிரஸித்த:
ராவணனுக்கு ஹனுமன் எவ்வளவு உபதேசம் செய்தானோ, அவை அனைத்தையும் விபீஷணனும் ராவணனுக்கு உபதேசம் செய்தான். ராவணனே. சீதாதேவியை உடனடியாக ராமனிடம் ஒப்படைக்காவிட்டால், ரகூத்தமனுக்கு அது அப்ரியமான செயல் ஆகும். இதன் பலன், புத்ர, மித்ர, உறவினர் ஆகியோருடன் நீயும் மரணமே அடைவாய். ஸபுத்ரமித்ர பாந்தவோ வினாஷமாஷு யாஸ்யஸி ||

விபீஷணனின் வாக்கு இவ்வாறாக இருக்கிறது. ராவணனே. நான் உன் உடன் பிறந்தவனாக இதை உனக்கு சொல்கிறேன். என் இதமான மற்றும் சரியான வார்த்தைகளைக் கேள். ஸ்ரீராமனுக்கு சீதாதேவியை கொடுத்துவிடு. ஹிதம் பத்யம் ப்ரூமி தீயதாம் அஸ்யமைதிலீ |

மேலும் இவ்வாறு கூறினார். ராவணனே, ராமனின் பராக்ரமம் உனக்கு தெரிந்தே இருக்கிறது. ஆனாலும், உன் கர்வத்தினால் நீ இவ்வாறு செய்கிறாய். பகவந்தனின் விரோதம் செய்து கொண்டு, உற்றார் உறவினர் புத்திரன் ஆகியோருடன் இறந்து விடாதே.

விபீஷணன், ஹனுமனின் மதத்தையே பின்பற்றினான். ஆகையாலேயே, ஹனுமந்தன் - எதிரியிடமிருந்து வந்த விபீஷணனை தம்முடன் சேர்த்துக் கொள்ளலாமா வேண்டாமா என்றபோது, சுக்ரீவன் முதலானோர் வேண்டாம் என்றனர். ஹனுமந்தனோ, ந த்வ ஸ்ய ப்ரமதோ ஜாது லக்ஷ்யதே துஷ்டபாவதா || என்றார்.

இவன் ராவணனின் கெட்ட நடவடிக்கைகளை சகிக்காமல் இங்கு வந்திருக்கிறான். இவனுடைய சுத்தமான ஸ்வபாவம் எனக்குத் தெரியும். இவனை நாம் ஏற்றுக் கொள்ளலாம் என்றான். அண்ணனான வாலியைக் கொன்று, தம்பியான சுக்ரீவனுக்கு ஆட்சியைக் கொடுத்தால், அதே ராமன், தம்பியான விபீஷணனுக்கு ஆட்சியைக் கொடுத்து, அண்ணனான ராவணனைக் கொன்றான். இரண்டு சமயத்திலும், ஹனுமனின் அருளைப் பெற்றதே காரணம். விபீஷணனுக்கு கல்ப-ஆயுளும் கிடைத்தது. இவ்வாறு விபீஷணன் சப்த சிரஞ்சீவிகளில் ஒருவனாக புகழ் பெற்றான். இவ்வாறு ஹனுமனை நம்பியவர்களுக்கு அனைத்து காரியங்களும் சாஸ்திரங்களுக்கேற்பவே நடக்கின்றன. ஹனுமனை நம்பாமல் கெட்டவர்கள், வாலி மற்றும் அவனின் நண்பன் ராவணன், இருவருமே.

ஹனுமனொம்போது ஞானக்கெ ஷப்த :

வாயு என்றால், வ + அய + உ என்று இருக்கிறது. பல மற்றும் ஞானம் யாருடைய ஸ்வரூபமோ, அவனே வாயு என்று அர்த்தம். பளித்தா ஸூக்தமும் பட்- தர்ஷதம் என்னும் பதங்களால் வாயு சொல்லின் அர்த்தத்தை சொல்கிறது. வாதிராஜர், தர்ஷேன ஞானேன, தம் ததம் - விஸ்த்ருதம் என்கிறார். ஹனும என்றால் ஞானவந்தன் என்று அர்த்தம்.

ஸ்ருதி 'மதி:' என்னும் சொல்லினால் ஹனுமந்தனை வர்ணிக்கிறது. ஹனுமனை மதி: - நித்யமும், பரிபூர்ணனும், பரிசுத்தனுமான ஞாஸ்வரூபன் என்று ஸ்ருதி வர்ணிக்கிறது. இதையே 'மதிமான்' என்று சொல்ல வேண்டியிருந்தது. ஹனுஷப்த: ஞானவாசீ ஹனூமான் மதி ஷப்தித: ||

பீமன் என்றாலும், ருகாதி சப்த பிரமாணங்களை தரித்தவன் என்று அர்த்தம். ப்ருதமோ பீம இத்யுக்தோ ||

ஸ்ரீமதாசார்யரும்கூட அத்யாத்ம ஞான நேத்ரு எனப்படுகிறார். அத்யாத்ம எனப்படும் பகவந்தனின் ஞானத்திற்கு உடையவர் என்று அர்த்தம். அல்லது, பரமாத்மா சம்பந்தப்பட்ட ஞானத்திற்காக 37 நற்சாஸ்திரங்களை இயற்றியவர் என்று அர்த்தம்.

ஹனுமனெ மஹதத்வக்கபிமானியே ஸித்த:

வாயு பிரம்ம தேவதைகள், 24 தத்வங்களுக்கு அதிபதிகளாக இருக்கின்றனர். ப்ரக்ருதி, மஹத்தத்வ, அஹங்கார, மனஸ், ஐந்து ஞானேந்திரியங்க, ஐந்து கர்மேந்திரியங்கள், ஐந்து தன்மாத்ரங்கள், ஐந்து பூதங்கள், இவற்றிற்கு முறையே ப்ரக்ருதிக்கு மகாலட்சுமி, மஹத் தத்வத்திற்கு பிரம்ம வாயுகள், அஹங்காரத்திற்கு கருட சேஷ ருத்ரர், மனஸ்ஸிற்கு இந்திர காமர். ஷ்ரோத்ர, சந்திராதி திக் தேவதைகள், ஆகிய தத்வாபிமானி தேவதைகளுக்கும் தேவதைகள் ஆவர். விசேஷமாக மஹத் தத்வத்திற்கு அபிமானிகள். அனைத்து தேவதைகளும் அனைத்து தத்வங்களுக்கும் அபிமானிகளே. ஆனாலும், தாரதம்யம் அறிய வேண்டும் என்றே இத்தகைய இடங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

ஹனும வனஜ ஸம்பவனகெ அபேத:

வாயுதேவனே பிரம்மன் ஆவதால், அதாவது, பிரம்ம பதவியை அலங்கரிக்கப் போகிறவன். ஆகையால், அவனையும் பிரம்ம என்றே அழைக்கிறார்.

வாயுர்ஹி பிரம்மதாமேதி தஸ்மாத் பிரம்மைவ ஸ ஸ்ம்ருத: || பவமான சூக்தம் கூட 'பவமான: ப்ரஜாபதி:' என்கிறது. வாயுர்ஹ்யேஷ: ப்ரஜாபதி: என்றும் கூட ஸ்ருதி இருக்கிறது. தாத்பர்ய நிர்ணயத்திலும் ஆசார்யர் - வாயுவைத் தவிர மற்ற தேவதைகளுக்கு, பிரம்ம பதவி இருப்பதில்லை ஆகையால், வாயுவே பிரம்மதேவன் எனப்படுகிறான் என்கிறார். வாயோரன்யஸ்ய ந பிராம்ஹம் பதம் தஸ்மாத் ஸ ஏவ ஸ: || தா. நி. 2-34.

மனதின் வேகத்தைவிட வேகமானவன் வாயுதேவன். சஞ்சீவினி பர்வதத்தை ஒரே நொடியில் 50,000 யோஜன தூரம் தாண்டி கொண்டு வந்து, மறுபடி அதே 50,000 யோஜன தூரம் தூக்கி வந்து லட்சுமணனின் பிராணனை காப்பாற்றினான். இது 'ப்ராக் பஞ்சாஷத் சஹஸ்ரை:' என்று வாயுஸ்துதியில் சொல்லப்பட்டிருக்கிறது. இத்தகைய மனோஜவ வாயுதேவனாக இருந்து காக்கிறான். இந்த அம்சத்தை: தரத்ஸ மந்தீ தாவதி தாரா ஸுத்யஸேந்தஸ: || ஸ: - வாயுதேவன், தரன் - வேகமாக சஞ்சரித்தவாறு பக்தர்கள் இருக்கும் இடத்திற்கு. தாவதி - ஓடி வருகிறான்.

ஜீவர்களை பிராணாபானாதிகளிலிருந்து காக்கிறான் ஆகையால் 'ஜீவ' எனப்படுகிறான். ஜீவ என்னும் சொல், பிரம்மதேவனைக் குறிக்கிறது. ஜீவோ பிரம்மா. இத்தகைய முக்யபிராணன், விஜயவிட்டலனிலேயே மனதை வைத்திருக்கிறான்.

5. ககனு கலஷவ தந்து ஜகதொளு பெஸராத...

இந்த தாளத்தில், ஹனுமனின் மற்றும் கருடனின் சாமர்த்தியங்களை ஒப்பிட்டு பார்க்கிறார். கஷ்யப வினதெயரின் மகனே கருடன். மகா பராக்ரமி. ஞான, பல, ஐஸ்வர்ய, ஸௌந்தர்ய ஆகிய குணங்களால் சிறந்தவன் ஆகையாலேயே ஸ்ரீஹரிக்கு ப்ரியமாக இருந்தான்.

காலிலிருந்து முழங்கால் வரைக்கும் தங்க வண்ணம். நாபி வரைக்கும் தூய்மையான வெண்மை. அங்கிருந்து கழுத்து வரை சிவப்பு. தலை வரைக்கும் பச்சை வண்ணம். தலைக்கு மேல் கருப்பு வண்ணம். இவ்வாறு ஐந்து வண்ணங்களால் ஆனவன் கருடன். ஸ்ரீஹரிக்கு வாகனனாகி, அவரை தாங்கித் திரிகிறான். வீட்டை காக்கிறான். அவனின் எதிரிகளைக் கொன்று போடுகிறான்.

கருடன் வேதாபிமானி. வேதரிஷியும் ஆனவன் அவனே. ஸ்ரீஹரி வேதபிரதிபாத்யன். ஆகாஷத்தில் பாய்ந்தால் சாமகானம் பாடுகிறான். வக்ஷோச்சாரித ஸாமகீதமமலம் ||.

18. அவதார த்ரய சுளாதி

கருடன் விஷ பரிகாரகன். நைவேத்ய காலத்தில் தார்க்ஷ்ய முத்திரை காட்டுகிறோம். அவனின் கையில் அமிர்த கலசம் இருக்கிறது. அந்த அமிர்தத்தை அவன் குடிக்கவே வேண்டியதில்லை. ஸ்ரீஹரி அவனிடம், நீ அமிர்தத்தை குடிக்காவிட்டாலும், அஜராமரன் ஆகிறாய் என்று அருளியிருக்கிறார். அந்த அமிர்த கலத்தை பக்தர்களுக்குக் கொடுக்க என்று வைத்திருக்கிறான். ஸுதாபூர்ணம் ஹிரண்மயம் ததான: கும்பமபயம் ||. இத்தகைய கருடனுக்கும் பாம்பினைத் தின்ன வேண்டும் என்ற விருப்பம் இருந்தது.

ஹனுமந்தனோ இறக்கைகள் இல்லாமல் (அபக்ஷபாதி) சர்ப்பங்களை தின்னாமல் (அபோகபோக்தா), நூறு யோஜனை தூரம் தாண்டியவாறு பகவந்தனையே தாங்கிப் பறந்தவாறு வாழ்க்கையை நடத்துபவன். மனோஜவம் மாருத துல்ய வேகம் ||.

இவ்வாறாக வலிமை மற்றும் பராக்ரமத்தில், ஹனுமன், கருடனை மீறியவன். சூர்ய நாமக வாயுவின் மகனே கருடன்.

கருடன் அமிர்த கலசத்தைத் தாங்கி, பக்தர்களை காப்பாற்றுபவன். ஆனால், ஹனுமன், சஞ்சீவினி பர்வதத்தைக் கொண்டு வந்து, இறக்கும் தருவாயில் இருந்த கபிகளை காப்பாற்றியவன்.

பகவந்தன் தான் ராமனாக அவதரித்தபோது, மற்ற தேவதைகளையும் அவதரிக்குமாறு கூறினான். ஆனால், கருடனுக்கு அப்போது சேவா பாக்கியம் கிடைக்கவில்லை. அவன் அதற்காக வருத்தப்பட்டபோது, உனக்கும் சேவை செய்வதற்கு கண்டிப்பாக சந்தர்ப்பம் தருகிறேன் என்று ஸ்ரீஹரி கருடனுக்கு ஆறுதல் கூறினார்.

ராவணனின் புத்திரன் இந்திரஜித், அனைத்து வானரர்களையும் நாகபாஷத்தினால் கட்டிப் போட்டான். நாகபாஷத்தை விடுவிப்பதற்கு லட்சுமண, ஹனும, நான் ஆகியோர் சமர்த்தரே ஆனாலும், நாங்கள் அதனை விடுவிப்பதில்லை. நீ வந்து அந்த பாஷங்களை விடுவி. இதுவே உன் சேவை என்றான். அதைப் போலவே இந்திரஜித் நாகபாஷத்தினால் அனைத்து வானரர்களை கட்டிப் போட்டபோது, கருடன் வந்து அவர்களை விடுவித்தான்.

ஆனால், இந்த சேவையைவிட ஹனுமந்தன் சஞ்சீவினி கொண்டு வந்து அனைவரையும் பிழைக்க வைத்தது சிறப்பானதாகும்.

மிகவும் வலிமை மிக்க வீரர்கள் அனைவரும் போரில் இறந்தபோது, இந்திரஜித், தான் ருத்ர, பிரம்மர்களிடம் பெற்றிருந்த வரங்களின் காரணத்தால், யாரின் கண்ணிற்கும் தெரியாமல் அனைவரையும் சம்மோஹன அஸ்திரத்தால் கட்டிப் போட்டான். ராமன், ஹனுமன் இவர்களைத் தவிர மற்ற அனைவரும் மூர்ச்சை அடைந்தனர். விபீஷணன் ஹனுமந்தனுடன் வந்து ஜாம்பவந்தனை எழுப்பினான். உடனே, ஜாம்பவந்தன், ஹனுமான் வானர ஸ்ரேஷ்ட: ப்ராணான் தாரயேத் க்வசித் || என்றான். ஹனுமந்தன் உயிரோடு இருக்கிறானா?. அதற்கு விபீஷணன், ஏன் ஹனுமனை கேட்கிறாய்? என்றதற்கு, ஜாம்பவந்தன், ஹனுமந்தன் ஒருவன் உயிரோடு இருந்தால், வானர சைன்யமே அழிந்திருந்தாலும், நாம் வாழ்ந்ததைப் போலவே ஆகும். ஹனுமந்தன் உயிரோடு இல்லையெனில், ஆனால், வானர சைன்யம் இருந்திருந்தாலும், நாம் அனைவரும் இறந்ததைப் போலவே - என்றான்.

சஞ்சீவினி பர்வதத்தில் இருக்கும் ம்ருத ஸஞ்சீவினி, சந்தான கரணி, விஷல்ய கரணி, ஸவர்ண கரணி என்னும் மூலிகைகளைக் கொண்டு வா என்று ஹனுமனிடம் கூறியபோது, ஹனுமன் 50,000 யோஜன தூரத்திற்கு பாய்ந்து, மூலிகைகள் கிடைக்காதபோது, அந்த மலையையே தூக்கிக்கொண்டு, அனாயாசமாக இலங்கைக்கு வந்து சேர்ந்தான். இது அவனுக்கு ஒரு சிறிய குச்சியைப் போல இருந்தது. ஆகையாலேயே ஒரு கையினால் இன்னொரு கைக்கு பந்து போல வைத்துக்கொண்டு வந்தான். இதையே 'த்ருணவ மாடி எகரிஸிகொண்டு' என்கிறார். இதைத்தவிர நூறு யோஜன தூரம் அந்த மலையை தூக்கி வந்தாலும், ஹனுமனுக்கு சிரமமே ஆகவில்லை. இதையே தாசர் - எளௌகெயிந்த - என்கிறார். அந்த மலைகூட இவனுக்கு மழைக்காலத்தில் விழும் ஆலங்கட்டியைப் போலவே இருந்தது. ஆணி கல்லந்தெ ஹாரிஸுத்தா - என்னும் சொல் இதே அர்த்தத்தையே சொல்கிறது. எதிரியான இந்திரஜித்தின் மாயையினால் மோகம் கொண்ட கபிகள் அனைவரும் எழுந்து அமர்ந்தனர். இவ்வாறு கபிகளுக்கெல்லாம் பிராணதானம் செய்த மகானுபாவன் ஹனுமந்தனே. மறுபடி அந்த

மலையை அங்கேயே இருக்குமாறு தூக்கி எறிந்தது அற்புதமான செயலாகும்.

ஜகத ஸேதுவெ நாம விஜயவிட்டல:

சாந்தோக்யத்தில் - அனைத்து உலகங்களும் இவனிடம் அடைக்கலம் கொண்டிருப்பதால், ஸ்ரீஹரிக்கு சேது என்று பெயர். ஏஷ ஸேது: விதாரணாத்.

மோட்சத்திற்கு செல்வதற்குத் தேவையான பாலம் ஸ்ரீஹரியே. அம்ருதஸ்யைஷ ஸேது: ||

அனைத்து ஜீவிகளுக்கும் பகவந்தனுக்கும் நடுவே சேதுவைப் போல இருக்கும் வாயுதேவனுக்கும் 'ஜகத்திகெ ஸேதுவே' என்று சொல்ல வேண்டியதாக இருக்கிறது. ஜீவாத்மர்களையும், பரமாத்மனையும் சேர்க்கும் தாழ்ப்பாளே வாயுதேவர். இத்தகைய வாயுதேவனின் பராக்கிரமம் - கருடனின் பராக்கிரமத்தைவிட அதிகம் என்று விஜயவிட்டலன் ஒருவனுக்கே தெரிந்திருந்தது.

<u>**6. ரணதொளு கணிஸன்ன அவதாரவாத லக்ஷண...**</u>

ராமாயண போரில், பிரம்மதேவர் கொடுத்த பாணத்தை ராவணன், ராமன் மேல் விடமுடியாமல், லட்சுமணன் மேல் எறிந்தான். லட்சுமணன் மூர்ச்சை அடைந்தான். அப்போது ராவணன் லட்சுமணனை சிறை பிடிக்க வேண்டும் என்று விரும்பி வேகத்துடன், லட்சுமணனிடம் வந்தான். லட்சுமணனை தூக்க முயன்றபோது லட்சுமணனுக்கு மூர்ச்சை தெளிந்து தன் மூலரூபத்தை சிந்தித்தான்.

லட்சுமணன் தன் மூலரூபத்தை சிந்தித்த உடனேயே, மூலசேஷ தேவனின் (பணிபன்ன) வலிமை, பாரம் ஆகிய குணங்கள் அனைத்தும் லட்சுமணனின் தேகத்தில் வந்தன. 1,000 தலைகளைக் கொண்ட சேஷனின் ஒரு தலையில் பாதாளாதி ஏழு உலகங்களைக் கொண்ட பூமி, ஒரு கடுகைப் போல தோன்றுகிறதாம். அவனின் ஒரு தலைக்கே இவ்வளவு சாமர்த்தியம் இருந்தபோது, மற்ற தலைகளின் சாமர்த்தியம்

எவ்வளவு இருக்கலாம்?. ராவணன் 20 கைகளால் தூக்க முயன்றாலும், லட்சுமணனின் தேகம் நகரவில்லை.

ராவணனின் இந்த முயற்சியைப் பார்த்த ஹனுமந்தன், தன் முஷ்டியால் ராவணனை ஒரு அடி அடித்து மூர்ச்சையாக்கி, மூல ரூபத்தின் பலபூர்ணனாக இருக்கும் லட்சுமணனை அனாயாசமாக தூக்கிக்கொண்டு, ராமனிடம் வந்தார். ப்ரக்ருஹ்ய ஸௌமித்ரி முரங்க ஷாயின: ஜகாம ராமாக்யதனோ: ஸமீபம் | ஸௌமித்ரி முத்தர்துமலம் ஹ்யஸௌ ஹபி: ||. ஹனுமந்தன், லட்சுமணனை ஸ்ரீராமனிடம் கொண்டு வருகிறார் என்றால், லட்சுமணனைப் போன ஸ்ரீராம பக்தர்கள் அனைவரையும் பகவந்தனிடம் கொண்டு சேர்க்கிறார் என்றே அர்த்தம் கொள்ள வேண்டும். ஸ ஏனான் பிரம்மகமயதி ||.

இந்த சந்தர்ப்பத்தினால், சேஷனைவிட ஹனுமந்தன் சிறந்தவன். வலிமையிலும் சிறந்தவன் என்று தெரிகிறது. இது ஒன்றும் வியப்பான விஷயம் அல்ல.

பாதாளத்தில் சேஷதேவரின் கீழ்பாகத்தில் கூர்ம ரூபத்தினால் வாயுதேவன் எப்போதும் சேஷதேவரை தாங்கி நிற்கிறான். வாயோ: புச்சம் ஸமாஸ்ரித்ய சேஷஸ்து ப்ருதிவீமிமாம் ||.

இந்த கதையையே விஜயதாசர் - 'ரணதொளு பணிபன்ன அவதாரவாத லக்ஷ்மணனு பித்தாக, மூலரூப ஸ்மரிஸிரெ, கணனெ இல்லதெ ஒந்து கரதல்லி எத்தி' என்றிருக்கிறார்.

ராவணனு ஸோஜிகபொந்தி ஹனுமன பொகளித:
இது இன்னொரு சம்பவத்தை உதாரணமாகக் காட்டுகிறது.

தன் சேனாதிபதிகள் ராமனால் கொல்லப்பட்டபோது, ராவணன் தானே போருக்குப் புறப்பட்டான். அவனுடன் அனேக கோடி சைன்யங்களும் வந்தன. ராவணன், ராமனின் படையினரை, அங்கதனை, சுக்ரீவன் ஆகியோரையும் மூர்ச்சையில் தள்ளினான். அப்போது ஹனுமந்தன், சேஷனின் தலைகளைப் போல இருக்கும் தன் தோளினை, ராவணனின் இதயத்தில் இடித்தார். அவன் தன் 10 முகங்களிலிருந்து ரத்தத்தை கக்கினான். சீதையை

துன்புறுத்தியதற்காகவே இப்படி அடித்தார் என்று மத்வவிஜயம் சொல்கிறது. முஷ்டி பிரஹாரம் தஷகாம ஸீதா ஸந்தர்ஜனாக்ர்யோத்தரம் ||.

இந்த அடியையும் ஹனுமந்தன் பலமாக அடிக்கவில்லை. ஒரு வேளை அப்படி பலமாக அடித்திருந்தால், கண்டிப்பாக ராவணன் இறந்திருப்பான். 'மூன்று பிறவிகளிலும் என்னாலேயே கொல்லப்படுவீர்கள்' என்றிருந்த ஸ்ரீஹரியின் வாக்கினை காப்பதற்கு, எப்படி அடித்தால் அவன் இறப்பதில்லையோ, அப்படி அடித்தார்.

சிறிது நேரம் கழித்து மயக்கம் தெளிந்த ராவணன், ஹனுமந்தனிடம் - உனக்கு சமமான புருஷர் உலகில் வேறு யாரும் இல்லை. வேறு யார்தான் என்னை இந்த நிலைக்கு தள்ள முடியும்? - என்றான். த்வயா ஸமோ நாஸ்தி புமான் ஹி கஷ்சித் ||. இந்த வாக்கில் ராவணனின் அனுபவம் இருக்கிறது. இதற்கு முன், வாலி, கார்த்தவீர்யார்ஜுனன் ஆகியோரிடமிருந்து அடி வாங்கியிருந்தான் ராவணன். அவர்கள் இருவரைவிடவும் ஹனுமந்தனே வலிமையானவன் என்று எதிரியே ஒப்புக் கொண்டதைப் போல ஆயிற்று.

ஹனுமந்தனும் - நான் உன்னை பலமாக அடிக்கவில்லை. மெதுவாகவே அடித்தேன். அதற்கே நீ திரும்ப எழுந்திருக்கவில்லை. நான் அடித்தபிறகும் நீ பிழைத்திருக்கிறாய் ஆகையால், நான் மெதுவாகவே அடித்தேன் என்று அறி - என்றான். அத்யல்பமேதத் யதுபாத்த ஜீவித: ||. இவ்வாறு எதிரியிடமிருந்தே புகழப்பட்ட ஹனுமனுக்கு இணை வேறு யார்தான் இருக்கின்றனர்?.

எணெயாரு ஸுராஸுரகணதேளு:

இந்த வாக்கியத்தால், ஐதரேய உபநிஷத்தில் வரும் ஒரு மகிமை தெரிய வருகிறது. கண் முதலான அபிமானி தேவதைகள், தங்களுக்குள் பிரச்னை வந்து சண்டையிட்டுக் கொண்டனர். நாம் அனைவரும் ஒவ்வொருவராக பிரம்மனின் சரீரத்திலிருந்து வெளியே செல்வோம். யார் சென்றால் சரீரம் கீழே வீழ்கிறதோ,

நமக்குள் அவனே சிறந்தவன் என்று அறிவோம்' என்றனர். அக்னி, சூர்ய ஆகிய தேவதைகள் வெளியே சென்றபோது, அந்த இந்திரியங்களின் செயல்கள் மட்டுமே நின்றன. ஜீவன் போகவில்லை. வாயுதேவர் வெளியே வரும்போதே, சரீரம் கீழே விழுந்தது. அடுத்து அனைத்து அபிமானிகளும் ஒவ்வொருவராக பிரம்ம சரீரத்தில் நுழைந்தனர். ஆனாலும் சரீரம் எழவில்லை. வாயுதேவர் நுழைந்தபின், சரீரம் எழுந்து நின்றது.

இவ்வாறு சரீரத்தை பிழைக்க வைக்கும் சாமர்த்தியம் உள்ள வாயுதேவனே அனைத்து தேவதைகளைவிடவும் சிறந்தவன் ஆகிறான். த்வமுக்தமஸி - என்று அனைவரும் கொண்டாடினர். ஜ்யேஷ்ட: ஸ்ரேஷ்டோ வசிஷ்டஸ்ச ஸம்பதாயதனம் ததா | வாயுரேவ மஹான் தஸ்ய ப்ரஸாதாத் ||. தேவதைகளுக்கெல்லாம் தேவதை வாயுதேவனே ஆகிறான். வாயுவிற்கு ஜனார்த்தனனே ஸ்வாமி.

தேவானாம் தேவதா வாயு: வாயோ: தேவோ ஜனார்த்தன: || ப்ரு. உப. ||. யாகங்களில் அஷ்வமேதமும், வெளிச்சம் கொடுப்பவைகளில் சூரியனும், த்விபதிகளில் பிராமணனும், தேவர்களில் ஸ்ரேஷ்டன் வாயுதேவன் - மகாபாரதம். இவ்வாறு வாயுதேவனின் அவதாரமான ஹனுமனுக்கு பராக்ரமத்தில் தேவானு தேவதைகளில் யார் இணை இருக்கிறார்கள்?.

ஹனுமந்தன் 88 கோடி சேனாதிபதிகளை கையால் அடித்துக் கொன்றால், பீமன் - 11ல் 6 அக்ஷோஹிணி சைன்யத்தை அழித்தான். ஸ்ரீமத்வர் 21 துர்மதங்களை விமர்சித்தார். பூபார-ஹரணத்தில் முக்ய பாத்திரம் வகித்த பீமசேனனைக் கண்டால், ஸ்ரீகிருஷ்ணனுக்கு மிகவும் பிரியம்.

விஜயவிட்டலதாஸர ப்ரேமகெ:

விஷ்ணுர்மே பரம ஸுஹ்ருத் - என்பதன் சாரம் இது. ஈஷாவாஸ்யத்தில் ஸ்ரீமத்வர் - எனக்கு மிகவும் பிரியமான நண்பன் நாராயணன் என்றிருக்கிறார். மமாப்யதிக மித்ராய நமோ நாராயணாய தே - என்கிறார்.

<u>7. பீமனாத ஹிடிம்பாதி ஆ மாகதன ஸீளித...</u>

18. அவதார த்ரய சுளாதி

இதில் பீமசேனரின் மகா பராக்கிரமம் குறிப்பிடப்படுகிறது. போரில் ஹனுமந்தன் பயங்கரமாக சிம்ம நாதம் செய்து கொண்டிருந்தான். பீமசேனனும்கூட எதிரிகளுக்கு பயம் உண்டாகுமாறு சிம்ம நாதம் செய்து கொண்டிருந்தான். இந்த கர்ஜனையிலேயே எதிரிகள் உயிரை விட்டிருந்தார்கள்.

சௌகந்திகா வனத்தை காத்துக் கொண்டிருந்த ஒரு லட்ச தைத்யர்களுடன் வாக்யுத்தம் செய்து, அவர்களை பதில் அளிக்க முடியாததாக செய்த பீமசேனர் - பீமநாத என்னும் புகழுக்கு உரியவரே. பகவத் த்வேஷிகள் பயப்படுமாறு பயங்கர கர்ஜனை செய்தார். இது பீமாவதாரத்தில் விசேஷமாக காட்டப்பட்டிருக்கிறது.

பாண்டவர்கள் அரக்கு மாளிகையில் இறந்தனர் என்று துரியோதனாதிகள் அறிந்தனர். பீமசேனனோ, பாண்டவர்களை தூக்கிக் கொண்டு ஹிடிம்ப வனத்திற்கு வந்தான். ஹிடிம்பன் பயங்கரமான அசுரன். பீமன் மற்றும் ஹிடிம்பனுக்கு போர் வந்தது. இந்தப் போரில் மரங்கள், பாறைகள், மலைகள் பொடிப்பொடியாயின. கடைசியில் பீமன், அசுரனின் இதயத்தில் அடித்தபோது அவன் இறந்து விழுந்தான். பலராமனாலும் கொல்வதற்கு அசாத்தியமான ஹிடிம்பன், பீமனின் ஒரே குத்தில் இறந்தான்.

ஆ மாகதன ஸீளித - என்பதில், ஜராசந்தனின் வதையை தெரிவித்திருக்கிறார். பிரம்மனிடமிருந்து, ருத்ரனிடமிருந்து வரம் பெற்றிருந்தான். சண்ட கௌஷிகனின் ஆசிர்வாதம் பெற்றிருந்தான். ஹரிவாயு த்வேஷி. சிவ சர்வோத்தம சாஸ்திரத்தை படித்தான். சைவ சாஸ்திர பிரசாரம் செய்தான். விஷ்ணு பக்தர்கள் அதனை ஒப்பாதபோது, அவர்களை சிறையில் அடைத்தான்.

தர்மராஜன், ராஜசூயா யாகத்தை செய்தான். இதற்கு ஜராசந்தன் தடையாக இருந்தான். ஜராசந்தன் இருக்கும் வரை ராஜசூயா நடக்காது - என்றான். க்வ ராஜசூயமத்ய மே ஜராஸுதே து ஜீவதி ||.

அப்போது பீமசேனன் - எந்தவொரு பெரிய செயல்களை செய்ய வேண்டுமென்றாலும், தகுதி, ஹரி அருள், முயற்சி - இந்த மூன்றும்

வேண்டும். அவை மூன்றும் நம்மிடம் இருக்கிறது. நானே அவனைக் கொல்வேன் என்றான். பீமார்ஜுன கிருஷ்ணர் சென்று போருக்கு அழைத்தனர்.

முதலில் வாக்யுத்தம் நடந்தது. பிறகு கதாயுத்தம். பிறகு ஜராசந்தனை இரண்டாகக் கிழித்துப் போட்டான். இந்த யுத்த என்னும் ஹோமத்தில் ஜராசந்தனை பகவந்தனுக்கு பசுவாக ஆக்கி த்ருப்திப்படுத்தினான். ராஜசூய யாகம் எவ்வித தடைகளும் இன்றி நடந்தது. மத்வ நாமத்தில் ஸ்ரீபாதராஜர் இவ்வாறு கூறுகிறார். ராஜகுல வஜ்ரனெனிஸித மாகதன ஸீளி । ராஜஸூய யாகவனு மாடிஸிதனு ||.

விஷ்ணு த்வேஷியான ஜராசுதனைக் கொன்று ரமேஷனுக்கு யக்ஞத்தை செய்தபோது, ராஜசூயா யாகம் செய்தாலும்கூட ஸ்ரீஹரி அவ்வளவு மகிழ்ச்சி அடைவதில்லை. இந்த காரியத்தால் ஸ்ரீகிருஷ்ணன் மிகவும் மகிழ்ந்தான். நிகிலமகபுஜம் தர்பயாமாஸித|

தாமஸர பரிஹரிஸித:

பீமசேனன் மற்றும் திரௌபதி பதரியில் இருந்தனர். கருடனின் இறக்கையின் காற்றில், சௌகந்திகா புஷ்பம் பூமிக்கு வந்தது. இத்தகைய புஷ்பம் தனக்கு வேண்டும், கொண்டு வந்து கொடுக்கவும் என்று கேட்டால் திரௌபதி. சௌகந்திகா புஷ்பத்தைக் கொண்டு வர சென்றபோது, ஹனுமந்தனுடன் சந்திப்பு நிகழ்ந்தது. அவனிடமிருந்து அனுமதி பெற்று, குபேரனின் சரோவரத்தில் இருந்த சௌகந்திகா புஷ்பங்களை பறிக்கச் சென்றபோது, நூறு கோடி க்ரோதவஷர் என்னும் தைத்யர்கள் வந்து போர் புரிந்தனர். மணிமந்த தைத்யன் பீமனின் மேல் பாய்ந்தான். பீமசேனர் அவர்கள் அனைவரையும் கொன்றார்.

இவ்வாறு, ருத்ரதேவரிடமிருந்து வரத்தைப் பெற்றிருந்த 300 கோடி தைத்ய அதமர்களைக் கொன்று, தம் மனைவிக்கு சௌகந்திகா புஷ்பத்தைக் கொண்டு வந்து கொடுத்தார் பீமசேனன்.

ஸ்ரீமதாசார்யராகி குமதகள:

இதற்கு பழிக்குப்பழி வாங்குவதற்கு, மணிமந்தன் முதலானோர், மறுபடி பூமியில் பிறந்தனர். பூமியில் பிரம்மாஹம், நிர்குணன்

என்று பிரசாரம் செய்தனர். விஷ வ்ருட்சத்தைப் போல இருக்கும் இந்த தவறான சாஸ்திரத்தை தைத்யர்கள் ஏற்றுக் கொண்டனர். நான் பரபிரம்மனாக இருக்கிறேன் என்று அப-பிரசாரம் செய்தனர். இவர்களை வெல்வதற்கு அதே பீமன், பகவந்தனின் ஆணைப்படி பூமியில் மறுபடி அவதரித்தார்.

அவர் அந்தக் காலத்தில் இருந்த, பாரதிவிஜய முதலான 21 மதங்களையும், சரியல்ல என்று நிராகரித்தார். பாரதிவிஜய, ஸம்விதானந்த, பிரம்மகோஷ, ஷதானந்த, உத்வர்த்த விஜய, ருத்ரபட்ட, வாமன, யாதவ ப்ரகாஷ, ராமானுஜ, பர்த்ரு பரபஞ்ச, த்ரவிட, பிரம்மதத்த, பாஸ்கர, பிஷாச, வ்ருத்திகார, விஜயபட்ட, விஷ்ணுக்ராந்த, வாதீந்திர, மாதவதாஸ, சங்கர என 21 பாஷ்யகாரர்கள் என்னும் பெரிய காட்டினை ஞானாக்னியினால் சுட்டுப் பொசுக்கினர்.

இதற்காக 37 கிரந்தங்களை இயற்றி, ஸர்வ எனப்பட்ட பகவந்தனே மூல என்னும் ஹரிசர்வோத்தமத்வ, வாயு ஜீவோத்தமத்வத்தை, நிறுவினார், மத்வர். இதன் வாதத்தை தத்வவாத என்கிறார்கள். ஹரிபக்தரான வைஷ்ணவர்களுக்கு முக்திமார்க்கத்தை காட்டினார்.

யோ விப்ரலம்ப விபரீதமதி ப்ரபூதான்
வாதான் நிரஸ்ய க்ருதவான் புவி தத்வவாதம் |
ஸர்வேஷ்வரோ ஹரிரிதி ப்ரதிபாதயந்தம் ஆனந்ததீர்த்த
முனிவர்ய மஹம் நமாமி || -- என்பதன் தாத்பர்யமே இது.

ராம நாம விஜயவிட்டலன:

காம: காமக்ருத் காந்த: என்று விஷ்ணு சஹஸ்ர நாமத்தில் காம என்பது விஷ்ணுவின் பெயரே ஆகிறது என்று வருகிறது. க என்றால் சுகம். அம என்றால் எல்லையற்றவன். அனந்த சுகபரிபூர்ணன் என்று அர்த்தம். காம நாமனான ஸ்ரீஹரியை மெச்சினார்.

8. வனஜாண்டகளெல்ல தினதின பாலிப...

உலகத்தில் பிராணிகளை படைப்பவர் பிரம்மனாக இருந்தால், வாயுதேவர் அந்த பிராணிகளின் உள்ளே மற்றும் வெளியே இருந்து அவர்களை காக்கிறார்.

பிரம்மாண்டத்தின் உள்ளே இருக்கும் 14 உலகங்களில் இருக்கும் அனைத்து ஜீவராசிகளையும், அதிலும் முக்தி யோக்யர்களையும், பிரம்மதேவரின் தின கல்பத்தில், ஹனுமாதி ரூபங்களில் அவதரித்து, காக்கும் மகானுபாவர் இந்த வாயுதேவர். ஆகையாலேயே, ஸ்ரீஹரிக்கு பரமப்ரியராக இருக்கிறார். இவரின் மூலமே ஸ்ரீஹரியின் பிரசாதம் கிடைக்கிறது.

அப்யச்யுதோ குருத்வாரா ப்ரஸாதக்ருதஹம் த்விதி || தாத். நிர். 26-52. வாயுதேவர் சர்வதேவோத்தமர் என்னும் ஞானத்தைவிட ஸ்ரீஹரிக்கு ப்ரியமான விஷயம் வேறொன்று இல்லை. சர்வதேவோத்தமோ வாயுரிதி ஞானான்ன சாபரம் | ப்ரியயஸ்தி ஹரே: ||

ஸ்ரீஹரியே சர்வோத்தமன் என்று நமக்குத் தெரிந்தால், வாயுதேவனுக்கும் அதுவே மிகவும் பிடித்தமான விஷயம் ஆகும். ததா வாயோ: ஹரேர்வித: ||

***

---

19. யந்த்ரோத்தாரக ஹனுமத் சுளாதி

த்ருவதாள

யந்த்ரோத்3தா4ரக ஹனுமா ஸுரஸார்வபௌ4மா
யந்த்ர தா4ரக எனகெ3 மனஸினொளகெ3
யந்த்ர வாஹனன பூர்ணத3யதி3ந்த3 ஸக
லாந்தரியாமியாகி3 சராசரதி3ல்லெ
தந்த்ரவனு நுடி3ஸுவ மந்த்ரி ஈதனு காணோ ஸ்வா
தந்த்ர்ய புருஷ விஜயவிட்டலன்ன நிஜ ப4க்த
அந்தரவில்லத3 தன்ன ஸ்துதிபரன்ன பொரெவ ||1

மட்ட தாள

வ்யாஸராயரு தம்ம மீஸல மனத3ல்லி நிஜ
த்3யாஸன த்4யானத3லி ஸ்ரீஷன பூஜிஸலு
ஆ ஸமயதொ3ளு ஸுளிது3 நிந்து3
ஈ ஷிலெயொளகெ3 ப்ரகாஷ மானவாகெ3
த்ரிஸாமா விஜயவிட்டலன ஸேவெ ஹா
ரெயிஸி இல்லெ மெரதெ3 தா3ஸரன பொரதெ3 ||2

த்ரிவிடி தாள

மூருகோடி பீஜாகாரா மந்த்ரவ ஜபிஸி
தா4ரியனு எது3 நின்னய ஸுந்த3ர
மூருதியனு நிர்மாணவனு மாடி3த3னு
ஆருக்ஷோணி வலயாகாரா வானர ப3த்3த4
சாரு ஷோபி4த துங்கா3தீரத3ல்லி வாஸ
வீரா விஜயவிட்டலன்ன
காருண்யத3லி க3னுகு3ண்யவாகி3 நிந்தெ3 ||3

அட்ட தாள

ஒந்து3 கோடி பீ3ஜ மந்த்ர

தி3ந்த3 ஸூத்1த1 யந்த்ரவ ப3ரிஸி
அந்து3 ப்ராண ப்ரதிஷ்டெய மாடி3
நிந்தி3ரிஸித3ரு நின்ன மந்த3ஹாஸதி3 வ்யாஸ முனிக3ளு
ஒந்து3 கரத3லி ஜபமாலெ
ஒந்து3 கரா நாபி4 கௌகெ3
சந்த3தி3ந்த3 பது3 மாஸன
தி3ந்த3 குளிது நித்ய நித்யா
நந்த3 விஜயவிட்டலன்ன
வந்தி3ஸி வரக3ள கொடு3த
ப3ந்த3 நரர பாலிஸூத்த ||4

ஆதிதாள

பூ4த ப்ரேத பிஷாச பீடெ3
வாத ஷீர ஜ்வர மிக்காத3
யாதனெ நானா கடின பீ4தி மத்தெ
யாதர்யாதரர்த்த4 பேக்ஷித தெரத3லெ
ஆதுரதி3ந்த3லெ கொட்டு பாதகவ ஹரிஸி
பூ4தப்4ருதெ விஜயவிட்டலன
தூ3தரொளு ஸ்ரேஷ்ட நீதா ||5

ஜதெ

வ்யாஸமுனி பூஜிப யந்த்ரோத்தா4ரக ஹனுமா
ஈஷானா விஜயவிட்டலன தா3ஸர ப்ரீயா ||6

***

ஹம்பியில் இருக்கும் பழமையான சீதாராம பிரதிமையின் தியானத்தில் இருந்தார் ஸ்ரீவியாசராயர். பகவந்தனை தரிசிக்க வேண்டும் என்ற விருப்பத்தில் இவ்வாறு தியானம் செய்து கொண்டிருந்தார். ஸ்ரீராமனை தியானித்தபோது, அவரின் எதிரில் இருந்த ஒரு பாறையில் ஹனுமந்தன் தோன்றினான். உடன் அந்த சிலையிலிருந்து தாவி மறைந்தான். இவ்வாறே 12 முறை நடந்தது. 13ம் முறை ஸ்ரீவியாசராஜர் ஹனுமன் பாய்ந்து

19. யந்த்ரோத்தாரக ஹனுமத் சுளாதி

போகாதவாறு யந்திரம் வரைந்தார். அந்த 13ம் ஹனுமன், யந்திரத்திலேயே பக்தனுக்காக ஸ்திரமாக நின்றான். அன்று மார்கசிர த்ரயோதசி. ஹனுமத் விரத நாள். இந்த இடத்தின் மகிமை என்ன என்று ஸ்ரீவியாசராஜர் சிந்தித்தார். ஹனுமன் அவருக்கு குறிப்பால் உணர்த்தினான். நானும் ஸ்ரீராமதேவரும் முதன்முதலில் சந்தித்த இடம் இதுவே. இதே இடத்தில் என்னை ஸ்தாபனம் செய்யுங்கள் என்றான்.

அதைப் போலவே அந்த யந்திரத்தில் நின்ற ஹனுமந்தனை தந்த்ரசாரோக்த பிரகாரமாக ஸ்ரீவியாசராஜர் பிரதிஷ்டாபனம் செய்தார். பிரதான பிராணனை சுற்றிலும், முன்னர் பாய்ந்து சென்ற 12 கபிகளை, அலங்கரித்தார். புரந்தரதாசரை அங்கு பூஜா கைங்கர்யத்திற்காக இருக்கச் செய்தார். இந்த ஹனுமந்தனின் புகழ் அனைத்து திசைகளிலும் பரவியது. ராஜ மகராஜர்கள் இங்கு வந்து பூஜை செய்வித்து, அடுத்த ஆறு மாதங்களில் தங்களின் விருப்பங்களை நிறைவேற்றிக் கொண்டனர்.

புரந்தரதாசர் இங்கு பூஜை செய்து, மத்வபதியைப் பெற்றார். மத்வபதி, தான் கொண்டு வந்த நைவேத்யத்தை, தன் கையால் தானே இந்த ஹனுமனுக்கு உண்வித்தான். இத்தகைய ஹனுமனை விஜயதாசர் தரிசித்தார். வியாசராஜர் செய்த சித்திரத்தை பார்த்தார் - பக்தர்களுக்காக இந்த சுளாதியை இயற்றினார்.

<u>1. யந்த்ரோத்தாரக ஹனும ஸூரஸார்வபௌம ...</u>

யந்திரத்தில் தன்னை ஸ்திரமாக நிறுத்திக் கொண்ட ஹனுமந்தனே. நீ, ருத்ர கருட சேஷாதி தேவதைகளுக்கும் ஞானாதி தானங்களை அருளி, அவர்களுக்கெல்லாம் ஸார்வபௌமன் எனப்படுகிறாய். இந்த சரீரம் என்னும் யந்திரத்தை தரித்திருப்பவனும் நீயே. இது உபநிஷத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

நீ என் மனதில் வந்து தரிசனம் கொடு. சமஸ்த பிரபஞ்ச என்னும் யந்த்ரத்தை நடத்துபவனான ஸ்ரீஹரியின் பரமானுக்கிரகம் உன் மேல் இருக்கிறது. ஆகையாலேயே அவனின் ஆணைப்படி

ஒவ்வொரு தேவதைகளிலும், புருஷர்களிலும், பிராணிகளிலும், அந்தர்யாமியாக இருந்து அனைத்து செயல்களையும் நடத்துபவனாக இருக்கிறாய்.

சராசர பிரபஞ்ச என்னும் 14 உலகத்தின் மகாராஜன் ஸ்ரீஹரி என்றால், நீ அவனின் ஆணைப்படி அனைத்து தந்த்ரங்களையும் நடத்தும் பிரதான மந்திரியாக இருக்கிறாய். இத்தகைய இடத்தை உனக்குக் கொடுத்திருக்கும் பகவந்தனுக்கு நீ திடமான பக்தனாக இருப்பதே சாட்சி. இதனை ஸ்ரீராமனே சொல்லியிருக்கிறார்.

சுக்ரீவாதி கபிகளுக்கு மோட்சம் கொடுக்க வேண்டுமெனில், அவர்கள் செய்த சேவைகளுக்கு பிரதிபலன் கொடுத்ததைப் போல ஆகிறது. ஆனால், சகஜ பக்தனான அவனுக்கு முக்தியைக் கொடுத்தாலும், அது தக்க பிரதிபலனைக் கொடுத்தைப் போல ஆகாது என்றே, சத்யலோகாதிபத்யம் என்னும் சஹபோகத்தைக் கொடுத்தார்.

ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரனான ஸ்ரீஹரிக்கு உண்மையான தாசனாக இருப்பவன் ஹனுமன். நிர்வ்யாஜ்யபக்தி, நிஜமான வைராக்கியம், ஞானாதிகளால் ஸ்ரீஹரியை மகிழ்வித்தவன்.

ஸாத்விக பக்தர்கள் எந்தவொரு எதிர்பார்ப்பும் இல்லாமல், பலன்களை எதிர்பார்க்காமல், தன்னை வணங்கினால், ஸ்ரீஹரி அவர்களை விட்டுவிடாமல் அருள்வான்.

2. வியாஸராயரு தம்ம மீஸலமனதல்லி...

ஹனும பிரதிமையை ஸ்ரீவியாசராஜர் நிறுவிய காரணம் இங்கு சொல்லப்படுகிறது.

வியாஸராஜர் இப்போது பிராணதேவர் இருக்கும் சிலையின் முன்னால் அமர்ந்து, பகவந்தனுக்காக தியானத்தில் ஈடுபட்டிருக்கிறார். பகவந்தனை பிரணவாதி மந்திரங்களால் வணங்கிக் கொண்டிருக்கிறார். அப்போது அவரின் முன் இருக்கும் பெரிய சிலையில் ஹனுமந்தன், கபி ரூபத்தில் காட்சி அளித்தான். மிகவும் ஒளிமயமான கபி, அந்த சிலைக்குள் அழகாக தென்பட்டது.

கபிரூபி ஹனுமந்தன், அங்கேயே இருந்த சீதாராமரின் பூஜையை செய்ய வேண்டும் என்று காட்சியளித்தான்.

த்ரி ஸாமா விஜயவிட்டலன ஸேவெ ஹாரையிஸி |

வியாசராஜர் ஸ்ரீஷனின் தியானத்தில் இருந்தபோது, கபீஷன் வந்து நின்றது எதற்கு என்று சிந்திக்க, நான் இங்கேயே இருந்து என் ஸ்வாமியின் பூஜையை செய்வேன். என்னை இங்கே சிலையில் விதிப்படி பிரதிஷ்டாபனம் செய்யுங்கள் என்று வியாசராஜரிடம் கூறினார்.

ஜீவாத்மன் பரமாத்மனிடம் செல்வதற்கான வழியில், ஹனுமந்தனின் உதவி கண்டிப்பாக தேவை என்பதை அறிந்தார். உடனே பிரதிஷ்டாபனம் செய்வதற்கு தயார் ஆனார்.

<u>3. மூருகோடி பீஜாகார மந்திரவ ஜபிஸி....</u>

வியாசராஜர் பிரதிஷ்டாபனம் செய்த விதத்தை தெரிவிக்கிறார்.

ஓம்கார மந்திரத்தை (பீஜாகார மந்திரம்) மூன்று கோடி முறை ஜெபித்தார். அதனை அந்த சிலையில் இருந்த ஹனுமனுக்கு விசேஷ சன்னிதானம் ஆகட்டும் என்று சமர்ப்பித்தார். சிலையில் எவ்வாறு காட்சி அளித்தானோ, அதன்படியே நிர்மாணம் செய்தார். இதற்கு முன்னர் 12 கபிகள் பாய்ந்து சென்றன. அவற்றை இந்த சிலையில் வரவேண்டும் என்று பிரார்த்தித்தார். திசைக்கு இரண்டு கபிகள் என்று, ஆறு மூலைகளில் 12 கபிகளை நிறுத்தினார். இவ்வாறு துங்கா நதி தீரத்தில், விஜயவிட்டலனின் ஆணைப்படி, ஹனுமந்தன் வந்து சன்னிதானம் கொண்டார்.

<u>4. ஒந்து கோடி பீஜமந்திரதிந்த ஸுத்தயமத்ர பரிஸி...</u>

பிராணபிரதிஷ்டை இல்லாமல் ஹனுமனின் சர்வாங்கங்கள் இங்கு தென்படாது என்பதால், மறுபடி ஒரு கோடி பிரணவ மந்திரத்தை ஜெபித்தார். சுற்றிலும் யந்திரத்தை எழுதினார். பிராணபிரதிஷ்டை செய்தார். கோடி மந்திரத்தை சமர்ப்பித்தார். மந்தகாச புன்னகையுடன் வியாசராஜர் ஒரு கையில் ஜப மாலை, இன்னொரு

கை நாபியிலிருந்து கீழே இருக்குமாறு பிரார்த்தித்தார். அப்படியே ஹனுமன் வந்து நின்றான்.

ஒவ்வொரு ஜீவர்களுக்குள்ளும் இருந்து, தினந்தோறும் 21,600 ஹம்ஸ மந்திரத்தை ஜபித்து, அதனை ஸ்ரீஹரிக்கு அர்ப்பணம் செய்பவன் இவனே என்று அறியுங்கள். மற்றும் நாபியின் கீழ் இருக்கும் குஹ்யேந்திரியங்களை கட்டுப்படுத்தாமல், எவ்வளவு மந்திரங்களை ஜபித்தாலும், ஜப மாலை சுற்றுமே தவிர, சிந்தாமணி கிடைக்காது என்று உலகிற்கு தெரியட்டும் என்பதற்காக இவ்வாறு பிரதிஷ்டாபனை செய்தார். இதன் அபிப்பிராயத்தை அறிந்து, ஹனுமந்தனும் புன்னகை புரிந்தான்.

தினமும் இவ்வாறே நிஸ்சலமாக அமர்ந்து, நித்யானந்த பூர்ணனான ஹரியை உபாசித்தால், வேண்டிய வரங்களை நானே கொடுப்பேன் என்று பத்மாசனத்தில் அமர்ந்த யந்த்ரோத்தாரகன், குறிப்பால் உணர்த்தினான். ஸர்வதா அபீஷ்டதாதாரம் |

5. பூதப்ரேத பிஷாச பீடெ...

வாஞ்சிதம் லபதே க்ருத்ஸ்னம் - என்கிறார் ஸ்ரீவியாசராஜர். அதன் விவரம் இங்கு உள்ளது. பூதங்களின் தொந்தரவு, பிசாசுகளின் பிரச்னை, நோய், நொடிகள், இன்னும் அனேக பயங்களை பரிகரிக்கிறான். இதையே வியாசராஜர்,

புத்ரார்த்தீ லபதே புத்ரம் யஷோர்த்தீ லபதே யஷ: |
வித்யார்த்தீ லபதே வித்யாம் தனார்த்தீ லபதே தனம் ||

என்கிறார். ஸ்தோத்திர, பாராயணாதிகளால் ஹனுமந்தனை மகிழ்ச்சிப்படுத்தினால், நீங்கள் எந்தவொரு பலன்களையும் கேட்கவே வேண்டியதில்லை. பக்தர்களுக்குத் தேவையான பொருட்களை தானே அறிந்து, அவர்களுக்கு கொடுக்கிறான். உண்மையான பக்தர்களுக்கு ஞான பக்தி வைராக்கியத்தை கொடுத்தால், அவர்கள் கேட்காமலேயே, தான் அவர்களுக்கு அனைத்தையும் கொடுக்கிறான்.

19. யந்த்ரோத்தாரக ஹனுமத் சுளாதி

யாதர்யாதரர்த்தபேக்ஷே தரதலே ।
ஆதுரதிந்தலே கொட்டு ।।

இஷ்டார்த்தங்களை கொடுப்பது மட்டுமல்ல, பாப என்னும் பிரச்னைகளையும் பரிகரித்து, இஷ்ட பிராப்தி, அனிஷ்ட நிவ்ருத்தி ஆகியவற்றை செய்கிறான்.

பக்தர்களின் இஷ்டார்த்தங்களை நிறைவேற்றுவதில் கங்கண-பத்தனான விஜயவிட்டலன், இந்த ஹனுமன், பக்தர்களில் முதன்மையானவன் என்பதை அறிந்து, இவன் மூலம் பக்தர்களுக்கு இஷ்டார்த்தங்களை அளித்து மகிழ்விக்கிறான்.

***

20. ஸ்ரீதுர்கா ஸ்தோத்திர சுளாதி

ராக: பைரவி. தாள: தவ

து3ர்கா3 து3ர்கே3யே மஹது3ஷ்டஜன ஸம்ஹாரெ
து3ர்கா3ந்தர்க3த து3ர்கெ3 து3ர்லபெ4 ஸுலபெ4
து3ர்க3மவாகி3தெ3 நின்ன மஹிமெ பொ3ம்மெ
ப4ர்கா3தி3க3ளிகெ3ல்ல கு3ணிஸித3ரு
ஸ்வர்க3 பூ4மி பாதாள சமஸ்த வியாபுததே3வி
வர்க்க3க்கெ மீரித3 ப3லு ஸுந்த3ரி
து3ர்கு3ணத3வர பா3தெ4 ப3ஹளவாகி3தெ3 தாயி
து3ர்க3திஹாரெ நானு பேளுவதே3னு
து3ர்க3ந்த4வாகி3தெ3 ஸம்ஸ்ருதி நோடித3ரெ
நிர்க3ம நா காணெனம்ம மங்க3ளாங்கெ3
து3ர்கெ3 ஹே து3ர்கெ3 மஹா து3ர்கெ3 பூ4து3ர்கெ3 விஷ்ணு
து3ர்க்கெ3 து3ர்ஜய து3ர்த4ர்ஷே ஷக்தி
து3ர்கா3கானன க3ஹன பர்வதகோ4ர சர்ப்ப
க3ர்க3ர ஷப்த3 வ்யாக்4ர கரடி3 ம்ருத்யு
வர்க்க3 பூ4த ப்ரேத பைஷாசி முத3லாத 3
து3ர்கு3ண சங்கட ப்ராப்தவாகெ3
து3ர்கா3து3ர்கெ3 எந்து3 உச்சஸ்வரதி3ந்த3
நிர்க3ளிதனாகி3 ஒம்மெ கூகி3த3ரு
ஸ்வர்க்கா3பவர்க்க3த3ல்லி ஹரியொட3னெ இத்3த3ரு
ஸூரர்க3ண ஜய ஜயவெந்து3 பொக3ளுதிரெ
கர்க3ளிந்த3லி எத்தி ஸாகுவ ஸாக்ஷி பூ4தெ
நீர்கு3டி3த3ந்தெ லோக லீலெ நினகெ3
ஸ்வர்க3ங்கா3ஜனக நம்ம விஜயவிட்டலனங்க்4ரி
து3ர்கா3ஸ்ரய மாடி3 பது3குவந்தெ மாடு3 ||1||

மட்டதாள

அரித3ராங்க்குஷ ஷக்தி பரஷு நேக3லிக2ட்க3
ஸரஸிஜ க3தெ3 முத்3க3ர சாபமார்க்க3ண

20. ஸ்ரீதுர்கா ஸ்தோத்திர சுளாதி

வர அப4ய முஸல பரி பரி ஆயுத4வ
த4ரிஸி மெரெவ லகுமி ஸரஸிஜ ப4வ ருத்3ர
ஸருவ தே3வதெக3ள கருணாபாங்க3த3ல்லி
நிரீக்ஷிஸி அவரவர ஸ்வரூப ஸுக2கொடு3வ
ஸிரிபூ4மி து3ர்கா3 ஸர்வோத்தம நம்ம விஜயவிட்டலனங்க்4ரி
பரம ப4குதியிந்த3 ஸ்மரிஸுவ ஜக3ஜ்ஜனனி ||2||

த்ரிவிடதாள

ஸ்துதி மாடு3வெ நின்ன காளி மஹாகாளி உ
ன்னத பா3ஹு கராளவத3னெ சந்தி3ர முகெ2
த்4ருதி ஷாந்தி ப3ஹுரூபே ராத்ரி ராத்ரி சரணெ
ஸ்தி2தியெ நித்3ராப4த்3ரே ப4க்தவத்ஸலே ப4வ்யே
சதுரஷ்ட்ர த்3விஹஸ்தெ ஹஸ்தி ஹஸ்தி க3மனெ அ
த்3பு4த ப்ரப3லெ ப்ரவாஸெ து3ர்கா3ரண்யவாஸெ
க்ஷிதி பா4ரஹரணெ க்ஷீராப்3தி4 தனயெ ஸ
த்க3தி ப்ரதா3தெ மாயா ஶ்ரீயெ இந்தி3ரெ ரமெ
தி3தி ஜாதெ நிக்3ரஹெ நிர்தூ4த கல்மஷெ2
ப்ரதிகூல பே4தெ3 பூர்ணபோ3தெ4 ரௌத்3ரே
அதிஷய ரக்த ஜிஹ்வாலோலெ மாணிக்ய மாலெ
ஜிதகாமே ஜனன மரண ரஹித க்2யாதெ
க்4ருதபாத்ர பரமான்ன தாம்பூ3லஹஸ்தெ ஸு
வ்ரதெ பதிவ்ரதெ த்ரினேத்ரே ரக்தாம்ப3ரெ
ஷதபத்ரநயனே நிருதகன்யெ உத3யார்க
ஷதகோடி ஸன்னிபெ4 ஹரியாங்கஸம்ஸ்தே2
ஸ்ருதிததினுதெ ஷுக்ல ஷோணித ரஹிதெ அ
ப்ரதிஹதெ ஸர்வதா3 சஞ்சாரிணி சதுரெ
சதுர கர்ப்பதி3யெ அம்ப்4ரணி ஹ்ரீ
உத்பத்தி ஸ்தி2திலய கர்தெ ஷுப்ரே4 ஷோப4ன மூர்தே
பதிதபாவனெ ரன்யெ ஸர்வௌஷதி4யலித்3து3
ஹத மாடு காடு3வ ரோக3க3ளிந்த3
க்ஷிதியொளு ஸுக2த3ல்லி பா3ளுவ மதியித்து
ஸதத காயலி பே3ளு து3ர்கா3 து3ர்கெ3

ச்யுததூ3ர விஜயவிட்டலரேயன ப்ரீயெ
க்ருதாஞ்சலியிந்த3லி தலெபா3கி3 நமிஸுவெ ||3||

மட்டதாள

ஸ்ரீலக்ஷ்மி கமலா பத்3மாபத்3மினி கம
லாலயெ ரமா வ்ருஷாகபி த4ன்யாவ்ருத்3தி4 வி
ஷாலா யக்ஞெ இந்தி3ரெ ஹிரண்யா ஹரிணி
வாலய ஸத்ய நித்யானந்த3 த்ரயி ஸுதா4
ஷீலெ ஸுக3ந்த4 ஸுந்த3ரி வித்3யா ஸுஷீலெ
ஸுலக்ஷணா தே3வி நானா ரூபங்க3ளிந்த3 மெரெவ ம்ருத்யுனாஷெ
வாலக3கொடு3 ஸந்தர ஸன்னிதி4யல்லி
கால காலகெ என்ன பா4ர வஹிஸுவ தாயி
மேலுமேலு நின்ன ஷக்தி கீர்த்தி ப3லு
கேளிகேளி பந்தெ3 கேவல ஈ மன
கா4ளியந்தெ பர த்3ரவ்யக்கெ போபுது3
ஏளல மாட3தெ3 உத்3தா4ர மாடு3வ
கைலாஸபுரத3ல்லி பூஜெகொ3ம்ப3 தே3வி
மூலப்ரக்ருதி ஸர்வ வர்ணாபி4மானினி
பாலஸாக3ரஷாயி விஜயவிட்டலனொளு
லீலெ மாடு3வ நானாப4ரண பூ4ஷணெ பூர்ணெ ||4||

ஆதிதாள

கோ3பினந்த3னெ முக்தெ தை3த்யஸந்ததிகெ3 ஸன்
தாபகொடு3திப்ப மஹாகடோ2ரெ உக்3ரே
ரூப வைலக்ஷணெ அஞ்ஞானக்கபி4மானினி
தாபத்ரய வினாஷ ஓங்காரே ஹூங்காரெ
பாபி கம்ஸகெ ப4ய தோரித3 பா3லலீலெ
வ்யாபுத த4ர்மமார்க்க3 ப்ரேரணெ அப்ராக்ருதெ
ஸ்வாபத3ல்லி நின்ன நெனெஸித3 ஷரணனிகெ3
அபாரவாகி3த்த3 வாரிதி4யந்தெ மஹா

20. ஸ்ரீதுர்கா ஸ்தோத்திர சுளாதி

ஆபத்து ப3ந்தி3ரலு ஹாரி போகோ3வு ஸப்த
த்3வீபனாயிகெ நரக நிர்லேபே தமோகு3ணத
வியாபார மாடி3ஸி ப4க்தஜனக்கெ புண்ய
ஸோபான மாடி3கொடு3வ ஸௌபா4க்3யவந்தெ து3ர்கெ3
ப்ராபுதவாகி3 என்ன மனத3ல்லி நிந்து3
து3க்க2 கோபதி3ந்த3லி எத்தி கடெ3 மாடு3 ஜன்மங்க3ள
ஸௌபர்ணி மிகி3லாத3 ஸதியரு நித்ய னின்ன
ஆபாத3 மௌளி தனக ப4ஜிஸி ப4வ்யராத3ரு
நா பேளுவுதே3னு பாண்ட3வர மனோபீ4ஷ்டே
ஈ பஞ்ச பௌ4திகத3ல்லி ஆவ ஸாத4னெ காணெ
ஸ்ரீபதி நாம ஒந்தே3 ஜிஹ்வாக்3ரத3ல்லி நெனெவ
ஔபாஸன கொடு3 ருத்3ராதி3க3ள வரதெ3
தாபஸ ஜனப்ரிய விஜயவிட்டல மூர்த்திய
ஸ்ரீபாதா3ர்ச்சனெ மாள்பெ ஸ்ரீபூ4து3ர்கா3வர்ணாஷ்ரயே ||5||

ஜதே

து3ர்கா3 ஹா ஹே ஹோ ஹா து3ர்கெ3 மங்க3ளது3ர்கெ3
து3ர்க3தி கொட3தி3ரு விஜயவிட்டலப்ரியே ||

***

<u>1. துர்கா துர்கேய மஹதுஷ்டஜனஸம்ஹாரே...</u>

துர்கா - துர்காதேவி, பக்தர்களை ஒரு கோட்டையைப் போல நின்று காக்கிறாள்.

துர்கெயெ - அனைவரின் இதயக் குகைக்குள்ளும் நியாமகளாக இருப்பவள்.

மஹாதுஷ்ட ஜனரன்னு ஷும்ப - நிஷும்பர்களைக் கொன்று போட்டவள்.

துர்காந்தர்கத துர்கெ - மலைகளின் குகைகளில் இருந்துகொண்டு காப்பவள் ‘கிரீந்த்ர ஷிலராவாஸா’.

துர்லப - ஹரி த்வேஷிகளுக்கு துர்லபள். துர்ஜனை: துஷ்டாப்யத்வாத்.

ஸுலபெ - பக்தர்களுக்கு அத்யந்த ஸுலபள்.

பர்காதிகளெல்ல:
(ருத்ராதிகள் அனைவரும்) சேர்ந்து உன் குணங்களை எண்ணினாலும் அவற்றை முழுமையாக அறிந்து கொள்ளமுடியாது. கோ நாம வக்தும் ஷக்தோऽஸ்யா மஹாத்ம்யமமரோऽபி வா ||

ஸ்வர்க்கபூமி - லட்சுமிஸ்வரூபளே ஆகியிருக்கும் துர்க்கை, தேஷத: காலத: ஸ்ரீஹரிக்கு சமளாக இருப்பதால், மூன்று உலகங்களிலும் இவள் வியாபித்திருப்பவள். தேவதா வர்ணத்தில் இவளை மீறிய அழகானவர் வேறு யாரும் இல்லை.

துர்குணதவர பாதெ - துர்குணம் எனப்படும் தாமஸ குண தைத்யர்கள், சாதனை செய்வதற்கு தொந்தரவு கொடுக்கிறார்கள், காப்பாற்று, தாயே. த்ராயஸ்வ ஸர்வதுக்கேப்யோ தானவானாம் பயங்கரீ |

தமோகுணத்தினால் துர்கதி ப்ராப்தி ஆகியிருக்க, அதனை பரிகரித்து, நற்கதி கொடுப்பவள். இத்தகைய துக்கங்கள் இருக்கின்றன என்று சர்வக்ஞளான உனக்கு சொல்லவும் வேண்டுமா?

சம்ஸ்க்ருதி நோடிதரெ துர்கந்தாகிதெ:
இந்த சம்சாரமோ காம, க்ரோத, லோபாதிகளால் துர்கந்தமாக இருக்கிறது. இதனை தாண்டும் வழி எனக்குத் தெரியவில்லை. உன் அருளால் மட்டுமே இது சாத்தியமாகிறது.

எல்ல காலதி பவவு எல்லி பொக்கரு பிடதெ பெம்பத்திஹது |
மங்களாகெ - தேவியின் சகல அங்கங்களும் மங்களகரமாகவே இருக்கிறது.
துர்கெதுர்கெ மஹாதுர்கெ - பிரளயத்தில் ஜல்துர்க்கையாகவும், ஸ்ருஷ்டிக்கு முன்னர் கிரிதுர்க்கையாகவும், பூமியில் பூ-துர்க்கையாகவும் இருக்கிறாய். விஷ்ணுவிற்கு அனாதி காலத்திலிருந்தும் மனைவியாக இருக்கிறாய்.

20. ஸ்ரீதுர்கா ஸ்தோத்திர சுளாதி

துர்ஜயே - எதிரிகளால் வெல்லப்பட முடியாதவள். எதிர்க்க முடியாத அற்புத சக்தியைக் கொண்டவள் நீயே (துர்தர்ஷஷக்தி).
அடர்ந்த காடு, கடுமையான மலையுச்சி, கோரமான சர்ப்பம், பயங்கர சத்தம் செய்யும் புலி, கரடி, ம்ருத்யுதேவதை மற்றும் பூத, ப்ரேத, பிசாசுகளின் கும்பல்களால் சொல்லமுடியாத பிரச்னைகள் வந்தபோது, துர்கா துர்கெ என்று உச்ச ஸ்வரத்தில் ஒரு முறை கூறினாலும், ஸ்வர்க்கத்திலோ, மோட்சத்திலோ பகவந்தனுடன் இருந்தாலும் சரி, தேவதா கணத்தவர்கள் அனைவரும் உன்னுடைய மகிமையை கொண்டாடியவாறு ஜயஜய என்று ஜயகாரம் செய்யும் சந்தர்ப்பங்களில் இருந்தாலும், நீயே சாட்சாத்தாக பக்தனிடம் ஓடோடி வந்து, துர்கெ துர்கெ என்று சத்தமாக கூவிய பக்தரின் கைகளை தாங்கிப் பிடித்து, அந்த துன்பத்திலிருந்து அவனை காக்கும் கருணாமயி ஆகிறாய்.

கந்தாரேப்வவஸன்னானாம் மக்னானாம் ச மஹார்ணவே |
தஸ்யுபிர்வா நிருத்தானாம் த்வம் கதி: பரமா ந்ருணாம் ||
(காந்தார - அடர்ந்த காடு. மஹார்ணவ - பெரிய சமுத்திரம். தஸ்யு - திருடர்கள்).

நீர்குடிதந்தெ லோகலீலெ நினகெ :
துர்க்கையே. உலகத்தின் ஸ்ருஷ்டி, ஸ்திதி, ரக்ஷணை முதலான செயல்களை, நீ, தண்ணீர் குடிப்பதைப் போல அனாயாசமாக நடத்துகிறாய்.

ஸ்வர்கங்காஜனக: த்ரிவிக்ரமன் ஆனபோது, கங்கையைப் பெற்று, கங்காஜனகனான விஜயவிட்டலனின் பாதங்கள் என்னும் துர்க்கெ (கோட்டை)யை அடைந்து, நான் அங்கு வாழுமாறு செய்வாயாக.

<u>2. அரி தராங்குஷ ஷக்தி பரஷு நேகலி கட்க...</u>

நரசிம்மனைப் போல 16 கைகளில் 16 ஆயுதங்களை ஏந்தியிருக்கும் துர்க்கையை இந்த தாளத்தில் வணங்குகிறார்.

அரி - எதிரி; சக்ர; தர - சங்கு; அங்குஷ - அங்குசம்; ஷக்தி என்னும் ஆயுதம்; பரஷு - கோடாலி; நேகலி - ஏர்; கட்க - வாள்; கமலம், கதை, முத்கர - முள் கதை; சாப - வில்; மார்கண - அம்பு; முஸல -

கதை; வர ஹஸ்த, அயப ஹஸ்த. இவ்வாறு 16 தோள்களில் பற்பல ஆயுதங்களை ஏந்தி, எதிரி பயங்கரளான ஷோடஷ பாஹு ந்ருஸிம்ஹனின் பத்னியான லட்சுமியே.

பிரம்ம (ஸரஸிஜபவ), ருத்ர மற்றும் இந்திராதி சமஸ்த தேவதைகளை கருணைப் பார்வையுடன் பார்ப்பவளே. அவரவர்களுக்கு தக்க ஸ்வரூப சுகங்களை கொடுப்பவளே. ஸ்ரீ பூ துர்க்கை என்னும் மூன்று ரூபங்களை தரித்தவளே.

இவ்வளவு சாமர்த்தியங்களைக் கொண்டிருந்தாலும், பதிசேவையை இவள் விடுவதில்லை. புருஷோத்தமனான விஜயவிட்டலனின் பாத பத்மங்களின் ஆராதகளாகி, நிரந்தரமாக அவனின் பாதசேவையில் உன்னையே அர்ப்பித்துக் கொண்டிருப்பவளே, தாயே.

3. ஸ்துதிமாடுவெ நின்ன காளி மஹாகாளி...

ஸ்துதி மாடுவெ நின்ன காளி : இந்திரநீல மணியைப் போல தேகத்தின் காந்தியைக் கொண்டிருக்கும் உன்னை, காளி என்கிறோம். உன் ஸ்தோத்திரங்களை செய்கிறோம்.

மகாகாளி: காளி நாமகரான பாரதி மற்றும் ருத்ராணியர்களாலும், பூஜிக்கப்படுபவளான நீ, மகாகாளி எனப்படுகிறாய்.

உன்னதபாஹு : ஷத்ரு சம்ஹாரியாகி, மேலே கூறிய ஆயுதங்களுடன் கூடிய தோள்களைக் கொண்டிருக்கிறாய்.

கராளவதனெ: கராளி என்பது எதிரிகளை பயமுறுத்துவதற்காக எடுத்த ஒரு ரூபம்.

சந்திரமுகெ: பக்தர்களுக்கு சந்திரனைப் போல தண்மையைத் தரும் முக கமலத்தைக் கொண்டிருப்பவள்.

த்ருதி ஷாந்தி பஹுரூப: அரசர்களுக்கு தைரியத்தைக் கொடுப்பவள். எப்போதும் பகவத் நிஷ்டையில் இருப்பவள். ஹரியின் சேவைக்காக ஆயிரக்கணக்கான ரூபங்களை தரித்திருப்பவள்.

20. ஸ்ரீதுர்கா ஸ்தோத்திர சுளாதி

ராத்ரி - ராத்ரி சூக்தத்தின் ப்ரதிபாத்யள். எதிரிகளுக்கு ராத்ரி ஷப்தத்தின் அஞ்ஞானத்தைக் கொடுப்பவள்.
ராத்ரிஞ்சரணெ - இரவில் சஞ்சரிக்கும் தைத்யர்களைக் கொல்வதற்காக, இரவில் சஞ்சரிப்பவள்.
பஹுரூப : பகவந்தனைப் போல அவனின் சேவைக்காக பஹுரூபங்களை எடுத்தவள்.
ஸ்திதியே, நித்ரா, பத்ரே - உலகினை காப்பதில் ஸ்ரீஹரிக்கு உதவி செய்பவள். நித்ரை என்னும் அஞ்ஞானத்தை கொடுப்பவள். மங்களரூபளே பத்ரே.

பக்தர்களிடம் அபார கருணையைக் காட்டுபவள். பவ்யே - பக்தர்களுக்கு சுப நலன்களைக் கொடுப்பவள்.

சாதுராஷ்ட த்விஹஸ்தே : நற்புத்தியுடன் கூடிய 16 கை உள்ளவள். ஹஸ்தி - அப்ராக்ருத சரீரத்தைக் கொண்டவள்.
ஹஸ்திகமனெ : யானைப் போன்ற கம்பீர நடை உள்ளவள்.
அத்புத ப்ரபலெ : உலகைக் காக்கும் பிரம்ம வாயுகளும்கூட வியக்கும் வண்ணம் பிராபல்யத்தைக் கொண்டவள்.
ப்ரவாஸே : துஷ்ட சிக்ஷண & சிஷ்ட பரிபாலனைக்காக அனைத்து இடங்களிலும் சஞ்சாரம் செய்பவள்.

துர்காரண்யவாஸே: கடும் அடர்ந்த காடுகளிலும் சஞ்சரிப்பவள்.

க்ஷிதிபாரஹரணே - பூமியின் பாரத்தை குறைக்க வேண்டி, அவதரித்த ஸ்ரீகிருஷ்ணனுக்கு உதவி செய்ய பூமியில் அவதாரம் செய்தவள்.

க்ஷீராப்திதனயே : பாற்கடல் கடையும்போது தோன்றியவள்.
ஸத்கதிப்ரதாதே: சஜ்ஜனர்களுக்கு கதியாக, ஞான, மோட்சத்தைக் கொடுப்பவள்.
மாயா : முக்தியைக் கொடுப்பவனான வாசுதேவனின் பத்னி.

ஜயெ, இந்திரெ, ரமெ திதிஜாத நிக்ரஹெ:
ஜயாரூபளு : சங்கர்ஷணனின் நிஜபத்னி ரமா, கொல்ஹாபுர நிவாஸினி. திதி புத்திரர்களைக் கொல்பவள்.

நிர்தூத கல்மஷெ: பவித்ரமான தேகத்தைக் கொண்டிருப்பதால், எந்தவொரு தோஷங்களும் இல்லாதவள். ஸாதன மார்க்கத்தில் தடை வந்தால், அதனை பரிகரிப்பவள்.

பூர்ணமான ஞானம் உள்ளவள். (பூர்ணஷோபெ). துஷ்டர்களை தண்டிப்பவள்.

அதிஷய ரக்த ஜிஹ்வாலோலெ: துஷ்டர்களை வதைத்து, அவர்களின் ரத்த பானம் என்னும் நாடகத்தில், சிவப்பான, நீண்ட நாக்கினைக் கொண்டவள்.

மாணிக்ய மாலெ: முத்து மாணிக்க நவரத்னங்களைக் கொண்ட மாலையை தரித்தவள்.

ஜிதகாமெ: ஸ்ரீஹரியைத் தவிர வேறு எந்த விருப்பங்களும் இல்லாதவள். நித்யமுக்தளான இவள் ஜனன மரண இல்லாதவள் (ஜனன மரண ரஹிதெ). வேதவேதாந்தங்களில் அபாரமான கீர்த்தியைக் கொண்டவள் (க்யாதெ).

க்ருதபாத்ர தாம்பூல பரமான்ன ஹஸ்த:
ஸ்ரீஹரிக்கு நைவேத்தியம் செய்ய, தானே தயாரித்த நெய் மற்றும் பாயச பாத்திரங்களை ஏந்தியவள். நைவேத்தியத்திற்குப் பிறகு, தாம்பூலம் கொடுப்பதற்கு, தாம்பூலத்தை ஏந்திய கை கொண்டவள். க்ருதப்ரதீகாம் தாம் க்ருதபூர்ணான்ன தாயினீம் |

ஹரிபூஜாதி விரதங்களைக் கொண்டவள். கணவனை விடாமல் வணங்குபவள். ந்ருஸிம்ஹனைப் போல மூன்று கண்களைக் கொண்டவள் (த்ரிநேத்ரே).

ரக்தாம்பரெ: துஷ்டர்களுக்கு பயங்கரமான ரக்த வஸ்திர தரித்தவள்.

ஷதபத்ர நயனே: ஷதபத்ர - தாமரை. நயன - கண்கள் (பத்மபத்ராயதாக்ஷி).

20. ஸ்ரீதுர்கா ஸ்தோத்திர சுளாதி

நிருதகன்யெ : ஸ்ரீதேவி பூதேவி ரூபத்தினால் ஸ்ரீனிவாசனை திருமணம் செய்தாலும், துர்கா ரூபத்தினால் அவனின் தங்கையாகி, கன்யையாக இருப்பவள். இவளே கன்யாகுமாரி. கன்யாகுமாரீ கன்யா த்வம் யதா பர்த்ருரபாவத: ||

உதயார்க்க ஷதகோடி ஸன்னிபெ:
100 கோடி உதயசூரியனைப் போல ஒளி உள்ளவள். உத்யச்சதார்க்க ஸத்ருஷீம்.

ஹரியாங்க ஸம்ஸ்தெ:
ஸ்ரீஹரியின் இடது துடையின் மேல் அமர்ந்தவள். பரமாங்க சம்ஸ்தாம் த்யாயேத்.

ஸ்ருதிததினுதெ:
ஸ்ரீஹரியை சொல்லும் புருஷ சூக்தாதிகளைத் தவிர, மற்ற அனைத்து வேதங்களாலும் போற்றப்படுபவள். அனைத்து வேதங்களுக்கும் அபிமானி.

சுக்லஷோணித ரஹிதெ: ஸ்ரீகிருஷ்ணனைப் போல துர்க்கையும்கூட சுக்லஷோணித ஆகிய ப்ராக்ருத சரீரம் இல்லாதவள். அப்ராக்ருதளும் நித்யமுக்தளான இவளில், சுக்லஷோணிதத்திற்கு வாய்ப்பு இல்லை.

அப்ரதிஹதே:
எந்தவொரு காரியத்திலும் யாராலும் தடை செய்யப்பட முடியாதவள்.

ஸர்வதா ஸஞ்சாரிணீ:
தன் பரிவாரங்களுடன் சஞ்சாரம் செய்பவள். காமசரே ஸதாஷிவே| **சதுரே**: அனைத்து காரியங்களிலும் நிபுண பூர்ணள்.

சதுரகர்பர்தியே: நான்கு ஜடைகளைக் கொண்டவள்.

அம்ப்ரிணி:

பக்தர்களை பகவந்தனிடம் அழைத்துச் செல்பவள். விஷ்வ ஸ்திதி பிரளய ஸர்க்க மஹா விபூதி - செயல்களை தன் கடைக்கண் பார்வையினாலேயே செய்பவள் (உத்பத்தி ஸ்திதி லய கர்த்தெ).

வெண்மையும் சுத்தமும் ஆன தேகம் உள்ளவள். பதிதர் ஆனவர்களை பவித்ரம் ஆக்கும் மகிமை கொண்டவள் (பதிதபாவனெ).

தன்யளே! தன்வந்திரியைப் போல, அனைத்து மருந்துகளிலும் இருந்துகொண்டு அனைத்து நோய்களையும் போக்குபவள்.

இந்த பூமியில் சுகமாக வாழும் புத்தியைக் கொடுத்து எப்போதும் காக்க வேண்டும் அம்மா.

துர்கெதுர்கெ - மகாதுர்க்கையே. உன்னை சிந்திப்பவர்களின் பயத்தினை பரிகரிப்பாயாக.

ச்யுதிதூர விஜயவிட்டலன ப்ரியெ:
தேஷ கால குணங்களின் ச்யுதி இல்லாதவனான அச்யுதனைப் போல, ச்யுதள் ஆகாத நீ, விஜயவிட்டலரேயனின் நியத பத்னியாக இருக்கிறாய்.

இரு கை குவித்து, உன்னை தலை குனிந்து வணங்குவேன். என்னை காப்பாயாக - நம்ம அனவரத.

4. ஸ்ரீலட்சுமி கமலா பத்மா பத்மினி...

கேசவனின் 24 பத்னியரின் ரூபங்கள் இங்கு சொல்லப்பட்டுள்ளன.

ஸ்ரீலட்சுமி கமலா பத்மா பத்மினி கமலாலய ரமா வ்ருஷாகபி தன்யா வ்ருத்தி விஷாலா யக்ஞா இந்திரா ஹிரண்யா ஹரிணி வாலயா ஸத்யா நித்யாநந்த த்ரயி ஸுதா ஷீலா ஸுகந்தி ஸுந்தரி வித்யா ஸுஷீலே ஸுலக்ஷணாதேவி என கேசவாதி 24 ரூபங்களின் மனைவி ரூபங்கள் (வாலயா - வருணனின் சமுத்திரத்தில் அலயா என்னும் வீடு கொண்டவள்).

ஸ்ரீஹரியந்தெ நானா ரூபகளிந்த மெரெவ:

ம்ருத்யுனாஷெ: அபம்ருத்யு பரிகரிப்பவள். உன் சன்னிதியில் ஒரு இடம் கொடு.

காலகாலக்கெ:
ஸ்ருஷ்டி காலத்தில், ஸ்ருஷ்டி காலத்திற்கு முந்தைய நிலை, என அனைத்து காலங்களிலும் என்னை காக்கவே வேண்டும். உன் மகிமைகளைக் கேட்டு வந்திருக்கிறேன்.

காற்றினைப் போல சஞ்சலமான இந்த மனம் பாப சாதனமான பரஸதி, பரத்ரவ்யங்களை போகிப்பதற்கு காத்திருக்கிறது.

உதாஸீன மாடதெ: என்னை புறக்கணிக்காமல், காப்பாற்று.

கைலாஸபுர:
பார்வதி பரமேஷ்வரர்கள்கூட துர்கா மற்றும் ந்ருஸிம்ஹ தேவரை பூஜிக்கிறார்கள். மூலப்ரக்ருதி நியாமகள், சர்வவேதங்களில் இருக்கும் வர்ணங்களாலும் உன்னை பூஜிக்கிறார்கள்.

மூலப்ரக்ருதி:
பிரம்மாண்டத்தை உருவாக்கத் தேவையான உபாதான காரண ஸத்வாதிகளுக்கு அபிமானியாக இருப்பவளே.

ஸர்வவர்ணாபிமானினி -
ஸர்வவேத அபிமானினியாக இருந்து, சர்வவர்ணங்களுக்கும் அபிமானியாக இருப்பதில் எவ்வித ஆச்சரியமும் இல்லை.

நதிகள், கடலில் சேர்ந்து சென்று சஞ்சரிப்பதைப் போல, பாற்கடலில் படுத்திருப்பவனான ஸ்ரீவிஜயவிட்டலரேயனுடன் நீயும் இருக்கிறாய்.

நானாபரண பூஷிதெ:
அனைத்து ஆபரணங்களையும் தரித்து அழகாக இருக்கிறாய்.

பூர்ணி :

அனைத்து குணபூர்ணள். ஸ்ரீஹரியைத் விட்டு, இவள் அளவிற்கு குணபூர்ணர் வேறு யாரும் இல்லை. பிரம்ம வாயுகளைவிட கோடி குணங்கள் அதிகமானவள். ரத்னோத்தீப்த ஸுமாங்கல்ய ஸூத்ரவ்ருத ஷீரோதராம் ||

5. கோபினந்தனெ முக்தே, தைத்ய ஸந்ததிகெ...

கோபிநந்தனெ:
யசோதா நந்தகோபனின் மகளாகி, துர்காஷ்டமியன்று, அவர்களின் தவத்தின் பலனாக அவதரித்தாள். ததைவ ஜாதா ச ஹரேரனுக்ஞயா துர்காபிதா ஸ்ரீரனு நந்தபத்ன்யாம் || -- தாத். நிர். 12-67.

முக்தெ:
லட்சுமி நாராயணன் நித்யமுக்தன். லட்சுமிதேவி சாதனை செய்து முக்தள் ஆவதில்லை. (ஸமனா ச அஸ்ருத்யப்ரக்ரமாத்). த்வாவேவ நித்யமுக்தௌ து ரமா நாராயணாஷ்சத் |

தைத்ய ஸந்ததிகெ:
கம்ஸ முதலான தைத்யருக்கு, அவனின் சேவகர்களான தைத்யர்களுக்கு, சிறிதும் கருணை காட்டாமல், நிரந்தர கஷ்டங்களை கொடுப்பவள். இவர்கள், நாராயணன் வேண்டாம், அவனின் மனைவி மட்டும் வேண்டும் என்னும் புத்தி கொண்டவர்கள்.

உக்ரரூப வைலக்ஷணெ:
உக்ரரூப தைத்யருக்கு, உக்ரரூபத்தை எடுத்து, அவர்களை கொல்வதைப் போலவே, ஸாதுபாவத்தைக் கொண்ட ஹரிபக்தருக்கு, அருள்வதாக உள்ள மஹாமாதெ.

அஞ்ஞானக்கபிமானினி:
தைத்யர்களுக்கு அதம ஜனர்களுக்கு, அஞ்ஞானத்தைக் கொடுத்து கட்டுப்படுத்துபவள். ஸ்ரீதேவியாகி ஞானத்தைக் கொடுத்தால், துர்க்கையாகி, அஞ்ஞானத்தைக் கொடுப்பவள் - துர்காsவித்யா ப்ரகீர்த்திதா.

20. ஸ்ரீதுர்கா ஸ்தோத்திர சுளாதி

தாபத்ர்யவினாஷி:

ஆத்யாத்மிக ஆதிபௌதிக ஆதிதெய்விக தாபத்ரயங்களை பரிகரித்து காப்பவள். இவற்றை துஷ்டபுத்தி உள்ளவர்களுக்கு அருள்பவள்.

ஓம்காரெ:

அ உ ம ஆகிய மூன்று எழுத்துக்களைக் கொண்டது ஓம்காரம். ஸ்ரீஹரிக்குப் பிறகு அனைத்து வேதங்களுக்கு மூலமான ஓம்கார வாச்யராக இருப்பவள்.

ஹூம்காரெ:

பகவந்தனை புறக்கணிக்கும் தைத்யர்களை பயமுறுத்துவதற்காக பயங்கரமாக வராகனைப் போல ஹுங்காரம் செய்பவள்.

வ்யாமதே:

ஸ்ரீஹரியைப் போல, தேஷ காலங்களில் சம்பூர்ணமாக நிலைத்திருப்பவள். ஸமவ்யாப்தா ச ஹரிண தேஷத: காலதஸ்ததா ||

தர்மமார்க்க ப்ரேரக:

பக்தர்களின் மேல் உள்ள கருணையால், எப்போதும் அவர்கள் அதர்ம மார்க்கத்தில் செல்லாதவாறு தடுத்து, தர்ம மார்க்கத்திலேயே நடத்துபவள். விஷாலாக்ஷி பக்தானாம் பரிரக்ஷணே ||

அப்ராக்ருதே: ஸ்ரீஹரியைப் போலவே திவ்ய சச்சிதானந்த ரூபமானவள்.

ஸ்வாபதல்லி:

உன் பக்தர்கள் பசுவின் சாணியில் விழுந்ததைப் போல, கடலில் நடுவே சிக்கி தாண்ட முடியாமல் கஷ்டப்படும்போது, பக்தியுடன் உன்னை துர்க்கை துர்க்கை என்று நினைத்தவர்களுக்கு அபாரமான கடலிலிருந்து தாண்டச் செய்து காக்கிறாய். உன்னை நினைப்பவர்களுக்கு வந்த ஆபத்துகளை தூர விலக்கச் செய்கிறாய். துர்காணி விஷ்வா நாவேவ ஸிந்தும் துரிதாத்யக்னி: ||

ஸப்தத்வீப பூமிகெ:
ஸப்தத்வீபங்களைக் கொண்ட இந்த பூமண்டலத்திற்கு நாயகியாக இருக்கிறாய். இந்த த்வீபங்களில் வசிப்பவர்கள் அனைவரும் உன் மடிக்கே வருகின்றனர். பஞ்சபூதங்களில் தண்ணீர் இருக்கும் பூமிக்கும் அந்தர்நியாமகள் நீயே.

நரகனிர்லேபே:
ஸ்ரீஹரியைப் போல சர்வதேஷ காலங்களில் வியாப்தளாகி இருந்தாலும், நரகாதி கீழான பிரதேசங்களில் இருந்து கிடைக்கும் எதுவும் அண்டாதவளாக இருக்கிறாய். அஸங்கோ ஹ்யயம் புருஷ: || பும்ஷக்திமத்வாத் புருஷ ஷப்த வாச்யள்.

தமோகுணாத வ்யாபார:
சஜ்ஜனர்களின் கைகளால் பாவத்தை செய்வித்தாலும், அந்த பாவம் அவர்களுக்கு சேராதவாறு செய்து, புண்ய காரியத்திற்கு அவர்களை காரணம் ஆக்குகிறாய். அஜாமிளன் 88 ஆண்டுகள் பாவம் செய்தாலும், கடைசியில் அவனுக்கு பாவம் வராதவாறு செய்து, ஹரித்வாரத்திற்கு சென்று சாதனை ஆகுமாறு செய்த உதாரணம் இருக்கிறது.

ப்ராபுதவாகி என்ன மனதல்லி:
சரணாகதி அடைந்திருக்கும் என் மனதில் எப்போதும் இருந்து, துக்க என்னும் கடலில் விழாதவாறு என்னை தூக்கி காப்பாற்று.

வாணிஸௌபர்ணி:
பிரம்மாணி பாரதி ஸௌபர்ணி வாருணி பார்வதி முதலான தேவதா ஸ்த்ரீயர்கள் ஆகியோர், அவர்களின் சௌபாக்கியத்திற்காக உன்னை சரணடைந்து, உன்னை ஆபாத மௌளி வரை பஜித்து தன்யர் என்று தங்களை சிந்திக்கின்றனர். பிரம்மாண்யாத்யா: ஸுராங்கனா: யாம் பூஜயந்தி ஸேவந்தே |

நானு பேளுவதேனு? - பிரம்மாதி தேவதைகளே உன்னை பூஜித்திருக்கும்போது, அதி அல்பனான நான் என்ன சொல்வதற்கு இருக்கிறது?.

பாண்டவர மனோபீஷ்டெ:
அஞ்ஞாத வாச காலத்தில் விராட ராயனின் ஆஸ்தானத்தில் இருந்த பாண்டவர்களுக்கு அவர்களின் விருப்பங்கள் அனைத்தையும் நிறைவேற்றி, அஞ்ஞாத வாசம் பூர்ணமாகுமாறு செய்தவள்.

ஈ பாஞ்சபௌதிக: இந்த பாஞ்சபௌதிக தேகத்தில் மோட்ச சாதனை செய்ய வேண்டும். முக்தி அடைவதற்கு மோட்ச சாதனை ஆனாலும் உன் அருளாலேயே அது வரவேண்டியிருக்கிறது. ஆனால், இந்த என் சரீரம் வெறும் போகங்களால் நிரம்பியிருக்கிறது. எந்த சாதனைகளையும் நான் செய்யவில்லை. மனோ நியாமகரான ருத்ராதிகளுக்கும் சாதனை செய்விப்பவளான நீ, ஸ்ரீபதியின் நாமம் நிரந்தரமாக என் நாக்கினில் நிற்குமாறு அருள்வாயாக. இது ஒன்றே எனது மிகப்பெரிய உபாசனையாக இருக்கிறது.

தாபஸ ஜன ப்ரீய:
பிரம்மாதி தேவதைகள், நாரதாதி யோகிகள், இவர்களுக்கு மிகவும் ப்ரியனான ஸ்ரீவிஜயவிட்டலனின் மூன்று வண்ணங்கள் இருக்கும் மூன்று ரூபங்களால் நிரந்தர சேவை செய்யும் ஸ்ரீபூ துர்க்கையே. இந்த ஹரியின் சேவையை அனைவரும் செய்யுங்கள் என்று சொல்கிறாய்.

6. துர்கெ ஹா ஹே ஹோ ஹா: துர்கெ மங்களதுர்கெ....

துர்காதேவியே. நீ 'ஹா ஹெ ஹோ ஹா:' ஆகிய பீஜாக்ஷரங்களால் புகழப்படுகிறாய். ஹரி த்வேஷிகளுக்கு துக்கத்தை கொடுப்பவள் ஆகையால், 'ஹா' என்றும்; வியப்பினை உண்டு பண்ணும் அற்புத செயல்களை செய்பவள் ஆகையால் 'ஹே' என்றும்; பக்தர்களுக்கெல்லாம் அருள் செய்யும் நீ 'ஹோ' என்றும் போற்றப்படுகிறாய். உன் பக்தர்கள் என்றும் துக்க ஸூசகமான 'ஹா' என்னும் சொல்லை உச்சரிக்கக்கூடாது என்று நீ 'ஹா' எனப்படுகிறாய்.

நீ மங்கள தேவதையாக இருந்து, வது வரர்களின் மாங்கல்யத்தை காப்பாற்றுகிறாய்.

உன்னை வணங்கும் நமக்கெல்லாம் துர்கதியை மட்டும் கொடுக்காதே, மஹாதாயே.

***

21. தன்வந்த்ரி சுளாதி

த்ருவதாள

ஆயுவ்ருத்3தி4யாகோ3து3 ஸ்ரேயஸ்ஸு ப3ருவுது3 |
காய நிர்மலின காரணவாஹோது3 | மாயா ஹிந்தா3கு3வுது3
நானாரோக3த3 பீ3ஜ
பே3யிஸி களெவுது3 வேக3தி3ந்த3 |
நாயி மொத3லாத3 குத்ஸித தே3ஹனி |
காயவ தெத்து துஷ்கர்மதி3ந்த3 |
க்ரியமாணசஞ்சித ப4ரிதவாகி3த்த3 து3க்க2 |
ஹேயஸாக3ரதொ3ளு பி3த்து3 ப3ளலி |
நோயிஸிகொண்டு3 நெலெகா3ணதெ3 ஒம்மெ தன்ன |
பா3யல்லி வைத்4யமூர்த்தி ஸ்ரீத4ன்வந்த்ரி |
ராயரா ஔஷதி3 நியாமககர்த்தா |
ஸ்ரீயரஸனெந்து3 துதிஸலாகி3 |
தாயி ஒத3கி3 ப3ந்து3 பா3லன்ன ஸாகித3ந்தெ |
நோயகொட3தெ3 நம்மனு பாலிப |
நய்ய தே3வாதி3க3ளிகெ3ல்ல த4ர்மக3ளு கு3ணஸாந்த்3ர |
ஸ்ரேயஸ்ஸு கொடு3வனு ப4ஜகரிகெ3 |
மாயாமந்த்ரதி3ந்த3 ஜக3வெல்ல வியாபிஸி
ஸன்யாயவந்தனாகி3 சேஷ்டெ மாள்ப |
வாயுவந்தி3த நித்ய விஜயவிட்டலரேய |
ப்ரீயனு காணோ நமகெ3 அனாதிரோக3 களெவ ||1||

மட்டதாள

த4ன்வந்த்ரி ஸ்ரீத4ன்வந்த்ரி எந்து3 |
ஸன்னுதிஸி ஸதத பி4ன்ன ஞானதி3ந்த3 |
நின்னவ நின்னவனெந்து3 க4னதியலி நெனெவ |
மன்னுஜ பு4வனதொ3ளு த4ன்யனு தன்யவென்னி |
சன்ன மூருதி ஸுப்ரஸன்ன விஜயவிட்ட
லன்ன ஸத்யனெந்து3 ப3ண்ணிஸு ப3ஹுவித4தி3 ||2||

த்ரிபுர தாள

ஷஷிகுலோத்ப4வ தீ3ர்க்க4 தமனந்த3ன தே3வ |
ஷஷிவர்ணப்ரகாஷ ப்ரபு4வே விபு4வே
ஷஷிமண்ட3லஸம்ஸ்தி2த கலஷ கலஷபாணி |
பிஸஜலோசன அஸ்வினீயவந்த்3ய |
ஷஷிக3ர்ப்ப4பூ3ருஹ லதெபோதெ3 தாப ஓடி
ஸுவெளஷதி3 துளஸி ஜனக வஸுதே3வ |
அஸுர நிர்ஜரததி நெரெது3 கி3ரிய தந்து3 |
மிஸுகத3லெ மஹோததி4 மதி2ஸலாகி3 |
நஸுனகு3த புட்டிதெ3 பீயூஷக4டத4ரிஸி |
அஸமதெ3ய்வவே நின்ன மஹிமெகெ3 நமோ நமோ |
பி3ஸஜஸம்ப4வருத்ர மொத3லாத3 தே3வதா |
ரிஷினிகர நின்ன கொண்டா3டு3வுது3 |
த3ஷதி3ஷத3லி மெரெவ விஜயவிட்டல பி4ஷ்க
அஸு இந்தி3ர்யங்க3ள ரோக3 நிவாரண ||3||

அட்டதாள

ஷரணு ஷரணு த4ன்வந்த்ரி தமோகு3ணனாஷ |
ஷரணு ஆர்தஜனபரிபாலக தே3வ |
தருவே ப4வதாபஹரண திதிஸுத |
ஹரண மோஹகலீலா பரம |
பூரண பி3ரம்ம, பி3ரம்ம உத்தா3ரக |
உருபராக்ரம உரக3ஷாயி |
வரகிரீட மஹாமணி குண்ட3லகர்ண |
மிருகு3வ ஹஸ்தகங்கண ஹாரபத3க
ஹீரகாஞ்சி பீதாம்ப3ர சரணபூ4ஷா |
ஸிரிவத்ஸலாஞ்சன விஜயவிட்டலரேய |
தருணிகா3துர ஞானமுத்3ராங்கித ஹஸ்த ||4||

ஆதிதாள

ஏளுவாக3லி மத்தெ திருகி3 திருகு3வாக3லி |
பீ3ளுவாக3லி நிந்து குள்ளிருவாக3லி |
ஹேளுவாக3லி மாது கேளுவாக3லி கரெது3 |
பேளுவாக3லி போகி3 ஸர்கர்ம மாடு3வாக3 |
பா3ளுவாக3லி போ4ஜன நானா ஷட்ரஸ ஸம் |
மேளவாக3லி மத்தெ புத்ராதி3க3ளொட3னெ |
கே2ளவாகி மனுஜ மரெயதெ3 ஒம்மெ தன்னய |
நாலிகெ3 கொனெயல்லி த4ன்வந்தரி எந்து3 வொம்மெ
கால அகாலத3ல்லி ஸ்மரிஸித3 அவகெ3
வேளெவேளெகெ3 ப3ஹு பீ4ஜ பரிஹார |
நீலமேக4ஷ்யாம விஜயவிட்டலரேய |
ஓலக3 கொடு3வனு முக்தர ஸங்க3த3லி ||5||

ஜதெ

த4ம் த4ன்வந்த்ரி எந்து3 ப்ரணவபூர்வகதி3ந்த3
வந்தி3ஸி நெனெயலு விஜயவிட்டல ஒலிவா ||

***

கலியுகத்தில் பாவிகளே அதிகமாக பிறக்கின்றனர். அவர்களின் சங்கத்தினால் பற்பல வித பாவ கர்மங்களை சஜ்ஜனர்களும் செய்கின்றனர். இத்தகைய சஜ்ஜனர்களின் பாவங்களை போக்கி, அதன் மூலம் அவர்களுக்கு வரும் நோய்களை பரிகரிப்பவனான 'தன்வந்த்ரி'யை பக்தியுடன் வணங்கினால் அனாதிரோகத்தை அந்த தன்வந்திரி களைகிறான்.

1. <u>ஆயுவ்ருத்தியாகோது ஸ்ரேயஸ்ஸு பருவுது</u>...

ஔஷதிகளுக்கு நிதியான தன்வந்திரியை பக்தியுடன், மரியாதையுடன் வணங்கினால் அல்ப ஆயுள் விலகி, தீர்க்க ஆயுள் உண்டாகிறது - ஆயுர்வ்ருத்தயே நித்யம். ஜன்ம நட்சத்திர நாளன்று, அமிர்தவள்ளி சமித்தினால் பாலினால் ஹோமம் செய்ய வேண்டும். புகழ், பெருமை, தர்ம, அர்த்த, காம, மோட்ச ஆகியவற்றை

கொடுக்கக் கூடியவன் தன்வந்திரி. ஸ்வானந்தமேவ பதமாபயதி ஸ்ம நித்யம் ||.

இவன் சம்சாரத்தையும் (பிறப்பு இறப்பு சுழற்சி) நிர்மூலமாக்க வல்லவன். தன்வந்தரோ மஹாமந்த்ர: ஸம்ஸ்க்ருதிர் வாதினாஷன: || (ஸம்ஸ்க்ருதி - சம்சார).

இந்த மந்திரத்தை ஜெபிப்பதால் நம் தேகம், தூய்மை அடைகிறது. பாபங்கள் விலகுகின்றன. மாய மந்திரங்கள் போன்ற செயல்களை நாசம் செய்கிறது. இந்த மந்திரத்தை ஜெபித்தால், மந்திரம் போட்ட பொம்மைகள், அப்படி செய்தவனையே அழிக்கின்றன.

இதற்காக, உத்தராணி சமித்துகளால் ஹோமம் செய்து, பிறகு அமிர்த சமித்துகளால் இரு மடங்கு ஹோமம் அல்லது வெறும் நெய்யினால் இரு மடங்கு ஹோமம் செய்ய வேண்டும். பற்பல நோய்களுக்கு மூல காரணமான பாப கர்ம என்னும் வேரினை பிய்த்து எறிந்து, நற்பலன்களை இது கொடுக்கிறது.

நாம் முன்னர் செய்த பாவங்களுக்காக (கெட்ட செயல்களால்), நாய் நரி முதலான அனேக நீச யோனிகளில் பிறந்து வந்து, அந்த பாவ கர்மங்களுக்கேற்ப, மேலும் பல பிறவிகளுக்குக் காரணமாகி, அப்போதும் பற்பல விதமான நோய் நொடிகள் என்னும் துக்க சாகரத்தில் விழுந்து துன்பப்பட வேண்டியிருக்கிறது. இதனால் உண்டாகும், மானசிக, தேக சம்பந்தப்பட்ட துன்பங்களின் பரிகாரத்திற்காக என்ன செய்வது என்றே தெரியாமல் இருக்கும்போது ஒரு முறை (ஒம்மெ) தன் வாயினால், வைத்ய மூர்த்தி ஸ்ரீதன்வந்திரிராயா, ஔஷதிராஜ எனப்படும் மூலிகைகளின் நியாமகனே, ஜகஜ்ஜன்மாதி கர்த்தனே, லட்சுமிமூலனே என்று ஸ்தோத்திரம் செய்த உடனேயே, குழந்தை துக்கத்தினால் அழும்போது தாயானவள் ஓடோடி வந்து குழந்தையின் தாபத்தை போக்குவதைப் போல, பக்தர்கள் இருக்கும் இடத்திற்கு தன்வந்திரி, தானே ஓடி வந்து, துக்கத்தை பரிகரிக்கிறான். இவனே பக்தாளு எனப்படுகிறான்.

த்யேய தேவாதிகளிகெ:

தேவதைகளாலும், ரிஷி, பித்ரு, சக்ரவர்த்திகள், மானவர்களாலும் வணங்கப்படுபவனான மூர்த்தி தன்வந்திரியே.

அஞ்ஞான துஹக பயரோக மஹாவிஷாணி |
யோகோsயமாஷு வினிஹந்தி ஸுகம் ச தத்யாத் ||

அனைத்து தர்மங்களையும் அறிந்த ஸ்வாமிக்கு, நம் பாவங்களின் மூலத்தை அறிவது ஒன்றும் கஷ்டமான செயல்கள் அல்ல.

ஞானானந்தாதி குணம் உள்ளவருக்கு ஆனந்தாதி சுகத்தைக் கொடுக்கலாம் அல்லவா? வெறும் ரோக பரிகாரம் செய்து, ஆனந்தத்தை மட்டும் கொடுப்பதல்ல. தன்வந்திரி, தன் பக்தர்களுக்கு நிஷ்ஷேயஸ் என்னும் மோட்சத்தைக் கொடுக்கிறான். பரதஸ்ச ஸாந்த்ரமானந்தமேவ பத மாபயதி ||.

மாயை மந்திரம் ஆகியவற்றில் இருந்து கொண்டு, உலகில் இருக்கும் அனைத்து வஸ்துகளிலும் வியாபித்து, அந்தந்த மந்திர தந்திர சக்திகளை அதிகப்படுத்துபவன், தன்வந்திரி பகவான். மந்திர தந்த்ரங்களில் இருக்கும் தன்வந்திரி, ஔஷதிகள் (மருந்துகள்) அதனுடைய வேலையை சரியாக செய்யுமாறு செய்பவன்.

வாயுவந்தித நித்ய:
தன்வந்திரி நாமக ஸ்ரீஹரி, பிரம்ம வாய்வாதிகளாலேயே வந்த்யன் என்ற பிறகு, நாம் அவனை வணங்காவிட்டால், அது நமக்கே நஷ்டம் ஆகிறது. விஜயவிட்டல தன்வந்திரி தன் பக்தர்களுக்கு மிகவும் பிடித்தமானவன். ததெதத் ப்ரீய: புத்ராத் ப்ரீய: வித்தாத் ப்ரீய: || ஸ்ருதி.

பகவந்தன், மனைவி மக்களில் நிலைத்திருப்பதாலேயே அனைவரும் ஆப்தர்களாக இருக்கின்றனர்.

அனாதி ரோக களெவ:
தன்வந்திரியை நினைத்த பக்தனுக்கு தேகம் சம்பந்தப்பட்ட நோய்கள் மட்டுமல்லாது, அனாதி பவ ரோகங்களையும் அவன் களைவான். அனாதி காலத்திலிருந்து ஜீவனுக்கு, அரிசிக்கு உமி

போன்று, லிங்க தேகம் சேர்ந்திருக்கிறது. அதனை களைந்து ஸ்வானந்தத்தைக் கொடுக்கிறான் தன்வந்திரி.

அபரிமித ஸன்மஹிம பக்தர:
அபுனராவர்த்தரன மாடுவ || ஹரி.ஸா. 24-52

தன்வந்திரி தன்வந்திரி என்று பக்தியுடன் மந்திரத்தை ஜெபித்தவாறு, நல்மதியுடன் பூஜித்து, பகவந்தன் ஸ்வாமி, நான் அவனுடைய தாசன் என்னும் ஞான பூர்வகமாக, 'நான் உன்னுடையவன்' என்னும் பெருமையுடன் அவனை நினைக்கும் பக்த மனிதன், இந்த உலகத்திலேயே தன்யன் தன்யன் என்பது திண்ணம்.

சன்னமூருதி ஸுப்ரஸன்ன:
ஸுந்தரமூர்த்தியான தன்வந்திரி மகிழ்வான். ஹரி பிரசன்னன் ஆனால், கிடைக்காததுதான் என்ன?.

விஜயவிட்டலன்ன ஸத்யவெந்து பண்ணிஸு பஹுவிததி:
பகவந்தன் ஸத்யன் என்று பல விதமாக ஸ்தோத்திரம் செய்ய வேண்டும். ஸத்ய நாமக வாயுவிற்கு ஸத்யத்வத்தைக் கொடுப்பவன் ஆகிய ஸத்ய ஷப்தத்தினால் ஸ்ரீஹரியின் மகிமை அறிய வேண்டும்.

3. ஷஷிகுலோத்பவ தீர்க்க தமனந்தன தேவ...

சந்திர வம்சத்தில் தீர்க்கதமஸ் என்னும் அரசன் இருந்தான். இவனின் மகனே தன்வ. இவனுடைய தவத்திற்கு மெச்சி, வேண்டிய வரம் கேள் என்று ஸ்ரீஹரி கேட்டபோது, நீ என் மகனாக அவதரிக்க வேண்டும் என்று வேண்டினான். தீர்க்கதம நந்தனனான தன்வ மகன் தன்வந்திரி எனப்பட்டான். தன்வந்திரி: தீர்க்கதமஸ: ஆயுர்வேத ப்ரவர்த்தக: ||. பாற்கடலைக் கடையும் காலத்தில் அவதரித்த தன்வந்திரி, மறுபடி மனிதனான தன்வனில் அவதரித்தான். 'தேவ: திவ் க்ரீடாவிஜிகீஷா ஸ்வப்ன காந்திகதிஷு' என்னும் வேர்ச்சொல்லிற்கேற்ப தன்வந்திரி, க்ரீடாதி குண விசிஷ்டன். அனைத்து இடங்களிலும் வியாப்தன்.

இப்படியிருக்கையில், தன்வனின் மகனாக அவதரித்தது, வெறும் க்ரீடைக்காகவே தவிர வேறு காரணம் இல்லை.

ஷஷிவர்ண ப்ரகாஷ:
சந்திரனில் நியாமகனாக இருப்பவன். அவனின் ஒளியும் சந்திரனைப் போலவே இருக்கிறது. சந்தோக காந்தி மமிதோரு கரைர்ஜகந்தி | ஷீதாம்ஷு மண்டலகதம் ||
சகல கார்யங்களையும் செய்யத் தக்கவனாகவும், அனைத்து உலகிற்கும் பிரபுவாகவும் இருப்பவன். விபுவே - சர்வ லட்சண லட்சண்யனாக இருந்து, சர்வ சராசர ப்ரபஞ்சத்திலிருந்து மிகவும் வேறுபட்டவன். அப்பரத ஹெத்தெய்வனிவ மத்தொப்பரனு லெக்கிஸனு.

ஷஷிமண்டல ஸம்ஸ்தித:
சந்திர மண்டலத்தில் இருப்பவன்.

கலஷ-கலஷபாணி.
பாற்கடலைக் கடைந்தபோது, இந்திர நீல மணி காந்தியுள்ள வலது கையில் பரிமாறும் கலசத்தையும், இடது கையில் அமிர்த பூர்ண கலசத்தை தரித்து வந்தவன். இரு கலசங்களை தரித்து வந்த தன்வந்திரி. தக்ஷிணபாஹுனா ஸுதாகமண்டலம் கலஷம் சாபரீகா || தா. நிர்.

பிஸஜலோசன - தாமரைக் கண்ணன்.

அஷ்வினேவந்த்ய - அஸ்வினி தேவதைகள், சூரியனின் புத்திரர்கள். இவர்கள் தேவதைகள் மற்றும் தைத்யர்களும் ஆவர். இவர்கள் நோய்களை போக்குபவர்கள். மூக்கிற்கு அபிமானிகள். இவர்களில் தன்வந்திரியை சிந்தித்தால் அனைத்து நோய்களும் பரிகாரம் ஆகின்றன. தயோ: தன்வந்தரி: சிந்த்ய: ஸர்வவ்யாதி நிவாரக: ||

ஷஷிகர்ப்ப பூருஹ லதெபோதெ தாபவோ
டிஸுவெளஷதி துலஸிஜனக வஸுதேவ:

சந்திரனால் நன்கு வளரும் மரம், செடிகள், கொடி, புதர்; மற்றும் நோய் நொடிகளை தூர விலக்கும் துளசி திவ்ய ஔஷதி எனப்படுகின்றன. தன் ஆனந்த பாஷ்பத்தை அமிர்த கலசத்தின் மேல் தெளித்து, ஸ்ரீஹரி, துளசி ஜனக எனப்படுகிறான். சந்திரனின் அம்சம் இருக்கும், ஔஷதி குணங்கள் நிறைந்திருக்கும் நெல்லி மரம், வெற்றிலை முதலான கொடிகள், புதர்களைப் போல வளரும் பிராம்ஹி முதலான ஔஷதிகளை கொண்ட மூலிகைகளையும், துளசியையும் படைத்தான். வ்ருக்ஷஜாதிகெ மிகிலு எந்தெனிஸுவ துளஸி பெத்தலோசன.

அஸுர நிர்ஜரததி நெரெது கிரியதந்து:
தன்வந்தரியின் அவதாரத்தின் பின்னணியை இங்கு கூறுகிறார். தேவ-அசுரர்கள் ஒன்றாக மந்தர பர்வதத்தைக் கொண்டு வந்து, வாசுகியின் உதவியுடன் பாற்கடலைக் கடையும்போது, லட்சுமி முதலான 14 வஸ்துகள் அதிலிருந்து வந்தன. பிறகு, அமிர்த கலசத்தைப் பிடித்தவாறு, தன்வந்திரி மேலே வந்தான்.

அஸமதெய்வனெ நின்ன மஹிமெகெ நமோ நமோ:
தன்வந்திரிக்கு சமமான, நோய்களைப் போக்கக்கூடிய ஸ்வாமி வேறு ஒருவர் இல்லை. இவன் அஸம-தெய்வன் எனப்படுகிறான். உன் அற்புத மகிமைக்கு நமோ நமோ.

இந்தெ தேவதேவனை, தேவானு தேவதைகள் கொண்டாடுகின்றனர். தைத்யர்கள், அமிர்த கலசத்தை அபகரித்தபோது, அமிர்தமான மோகினி ரூபத்தை தரித்த பகவந்தனை பிரம்ம ருத்ராதி தேவதைகள் கொண்டாடுகின்றனர்.

தஷ திஷியொளு மெரெவ விஜயவிட்டல:
அனைத்து திசைகளிலும் இருந்து, பக்தர்களின் நோய் நொடிகளை பரிகரிப்பவன். பிஷ்க - பிஷக் - நோய்களையும், பவ ரோகங்களையும் பரிகரிக்கும் வைத்ய மூர்த்தி. அஸு இந்திரியங்கள ரோக நிவாரண:

<u>4. ஷரணு ஷரணு தன்வந்தரி தமோகுணநாஷ...</u>

ஸத்வாதி குண த்ரயங்களில் தமோ குணமும் ஒன்று. இது சோர்வு, தூக்கம், அஞ்ஞானாதிகளை கொடுக்கிறது. இத்தகைய ஹரித்வேஷ, வாயுத்வேஷத்திற்கு காரணமான தமோ குணத்தை அழிப்பாயாக.

ஆர்த்தஜன பரிபால:
கஜேந்திரன் முதலையால் பிடிக்கப்பட்டு துக்கப்பட்டபோது, உன்னை வேண்டினான். அப்போது நீ ஓடோடி வந்து அவனை காத்தாய். பக்தர்கள் நோய்களால் பீடிக்கப்பட்டபோது நீயே வந்து அவர்களை காக்க வேண்டும்.

தேவதருவெ - பக்தர்களுக்கு சகல அபீஷ்டங்களையும் தரும் கல்பவ்ருட்சம் நீயே. அவர்களின் பவதாபத்தை பரிகரிப்பாயாக.

திதிஸுதர், அமிர்தத்திற்கு தகாதவர்கள் என்று அறிந்து, மோகினி வேடத்தினால் அவர்களை மயக்கி, தைத்ய விமோஹக லீலையைக் காட்டி அசுரர்களை ஏமாற்றினாய்.

பரமபூர்ண - பிரம்ம பரமபூர்ண குணஷாலியானவன். பிரம்ம ஷப்த வாச்யன்.

பிரம்ம உத்தாரக - பிரம்மன், அதர்வண வேத உத்தாரகன். அதர்வணம், ஆயுர்வேதத்திற்கு மூலம் எனப்படுகிறது. பிரம்மதேவரே ஆயுர்வேதத்தின் பிரிவுகளை உலகிற்கு எடுத்துக்காட்டியவர். இதுவே அஷ்டாங்க ஹ்ருதய சிகிச்சை எனப்படுகிறது. இந்த பிரபஞ்சத்தில் பகவந்தனை மீறிய பராக்ரமி வேறு யாரும் இல்லை. இவனே அமித பராக்ரமி. சேஷனையே படுக்கையாகக் கொண்டு படுத்திருப்பவன்.

வரகிரீடம் தரித்திருப்பவன், காதுகளில் வஜ்ர மணிகளால் ஒளிரும் கர்ண குண்டலங்களை தரித்தவன், பிரகாஷமயமான கர-வளையல்கள், மார்பில் ஒளிரும் ஹார பதக்கம், வைர ஒட்டியாணம், பீதாம்பர தரித்து கால்களில் கொலுசு, ஸிரிவத்ஸ லாஞ்சன ஆகியவற்றை அணிந்த 16 வயதான இளம் வாலிபன். ஞானமுத்திரையைக் காட்டும் கைகளைக் கொண்ட தன்வந்திரியை தியானிக்க வேண்டும்.

5. ஏளுவாகலி மத்தெ திருகி திருவாகலி..

தன்வந்திரி தன்வந்திரி என்று சிந்திப்பது, திரும்பத் திரும்ப நினைப்பது, நடக்கும்போது, நின்றிருக்கும்போது, விழும்போது, அமரும்போது, பேசும்போது, வேறொருவர் பேசுவதை கேட்கும்போது, தீர்த்த க்ஷேத்திரங்களுக்கு சென்று சத்கர்மங்களை செய்யும்போது, வாழ்க்கையை நடத்தும்போது, அறுசுவையுடன் பஞ்ச பட்ச பரமான்னங்களை உண்ணும்போது, கிருஹஸ்தனாக இருந்து, தன் மனைவி மக்களுடன் மகிழ்ச்சியாக இருக்கும்போது, எந்த மனிதன் இந்த சந்தர்ப்பங்களில் தன்வந்திரியை மறக்காமல், நாக்கின் முனையில் தன்வந்திரி தன்வந்திரி என்று சிந்தித்தால் / கூறுகிறானோ, அவனுக்கு அந்தந்த காலங்களில் வரக்கூடிய சம்சார முதலான பவபீஜம் பரிகாரம் ஆகிறது.

நீலமேகஷ்யாம விஜயவிட்டலன் இவனை முக்தராக ஆக்குகிறான்.

6. தம் தன்வந்தரி எந்து ப்ரணவ பூர்வகதிந்த...

தம் தன்வந்தரயே நம: - என்னும் மந்திரத்தை, ஓம்காரத்துடன், பக்தியுடன் ஜெபித்தவனுக்கு விஜயவிட்டலன் தரிசனம் அளிக்கிறான்.

***

22. ஶ்ரீகபில தேவர ஸ்தோத்திர ஸுளாதி

ராக: தோடி. தாள: த்ருவ

ஸித்தி3தா3யக ஸிஷ்டஜன பரிபால பரம
ஷுத்3தா4த்ம ஸுகு3ணஸாந்த்3ர ஸுக2வாரிதி3 |
நித்3ராரஹித ப3த்3ராரமண நிர்விகார |
சித்3தே3ஹ ஸர்வகால ஸுந்த3ரஸார |
பத்4மஸம்ப4வ ப3லி ப்ரக்ஷாலித பாத3 மஹா |
ஹ்ருத்ரோக3 நாஷ வைகுண்ட2வாஸ |
வித்4யாதீ3ஷ விஷ்வ நாடக நாராயண |
வித்4ய உத்தா4ரக உத3தி4 ஸத3ன |
ஸித்3தா4தி3 வினுத ஸந்தத பாதாளவாஸி |
பு3த்தி4 விஷால மஹிம பாபஹாரி |
க2த்3யோதவர்ண ஸகல வ்யாப்த ஆகாஷ அமித |
ப3ந்த3விச்சேத நானா ரூபாத்மக |
அத்3வைதகாய மாயாரமண ராஜீவ நேத்ர |
அத்3வய அனாதி3 புருஷ சித்ர |
கர்தம முனிஸோம விஜய விட்டல கபில |
நிர்தோ3ஷ2 கருணாப்4தி3 ஸர்வராதா4ரி ||1

மட்ட தாள

ஆதி3மன்வந்தரதி3 ஜனிஸித3 மஹதெ3ய்வ |
ஆதி3பரபொ3ம்ம பொ3ம்மனய்ய ஜீய |
ஸாது4 ஜனர ப்ரிய ஸந்தத முனிதிலக |
போத4 ஷரீர ப4குதர மனோஹாரி |
மாத4வ ஸிரி விஜய விட்டல விமலேஷ |
மோத3 மதிய கொடு3வ கபில ப4க3வன்மூர்த்தி ||2||

த்ரிவிடி தாள

க4னமஹிம கௌ3ணாண்ட3தொ3ளகெ3 லீலெயிந்த3 |

ஜனிஸி மெரெத3 பி3ந்து3 ஸரோவரத3ல்லி ।
மினுகு3வ த்3வய ஹஸ்த அப்ராக்ருத காய ।
இனனந்தெ ஒப்புவ ஷிரோருஹவோ ।।
கனக புத்த2ளியந்தெ காந்தி த்ரிபு4வனக்கெ ।
அனவரத தும்பி3 ஸூஸுதலித3கோ ।
ஜனனிதே3வஹூதிகெ3 உபதே3ஷவனு மாடி3 ।
கு3ண மொத3லாத3 தத்வத3 திளிஸிதெ3 ।
தனுவினொளகெ3 நீனெ திளிது3 திளிதெ3 நித்ய ।
ஜனரன்னு பாலிஸுவ கபிலாக்2யனெ ।
அனுதி3ன நின்ன த்4யானவ மாடி3 மணியிந்த3 ।
எணிஸுவ ஸுஜனக்கெ ஞான கொடு3வெ ।
எணெகா3ணெ நின்ன லோசனத ஷக்திகெ3 ஸகர ।
ஜனப நந்தரன்னு ப4ங்கி3ஸிதெ3 ।
அனுமானவித3க்கில்ல நின்ன நம்பி3த3 மூட
மனுஜனிகெ3 மஹபத3வி ப3ருவத3ய்ய ।
முனிகுலோத்தம கபில விஜய விட்டலரேய ।
எனகெ3 யோக3 மார்க்க3வனு தோரோ தவகதி3ந்த3 ।।3।।

அட்டதாள

கபில கபிலயெந்து3 ப்ராத:காலதலெத்து3 ।
ஸுபுத ஸாரி நாலிகெ3யலி நுடித3 மானவகெ3 ।
அபஜய மொத3லாத3 க்லேஷக3ளொந்தி3ல்ல
அபரிமிதஸௌக்2ய அவன குலகோடிகெ3
கு3புத நாமவிது3 மனதொ3ளகி3டு3வுது3 ।
கபட ஜீவரு ஈதனு ஒப்3ப3 ருஷியெந்து3 ।
தபிஸுவரு காணோ நித்ய நரகத3ல்லி ।
க்ருபண வத்ஸல நம்ம விஜய விட்டலரேய ।
கபிலாவதார ப3ல்லவகெ3 ப3லு ஸுலப4 ।।4।।

ஆதிதாள

ப3லஹஸ்தத3லி, யக்ஞஷாலெயல்லி, கங்

22. ஸ்ரீகபில தேவர ஸ்தோத்திர ஸுளாதி

க3ள கப்பினல்லி ஹ்ருதய ஸ்தா2ன நாபி4யல்லி |
ஜலதி3 க3ங்கா3 ஸங்க3மத3ல்லி க3மனத3ல்லி |
துலஸி பத்ரத3ல்லி துருக3 துரிவினல்லி |
மலகு3வ மனெயல்லி நைவேத்4ய ஸமயத3ல்லி |
ப3லு கர்ம ப3ந்த4க3ளு மோசகவாகு3வல்லி |
செலுவனாத3வனல்லி வித்4யெ பேளுவனல்லி |
ப2லத3ல்லி ப்ரதிகூலவில்லத3 ஸ்த2ளத3ல்லி |
பெ3ளெத3 த3ர்ப்பெ4க3ளல்லி அக்3னியலி ஹரிவ |
ஜலத3லி ஜாம்புனத3 நதி3யல்லி ஸ்லோகத3ல்லி |
ப3லிமுக2 ப3ளக3த3ல்லி ஆசாரஷீலனல்லி |
க4ளிகெ3 ஆரம்பத3ல்லி பஸ்சிம பா4க3த3ல்லி |
பொளெவ மிஞ்சினல்லி ப3ங்கா3ரத3ல்லி இனிது |
காலகாலக்கெ பி3ட3தெ3 ஸ்மரிஸு கபில பரமாத்மன |
கெ3லுவுண்டு1 நினகெ3லவோ ஸம்ஸாரதி3ந்த3 வேக3 |
கலியுக3தொ3ளகி3தெ3 கொண்டா3டி3த3வரிகெ3 |
க2ளர அஞ்சிகெயில்ல நிந்த3ல்லெ ஷுப4யோக3 |
ப3லவைரினுத நம்ம விஜய விட்டலரேயா |
இளெயொளகெ3 கபிலாவதாரனாகி3 நம்ம பா4ரவொஹிஸுவ ||5||

ஜதெ

தம பரிச்சே2த3 ஈதன ஸ்மரணெ நோடு3 |
ஹ்ருத் கமலதொ3ளகெ3 விஜய விட்டலன்ன சரணாப்3ஜ ||6||

***

கபில நாமக பரமாத்மன், தேவஹூதி - கர்தமரில் அவர்களின் தவத்தினை மெச்சி, காட்டிக் கொண்ட ரூபம். இவன் ஸித்தேஷனாக இருந்து, அனைத்து சித்திகளும் இவனிடமிருந்தே கிடைக்கிறது. சாங்க்ய சாஸ்திரம் அரிதானபோது, ஆசுரி என்னும் சிஷ்யனுக்கு தத்வ சமூகங்களை உபதேசம் செய்தார்.

ப்ரோவாசாஸூரயே ஸாங்க்யம் தத்வக்ராம வினிர்ணயம் -- பாகவத. கபில என்றால் என்ன என்பதை பாப்ரவ்ய ஷாகை

தெரிவிக்கிறது. அனந்த சுகரூபி, உலகினை காப்பவன். லயத்தை உருவாக்குபவன் - ஆகையால் அவன் கபிலன்.

அனந்த ஸுகரூபத்வாத் பாலனால்லாயனாச்ச |
யம் வை தேவம் கபிலமுதாஹரந்தி ||

அனாயாசமாக சுகத்தை அனுபவிப்பவன்.

1. ஸித்திதாயக சிஷ்யஜனபரிபல பரம...

ஸித்திதாயக - யோகிகளுக்கு அணிமாதி அஷ்ட ஸித்திகள் இருக்கின்றன. இந்த ஸித்தி உள்ளவர்களுக்கு மறுபடி அனூர்மிமத்வ முதலான 18 ஸித்தி கைகூடுகின்றன. இந்த ஸீத்திகள் அனைத்தும் ஸித்தமாவது ஸித்தேஷனான கபிலனின் அருளால் மட்டுமே. ஸர்வாதிகா: அணீமாத்யா: விஷ்ணோ: நான்யஸ்ய கஸ்யசித் |

யோகிகளுக்கெல்லாம் ஸித்தி கொடுப்பவன் கபிலனே (யோகீனாம் ஸித்திதோ பவான்). ஸித்தர்கள் அனைவரும் சேர்ந்து கபில நாமக ஹரியை கன்றாக ஆக்கிக் கொண்டு, ஆகாஷ என்னும் பாத்திரத்தில் அணிமாதி ஸித்தியை பெற்றனர்.

ஷிஷ்ட ஜன பரிபால: ஷிஷ்யையான தன் தாய் தேவஹூதிக்கு தத்வஸங்க்யானத்தை தெரிவித்து, சம்சார சாகரத்திலிருந்து காப்பாற்றியவன். சிஷ்யனான ஆசுரிக்காக தத்வோபதேசம் செய்து காப்பாற்றியவன்.

பரமஷுத்தாத்ம ஸுகுணஸாந்த்ர:
பகவந்தன் தேவஹூதி கர்தமரிடமிருந்து அவதரித்திருந்தாலும், ப்ராக்ருத சரீரத்தில் பிறந்தவன் அல்ல. அங்குடாக்ரதி ஜனிஸித அமரதரங்கிணியு லோகத்ரயகளக ஹிங்கிஸுவளந்தெ ||

அவன் பரம பவித்ரன் என்று சொல்லவும் வேண்டுமா? பவித்ராணாம் பவித்ரனான ஹரி, மங்கள வஸ்துகளுக்கும் மங்களத்தைக் கொடுப்பவன்.

22. ஶ்ரீகபில தேவர ஸ்தோத்திர ஸுளாதி

பிரம்மவாயுகளைவிட கோடிகுண உத்தமளான லட்சுமிதேவியைவிட அனந்தானந்த குணபூர்ணன் ஶ்ரீஹரி. அனந்தானந்த குணங்களின் சங்கமம். ஶ்ரீஹரியின் ரூப குணங்களும் அனந்தமானவை. ஒவ்வொரு குணங்களும் அனந்த.

நித்ராரஹித: பிரளய காலத்திலும் நித்ரா, சோர்வு முதலான தோஷங்கள் அற்றவனாக இருக்கிறான். பிரளயத்திலும் பிரதிபாஷாலியான வாயுதேவனுக்கும், சராசர ஜகத்தின் ஞானம் வருமாறு அருள்பவனுக்கு தூக்கம் எங்கு? பகவந்தன் பிரளய காலத்தில் 87-1/2 ஆண்டுகள் படுத்திருக்கிறான். ஜீவர்களை தன் பொன் வயிறு என்னும் தொட்டிலில் படுக்க வைப்பதற்கே இந்த தூக்க நாடகம். சாதுர்மாஸ்யத்திலும் இதே ரீதியாக வெறும் கண்களை மூடிக்கொள்கிறான் அவ்வளவே.

நித்ராரமண: நித்ரா ரூபளான தமோபிமானி, இவனுக்கு மனைவி. பாகவதம் இவளை ‘யோகமாயா’ என்று அழைத்தால், ஹரிவம்சம், ‘கச்ச நித்ரெ’ என்று அழைக்கிறது.

நிர்விகார: எந்தவித விகாரங்களும் அற்றவன் ஶ்ரீஹரி. பிரளய காலத்தில் 100 ஆண்டுகள் படுத்திருந்தாலும், விகாரம் இல்லாதவன். எப்போதும் 16 வயதினன். கால, தேஷத்தினால் விகாரம் பெறுபவன் அல்ல. சிதானந்தாத்மக சரீரி. ப்ராக்ருத சம்பந்தமே இல்லாதவன். ந தஸ்ய ப்ராக்ருதாமூர்த்தி: |

ஸர்வ: ஸர்வ வஸ்துகளின் குணங்கள் ப்ரதானமாக இவளிலேயே இருக்கிறது. அதற்காக ‘ஸர்வ’ எனப்படுகிறாள். பூர்ணகுண உள்ளவன் ஆகையால் சர்வன். [பூர்ணத்வாத் ஸர்வனாமக:]

கால: சம்பூர்ண குணவுள்ளவன் என்றே பகவந்தன் கால எனப்படுகிறான். யமன் மனிதர்களுக்கு காலன். அவனுக்கு சுதர்சன சக்ராபிமானி மன்மதன் காலஸ்வரூபன். காமனுக்கு ருத்ரதேவன். ருத்ரனுக்கு பிரம்மதேவன். சதுர்முகனுக்கும் துர்க்கை காலரூபள். இவளுக்கு உத்தமமான பகவந்தன் சிறந்த கால நாமகனாக இருக்கிறான்.

ஸுந்தர: பகவந்தனைவிட அழகு வேறு யாரும் இல்லை. மன்மதன் ஸாமான்யமாக சுந்தரன் என்று சொல்கிறோம். இவன் மன்மதனைவிட அழகு. அவனின் தந்தை. ஸுந்தரன் என்றால் பிரம்மாதிகள். அவர்களின் நடுவில் வீற்றிருப்பவன். அவர்களுக்கும் நியாமகன் என்று அர்த்தம். சாரரூபனானவன்.

பத்மஸம்பவ, கலி ப்ரக்ஷாலித பாத:
வாமனனாகி, த்ரிவிக்ரமன் ஆனபோது அவனின் பாதத்தின் கட்டை விரல் பிரம்மாண்டத்தின் ஓட்டில் தாக்கி, தண்ணீர் உள்ளே வந்தபோது, பிரம்மதேவன் அந்த தண்ணீரால் த்ரிவிக்ரமனின் பாதம் கழுவினான். அந்த தண்ணீரே கங்கை. அதனை தரித்தவன் சிவன். இவ்வாறு கழுவியவன் பிரம்மன். உபசாரம் ஏற்றவன் நாராயணன். கழுவிய தண்ணீரை தலையில் தரித்தவன் சிவன். இதனால் த்ரிமூர்த்திகளில் விஷ்ணுவே சிறந்தவன் என்று தெரிகிறது. இதன்படியே, பலிசக்ரவர்த்தியும், வாமனனாக வந்தவனின் பாதத்தைக் கழுவி, தன் தலை மேல் தரித்தான். ஸத்தர்மவித் மூர்த்னி அததாத் ஸுமங்கலம் ||

மஹஹ்ருத்ரோகனாஷ :
காம என்னும் இதய நோயினை பரிகரிக்க யாராலும் சாத்தியம் இல்லை. காலநேமி தைத்யன் காமாபிமானியாக இருந்து விஷயங்களை போகிக்கிறான். பகவந்தனின் ஞான என்னும் அஸ்த்ரத்தினாலேயே காமம் அழியவேண்டுமே தவிர, மற்றவர்களால் அது சாத்தியம் இல்லை. இத்தகைய காமாபிமானி தைத்யனைக் கொன்று, இதய நோயினை பரிகரிப்பவன் நாராயணன்.

இதற்கு பலிசக்ரவர்த்தியே உதாரணம். உடனடியாக தான் இந்திர பதவியை அடைய வேண்டும் என்று விரும்பினான் பலி. இது அவனுக்கு இல்லாத பாக்கியம். பக்தனானதால் அந்த கெட்ட காமத்தை போக்கி, பாதத்தை தலையில் வைத்து, அவனை பாதாளத்தில் போகுமாறு செய்தான் த்ரிவிக்ரமன்.

வைகுண்டவாஸ: பகவந்தன் லக்ஷ்ம்யாத்மகமான அனந்தாஸன, ஷ்வேதத்வீப, வைகுண்டங்களில் வசிக்கிறான். பகவந்த ஷுப்ர -

விகுண்டா என்னும் தம்பதிகளின் மகனாக அவதரித்தான். ரமாதேவி அவனை பிரார்த்தனை செய்தபோது, அவளுக்கு ப்ரியத்தை கொடுப்பதற்காக வைகுண்டத்தை மற்ற உலகங்களைவிட உத்தமமாக ஆக்கினான். வைகுண்டநாம லோகோऽயம் திவ்யம் ஷாட்குண்ய ஸம்யுதம் || அப்ராக்ருத வைகுண்டத்தில் வசிப்பவனும் அப்ராக்ருதமே ஆகிறான்.

வித்யாதீத: 14 வித்யைகளாலும் பூர்ணமாக அறியப்பட முடியாதவன். ஸ்ரீகிருஷ்ணனை பிடிப்பதற்கு புறப்பட்டாள் கோபிகை. ஆனால் அவனை பிடிக்கமுடியாமல் திரும்பி வந்தாள். இப்படியே, வேதாதி சாஸ்திரங்களும் பகவந்தனை வர்ணிக்கப் புறப்பட்டு அது சாத்தியம் ஆகாமல், திரும்பி வந்தன. யதோ வாசோ நிவர்த்தந்தே || ஸ்ருதி

விஷ்வநாடக: அனைது உலகத்தையும் தான் விரும்பியதைப் போல - நாடக பொம்மைகளை ஆட்டுவிப்பதைப் போல ஆட்டுவிக்கும் சூத்ரதாரி.

நாராயண - அர - தோஷங்கள் யாருக்கு இல்லையோ அவன் நாரர். பக்தர்கள். அவர்களுக்கு ப்ரியனாக இருப்பவன். நாரா = நித்யமுக்தளான லட்சுமிதேவி. அவளுக்கும் ஆஸ்ரயன். தோஷங்கள் அற்ற வேதாதி சாஸ்திரங்களால் போற்றப்படும் தோஷதூரன்.

வித்யா உத்தாரக: தேவஹூதிக்காக தத்வஸங்க்யான என்னும் சாஸ்திரத்தை அருளியவன். சாங்க்ய சாஸ்திர என்றால் சுத்த ஆத்மதத்வ விக்ஞானம்.

உததி ஸதன: கடலில் வீடு உள்ளவன். தசாவதாத்திலும் தண்ணீரின் சம்பந்தம் உள்ளவனே. மத்ஸ்ய, கூர்ம, வராக, நரசிம்ம, வாமன (நர்மதா), பரசுராம (பஞ்சனத), ராம (கடலில் சேது), ஸ்ரீகிருஷ்ண (துவாரகை) ஆகியவை. மஹோததிஷயோ எனப்படுகிறான். உததி என்றால், பாற்கடல். அங்கு இருப்பவன்.

ஸித்தாதிவினுத:
ஸித்தயோகிகளுக்கு குருவாக அவர்களால் பூஜிக்கப்படுபவன். ஸாங்க்யாசார்யராலும் வணங்கப்படுபவன்.

ஸந்தத பாதாளவாஸி:
தாய்க்கு உபதேசம் செய்தபிறகு, இப்போதும் பாதாளத்தில் ஒரு ரூபத்தில் வசிப்பவன். 60,000 கடல்களை வெறும் நேத்ராக்னியினால் சுட்டுப் பொசுக்கியவன். ஸனகாதிகளால் வணங்கப்படுபவன். சமுத்திரராஜன் பூஜாதிகளால் இவனை மரியாதை செலுத்தி, இருக்க இடம் கொடுத்தான்.

புத்தி விஷால மஹிமா:
உலகின் சாமான்ய மற்றும் விசேஷ ஞானம் பெற்றிருக்கும் மகிமை உள்ளவன். பிரம்மாதி தேவதைகளுக்கும் ஞானாதிகளை கொடுப்பவன். விதிஷர்வ பூர்வகீர்வாண விக்ஞானதம் ||

ரிக்வேதாதி 18 வித்யைகள் உள்ளன. இந்த வித்யைகளுக்கு அனிருத்தனே நியாமகன். அனைவரின் புத்தியில் க்ருதிபதி பிரத்யும்னன் இருக்கிறான்.

பாபஹாரி:
கபில கபில என்று 7 முறை சொல்பவர்களின் அனைத்து பாவங்களையும் பரிகரிப்பவன். ஸத்குணவ கத்தவர அகவகதிவனு.

கத்யோதவர்ண:
கத்யோத - சூரியன். சூரியனைப் போல ஒளிமயமான தேகம் கொண்டவன். உத்யத் பாஸ்வத் ஸமாபாஸ்வத் |

ஸகலவ்யாப்த:
அந்தர்பஹிஷ்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித: | என்று சொல்வதைப் போல, உள்ளும் வெளியேயும் சர்வத்ர இருப்பவன். இவன் இல்லாத இடம், பொருள் என எதுவும் இல்லை. சர்வத்ர வியாபித்ததாலேயே விஷ்ணு. தேஷ, கால குணங்களாலும் வியாப்தன். பூஜைப் பொருட்கள், பிரதிமை, சாலிகிராம, அதிதி, ஸ்ரீதுளசி ஆகியவற்றிலும் நிலைத்திருப்பவன். யோயோக்ரதய மாவிஷ்ய பிபர்த்யவ்யய ஈஷ்வர: ||

22. ஸ்ரீகபில தேவர ஸ்தோத்திர ஸுளாதி

ஆகாஷ அமித:

அவ்யாக்த ஆகாஷவே அமித ஆகாஷ. அதற்கு அபிமானினி லட்சுமிதேவி. அவள் அங்கு வியாபித்திருக்கிறாள். அவளுக்கும் ஸ்வாமி ஸ்ரீஹரி. அவன் அமிதாகாஷத்தில் வியாபித்திருப்பதில் வியப்பு எதுவும் இல்லை. இவ்வாறு நித்யமும், அபரிமிதமும் ஆன அவ்யாக்ருத ஆகாஷத்திற்கு இடம் கொடுத்த இவன் அமிதாகாஷனே ஆகிறான். ஆகஸதொளெத்தத்த நோடிதரூ ||

ஐந்தவிச்சேத:

ஸம்ஸாரத்தில் கட்டிபோடுபவனும், அதிலிருந்து விடுவிப்பனும் ஸ்ரீஹரியே. பந்தகோ பவபாஷேன பாஷாச்சமோசக: || கட்டுவர பவகட்டு பிடிஸுவ. ஆனால் அவனை நாம் சத்பக்தி என்னும் பாஷத்தில் கட்ட வேண்டும் அவ்வளவே.

நானாரூபாத்மக:

பகவந்தன் ஒரே ரூபத்தினாலும், மத்ஸ்யாதி 10 ரூபத்தினாலும், 100, 1000 என அனேக ரூபங்கள் உள்ளவன். அனந்தரூபியும் அவனே. ஆத்மா, அந்தராத்ம ரூபங்களால் ஹரி, ஜீவரின் ஸ்வரூப மற்றும் ஜட சரீரங்களிலும் வியாபித்திருக்கிறான். பிரம்மாண்டத்தில் நரசிம்மனின் ரூப குணங்கள், சமுத்திரத்தின் அலைகளைப் போல நிரம்பியிருக்கின்றன. அனந்த பதார்த்தங்களில் இருந்து, அனந்தரூப தரித்திருந்தாலும், ஸ்ரீஹரிக்கு சோர்வு முதலான தோஷங்கள் இல்லை. அனந்த ஜீவர்களில் ஒவ்வொரு ரூபத்தில் இருந்து அவர்களை நடத்துபவன்.

அத்வைதகாய: நேஹ நானாஸ்தி கிஞ்சன என்னும் ஸ்ருதியைப் போல, ஹரியின் ரூபங்களில், குணங்களில், அவதாரங்களில், க்ரியைகளில் எந்தவொரு பேதங்களும் இல்லை. ஆனந்தனே பிரம்மன் என்றும், பிரம்மன் ஆனந்தம் உள்ளவன் என்றும் காரணப்பெயரை சொல்லலாம். பகவந்தனின் மத்ஸ்யாதிகளுக்கும் மூல ரூபத்திற்கும் அபேத, அவதார அவதாரங்களும் பேதம் இல்லை. ஸ்ரீஹரியின் அவயவங்களில் பேதம் இல்லை. கபில நாமக ஹரிக்கும் ஜீவ நியாமக பிம்பத்திற்கும் ஐக்யம். இங்கு பேத சிந்தனை செய்தால், அதோகதியே கிடைக்கிறது.

மாயாரமண:
லட்சுமிதேவியே வேதாபிமானினி. மாயா என்பது லட்சுமிதேவியின் நாமமே ஆகும். அத்தகைய வேதாபிமானியின் பதி வேதவேத்யனாக இருப்பவன். பகவந்தன் எந்தவொரு ரூபத்தை எடுத்தாலும், மாயா, க்ருதி, ஜய, ஷாந்தி, முதலான ரூபங்களை எடுத்து வணங்குகிறாள். இந்த மாயையை பிரளய காலத்திலும் ஸ்ரீஹரி புறக்கணிப்பதில்லை / விடுவதில்லை.

ராஜீவ நேத்ர:
ராஜீவ - தாமரைக் கண்ணன். புண்டரிகாக்ஷன். இந்தீவ ரோதரதள நயனா | த்வாதச ஸ்தோத்திரம். கப்யாஸம் புண்டரீகாக்ஷம் | என்று ஸ்ருதி சொல்கிறது.

அத்வய :
சமானம் இல்லாதவர். ஆதி - அந்தம் இல்லாதவன். அனாதி. அன எனப்படும் வாயுதேவருக்கும் காரணன்.

புருஷ:
பூர்ணமான ஷட்குணம் உள்ளவன். பூர்ணகுணன். புராண புருஷன் இவனே. பிரளய காலத்தில், ஷூன்ய நாமகனாக இருக்கிறான். ஸர்வஸமர்த்தனான ஸ்ரீஹரிக்கு ஒப்பிட்டால், பிரம்மாதி தேவதைகள் அனைவரும் பெண்களைப் போல அபலையர்கள் ஆவர். ஸ்த்ரீ ப்ராயமிதரத் ஸர்வம் ஜகத் பிரம்மபுர:ஸரம் ||

சித்ர-சித்தர:
மிகவும் ஞானியானவன் பரமசேதன, சித்த எனப்படும் ஜீவர்களை காப்பவன். மனதில் நிலைத்திருந்து நியமனம் செய்பவன். சித் = ஸ்ருஷ்டி. அதனை செய்பவர் பிரம்மதேவர். சேதா எனப்படுப்பவர். அவரையும் மீறியிருப்பவன் சித்தன். ஆச்சர்யரூபன். அற்புதமானவன்.

கர்தமமுனிஸூனு - கர்தமப்ரஜாபதி மற்றும் தேவஹூதியில் அவதரித்தவர் கபில நாமகன். கர்தம வீர்யமாபன்னோ ஜக்ஞேऽக்னிரிவ தாருணி || பாகவத. கபில நாமகனான நம் விஜயவிட்டல அனைத்து அஞ்ஞானாதி தோஷ தூரனாக,

பக்தர்களின் அடைக்கலம் எனப்படும் காருண்யமூர்த்தி, அனைவரையும் தரித்து, காக்கும் மகானுபாவன்.

2. ஆதிமன்வந்தரதி ஜனிஸித மஹதெய்வ...

14 மன்வந்தரங்களில் ஆதிமன்வந்தரம் எனப்படும் ஸ்வாயம்புவ மன்வந்தரத்தில் அவதரித்தவன். பிரம்மாதி தேவதைகளுக்கும் மகாதேவன்.

ஆதி:
கபில பகவந்தன் அனைத்து உலகிற்கும் ஆதிகாரணம் ஆனவன். பிரம்மாதிகளுக்கும் மூத்தவன். இவன் அனைவருக்கும் தலைவன் ஆனாலும், இவனுக்கு தலைவர் என்று யாரும் இல்லை. சர்வ சம்ஹாரகன் (அத்ருத்வாத் ஆதி:).

பரபொம்ம:
பிரம்மதேவனுக்கும் அந்தர்யாமியாக இருந்து, உலகினை படைப்பவன். ஜீவர்கள் பிரம்மர்; முக்தர்கள் பரபிரம்மர். லட்சுமிதேவி பரபிரம்மள். பகவந்தன் பரமமஹத் பிரம்மன்.

பொம்மனய்ய:
உலகத்தையே படைக்கும் பிரம்மதேவனையும் படைப்பவன். பிரம்மதேவனின் தந்தை. ஆத்மபவ என்பது ஒரு குறியீட்டுப் பெயர். பிரம்மாண்டத்திற்குள் ஸ்ரீஹரியின் நாபியிலிருந்து பிறந்தவன். பிறகு, வாசுதேவ மாயாதேவியரில் இன்னொரு முறை பிறந்தவன்.

ஜீயனு:
ஸர்வஸ்வாமி. அனைவரும் மம ஆத்மஸ்வாமி என்றே உபாசிக்க வேண்டும்.

ஸந்தத ஸாது ஜனர ப்ரிய:
பக்தவத்ஸலன். பக்தளான தேவஹூதிக்கு தன்னை வத்ஸலனைப் போல தானம் கொடுத்துக் கொண்டவன். எப்போதும் பக்தர்களை விடுபவன் அல்ல. பக்தர்களை விடுவதில்லை என்று ஹரி சபதம்

செய்திருக்கிறான். ந மே பக்த: ப்ரணஷ்யதி | என்று அபயம் கொடுத்திருக்கிறான்.

முனி திலக:
முனிகளுக்கும் திலகமாக இருப்பவன்.

போத ஷரீர:
ஷுத்தானந்தாத்மகமான சரீரம் கொண்டவன். ஞானானந்தாத்ம விக்ஞானரோசி: பரிபூரிதாந்த: || பக்தர்களுக்கு மனோஹர ரூபம். துஷ்டருக்கு பயங்கர ரூபம். கோபிகா ஸ்த்ரீயர்களுக்கு மனோஹர ரூபம் காட்டியவன்.

ஹரி: பக்தர்களின் பாபங்களையெல்லாம் பறிப்பவன்.

மா - வேதவித்யைகள். அவற்றிற்கு ஸ்வாமி. மாயைக்கு தவன். மா - இல்லை. தவ - ஸ்வாமி. நியாமகன் இல்லாதவன்.

விமலேஷ விஜயவிட்டலனே சந்தோஷ, ஞானங்களைக் கொடுத்து அருள்வாயாக. மோதமதியைக் கொடு. ஞானோபதேசத்திற்காகவே அவதரித்தவன்.

கபிலனெ பகவன்மூர்த்தி:
ஷட்குணங்கள் பூர்ண ப்ரமாணத்தில் தெரிவது உன்னிடம் மட்டுமே.

3. கனமஹிம கௌணாண்டதொளகெ லீலெயிந்த...

கன மஹிம:
மஹாமஹிமாவந்தன். ஹரியின் பட்டத ராணி லட்சுமிதேவி. அனந்த வேதங்களால் அன்புடன் வணங்கப்படுபவன் ஸ்ரீஹரி.

பிந்து ஸரோவரதல்லி:
பிந்து சரோவரம், மாத்ரு கயா அல்லது ஸித்தபுரியில் இருக்கிறது. சரஸ்வதி நதியால் சூழப்பட்ட இந்த பிந்து சரோவரம், ஸ்ரீஹரியின் ஆனந்தபாஷ்பம். அந்த துளி விழுந்தபோது உண்டான சரோவரம். இது கர்தமரின் ஆசிரமம். இங்கு கர்மரால் அவதரித்தவன்.

22. ஸ்ரீகபில தேவர ஸ்தோத்திர ஸுளாதி

மினுகுவ த்வய ஹஸ்த:

ஞானமுத்திரை அபயமுத்திரைகளால் ஒளிரும் கைகளைக் கொண்டவன். ஞானாபயாங்கித கரம் கபிலம்:. அப்ராக்ருதமான சரீரத்தாலேயே வெளிப்பட்டவன்.

இனனந்தெ ஒப்புவ ஷீரோருஹவோ:

இன - சூர்யனைப் போல. மிகவும் ஒளிமயமான கூந்தலைக் கொண்டவன்.

கனக புத்தளியந்தெ காந்தி த்ரிபுவனக்கெ |

அப்ராக்ருதகாய : பகவந்தன் அப்ராக்ருத சரீரம் கொண்டவன். ஞானானந்தமய ஒளியினால் ஒளிர்பவன் என்று அர்த்தம். பரபிரம்ம நிராகாரன் என்றால் வெறும் இருட்டு என்று அர்த்தம். பூர்ண குணங்கள் என்னும் மாணிக்கத்தால் ஸாகாரன் என்று சொல்லி, அந்த இருட்டினை தூர விலக்க வேண்டும். ஒளிரும் சூரியனில் இருட்டு இருக்க முடியுமா? ஸ்ரீஹரிக்கு, பசி, தாகம், நோய், நொடி முதலான ப்ராக்ருத சரீரத்திற்கு இருப்பதைப் போல, அவன் அப்ராக்ருத சரீரி ஆனதால், அவனுக்கு இவை இருப்பதில்லை. தேவகியின் கர்ப்பத்திலும் ஒன்பது மாதங்கள் இருந்து வெளியே வந்தான். வரும்போது ஆயுதங்கள் சகிதமாகவே வந்தான். துக்காதிகளுக்கு ப்ராக்ருத சம்பந்தமே மூலகாரணம் ஆகும்.

ஜன்ம கர்ம ச மே திவ்யம் | என்று திவ்ய சரீர என்றே சொல்லப்பட்டிருக்கிறது.

ந தஸ்ய ப்ராக்ருததாமூர்த்தி:
மாம்மேதோऽஸ்தி ஸம்பவா |
ஸர்வே நித்யா: ஷாஷ்வதாஸ்ச |
ஸத்வேஹ: ஸுககந்தஷ்ச ஞானபா: ஸத்பராக்ரம: |
ஞானஞான: ஸுகஸுக: ||

இவனந்தெ ஒப்புவ ஷிரோருஹ:

7ஸ்ரீஹரிக்கும் அவனின் கூந்தலுக்கும் எந்தவொரு வேறுபாடுகளும் இல்லை. ஸ்ரீஹரியைப் போல அவனின் ஒவ்வொரு கூந்தலும்கூட ஸ்ருஷ்ட்யாதி அஷ்ட காரியங்களையும் செய்ய வல்லது.

ஸ்ரீகிருஷ்ணன் மூலரூபத்தின் ஒரு கருப்பு கூந்தல் அவ்வளவே. இவற்றில் பேதம் சிந்தித்தால் அதமத்திற்கான துக்கம் உண்டாகிறது.

யதா துக்கே வ்ருஷ்டம் பர்வதேஷு விதாவதி |
ஏவம் தர்மான் ப்ருதக் பஷ்யன் தானே வானுவிதாவதி ||

பகவந்தனின் சரீரம் அப்ராக்ருதமானதாலேயே இவனுக்கு தேகம் இல்லை என்கிறது ஸ்ருதி. மத்ஸ்யாதிகளுக்கு, அவனின் அவயவங்களுக்கு பேதத்தை அறியக்கூடாது.

மத்ஸ்ய கூர்மாந்தி ரூபாணாம் குணானாம் கர்மணமபி |
ததைவாவயவானாம் ச பேதம் பஷ்யதி யே: க்வசித் |
ஸ யாதி தம ஏவ து ||
கீதை 2-25.

கனகபுஸ்தளயந்தி காந்தி த்ரிபுவனக்கெ:
பகவந்தனின் சரீரம் சிதானந்தாத்மகமாக இருந்து, ஸ்ரீஹரி தங்கத்தின் பொம்மை போல தோஷம் அற்றவன். புடம் போட்ட தங்கத்தில் வேறு உலோகம் இருப்பதற்கு சாத்தியமா? ஸ்ரீஹரியைப் போல முக்தர்களும்கூட ஜீவானந்த சரீரிகள் ஆவர்.

சிதானந்த ஷரீரேண ஸர்வே முக்தா யதா ஹரி: |
ஸூர்யகோடி ப்ரதீகாஷம் சந்திரகோடி ஸுஷீதலம் |

இத்தகைய ஒளியால் ஒளிர்கிறான். தங்கமய வண்ணம் கொண்டவன். ஸுவர்ணவர்ணோ ஹேமாங்கோ | பகவந்தனுக்கு வெண்மை, சிவப்பு, தங்கமய, கிருஷ்ண வண்ணங்கள் உள்ளன.

ஜனனி தேவஹூதிகெ உபதேஷவனு
மாடி குண மொதலாத தத்வவ திளிஸிதெ:

கபில நாமக பகவந்தன் தாயான தேவஹூதிக்கு ஸத்வாதி குணங்களையும், அதன் ஸ்வரூபங்களையும், 25 தத்வங்களையும் உபதேசம் செய்திருக்கிறாய். தாய்க்கு சொல்லும் சாக்கில்,

உலகிற்கே ஸாங்க்ய தத்வத்தை உபதேசித்த மகானுபாவன் நீயே. மாதுரித்தம் ப்ராபோசத் வை பக்திவிதானயோகம் ஸாங்க்யம் ||.

தனுவினொளகெ நீனே திளிது நித்யதலி:
கபிலரூபி, தாய்க்கு அத்யாத்ம, அதிதெய்வ யோகத்தை தெரிவித்தான். அதிதெய்வத்தில் கபில எனப்பட்ட பகவந்தன், அத்யாத்மத்தில் அனிருத்த ரூபி எனப்படுகிறான். தேகத்தில் இருக்கும் பகவத் ரூபத்திற்கு சம்பந்தப்பட்ட ரூபத்தை உபதேசம் செய்தார்.

அனுதின நின்ன த்யானவ மாடி:
யார் கபில நாமக பகவந்தனின் ரூபத்தை தியானம் செய்தவாறு, 'கம் கபிலாய நம:' என்னும் மந்திரத்தை துளசி, கமலாக்ஷி மணியால் தக்க எண்ணிக்கையில் ஜபம் செய்தவர்களுக்கு தன் யதார்த்த ஞானத்தைக் கொடுக்கிறான்.

அத்ருஷ்யதா ஞான மோக்ஷ ப்ரதௌ பக்தேஷ்டிமௌ ஸதா | -- தந்த்ரஸார 4-54.

எணிகாணி நின்ன லோசனத ஷக்திகெ
ஸகர ஜனபனந்தரனு பங்கிஸிதெ:

யாக குதிரையை, கபில நாமக ஸ்ரீஹரி திருடினான் என்று தவறாக நினைத்து, அவனைக் கொல்ல வந்த சகரனின் 60,000 பேர் மக்களும் கபிலனின் நேத்ராக்னியால் சுட்டுப் பொசுங்கினர். நான்கு பேர் மட்டும் உயிரோடு தப்பினர்.

தஸ்ய சக்ஷு: ஸமுத்தேன தேஜஸா தக்தாஸ்தே வை |
சத்வாரஸ்த்வ சேஷிதா: ||

அனுமானவிதகில்ல நின்ன நம்பித மூட
மனுஜகெ மஹபதவி பருவதய்யா:

யார் வலது கையில் ஞான முத்திரை, இடது கையில் அபய முத்திரை தரித்து, பிரம்மாதிகளின் வ்ருந்தத்திற்கு தத்வத்தை போதிக்கும் கபிலனில் நம்பிக்கை வைத்து, உன் மந்திர ஜப

செய்யும் மந்திரமதியும்கூட மகாபதவியில் அமர்வான். இந்த மந்திரங்கள், தோல்வியே இல்லாத வாழ்க்கை, உண்மையான ஞானம், சம்சாரத்திலிருந்து விடுதலை ஆகியவற்றை அடைகிறான்.

முனிகுலலோத்தம கபில விஜயவிட்டலரேய
எனகெ யோகமார்க்க தோரு தவகதிந்த

முனிகுலத்திலேயே உத்தமனான கபில பகவந்தனே, எனக்கு ஸ்ரீஹரியில் மனோயோகத்தையே எனக்கு அருள்வாயாக. மனோ நிக்ரஹ, மோக்ஷ உபாயங்களான பகவத் ஞான, பகவத் பக்தியை அருள்வாயாக.

க்வசித் யோக: உபாய: ஸ்யாத் க்வசித் சித்தநிரோதனம் |
ஞானம் து யோக ஷப்தோக்தம் மோக்ஷோபாயோ யோக: இதி ||

நிரீஷ்வர ஸாங்க்ய, ஸேஷ்வர ஸாங்க்ய என்று இரு விதங்கள். கபில ரிஷி உபதேசித்தது இதையே. கபில நாமக ஸ்ரீஹரி உபதேசித்தது பிரமாணிகமே. அப்படியே, யோகமும்கூட பாதஞ்சலி கூறியது, ஹிரண்யகர்ப்ப கூறியது என்று இரு விதங்கள். பாதஞ்சலி கூறியது புறக்கணிக்கப்பட்டு, ஹிரண்யகர்ப்ப கூறியதே யோகம் என்று ஆனது.

4 கபில கபிலயெந்து ப்ராத:காலதலெத்து...

ஹரிபக்தன் ஆனவன், காலையில் எழுந்த உடனேயே, கபில கபில என்று ஏழு முறை பக்தியுடன் உச்சரித்தால், கபில ஸ்ரீஹரி, அவனுக்கு அன்று, தோல்வி, அநியாயம் முதலான துன்பங்கள் வராதவாறு காக்கிறான். அவனுக்கு மட்டுமல்ல, அவனின் குலத்தவர்கள் அனைவருக்கும் சுகமே வருமாறு அருள்கிறான். அவனுக்கு மட்டுமல்ல அவனின் குலத்தில் அனைவருக்குமே சுகமே வருமாறு அருள்கிறான். இது ரகசியமாகவே இருந்து, கடைசி வரை ரகசியமாகவே ஜெபிக்க வேண்டும். வாய் விட்டு ஜெபிக்கக் கூடாது. அப்படி செய்தால், துஷ்டர்கள் அதனை கெட்ட வழியில் பயன்படுத்திக் கொள்வார்கள். தீர்க்க த்வேஷிகளி கெரெயதெலெ ஸல்லிஸுவுதென்ன பின்னபத ||

கபடஜீவரு ஈதனு ஒப்ப ரிஷியெந்து தபிஸுவரு:

கபில ரூபி சாட்சாத் பகவந்தனின் அவதாரமாக இருந்து, சாமான்ய ரிஷியாக இருந்த கபில ரிஷியே இவன் என்று சிலர் நினைப்பர். இவ்வாறு தவறாக நினைப்பதற்கு, கபில ரிஷி, அவனின் தாய் தேவஹூதி, அவனின் சிஷ்ய ஆஸுரீ இதே பெயர் கொண்ட சாமான்ய மனிதர்களும் இருந்தார்கள்.

கபிலோ வாஸுதேவாக்ய: தந்த்ரம் ஸாங்க்யம் ஜகதா ஹ |
ஸர்வாகமவிருத்தம் ச கபிலோ அன்யோ ஜகாத ஹ ||

க்ருபணவத்ஸல நம்ம விஜயவிட்டலரேய
கபிலாவதாரனு பல்லவகெ பஹு ஸுலப

சம்சாரத்தில் சிக்கி துக்கம் அடைந்தபின், மகாகாருணீகனான கபில ஸ்வாமி, கபிலாவதாரத்தையும், சாங்க்ய சாஸ்திரத்தையும் சரியாக அறிந்த பக்தவ்ருந்தத்திற்கு மிகவும் சுலபமாக அடையத் தக்கவன். ஸூலபனோ ஹரி - ரமாதவனொலிஸலரியதே பளலுவரு ||

<u>5. பலஹஸ்ததல்லி யக்ஞ ஷாலெயல்லி..</u>

பலஹஸ்ததலி :
கபில நாமகன், வலது கையில் இருப்பதால் பூஜாதிகளுக்கு பெயர் பெற்றவன். அந்த கைகளின் சந்தியிலும் கபிலன் இருக்கிறான் என்று அறிய வேண்டும். வலது தோளின் சந்தியிலும் கபிலாய நம: என்று ந்யாஸ செய்கிறோம்.

யக்ஞஷாலெயல்லி:
யக்ஞ யாகாதிகள் செய்யும் இடங்களில் கபிலன் இருந்து பவித்ரம் ஆக்குகிறான். ஆகையாலேயே இந்த இடம் அசுத்தம் ஆகக்கூடாது.

கங்கள கப்பினல்லி:
கண்ணில் இருக்கும் ஜ்யோதியில் கபிலன் திக்பாலகர்களுடன் இருக்கிறான். 'ஜ்யோதிஸ்தோ கபிலே ஹரி:'.

ஹ்ருதயத்தில் கபிலன் இருக்கிறான். நாபியில், கங்கா நதி கடலில் சேரும் சாகர சங்கமத்தில், நடக்கும்போது, துளசி இலையில், குதிரையில், பசுக்களில், நைவேத்யம் செய்யும்போது, மோக்ஷ சதன ஹரியின் ஞானத்தைப் பெறும் வழியில் செய்யப்படும் பற்பல வித கர்மங்கள் விலகுவதற்கு கபிலனின் அருள் வேண்டும். அழகாக இருப்பவர்களில் கபிலன் இருக்கிறான். கல்வி போதிக்கும் குருகளில், கபிலன் இருப்பதால் ஹூம் தும்காரங்களை செய்யக்கூடாது.

ஹரிக்கு நைவேத்தியம் செய்யப்பட்ட பழங்களில், யக்ஞ யாக, யோக்யமான தீர்த்த ஸ்தானங்களில், தாமாகவே வளர்ந்து நின்ற தர்ப்பைகளில், அக்னியில், பாயும் நதிகளில், ஜம்பூத்வீபத்தில், ஜம்பு நதியில், ராமாயண மகாபாரதாதி சாஸ்திர ஸ்லோகங்களில், பலிமுக - வானரங்கள் / கபிகளில் கபில நாமகன் இருக்கிறான்.

சதாசார ஷீலர்களில், நாழிகை துவங்கும் விடியற்காலை மற்றும் கடைசி காலங்களில், ஒளிரும் மின்னலில், சிறந்த தங்கத்தில், கபில நாமகனின் ஸ்தானத்தை சிந்தித்து, அனைத்து வேளைகளிலும், கபிலனை வணங்க வேண்டும்.

<u>இதன் பல ஸ்துதி</u>

இவ்வாறு சிந்தனை செய்தவர்களுக்கு, சம்சாரத்தில் இருந்தாலும் சம்சாரத்தின் ஆர்வம் வருவதில்லை. சம்சாரத்தை அனாயாசமாக வெல்ல முடியும். இந்த கலியுகத்தில் இப்படியாக கொண்டாடிய, மனிதர்களுக்கு துர்ஜனர்கள் எதுவும் துன்பம் கொடுப்பதில்லை. அவன் இருக்கும் இடத்திற்கே கல்யாணகரமான யோகங்கள் வருகின்றன. பல வைரியான இந்திரதேவனாலும் பூஜிக்கப்படுபவனான கபில பரமாத்மன், நம் சம்சார பாரத்தை இறக்குவதற்காகவே, பூமியில் அவதரித்திருக்கிறான்.

<u>தமபரிச்சேத ஈதன ஸ்மரணெ, நோடு...</u>

இவனை சிந்தித்தவர்களுக்கு அஞ்ஞான அன்யதாஞானம் ஆகியவை பரிகாரம் ஆகிறது. இந்த பகவந்தனை இதயத்தில் பார்க்கலாம்.

22. ஸ்ரீகபில தேவர ஸ்தோத்திர ஸுளாதி

****

23. ஶ்ரீனிவாஸ சுளாதி

த்ருவ தாள

ஆதி3 தெ3ய்வனெ நின்ன பாத3வனெ நெரெனம்பி3தெ3னோ
பி3ட3த3லெ
ஆத3ரிஸி காடு3வ க2ளரு வாமத3லி ஹுரிகூ3டி3
பா3தெ4 பா3டெஸுவது3 நா யாரிகெ3 தூ3ரலி
போதவனேக ஜனனவாத3 காலத3ல்லி
ஈ தே3ஹக்கெ ஸுக2 வாத3த்3து3 காணெனோ
வேதா3ரிஸி காணத3 ப3லு மஹிமானெ
யாத3வ ஷிரோமணி விஜயவிட்டல நின்ன
மாது4ர்ய நாமவ உணிஸி பீ3தி3 ப3ஸவன்ன மாடோ3 ||1

மட்ட தாள

அப்பன அப்பா நீ கி3ரிய திம்மப்பனே
ஸர்ப்பன தல்பானே ஸர்வாரொளிப்பனே
இப்பலு தப்பானே கரெதா3ரெ ப3ப்பனே
த3ர்ப்பண ரூபனெ விஜயவிட்டல நின்ன க1ப்பனெ சரணத3லி
தொ4ப்பனெ ஹொரஹொரளுவெனோ ||2

த்ரிவிட தாள

கடு1கன கைய்ய ஸிலுகித3 கெள3 ஒந்து3 ஸங்
கட ப3டு3வந்தெ நன்னொளகெ3 நானே பீ3ளுவெ அ
கடாகடா நினகி3ன்னு கருண பா3ரதெ3 ஸூர
கடக தொ3டெ3யனெ நிராகரிஸி என்னனு இரா
கடக தொ3ளகெ3 இட்டு எளஸுவரெ அ
கடகடா நானாரிகா3ல்பரியலி மர
கட குணிவந்தெ மனஸு இந்தி3ரியக3ளு வ
க்கட வாகி3 குணிது3 கங்கெ3டி3ஸுதிதெ3 வெங்
கடாசலவாஸா விஜயவிட்டல சொ

க்கட மார்க்4க4வ தோரி விகடமதி களெயோ ||3

அட்ட தாள

தா3ஸர மனெயல்லி வாஸவாகி3த்3த3வ நானு
தா3ஸர ப3ளியல்லி ஸேரிகொண்ட3வ நானு
தா3ஸர மனெயல்லி நீரு பொத்தவ நானு
தா3ஸர மனெயெஞ்சலெலெ தெகெ3த3வ நானு
தா3ஸருண்ட3த்3து3 உண்டு3 பெ3ளெத3வ நானு
தா3ஸர மனெ முந்தெ3 ராத்ரி ஜாக3ர நானு
தா3ஸர ப1ஞ்சிலி தி3ன களெத3வ நானு
தா3ஸர நம்பி3த3 தா3ஸனு நானு
தோ3ஷி நானாதெ3டே3 தோ3ஷ ரஹித புண்ய
ராஷி புரந்த3ரதா3ஸர ம்யாலெ த3யஷரதி4 இட்டு |
நீ ஸலஹோ யென்ன பாஷவ பி3டி3ஸூத்த
லேஸு பாலிப நம்ம விஜயவிட்டலரேய
பீ3ஸி பீ3ஸாடதி3ரோ பி3ங்கத3 தெ3ய்வ ||4

ஆதி தாள

நின்னனெ பொந்தி3தெ3 நின்னனெ ஸேரிதெ3
நின்னனெ பாடி3தெ3 நின்ன கொண்டா3டி3தெ3
நின்னங்க்3ரி யுக3ளவன்னு நம்பி3தெ3 பா
வன்ன சரித ரங்க3 என்ன ஸலஹதி3ரெ
நின்னாரு ஒப்புவரு பன்னகா3ரி வாஹன்ன விஜயவிட்டல
என்ன பி3ட3தெ3 காயோ அனாத2ரொடெய ||5

ஜதெ

து3ருள நெனதெ3 து3ர்ஜனரிகெ3 ஒப்பிஸதெ3
பரிபாலிஸி ஸாகு விஜயவிட்டல ரேய ||6

****

1. ஆதிதெய்வவெ நின்ன பாதவெ நெரெனம்பிதேனு பிடதலெ...

ஆதி தெய்வமே உன் பாதங்களையே நம்பியிருக்கிறேன். பூனையானது தன் குட்டியை கடித்து காப்பதைப் போல என்னை காப்பாற்று. என் இடது பக்கத்தில் இருக்கும் தத்வாபிமானி தைத்யர்கள் எனக்கு கஷ்டங்களைக் கொடுக்கின்றனர். என்னை அழிப்பதற்கு முயல்கின்றனர். உன்னைத் தவிர வேறு யாரிடம் நான் முறையிடுவேன்?. எவ்வளவோ பிறவிகள் முடிந்து போயுள்ளன. நாய், நரி முதலான தேகங்களில் சுகத்தைவிட துக்கமே அதிகமான இருக்கின்றன. சுகம் கொஞ்சம்கூட இல்லை. உன் அனந்த மகிமைகளை சொல்வதற்கு வந்த வேதங்களே உன்னை வர்ணிக்க முடியாமல் பின்வாங்கியதாம். இப்படி இருக்கையில், பிரம்மாதிகளால் புகழப்படுபவனே, நான் உன்னை என்ன சொல்லி புகழட்டும்?.

யாதவ ஷிரோரத்ன, யாதவ கிருஷ்ணனே, உன் மதுரமான நாமத்தை நிரந்தரமாக சிந்தித்தவாறு யாருக்கும் தலை வணங்காத ஜடபரதனைப் போல இருக்கும், என்னுடைய வாயிலும் உன் நாமாம்ருதத்தை நிரந்தரமாக இருக்கச் செய்.

2. அப்பன அப்பானெ கிரிய திம்மப்பனெ...

அப்பன அப்பனே - அனைவருக்கும் தந்தையான பிரம்மனுக்கும் தந்தையே
கிரிய திம்மப்பனெ - சப்தகிரியில் இருக்கும் வெங்கடேச திம்மனே
ஸர்ப்பனதல்பனே - சேஷனையே படுக்கையாகக் கொண்டு, படுத்திருக்கும் நிர்பயவந்தனே
சர்வரொளப்பனெ - பிரம்மாதி த்ருண வரைக்கும் அனைவரிலும் அந்தர் நியாமகனாதவனே.
இப்பலுதப்பானெ - சர்வத்ர ஓதப்ரோதமாக (குறுக்கும் நெடுக்குமாக) இருப்பவனே
கரயலு பப்பானெ - கஜேந்திரன் அழைத்தவுடன் வந்ததைப் போல, அழைத்தால் வருபவனே.
தர்ப்பண ரூபனே - கண்ணாடியைப் போல ஒளிர்பவன்.

ஹே விஜயவிட்டலனே, உன் பாதத்தில் தொப் என்று விழுந்து, உருள்கிறேன். என்னை காப்பாற்று.

3. கடகன கைய்யதிலிகித கோவொந்து...

ஹரியே. கசாப்புக் கடைக்காரரிடம் அகப்பட்ட பசு ஒன்று, அவனிடமிருந்து தப்பிக்க முடியாமல் கஷ்டப்படுவதைப் போல நானும்கூட இந்த அபிமானம் என்னும் சுழியில், சம்சார சக்கரத்தில் சிக்கி, கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறேன். என்னுடைய இந்த நிலையைப் பார்த்து உனக்கு இன்னும் கருணை வரவில்லையா?

தேவதைகளின் சமூகத்திற்கு ஸ்வாமியானவனே, என்னை புறக்கணித்து, இத்தகைய சங்கடத்தில் என்னை ஆழ்த்தலாமா? இது உனக்கு சரியா? என் இந்த கஷ்டத்தை நான் வேறு யாரிடம் முறையிடட்டும்?

என்னுடைய 11 இந்திரியங்களும், பல மனைவியர் ஒரு மனிதனை சூழ்ந்திருப்பதைப் போல, என்னை சூழ்ந்து, உன்னிடம் வரவிடாமல் தடுக்கிறது. வெங்கடாசல வாசனே, ஸ்ரீஸ்ரீநிவாஸனே, எனக்கு மோட்சத்திற்கு செல்வதற்கு சரியான வழியைக் காட்டு. என் கெட்ட புத்தியை போக்கு.

4. தாசர மனெயல்லி வாஸவாகித்தவ...

உன்னை நான் காக்க வேண்டுமெனில், உன்னிடம் என்ன தகுதி இருக்கிறது என்று கேட்பாயா? குருகளான புரந்தரதாசரின் கருணா கடாக்ஷம் என் மேல் ஏராளமாக இருக்கிறது.

நான் தாசரின் வீட்டிலேயே வசிக்கிறேன்.
நான் தாசரின் அருகில் அவருடைய உறவினர் போல இருக்கிறேன்.
நான் தாசரின் வீட்டில் வேலைக்காரனைப் போல தண்ணீர் பரிமாறுகிறேன்.
நான் தாசரின் வீட்டில், எச்சில் இலையை எடுக்கிறேன்.
நான் தாசர் உணவருந்திய பிறகு, அவரின் பிரசாதத்தை தின்று தேகத்தை வளர்க்கிறேன்.

தாசரின் வீட்டின் முன், நாய் போல முழித்திருந்து, வாயிலைக் காப்பேன். சிறு வயதில் (மத்வபதி) தாசராக இருந்து, பால்யத்தை கழித்தேன். தாசரையே நம்பியிருக்கும் தாசன் நான்.

நான் ஏதாவது பாபிஷ்டனாக இருந்தால், தோஷங்களே இல்லாதவரான புரந்தரதாசரின் மேல் இருக்கும் கருணையால், என்னை இந்த சம்சாரிக பாஷத்திலிருந்து வெளியே இழுத்து நல்லவற்றை அருள்வாயாக. இந்த பாபியின் தோஷங்களை எண்ணாமல் குருகளின் புண்யத்தினால் என்னை காப்பாற்று. பலமாக என்னை அடிக்காதே.

5. நின்னனெ பொந்திதெ நின்னனெ ஸேரிதெ...

உன்னையே தஞ்சம் அடைந்தேன். உன்னையே சேர்ந்தேன். உன்னையே புகழ்வேன். உன்னையே கொண்டாடுவேன். உன் பாத கமலங்களையே நம்பியிருப்பேன். இவ்வளவு செய்தாலும் நீ என்னை காப்பாற்றாவிட்டால், உன்னை யார் பாடுவார்கள்? புகழ்வார்கள் . சொல். அனாத ரட்சகனே.

6. துருளனெனதெ துர்ஜனரிகெ வொப்பிஸதெ...

துருள என்று என்னை துர்ஜனருடன் சேர்த்துவிடாதே. என்னை காப்பாற்று. அதுவே போதும், விஜயவிட்டலனே.

***

---

24 ஸ்ரீநரசிம்ம சுளாதி

ராக: கல்யாண த்ருவ தாள

வீர ஸிம்ஹனெ நாரஸிம்ஹனெ த3ய பாரா
வாரனெ ப4ய நிவாரண நிர்கு3ண
ஸாரித3வர ஸம்ஸார வ்ருக்ஷத மூல
பே3ரரிஸி கீளுவ பி3ருது3 ப4யங்கர
கோ4ராவதார க2ராளவத3ன அ
கோ4ர து3ரித ஸம்ஹார மாயாகார
க்ரூரதை3த்யர ஷோக காரண உது3ப4வ
ஈரேளு பு4வன ஸாக3ரதொ3டெ3ய
ஆரெளத்3ர நாம விஜய விட்டல நாரஸிங்க3
வீரஸாதுங்க3 காருண்ய பாங்க3 ||1

மட்ட தாள

மகு3வின ரக்கஸனு ஹக3லிரளு பி3ட3தெ3
ஹகெ3யிந்த3லி ஹொய்தா3 நக3பன்னக3 வனதி3
க3க3ன மிகி3லாத3 அக3ணித பா3தி4யலி
நெகெ3து3 ஒக3து3 ஸாவு ப3கெ3து3 கொல்லுதிரலு ஹே
ஜக3த3 வல்லப4னே ஸுகுணா நாதி3க3னெ
நிக3மா வந்தி3தனே பொக3ளித3 ப4குதர
தக3லி தொலக3னெந்து3 மிகெ3 கூகு3த்திரலு
யுக3 யுக3தொ3ளு த3யாளுக3ள தே3வரதே3வ
யுகா3தி3 க்ருத நாமா விஜயவிட்டல ஹோஹோ
யுக3ள கரவ முகி3து3 மகு3வு மொரெ இட3லு ||2

ரூபக தாள

கேளிதா3க்ஷணத3லி லாலிஸி ப4க்தன்ன
மெளளி வேக3த3லி பாலிஸுவெனெந்து3
தாளி ஸந்தோஷவ தூளி தும்பி3த3ந்தெ

மூலோகத3 பதி வாலயதி3ந்த3 ஸு
ஸ்ஸீல து3ர்லப4 நாம விஜய விட்டல பஞ்ச
மௌளி மானவ கம்ப4 ஸீளி மூடி3த3 தே3வ ||3

ஜம்பெ தாள

லடலடா லடலடா லட கடிஸி வனஜஜாண்ட3
கடஹ பட பட புடுத்கடதி3 பி3ச்சுதலிரலு
புட புட புடனெகெ3து3 ஸீரிஹாருத்த ப
ல்கடகடா கட கடிது3 ரோஷதி3ந்த3
மிடி மிடி மிடனெ ரக்தாக்ஷியல்லி நோடி3
தடித்கோடி உத்த4டகெ ஆர்ப்ப3டவாகி3ரலு
குடில ரஹித வ்யக்த விஜய விட்டல ஷக்த
தி4ட நிடில நேத்ர ஸுரகடக பரிபாலா ||4

த்ரிவிடி தாள

பொப்பிரியே வீர த்4வனியிந்த3 தனிகி3டி3
ஹப்3பி3 முஞ்சோணி உரி ஹொரகெ3த்3து3 ஸுத்தெ
உப்3ப4ஸ ரவிகா3கி3 அப்ஜ நடு3கு3திரெ
அப்3தி4ஸபுத உக்கி ஹொரசெல்லி ப3ருதிரெ
அபு3ஜ ப4வாதி3க3ளு த3ப்3பி3ப்3பி3 கொண்டா3ரி
அப்3ப3ரவேனெனுத நப4த3 கூ3ளியு தகி3யெ
ஷப்த4 தும்பி3து அவ்யாக்ருதகாஷ பரியந்த
நிப்3ப3ர தருகி3ரிக3ளு ஜர்ஜரிஸலு
ஒப்3ப3ரிகொ3ஷவல்லத3 நம்ம விஜயவிட்டல
இப்3ப3கெ3யாகி3 கம்ப4தி3ந்த3 பொரமட்டா ||5

அட்ட தாள

கடி கடிஸுத கோடி ஸிடி3லு கி3ரிகெ3 ப3ந்து3
ஹொடெ3த3ந்தெ சேரி பொப்3பி3டு3தலி லங்கி4ஸி
ஹிடி3து3 ரக்கஸன்ன கெட3ஹி மடு3ஹி துடுகி1
தொடி3ய மேலிரிஸி ஹேரொட3ல கூருகு3ரதி3ந்த3

படு3வல க3ட3ல தடி3ய தரணிய நோடி3
கடு3கோபத3ல்லி ஸத3பி3டி3து3 ரக்கஸன
கெட3ஹி நிடிகரளனு கொர
ளடி3யல்லி த4ரிஸித3 ஸட3க3ரத3 தெ3ய்வ
கடு3க3லி பூ4ர்பு4வ விஜய விட்டல
பால்க3ட3லொடெ3யா ஷரணர வடெ3வெ வட3னொட3னெ ||6

ஆதி தாள

ஊரிமொஸெகெ3 சதுர்தஷ த4ரணி தல்லணிஸலு
பரமேஷ்டி ஹரஸுரனு ஸிரிதே3விகெ3 மொரெயிட3லு
கருணதி3ந்த3லி தன்ன ஷரணன்ன ஸஹித நின்ன
சரணக்கெ எரக3லு பரம ஷாந்தனாகி3
ஹரஹிதெ3 த3யவன்னு ஸுரரு குஸும வருஷ
கரியலு பே4ரி வாத்4ய மொரெ உத்தரரெ எனுத
பரிபரி வாலக3 விஸ்தாரதி3ந்த3 கைகொள்ளுத்த
மெரெது3 ஸுரருபத்ர ஹரிஸி பா3லகன காய்தெ3
பரதெ3ய்வ கபீ4ராத்ம விஜய விட்டல நிம்ம
சரிதெ து3ஷ்டரிகெ3 பீ4கரவோ ஸஜ்ஜன பால ||7

ஜதெ

ப்ரஹ்லாத3வரத3 பிரஸன்ன க்லேஷ ப4ஞ்சன்ன
மஹாஹவிஷெ விஜயவிட்டல நரம்ருக3வேஷா ||8

****

1. <u>வீரஸிம்ஹனெ நாரஸிம்ஹனே தயபாரா..</u>

வீரஸிம்ஹனெ நாரஸிம்ஹனே - உலகில் யார்யாரெல்லாம் வீரர்களாக இருக்கிறார்களோ, அவர்களுக்கெல்லாம் வலிமையைக் கொடுக்கும் தேவதை, நரசிம்மஸ்வாமி. இதையே வீரரிகெ ஸிம்ஹனெ, வீரர்களுக்கு பதியே, என்றிருக்கிறார் தாசர். நார என்றால் மக்களின் குழு. அவர்களுக்கும் இஷ்டார்த்தங்களை வழங்குபவன். கருணைக் கடலாக இருப்பவன்.

பாராவார - கடல்.

பய நிராவண - பக்த பிரகலாதனுக்கு வந்த அனைத்து பயங்களையும் பரிகரித்தவன்.

நிர்குண - குணரஹிதன் என்று அர்த்தம் அல்ல. நம்மைப் போல ப்ராக்ருத குணங்களால் இல்லாமல், அப்ராக்ருத ஞானானந்தாத்மக சரீர உள்ளவன் என்று அர்த்தம்.

ஸாரிதவர ஸம்ஸார வ்ருக்ஷத மூல:
நரசிம்ம ஸ்வாமியை ஸ்தோத்திரம் பாராயணம் செய்யும் பக்தர்களின் சம்சார வ்ருக்ஷத்தினை, வேரோடு அறுத்துத் தள்ளும் மகிமை உள்ளவன்.

கைவல்யதாயக நாரஸிம்ஹனே:
இதற்கு தக்க உதாரணம் பிரகலாதராஜனே. சம்சார வ்ருக்ஷத்திற்கு மூலவேர் லிங்க தேகம். விரஜா ஸ்னானம் ஆனபோது, நாரசிம்மஸ்வாமி அதனை கத்தியினால் கத்தரிக்கிறார்.

பயங்கர கோராவதார: பிரம்மனிடமிருந்து நர, மிருகங்களால் தனக்கு மரணம் வரக்கூடாது என்று வரம் பெற்றிருந்த ஹிரண்யகசிபு, தன் மகனான பிரகலாதனை பற்பல விதமாக துன்புறுத்தியபோது, பக்தர்களை துன்புறுத்துபவர்களை விடுவதில்லை என்று தான் செய்திருந்த ஆணைப்படி, கோபத்துடன், உக்ரமான கோர நரசிம்மனாகி காட்டிக்கொண்டான். தூணிலிருந்து வெளிப்படும்போதே பயங்கரமான ரூபத்தை தரித்து வந்தான். ந்ருஸிம்ஹரூப: ததலம் பயானகம் ||

கராள வதன - பயங்கர சிம்ம முகம் கொண்டவன்.
அகோர - ஹிரண்யகசிபு என்னும் கர்வம் கொண்டவனுக்கு, பயங்கரமானவனாக தென்பட்டாலும், தன் புத்திரனைப் போலிருக்கும் பிரகலாதனுக்கு ரௌத்ர அவதாரி அல்ல. சிங்கமானது, யானைக்கு பயங்கரமாக தென்பட்டாலும், தன் மக்களுக்கு ப்ரியமான தாயே ஆகும்.

துரித ஸம்ஹாரி - நரசிம்ம தேவரின் மந்திரத்தை ஜெபித்தால், மலையளவு உள்ள பாவங்களும் அழிந்து போகின்றன. ஸிம் - கர்மங்கள் என்னும் விதைகளை, ஹந்தீதி ஸிம்ஹ: ||

மாயாகார - மாயை என்றால் அவித்யை என்று பிறரின் வியாக்யானம் சொல்கிறது. மாயை என்றால் பகவந்தனின் இச்சை / விருப்பம். தன் விருப்பத்தினாலேயே இந்த நர மிருக வேஷத்தை தரித்திருக்கிறான்.

க்ரூரதைத்யர ஷோக காரண: நானே கடவுள் என்று சொல்லி, அனைவரையும் துன்புறுத்தும் ஹிரண்யகசிபு முதலான தைத்யர்களின் நிரந்தர துக்கத்திற்கு காரணமானவன். ருத்ரதேவரின் ரத்தத்திற்காக 60,000 யோகினிகள் அவரை பின்தொடர்ந்தபோது, அவர் நரசிம்மனே என்னை காப்பாற்று என்று வேண்டியபோது, பாதாளத்திலிருந்து மேல் எழுந்து, அந்த யோகினிகளைக் கொன்று, கௌரிவரனுக்கு காமத்தைக் கொடுத்தவன் நரசிம்மனே.

நர - மனிதர்களை. ஸிம் - இம்சிக்கும் தைத்யர்களை. ஹந்தீ - கொல்லும். ம்ருத்யும்ருத்யும் நமாம்யஹம்.

ஈரேளு புவன ஸாகரதொடியா:
14 உலகங்களுக்கு ஸ்வாமியானவன் மற்றும் ஸப்தத்வீபங்களில் இருக்கும் உப்பு, கரும்புச்சாறு, சுரா முதலான ஏழு கடல்களுக்கும், தலைவன் நீயே.

ஆ ரௌத்ர நாமா விஜயவிட்டல: ஹரிபக்தரான சஜ்ஜனர்களின் சம்சார என்னும் நோயினை பரிகரிப்பதால், ருத்ர நாமகன். ருத்ரனே ரௌத்ரன். ஸிம் - ஸம்ஸார ஸிந்தும். ஹந்தீதி ஸிம்ஹ: ||

நரஸிம்ஹ - மனிதன் பாதி; சிங்கம் பாதி என வந்தவன். நர மனுஷர்களில் ஸிங்க - சிறந்தவனான வாயுதேவனுக்கும் பிம்பரூபியானவன்.

வீரர ஸோத்துங்க: - ஸ்தைர்ய, வீர்ய, பராக்ரம முதலான வீர ரஸம் உள்ள பீமஸேனனுக்கும். உத்துங்க - சிறந்தவன்.

பீமஸேனன் துச்சாதனனை கொல்லும்போது, அவன் காட்டியது நரசிம்மனின் லீலைகளையே. அப்போது அவன் உச்சரித்த மந்திரம்கூட நரசிம்ம குணங்களை போற்றும்படியான மன்யு சூக்தமே. துரியோதனனை கொல்லும்போதும், நரசிம்மனை 'ருஷப:' என்று அழைத்து, எதிரிகளைக் கொல்வதில் என்னை முதல்மையானவனாக ஆக்கு என்று வேண்டிக் கொண்டான்.

ஹந்தாரம் ஷத்ரூணாம் க்ருதி விராஜம் கோபதிம் கவாம் |
திக்மாம்ஷு கோட்யதிக தேஜஸம் அக்ர்ய ஷக்திம் || என்று சொல்லப்பட்டிருக்கிறது.

காருண்யபாங்க : பக்தர்களில் எப்போதும் கருணைப் பார்வையை வீசுபவன். இந்த அர்த்தத்தையே 'பத்ரம்' என்கிறார். பக்தர்களுக்கு மங்களகரன்.

ஸிரிமுத்து நரசிம்ஹ ப்ரஹ்லாதபாலக |
உரிமொரெ தெய்வ நம்ம புரந்தரவிட்டலா ||

2. மகுவின ரக்கஸனு ஹகலிரளு பிடதெ...

ஹிரண்யகசிபு தன் மகனான பிரகலாதனை கொல்வதற்கு செய்த முயற்சிகளையும், பிரகலாதராஜன் பக்தியுடன் பிரார்த்தனை செய்ய, அவனை நரசிம்மன் காத்த விதத்தையும் இந்த தாளத்தில் சொல்கிறார் தாசர்.

மகுவின - வெறும் ஐந்து வயதே ஆன, குழந்தையைப் போல இருக்கும் பிரகலாதனை
ரக்கஸனு - அசுரனான ஹிரண்யகசிபு
ஹகலிரளு பிடதெ - இரவும் பகலுமாக அவனை ஏதாவது செய்து கொல்ல வேண்டும் என்று முயற்சி செய்து
ஹகெயிந்தலி - பிரகலாதன் விஷ்ணு பக்தன் என்னும் காரணத்தால், அவன் மேல் மகாத்வேஷம் கொண்டு, அவனை பலமாக அடித்தான்.

நக பன்னக வனதி ககன மிமிலாகி அகணித பாதியல்லி:
மலையிலிருந்து கீழே தள்ளினான். பயங்கர விஷம் நிறைந்த பாம்புகளால் கடிக்கச் செய்தான். கடல் நீரில் மூழ்க வைத்தான்.

இது போன்ற பல முயற்சிகளால் பிரகலாதனை கொல்வதற்கு முயற்சி செய்ய,

நெகெது பகெது - வான் வரை எம்பி பிரகலாதனின் மேல் விழுந்து அவனை நிலத்தில் தள்ளி அவனை துணியைப் போல அடித்தான்.

ஸாவு பகெது கொல்லுத்திரலு - பிரகலாதனின் மரணத்தை விரும்பி இவ்வாறு துன்புறுத்திருக் கொண்டிருந்தபோது, பிரகலாதனோ, பகவந்தன் தன்னை கைவிடாமல் காப்பாற்றுவான் என்னும் நம்பிக்கையுடன் இவ்வாறு பிரார்த்தனை செய்தான்.

ஹே ஜகத வல்லபனே, சுகுணனே, அனாதி நித்யனே, வேதவேத்யனே, உன்னை நம்பிய பக்தர்களின் வேண்டுகோளைக் கேட்டு, அவர்களை விட்டு விலகாமல் நீ இருப்பாய் என்ற நம்பிக்கையுடன் பிரகலாதன் காத்துக் கொண்டிருக்க..

யுகயுகதொளு தயாளுகள தேவர தேவ..
அனைத்து யுகங்களிலும் எப்போதும் பக்தர்களை காக்கும் ஸ்வபாவம் உள்ள தத்வாபிமானி தேவதைகளுக்கும் ஸ்வாமி எனப்படும் ரக்ஷகனான கருணாசாகரனே.

யுகாதிக்ருதெ நாம - யுகம் முதலான அனைத்து காலங்களையும் படைத்தாய். முதன்முதல் தம்பதிகளான சரஸ்வதி பிரம்ம்மதேவரை படைத்த விஜயவிட்டலனையே பிரகலாதன் சரணடைந்தான்.

யுகள கர முகிது மகுவு மொரெயிடலு:
தன் இரு கைகளையும் குவித்து வேண்டிக்கொள்ள, ஹோ ஹோ, என்ன வியப்பு?

<u>3. கேளிதாக்ஷணதல்லி லாலிஸி பக்தன்ன....</u>
பக்தனின் வேண்டுகோளினைக் கேட்ட உடனேயே பக்தனின் மேல் உள்ள கருணையினால் அவனை காக்க வேண்டும் என்று நிச்சயித்தான், ஸ்ரீநாராயணன்.

பக்தன்ன மௌலி, வேகதலி பாலிஸுவெனெந்து தாளி:
ஹிரண்யகசிபு - மந்த புத்தியே. என் பேச்சினை மீறி நீ யாருடைய பலத்தினை நம்பியிருகிறாய்?
பிரகலாதன் - அனைவருக்கும் வலிமையைக் கொடுப்பவன் பகவந்தனே.
ஹிரண்யகசிபு - அவன் எங்கு இருக்கிறான்?
பிரகலாதன் - எங்கும் இருக்கிறான்.
ஹிரண்யகசிபு - இந்த தூணில் ஏன் தென்படுவதில்லை?. அவன் இங்கு இல்லையெனில், உன் தலையை வெட்டுவேன் என்று தூணை அடிக்க முன் வந்தபோது, பக்தனான பிரகலாதனை காப்பேன் என்று நரசிம்மன் தோன்றினான். (தாளி - ஆவிர்பூதம் ஆனான் அல்லது அவதாரம் செய்தான் என்று அர்த்தம்).

மூர்லோகத பதி வாலயதிந்த:
த்ரிலோகாதிபதியான நரசிம்மன், சுஷீலனும், துர்லப நாமதேயனான விஜயவிட்டலன் ஆவான். பஞ்சமௌலி - பஞ்சாஸ்ய - சிங்கம் மற்றும் மனிதன். மானவ சரீரத்தை தரித்து, கம்பத்தை உடைத்து, வெளிவந்தான், நர-மிருக-வேஷத்தைக் கொண்ட ஸ்வாமி.

<u>**4. லடலடா லடலடா லடகடிஸி வனஜஜாண்ட:**</u>
ஹிரண்யகசிபு தூணை பலமாக அடித்தபோது, அந்த பயங்கர சத்தம் எப்படி இருந்தது என்னும் வர்ணனை இங்கு உள்ளது.

வனஜஜாண்டகடஹ - பிரம்மாண்டத்தின் ஓடு, லடலட என்னும் சத்தத்தை செய்தவாறு, படபட என்று ஆடியவாறு, விழுந்துவிட்டதோ என்பதைப் போல இருந்தது.

புடபுடபுட நெகெது - இந்த தூணிலிருந்து வெளிவந்த நரசிம்மன், ஒரு பந்தினைப் போல ஓடி, ஹிரண்யகசிபுவிடம் வந்தான். அப்படி வருகையில், ஒரு முறை கோபத்துடன் சிம்மகர்ஜனை செய்து எதிரியை அடித்தான்.

பக்கட கட கடிது ரோஷதிந்த:
பக்தவத்ஸலனான நரசிம்மன், பிரகலாதனை கொல்வதற்கு ஹிரண்யகசிபு செய்த முயற்சிகளை கொண்டு, அவன் மேல்

மிகவும் கோபம் கொண்டிருந்தான். இதனால், பற்களை கடகடவென்று கடித்துக் கொண்டான்.

மிடிமிடிமிடனெ ரக்தாக்ஷியல்லி நோடி:
கோபத்தில் கண்கள் சிவப்பாக இருந்தன. கண்ணின் இரப்பைகளை அனேக முறை மூடி திறந்தவாறு சிவந்த கண்களால் பார்த்தான்.

தடித்கோடி உத்தடிகெ ஆர்ப்படவாகிரலு:
தடித்கோடி: கோடி மின்னல்கள் ஒரே முறை மின்னினால் ஆகும் வெளிச்சத்தைவிட அதிக வெளிச்சம் அங்கு காட்டினான் நரசிம்மன்.

குடிலரஹித வ்யக்த விஜயவிட்டல:
நமோ பக்த: ப்ரணஷ்யதி - என்று சொல்வதைப் போல, பக்தர்களை காப்பதில் எந்தவொரு தாமதமும் செய்யாத விஜயவிட்டல ஹரி இப்போது அங்கு தோன்றினான்.

நிடிலநேத்ர ஸுரகடக பரிபாலா:
நெற்றியில் ஒரு கண் உள்ளவனும், தேவதைகள் பிரச்னைக்கு ஆளானபோது, உடனே வந்து காக்கும் இந்த நரஸிம்ம ஸ்வாமி, இத்தகைய துஷ்டர்களை கொல்லும் சாமர்த்தியம் கொண்டவன் (ஷக்த திட).

5. பொப்பிரியெ வீரத்வனியிந்த தனிகிடி...
நரசிம்மன் கோபத்தினால் வீரர்கள் செய்யும் அட்டகாசத்தை செய்தான். இதனால் 10 திசைகளிலும் கம்பீர நாதத்தினால் சத்தம் கேட்டது.

தனிகிடி ஹப்ப - சிறியதாக காட்டிக் கொண்ட அக்னி கங்குகள், அனைத்து இடங்களிலும் அதிகமாகப் பரவி ஒளிமயமாக வியாபித்த போது,

உப்பஸரவிகாகெ - சஞ்சாரம் செய்யும் சூரியனுக்கு அந்தப் புகையினால் மூச்சு விடுவதற்கு பிரச்னை ஆனது.

அப்ஜ நடுகுதிரெ - தண்ணீரிலிருந்து பிறந்த சந்திரனும்கூட பயத்தினால் நடுங்கிக் கொண்டிருந்தான்.

அப்திஸபுத உக்கி ஹொரசெல்லி பருதிரெ:
ஏழு கடல்களின் தண்ணீரும் கொதித்தெழுந்து, கரைகளைக் கடந்து, வெளியே வந்து பாய்ந்து கொண்டிருந்தன.

அபுஜபவாதிகளு தப்பிப்பிகொண்டாடி:
யம் வை ஸ்வதிஷ்ணோபகதம் ஹ்யஜாதய: ஸ்ரத்வா
ஸ்வதாமாப்ய்ய மங்க மேனிரெ ।

பிரம்மாதிகள் அனைவரும் இந்த விபரீதங்களைப் பார்த்து, பிரளய காலம் வந்துவிட்டது என்று அறிந்து, பயந்தனர். பிரம்மாண்டமே உடைந்து விட்டதோ என்பது போல, இந்த பயங்கர சப்தத்திற்கு காரணம் என்ன என்று அறியாமல் யோசிக்கத் துவங்கியதைப் போல காட்டிக் கொண்டனர். இதனை பார்க்க வேண்டுமென்றே, ஆகாஷ ஸ்தானத்தை விட்டு தூரம் விலகிப் போயினர். (நபத கூளெ தெகியே).

ஷப்த தும்பிது அவ்யாக்ருதாகாஷ பரியந்த:
நரசிம்ம ஸ்வாமி செய்த பயங்கர சிங்க நாத த்வனி, பிரம்மாண்டத்தின் உள்ளே மற்றும் வெளியே, அனைத்து இடங்களிலும், அவ்யக்த- ஆகாஷத்தின் வரை நிரம்பி வழிந்தது. நரசிம்ம ஸ்வாமியின் அட்டகாசம் பிரம்மாண்டத்தின் கூரையில் பட்டு, உலகங்கள் அனைத்தையும் நடுங்க வைத்து, பயங்கரமாக இருந்தது. விததத் அதி கடாஹோத் காடனோத்தாட்டஹாஸம் ||. இதையே ஸ்ரீவாதிராஜர், கம்பீரனாத ந்ருஹரே என்றார். விஜயீந்திரர் - வந்தே பீமாட்டஹாஸம்.

நிப்பர தருகிரி ஜஜரிஸலு:
பிரம்மாண்டத்தில் இருக்கும் சப்த த்வீபங்கள். அவற்றில் இருக்கும் ஏழு குல பர்வதங்கள். வனங்கள் வனங்களில் இருக்கும் மரங்கள் அந்த சத்தத்திற்கு நடுங்கி வீழ்ந்து கொண்டிருக்க.

ஒப்பரிகோஷவல்லத விஜயவிட்டல:

பக்தியைத் தவிர வேறு யாருக்கும் வசமாகாத சர்வதந்த்ர ஸ்வதந்த்ரனானவன் ஸ்ரீமன் நரசிம்மன்.

இப்பகெயாகி கம்பதிந்த பொரமட்டா:
ஜகத் கர்த்தனான விஜயவிட்டலன், தான் ஒரு சிம்மத்தை போல ஆகாமல், மானவனாக ஆகாமல், நர-மிருக வேஷத்தை தரித்து, இவ்வாறாக வெளிவந்தான்.

6. கடிகடிஸுத கோடிஸிடிலு கிரிகெ பந்து...
நரசிம்ம ஸ்வாமி பயங்கர கோபத்துடன் கர்ஜித்தவாறு (புடிபுடிஸூத்தா) கோடி இடிகள் ஒரே காலத்தில் மலையில் அடித்தால் எப்படி சத்தம் வருமோ அப்படியான சத்தத்துடன், ஹிரண்யகசிபுவின் அருகில் தாவி வந்து நின்றான் (பொப்பிடுத லங்கிஸி).

ஹிடிதுரக்கஸன்ன - கருடன் பாம்பினைப் பிடிப்பதைப் போல ஹிரண்யகசிபுவை பிடித்தான். தம் விக்ரமந்தம் ஸகதம் கதாதரோ மஹோரகம் தார்க்ஷ்யஸுதோ யதாsக்ரஹீத் ||

முடிய ஹிடிது ரக்கஸன்ன கெடஹி:
பாம்பு எலியைப் பிடிப்பது போல, ஹிரண்யகசிபுவை நரசிம்மன் பிடித்து, அவனை கீழே தள்ளினான் -- ஸ்ரீபாதராஜர்.

தைத்யதக்ஷன் பிடிர்தம் தடாதட் தலாகாதவம் |
கைல்வடிர்த்தம் தடாதட் பதாகாததிந்தல் ஹொடெர்த்தம்||(தண்டக).

தொடிய மேலிரிஸி:
பிரம்மன் கொடுத்த வரம் வீணாகாமல் காத்தவாறு உள்ளே என்றும் வெளியே என்றும் சொல்லமுடியாத வாயிற்படியில் அமர்ந்து, மேலும் கீழும் அல்லாத தன் துடையின் மேல் வைத்துக்கொண்டு.

த்வார்யூராவாபாத்ய:
அங்கு அமர்ந்து அவனை தன் துடையின் மேல் அமர்த்தி.

படுவலகடல தடிய தரணிய நோடி:
பகல் இரவுகளில் மரணம் நேரக்கூடாது என்னும் பிரம்மனின் வரத்தின்படி, சந்த்யா காலத்தில் கொல்வதற்கு - மேற்கு திசையில் (படுவல) இருக்கும் கடற்கரையில் (கடல) மூழ்கிக் கொண்டிருக்கும் சூரியனை (தரணி) பார்த்தான். ஹகல் ராத்ரியொந்தல்லத் ஹாகெ திவாஸந்தியல் |.

ஹேரொடல:
ஹிரண்யகசிபுவின் மிகப்பெரியதான சரீரத்தை

கூருகுரதிந்த:
எந்தவொரு ஆயுதங்களால் தனக்கு மரணம் வரக்கூடாது என்று ஹிரண்யகசிபு வரம் பெற்றிருந்ததால், வஜ்ராயுதத்தைப் போல இருக்கும் தனது நகங்களாலேயே அவனை கிழித்தான்.

ததார லீலயா நகை: யதாsஹிம் கருடோ மஹாவிஷம் |
மகாவிஷம் உள்ள சர்ப்பத்தை கருடன் கிழிப்பதைப் போல, அனாயாசமாக, தன் நகங்களாலேயே நரசிம்மன் ஹிரண்யகசிபுவை கிழித்தான். பிறகு அசுரனை கீழே தள்ளினான்.

நிடிகருளனு கொரளெடெயல்லி தரிஸித:
அசுரர்களில் சிறந்தவனான ஹிரண்யகசிபுவின் மலையைப் போன்றதான தேகத்தின் மார்பினை கிழித்து, அதிலிருந்து வந்த ரத்தத்தை குடித்ததைப் போல நாடகமாடினான். பிறகு அந்த அசுரனின் குடலை தன் கழுத்தில் மாலையாக தரித்தான். கரயுகல த்ருதாந்த்ராஸ்ரக் விபின்னம் வக்ஷோ ||.

ஸடகரத தெய்வ:
பாய் நெய்பவன் அந்த தார்க்குச்சியை தன் நகத்தால் கிழித்து பிய்ப்பதைப் போல, கிழித்தான்.

கடுகலி - முதன்மையான பராக்ரமம் கொண்டவன்.

பூர்புவ - பூர்ண குணம் உள்ளவனும், மஹத் ஐஸ்வர்யம் கொண்டவனும் ஆன, விஜயவிட்டல நரசிம்மன், பாற்கடலில் இருக்கும் ஷ்வேதத்வீபாதி தன் தாமங்களில் சஞ்சரிக்கிறான்.

தன்னை சரணடைந்த பக்தர்களை, தன் கழுத்தின் ஆபரணத்தைப் போல நினைத்து காக்கிறான் (ஷரணர வடவெ).

<u>7. ஊரி மஸகி சதுர்தஷதரணி தல்லணிஸலு...</u>

துஷ்ட ஹிரண்யகனை கொன்றாலும்கூட நரசிம்மனின் கோபாக்னி வளர்ந்தவாறே இருந்தது. கருளமாலெய தெகெது கொரளொளிட்ட பளிக உரிய நுகுளலேதகே -- புரந்தரதாசர்.

சதுர்தஷதரணி தல்லணிஸலு:
14 உலகத்தின் தேவானு தேவதைகள் அனைவரும் நடுங்கி பயம் கொண்டபோது, நரசிம்மனின் அருகில் செல்வதற்கே பயம் கொண்டபோது. பிரம்மருத்ர புரஸ்ஸரா: நோபேது மஷகன் மன்யுஸங்ரஹம் || தேவதைகள் அனைவரும், நரசிம்மனின் கோபத்தை குறைக்குமாறு மகாலட்சுமியை வேண்டினர். சாக்ஷாத் ஸ்ரீப்ரேஷிதா தேவை: ||.

சாக்ஷாஜ்ஜகன்மோஹினி லீலெகள் மிஞ்சுதா
பொஞ்சுதா பந்து உக்ரனந்திப்ப ந்ருஸிம்ஹ
மூர்த்யக்ரவம் கண்டு ஆ தாயி ஹிந்தக்கெ
தா பந்தளு -- தண்டகம்.

நரசிம்மன் பிரகலாதனுக்காக அவதரித்தவன். அவனே முன் சென்று அருள் பெறட்டும் என்று லட்சுமி, பின் நகர்ந்தாள். அப்போது பிரம்மதேவர், பிரகலாதனிடம் : 'வத்ஸனே. நீயே நரசிம்மனிடம் சென்று அவனை சமாதானம் செய்' என்றபோது, பிரகலாதன் வந்து, நரசிம்மனிடம் வேண்டியபோது, கருணையால் தன்னை சரணடைந்த பிரகலாதனைப் பார்த்து மிகவும் அமைதியடைந்து அருளினார் நரசிம்மதேவன். பிரஹ்லாததேவ பந்தரெ ஹிடிது முத்தாடலேதகெ || புரந்தரதாசர்.

ஸுரரு குஸும வருஷகரெயலு:
பிரம்மாதி தேவதைகள் அனைவரும் நரசிம்ம தேவரின் மேல் பூமழை பொழிந்தனர். தேவ துந்துபிகள் முழங்கின. ப்ரஸூனவர்ஷை: வவ்ருஷு: | ஸுரானகா துந்துபயஷ்ச ஜக்னிரே ||. தேவதைகள் அனைவரும் பல்வேறு ஸ்தோத்திரங்களால்

பாடல்களைப் பாடிக் கொண்டிருக்க, அதனை ஏற்றுக் கொண்டவாறு அமர்ந்திருந்தான் - கைகொளுத மெரெது.

ஸுரருபத்ர ஹரிஸி பாலகன காய்தெ:

இவ்வாறு பிரம்ம வரத்தினால் வெல்லப்பட முடியாதவனாக இருந்த ஹிரன்யகசிபுவைக் கொன்று, இந்திராதி தேவதைகளுக்கு வந்திருந்த மிகப்பெரிய ஆபத்தினை பரிகரித்து, தன் பக்தனான பிரகலாதனை காத்த, பரதேவதையே நரசிம்மன். கம்பீர வதன, கம்பீரனான (கபீராத்மா) விஜயவிட்டல நரசிம்மன்.

உன் சரித்திரம் துர்ஜனர்களுக்கு பயங்கரம். அவர்களுக்கு புரியாது. சஜ்ஜனர்களுக்கு மட்டுமே உன் கதை புரியும். ஆகையால் நீ அவர்களை காக்கிறாய்.

8. பிரஹ்லாதவரத பிரபன்ன க்லேஷபஞ்சன்ன...

தந்தையால் ஆன அனைத்து தொந்தரவுகளையும் பரிகரித்து, பிரகலாதனை காத்த தேவனே!. பிரகலாதனைப் போல பக்தியுடன் உன்னை சரணடைந்தவர்களை காத்து, அவர்களுக்கு வந்த துன்பங்களையெல்லாம் அழிக்கிறாய்.

மஹஹவிஷ: இந்த ஜகத்தின் பிரம்மாதி தேவதைகளை, பிராமண ஜாதியை, வாயுதேவனை, க்ஷத்ரியர்களையும் அன்னமாக ஆக்கிக் கொண்டு, ம்ருத்யு தேவதைகளையெல்லாம் வ்யஞ்சன (மற்ற உண்ணும்) பதார்த்தமாக ஆக்கி தின்று தீர்க்கும் உனக்கு சமம் என யார் இருக்கிறார்கள்?.

மகாஜகத்தினையே பெரிய ஹவிஸ்ஸாக செய்து தின்னும் விஜயவிட்டலன், நர மிருக வேஷத்தை தரித்து, பிரகலாதனை காத்த மகிமை இதுவே.

***

---

25 ஸ்ரீபுரந்தரதாசர் சுளாதி

ராகம்: பைரவி. த்ருவ தாள

ஜக3வ பாவன்னத3 கோ3ஸூவாகி3 ஸுரமுனி
நக3த4ரனன்னெ ப4ஜிஸி ஸுகு3ணத3ல்லி
மிகெ3 மானவராகி3 பூ4ஸுர க3ர்ப்ப4த3ல்லி ப3ந்து3
அக4தூ3ரராகி3 ப3லு பஸரிஸுத்த
அக3ணித ஞான ப4குதி வைராக்3ய பரராகி3
ஜக3த4ர ஸுதெ ப3ளிய பஞ்சகூட
நக3 பம்பா நிதி4யல்லி வாஸவாகி3 நித்ய
ஜக3த3 கு3ரு வியாஸராயரலி
ப3கெ3 ப3கெ3யிந்த3லி விஷ்வாஸவன்னு இட்டு
யுக3ள கரவ முகி3து3 முத3தி3ந்த3லி
ஜக3த3பா1லக நம்ம விஜயவிட்டலன உபா
ஸிக3னாகி3 விஷயத3ல்லி ஸிக3தெ3 ஹருஷத3லி ||1

மட்ட தாள

வ்யாஸராயர உபதே3ஷவன்னெ கொண்டு3
பூ4ஸுர ஞான ப்ரகாஷித மனதி3ந்த3
வாஸுதே3வன பாத3 ஸ
ரசிஜ ஹ்ருத3யாகாஷத3லி நோடி3
மீஸல மதியலி தே3ஷதொ3ளகெ3 மெரெது3
நாஷரஹித ரங்க3 விஜயவிட்டலன்ன
தா3ஸரெந்த3ரெ புரந்த3ரதா3ஸரெந்தெ3னிஸுத்த ||2

ரூபக தாள

பவன மதவனனுஸரிஸி நவ வனவனு த4ரிஸி
ஸ்ரவண மனன த்4யானவனு அங்கீ3க3ரிஸி
அவனியொளகெ3 ஹீன தெ3ய்வவ நிராகரிஸி
ஜவன தூ3தரிகெ3 ப4யவனெல்ல தோரிஸி

ப4வரோக3க3ள பராப4வ மாடி3ஸி தூ3ரிரிஸி
கவிக3ள மனத3 தாபவனு பரிஹரிஸி
க1வனக்கெ ஸரி இல்லெந்த3வனியொளகெ3 மெரெஸி
கவிதா ஜனர ப்ரீயா விஜயவிட்டலரேயா
தி3விஜாத்3யரொளு தெ3ய்வவெந்து3 பதிக1ரிஸி
ஸவி நுடி3யிந்த3 நம்மனெல்ல உத்3த4ரிஸி ||3

ஜம்பெ தாள

லக்ஷதி3ப்பத்தைது3 ஸாவிரத3 பத3க3ளு பு
ண்யக்ஷேத்ர தீர்த்தா2தி3 மஹிமெயனெ பேளி ப்ர
த்யக்ஷவாத3 கு3ரு மத்4வராயர மஹிமெ
லக்ஷணேதி1க3ள (லக்ஷண யதிக3ள) ஸந்ததி தத்ரஸாரோக்த
ஈ க்ஷிதொயொளகெ3 தரதம்ய கு3ருத்4யானா
த்4யக்த அவரவரு மாடு3வ மூருதி த்4யான
தீக்ஷ்ணதி3ந்த3லி அவரவர சாரித்ர்ய
அக்ஷயதி3ந்த3 இப்பத்தைது3 ஸாவிர
அக்ஷராத்மர புருஷ விஜயவிட்டலனெந்து3
ப்ராக்ஷா பாகத3ந்தெ பேளித3ரு முந்தெ3 ||4

த்ரிவிடி தாள

ஸுளாதி3க3ளு அவரத்து நால்கு ஸாவிர
ப3லு வ்ருத்தநாம மூவத்தாரு ஸாவிர
ஸலெ ஷ்வேத த்3வீபானந்தாஸன வைகுண்ட2
நளினஜ நக3ர கைலாஸ திக்பாலகர
நிலவர பேளுவேனு அரவத்து ஸாவிர
ஒலிது3 கேளி த3ஷகல்யாண த3ஷசரிதெ
திளிவது3 நாலவத்து ஸாவிர நிஜவெந்து3
இளிய வல்லப4 ரங்க3 விஜயவிட்டலன்ன
கலகால மனதொ3ளு நிலிஸி கொண்டா3டு3த்த ||5

25 ஸ்ரீபுரந்தரதாசர் சுளாதி

அட்ட தாள

நிஷ்ட ஆஹென்னேக ஏகாத^{3}ஷி ஜன்ம
அஷ்டமி நிர்ணய கண்டி^{3}கெ ஷிலெக^{3}ள
நிஷ்ட ஷோத^{4}க உகா^{3}போ^{4}கா^{3}தி^{3}
கஷ்டஹர சில்லர கதெ^{2} பீயூஷ
வஷ்டு எப்பத்தைது^{3} ஸாவிர மிளித^{1}வு
ஸ்ருஷடியொலகெ எல்ல க^{3}ணித மாட^{3}லாகி^{3}
மெட்டிகெ^{3} த்ரிபாத^{3} கடி^{3}மெ ஐது^{3}லக்ஷ
இஷ்டாதவு தா^{3}ஸரு பேளித^{3} பத^{3}
இஷ்ட தெ^{3}ய்வனாத^{3} விஜயவிட்டல ஹரிய
கு^{3}ட்டினிந்த^{3}லி ஸலிஸி கு^{1}ணி கு^{1}ணிஸுதலி ||6

ஆதிதாள

ப^{4}க்திகெ^{3}ல்லி ஸரிகா^{3}ணெ முக்திகெ^{3}ல்லி ஸரிகா^{3}ணெ
முக்தார்த்த^{2} ஹரிபாதா^{3}ஸக்தராகி^{3} தே^{3}னிஸுத்த
ரக்தாக்ஷி வத்ஸரத அர்க்கவார இந்து^{3} க்ஷய
ஷுக்ல புஷ்கமாஸதி^{3} உத்^{3}யுக்தராகி^{3} புஷ்பகதி^{3}
வ்யக்தவாகி^{3} பொளெது^{3} மது^{4}டோக்தியல்லி த^{1}ரணியந்தெ
முக்திகெ^{3} ஸாரி(கி^{3})த^{3}ரு விரக்தி மார்க்க^{3}வனெ பிடி^{3}து^{3}
முக்தமுக்தாஸ்ரய நம்ம விஜயவிட்டலரேயன
ஷக்தனெந்து^{3} பொக^{3}ளி ப^{3}லு ரிக்தரிகா^{3}தா^{3}ரவித்து ||7

ஜதெ

ஈஸு பத^{3}க^{3}ளொம்மெ நெனிஸித மனுஜன்ன
தா^{3}ஸர பொரெத^{3}ந்தெ பொரெவா விஜயவிட்டலா ||8

***

இந்த சுளாதியில் விஜயதாசர், தமது ஸ்வரூபோத்தாரகரான புரந்தரதாசரின் மகிமைகளை வர்ணிக்கிறார். புரந்தரதாசர நாரதரின் அவதாரம். நாரதர் த்ரிலோக சஞ்சாரிகள். ஹரியின் ஆணைப்படி, அவருடைய செயல்களால் மூன்று உலகங்களையும் பவித்ரம்

ஆக்குபவர். சம்ஸ்கிருதம் அறியாதவர்களுக்காக, பேசுமொழியிலேயே சம்ஸ்கிருதத்தின் சாரத்தை, அவர்கள் இருக்கும் இடத்திற்கே சென்று உபதேசம் செய்து, அவர்கள் ஹரிவாயுகளிடம் செல்லுமாறு செய்தார்.

1. ஜகத பாவன்னத கோஸுகவாகி ஸுரமுனி...

உலக சஜ்ஜனர்களை பவித்ரமாக்கும் நோக்கத்தில், சுரமுனியான நாரதர், கோவர்த்தனதாரியான ஸ்ரீகிருஷ்ணனை பரம பக்தியுடன் பூஜித்தார். ஹரியின் அருளால் பூமியில் நாரதர் சிறந்த மனிதராக அவதரித்தார். பிராமண குலத்தில் இருந்த சிறந்த தம்பதிகளிடம் அவதாரம் செய்தார். இவரை வரதப்ப நாயகர் என்றும், விட்டல என்றும் அழைத்தனர். இவருடைய அவதாரம் வெறும் சஜ்ஜனர்களின் உத்தாரத்திற்காக மட்டுமே தவிர, பிராரப்தத்தை அனுபவிக்க பூமிக்கு வந்தவர் அல்ல இவர். பூமியில் இவருடைய புகழ் திக்கெட்டும் பரவியது.

வெளியில் லோபியாக தன்னை காட்டிக்கொண்டாலும், பகவந்தனின் ஆணைக்காக, அந்த தக்க காலத்திற்காக காத்திருந்தார். உள்ளே பகவந்தனின் எண்ணிக்கையற்ற குணங்களின் சிந்தனை இருந்தது. ஞான என்னும் மரத்திற்கு வைராக்ய என்னும் பாத்திரத்தில் ஹரிபக்தி என்னும் தண்ணீரை ஊற்றி, மஹாமோட்ச பலன்களைக் கொடுக்கும் மரத்தை வளர்த்தார்.

மூக்குத்தியின் சம்பவத்தினால் ஸ்ரீஹரியின் தரிசனம் ஆயிற்று. பகவந்தனின் அழகின் முன்னால் இந்த அழியக்கூடிய செல்வம் த்ருணமாக தோன்றியது. அனைத்தையும் துறந்து குரு தரிசனத்திற்காக புறப்பட்டார்.

பஞ்சகூட நக பொம்பானிதியல்லி:

நக என்றால் மலை. ஜகதர ஸுதெ பளி - பூமியை தன் கோரைப் பற்களால் தூக்கிய வராக ரூபி பகவந்தன் - அவனின் மகள் - துங்கா நதியின் சமீபத்தில் இருக்கும் பம்பா க்ஷேத்திரத்தில் நித்யமாக வசித்து வந்த, ஜகத்குரு எனப்பட்ட வியாசராயரின் அருகில் வந்து, அவரின் சிஷ்யர் ஆனார். நாரதர் 14ம் கக்ஷையை

சேர்ந்தவர். வியாசராஜர் கர்மஜ தேவதை. 19ம் கக்ஷையை சேர்ந்தவர். இவர்களில் குரு சிஷ்ய பாவம் ஏற்படுவதற்கு, வியாஸரில் வாயுதேவரின் ஆவேசம் இருந்ததே காரணம். ஆகையாலேயே, வியாசராஜரிடம் அதீத பக்தி, நம்பிக்கை கொண்டிருந்தார், புரந்தரதாசர். தன்னை அவருடைய சிஷ்யராக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று, இரு கரம் கூப்பி பக்தியுடன் வணங்கி கேட்டுக் கொண்டார். வியாசராஜரின் கருணைப் பார்வை அவரின் மேல் விழுந்தது. அவருடைய உபதேசத்தினால் மெய் சிலிர்த்து, ஜகன்னாதனான விஜயவிட்டலனை வணங்கும் தாசர் ஆனார். எந்தவொரு விஷய பதார்த்தங்களுக்கு ஆசைப்படாமல், ‘யத்ருச்சா லாபதிம் ப்ரோச்ச’ ஆனார். (கிடைத்ததை வைத்து திருப்தி அடைந்தார்).

<u>2. வியாஸராயர உபதேஷவன்னெ கொண்டு...</u>

இவருக்கு வியாஸராயர், புரந்தரவிட்டலா என்னும் அங்கிதத்தைக் கொடுத்து, நிரந்தர உபதேசாம்ருதத்தை அருளினார். உலகிற்கு ஞானத்தைக் கொடுக்கும் ஸ்வரூபம் நாரதருடையது. இத்துடன் வியாசராஜருடைய திவ்ய உபதேசம். இவற்றால், அவர் அபாரமான ஞானத்தினால், சிரவண மனன நிதிதியாஸனங்களால் வாசுதேவனின் பாத கமலங்களை - அதாவது, பகவந்தனின் ஸ்வரூபத்தை தன்னுடைய இதயகமலத்தில் பார்த்தார். பகவந்தனின் தரிசனம் ஆன உடனேயே, பகவந்தனுக்கு தன் உடல், மனங்களை சமர்ப்பித்து, அவனின் சேவையை செய்யத் துவங்கினார். தம்பூரி மீட்டியவாறு, தெருத்தெருவாக சஞ்சரித்து, சஜ்ஜனர்களுக்கு தத்வோபதேசம் செய்து, அவர்களை மேம்படுத்தினார். குருகளான வியாசராஜரும்கூட சிஷ்யனின் மகிமையைக் கண்டு மகிழ்ந்து ‘தாஸரெந்தரெ புரந்தர தாஸரய்யா’ என்று மனம் நிறைந்து ஆசிர்வாதம் செய்தார்.

<u>3. பவன மதவனனுஸரிஸி நவ வனவனு தரிஸி...</u>

வியாஸராஜரின் உபதேசத்தினால், ஸ்ரீமத்வரின் மதத்தை அனுசரித்து, ஹரி சர்வோத்தம, வாயு ஜீவோத்தம என்னும் புதிய வஸ்திரத்தை தரித்தார். ஹரியின் கதா ஸ்ரவண, மனன, நிரந்தர

தியானத்தை செய்யத் துவங்கினார். பூமியில் சஞ்சரித்து, அந்த காலத்தில் இருந்த உச்சிஷ்ட கணபதி முதலான அவைஷ்ணவ தேவதைகளின் பூஜையை, தமது கீர்த்தனைகளால் நிராகரித்தார். த்வாதஷ புண்ட்ர நாம, ஏகாதசி முதலான உபவாசங்களால், சுத்தமான வைஷ்ணவ தீக்ஷையை தாம் பெற்று, மற்றவர்களுக்கும் தீக்ஷையைக் கொடுத்து, யமனின் தூதர்களுக்கு பயம் வருமாறு செய்தார். சுத்த வைஷ்ணவ கர்மானுஷ்டானத்தினால், சம்சாரத்தின் தற்காலிகத் தன்மையை காட்டி, பவ ரோகத்தின் எதிராக போராடி வென்றார்.

பகவந்தனை மகிழ்விக்க, கலியுகத்தில் கீர்த்தனைக்கு சமமான இன்னொரு சாதனை இல்லை என்று கூறினார். ஞானிகளான பிரம்மாதி தேவதைகளுக்கு ப்ரியனான விஜயவிட்டலரேயனே, தேவாதி தேவதைகளில், நியாமகனாக இருக்கும் பரதெய்வம் என்று சொல்லியவாறு, தம் கீர்த்தனைகளால் விஜயதாஸாதி அனைத்து பக்தர்களையும் அருளிய மகானுபாவர், புரந்தரதாசர்.

இந்த விஷயம் கருட புராணத்தில் தேவகாண்டத்தில் இருக்கிறது.

நாரதோ விஷ்ணுஸேவார்த்தம் வாயோராவேஷ தோऽஜனி ।
புரந்தர இதிக்யாத: தத்வமார்க்கம் ப்ரதர்ஷயன் ।
நானாவிதம் பத்யமாலாம் விஷ்ணோரர்த்த ப்ரகாஷினீம் ।
சகார விட்டல ப்ரீத்யை துக்க ப்ராரப்த மோக்ஷிணீம் ।।

4. லக்ஷதிப்பத்தைது ஸாவிரத பதகளு...

தாசர், 5,00,000 கிரந்தங்களை (32 எழுத்திற்கு ஒரு கிரந்தம்) எழுதுவதற்கு துவங்கி, 4,25,000 எழுதி, மற்ற 75,000 கிரந்தங்களை, விஜயதாசருக்காக விட்டு அருளினார். இந்த 4,25,000ல் - 1,25,000 தீர்த்த க்ஷேத்திர மகிமைகள், ஸ்ரீமதாசார்யரின் மகிமைகள் மற்றும் பத்மனாபாதி யதிகளின் பரம்பரையின் வர்ணனை ஆகும்.

தந்த்ரசாரத்தில் கூறியுள்ளபடி, தாரதம்ய, குருத்யான, மூர்த்தி தியான ஆகியவற்றைப் பற்றியும், தாரதம்ய ஞானம் இல்லாமல் மோட்சம் இல்லை என்று சொல்லி, தாரதம்ய ஞானத்தைக் கொடுக்கும் பாடல்கள் இயற்றினார். தியானம், அங்கன்யாஸம் ஆகியவற்றை

விளக்கினார். இவை அனைத்தும் சேர்த்து 25,000 ஆகிறது. அவருடைய கிருதிகளில், க்ஷர புருஷர்களான பிரம்மாதிகள், அக்ஷரளான லட்சுமிதேவியைவிட ஸ்ரீஹரியே புருஷோத்தமன் சர்வோத்தமன் என்று நிறுவினார். இவரின் கிருதிகள் அனைத்தும் அனைவருமே அறிய வேண்டியதாகும்.

5. ஸுளாதிகளு அரவத்து நால்கு ஸாவிர....

புரந்தரதாசரின் சுளாதிகளின் எண்ணிக்கை 64,000.
வ்ருத்த நாமங்களின் எண்ணிக்கை 36,000.
ஷ்வேதத்வீப, அனந்தாஸன, வைகுண்ட என்னும் த்ரிதாமங்களின் வர்ணனை, பிரம்மதேவரின் ஸத்யலோக (நளின ஜனரக), கைலாச, இந்திராதி திக்பாலகர்களின் வர்ணனை, இவை அனைத்தும் சேர்ந்து 60,000.
தஷ கல்யாண சரித்திரங்கள் 40,000.
என பூ-வல்லப விஜயவிட்டலனை வெகு காலம் மனதில் நிறுத்தி, கொண்டாடினார்.

6. நிஷ்ட ஆன்ஹீக ஏகாதஷி ஜன்ம...

ஆக்ஹிகத்தைப் பற்றி - அதாவது, ஸ்னான, ஸந்த்யாவந்தன, தேவ பூஜாதி விவரங்கள், ஏகாதசி விரதத்தைப் பற்றி, கிருஷ்ண ஜன்மாஷ்டமி விரத ஆசரணை, அதன் நிர்ணய, ஸாலிகிராம சிலையின் மகிமை, பூஜை செய்யும் கிரமம், உகாபோகங்கள் - ஆகியவற்றின் விவரங்கள் 75,000. இவை அனைத்தையும் கூட்டினால், மூன்று பாத குறைவு (த்ரிபாத கடிமெ) அதாவது, 75,000 குறைவு, 5 லட்சத்திற்கு என வருகிறது. இவருடைய புரந்தர உபநிஷத்தினை விஜயவிட்டலனுக்கு சமர்ப்பித்தபோது, ஸ்ரீஹரி மகிழ்ச்சியுடன் நடனம் ஆடினான்.

7. பக்திகெல்லி ஸரிகாணெ முக்திகெல்லி ஸரிகாணெ...

தாசரின் பதங்களில் பக்திக்கே முக்கியத்துவம். பக்திக்கு சமமான வஸ்து வேறொன்று இல்லை. முக்திக்கு பரம ஸோபானம் என்றால் அது பக்தியே. பக்தியினால் அடைய முடியுமான முக்திக்கும் சமமான பலன் வேறொன்று இல்லை. தாசர் இவ்வாறு

தம் வாழ்க்கையில், சமூகத்தின் தவறுகளை திருத்தி, சுத்த வீர வைஷ்ணவ மதத்தின் கவசத்தை போர்த்தினார்.

ரக்தாக்ஷி நாம சம்வத்ஸரம், புஷ்ய அமாவாசை ஞாயிற்றுக்கிழமையன்று தம் இஹ வாழ்க்கையின் யாத்திரையை முடிப்பதற்காக, ஹரியின் தியானத்தில் ஆழ்ந்தார். அப்போது தேவலோகத்திலிருந்து திவ்ய விமானம் வந்தது. அதில் அமர்ந்து முக்திக்குச் சென்றார். விரக்தி, பக்திகளே முக்திக்கு வேண்டும் என்று திவ்ய உபதேசம் செய்தார். விஜயவிட்டலனே முக்தாமுக்தாஸ்ரயன் என்றும், அவருக்கும் நியாமகன் என்றும், சர்வஷக்தன் என்றும் நிறுவினார்.

8. ஈஸூ பதகளொம்மெ...

புரந்தரதாசரின் பதங்களை ஒரு முறை பாராயணம் செய்த மானவர்களை விஜயவிட்டலன், தாசரை அருளியதைப் போல அருள்வான்.

ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து.

****